
கலைஞரின்
கடிதங்கள்



53

27.05.2015 - முதல்
15.05.2016 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 53

27.05.2015 - 15.05.2016

கி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வகம் நூல்
நிலையம்
சென்னை-113
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00** CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஒய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்”
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

"படமும் பாடமும்"
"மூலவர் மூவர் முரசொலி"

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

"நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!"
"எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?"
"கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!"
"அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?"
"இடர் எது வரினும், ஏற்பேன்"
"பறித்து வராத பாரிஜாதம்"

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! "யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!"

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
3966. நீதி விண்ணுயர எழுந்து நிற்கும்; வெற்றி முரசம் ஒலிக்கும்!	27-5-2015	23
3967. எதைச் சொல்வது? எதை விடுவது?	6-6-2015	36
3968. அய்யய்ய! சொல்ல வெட்கமாகுதே!	17-6-2015	43
3969. "கொட்டைப்பாக்குக்கு விலை கூறும்" விசுவநாதன் பதில்!	14-07-2015	52
3970. நெஞ்சில் ஓர் வஞ்சமிலா நீட்டோலை!	06-08-2015	60
3971. அறவழியில், அமைதிவழியில் ஆர்ப்பாட்டம்!	7-8-2015	69
3972. வீறு நடை - வெற்றி நடை போட உன்னை அழைக்கின்றேன்!	9-8-2015	76
3973. இன்று "முரசொலி" பிறந்தநாள்!	10-8-2015	79
3974. சந்தேகம் களைவது ஜனநாயகக் கடமை அல்லவா?	12-08-2015	84
3975. கடுகளவும் நிறைவேற்றாத; கடல் அளவு அறிவிப்புகள்!	26-8-2015	90

3976. ஏமாற்றுவோரிடமிருந்து தமிழகம் மீளுவதுதான் எப்போது?	30-8-2015	102
3977. சூழ்ச்சிக்கு இரையாகாமல் சுயமரியாதைப் பயணம் தொடர்வோம்!	05-09-2015	110
3978. முதலீட்டாளர்கள் மாநாடு: தேர்தலை முன்னிட்டு நடத்திய 'தகிடுதத்தம்' தானே!	11-9-2015	116
3979. முள்ளு முனையில் மூன்று குளம் வெட்டிய கதை!	13-09-2015	124
3980. சிந்து வெளி நாகரிகம் சிதைந்திடப் பொறுப்பதுவோ?	15-9-2015	133
3981. நல்ல தருணம் இது; நழுவ விடலாமா?	19-9-2015	139
3982. எல்லோரையும் எப்போதும் ஏமாற்ற முடியுமா?	27-9-2015	147
3983. சட்டப்பேரவை கண்ட கண்கொள்ளாக் காட்சிகள்!	01-10-2015	154
3984. ஜெயலலிதாவின் சவால், சாகசமா சண்டித்தனமா?	02-11-2015	162
3985. கடுகு சிறுத்தாலும் காரம் போகாது என்பதைக் கழகம் பெறவிருக்கும் வெற்றியின் மூலம் மெய்ப்பித்துக் காட்டுவோம்!	27-12-2015	168
3986. வரும் ஜனவரி 5 அன்று சென்னையில் ஆர்ப்பாட்டம் ஏன்?	30.12.2015	173
3987. திவாலாகிறதா தமிழகத்தின் நிதி நிலை?	31-12-2015	182

3988. நீதியில் ஊழலுக்கு நிச்சயம் இடம் இல்லை!	10-01-2016	190
3989. நெஞ்சு பொறுக்குதில்லையே, நிலை கெட்டோரை நினைத்தால்!	12-1-2016	197
3990. கண்ணின் வலியா? கழகத்தின் வலிவா? எதில் கவனம் செலுத்துவது?	9-2-2016	206
3991. நமக்கு நாமே - ஸ்டாலின் அரசியல் வாழ்வில் ஒரு மைல் கல்!	15-2-2016	211
3992. நாளைக்கு வரும் வெற்றிக்கு இன்றே அச்சாரமாவோம்!	21-2-2016	217
3993. கேட்டது வெண்ணெய்; தருவது சுண்ணாம்பா?	24-2-2016	224
3994. பொய்யைத் திரும்பத் திரும்பச் சொன்னால் உண்மையாகிவிடுமா?	3-3-2016	233
3995. எல்லோரும் கேட்பது ஏழு பேரின் விடுதலையே!	6-3-2016	241
3996. அவசரகதியில் அடிக்கல் நாட்டு விழாக்களும் அரைகுறையான வெள்ள நிவாரணப் பணிகளும்!	7.3.2016	250
3997. அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் மதுவிலக்கைச் சொல்லி மக்களை ஏமாற்ற முயற்சியா?	18.3.2016	258

3998. நம்பிக்கை எனக்கு நிரம்பவே உண்டு!	19.3.2016	266
3999. விஷ்ணுப்ரியா வழக்கை சி.பி.ஐ.தான் விசாரிக்க வேண்டும்!	20-3-2016	274
4000. சூதும், வாதும் வேதனையில் முடியும்!	25-3-2016	282
4001. உன்னால் முடியாதது உலகினில் ஏதும் உண்டோ?	30.3.2016	290
4002. ஒவ்வொருவரும் "ஸ்டாலினைப்" போல உழைத்திடுவீர்!	10.4.2016	298
4003. இறுதியில் ஏமாறப் போவது ஜெயலலிதாதான்!	11-04-2016	306
4004. என்ன பாட்டு பாடத் தோன்றும்?	12.4.2016	314
4005. தமிழகத்தில் ஏற்பட்டிருப்பது மலர்ச்சியல்ல; மக்கள் கிளர்ச்சியே!	15-04-2016	323
4006. ஒரே நோக்குடன் உழைத்திடுவீர்! வெற்றி நமதே!	15-04-2016	330
4007. அ.தி.மு.க. அரசின் நீதிமன்றக் கண்டனங்கள் ஏராளம்!	17.4.2016	335
4008. வானத்தில் பறக்கும் ஜெயலலிதாவுக்கு உண்மை தெரியாது!	18-4-2016	341

4009. நமது புதிய ஆட்சி பூத்திட; பொய் முகத்தை அடையாளம் காட்டு!	21-4-2016	349
4010. உத்தரவிடுங்கள் உங்களுக்காக உழைத்திட!	22-4-2016	359
4011. தலைவர் கலைஞரின் திருத்தப்பட்ட தேர்தல் பிரச்சாரச் சுற்றுப் பயணம்!	30-4-2016	368
4012. தவறான விமர்சனத்திற்குத் தீவுத் திடல் கூட்டமே பதிலடி!	07-05-2016	370
4013. இந்தக் கேள்விகளுக்கு என்ன பதில்?	9-5-2016	376
4014. மக்கள் நம் பக்கம்; வெற்றி நமதே!	13.5.2016	385
4015. தொடர்ந்து உழைத்திடத் தொய்வின்றி ஆதரிப்பீர்!	15-5-2016	391

3966. நீதி விண்ணுயர எழுந்து நிற்கும்; வெற்றி முரசம் ஒலிக்கும்!

உடன்பிறப்பே,

ஜெயலலிதா, சென்னை மாநகரில் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களைப் பற்றியோ, சட்ட விதிமுறைகளைப் பற்றியோ சிறிதும் கவலைப்படாமல், கொண்டுவந்து குவிக்கப்பட்ட கட்சிக்காரர்களின் கொண்டாட்டங்களுக்கிடையே, மீண்டும் தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவி ஏற்றுள்ளார். சட்டப்பேரவைக்கான பொதுத்தேர்தல் நடைபெற்று ஜனநாயக ரீதியாக மக்களிடம் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று தற்போது முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரா என்றால் கிடையாது. ஜெயலலிதா தன்னுடைய வருமானத்திற்கு அதிகமாக 66 கோடி ரூபாய்க்கான சொத்துக்களைச் சேர்த்தார் என்ற வழக்கு கடந்த 19 ஆண்டுகளாக நடைபெற்று, இறுதியாகக் கடந்த ஆண்டு செப்டம்பர் திங்கள் 27 ஆம் தேதி, பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி குன்ஹா அவர்களால், நான்காண்டு காலம் சிறைத் தண்டனையும், 100 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். தண்டிக்கப்பட்டுச் சிறையிலே இருந்த ஜெயலலிதா ஜாமீனில் வெளியே வர முயற்சிசெய்து, உச்ச நீதிமன்றம்வரை அந்த வழக்கு சென்று, உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி டத்து அவர்கள், முறைப்படி கேட்கப்பட வேண்டிய; கர்நாடக அரசின் கருத்தைக்கூடக் கேட்காமல், வெகுவேகமாக விசாரித்து, நீதிமன்றத்தின் முன் வைக்கப்படாத கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்டு 17-10-2014 அன்று ஜெயலலிதாவை ஜாமீனில் விடுதலை செய்தார்.

அவ்வாறு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி, ஜெயலலிதாவை ஜாமீனில் விடுவித்து, இதே போன்ற வேறு வழக்குகளில் மேற்கொள்ளப்படாத வியப்புக்குரிய முன்மாதிரியாக ஜெயலலிதாவின் அப்பீல் மனுவை மட்டும் கர்நாடகா உயர் நீதிமன்றம் மூன்று மாதங்களுக்குள் விசாரித்துத் தீர்ப்பளிக்க

வேண்டுமென்று காலவரம்பு நிர்ணயித்து உத்தரவு பிறப்பித்த போது, அந்தத் தீர்ப்பு பற்றியும், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி டத்து அவர்கள் பற்றியும் அப்போதே கடுமையான விமர்சனங்கள் இந்தியா முழுவதும் ஏடுகளில் வெளிவந்தன.

அதன் பிறகு ஜெயலலிதா செய்த மேல்முறையீட்டின் மீது பெங்களூர் உயர் நீதிமன்றத்தின் சிறப்பு அமர்வில் ஜனவரி 5 துவங்கி மார்ச் 11வரை வழக்கு நடைபெற்றது. குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக வாதாடிய வழக்கறிஞர்களிடம் நீதிமன்றத்திலேயே, விசாரணையின்போதே, அந்த வழக்கை விசாரித்த நீதிபதி குமாரசாமி அவர்கள் அவ்வப்போது தனது மன ஓட்டத்தின் பிரதிபலிப்பாகப் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்து, அந்தக் கருத்துகள் எல்லாம் ஏடுகளிலே தொடர்ந்து வெளிவந்தன. குறிப்பாக அவர்களுடைய வாதத்தில் குற்றச்சாட்டுகளை முழுவதும் மறுப்பதற்கான எந்தவிதமான ஆதாரங்களும் எடுத்துக்காட்டப்படவில்லை என்றும், குன்ஹா அவர்களின் தீர்ப்பிலே போடப்பட்டிருந்த 150க்கு மேற்பட்ட முடிச்சுகள் எதையும் அவிழ்க்கவில்லை என்றும், அவர்களின் வாதத்தில் போதிய மதிப்பெண்கள் பெறவில்லை என்றும், குன்ஹா அளித்த தீர்ப்பையே மீண்டும் தான் தரவேண்டிய நிலைதான் உள்ளதென்றும் வெளிப்படையாகத் தெரிவித்திருந்தார். எனவே தன்னிச்சையாகப் பல்வேறு நாட்களில் வழக்கு குறித்துத் தெரிவித்த எதிர்மறைக் கருத்துகளின் மூலம், கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதியின் தீர்ப்பு எவ்வாறு அமையப்போகிறது என்று முன்கூட்டியே பல தரப்பினராலும் யூகிக்கப்பட்டது.

இதற்கிடையே உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு (நீதிபதிகள் தீபக் மிஸ்ரா, ஆர்.கே. அகர்வால், பிரபுல்ல சி. பந்த் அடங்கியது) அளித்த ஒரு தீர்ப்பில், கர்நாடக உயர்நீதிமன்றத்தில் வரவிருந்த தீர்ப்பைப் பற்றிக் குறிப்பிடும்போது, "குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது கூறப்பட்டுள்ள குற்றத்தின் முக்கியத்துவத்தை உயர்நீதிமன்ற நீதிபதி (குமாரசாமி) கருத்திலே கொள்ள வேண்டும். சமூகத்தை; ஊழல், எப்படி (கரையான் போல) அரித்து வருகிறது என்பது குறித்து உயர் நீதிமன்றம் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும். நீதிமன்றத்தின் முன்னுள்ள சாட்சியங்களை முழுமையாகவும் ஒருங்கிணைத்தும் மதிப்பீடு செய்து தீர்ப்பளிக்க வேண்டும். விருப்பு வெறுப்பின்றி அளிக்கும்

தீர்ப்பு பாரபட்சமின்றித் தீர்க்கமாக எடுத்துரைக்கப்பட வேண்டும்" என்று மிக வலிமையான அறிவுரைகள் வழங்கப்பட்டன.

இன்னும் சொல்லப்போனால், அரசியல் சாசன அமர்வுக்குக் காரணமான இந்த வழக்கிலே, உச்ச நீதிமன்ற நீதிபதி மதன் பி. லோகுர் அவர்கள், "ஒரு கிரிமினல் வழக்கை எப்படி நடத்தக்கூடாது என்பதற்கு இந்த மேல் முறையீடு வழக்கு ஒரு சான்று. கிரிமினல் வழக்குகளில் நீதி வழங்கும் முறை தோற்றுவிட்டது. இதைச் சீர்படுத்த வேண்டும். அதற்கான நேரம் வந்து விட்டது" என்று இந்த வழக்கு எப்படிப்பட்ட பின்னடைவுகளை நீதித் துறையிலே ஏற்படுத்தி வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

உச்ச நீதிமன்ற அமர்வு இவ்வாறு எந்த வழக்கிலும் இல்லாத அளவுக்கு அசாதாரணமான கருத்துகளைத் தெரிவிக்கக் காரணம் என்ன?

உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு ஒரு சில நாட்களுக்கு முன்பு, உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அவர்களே பெங்களூர் வந்ததாகவும், குற்றஞ்சாட்டப்பட்ட ஜெயலலிதாவுக்கு ஆதரவாகத் தீர்ப்பு கிடைத்திடச் செய்யப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் செய்திகள் பரவலாகப் பேசப்பட்டன என்ற போதிலும், நாம் அவற்றைக் கிஞ்சிற்றும் நம்பவில்லை. 11-5-2015 அன்று கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி குமாரசாமி, தனது தீர்ப்பில் ஜெயலலிதாவை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்தார். அதனை அ.தி.மு.க.வினர் எதிர்பாராதது நடந்தே விட்டது என எண்ணி வெற்றியாகக் கொண்டாடினர். ஜெயலலிதாவும் தனது மனசாட்சிக்கு இரட்டைத் தாழ்ப்பாள் போட்டு நெடுந்துயில் கொள்ளச் செய்துவிட்டு நீதி வென்றதாக அறிக்கை விடுத்தார். நம்மைப் பொறுத்தவரையில் நீதிபதி குமாரசாமி நீதிமன்றத்தில் விசாரணை நடத்தியபோது கூறிய மொழிகளுக்கும், வழங்கிய தீர்ப்புக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறதே என்ற சந்தேகம் வந்தது. ஆனால் தீர்ப்பையே திருப்பிப்போட்டு, திகைக்க வைக்கின்ற அளவுக்கு அடுத்த நாளே தீர்ப்பிலே உள்ள மிகப் பெரிய தவறுகள் மற்றும் குளறுபடிகள் குறித்துப் பலரும் தங்கள் கருத்துகளை அச்சமின்றி வெளிப்படையாகத் தெரிவித்தனர். நானும் அந்தத் தீர்ப்பினை ஊன்றிப் படித்தபோது, மிகப் பெரிய கணிதப் பிழையினைக்

கண்டேன். அந்தப் பிழையே தீர்ப்புக்கு அடிப்படைக் காரணியாக அமைந்திருந்ததையும் உணர்ந்தேன். மன்னன் பாண்டிய நெடுஞ்செழியன், தான் தவறாகத் தீர்ப்பு அளித்துவிட்டதை அறிந்தவுடன், "யானோ அரசன், யானே கள்வன்" என்று மனதார ஒப்புக்கொண்டு, அரியாசனத்திலிருந்து உருண்டு விழுந்து உயிர் துறந்தான். அதன் மூலம் "நீதி வழுவா நெடுஞ்செழியன்" என்ற புகழ்ப் பெயர் நிலைத்திடலாயிற்று. அவன் நீதி தெரிந்தவன் - நீதி உணர்ந்தவன்!

ஜெயலலிதா தரப்பினர் இந்தியன் வங்கியிலே பத்து முறை கடன் பெற்ற தொகைகளையெல்லாம் நீதிபதி குமாரசாமி, வரிசையாகக் குறிப்பிட்டு, அதையெல்லாம் கூட்டி 24 கோடி ரூபாய் அவர்கள் கடனாகப் பெற்றிருப்பதாகவும், அந்தத் தொகையை வருவாயாக எடுத்துக்கொண்டால், ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு அவருடைய உண்மையான வருமானத்தில் 8 சதவிகிதம்தான் என்றும், அவ்வாறு பத்து சதவிகிதத்திற்குக் குறைவாக வருவாய்க்கு அதிகமாகச் சொத்து சேர்க்கப்பட்டிருந்தால், அதனைக் குற்றமாகக் கருதி தண்டனை வழங்கத் தேவையில்லை என்றும் எழுதித்தான் இந்த வழக்கிலிருந்து ஜெயலலிதா தரப்பினரை விடுதலை செய்திருக்கிறார். இந்த விவரங்கள் உண்மையானவையாக, நிரூபிக்கக் கூடியவையாக இருந்தால், ஜெயலலிதாவின் விடுதலை பற்றி இருவேறு கருத்துகளுக்கே இடம்கிடையாது. ஆனால் ஜெயலலிதா தரப்பினர் இந்தியன் வங்கியிலிருந்து பெற்ற கடன்கள் என்று வரிசையாகப் பட்டியலிட்டு, அதன் கூட்டுத் தொகை 24 கோடி ரூபாய் என்று நீதிபதி குமாரசாமி தனது தீர்ப்பிலே தெரிவித் திருப்பது முற்றிலும் தவறான புள்ளி விவரமாகும். எப்படியென்றால், ஜெயலலிதா தரப்பினர் பத்து முறை இந்தியன் வங்கியிலே கடன் பெற்ற அந்த பத்துத் தொகைகளையும் கூட்டினால், பத்து கோடி ரூபாய்தான் வருகிறதே தவிர, நீதிபதி தெரிவித்தவாறு 24 கோடி ரூபாய் என்று கூட்டுத்தொகை வர வாய்ப்பே இல்லை. உண்மையான கூட்டுத் தொகையின்படி பார்த்தால், ஜெயலலிதா அவருடைய வருவாயைவிட 76 சதவிகிதம் கூடுதலாகச் சொத்துக் குவித்திருக்கிறார்.

76 சதவிகிதம் என்பதுகூட தவறு; எல்லா தவறுகளையும் சேர்த்தால் 119 சதவிகிதத்திற்கு மேல் சொத்துக்களை ஜெயலலிதா

குவித்துள்ளார் என்றும் அதன்படி அவர் தண்டிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் கருத்துகள் கூறப்படுகின்றன.

அது மாத்திரமல்ல; வருவாய்க்கு மேல் சொத்துக் குவிப்பு பத்து சதவிகித அளவுக்குள் இருந்தால், அதற்குத் தண்டனை இல்லை என்ற விதி, தற்போது நடைமுறையிலே உள்ள ஊழல் தடுப்புச் சட்டத்திலே இடம்பெறவில்லை என்றும், 1988ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோதே இந்தச் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தத்தில் அப்படிப்பட்ட ஓர் அம்சம் இடம் பெறவில்லை என்றும் விரிவாகவும், விளக்கமாகவும் பலராலும் எடுத்துக் கூறப்பட்டது. இந்த விவரங்களையெல்லாம் பலரும் எடுத்துக்காட்டி, தீர்ப்பின் அடிப்படையிலேயே இவ்வாறு இமாலயத் தவறு உள்ளது, எனவே இந்தத் தீர்ப்பை மாற்ற வேண்டும், அதற்கு உதவியாக இந்த வழக்கில் முக்கிய முதல் நிலைப் பங்காற்றிவரும் கர்நாடக அரசுதானே உச்ச நீதிமன்றத்திலே மேல் முறையீடு செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆங்கில நாளிதழ்களில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ள "தி டைம்ஸ் ஆப் இந்தியா" ஏட்டில், - 22-5-2015 அன்று - மூத்த செய்தியாளர், ஏ. சுப்ரமணியம் என்பவர்; ஜெயலலிதாவின் வழக்கில் குமாரசாமி அளித்த தீர்ப்பு பற்றி மிகவும் விளக்கமாக "Curious Case of Amma Assets : Overlooking the obvious" - From Calculation To take on Gifts, Karnataka High Court Order has many Loopholes - என்ற தலைப்பிட்டு எழுதியுள்ளார். அதுபோலவே, பத்திரிகையாளர் சந்தியா ரவிசங்கர் என்ற பெண்மணி இந்த வழக்கு பற்றி நன்கு ஆய்ந்தறிந்து "More than Bad Maths : Four Big Errors That Let Jayalalithaa off the Hook" என்ற தலைப்பில் நீண்ட கட்டுரை ஒன்றை வெளியிட்டிருக்கிறார். கர்நாடக உயர் நீதிமன்றத்தின் 919 பக்கத் தீர்ப்பில் வழக்கத்துக்கு மாறான பல செய்திகளும், முடிவுகளும் இடம்பெற்றுள்ளன என்று குறிப்பிட்டுப் பல ஏடுகளும் வெளியிட்டுள்ள அசைக்க முடியாத வாதங்களில் சிலவற்றை மட்டும் சுருக்கமாகக் கூறுகிறேன்.

அதாவது ஜெயலலிதா தரப்பினர் இந்தியன் வங்கியிலே வாங்கிய பத்து கடன் தொகைகளைக் குறிப்பிட்டு, அதன் கூட்டுத் தொகை 24 கோடி ரூபாய் என்று நீதிபதி குமாரசாமி தனது தீர்ப்பிலே தெரிவித்திருக்கிறார். ஆனால் அந்தப் பத்துக் கடன் தொகைகளையும் யார் கூட்டினாலும் 10 கோடி ரூபாய்தான்

வருகிறது. பத்து கோடி ரூபாய் வங்கியில் கடன் பெற்றிருக்க, நீதிபதி குமாரசாமி 24 கோடி ரூபாய் கடன்பெற்றதாக மிகைப்படுத்திக் கூறி, ஜெயலலிதா தரப்பினரை வழக்கிலிருந்து விடுதலை செய்திருக்கிறார். எனவே கூட்டுத் தொகையில் 14 கோடியை அதிகமாகச் சேர்த்துச் சொல்லி, தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

வங்கியிலிருந்து பத்து முறை வாங்கப்பட்ட கடன் தொகைகளில், இந்தியன் வங்கியிலிருந்து ஜெயா பப்ளிகேஷன்ஸுக்காகப் பெறப்பட்ட 1.5 கோடி ரூபாய் கடன் திருப்பிச் செலுத்தப்பட்டிருக்கிறது. இதை விசாரணை நீதிமன்றமும் முறையான செலவு என ஏற்றுக்கொண்டு விட்டது. வாங்கப்பட்ட கடன்களில் வரிசை எண் 8இல் 1.57 கோடி ரூபாய் சுதாகரன் கடன் பெற்றதாக நீதிபதி குமாரசாமி தீர்ப்பிலே காட்டியிருக்கிறார். ஆனால் உண்மை என்னவெனில், சுதாகரன் 1.57 கோடி ரூபாய் கடன் கேட்டு இந்தியன் வங்கிக்கு விண்ணப்பம் கொடுத்தபோதிலும் - வங்கி 1.33 கோடி ரூபாய்தான் கடன் வழங்க அனுமதித்திருக்கிறது என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. இந்த வழக்கினைச் சிறப்பு நீதிமன்றம் விசாரித்தபோது, உண்மையாகச் சுதாகரன் கடனாகப் பெற்ற 1.33 கோடி ரூபாயை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொண்டது. ஆனால் நீதிபதி குமாரசாமி, சுதாகரன் கடன் கேட்டு விண்ணப்பித்த 1.57 கோடி ரூபாயை, அவர் கடன் பெற்றதாகக் கூறி, கணக்கிலே எடுத்துக்காட்டி குற்றஞ்சாட்டப்பட்டவர்களை வழக்கிலிருந்து விடுதலை செய்திருக்கிறார்.

நீதிபதி குமாரசாமி வருமான வரிக் கணக்குத் தாக்கல் செய்வதையும், வருமான வரி செலுத்துவதையும், வருவாய்க்கான ஆதாரமாக ஏற்றுக்கொண்டுள்ளார். ஆனால் 2014இல் சுரேஷ்ராஜன் வழக்கில் வருமான வரி செலுத்துவது மட்டுமே நேர்மையான வழியில் சொத்து சேர்ந்ததற்கான ஆதாரம் எனக் கூற முடியாது என்று உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி இந்த வழக்கில் நீதிபதி குமாரசாமி வருமான வரிக் கணக்கையும், வருமான வரி செலுத்தியதையும் வருமானத்திற்கான ஆதாரமாக ஏற்றுக்கொண்டது சரியல்ல என்று 'டைம்ஸ் ஆப் இந்தியா' ஏடு கூறுகிறது.

ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவர், "உச்ச நீதிமன்றம் வருவாய்க்கு அதிகமாகச் சொத்து சேர்த்தது சம்மந்தமான பல வழக்குகளில்,

வருவாய் வந்ததற்கான ஆதாரம் ஏற்றுக்கொள்ளும் வகையில் தெளிவுபடுத்தப்பட்டிருக்க வேண்டும்" என்றும்; "வருமான வரித் துறை, வருவாய்க்கான ஆதாரத்தைப் பரிசோதித்துப் பார்ப்பதில்லை. எனவே, வருமான வரிக் கணக்கை வருவாய்க்கான ஆதார ஆவணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது" என்றும் கூறியிருக்கிறார்.

ஜெயலலிதாவின் 44வது பிறந்த நாளுக்காகத் தரப்பட்ட ஒன்றரை கோடி ரூபாய் பரிசுகளை அவருடைய வருமானமாக நீதிபதி குமாரசாமி ஏற்றுக்கொண்டிருக்கிறார். இது நெறிமுறைக்கு மாறாக உள்ளது என்று 'டைம்ஸ் ஆப் இந்தியா' எழுதியுள்ளது. மேலும் வருமான வரி கட்டுவதன் மூலம், சட்ட விரோதமான சொத்தின் மீது களங்கம் துடைக்கப்பட முடியாது. பொது ஊழியர்களுக்கான நடத்தை விதிகளில் பரிசுகளைப் பெற்றுக்கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது. பரிசுகளை, வருமானத்துக்குரிய சட்டப்பூர்வமான வழியாக ஏற்றுக்கொண்டால், அது ஊழல் தடுப்புச் சட்டத்தின் முக்கிய நோக்கத்தையே வீழ்த்திவிடும் என்று அந்த ஆங்கில நாளிதழ் குறிப்பிடுகிறது.

தாமதமாகத் தாக்கல் செய்யப்பட்ட வருமான வரிக் கணக்குகளை நீதிபதி குமாரசாமி ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல், பிறந்த நாள் பரிசுகளையும், வெளிநாட்டிலிருந்து அனுப்பப்பட்ட பரிசுப் பணத்தையும் வருமானமாகச் சேர்த்துக் கொண்டதும் ஆச்சரியமான செய்தியாகும். 77 இலட்சம் ரூபாய் வெளிநாட்டுப் பணம் சி.பி.ஐ. விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, 2012ஆம் ஆண்டு முதல் உச்ச நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையிலே இருந்து வருகிறது. ஆனால் நீதிபதி குமாரசாமி அதற்குள்ளாகவே தன்னிச்சையாக அதை வருமானமாக எடுத்துக் கொண்டு, தனது தீர்ப்பிலே ஜெயலலிதாவை விடுதலை செய்திருக்கிறார். அன்னியச் செலாவணி முறைப்படுத்தும் சட்டத்தின்படி (FERA) அமைச்சராக இருக்கும் ஒருவர், வெளிநாடுகளிலிருந்து பரிசுப் பொருள்களைப் பெறுவது முற்றிலும் தடை செய்யப்பட்டிருக்கிறது. எனவே ஜெயலலிதா முதலமைச்சராக இருந்துகொண்டு 77 லட்ச ரூபாய்க்குப் பரிசுத் தொகையாகப் பெற்றிருப்பது அன்னியச் செலாவணி முறைப்படுத்தும் சட்டத்தின்படி குற்றமாகும். எனவே நீதிபதி குமாரசாமி, உச்ச நீதிமன்றத்திலே நிலுவையிலே உள்ள வழக்கின்

முடிவைப் பற்றிக் கவலைப்படாமலும், "பெரா" சட்டத்தை மதிக்காமலும் தீர்ப்பளித்திருக்கிறார்.

28 கோடி ரூபாய்க்குக் கட்டுமானச் செலவு செய்து, கட்டிடங்கள் கட்டப்பட்ட நிலையில், நீதிபதி குமாரசாமி அதை மிகவும் குறைத்து 5 கோடி ரூபாயாகக் குறைத்து விட்டார் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் அதை நிரூபிப்பதற்கான ரசீதுகளையோ, வவுச்சர்களையோ, பொறியாளர்களின் அறிக்கைகளையோ, கட்டிடம் கட்டியவரின் அறிவிப்புகளையோ தாக்கல் செய்யவில்லை என்றும் "டைம்ஸ் ஆப் இந்தியா" விளக்கியிருக்கிறது. கட்டுமானப் பொருள்களுக்கு அரசு நிர்ணயித்திருக்கும் விலையை நீதிபதி குமாரசாமி ஏற்றுக்கொள்ளாதது தவறு என்றும், கட்டுமானப் பொருள்களுக்கும் அரசின் பொதுப்பணித்துறை நிர்ணயிக்கும் விலையைத்தான் நீதிமன்றங்கள் அனைத்தும் ஏற்றுக்கொண்டு வரும் நிலையில், நீதிபதி குமாரசாமி அவர்கள் பொதுப்பணித் துறை நிர்ணயம் செய்த தொகையை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது, ஏதோ நீதிபதி வலிந்து குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கு அனுசரணையாக முக்கியமான தீர்ப்புகளையும், சட்டங்களையும் மீறி முடிவெடுத்துள்ளாரோ என்று சந்தேகிக்க வைக்கிறது.

நீதிபதி குமாரசாமி அவர்களே தனது தீர்ப்பு, பக்கம் 875இல் "பின் யோசனையில் தாக்கல் செய்யப்பட்ட வருமான வரிக் கணக்கு நம்பத்தக்க தல்ல" என்றும்; "பல ஆண்டுகளாக வருமான வரிக் கணக்கையே தாக்கல் செய்யாமல் இருப்பது வருமான வரிச் செலுத்த வேண்டியவரின் உரிமையைப் பறித்துவிடுகிறது. நீண்ட காலதாமதத்திற்குப் பின் வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்வதும், உரிய நேரத்தில் தாக்கல் செய்யாது இருப்பதும் "நமது எம்.ஜி.ஆர்." சந்தா திட்டத்தின் உண்மைத் தன்மையில் பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது" என்றும் கூறிவிட்டு, "நமது எம்.ஜி.ஆர்." சந்தா திட்டத்தின் மூலமாக 4 கோடி ரூபாய் வருமானத்தை ஏற்றுக்கொண்டிருப்பது முன்னுக்குப் பின் முரணானது ஆகும். இது எப்படியிருக்கிறதென்றால், ஒருவர் தன் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்படும்வரை, காத்திருந்து விட்டு அதற்குப் பின்னர் அடையாளம் காட்ட முடியாத வருமானத்தையெல்லாம் இணைத்து வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்துவிட்டால், சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும் என்ற எண்ணத்தோடு, "நமது எம்.ஜி.ஆர்."

சந்தா திட்டமே உருவாயிற்றோ என்று எண்ணத் தோன்றுகிறதா இல்லையா? இப்படிச் செய்வதால் நமது சமூக, பொருளாதார, அரசியல் கட்டமைப்புகளில் ஏற்படும் தாக்கத்தை நீதித் துறை விழிப்புணர்வோடு உணர்ந்துகொள்ள வேண்டும் என்றும் அந்த ஓய்வு பெற்ற நீதிபதி குறிப்பிட்டிருக்கிறார்.

என்.டி.டி.வி. தொலைக்காட்சி தெரிவித்த செய்தியில், வருமானத்திற்கு அதிகமாக ஜெயலலிதா வாங்கிக் குவித்த சொத்தின் மதிப்பீடு, கட்டிடங்களின் தளம் போடுவதற்கான செலவை மாற்றி அமைத்ததில் மட்டும் மூன்றில் ஒரு பங்கு குறைக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது என்றும், சதுர அடிக்கு 310 ரூபாய் என்பது 250 ரூபாயாகக் குறைக்கப்பட்டதால், 22 கோடி ரூபாய் குறைந்துள்ளது என்றும் அம்பலப்படுத்தியிருக்கிறது.

உச்ச நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் கருணானந்தி, "உச்ச நீதிமன்றம் கிருஷ்ணானந்த் அக்னிகோத்ரி வழக்கில் வழங்கிய தீர்ப்பு கர்நாடக உயர் நீதிமன்றத்தில் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. வருவாய்க்கு மீறிய சொத்து பத்து சதவிகிதம்வரை இருக்குமானால், குற்றஞ்சாட்டப்பட்டோர், விடுதலை பெற உரிமை உள்ளவர்கள் என்று நீதிபதி குமாரசாமி சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆனால் உச்ச நீதிமன்ற உத்தரவில் எந்த இடத்திலும், இவ்வாறு குறிப்பிடப்படவில்லை" என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

இதற்கிடையே இந்த வழக்கினைச் சட்ட விதி முறைகளின் இயல்பான அடுத்த கட்டமாக மேல் முறையீட்டுக்கு உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச்செல்லப்படாமலேயே தடுத்து சட்டத்தின் வாயை அடைப்பதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருவதாகச் சொல்லப்படுகிறது. தீர்ப்பிலே எல்லோருக்கும் எளிதில் புரியக்கூடிய கூட்டுத் தொகையிலே பெருந்தவறு இல்லாமல் இருந்திருந்தால்கூட, மேல் முறையீடு தேவையில்லை என்று கூறலாம். ஆனால் மாபெரும் தவறு நடைபெற்றிருக்கும்போது, ஏற்பட்டிருக்கும் தவறு அனைவருடைய கவனத்திற்கும் தெரிந்திருக்கும் போது, மேல் முறையீடு செய்யாமல், அந்தத் தவறான தீர்ப்பின் அடிப்படையில் அவசரம் அவசரமாக ஜெயலலிதா இவ்வாறு மீண்டும் முதலமைச்சராகப் பதவி ஏற்பது சட்ட விதிமுறைகளின்படி சரிதானா? நேர்வழியில் நிமிர்ந்து வந்து பதவி ஏற்காமல், சட்டத்தின் கால்களைக் கட்டிப்போட்டுவிட்டு,

மனசாட்சிக்கும் விடைகொடுத்துவிட்டு, கொல்லைப்புற வழியாக வந்து பதவி ஏற்பதற்கா இவ்வளவு பெரிய கொண்டாட்டம்? தவறான தீர்ப்பின் அடிப்படையிலே ஜெயலலிதா முதல் அமைச்சராகப் பதவியேற்க அரசியல் சட்டத்தின் பிரதிநிதியான தமிழக ஆளுனரும் ஒத்துழைப்பு கொடுத்திருக்கிறாரா? மத்திய அரசை ஆளும் பா.ஜ.க.வும் பதவியேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டதால் இந்தத் தவறுக்கு மத்திய அரசும் உடன்பாடாக இருக்கிறது என்று பொருளா?

ஏன், முதலமைச்சராகப் பொறுப்பேற்ற ஜெயலலிதாவுக்கே இந்தத் தீர்ப்பு தவறான தீர்ப்பு என்பது நன்றாகத் தெரிந்த காரணத்தால்தான், முதலில் திட்டமிட்டவாறு உடனடியாகப் பதவியேற்க முன்வரவில்லை. இருந்தாலும் பதவி ஆசை யாரையும் ஆட்டுவிக்கும் என்ற பாணியில் பின்னர் பதவியேற்றுக் கொண்டுள்ளார்கள். அதிலும்தான் ஏராளமான விதிமீறல்கள்!

ஜெயலலிதாவைப் பொறுத்தவரையில் அரசியல் சட்டத்திற்குப் புறம்பாகப் பதவியேற்பது இது முதல் முறையல்ல. 2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்பு, டான்சி நிலப் பேர ஊழல் வழக்கிலே தனி நீதிமன்றம் 9-10-2000 அன்று ஜெயலலிதா வுக்கு மூன்றாண்டு சிறைத் தண்டனையை விதித்தது. அவ்வாறு இரண்டாண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை பெற்றவர்கள், தேர்தலிலே போட்டியிட முடியாது என்ற விதிமுறைப்படி "ஜெயலலிதாவும் தேர்தலில் போட்டியிட முடியாது" என்று சட்டநிபுணர்கள் கூறினார்கள். அந்த நிலையில் ஜெயலலிதா சென்னை உயர் நீதிமன்றத்தில் 3-11-2000 அன்று, ஒரு மனுவைத் தாக்கல் செய்தார். அதில், தனி நீதிமன்றம் அளித்தத் தீர்ப்பை நிறுத்திவைத்து, தன்னைத் தேர்தலிலே போட்டியிட அனுமதிக்குமாறு கோரினார்.

அந்த மனுவை விசாரித்த நீதிபதி மலைசுப்பிரமணியன், ஜெயலலிதாவின் மனுவைத் தள்ளுபடி செய்து 11-4-2001 அன்று அளித்த தீர்ப்பில், "இந்தியத் தண்டனைச் சட்டம் 409வது பிரிவின்கீழ்க் குற்றவாளி என்று தீர்ப்பு கூறப்பட்டிருந்தால், அதனைத் தம்மால் நிறுத்திவைக்க முடியுமென்றும், ஆனால் அந்த வழக்கில் ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ்த் தனி நீதிமன்றம் கூறியிருக்கும் தீர்ப்பைத் தன்னால் நிறுத்திவைக்க முடியாது"

என்றும் குறிப்பிட்டிருந்தார். மத்திய தேர்தல் ஆணையமும், இதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தபோதே, ஜெயலலிதா நான்கு தொகுதிகளிலே போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்தார். நான்கு தொகுதிகளில் வேட்பு மனு தாக்கல் செய்ததால், அவருடைய வேட்பு மனு செல்லாது என்று தேர்தல் அதிகாரிகளால் தள்ளுபடி செய்யப்பட்டது. இதையே பெரிய காரணமாக ஜெயலலிதா தமிழகமெங்கும் பிரச்சாரம் செய்து, தமிழ் மக்களுக்கே இயல்பான அனுதாப உணர்வைத் தூண்டியதன் விளைவாக, அந்தத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்றது. தேர்தல் முடிவுகள் வெளிவந்து கொண்டிருந்த மே 14ஆம் தேதி அன்றே, அவசர அவசரமாக அ.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர்களின் கூட்டம் கூட்டப் பெற்று, ஜெயலலிதா சட்டமன்றக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உடனடியாக அன்றைய தினம் மாலையிலேயே அவருக்கு கவர்னர் பாத்திமா பீவி பதவிப் பிரமாணமும் செய்துவைத்தார். பதவியேற்கத் தடை கோரி யாராவது வழக்குத் தொடுத்து விடுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாகத்தான் அவசர அவசரமாகப் பதவி யேற்றதாக அப்போது ஏடுகள் எல்லாம் எழுதின. குறிப்பாக "ஆனந்த விகடன்" தனது தலையங்கத்தில் "தன் மீதுள்ள களங்கத்தைச் சட்டரீதியாகத் துடைத்தெறிந்த பிறகே முதல்வர் பதவியில் ஜெயலலிதா அமர வேண்டும். அதுதான் கண்ணியமும் கவுரவமிக்க அந்தப் பதவிக்கும் அழகு, அவருக்கும் அழகு" என்று எழுதியது.

15-5-2001 தேதிய "இந்து" தலையங்கத்தில், "சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து உறுதியாகத் தடை செய்யப்பட்ட ஒருவர் முதல் அமைச்சர் ஆவது இதுவே முதல் முறை என்றும், சட்டப்படி நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஒருவர் இத்தகைய பதவியில் அமர்வதும் இதுவே முதல் முறை என்றும், இரு நிலைகளிலும் அவருடைய செயல் அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படை உணர்வையே மீறுவதோடு, சட்ட ரீதியாகவும், நியாயபூர்வமாகவும், வேதனை அளிக்கும் வினாக்களை எழுப்பியுள்ளது" என்றும் எழுதியது. இதையெல்லாம் அலட்சியப்படுத்தி விட்டுத்தான் ஜெயலலிதா அப்போது பதவியேற்றார்.

சட்டப்பூர்வமான வழியை அலட்சியப்படுத்தி 2001ஆம் ஆண்டு கடைப்பிடித்த அதே நடைமுறையைப் பின்பற்றித்தான்

இப்போதும் ஜெயலலிதா பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

எந்த அளவுக்கு ஜெயலலிதா தரப்பினர் நிலத்தை வாங்கிக் குவித்தார்கள் என்பது பற்றிக் கூறவேண்டுமானால், 22-8-1994 அன்று 53 ஏக்கர்; 17-11-1994 அன்று 281 ஏக்கர்; 22-12-1994 அன்று 507 ஏக்கர்; 6-1-1995 அன்று 166 ஏக்கர்; 21-2-1995 அன்று 158 ஏக்கர் என்றும் பட்டியல் நீளுகிறது. 17-11-1994 அன்று ஒரே நாளில் மட்டும் 281 ஏக்கர் என்றும், 73.90 ஏக்கர் என்றும், 69.78 ஏக்கர் என்றும், 60.65 ஏக்கர் என்றும், 42.31 ஏக்கர் என்றும், 34.815 ஏக்கர் என்றும் தொடர்ச்சியாக நிலங்கள் என மொத்தம் மூன்றாயிரம் ஏக்கர் நிலங்கள் வாங்கியிருக்கிறார்கள். எனவே ஜெயலலிதா 66 கோடி ரூபாய்க்குச் சொத்து குவித்தார் என்பது பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு இந்த வழக்கு தொடரப்பட்ட நேரத்தில் கூறப்பட்ட தொகையாகும். உண்மையில் தற்போதுள்ள சந்தைக் கணக்குப்படி அந்தச் சொத்துக்களின் மதிப்பைக் கணக்கிட்டால் சுமார் 6000 கோடி ரூபாய்க்கு மேல் ஜெயலலிதா சொத்துக் குவித்திருக்கிறார் என்பதுதான் உண்மை!

“கர்நாடக உயர் நீதிமன்றத் தீர்ப்பு எதிர்காலத்தில் பல தவறான தீர்ப்புகளுக்கு முன்னோடியாக அமைந்துவிடக் கூடும். உலகம் இந்தியாவைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கும் தருணம் இது என்பதை உச்ச நீதிமன்றம் உணர வேண்டும். நீதிபதி குமாரசாமியின் தீர்ப்பு இந்திய நீதித் துறைக்கு உலகில் நிலவி வரும் மதிப்பை யும் மாண்பையும் வெகுவாகக் குறைத்துவிட்டது. எனவே உச்ச நீதிமன்றம் இந்தத் தீர்ப்பினைக் கூர்மையாகவும், ஆழமாகவும் ஆய்வுசெய்திட வேண்டும்” என்றெல்லாம் இந்த வழக்கு பற்றி கருத்துகள் சமூக அக்கறை கொண்ட பல செய்தி யாளர்களாலும், ஓய்வு பெற்ற நீதிபதிகளாலும் ஏடுகளில் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இந்த உண்மையைச் சட்டப்படி நிலைநாட்டிட வேண்டிய கடமை அனைவர்க்கும் உண்டு. மேலும் ஜனநாயகத்தின் மிக முக்கிய அங்கமான நீதித்துறைமீது படிந்துள்ள களங்கம் துடைக்கப்பட வேண்டும் என்று சட்ட விற்பன்னர்களும், நடுநிலைப் பத்திரிகையாளர்களும், சமூக ஆர்வலர்களும் பெரிதும் விரும்புகிறார்கள். நீதிபதி குமாரசாமி அவர்களின் தீர்ப்பே இறுதித் தீர்ப்பல்ல. இந்திய உச்ச நீதிமன்றம்தான் நீதி தேவனுக்கு நேர்ந்து

விட்ட மயக்கத்தைக் கலைத்து வளைந்துவிட்ட சட்டத்தை நிமிர்த்தி நேர்வழிப்படுத்திட வேண்டும். இந்த வழக்கில் மேல் முறையீடு செய்திட வேண்டிய பொறுப்பு கர்நாடக அரசுக்கும், டாக்டர் சுப்ரமணியம் சுவாமி அவர்களுக்கும் இருப்பதைப் போலத் தமிழக மக்களின் எதிர்பார்ப்புக்குத் தலை வணங்கி மேல் முறையீடு செய்திட வேண்டிய பொறுப்பு, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உண்டு என்பதால்தான், 25-5-2015 அன்று நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்திலே "இந்த வழக்கினில் பங்கேற்கத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உரிமை உண்டு என இரண்டு முறை உச்ச நீதிமன்றத்தால் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில், ஜெயலலிதா மீதான இந்தச் சொத்துக் குவிப்பு வழக்கிலே உச்ச நீதிமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும் மேல் முறையீடு செய்யும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்ற அறிவிப்பினைச் செய்திருக் கிறேன். நீதியின் ராஜபாட்டையில் எத்தனை தடைக்கற்களைக் குவித்தாலும் அவற்றைப் படிக்கற்களாக்கிக் கொண்டு இறுதியில் நீதி விண்ணுயர எழுந்து நிற்கும்! வெற்றி முரசம் ஒலிக்கும்!

அன்புள்ள,

மு.க.

27-5-2015

3967. எதைச் சொல்வது? எதை விடுவது?

உடன்பிறப்பே,

ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் கர்நாடக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய வேண்டுமென்று, கர்நாடக அமைச்சரவை கூட்டத்தில் 1-6-2015 அன்று முடிவெடுக்கப்பட்டு, தமிழகத்திலே வெளிவரும் நாளேடுகள் அனைத்திலும் முதல் பக்கத்தில் அந்தச் செய்தி பெரிதாக வெளிவந்துள்ளது. ஆனால் "தினமணி" நாளேட்டில் மட்டும் 9ஆம் பக்கத்தில் ஒரு மூலையில் "சிங்கிள் கலச் செய்தி" என்பார்களே, அவ்வாறு மிகச் சிறிய அளவில் அந்தச் செய்தி வெளிவந்திருப்பதிலிருந்து, இதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளலாம். கர்நாடக அரசின் இந்த முடிவினைப் பல்வேறு எதிர்க் கட்சிகள் வரவேற்றுள்ளன. குறிப்பாக, தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் தம்பி ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், திராவிடர் கழகத் தலைவர் தளபதி கி.வீரமணி, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் தம்பி வைகோ, பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர், தோழர் ஜி. ராமகிருஷ்ணன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் முத்தரசன், தமிழ் மாநிலக் காங்கிரஸ் தலைவர் தம்பி ஜி.கே. வாசன் ஆகியோரெல்லாம் கர்நாடக அரசின் முடிவினை வரவேற்று அறிக்கை வெளியிட்டுள்ளார்கள்.

இது தொடர்பாகச் செய்தியாளர்களிடம் பேசிய கர்நாடக மாநிலச் சட்டத்துறை அமைச்சர், திரு. டி.வி. ஜெயச்சந்திரா கூறும்போது, "அரசு வழக் கறிஞர் பி.வி. ஆச்சார்யா, அரசு தலைமை வழக்கறிஞர் ரவி வர்ம குமார், சட்டத்துறைச் செயலாளர் சங்கப்பா ஆகியோர் அளித்த பரிந்துரையின் பேரில், ஜெயலலிதா வழக்கில்

மேல் முறையீடு செய்வது என அமைச்சரவை முடிவெடுத்துள்ளது. உச்ச நீதிமன்றத்தில் விரைவில் மேல்முறையீடு செய்யுமாறு முதல்வர் சித்த ராமையா உத்தரவிட்டுள்ளார். கர்நாடக அரசின் இந்த முடிவில் எவ்வித அரசியல் பழிவாங்கல் எண்ணமும் இல்லை. முழுக்க முழுக்கச் சட்ட ரீதியான அம்சங்களின் அடிப்படையிலேயே மேல்முறையீடு செய்வது உறுதிசெய்யப்பட்டது. உச்ச நீதிமன்றத்தில் நடைபெறும் மேல்முறையீட்டு வழக்கில் கர்நாடக அரசின் வழக்கறிஞராக பி.வி. ஆச்சார்யா ஆஜராகி வாதிடுவார். அவருக்கு உதவியாளராக சந்தேஷ் சவுட்டா செயல்படுவார்" என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார்.

கர்நாடக அரசின் முடிவு குறித்து, இந்த வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் ஆஜராகப் போகின்ற வழக்கறிஞர் பி.வி. ஆச்சார்யா அளித்த பேட்டியில், "919 பக்கங்கள்கொண்ட தீர்ப்பில் 800 பக்கங்களில் வழக்கின் பழைய சம்பவங்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளது. 119 பக்கங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட குறைகள் உள்ளன. அந்தக்கோணத்தில் பார்த்தாலும், நான்கு பேரும் வழக்கில் இருந்து விடுதலையாக வாய்ப்பில்லை. தீர்ப்பில் உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டி உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய வேண்டுமென்று கர்நாடக மாநிலச் சட்டத் துறை முதன்மைச் செயலாளர், மாநில அரசு தலைமை வக்கீல் ரவிவர்மக்குமார் ஆகியோருக்குச் சிபாரிசு கடிதம் எழுதினேன். எனது நியாயமான கோரிக்கையை அரசு பரிசீலனை செய்தது. **உச்ச நீதிமன்றத்தில் எனது திறமையை வெளிப்படுத்திக் கர்நாடக உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புக்குத் தடை கேட்போம். அந்தத் தீர்ப்பை ரத்துசெய்யவைத்து, பெங்களூர் தனி நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உறுதிசெய்ய வைப்பேன்" என்று தெரிவித்திருக்கிறார்.**

ஜெயலலிதாவின் இந்த 66 கோடி ரூபாய் சொத்துக் குவிப்பு பற்றி முதன் முதலில் நாம் எதுவும் சொல்லிவிடவில்லை. நாடாளுமன்ற மாநிலங்களவையில் வெளியிடப்பட்ட விவரப்படி, ஜெயலலிதா முதல் முறையாக முதலமைச்சராகப் பொறுப் பேற்பதற்கு முன்பு, அவருக்கு இருந்த சொத்து மதிப்பு, அதாவது 1-7-1991 அன்றைய தேதியில் 2 கோடியே 1 இலட்சத்து 83 ஆயிரத்து 957 ரூபாய். (1991ஆம் ஆண்டு முதல் 1996ஆம்

ஆண்டு மே திங்கள் வரையில் ஜெயலலிதாதான் தமிழகத்தின் முதல் அமைச்சர். ஜெயலலிதா முதலமைச்சர் பதவியை ஐந்தாண்டுகள் அனுபவித்து முடிந்த பிறகு) 30-4-1996 அன்று ஜெயலலிதாவின் சொத்து மதிப்பு 66 கோடியே 65 இலட்சத்து 20 ஆயிரத்து 395 ரூபாயாகும். நாடாளுமன்றத்தில் தரப்பட்ட இந்தப் புள்ளி விவரங்களின் அடிப்படையில்தான் வழக்கே தொடங்கியது.

தனி நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையின்போது, நீதிபதி குன்ஹா அவர்களிடம் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் இந்தச் சொத்து மதிப்பில் ஒருசிலவற்றைக் குறைக்க வேண்டுமென்று வைக்கப்பட்ட முறையீடுகளின் அடிப்படையில், 66 கோடி ரூபாய்ச் சொத்து என்பதை 53 கோடியே 60 இலட்சத்து 49 ஆயிரத்து 954 ரூபாய் என்று குறிப்பிட்டுத்தான் தனது தீர்ப்பினை வழங்கினார். அதை எதிர்த்துத்தான் ஜெயலலிதா தரப்பினர் மேல் முறையீடு செய்தார்கள்.

மேல் முறையீட்டு வழக்கினை விசாரித்த நீதிபதி குமாரசாமி அவர்கள்தான் குன்ஹா அவர்கள் குறிப்பிட்ட 53 கோடி ரூபாய் சொத்து என்பதை, 37 கோடியே 59 இலட்சத்து 2 ஆயிரத்து 466 ரூபாய் மதிப்புள்ள சொத்துகள்தான் இருப்பதாகக் குறைத்தார். இந்தச் சொத்துகளை வாங்க ஜெயலலிதா தரப்பினருக்கு 34 கோடியே 76 இலட்சத்து 65 ஆயிரத்து 654 கோடி ரூபாய் வருமானம் வந்ததாகவும், அந்த வருமானத்தைச் சொத்து மதிப்பிலே கழித்து விட்டால், வருமானத்திற்கு அதிகமாக 2 கோடியே 82 இலட்சத்து 36 ஆயிரத்து 812 ரூபாய் சொத்துதான் சேர்த்திருப்பதாகவும், அந்த வருமானத்திற்கு அதிகமான சொத்து, ஜெயலலிதாவின் மொத்த வருமானத்தில் பத்து சதவிகிதத்திற்கும் குறைவாக 8 சதவிகிதம் என்ற அளவில் மட்டும் இருப்பதால் அவருக்குத் தண்டனை விதிக்கத் தேவையில்லை என்று இறுதியிலே கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி குமாரசாமி தீர்ப்பு வழங்கியிருக்கிறார். நீதிபதி குமாரசாமி தெரிவித்துள்ள இந்தப் புள்ளி விவரங்கள் உண்மையாக இருக்குமேயானால்கூட, அந்தத் தீர்ப்பை எவரும் ஏற்றுக்கொள்வர்; இந்த அளவுக்குப் பெரும் விவாதங்கள் எழுந்திருக்காது!

ஜெயலலிதாவின் வருமானம் பற்றி நீதிபதி குமாரசாமி தீர்ப்பிலே கூறும்போது, ஜெயலலிதா தரப்பினருக்கு 34 கோடியே

76 இலட்சத்து 65 ஆயிரத்து 654 ரூபாய் வருமானம் வந்ததில், வங்கியிலிருந்து மட்டும் 24 கோடியே 17 இலட்சத்து 31 ஆயிரத்து 274 ரூபாய் கடன் பெற்றதாகத் தெரிவித்ததோடு, அந்தத் தொகை யார் யார் பெயரால் எவ்வெப்போது கடனாக வாங்கப்பட்டது என்றும் விவரித்திருக்கிறார். அவர் விவரித்துள்ள அந்தப் புள்ளி விவரங்களைக் கூட்டினால் 10 கோடியே 67 இலட்சத்து 36 ஆயிரத்து 274 ரூபாய்தான் வருகிறது.

பத்து கோடியே 67 இலட்சம் மட்டுமே வருமானம் வங்கிக் கடன்கள் மூலமாக வந்திருக்க, அதை 24 கோடியே 17 இலட்சம் ரூபாய் வருமானம் வந்திருப்பதாகத் தவறாக மிகைப்படுத்தி கூறி, உயர் நீதிமன்ற நீதிபதியே ஜெயலலிதாவை விடுதலை செய்து தீர்ப்பு அளித்திருக்கிறார் என்றால், அது முறையான, நியாயமான தீர்ப்பா? இதைத்தான் இந்தியாவே கேட்கிறது. ஆனால், இந்தத் தீர்ப்பால் பயன்பெற்றவர்கள், இந்தத் தவறு பற்றி இதுவரை விளக்கம் தந்திருக்கிறார்களா என்றால் கிடையாது. நீதிபதி கூட்டுத் தொகையில் தவறு செய்ததால், ஜெயலலிதாவின் சொத்து மதிப்பு 10 சதவிகிதத்திற்கும் குறைவு என்று கூறி அவரை விடுதலை செய்திருக்கிறார். நீதிபதி கூட்டுத் தொகைக் கணக்கை முறையாகச் செய்திருந்தால், ஜெயலலிதா தன் வருமானத்திற்கு அதிகமாகச் சேர்த்த சொத்தின் மதிப்பு 76 சதவிகிதமாகும். அதன்படி ஜெயலலிதா தண்டனைக்கு உரியவர் ஆகிறாரா அல்லவா? இன்னும் சொல்லப்போனால், இன்று "எகனாமிக் டைம்ஸ்" ஆங்கில நாளிதழில், கர்நாடக அரசின் சிறப்பு வழக்கறிஞர், பி.வி. ஆச்சார்யா கொடுத்துள்ள பேட்டியில், சட்ட ரீதியாகவும், கணக்கியல் அடிப்படையிலும், உண்மை விவரங்களைக் கணக்கிட்டுப் பார்த்ததிலும், ஜெயலலிதா வருமானத்திற்கு அதிகமாக 200 சதவிகிதம் சொத்து சேர்த்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். இதற்கு அவர்களுடைய பதில் என்ன? இத்தனை நாட்களாக எல்லோருடைய மனதிலும் எழுந்துள்ள இந்த முக்கியமான கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் இருப்பதிலிருந்தே, அவர்கள் குற்றம் புரிந்திருப்பது ஊர்ஜிதமாகிறதா அல்லவா?

தமிழக உயர் நீதிமன்ற நீதிபதி பதவி வகித்து, இரண்டு நாட்களுக்கு முன்பு ஓய்வு பெற்ற நீதியரசர் தனபாலன், வழியனுப்பு விழாவில் பேசும்போது, "நீதித் துறை என்பது நிரந்தரமானது. உயர்

நீதிமன்றம் நிரந்தரமானது. நீதிபதிகள், வக்கீல்கள் வருவார்கள், போவார்கள். இந்த அமைப்புக்கு எந்த ஒரு கெட்டப் பெயரும் ஏற்படாதவாறு நாம் கவனத்துடன் பணியாற்ற வேண்டும். நீதித் துறை மீதான நம்பிக்கையைப் பொதுமக்கள் இழந்துவிட்டால், அதைவிட மோசமான நிலை வேறுஎதுவும் இருக்க முடியாது. இந்த நீதித்துறை மீது பொதுமக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் நாம் செயல்பட வேண்டும். நீதித் துறைக்கு வெளியில் உள்ளவர்களால் எந்த ஆபத்தும் ஏற்படாது. நீதித் துறைக்குள் இருக்கின்ற நம்மைப் போன்றவர்களால்தான் ஆபத்து வரும். எனவே, நாம் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்" என்று நீதிபதி தனபாலன் எடுத்துச் சொன்ன கருத்து, இப்போது நாட்டில் தோன்றியுள்ள நிலைமைக்கு எவ்வளவு பொருத்தமானது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

நீதிபதி குமாரசாமி அவர்கள், தனது தீர்ப்பில், பக்கம் 853இல்,

"The Accused No. 1 has claimed that she has received a sum of Rs.Two Crores and Fifteen Lakhs. Accused No. 1 has performed marriage of her foster son - Accused No. 3 and during her birth-day, she received gifts from the Party workers, friends, well-wishers etc. She has also claimed foreign remittance of Rs. 77 lakhs. Taking into consideration all these aspects, in my view, the income that arises from the gifts in my estimation will be around Rs. One Crore and Fifty Lakhs.

என்று கூறியிருக்கிறார்.

அதாவது, "முதல் குற்றவாளியான ஜெயலலிதா, 2 கோடியே 15 இலட்சம் ரூபாயை, பரிசுத் தொகையாகப் பெற்றதாக உரிமை கோருகிறார். ஜெயலலிதா தன்னுடைய வளர்ப்பு மகன் சுதாகரனின் திருமணத்தின் போதும், தன்னுடைய பிறந்த நாளின் போதும் கட்சித் தொண்டர்கள், நண்பர்கள் மற்றும் வேண்டியவர்களிடமிருந்து பரிசுகளைப் பெற்றிருக்கிறார். வெளிநாட்டிலிருந்து 77 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையாக வந்ததாகவும் உரிமை கோரியிருக்கிறார். இந்த அம்சங்களை யெல்லாம் கருத்தில் எடுத்துக்கொண்டு, பரிசுகளைப் பெற்றதன் மூலம் ஜெயலலிதாவுக்கு வந்த வருமானம் சுமார் ஒன்றரை கோடி

ரூபாய் என்று கணக்கிலே எடுத்துக்கொள்கிறேன்" என்று நீதிபதி குமாரசாமி கூறியிருக்கிறார்.

ஒரு பொது அரசு ஊழியர் அன்பளிப்பு பெறுவது என்பது சட்டத்துக்குப் புறம்பானது. முதலமைச்சர் என்கிற முறையில், ஜெயலலிதா ஒரு பொது அரசு ஊழியராகக் கருதப்படுபவர். அவர் தனக்கு அன்பளிப்பாக 2 கோடியே 15 இலட்சம் ரூபாய் வருவாய் வந்ததாகவும் - அதிலும் 77 இலட்ச ரூபாய் வெளிநாட்டிலிருந்து அன்பளிப்பாக வந்ததாகவும் ஒப்புக்கொண்டு கணக்கு கொடுக்கிறார். நீதிபதி குமாரசாமியும் அதைக் கணக்கிலே எடுத்துக் கொள்வதாகவும் ஒன்றரை கோடி ரூபாய் பரிசுகள் மூலமாக வருவாய் வந்திருப்பதாகவும் தீர்ப்பிலேயே தெரிவித்திருக்கிறார் என்றால், பொது ஊழியரான ஜெயலலிதா கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துகளை அன்பளிப்பாகப் பெற்றது நியாயம்தானா? சட்டப்படி சரியானது தானா?

நீதிபதி அதை ஏற்றுக்கொண்டு, அதனை முறையான வருவாயாகக் கணக்கிலே எடுத்துக்கொண்டு, ஜெயலலிதாவின் தண்டனையை ரத்துசெய்தது முறையானதுதானா?

அதே நேரத்தில், தனியார் தொலைக்காட்சி ஒன்று முறையாகக் கடன் பத்திரங்கள் அடிப்படையில், வங்கிக் காசோலை மூலமாகப் பணத்தைப் பெற்று, அந்தக் கடனையும் வட்டியோடு காசோலை யாகவே திருப்பி அளித்து, வருமானவரிக் கணக்கிலும் அதனை முறையாகக் காட்டிய பிறகும், அந்தத் தொலைக்காட்சிமீதும், அதன் இயக்குநர்கள்மீதும் வழக்கு நடைபெற்று வருவதையும் ஒப்பிட்டுப் பாருங்கள்!

கூட்டல் கணக்கில் நீதிபதி குமாரசாமி செய்த தவறை மேலே குறிப்பிட்டேன் அல்லவா? அதிலே நடந்திருக்கும் இன்னொரு வேடிக்கையையும் கூறுகிறேன், கேளுங்கள். ஜெயலலிதா தரப்பினர் வங்கியிலே கடன் பெற்றதாகக் குறிப்பிட்டிருப்பதில், இரண்டாவதாக உள்ளதுதான் கொடநாடு எஸ்டேட்டுக்காக வேளாண்மைக் கடன் 3 கோடியே 75 இலட்சம் ரூபாய் குணபூசனி என்பவர் பெயரில் வாங்கப்பட்டதாகும். இதை ஜெயலலிதாவின் வருமானமாக எவ்வாறு கணக்கிலே எடுத்துக்கொள்ளப்பட்டது? இந்தக் கொடநாடு எஸ்டேட் எவ்வாறு வாங்கப்பட்டது என்பதே

தனி பிரச்சினை. அதனைச் சுமார் பத்து கோடி ரூபாய் அளவுக்குத் தான் அப்போது வாங்கப்பட்டது. இப்போது அதன் மதிப்பு எவ்வளவு தெரியுமா? அந்த கொடநாடு எஸ்டேட் தேயிலைத் தோட்டம் சுமார் 900 ஏக்கர் பரப்புடையது. அதன் இன்றைய குறைந்தபட்ச சந்தை விலை ஒரு ஏக்கர் ஐந்து கோடி ரூபாய் என்று வைத்துக் கொண்டால்கூட, 4,500 கோடி ரூபாய் மதிப்புடையதாகும்.

உண்மையான இந்த விவரங்களையெல்லாம் ஒளித்து, தாங்கள் ஏதோ புனிதர்கள் போல உலகத்தை ஏமாற்ற எப்படியோ ஒரு தீர்ப்பினைப் பெற்று, அதன் அடிப்படையில் அவசர அவசரமாக முதலமைச்சராகவும் பொறுப்பேற்றுள்ளவர் யார், எப்படிப்பட்டவர் என்பதை எல்லோரும் தெரிந்துகொள்ள எத்தனையோ ஆதாரங்கள், புள்ளி விவரங்கள்; அவற்றிலே எதைச் சொல்வது? எதை விடுவது?

அன்புள்ள,

மு.க.

6-6-2015

3968. அய்யய்ய! சொல்ல வெட்கமாகுதே!

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டில் என்ன நடைபெறுகிறது? மக்களுக்கான ஆட்சி என்று ஒன்று நடைபெறுகிறதா? அமைச்சர்கள் என்போர் தலைமைச் செயலகத்திற்கு வந்து நிர்வாகக் காரியங்களை ஆற்றுகிறார்களா? கோப்புகள் நகருகின்றனவா? அதைப்பற்றி யாருக்காவது அணுவளவேனும் கவலையோ, அக்கறையோ உண்டா? ஏடுகளைப் பிரித்தால், அதிலே அத்தனை அமைச்சர்களும் முகம் காட்டுகிறார்கள்; அவர்கள் என்ன மக்கள் பணியா ஆற்றுகிறார்கள்? மக்களுக்குச் சேவை செய்யத்தானே அவர்கள் எல்லாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆனால் அத்தனை அமைச்சர்களும் ஆர்.கே.நகரில் முகாமிட்டிருக்கிறார்கள்! அங்கே அவர்கள் இருக்கிறார்களோ? இல்லையோ; ஏடுகளிலே முகம்காட்டுகிறார்கள்.

ஒரு அமைச்சர் அந்தத் தொகுதியில் பொது மக்களைச் சந்தித்து வாக்கு சேகரிக்கிறார் என்று ஏட்டில் செய்திபோட வேண்டுமென்றால், அதற்கு ஒரு கட்டணம்! புகைப்படத்தோடு செய்தி வெளியிட வேண்டுமென்றால் அதற்கு வேறு கட்டணம்! அதற்கான "ஏஜெண்டு"களுக்குத் தனிக் கமிஷன்! எப்படியாவது தாங்கள் பிரச்சாரம் செய்வது தேவரீர் அம்மையாரின் திருக்கவனத்திற்குச் செல்ல வேண்டும் என்பதுதான். "அம்மா" எந்த ஏட்டைடப் படிக்கிறார்கள் என்று ஆய்ந்துபார்த்து, அந்த ஏட்டில், தாங்கள் இடையறாது தேர்தல் பிரச்சாரம் செய்வதாகச் செய்தி வரவேண்டுமென்றுதான் துடியாய்த் துடிக்கிறார்கள்!

ஆர்.கே. நகர்த் தொகுதியிலே அப்படி ஏதாவது கடுமையான போட்டியா? இவர்கள் வம்பே வேண்டாமென்று முக்கிய கட்சிகள் எல்லாம் ஒதுங்கிக்கொண்டன! எதிரியே இல்லாத தொகுதியில்

இத்தனை அமைச்சர்களும் “சவடால்” வாக்குக் கேட்டுப் பிரச்சாரமாம்! வெறும் காற்றில் வாளை வீசுவதைப் போல, வெற்று ஆடம்பரப் பிரச்சாரமாம்! இதற்காக அத்தனை அமைச்சர்களும் அங்கே குழு அமைத்துப் பட்டுவாடா செய்கிறார்களாம்!

ஏடுகளிலே இந்த அமைச்சர்களின் பிரச்சாரத்தைத் தவிர வேறு என்ன செய்தி வந்திருக்கிறது என்று பார்த்தால், இன்று (15-6-2015) மாலை ஏடுகளில் மட்டும்,

- தாம்பரம், ஆதம்பாக்கத்தில் அடுத்தடுத்து 4 வீடுகளில் 60 சவரன் கொள்ளை - கொள்ளையர்கள் அட்டூழியம். (மாலை முரசு)
- காரப்பாக்கத்தில் அம்மன் கோவிலில் 17 சவரன் நகை திருட்டு (மாலை முரசு)
- செங்கல்பட்டில் அடுத்து அடுத்து 3 வீடுகளில் 100 பவுன் நகை கொள்ளை.
- மார்வாடிப் பெண்ணிடம் செயின் பறித்த மர்ம ஆசாமிகள்! கைக்குழந்தையோடு புகார் கொடுக்க அலைந்த பரிதாபம். (மாலை முரசு)
- திருவண்ணாமலை அருகே செம்மரக் கட்டை ஏஜெண்ட் ஐம்பது இலட்சம் ரூபாய் கேட்டுக் கடத்தல் (தமிழ் முரசு)
- வீட்டின் பூட்டை உடைத்து 39 சவரன், பணம் கொள்ளை - ஆதம்பாக்கத்தில் பரபரப்பு (தமிழ் முரசு)
- வீடு புகுந்து 5 லட்சம் ரூபாய் பணம், நகை கொள்ளை (தமிழ் முரசு)
- எஸ்.ஐ. வீட்டில் 11 பவுன் கொள்ளை - தாம்பரத்தில் துணிகரம் (தமிழ் முரசு)
- தென்சென்னையில் ஒரே நாளில் 3 வீடுகள் - கோவிலில் கொள்ளை (மாலை மலர்)

இவை ஒரு நாள் மாலையில் மட்டும் வந்த செய்திகள்! இதில் என்ன ஆச்சர்யம்? ஒவ்வொரு நாளும் இப்படித்தானே செய்திகள் வருகின்றன என்று கேட்கலாம். ஆமாம், இப்படித்தான் தொடர்ந்து

செய்திகள் வருகின்றன. ஆனால் அதைப் பற்றியெல்லாம் கவனிக்கவோ, கருதிப்பார்க்கவோ, ஆட்சியாளர்களுக்குக் கால நேரம் இல்லை. ஏன் இல்லை, என்ன செய்கிறார்கள் என்றால், ஆர்.கே. நகர்த் தொகுதியில் இரவும் பகலும் இடைவிடாமல் தேர்தல் பிரச்சாரம் செய்கிறார்கள். யாரை எதிர்த்துப் பிரச்சாரம் செய்கிறார்கள்? யாரையும் எதிர்த்து இல்லை என்றால், பின்னர் எதற்காகப் பிரச்சாரம்? அம்மாவை ஆதரித்துப் பிரச்சாரம்! எதிர்ப்பு தான் இல்லையே, பிறகு எதற்காகப் பிரச்சாரம் என்றால், என்ன செய்வது, எங்கள் அமைச்சர் பதவி நிலைக்க வேண்டாமா? கடந்த ஏழெட்டு மாதமாகக் கோவில் கோவிலாகச் சுற்றி வந்தோம்; பூஜை புனருத்தாரணங்களில் ஈடுபட்டோம்; மொட்டை போட்டுக் கொண்டோம்; யாகங்கள் செய்தோம்; பால் காவடி தூக்கினோம்; வேப்பிலை ஆடை உடுத்தினோம்; வேண்டுதல் எல்லாம் "அம்மா" விடுதலைக்காகத்தான்; இல்லையில்லை; அமைச்சர் பதவி நிலைக்க வேண்டு மென்பதற்காகத்தான்! தற்போது அம்மா விடுதலையாகி விட்டதால், அம்மாவுக்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்ய வந்துள்ளோம் என்பார்கள்.

ஆனால் நாட்டிலே என்ன நடைபெறுகிறது? தமிழகப் பொதுப்பணித் துறையில் 45 சதவீதம் வரை அதிகாரிகள் கமிஷன் கேட்பதாக, ஒப்பந்ததாரர்களே வெளிப்படையாகச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள். "ப்ளக்ஸ் போர்டே" வைத்தார்கள். முதற் கட்டமாகப் பத்து ஊழல் அதிகாரிகளின் பெயர்களையே வெளியிட்டார்கள். லஞ்ச ஒழிப்புத் துறையிடம் கடந்த மே திங்கள் 9ஆம் தேதியன்று புகார் மனுவே அளித்தார்கள். என்ன நடைபெற்றது? ஏதாவது விசாரணை நடந்ததா?

புகார் மனு கொடுத்த ஒப்பந்ததாரர்களையெல்லாம் தேடிப்பிடித்துச் சமரசம் பேசப்பட்டது. ஒப்பந்ததாரர்கள் சங்கமே இரண்டாக உடைக்கப்பட்டது. புகார் கொடுத்தவர்கள் மீதே சங்கத்திலே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் அவர்களுக்குத் தொடர்ந்து எந்த ஒப்பந்த வேலைகளும் தரக் கூடாது என்று பொதுப்பணித்துறைத் தலைமை வாய்மொழி உத்தரவே பிறப்பித்துள்ளது. இவை மாத்திரம்தானா? அந்த ஒப்பந்ததாரர்கள் ஏற்கனவே செய்த பணிகளையெல்லாம் எடுத்து ஆய்வுசெய்து அவற்றின்மீது ஏதாவது குறை - குற்றம்

கண்டுபிடிக்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இப்படிப் பட்ட பழிவாங்கும் நடவடிக்கைகளுக்காக அஞ்ச மாட்டோம் என்று அந்த ஒப்பந்ததாரர்கள் கூறியுள்ளார்கள். ஆட்சியிலே தவறு நடைபெறுகிறது என்பதைச் சுட்டிக்காட்டித் தட்டிக் கேட்டாலே, தண்டிக்கின்ற தறி கெட்ட ஆட்சிதான் தமிழகத்திலே நடைபெறுகிறது.

தமிழ்நாட்டு மக்களே! அனைத்துக் கட்சிகளிலும் இருக்கும் மனச்சாட்சி உள்ளவர்களே! உங்களிடம் கேட்கிறேன், ஒரு சில நிமிடங்கள் நினைத்துப் பாருங்கள்! தமிழ்நாட்டில் என்னதான் நடக்கிறது? ஆட்சி என்று ஒன்று ஜனநாயக ரீதியாக நடைபெறுகிறதா?

கடந்த ஆண்டு செப்டம்பர் 27ஆம் தேதி கர்நாடக மாநில சிறப்பு நீதிமன்றத்தால் ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டிக்கப்பட்ட பிறகு தமிழகத்திலே என்ன நடந்தது? தமிழக முதலமைச்சர் என்று ஒருவர் - மக்கள் முதல்வர் என்று ஒருவர்! முதல் அமைச்சருக்கு உரிய அறையிலேகூட உட்காராத ஒரு முதலமைச்சர். முதலமைச்சர் என்று அழைத்துக்கொள்ளக்கூட கூச்சம் கொண்டதைப் போலக் காட்டிக் கொண்ட ஒருவர். தமிழக அரசு அலுவலகங்களிலும், கட்டிடங்களிலும் முதலமைச்சரின் படங்களைக்கூட மாற்றவில்லை. ஏன், இன்னும் சொல்லப்போனால், இந்த ஆண்டு பிறந்து ஆறு மாதங்களாகின்றன. இதுவரை சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு உரிய "டைரி" கூட அச்சடித்துத் தரவில்லை! பேரவைச் செயலகம் என்று ஒன்று இயங்குகிறதா? பேரவைச் செயலாளர் என்று ஒருவர் இருக்கிறாரா? அவர் தான் ஆண்டுக்கணக்கிலே பதவி நீடிப்பு பெற்று ஆளுவோருக்கு ஆலவட்டம் சுற்றிக் கொண்டிருக்கிறாரே? அவர் எப்படி "டைரி" வெளியிடுவார்? வெளிவந்த அரசு காலண்டரிலே கூட முதலமைச்சர் படம் இடம்பெறவில்லை. ஐந்தாறு மாதங்கள் முதல்வராக பன்னீர் செல்வம் பதவிவகித்தாரே, அந்த மாதங்களில் ஏதாவது ஒரு அரசு நிகழ்ச்சி நடைபெற்றதா? அதிலே அவர் கலந்து கொண்டாரா? ஏதாவது ஒரு கட்டிடத்தையோ, பாலத்தையோ அவர் திறந்து வைத்தாரா? பிறகு எதற்காக அவர் முதலமைச்சர்? நாடுதானா இது?

இப்போது மட்டும் என்ன கிழிக்கிறது? அன்றாடம் முதலமைச்சர் ஜெயலலிதா மதியம் 1 மணி அளவில் தலைமைச் செயலகத்திற்கு வருவதும், காணொலி காட்சி மூலமாகத் தினமும் ஏதேதோ கட்டிடங்களைத் திறந்து வைத்ததாகவும், அமைச்சருடன் ஆலோசனை நடத்தியதாகவும் புகைப்படங்களுக்குக் காட்சி தந்து விட்டு, அவற்றை பத்திரிகைகளுக்கும் செய்தியாகத் தந்துவிட்டு, 3 மணி அளவில் இல்லம் திரும்பிவிடுகிறார்.

பொறுப்புக்கு வந்த இந்த 20 நாட்களில் இப்படி என்னென்ன செய்திருக்கிறார் என்றால்; 25-5-2015 அன்று பதவியேற்ற முதல் நாளில், தலைமைச் செயலாளரும், ஆலோசகரும் பக்கத்திலே நிற்க 3,047 கோடி ரூபாய் மதிப்பிலான ஐந்து திட்டங்களுக்கு முதலமைச்சர் ஒப்புதல் தந்து கையெழுத்திட்டார் என்ற செய்தி வந்தது.

தமிழகச் சட்டப்பேரவையில் ஆளுநர் உரை முடிந்து, நிதிநிலை அறிக்கை படிக்கப்பட்டுப் பொது விவாதமும் முடிந்தது. ஆனால் இன்றுவரை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெறவே இல்லை. மானியக் கோரிக்கை நிறைவேற்றப்படாததால் பல துறைகளில் பணிகள் நடைபெறாமல் முடங்கிக்கிடக்கின்றன. முதலமைச்சர் அறிவித்த 3047 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்படவும் இல்லை. ஆனால் நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் முடிந்த பிறகு, முதலமைச்சராக ஜெயலலிதா மீண்டும் பதவியேற்றதும் அவசர அவசரமாக அறிவிப்புதான் வந்தது.

அடுத்தடுத்த நாட்களிலே என்ன நடைபெற்றது தெரியுமா? 27-5-2015 அன்று காவல் நிலையங்கள் - புதிய குடியிருப்புகள் போன்ற 444 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கட்டிடங்களையும்; 30-5-2015 அன்று 2,154.26 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான துணை மின் நிலையங்களையும்; 31-5-2015 அன்று 814 கோடி ரூபாய் மதிப்பிலான கூட்டுக் குடிநீர் திட்டங்களையும்; 3-6-2015 அன்று நெடுஞ்சாலைத் துறை சார்பில் 389 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய பாலங்களையும்; 4-6-2015 அன்று 111.24 கோடி ரூபாய் மதிப்பிலான மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களையும்; 9-6-2015 அன்று 100 கோடி ரூபாய் மதிப்பிலான பாசன மேம்பாட்டுத்

திட்டங்களையும்; 10-6-2015 அன்று 281 கோடி ரூபாய் மதிப்பிலான பள்ளிக் கல்வித் துறை - பள்ளிக் கட்டிடங்களையும்; 11-6-2015 அன்று நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறை சார்பில் 123.08 கோடி ரூபாய் மதிப்பிலான நகராட்சி, பேரூராட்சிகளுக்கு புதிய அலுவலகங்கள், சுகாதார வளாகங்கள், பூங்காக்கள், சாக்கடை திட்டங்களையும்; 15-6-2015 அன்று 62 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட 80 மாணவர் விடுதிகளையும் முதலமைச்சர் ஜெயலலிதா காணொலி காட்சி மூலமாகத் திறந்து வைத்ததாக அன்றாடம் ஏடுகளின் வாயிலாகச் செய்திகள் வந்து கொண்டே உள்ளன. இன்றுவரை ஜெயலலிதா திறந்து வைத்த திட்டங்களின் மதிப்பு என்று கூட்டிப் பார்த்தால், 4,898.47 கோடி ரூபாய் மதிப்பிலான கட்டிடங்களைத் தொடங்கிவைத்து இருக்கிறார்.

ஜெயலலிதா முதல்வராகப் பொறுப்பேற்றவுடன்தான் இந்தக் கட்டிடங்கள் எல்லாம் திடீரென்று கட்டப்பட்டு முடிவடைந்தனவா? ஏற்கனவே கட்டிமுடிக்கப்பட்டவை என்றால், பன்னீர்செல்வம் முதல்வராக இருந்தபோது, அவைகளையெல்லாம் திறக்காமல், இத்தனை நாட்களாக வெறுமனே அந்தக் கட்டிடங்களையெல்லாம் பயன்படுத்தாமல் போட்டுவைத்திருந்தது ஏன்? மக்கள் கொட்டிக் கொடுத்த வரிப்பணத்தைச் செலவுசெய்து கட்டப்பட்ட கட்டிடங்கள்தானே அவைகள்? எத்தனை நாட்களாக அந்தக் கட்டிடங்கள் எல்லாம் கட்டிமுடிக்கப்பட்டு திறக்கப்படாமல் வெறுமனே போடப்பட்டிருந்தன? இதற்கெல்லாம் யார் காரணம்?

அதுமாத்திரமல்ல; இன்னும் ஒரு வேடிக்கை! போடியில் அரசு பொறியியல் கல்லூரியை ஜெயலலிதா திறந்து வைத்ததாக ஏடுகளிலே செய்தி வந்துள்ளது. ஆனால் இந்தக் கல்லூரி ஆறு மாதங்களுக்கு முன்பே திறக்கப்பட்டு நடந்துவருகிறதாம்! எப்படிப்பட்ட வேடிக்கை வினோதங்கள் எல்லாம் அ.தி.மு.க. ஆட்சியிலே அரங்கேறுகின்றன என்பதற்கு இவைகள் எல்லாம் தக்க எடுத்துக்காட்டுகளாகும்!

கடந்த ஆண்டுகளில்தான் எந்த அமைச்சரையும் விட்டு ஓர் அறிவிப்பினைக்கூட செய்ய விடாமல் தடுத்து, முதலமைச்சர் ஜெயலலிதாவே 110வது விதியின்கீழ் அனைத்துத் துறை

அறிவிப்புகளையும் தானே செய்ததாக விளம்பரப்படுத்திக் கொண்டார். இப்போதும் அதே பாணியில் திறக்கப்பட்ட கட்டிடங்களையெல்லாம் திறந்துவைத்ததாக ஒரு நாடகம் நாட்டுக்குத் தேவைதானா?

நான் கேட்கிறேன். கடந்த நான்காண்டு கால ஆட்சியில் நடைபெற்ற தவறுகளைப் போல, முறைகேடுகளைப் போல வேறு எந்த ஆட்சிக் காலத்திலாவது நடைபெற்றது உண்டா? அமைச்சர்கள் செய்த தவறுகள் காரணமாக ஜெயலலிதா பதில்சொல்ல முடியாமல், எத்தனை முறை அமைச்சர்களை மாற்றி அமைத்தார் என்பது நாட்டு மக்களுக்குத் தெரியாதா? நடவடிக்கை எடுத்த அமைச்சர்களில் சிலரை மீண்டும் அமைச்சராக ஆக்கியது ஏன்? அவர்கள் செய்த தவறுகளை மக்கள் மறந்து விட்டதாக எண்ணமா? அல்லது முறைகேடுகள் மூடி மறைக்கப்பட்டு விட்டனவா? தவறு செய்ததற்காக அமைச்சர்கள் மாற்றப்படவில்லை என்றால், அந்த அமைச்சர்கள் நீக்கப்பட என்ன காரணம்? வாக்களித்த மக்களுக்குத் தெரிந்து கொள்ளும் உரிமை இல்லையா?

ஆவின் பாலில் ஊழல் நடைபெற்றது என்பதற்காக அமைச்சர் ஒருவரை நீக்கியதோடு அ.தி.மு.க. பிரமுகர் ஒருவர் கைது செய்யப்பட்டாரே, அந்த வழக்கு என்னவாயிற்று? மூத்த அரசுஅதிகாரி ஒருவருக்கு அழுத்தம் கொடுத்து, ஒரு சிலரைப் பதவியில் நியமிக்க வலியுறுத்தி, அதன் காரணமாக அந்த அதிகாரி தன் குடும்பத்தினரை நடுத்தெருவில் விட்டுவிட்டு ரெயிலுக்கு முன் விழுந்து தற்கொலை செய்துகொண்டாரே, அதற்காக ஒரு அமைச்சர்மீது நடவடிக்கை எடுத்துக் கைது செய்தார்களே, அந்த வழக்கு என்னவாயிற்று?

முத்துக்குமாரசாமி சாவுக்காக ஒரு அமைச்சர் மீது நடவடிக்கை எடுத்தால் மட்டும் போதுமா? அமைச்சரவை என்றால் கூட்டுப் பொறுப்பு அல்லவா? இந்த ஒட்டு மொத்த அமைச்சரவையும் முத்துக்குமாரசாமியின் தற்கொலைக்குப் பதில் சொல்ல வேண்டாமா? ஆனால் இப்போது என்ன நடக்கிறது? அந்த வழக்கையே நீர்த்துப் போகச் செய்வதற்கான முயற்சி நடைபெறுகிறதா? இல்லையா?

செம்மரக் கடத்தல் வழக்கு என்ன ஆயிற்று? அதிலே சம்மந்தப்பட்ட அரசியல் பிரமுகர்கள் யார் யார்? அந்த வழக்கையும், திசை திருப்புவதற்கான முயற்சி நடைபெறுகிறதா இல்லையா? ஆனால் இப்படிப்பட்ட தவறுகளையெல்லாம் மறைத்துவிட்டு இடைத் தேர்தலில் வெற்றிபெற என்ன அவசரம்? ஒரு தொகுதி, காலியான இடம் என்று அறிவித்து, அந்தத் தொகுதிக்கு இடைத் தேர்தல் ஒரு சில நாட்களிலேயே அறிவித்த முன்மாதிரி இதற்கு முன்பு எப்போதாவது நடைபெற்றிருக்கிறதா?

ஜெயலலிதாவுக்குப் பதிலாக, பினாமி முதலமைச்சராகச் செயல்பட்டவரும், இன்று ஜெயலலிதாவுக்கு அடுத்த இடத்திலே இருப்பவருமான பன்னீர் செல்வத்தின் தம்பி பற்றி எப்படிப்பட்ட புகார் வந்தது? தற்கொலை செய்துகொண்டு மாண்ட தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த ஒரு பூசாரி தன் கைப்பட தன் சாவுக்குக் காரணம், அமைச்சரின் தம்பி ராஜாதான் என்று எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கின்ற வழக்கு என்னவாயிற்று? அந்த ராஜாவுக்கு கடந்த ஆண்டு ஜெயலலிதா கையால் சிறந்த நகர் மன்றத் தலைவர் விருதே வழங்கப்பட்டது. அவரிடமிருந்து நகர் மன்றத் தலைவர் பதவியைப் பறிக்கிறார்கள், அவர் கைது செய்யப்படுகிறார் என்றெல்லாம் செய்தி வந்ததே? என்னவாயிற்று? மறைக்கப்பட்டு விட்டதா?

மற்றொரு அ.தி.மு.க. நகர்மன்றத் தலைவி மீது போலி ஆவணங்களைக் காட்டி நில மோசடி செய்ததாகக் கூறப்பட்ட வழக்கில் உயர் நீதிமன்றமே, அவர் மீது நடவடிக்கை எடுக்க நேற்று உத்தரவிட்டிருக்கிறது. இதெல்லாம் இந்த ஆட்சியாளர்களுக்கு நேர்ந்திருக்கும் தலைக்குனிவு நிகழ்வுகள் இல்லையா? இவ்வாறு எத்தனை புகார்களை, ஊழல்களை, முறைகேடுகளை, ஜனநாயகத்திற்கும் மக்களுக்கும் விரோதமான விபரீதச் செயல்களை எடுத்துரைப்பது? அய்யய்ய! சொல்ல வெட்கமாகுதே!

மேல் முறையீட்டில் நீதிபதி குமாரசாமி அளித்த விடுதலையின் காரணமாக ஜெயலலிதா குற்றமற்றவர் என்று தற்காலிகமாகக் கூறப்பட்டாலும், டான்சி வழக்கிலே உச்ச நீதிமன்ற நீதிபதி கேட்டதைப் போலக் கேட்கிறேன். மனசாட்சிப்படி ஜெயலலிதா குற்றமற்றவர்தானா? குமாரசாமி அவர்களின்

தீர்ப்பில் உள்ள கூட்டுத்தொகை தவறுக்கு யார் பொறுப்பு? அந்தக் கூட்டுத்தொகை சரிதானா? இதுபற்றிய விளக்கத்தை இதுவரை ஜெயலலிதாவோ, அவருடைய கட்சியினரோ அளித்திருக்கிறார்களா? ஆனால் இதைப் பற்றியெல்லாம் சிறிதும் கவலைப்படாமல், அவசர அவசரமாகப் பதவியேற்பு - இடைத் தேர்தல் அறிவிப்பு - அதிலே போட்டி என்பதெல்லாம் தமிழ்நாட்டு மக்களை இன்னும் எத்தனை காலம் வேண்டுமானாலும் ஏமாற்றலாம் என்ற இறுமாப்புதானா?

ஆனால் இவை பற்றியெல்லாம் தமிழகத்திலே உள்ள நடுநிலை நாளேடுகள் என்று சொல்லிக் கொள்பவை ஜனநாயகத்தைப் போற்றி மக்கள் நலனைக் காத்திடும் பொருட்டு வாயைத் திறக்கின்றனவா என்றால், அதுதான் கிடையாது; மவுன விரதத்தில் மகிழ்ச்சி கொள்கின்றன! வாழ்க தமிழகத்தின் பத்திரிகாதர்மம்! வளர்க துக்ளக் தர்பார்!

அன்புள்ள,

மு.க.

17-6-2015

3969. "கொட்டைப்பாக்குக்கு விலை கூறும்" விசுவநாதன் பதில்!

உடன்பிறப்பே,

"கருணாநிதி புகாருக்கு நத்தம் விஸ்வநாதன் பதில்" என்ற தலைப்பில் ஓர் அறிக்கை ஒரு சில நாளேடுகளில் வெளிவந்துள்ளது. 9-7-2015 அன்று நான் வெளியிட்ட அறிக்கையில், "மின் வாரியத்தில் ஒரு லட்சம் கோடி ரூபாய் மெகா ஊழல் நடந்திருப்பதாக அந்த மின்வாரியத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஒரு அலுவலர், உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறாரே, உயர்நீதிமன்றமும் "நோட்டீஸ்" அனுப்பியிருக்கிறதே, அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு முதலமைச்சர் மக்கள் மன்றத்தின் முன் விளக்கம் அளிக்க முன் வருவதுதான் முறை" என்று குறிப்பிட்டிருந்தேன். இந்தக் கருத்தினை நான் மட்டும் தெரிவிக்கவில்லை; தமிழகத்தில் உள்ள பல்வேறு கட்சித் தலைவர்களும், இதுபற்றி முதலமைச்சர் உடனடியாகப் பதிலளிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நிலையில், மின்வாரிய மெகா ஊழல் பிரச்சினை குறித்து, மின்துறை அமைச்சர் அளித்துள்ள பதிலில், இந்த மனு விசாரிப்பதற்கு ஏற்ற மனுதானா என்று கண்டறிய முதல் கட்ட விசாரணையில் மட்டுமே அந்த மனுவை உயர்நீதி மன்றம் வைத்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். இதற்கு நான் பதிலளிப்பதைவிட "டைம்ஸ் ஆப் இந்தியா", ஆங்கில நாளேடு 8-7-2015 அன்று இந்தச் செய்தியை வெளியிட்ட போது, அதற்குத் தலைப்பே , "Power Purchase deals under HC Scanner - Seeks details of damning CAG Report after Petitionalleges Rs.1 lakh Crore Scam" (உயர்நீதிமன்ற ஆய்வில் மின் கொள்முதல் விவகாரங்கள் - ஒரு லட்சம் கோடி ரூபாய் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக தணிக்கை அதிகாரியின் அறிக்கை விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன) என்பதாகும். முதல் கட்ட விசாரணை ஆயினும், பிரச்சினையின் கடுமை கருதியும், வழக்கில் பூர்வாங்க உண்மை இருப்பதாலுமே, சென்னை

உயர்நீதிமன்றம், தொடர்புள்ள ஆவணங்களை நீதிமன்ற ஆய்வுக்குக் கேட்டுள்ளது.

உயர்நீதிமன்றம் இந்த வழக்கினை முதல் கட்ட விசாரணையிலேயேதான் வைத்திருக்கிறதா என்பதற்கும் அந்த நாளேடு விளக்கம் அளித்துள்ளது. அதாவது, "The spectre of an alleged loss of Rs. One lakh crore by the State, due to delayed power projects and purchase of power from private players at exorbitant rates, returned to haunt the Government with the Madras High Court seeking details of a damning Comptroller and Auditor General report on the issue. What was the nature of comments of the CAG? To what extent the explanation was not accepted? What is the view taken by the committee on public undertaking? Firing a volley of such questions at the Government, the first bench comprising Chief Justice Sanjay Kishan Kaul and Justice T.S. Sivagnanam on Tuesday said all relevant materials should be produced before the Court for perusal by August 10" என்று நீதிபதிகள் கூர்மையான கேள்விக்கணைகளைத் தொடுத்திடுவதற்கான அவசியத்தை உணர்ந்திருக்கும்போது, அமைச்சர் அதனை முதல்கட்ட விசாரணைதான் என்று அலட்சியமாகக் கூறியிருக்கிறார்.

உயர்நீதிமன்றத்தில் மின்வாரியத்தில் தவறுகள் நடைபெறுகின்றன என்று வழக்குத் தாக்கல் செய்த மின்வாரிய முன்னாள் அலுவலர் சி. செல்வராஜ் பற்றியும் அமைச்சர், வாரியத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டவர் என்றும், தண்டிக்கப்பட்டவர் என்றும் தெரிவித்திருக்கிறார். ஆனால் தண்டனையை எதிர்த்து, செல்வராஜ் செய்த மேல்முறையீட்டில், அவர் மீண்டும் பணி நியமனம் செய்யப்பட்டு, பழைய ஊதியமும் வழங்கப்பட்டது என்று மின்வாரியப் பொறியாளர் சங்கத் தலைவர் திரு.காந்தி தொலைக்காட்சியில் தெரிவித்திருக்கிறார்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் கடுமையான கேள்விகளுக்கு முதலமைச்சர் மக்கள் மன்றத்திற்கு முன்னால் விளக்கம் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டால், அதை, ஏதோ வியாபார நோக்கிலே அறிக்கை வெளியிட்டிருப்பதாக அமைச்சர் திரித்துக் கூறியிருக் கிறார். இந்த மின் உற்பத்தி, மின் கொள்முதல் பிரச்சினைகளில், விபரீதமான வியாபார நோக்கிலே செயல்பட்டுக் கொண்டிருப்பவர் யார் யார் என்பதெல்லாம் காலம் வரும்போது

மக்கள் மன்றத்தில் விவரமாக வெளிவந்து வேடம் கலையத்தான் போகிறது!

அ.தி.மு.க. ஆட்சியினர் எப்படிப்பட்ட மோசடியில் ஈடுபட்டுள்ளனர் என்பதற்கு ஒரு உதாரணம் கூற வேண்டுமேயானால், ஜெயலலிதா 8-7-2015 அன்று வெளியிட்ட அறிக்கையில், "கடந்த நான்காண்டுகளில் தொடங்கப்பட்ட புதிய திட்டங்களின் மூலமும், கொள்முதல் ஒப்பந்தங்கள் காரணமாகவும் மொத்தம் 5346.5 மெகாவாட் கூடுதல் மின்சாரம் பெறப்பட்டுள்ளது" என்று சொல்லியிருக்கிறார். ஆனால் 11-7-2015 அன்று மின்துறை அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "நீண்ட கால அடிப்படையில் ஒப்பந்தம், நடுத்தரக் கால அடிப்படையில் ஒப்பந்தம் மூலம் மொத்தம் 5346.5 மெகாவாட் மின்சாரம் தமிழகத்திற்குக் கிடைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன" என்று சொல்லியிருக்கிறார். முதலமைச்சர், 5346.5 மெகாவாட் மின்சாரம் பெறப்பட்டுள்ளது என்கிறார். ஆனால் அமைச்சர், 5346.5 மெகாவாட் மின்சாரம் கிடைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்கிறார். ஏன் இந்த வேறுபாடான அறிக்கைகள்? இதில் யார் சொல்வது உண்மை?

2011லிருந்து 2015ஆம் ஆண்டு வரை எந்தெந்தத் திட்டங்களிலிருந்து இந்த 5346.5 மெகாவாட் மின்சாரம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன என்பதையும் மின்துறை அமைச்சர் தனது அறிக்கையில் கூறியிருக்கிறார். ஆனால் உண்மையில் அந்தத் திட்டங்கள் எல்லாம் யார், யாருடைய ஆட்சிக் காலத்தில், எப்போது, தொடங்கப்பட்டன என்ற விவரங்களையும் நான் விரிவாகக் கூறுகிறேன்.

1. பவானி கட்டளை கதவணை II - இந்தத் திட்டம் 1996-97இல் தி.மு.கழக ஆட்சியில் 99.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 30 மெகாவாட்.

2. பெரியார் வைகை நீர்மின் உற்பத்தித் திட்டம் II - இந்தத் திட்டம் 2004-2005இல் அ.தி.மு.க. ஆட்சியில் 14.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 2.5 மெகாவாட்.

3. சிம்மாதிரி நிலை - II (அலகு 1) - இந்தத் திட்டம், மத்திய அரசுக்குச் சொந்தமானது. 500 மெகாவாட்.

4. பெரியார் நீர் மின்திட்டம் (அலகு III) - இந்தத் திட்டம், 2003-2004இல் அ.தி.மு.க. ஆட்சியில் 18.83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப் பட்டது. 4 மெகாவாட்.

5. சிம்மாதிரி நிலை - II (அலகு 2) - இந்தத் திட்டம், மத்திய அரசுக்குச் சொந்தமானது 500 மெகாவாட்.

6. வல்லூர் (அலகு 1) - இந்தத் திட்டம் 2007ஆம் ஆண்டில் தி.மு.கழக ஆட்சியில் 8,444 கோடி ரூபாய் மதிப்பீட்டில் என்.டி.பி.சி.யும், தமிழக மின்வாரியமும் இணைந்து தொடங்கப்பட்டது. 500 மெகாவாட்.

7. பெரியார் நீர் மின் திட்டம் (அலகு 1) - இந்தத் திட்டம் 2004-2005இல் 18.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அ.தி.மு.க. ஆட்சியில் தொடங்கப் பட்டது. 4 மெகாவாட்.

8. பவானி கட்டளை கதவணை - III - இந்தத் திட்டம், 1996-1997இல் தி.மு.க. ஆட்சியில் 99.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 30 மெகாவாட்.

9. வல்லூர் (அலகு 1) - இந்தத் திட்டம், 2007இல் தி.மு.க. ஆட்சியில், 8,444 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 500 மெகாவாட்.

10. மேட்டூர் அனல் மின் திட்டம் நிலை - III - இந்தத் திட்டம், 2008இல் தி.மு.க. ஆட்சியில் 3,550 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 600 மெகாவாட்.

11. வடசென்னை அனல் மின் நிலையம் (நிலை II) (அலகு 2) - இந்தத் திட்டம் 2008இல் தி.மு.க. ஆட்சியில் 3,095 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 600 மெகா வாட்.

12. பெரியார் நீர் மின் திட்டம் (அலகு 4) - இந்தத் திட்டம் 2004-2005இல் அ.தி.மு.க. ஆட்சியில் 18.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 4 மெகாவாட்.

13. பவானி கட்டளை கதவணை III - இந்தத் திட்டம் 2004-2005இல் அ.தி.மு.க. ஆட்சியில் 49.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 10 மெகாவாட்.

14. பெரியார் - வைகை நீர் மின் திட்டம் - III - இந்தத் திட்டம் 2003-2004இல் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அ.தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டது. 2.5 மெகாவாட்.

15. வட சென்னை (நிலை II) (அலகு 2) - இந்தத் திட்டம், 2008இல் தி.மு.க. ஆட்சியில் 2718 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 600 மெகாவாட்.

16. கூடங்குளம் அலகு 1 - இந்தத் திட்டம் மத்திய அணு மின் கழகத்தால் தொடங்கப்பட்டது. 1000 மெகாவாட்.

17. வல்லூர் (அலகு 3) - இந்தத் திட்டம் 2007இல் தி.மு. கழக ஆட்சியில் 8444 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 500 மெகாவாட்.

18. நெய்வேலி அனல் மின் நிலையம் - விரிவாக்கம் 2 - (அலகு 2) - இந்தத் திட்டம் மத்திய அரசுக்குச் சொந்தமானது. 250 மெகாவாட்.

19. தூத்துக்குடி அனல் மின் நிலையம் - அலகு 1 - இந்தத் திட்டம் 2007இல் தி.மு.க. ஆட்சியில் 4910 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 500 மெகாவாட்.

அமைச்சர் குறிப்பிட்டுள்ள இந்த 19 திட்டங்களையும் எடுத்துக் கொண்டால், 3,860 மெகாவாட் மின்சார உற்பத்திக்கான திட்டங்கள், 22,915 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஏற்கனவே நடைபெற்ற தி.மு.கழக ஆட்சியிலும் - வெறும் 27 மெகாவாட்

மின்சார உற்பத்திக்கான திட்டங்கள் மட்டுமே 134.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்கனவே நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியிலும் - 2,250 மெகாவாட் மின்சார உற்பத்திக்கான திட்டங்கள் மத்திய அரசின் மூலமாகவும் தொடங்கப்பட்ட திட்டங்களாகும். மத்திய அரசின் திட்டங்களின் மூலமாக தமிழகத்திற்குக் கிடைத்தது 1,459.50 மெகாவாட்.

தமிழக முதலமைச்சரும், மின் துறை அமைச்சரும் திரும்பத் திரும்ப தாங்கள் ஏதோ 5,346.50 மெகாவாட் மின்சாரத்தைத் தங்கள் ஆட்சிக் காலத்திலே திட்டமிட்டு - நிதி ஒதுக்கீடு செய்து - டெண்டர் கோரி - பின்னர் பணிகளை நிறைவு செய்து மின் உற்பத்தி செய்திருப்பதைப்போல, திரும்பத் திரும்ப மக்களிடம் கூறி ஏமாற்றி வருகிறார்களே, இதிலே உண்மை ஏதாவது இருக்கிறதா?

இந்த உண்மைகளையெல்லாம் மறைத்துவிட்டு, முதலமைச்சரும், மின்துறை அமைச்சரும் "கடந்த நான்காண்டுகளில் அ.தி.மு.க. ஆட்சியில் திட்டமிட்டுத் தொடங்கப்பட்ட புதிய மின் உற்பத்தியின் மூலம் 5346.5 மெகாவாட் கூடுதல் மின்சாரம் பெறப்பட்டுள்ளது" என்று தம் நெஞ்சறிந்த பொய்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் யாரை ஏமாற்ற இந்த நாடகம்?

2011ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு அறிவித்த ஏராளமான மின் திட்டங்களிலிருந்து ஏதாவது ஒரு மெகாவாட் மின்சாரமாவது கிடைத்திருக்கிறதா? அவற்றின் கதி என்ன? அதற்கு ஏன் அமைச்சர் பதில் அளிக்கவில்லை ?

மீட்டர்கள் வாங்குவதிலே முறைகேடுகள் நடைபெற்றுள்ளன என்ற செல்வராஜின் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்லாமல், அமைச்சர் தனது அறிக்கையில், வாரியத்தின் வருவாய் மாதம் ஒன்றுக்கு 20 சதவிகிதம் அளவு அதிகரித்துள்ளது என்று பதில் அளித்திருக்கிறார். புதிய மீட்டர் வாங்கும்போது முறைகேடு நடந்ததா? இல்லையா? குற்றச்சாட்டுக்கு நேரடியாக அமைச்சர் பதில் கூறாததில் இருந்தே, மீட்டர் வாங்கியதில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளன என்பது ஊர்ஜிதம் ஆகிறதா அல்லவா? மேலும் புதிய மீட்டர் வைக்கப்பட்டதால், வாரியத்தின் வருவாய் 20 சதவிகிதம் அதிகரித்துள்ளது என்று அமைச்சரே பதில் கூறியதிலிருந்து மின் நுகர்வோர் தலையில் மாதந்தோறும்

20 சதவிகித அளவுக்கு அதிகத் தொகையைச் சுமத்தி வசூலித்திருக்கிறார்கள் என்பதுதானே உண்மை!

12-9-2014 அன்று தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் வெளியிட்ட ஆணையில் 12-9-2015க்குள் சூரிய சக்தி மின் நிலையம் அமைத்து, மின் உற்பத்தியைத் துவக்குவோரிடம், மின்வாரியம் ஒரு யூனிட் மின்சாரத்தை 7.01 ரூபாய் விலையில் வாங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த ஆணையை 1-4-2016 வரை, அதாவது ஆறு மாத காலத்திற்கு நீட்டித்து, மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவு பிறப்பித்தது. ஏன் இந்தக் கால நீடிப்பு என்று நான் அப்போதே கேட்டேன். வெளி மாநிலங்களில் சூரிய சக்தி மின்சாரம் ஒரு யூனிட் ரூ.5.40க்குக் கிடைக்கும் போது, ரூ.7.01 என்ற அதிகமான விலை கொடுத்து வாங்க கால நீடிப்பு செய்தது ஏன்? அண்மையில் அதானி குழுமத்தோடு செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூட ஒரு யூனிட் மின்சாரம் 7.01 ரூபாய்க்கு வாங்கத்தான் முடிவு செய்யப்பட்டிருப்பதாகச் செய்தி வந்தது. வெளியிலே குறைவான விலைக்குக் கிடைக்கும்போது, அதிக விலை கொடுத்து வாங்க ஒப்பந்தம் போடப்பட்டது ஏன்?

ஒழுங்குமுறை ஆணையத்தின் மூன்று உறுப்பினர்களில் ஒருவரான திரு.நாகல்சாமி, அப்போதே ஆணையத்தின் இந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்த போதிலும், அதை மீறி ஆணை பிறப்பிக்கப்பட்டதா இல்லையா? மின்சாரத்தை வாங்கவுள்ள மின்வாரியமோ, மின்சாரத்தைப் பயன்படுத்தும் மின் நுகர்வோரோ யாரும் கோரிக்கை விடுக்காத நிலையில், ஆணையம் தன்னிச்சையாக இவ்வாறு கட்டண ஆணையை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்க என்ன காரணம்? குஜராத் அதானிக்காகத்தானா? இவ்வாறு கட்டண ஆணையை நீட்டிப்பது குறித்து மின்சார ஒழுங்கு முறை ஆணையத்தில் விவாதிக்கப்படவில்லை. அதிக விலை கொடுத்து ஒப்பந்தப்படி 25 ஆண்டுகளுக்கு மின்சாரம் வாங்கினால் 23 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்று கூறப்படுகிறதே, அதற்கு மின் துறை அமைச்சரின் பதில் என்ன?

மத்திய அரசுதான் மின் உற்பத்தி குறைவுக்குக் காரணம் என்று ஜெயலலிதா ஒருமுறை கூறினார். ஆனால் தமிழ்நாடு மின் பொறியாளர்கள் சங்கத்தின் தலைவர் காந்தி அப்போதே விடுத்த அறிக்கையில், “மத்திய மின் நிறுவனங்களின் உற்பத்தி

பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது ஒருபுறம் இருந்தாலும், தமிழக அரசின் மின் உற்பத்தித் திட்டங்கள் செயல்படுகின்றனவா? இல்லையே; குறிப்பாக மேட்டூரில் உள்ள 600 மெகாவாட் அலகும், வடசென்னையின் இரண்டாவது அலகான 600 மெகாவாட்டும், வல்லூரில் உள்ள முதலாவது அலகான 500 மெகாவாட்டும் முடிவடைந்து 2012 மார்ச் மாதத்தில் முழுமையாக அவை பரிசோதிக்கப்பட்டு மின்சாரக் கட்டமைப்பில் இணைக்கப்பட்டன. ஆனால் என்ன காரணத்தினாலோ அவற்றிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யாமல் தமிழக அரசு நிறுத்தி வைத்திருக்கிறது. இதனால் 1547 மெகாவாட் மின்சாரத்தை இழந்து நிற்கிறோம்" என்கிற அதிர்ச்சியூட்டும் தகவலைத் தந்தாரே, தமிழக அரசு ஏன் அதற்குப் பதிலளிக்க வில்லை ?

அதுபற்றி மின் வாரிய வட்டாரங்களில் விசாரித்த போது, "அந்தத் திட்டங்கள் தி.மு.க. ஆட்சியின் போது கொண்டுவரப்பட்டவை. மேலும் தனியாரிடம் மின்சாரத்தை வாங்குவதற்காகவே, மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்ட திட்டங்களைக்கூட செயல்பாட்டுக்குக் கொண்டுவராமல் இருக்கிறார்கள்'' என்று கூறினார்கள். மின் வாரிய மெகா ஊழல் குறித்து மக்களிடையே எழுந்துள்ள சந்தேகங்களுக்கு மின் துறை அமைச்சர் நேரடியாகப் பதிலளிக்காமல், திசை திருப்பும் நோக்கில், உண்மைக்கு மாறானவற்றைச் சுற்றி வளைத்துச் சொல்ல முயற்சித்திருப்பதைப் பார்க்கும்போது, "பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால், கொட்டைப் பாக்கு விலை பத்து பைசா" என்ற பழமொழிபோல் அல்லவா இருக்கிறது, அமைச்சரின் பதில் என்றுதானே கூறத் தோன்றுகிறது!

அன்புள்ள,

மு.க.

14-07-2015

3970. நெஞ்சில் ஓர் வஞ்சமிலா நீட்டோலை!

உடன்பிறப்பே,

"திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் மதுவிலக்கை அமல்படுத்த தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று 21-7-2015 அன்று நான் அறிவித்திருந்த போதிலும், தமிழகமெங்கும் உடனடியாக மதுவிலக்கை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்று அ.தி.மு.க. அரசை வலியுறுத்தி நடைபெறும் போராட்டங்களின் தொடர்ச்சியாக, தமிழக மக்களின் ஒருமித்த உணர்வுகளை எதிரொலித்திடும் வகையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 10-8-2015 திங்கள்கிழமையன்று மாவட்டத் தலைநகரங்களில், அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர் தலைமையில் மதுவிலக்கை நடைமுறைப்படுத்தக் கோரி அறவழியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்" என்று 3-8-2015 அன்று நான் விடுத்த அறிக்கையில் தெரிவித்திருந்தேன். தொடர்ந்து 5-8-2015 தேதிய முரசொலியில் எந்தெந்த இடங்களில் யார் யார் தலைமையில் அந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் என்ற விவரமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே தி.மு.கழகத்தைப் பிடிக்காத ஒரு சில குறிப்பிட்ட கட்சியினரும், ஏன் தி.மு. கழகத்தை எதிர்க்காத ஒரு சில கட்சியினரும்கூட, இந்த மதுவிலக்குப் பிரச்சினை பற்றி தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்தபோது தானே, மதுவிலக்கை ரத்து செய்தது, எனவே தி.மு.கழகத்தால் தான் எல்லாம் கெட்டுவிட்டது என்ற ரீதியில் தொடர்ந்து பேசி வருகிறார்கள். இதற்கான விளக்கத்தை அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

தி.மு. கழகம் 1971ஆம் ஆண்டு மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டிய கட்டாயம் ஏன் ஏற்பட்டது; அதற்கு முன்பும் பின்பும் என்ன நிலைமை என்பதையும் சற்று விரிவாக எடுத்துக் கூற வேண்டியது எனது கடமை என்று கருதுகிறேன்.

தி.மு. கழக ஆட்சியில் மது விலக்கு ஒத்தி வைக்கப்பட்டது என்றாலும், அப்போதே நான் கூறியிருக்கிறேன்; இதனை திராவிட முன்னேற்றக் கழகம் முழு மனதோடு கொண்டு வரவில்லை என்றும், அப்போதுள்ள தமிழகத்தின் நிதி நிலைமைதான் அதற்குக் காரணம் என்றும் விளக்கியிருக்கிறேன்.

மதுவிலக்கை தி.மு.கழகம் ஒத்தி வைக்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலைக்கு அப்போதைய நிதி நிலைமை தமிழக அரசிலே இருந்தது. அந்த முடிவை நாங்கள் எடுக்க முன்வந்த போது மூதறிஞர் ராஜாஜி அவர்களே, என் இல்லத்திற்கு வருகை தந்து, அந்த எண்ணத்தைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அவரிடம் நான் தமிழக அரசின் நிதி நிலைமைகளை எல்லாம் விளக்கிய பிறகு, அவர் உண்மையைப் புரிந்து கொண்டார். ஆனால் ராஜாஜி, ஏதோ கொட்டும் மழையில் நனைந்து கொண்டே அவரது வீட்டிலிருந்து கோபாலபுரத்திற்கு நடந்தே வந்ததைப் போலவும், என்னிடம் ஏதோ மன்றாடிக் கேட்டுக் கொண்டதைப் போலவும், அதை நான் கேட்கவில்லை என்பதைப் போலவும் சிலர் இப்போது பேசுகிறார்கள். அப்படிப் பேசுவதற்குப் பெயர்தான் அரசியல் ஆதாயம் தேடுவதாகும். அதுபோலவேதான் கண்ணியத்திற்கு உரிய காயிதே மில்லத் அவர்களும் என்னைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்தார். அவரிடமும் நான் நிதி நிலைமையை விளக்கிக் கூறினேன்.

மதுவிலக்கை ஒத்தி வைத்து தமிழகச் சட்டப்பேரவையில் நான் உரை நிகழ்த்தும்போது கூட, மிகுந்த வேதனையுடன்தான் பேசினேன். “புனித நோக்கத்துடன் இந்தியப் புவி முழுவதும் எந்தக் கொள்கை விரிவாக்கப்பட வேண்டுமென்று காந்தியடிகள் கூறினாரோ, அந்தக் கொள்கை அவர் ஏந்திய கொடி நிழலில் அணி வகுத்து நின்ற அவர்தம் தானைத் தளபதிகளாம் மாநில முதல்வர்களாலேயே பின்பற்ற முடியாமல் போனது மட்டுமல்ல, மத்திய அரசினை நடாத்தும் மகாத்மாவின் வாரிசுகளாலும் புறக்கணிக்கப்பட்டது வேதனை தரும் செய்தியாகும். கொழுந்து விட்டெரியும் நெருப்பு வளையத்திற்குள் கொளுத்தப்படாத கற்பூரமாகத் தமிழ்நாடு எத்தனை நாளைக்குத்தான் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்” என்று சட்டப் பேரவையில் பேசினேனே தவிர, மனச்சாட்சி இடம் கொடுக்காத நிலையில்தான் மதுவிலக்குச் சட்டம் ஒத்தி வைக்கப்படுவதாக அறிவித்தேன்.

என்னுடைய இந்தக் கருத்து அவ்வளவும் உண்மை என்பதற்கு ஓர் உதாரணம் கூற வேண்டுமேயானால், "தமிழக அரசியல் வரலாறு" என்ற தலைப்பில் சிறந்த எழுத்தாளர் ஆர். முத்துக்குமார் எழுதிய நூல் ஒன்றில், பக்கம் 282-283இல் குறிப்பிடும்போது, "தமிழ்நாட்டில் மதுவிலக்கு அமலில் இருந்த போது, பலத்த நிதி நெருக்கடி இருப்பதால் மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்வது அத்தியாவசிய நடவடிக்கை என்ற பேச்சுக்கள் எழுந்தன. நிதி நெருக்கடியைச் சமாளிக்க வேண்டுமென்றால் மதுவிலக்கை ஒத்தி வைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றார் முதலமைச்சர் கருணாநிதி. பலத்த யோசனைக்குப் பிறகு மதுவிலக்கு ஒத்திவைப்பு விஷயத்தில் கருணாநிதிக்கு ஆதரவு கொடுக்கத் தயாரானார் எம்.ஜி.ஆர். அதனைக் கோவையில் நடந்த தி.மு.க. பொதுக்குழுவில் எம்.ஜி.ஆர். தெரிவித்தார். மது விலக்கை அரசு தற்காலிகமாக ஒத்தி வைத்துள்ளது, நிரந்தரமாக அல்ல என்றார் எம்.ஜி.ஆர். மனச்சாட்சி இடம் கொடுக்காத நிலையிலும் நிதி நெருக்கடியைக் கருத்தில் கொண்டு மதுவிலக்குச் சட்டம் ஒத்தி வைக்கப்படுகிறது என்று சட்டமன்றத்தில் அறிவித்தார் கருணாநிதி மதுவிலக்கை அமல்படுத்தும் மாநிலங்களுக்கு நஷ்ட ஈடாக நிதி உதவி வழங்கும் புதிய திட்டத்தைக் கொண்டு வந்தது மத்திய அரசு. நிதி நெருக்கடியில் உழன்று கொண்டிருந்த தமிழக அரசு தமிழகத்தில் மதுவிலக்கு அமலில் இருப்பதைக் காரணம் காட்டி மத்திய அரசிடம் நிதி உதவி கோரியது. ஆனால் மத்திய அரசோ கை விரித்துவிட்டது. புதிதாக மது விலக்கை அமல்படுத்தும் மாநிலங்களுக்கு மட்டுமே நிதி உதவி; ஏற்கனவே அமலில் இருக்கும் மாநிலங்களுக்கு அல்ல என்பது மத்திய அரசு சொன்ன காரணம்" என்று அந்த எழுத்தாளர் தனது நூலில் கூறியிருக்கிறார்.

அப்போது மதுவிலக்குச் சட்டத்தை மீண்டும் அமல்படுத்தக் கோரி பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் போராட்டம் நடத்தி, அவரது கட்சியைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கானவர்கள் மறியல் செய்து கைது செய்யப்பட்ட நேரத்தில், அவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்றும், அனைவரையும் விடுதலை செய்ய வேண்டுமென்றும் நான் கூறி அவ்வாறே செய்தேன்.

29-6-1971 அன்று நிதி நிலை அறிக்கை மீதான பொது விவாதத்திற்குப் பதிலளித்து நான் உரையாற்றும்போது மதுவிலக்குக் கொள்கையை தி.மு. கழகம் ஒத்தி வைத்தது

பற்றித்தான் நீண்ட நேரம் விளக்கமளித்தேன். உலகத்தின் பல்வேறு நாடுகளில் என்னென்ன நிலைமை ஏற்பட்டது என்பதையெல்லாம் விளக்கமாகக் கூறினேன். தமிழகத்தில் மதுவிலக்கு நடைமுறையில் இருந்த போது கள்ளச்சாராயம், வார்னிஷ் குடித்து எத்தனை பேர் இறந்தார்கள் என்ற புள்ளி விவரங்களையெல்லாம் எடுத்துக் காட்டினேன். இறுதியாக, "மதுவிலக்கு தோல்வியுற்று விட்டது. அந்தச் சட்டம் இங்கே வெற்றிகரமாக நடைபெற முடியவில்லை என்பதை முன் இருந்த அமைச்சர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். நாங்கள் அதைத் தாராளமாக ஒத்துக் கொள்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்களின் - தோழமைக் கட்சி நண்பர்களின் உணர்ச்சியை மதிக்கிறேன். பாராட்டுகிறேன். அவர்களில் சிலபேர் என்னைக் கெஞ்சிக் கூடக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மன்றாடிக் கேட்பதாகக் கூடச் சொன்னார்கள். அவர்களை எல்லாம் விட நான் வயதிலே சிறியவன். அப்படி மன்றாடிக் கேட்டதை, கெஞ்சிக் கேட்டதைத் தயவு செய்து திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள். **இதைத் தவிர வேறு வழி இல்லை என்ற காரணத்தால்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம். அதுவும் ஒத்தி வைத்திருக்கிறோம். இந்தியா முழுவதற்கும் மதுவிலக்குத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு மத்திய அரசு பொறுப்பேற்றுக் கொள்ளும் வரையில் மதுவிலக்கை ஒத்தி வைத்திருக்கிறோம் என்றுதான் கூறியிருக்கிறோம்" என்றுதான் கூறினேன்.**

மதுவிலக்கை நடைமுறைப்படுத்தி வந்த தமிழகம் - நமது மாநிலத்திற்கு அதனால் ஏற்பட்ட இழப்பை ஓரளவுக் காவது சரிக்கட்ட மத்திய அரசு முன்வராததாலும், அதற்காக எத்தனையோ முறை மத்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்தும், அது பயனளிக்காத காரணத்தாலும், மதுவிலக்குக் கொள்கையை அகில இந்திய அளவில் நடைமுறைப்படுத்தாததால் ஏற்பட்ட இன்னல்களுக்கு தமிழகம் உள்ளாக வேண்டியிருந்ததாலும், நிதி நிலைமையைச் சமாளிப்பதற்காக மிகுந்த மன வேதனையுடன் - 1971ஆம் ஆண்டு மது விலக்கை ஒத்தி வைப்பதாக நான் அறிவித்திருந்த போதிலும், அண்ணல் காந்தி நெறி நின்று, அண்ணா வழியில் ஆட்சி நடத்திய எனக்கு மதுவிலக்கை ஒத்தி வைத்ததின் காரணமாக நெஞ்சில் ஏதோ ஒரு உணர்வு உறுத்திக் கொண்டே இருந்தது என்பதுதான் உண்மை என்னை உணர்ந்தவர்கள் இதனை நன்கறிவார்கள். தோழமைக்

கட்சிகளும், எதிர்க் கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவித்த நேரத்தில், அன்றிருந்த பல்வேறு நிலைமைகளை விளக்கி, மதுவிலக்கை ஒத்தி வைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதை மிகுந்த வேதனையோடு தெரிவித்தேன்.

1971இல் தி.மு. கழக அரசு கள், சாராயக் கடைகளைத் திறந்தது என்றாலும், 1974இல் - தி.மு. கழக ஆட்சிக் காலத்திலேயே, மீண்டும் மதுக்கடைகளை மூடி, மது விலக்கை நடைமுறைப்படுத்தியது.

ஒத்தி வைப்பது என்பது மீண்டும் நடைமுறைக்கு வரும் என்ற அடிப்படையில்தானே? அவ்வாறு நான் அறிவித்ததற்கிணங்க, 14-8-1974 அன்று தமிழகச் சட்டப்பேரவை யில் முதல் துணை மதிப்பீடுகளை அவையிலே வைத்த போது, "பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள் அன்று அதே ஆண்டிலேயே மீண்டும் தமிழகத்தில் முழுமையான மதுவிலக்கை நடைமுறைப்படுத்துவேன்" என்று மகிழ்ச்சியோடு அறிவித்தேன்.

அப்படி நான் அறிவித்த போதே, "நீண்ட நெடு நாட்களாக நல்லோர் பலரின் முறையீடாக இருந்து வருவதும், ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டதுமான குதிரைப் பந்தயத்தை அறவே ஒழிப்பது என்று அரசு முடிவு செய்கிறது" என்ற மற்றொரு அறிவிப்பினையும் செய்தேன். தி.மு. கழக ஆட்சிக் காலத்திலேயே, தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அமல்படுத்தும் சட்ட முன்வடிவு தமிழகச் சட்டமன்றத்தில் ஒருமனதாக 22-8-1974 அன்று நிறைவேற்றப்பட்டது.

ஆனால் அதற்குப் பிறகு வந்த அ.தி.மு.க. ஆட்சியிலே என்ன செய்தார்கள்? **தி.மு.கழக ஆட்சியிலே கொண்டு வந்த மதுவிலக்கு ரத்து என்பது, தி.மு. கழக ஆட்சியிலேயே மீண்டும் திரும்பப் பெறப்பட்டு, மதுவிலக்கு நடைமுறைக்கு வந்து விட்டது என்பதுதான் உண்மை, உண்மை.**

1977இல் ஆட்சிக்கு வந்த எம்.ஜி.ஆர்., மதுவை ஒழிக்க எவ்வளவோ பாடுபட்ட போதிலும், அவராலும் முடியவில்லை. எனவே 1981இல் அதே எம்.ஜி.ஆர். மீண்டும் கள், சாராய விற்பனைக்காக, மதுவிலக்கை ரத்து செய்தார். அ.தி.மு.க. ஆட்சியில் 21-3-1981 அன்று அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக

இருந்தபோது, நிதியமைச்சர் நாவலர் பேரவையில் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் இது பற்றி அறிவிக்கப்பட்டு, மதுவிலக்குச் சட்டத்திற்கு திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

அதற்குப் பிறகு, 2001இல் இன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த போது மது ஒழிப்பு பிரகடனம் செய்தார். எனினும், ஜெயலலிதா ஆட்சியின் அந்த ஆண்டில் மட்டும் - மதுவிலக்கு சட்டத்தின்கீழ் 2 லட்சத்து 75 ஆயிரம் பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஜெயலலிதா குறுகிய காலத்தில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு காரணமாகப் பதவி விலகி, ஓ. பன்னீர்செல்வம் முதல்வராக இருந்த போது, அந்நிய மது வகைகள், 100 மில்லி 15 ரூபாய் என்கிற மலிவு விலையில் 2002 ஜனவரி முதல் வாரத்திலிருந்து விற்பனைக்கு வரும் என்று அறிவித்தார்.

இந்த விவரங்களைப் பற்றி, 21-7-2015 தேதிய "டைம்ஸ் ஆப் இந்தியா" ஆங்கில நாளேடு, 1974ஆம் ஆண்டு கருணாநிதி தலைமையிலான தி.மு.க. அரசு சாராயக் கடைகளையும், மதுக்கடைகளையும் மூடியது என்றும், 1981ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். தலைமையிலான அ.தி.மு.க. அரசு கள்ளுக்கடைகளைத் திறந்தது என்றும், 1982-83ஆம் ஆண்டு, அதே அ.தி.மு.க. அரசு தனியார் துறையில் மது வகைகள் உற்பத்தி செய்ய அனுமதி அளித்தது என்றும், 1987ஆம் ஆண்டு அ.தி.மு.க. அரசு மதுக்கடைகளைத் திறந்தது என்றும், 2003ஆம் ஆண்டு ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அரசே மது விற்பனைக்காக "டாஸ்மாக்" நிறுவனத்தைத் தொடங்கி, அரசே ஊருக்கு ஊர் மது விற்பனைக் கடைகளைத் திறந்தது என்றும் அந்த ஆங்கில நாளேடு எழுதியுள்ளது.

"திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் மதுவிலக்குக் கொள்கையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கடந்த மாதம் நான் அறிவித்த பிறகு, பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், முன்னணியினரும், சமூக ஆர்வலர்களும், பத்திரிகையாளர்களும், மகளிர் அமைப்புகளும் தொலைபேசி வாயிலாகவும், நேரிலும் என்னைத் தொடர்பு கொண்டு, அந்த அறிவிப்பை வரவேற்றதோடு, நல்ல முடிவு என்றும் கூறினார்கள்.

ஆனால் பா.ம.க. நிறுவனர், டாக்டர் ராமதாஸ், "கலைஞர் சொல்வதைக் கேட்டு மக்கள் ஏமாற மாட்டார்கள்" என்று அறிக்கை வெளியிட்டார். "1971ஆம் ஆண்டில் மதுவிலக்கை

ரத்து செய்த கலைஞருக்கு 44 ஆண்டுகள் கழித்து ஞானோதயம் ஏற்பட்டிருக்கிறது" என்றெல்லாம் வார்த்தைகளை அள்ளி வீசியிருக்கிறார். 71ஆம் ஆண்டில் மது விலக்கை ரத்து செய்த தி.மு. கழகம் 1974ஆம் ஆண்டிலேயே மீண்டும் மதுவிலக்கை நடைமுறைப்படுத்தியதை வசதியாக மறைத்து விடலாம் என்று அவர் எண்ணுகிறார். டாக்டர் ராமதாஸ் அவர்கள், ஒவ்வொரு தேர்தலிலும் தி.மு.க.வுடனோ, அ.தி.மு.க.வுடனோ கூட்டணி அமைத்துக் கொண்டு போட்டியிட்ட போது, மதுவிலக்கை ஒரு நிபந்தனையாக எந்தக் கட்டத்திலாவது வைத்தது உண்டா? விழுப்புரத்தில் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து, என்னையும் அங்கே அழைத்து, அந்த நாற்காலி முதல்வருக்கான நாற்காலி, அதிலே என்னை அமர வைக்கப் போவதாகப் பேசினாரே, அப்போது எனக்கு ஏற்பட்டதாகச் சொல்லும் ஞானோதயம் பற்றி எல்லாம் அவருக்குத் தெரியாமல் போய் விட்டதா?

22-12-2008 அன்று பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாசும், மற்றும் பல்வேறு அமைப்புகளின் தலைவர்களும் என்னைச் சந்தித்து தமிழகத்தில் மதுவிலக்கை அமல்படுத்த வேண்டுமென்று வலியுறுத்திய போது, அவர்கள் கூறியதில் ஒத்த கருத்துடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு, 2006ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு தமிழகம் முழுவதிலும் 1300 மதுக் கூடங்களை (பார்) மூடியுள்ளது என்பதையும், அதேபோல் 128 சில்லறை மது விற்பனைக் கடைகளும் மூடப்பட்டுள்ளன என்பதையும் நினைவூட்டினேன். மேலும், தொடர்ந்து படிப்படியாக முழு மதுவிலக்கினை எய்திடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும், அது வரையில் ஆலயங்கள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், மசூதிகள், தேவாலயங்கள் போன்ற பொது இடங்களுக்கு அருகில் மதுக்கடைகள் அமையாமல் நடவடிக்கை மேற்கொள்வது என்று முடிவெடுத்துள்ளது என்றும், மதுக்கடைகள் திறந்திருக்கும் நேரத்தில் 1 மணி நேரத்தைக் குறைத்து - மதுக்கடைகள் இயங்கும் என்றும் அறிவித்ததோடு, அதற்கிணங்க ஆணையும் பிறப்பிக்கப்பட்டது. டாக்டர் ராமதாஸ் "கலைஞரின் வாக்குறுதிகள் காற்றில் எழுதப்பட்ட எழுத்துக்கள்" என்று சொல்லியிருக்கிறார். எனது வாக்குறுதிகள் காற்றில் எழுதப்பட்ட எழுத்துக்கள் என்று அவர் கூறுகின்ற நேரத்தில், அவருடைய வேண்டுகோளை ஏற்று, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கு தனியாக 20 சதவிகித இட ஒதுக்கீட்டை கழக அரசு வழங்கியதே, அதுவும் காற்றில் எழுதப்பட்ட

எழுத்துக்கள்தானா என்பதை டாக்டர் ராமதாஸ் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் முதன் முதலாக மதுவிலக்கு ஒத்தி வைக்கப்பட்டதைப் போல சிலர் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இதுவும் உண்மையல்ல.

1937இல் ராஜாஜி தலைமையில் சென்னை மாகாண அரசு அமைந்ததும், அதுவரை சென்னை மாகாணத்தில் நடைமுறையில் இல்லாத மதுவிலக்கை அமல்படுத்தினார். ஆனால் அதுவும் 1939இல் முடிவுக்கு வந்தது. அந்த 1937ஆம் ஆண்டிலேகூட, ராஜாஜி முதலமைச்சராக இருந்த போதேகூட, சென்னை மாகாணத்தில் இருந்த 25 மாவட்டங்களில், நான்கு மாவட்டங்களில் மட்டும்தான், அதாவது சேலம், சித்தூர், கடப்பா, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில்தான் மதுவிலக்கு நடைமுறையில் இருந்தது. மற்ற மாவட்டங்களில் 1937ஆம் ஆண்டிற்கு முன்பிருந்த நிலைமைதான் இருந்து வந்தது. 1948இல் ஓமந்தூராா் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு தான் தமிழகத்தில் முழு மதுவிலக்கை நடைமுறைப்படுத் தினார். இது தவிர மற்ற காலங்களில் அதாவது 1937க்கு முன்பும் சரி, 1939க்குப் பின்பு 1948ஆம் ஆண்டு வரையிலும் சரி, தமிழகத்திலே மதுவிலக்கு நடைமுறையிலே இல்லை என்பதை சற்று யோசித்துப் பார்த்தால், தமிழகத்திலே தி.மு. கழக ஆட்சியில்தான் முதன் முதலாக மதுவைப் புகுத்தி விட்டார்கள் என்ற வாதம், எந்த அளவுக்கு உண்மைக்குப் புறம்பானது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

தி.மு. கழக ஆட்சிக் காலத்தில், மது பானங்களைத் தயாரிக்கும் உரிமம் சில கட்சிக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டதாக ஒரு குற்றச்சாட்டினை தொடர்ந்து கூறி வருகிறார்கள். செய்தியாளர்கள்கூட அதைப் பற்றி என்னிடம் கேட்டார்கள். தமிழகத்திலே மதுவிலக்கினை நடைமுறைப்படுத்தி விட்டால், எல்லா மதுபானத் தொழிற்சாலைகளும் மூடப்பட்டு விடும். அதிலும் கூட தமிழகத்திலே தற்போது மதுபானங்கள் தயாரிக்கும் தொழிற் சாலைகள் 11 இருக்கிறது என்றால், முதன் முதலாக அதற்கான உரிமம் வழங்கப்பட்டதே அ.தி.மு.க. ஆட்சியிலே தான்! இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் "மிடாஸ்" என்ற ஒரு நிறுவனம் யாருடைய நிறுவனம்? அந்த

நிறுவனம் எப்போது தொடங்கப்பட்டது? அ.தி.மு.க. ஆட்சியில் அந்த நிறுவனத்திலிருந்துதான் அதிக அளவுக்கு மது பானங்கள் வாங்கப்படுகின்றன என்பது அல்லவா உண்மை ? 2013-2014 ஆம் ஆண்டில் எந்தெந்த மதுபானத் தயாரிப்பு கம்பெனிகளிடம் இருந்து எவ்வளவு தொகைக்கு மது வாங்கப்பட்டது என்று தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மூலம் பெறப்பட்ட விவரத்தைப் பார்த்தால், மிடாஸ் நிறுவனத்திடமிருந்துதான், மற்ற நிறுவனங்களை எல்லாம் விட அதிகமாக 2,280 கோடி ரூபாய்க்கு மது பானங்கள் வாங்கப்பட்டுள்ளன.

உடன்பிறப்பே, நாடு விடுதலை அடைவதற்கு முன்பிருந்து தமிழகத்தில் மாறி மாறி வரும் மதுவிலக்குக் கொள்கை பற்றிய விவரங்களையெல்லாம் தொகுத்துக் குறிப்பிட்டிருக்கிறேன். எனவே தி.மு. கழகம்தான் முதன் முதலாக தமிழகத்தில் மதுவிலக்குக் கொள்கையை தளர்த்தியது என்பதே தவறான பிரச்சாரம். மேலும் அவ்வாறு 1971 ஆம் ஆண்டு மதுவிலக்குக் கொள்கையை ஒத்தி வைத்த திராவிட முன்னேற்றக் கழக அரசு, 1974 ஆம் ஆண்டிலேயே மீண்டும் மதுவிலக்குக் கொள்கையை நடைமுறைப்படுத்தி விட்டதையும், அதற்குப் பிறகு வந்த அ.தி.மு.க. ஆட்சியிலேதான் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டு விட்டது என்பதையும், மது பானங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கே அனுமதி வழங்கப்பட்டது என்பதையும் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கலாம். இது நடந்து முடிந்த பிரச்சினை. இனி நடக்க வேண்டியது என்ன? தி.மு. கழகம் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் மது விலக்குக் கொள்கையை நடைமுறைப்படுத்துவோம் என்று தெரிவித்தோம். ஆனால் தமிழகத்திலே உடனடியாக மது விலக்கை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கோரிக்கை மேலெழுந்து போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் அ.தி.முக. அரசு உடனடியாக தமிழக மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, மதுவிலக்கை நடைமுறைப்படுத்துவதே புத்திசாலித்தனமான நடவடிக்கையாக இருக்கும். ஆனால் அ.தி.மு.க. அரசு அப்படிப்பட்ட புத்திசாலித்தனமான நடவடிக்கையை மேற்கொள்ளுமா? பொறுத்திருந்து பார்ப்போம்!

அன்புள்ள,

மு.க.

06-08-2015

3971. அறவழியில், அமைதிவழியில் ஆர்ப்பாட்டம்!

உடன்பிறப்பே,

நேற்றையதினம், (6-8-2015) என்னுடைய "உடன்பிறப்பு மடலில்" தமிழகத்திலே 1971ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியிலே மதுவிலக்குக் கொள்கையை என்ன காரணத்தால் ரத்து செய்யப்பட்டது என்பது பற்றியும், ஆனால் 1974ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியிலேயே மீண்டும் மதுவிலக்கு தமிழகத்திலே நடைமுறைப்படுத்தப்பட்டது என்றும் விளக்கமாகக் குறிப்பிட்டிருந்தேன். ஆனாலும் சிலர் விடாப்பிடியாக, கழகத்தின் மீது எதையாவது சொல்லிக் குறைகூறிட வேண்டுமென்பதற்காக, தி.மு. கழக ஆட்சியிலே மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டதென்பதை மட்டும் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலே உள்ள நிதிநிலை காரணமாக மதுவிலக்கு ஒத்தி வைக்கப்பட்டு, மீண்டும் கொண்டு வரப்பட்டுவிட்டது என்ற உண்மையினை மறைக்கிறார்கள்.

1971இல் தி.மு.கழகம் மதுவிலக்குக் கொள்கையை ஒத்திவைப்பதற்கு முன்பு தமிழ்நாட்டில் மது விற்பனை செய்யப்படவில்லையா என்றால், விற்பனை செய்யப் பட்டுத்தான் வந்தது. பெரிய பணக்காரர்கள், வசதி படைத்தவர்கள், ஏன் நடுத்தர மக்கள்கூட மது அருந்துவதற்கான "பர்மிட்"களை வாங்கிக் கொண்டு, மதுக்களை விற்பனை செய்யும் கடைகளிலிருந்து மது வகையறாக்களை வாங்கி அருந்திக்கொண்டுதான் இருந்தார்கள். வசதி குறைந்தோர், கள்ளச் சாராயம் காய்ச்சி விற்பவர்களிடம் வாங்கிக் குடித்தார்கள். எனவே முன்பு எந்தக் காலத்திலும் மது இல்லாமல் இருந்ததில்லை. ஏன் சுதந்திரம் பெறுவதற்கு முன்பேகூட, மது விற்பனை நடந்து கொண்டிருந்ததால்தான், அண்ணல் காந்தி அடிகளே கள்ளுக்கடை மறியல் என்ற பெயரால் மிகப் பெரிய போராட்டத்தை நடத்தினார். ஏன், தந்தை பெரியார் அவர்களே கள்ளுக்கடை மறியல் செய்ததோடு, தனக்குச்

சொந்தமான தோப்பில் கள் இறக்குவதற்கான 500 தென்னை மரங்களையெல்லாம் வெட்டிச் சாய்த்தார்.

1971ஆம் ஆண்டு மதுவிலக்கை ஒத்திவைத்த தி.மு. கழகம், 1973இல் தொடங்கி, 1974இல் மீண்டும் மதுவிலக்கை நடைமுறைப்படுத்திய போதிலும், தி.மு. கழகத்தைப் பிடிக்காத சிலர் 1971ஆம் ஆண்டு மதுவிலக்கை ஒத்திவைத்ததை மட்டும் மீண்டும் மீண்டும் கூறிவருகிறார்கள். அவ்வப்போது உள்ள சூழ்நிலைக்கு ஏற்ப, ஒரு முடிவினை எடுப்பதும், பிறகு சூழ்நிலை மாறிய பிறகு எடுத்த முடிவினைத் திரும்பப் பெறுவதும் அல்லது மாற்றிக்கொள்வதும் முன் எப்போதும் நடந்தது இல்லையா? பேரறிஞர் அண்ணா இருந்தபோதே, தி.மு. கழகம் திராவிட நாடு பிரிவினை கோரியது. பின்னர் அந்தக் கோரிக்கையைக் கைவிடவில்லையா? தந்தை பெரியார் முதலில் திராவிட நாடு கேட்டார், பின்னர் 1956க்குப் பிறகு, அதை மாற்றிக் கொண்டு "தமிழ்நாடு தமிழருக்கே" என்று கூறவில்லையா? மத்தியில் காங்கிரஸ் கட்சி இந்தி மொழியை ஆட்சிமொழி என்று அறிவித்தது. பின்னர் ஆங்கிலத்தை இணை ஆட்சிமொழி என்று அறிவிக்கவில்லையா? 1937ஆம் ஆண்டு சென்னை மாகாணத்தில் நான்கு மாவட்டங்களில் மட்டும் மதுவிலக்குக் கொள்கையை நடைமுறைப்படுத்திய மூதறிஞர் ராஜாஜி, இந்தியைக் கட்டாயப் பாடமாகக் கொண்டுவந்தவர். பின்னர் அவரே இந்தியை எதிர்க்கத் தொடங்கி, அண்ணா அவர்களுடன் இணைந்து மேடைகளில் முழங்கவில்லையா? அப்போதெல்லாம் அவர் இந்தியைத் தமிழகத்திற்குப் பாடமாகக் கொண்டு வந்ததைச் சொல்லி, குற்றஞ்சாட்டவில்லையே?

ஏன் நம்மை வேகமாகத் தாக்கிடும் பா.ம.க. நிறுவனர் ஒரு தேர்தலில் தி.மு.க.வை ஆதரித்துவிட்டு, அடுத்த தேர்தலில் அ.தி.மு.க.வை ஆதரித்தது கிடையாதா? திராவிடக் கட்சிகள் துணையுடன் ஒவ்வொரு தேர்தலிலும் போட்டியிட்டுவிட்டு, இப்போது தி.மு.க., அ.தி.மு.க., ஆகிய திராவிடக் கட்சிகளுடன் இனி உறவே இல்லை என்று மாற்றிக் கொள்ளவில்லையா? ஏன், தமிழ்நாட்டில் மதுவிலக்கு என்று பேசுகின்ற இதே ராமதாஸ், பக்கத்திலே உள்ள புதுவை மாநிலத்திலே மதுவிலக்குக் கொள்கையைக் கொண்டுவர வேண்டுமென்று ஒரு நாளாவது பேசியிருக்கிறாரா? கொள்கைகளையும், நிலைப்பாட்டையும் காலப்

போக்கில் அந்தந்தக் காலத்தின் தேவைக்கேற்பவும், கட்சியின் எதிர்காலம், மக்கள் நலன் ஆகியவற்றைக் கருதியும் மாற்றிக் கொள்வது என்பது மாபாதகம் அல்ல. உலக வரலாற்றில் ஒரு நூறு சான்றுகளை எடுத்துக்கூற முடியும்.

இதே மதுவிலக்குப் பிரச்சினையிலும் மாறி மாறி முடிவு எடுக்கப்பட்டதற்குச் சில உதாரணம் கூறுகிறேன். அமெரிக்க நாட்டிலே 1919ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 16ஆம் நாள் அரசியல் சட்டத்தையே திருத்தி, மதுவிலக்குச் சட்டத்தை அமலுக்குக் கொண்டுவந்தார்கள். ஆனால் 1938ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 20ஆம் தேதியன்று மதுவிலக்குச் சட்டம் அங்கே ரத்து செய்யப்பட்டது.

பின்லாந்து நாட்டில் 1907ஆம் ஆண்டு மது விலக்குச் சட்டம் கொண்டு வரப்பட்டது; 1932இல் அந்த நாட்டில் மதுவிலக்குச் சட்டம் ரத்து செய்யப்பட்டது. நார்வே நாட்டில் 1919ஆம் ஆண்டு மதுவிலக்கு கொண்டுவரப்பட்டது; அது 1927இல் ரத்து செய்யப்பட்டு விட்டது. நியூபவுண்ட்லாண்ட் நாட்டில் 1915இல் மதுவிலக்கை அமல் செய்தார்கள்; 1924இல் அதை ரத்து செய்துவிட்டார்கள். துருக்கியில் 1920இல் மதுவிலக்கை அமல்படுத்தினார்கள்; 1924இல் அதை ரத்து செய்துவிட்டார்கள்.

உலக அளவில் இவ்வாறு பல்வேறு நாடுகளில், இந்த மதுவிலக்குக் கொள்கை தள்ளாடி தள்ளாடித்தான் கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது. ஏன் என்றால் மதுவிலக்குக் கொள்கை அல்லவா? 1971ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மூலமாக மது விலக்கை ஒத்திவைத்தபோதுகூட, நிதி நிலை அறிக்கையிலே நான் என்ன உரைத்தேன் என்பதை 6ஆம் தேதிய எனது மடலில் குறிப்பிட்டிருக்கிறேன். அதே நிதிநிலை அறிக்கையில், “தமிழகத்தில் மட்டும் மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரப்படுத்துவதால் மதுவிலக்கின் வாயிலாக நாம் காப்பாற்ற விரும்பும் ஒழுக்கம், நாணயம், நேர்மை இவைகளையே பாதுகாக்க வாய்ப்பு இல்லாமல் போகிறது. எனவே உயர் தனிக் கொள்கையான மதுவிலக்கில் இந்த அரசு தொடர்ந்து நம்பிக்கை வைத்திருக்கிறது எனினும், இந்திய நாடு முழுவதுக்குமாக இந்தக் கொள்கையை அமல்படுத்த மத்திய அரசு பொறுப்பேற்றுக் கொள்ளும்வரையில் தமிழகத்தில் மது விலக்குச் சட்டம் செயல்படுவதை ஆகஸ்ட் 30ஆம் நாளில் இருந்து ஒத்திவைக்க இந்த அரசு முடிவுசெய்கிறது

என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றுதான் குறிப்பிட்டேன். மேலும் நண்பர் எம்.ஜி.ஆர். தலைமையில் மதுவிலக்குப் பிரச்சாரக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது என்பதையும் மறந்துவிடக் கூடாது.

இன்னும் சொல்லப்போனால், மதுவிலக்கு குறித்து 13-9-1969இல் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஓர் அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கையின் இறுதியில், "மதுவிலக்குக் கொள்கையில் தமிழகத்தில் மட்டுமல்ல; இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள எந்தத் தனி மனிதனுக்கோ, எந்தக் கட்சிக்கோ உள்ள அக்கறையைவிட, அந்தக் கொள்கை மக்களுக்குத் தேவையானது என்பதில், தி.மு. கழகத் தலைவரும், தமிழக முதல்வருமான கலைஞருக்கு அதிக அக்கறையும், அதிகப் பிடிப்பும் உண்டு என்பதை மற்றையோரைவிட அழுத்தமாக என்னால் துணிந்துகூற முடியும்" என்று தெரிவித்ததையும், அதற்குப் பின் அவரே "ஆனந்த விகடன்" பத்திரிகையிலே "நான் ஏன் பிறந்தேன்" என்ற தலைப்பிலே எழுதிய நீண்ட தொடர் கட்டுரையிலே விரிவாக எழுதியதையும் அ.தி.மு.க.விலே தற்போதுள்ளவர்கள் வேண்டுமானால் மறந்திருக்கலாம்; ஆனால் நான் மறக்கவில்லை. இந்த அளவுக்கு மதுவிலக்குக் கொள்கையிலே உறுதியாக இருந்த அருமை நண்பர் எம்.ஜி.ஆர்., பின்னர் முதலமைச்சராக இருந்தபோதுதான், மதுவிலக்கு சம்பந்தமான சட்டங்கள், திட்டங்கள் இவைகள் எல்லாம் மாற்றப்பட்டன. 1-5-1981இல் சாராயம் மற்றும் கள்ளுக்கடைகள் கூட திறக்கப்பட்டன. ஆனால் குடிப்பவர்கள் "பெர்மிட்" ஒன்று பெற வேண்டுமென்று விதிமுறைகளில் கூறப்பட்டது. 1981 வரை தமிழ்நாட்டில் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபானங்கள் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகள் இல்லை. 1981க்குப் பின்பு தான் இந்த மதுபானங்களைத் தயாரிக்கின்ற உரிமையை நான்கு தனி நபர்களுக்கும், கூட்டுறவுத் துறை நிறுவனத்திற்கும் அளிக்கப்பட்டது. கள்ளுக்கடைகள் ஏல முறையில் அனுமதிக்கப்பட்டன. சாராய உற்பத்தி 10 தனிப்பட்ட நபர்களுக்குக் கொடுக்கப்பட்டது. சாராயத்தை விநியோகம் செய்கின்ற மொத்த வியாபாரம் 15 தனிப்பட்ட நபர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இவை எல்லாம் கடந்த காலத்தில் நடந்த சம்பவங்களாகும்.

தற்போது தமிழ்நாடு முழுவதும் ஏன் மக்கள் தன்னெழுச்சியாக நடத்தும் இந்தப் போராட்டங்கள்? எப்படி இது தொடங்கியது? **காந்தியவாதி சசிபெருமாள்! அறுபது வயதைக் கூட எட்டவில்லை. குமரி மாவட்டத்தில் உள்ள ஒரு டாஸ்மாக் கடையை மூட வேண்டுமென்பதற்காகத்தான் போராட்டம். அந்த ஒரு கடையை மூடுவதற்கு ஒப்புக்கொண்டிருந்தால் பிரச்சினையே வந்திருக்காது. தமிழகமெங்கும் போராட்டமும் பெருகியிருக்காது. ஆனால் இந்த ஆட்சியிலே எதைக் கவனித்தார்கள்; இதைக் கவனிப்பதற்கு? "செல்போன் டவரில்" எத்தனை மணி நேரம் அவரால் இருக்க முடியும்? சம்பந்தப்பட்டவர்கள் ஒரு மணி நேரத்திற்குள் அங்கே வந்து பிரச்சினையைப் பேசி முடிவுகண்டிருந்தால், சசிபெருமாள் இறந்திருப்பாரா? இப்போது என்ன நிலைமை? அவர் இறந்து எட்டு நாட்களாகியும், அவரது உடலை அடக்கம் செய்ய முடியவில்லை. குடும்பத் தலைவனைப் பறிகொடுத்த அந்தக் குடும்பத்தினர் போராட்டத்திலும், சிறையிலுமாக நாட்களைத் தள்ளிக்கொண்டிருக்கிறார்கள். அவருடைய மூத்த மகன் நேற்றையதினம் சென்னை உயர் நீதிமன்றத்தி லேயே தன் தந்தையின் மரணம் குறித்து நீதி விசாரணை கோரி வழக்குத் தொடுத்து, நீதிமன்றம் அரசுக்கு "நோட்டீஸ்" அனுப்ப உத்தரவிட்டுள்ளது. இதே நீதி விசாரணை கோரி நான் அறிக்கை விடுத்து எத்தனை நாட்களாயிற்று? இந்த ஆட்சியினர் கேட்டார்களா? அப்போதே கேட்டிருந்தால், இன்றைக்குச் சசி பெருமாளின் மகனே நீதிமன்றம் செல்கின்ற அளவுக்கு நிலைமை முற்றியிருக்குமா?**

குமரி மாவட்டத்தில் தொடங்கிய பிரச்சினை இப்போது தமிழகம் முழுவதிலும் தீப்பரவி எரிந்து கொண்டிருக்கின்றது. "ரோம் பற்றி எரியும்போது நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தான்" என்பார்களே, அதுபோலத்தான் அ.தி.மு.க. ஆட்சி நடந்து கொண்டிருக்கின்றது. இதன் விளைவு என்ன தெரியுமா? நாடெங்கும் நடைபெறும் போராட்டம் காரணமாக, சேலம் மாவட்டத்தில், வாழப்பாடியை அடுத்த புதுப்பாளையத்தில் நடைபெற்று வந்த ஒரு டாஸ்மாக் கடைக்குத் தீவைக்கப்பட்டதின் காரணமாக, கடைக்குள் இருந்த ஊழியர் செல்வம் என்பவர் சிக்கி உயிரிழந்திருக்கிறார். தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர் சங்க மாநிலத் தலைவர் முன்னாள் எம்.எல்.ஏ., பெரியசாமி கூறும்

போது, "வாழப்பாடியில் நடந்த சம்பவத்திற்கு முழுப் பொறுப்பும் அரசுதான். பணி முடிந்ததும் ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டும். சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்டுள்ள சூழலில் போலீஸ் பாதுகாப்பு இரவிலும் அளித்திருந்தால் இந்தச் சம்பவம் நடக்க வாய்ப்பில்லை. இந்தச் சம்பவத்திற்கு அரசுதான் முழுப் பொறுப்பு ஏற்க வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார். இந்த ஆட்சியின் அலட்சியம் காரணமாக மறைந்த செல்வத்தின் குடும்பத்தாருக்கு என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கெல்லாம் பொறுப்பு ஏற்க வேண்டியது யார்? இந்தத் துறைக்கென ஒரு அமைச்சர் இருக்கிறாரா இல்லையா? எதிர்க்கட்சிகளையெல்லாம் தாக்கி அறிக்கை விடுவதுதான் அவருக்கு வேலையா? எந்தெந்த அமைச்சர்கள் மீதெல்லாமோ நடவடிக்கை எடுக்கின்ற முதலமைச்சர், இந்த அமைச்சர் அடுக்கடுக்காகத் தவறுகளைச் செய்த போதிலும் பொறுமையாக இருப்பதன் மர்மம் என்ன?

ஆனால் என்ன நடக்கிறது இந்த ஆட்சியிலே? ஏழு நாட்களுக்குப் பிறகு, தலைமைச் செயலகத்திற்கு முதலமைச்சர் வருகை தந்தார் என்று நாளிதழிலேயே செய்தி வருகிறது. வாரத்திற்கு ஒரு முறை வருகிற போதும் தலைமைச் செயலகத்திலே என்ன நடக்கிறது? 4-8-2015 தேதிய "தினமலர்" நாளிதழில் வந்த செய்தியில், "முதல்வர் ஜெயலலிதா கடந்த 27ஆம் தேதி தலைமைச் செயலகம் வந்தார். அதன்பின், நேற்று (3-8-2015) பகல் 12.35 மணிக்குத் தலைமைச் செயலகம் வந்தார். அவரை அமைச்சர்கள் வரவேற்றனர். பஸ் நிலையங்களில், பாலூட்டும் பெண்களுக்கான அறைகளை, முதல்வர் ஜெயலலிதா திறந்து வைத்தார். சட்டம், ஒழுங்குப் பிரச்சினை குறித்து அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். உளவுத் துறை ஐ.ஜி.யாக பொறுப்பேற்றுள்ள டேவிட்சன் தேவாசிர்வாதம், சென்னை தெற்கு மண்டல போலீஸ் இணை கமிஷனராக பொறுப் பேற்றுள்ள அருண், சென்னை வடக்கு மண்டல போலீஸ் கூடுதல் கமிஷனர் ரவிக்குமார் ஆகியோர் முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். நிகழ்ச்சிகள் முடிந்தபின், முதல்வர் பகல் 1.25 மணிக்கு தலைமைச் செயலகத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றார்" என்று கூறப்பட்டுள்ளது.

ஆக ஒரு வாரம் கழித்துத் தலைமைச் செயலகத்திற்கு வந்துள்ள முதல் அமைச்சர் 50 நிமிடங்கள் மட்டுமே தலைமைச் செயலகத்தில் இருந்திருக்கிறார் என்பதும், அந்த நேரத்திற்குள் தான் இவ்வளவு பணிகளையும் நிறைவேற்றினார் என்பதும் தெரிகிறது? ஒரு வாரத்திற்கு ஒருமுறை வருகின்ற முதல் அமைச்சர், வரும்போது ஏதேதோ திட்டங்களைத் தொடங்கி வைத்துவிட்டு, அவற்றைப் புகைப்படங்களாக எடுத்து வைத்துக் கொண்டு, ஒவ்வொரு நாளும் முதலமைச்சர் தலைமைச் செயலகத்திற்கு வருகை தந்ததைப் போலவும், ஏதோ ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்ததைப் போலவும், ஒவ்வொன்றாகப் பத்திரிகைகளுக்கு அரசு செய்திக் குறிப்புகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு உடந்தையாகத் தலைமைச் செயலாளரும், ஆலோசகரும் புகைப்படங்களிலே காட்சி அளிக் கிறார்கள். நாளைய தினம் வேறொரு அரசு அமைந்து, இவ்வாறு நடைபெறும் முறைகேடுகளுக்கு இவர்களும் உடந்தையா என்ற கேள்வி வரும்போதுதான் உண்மை புரியும்.

10ஆம் தேதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் தலைமையில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தின்போது, நேற்றைய தினமும் இன்றும் நான் தெரிவித்துள்ள விவரங்களையெல்லாம் பொது மக்களிடம் எடுத்து விளக்கிட வேண்டும். நான் எனது முதல் அறிவிப்பிலே தெரிவித்ததைப் போல ஆர்ப்பாட்டங்கள் அறவழியிலே, அமைதியான முறையிலே நடைபெற வேண்டும். கழகத்தின் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் முழு வெற்றி என்ற நிலையை உருவாக்க வேண்டும்.

அன்புள்ள,

மு.க.

7-8-2015

3972. வீறு நடை - வெற்றி நடை போட உன்னை அழைக்கின்றேன்!

உடன்பிறப்பே,

தமிழகச் சட்டமன்றத் தேர்தல் 2016ஆம் ஆண்டு மே திங்களில் வருகிறது என்பதை நானும், நமது கழகத்தின் காவலர்களும் அறிந்து - அந்தத் தேர்தலைச் சந்தித்து நம்முடைய திராவிட இயக்கத்தின் வெற்றிக்குப் பாடுபடவும் - இந்த இயக்கத்தை வீழ்த்திவிட வேண்டும் என்ற நப்பாசையோடு பொய்யான செய்திகளை இட்டுக்கட்டியும், அகில இந்திய அளவில் பெற்றுள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி - வலிவு தேடி - அந்த வலிவுக்குக் கிடைத்திடும் பொலிவு பாரீர் என்று இங்குள்ள ஆளுங்கட்சி - அ.தி.மு.க. - நாட்டில் குறிப்பாக நமது மாநிலத்தில் ஒரு ஆட்சி இருக்கிறதா? என்ற அய்யப்பாட்டை மக்கள் மனதில் திணித்துள்ள நிலையில் - கோடி கோடியாகப் பணத்தைக் குவித்து வைத்துக்கொண்டு; "விலை கொடுத்துப் பெற்று விடுவோம் இந்த வெற்றியை" என வீறாப்பு பேசிக் கொண்டு - தங்களால் ஓரிரு நீதிமன்றங்களைக்கூட ஊழல் மன்றங்களாக ஆக்க முடியும் என்று மார்தட்டியவாறு - மனப்பால் குடிக்கின்ற மதோன்மத்தர்களின் மமதையை எதிர்த்து மக்களாட்சித் தத்துவம் வெற்றிபெற வேண்டும் என்கிற உயர்ந்த குறிக்கோளோடு - களத்தில் நிற்கும் கழகக் கண்மணிகளை யெல்லாம் நான் காண்கிறேன். அன்றாடம் அவர்கள் கையில் கிடைத்த பணத்தை அல்லது காசுகளை என் கையில் ஒப்படைப்பதற்காக ஓடோடி வருகின்ற உத்வேகத்தை நாள்தோறும் நான் கண்டு கண்டு மகிழ்கிறேன்.

உடன்பிறப்பே, நீயும், உன் போன்ற உடன்பிறப்புகளும் உழைத்து உழைத்துப் பெறுகின்ற சிறு தொகையை எத்துணை ஆர்வத்தோடும், அக்கறையோடும் "இந்த இயக்கம் வெற்றி பெற வேண்டும் - இதுதான் எதிர்காலத்தில் திராவிட இயக்க வளர்ச்சிக்கு நம்பிக்கை நட்சத்திரம்" என்ற உறுதியான எண்ணத்தோடு எங்கள்

கரங்களிலே ஒப்படைத்து - அது முறையாகச் செலவிடப்பட்டு - "தி.மு.க. வெற்றி" என்ற கோடி சூரிய உதயத்திற்குச் சமமான ஒளியை எங்கள் உள்ளங்களில் பாய்ச்சிட - அது கண்டு மாற்றார் மருளவும் - உற்றார், ஊரார் மகிழவும் - அந்த எழுச்சி ஞாயிற்றின் நல்லொளியில் நான் உன் போன்ற உடன்பிறப்புகளின் ஒளி முகங்களைக் கண்டு மகிழும் நாள்; சில திங்கள்களிலே வரவிருக்கிறது.

அதன் பிறகு, "இருட்டறையில் உள்ளதடா இந்த நாடு" என்று பெருமூச்சு விடவேண்டிய நிலை இல்லை. இதோ ஒளி மிகுந்த எதிர்காலம், தமிழகத்திலே நடைபெறுகின்ற தி.மு.கழக ஆட்சியினால் - இரு வண்ணக் கொடியின் மாட்சியினால் உலகம் முழுவதும் பரவிக் கிடக்கின்ற கோடிக்கணக்கான தமிழர்களின் உள்ளம் எல்லாம் குளிரும் அந்த நிலையை நீயும், நானும், நம்மோடு இருக்கின்ற இலட்சக் கணக்கான திராவிட உடன்பிறப்புகளும் காணத்தான் போகிறோம். அதை ஒரு கன வாகக் கருதத் தேவையில்லை. இந்த உறுதி, நமக்கு - கழகத்திற்கு மேலும் மேலும் உரமூட்டி வளர்க்கும் உறுதியாகும்.

திராவிட தியாகிகள் பலர், குருதி கொட்டி வளர்த்த, இந்த இயக்கத்தின் கொடி நிழலில் மலரும் திராவிடத்தை நாம் காணத்தான் போகிறோம் என்பதில் ஐயம் சிறிதுமில்லை. அந்த நம்பிக்கையோடு -

நல்லவனே!

வல்லவனே!

அண்ணாவின் தம்பியே!

பெரியாரின் பேரப் பிள்ளையே!

மக்களாட்சியின் மாண்பினை உணர்ந்து, இந்த மண்ணுக்கு அதுவே சிறந்த துணை என்ற உறுதியோடு, ஜனநாயகத்தின் தூய்மையைப் போற்றி, வளர்த்து, அதன் பலனைக் கடைக்கோடியில் இருக்கின்ற ஏழையெளிய மக்களுக்கும் கிடைத்திடச் செய்கின்ற நாள் தான் நீயும், நானும், நம்மைப் போன்ற உடன்பிறப்புகளும் மகிழும் நாளாகும். அந்த நாளை நோக்கி நடைபோட்டு - அதில் வெற்றி முழக்கமிடத்தான் - சுற்றி

நிற்கும் பகையை நெட்டித் தள்ளி இந்த ஜனநாயகப் போரில் - அறவழியில் - அமைதி வழியில் - அண்ணா வழியில் - பெரியார் வழியில் வீறுநடை போட வாராய் என உன்னை அழைக்கின்றேன்.

நீ கையில் முடிந்து வைத்திருக்கும் காசுகளைக் கழகத்தின் தேர்தல் நிதியாகத் தினந்தோறும் நானிருக்கும் திசை பார்த்துக் கொண்டு வந்து கொடுக்கின்றாய். அந்தத் தூய தொண்டு நமது கழகத்தை நாளும் வளர்த்து மேலும் வலுசேர்க்க உதவட்டும்.

அன்புள்ள,

மு.க.

9-8-2015

3973. இன்று "முரசொலி" பிறந்தநாள்!

உடன்பிறப்பே,

10-8-1942 - ஆகஸ்ட் 10 என்பதை நாட்காட்டியில் கண்டதும், என் நெஞ்சில் ஒளி வெள்ளம் கரைபுரண்டோடுகிறது; காரணம் அந்த நாள்தான், முரசொலி பிறந்த நாள் - இந்த ஆகஸ்ட் திங்கள் 10ஆம் தேதி முரசொலிக்கு 73வது பிறந்த நாள். எந்த முரசொலி? துண்டுத் தாளாகத் தொடங்கி, வார இதழாக வளர்ந்து, நாளேடாகத் தொடர்ந்து நடைபோட்டுவரும் முரசொலி! கையெழுத்துப் பிரதி வடிவத்தில் மாத இதழாக வெளிவந்து கொண்டிருந்த முரசொலி 14.1.1948 -இல் வார இதழாகவும் 17.9.1960-இல் நாளேடாகவும் அச்சில் வெளிவரத் தொடங்கியது. முரசொலிக்கு இன்று ஆகஸ்ட் 10ஆம் தேதி 73வது வயது பிறக்கிறது. எனக்கோ 91 வயது முடிந்து விட்டது. ஆம், என்னுடைய 18வது வயதில்தான் முரசொலி பிறந்தது!

1942ஆம் ஆண்டு அகல் விளக்காக ஏற்றிவைக்கப்பட்டு, இன்று ஆகாயத்துக் கதிர் விளக்காக ஒளிவிடும் "முரசொலி" யின் நிறுவனர் என்ற நிலையில் இந்த நாளில் சில நினைவுகள்!

நான் என்னுடைய வாழ்க்கையில் சந்திக்க நேர்ந்ததைப் போலவே, நான் தொடங்கியதாலோ என்னவோ; முரசொலியும் பல சோதனை, வேதனைகளைக் கடந்து வந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அது சந்தித்த வழக்குகள் எத்தனையோ? எதற்கு இதனைச் சொல்கிறேன் என்றால், "முரசொலி" பிறந்த அதே நாளில் - இன்றையதினம் நமது கழகத்தின் சார்பில் மதுவிலக்குக் கொள்கைக்காக மாவட்டக் கழகத் தலைநகரங்களில் எல்லாம், மாவட்டக் கழகச் செயலாளர்கள் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெறுவதை எண்ணிடும்போது, இதிலே உள்ள பொருத்தத்தைப் பார்த்து நான் இறும்பூது எய்துகிறேன்!

உடன்பிறப்பே, நீ, இந்த ஆர்ப்பாட்டக் களத்தில் நெஞ்சுயர்த்தி நிற்கும்போது, என்னுடைய இந்த மடலைப் படிப்பாய் என்பதையும், இந்த நாள் "முரசொலி பிறந்த நாள்" என்பதை நீ தவறாமல் நினைவு கூர்வாய் என்பதையும் நான் நன்றாகவே அறிவேன்.

இந்த முரசொலியினை நான் தொடங்கிய அதே 1942ஆம் ஆண்டுதான், பேரறிஞர் அண்ணா அவர்களை நான் சந்தித்த ஆண்டுமாகும். 1942இல் அறிஞர் அண்ணாவின் 'திராவிட நாடு' இதழில் நான் எழுதிய 'இளமைப் பலி' என்ற கட்டுரை வெளியாயிற்று. அதே ஆண்டில் திருவாரூருக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் வந்தபோது என்னை அழைத்துவரச் செய்து, பாராட்டி வாழ்த்தி, அறிவுரைகளும் வழங்கினார். எனவே அண்ணாவை எண்ணும்போது முரசொலியும், முரசொலியை நினைக்கும்போது அண்ணாவும் என் நெஞ்சில் என்றென்றும் நீக்கமற நிறைந்திருக்கின்றது.

என்னுடைய 20வது வயதில், தந்தை பெரியார் அவர்கள் திருவாரூர் சுயமரியாதைச் சங்க ஆண்டு விழாவுக்கு வந்திருந்தபோது 'முரசொலி' இதழைக் கண்டு 'மிகச் சிறந்த பணி' என்று புகழ்ந்து பாராட்டியதும் என் நினைவிலே நீங்காமல் இன்றும் உள்ளது.

அறிவுலக ஆசான் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1962ஆம் ஆண்டு பொங்கல் மலருக்கு எழுதிய கட்டுரையை நினைவு கூர்ந்தால், முரசொலியின் பணி இன்றைய இளைஞர் சமுதாயத்திற்கு முழுவதும் புரிந்திடும் :-

முரசொலி –

"இசைக்கு அடுத்தபடியாகத் தமிழரின் செவிக்கும் சிந்தனைக்கும் இனிமை பயப்பதாகும்.

முரசொலி –

போர்க் கருவியாக மட்டுமல்ல, புகழ்க் கருவியாக, கொடை அறிவிக்கும் கருவியாகக் கொள்ளப்பட்டுத் தமிழகத்தில் ஏற்றம் பெற்றிருந்த ஒன்றாகும். கேட்டுத் தமிழர் இன்புறுவர்; மாற்றார் மருளுவர்; இறுதி வெற்றி பெற்றுத் தமிழர் மகிழ்ச்சி கொள்வர்.

முரசொலி –

பிறர் வாழ்வையும் உரிமையினையும் மதிக்க மறுத்ததில்லை. தமது உரிமையை அழித்திட எவர் முனையினும் பொறுத்துக் கொண்ட தில்லை; தன்மானத்தைப் பறித்திட முயல்வோரைத் தம் தாள்பணியவைக்கத் தவறியதில்லை.

முரசொலி –

வீரத்தினை விளக்கிற்று; வீண் ஆரவாரத்தை ஆர்ப்பரிப்பைக் காட்டும் கருவியாக இருந்ததில்லை.

முரசொலி –

எனும் கருவி, தமிழரின் வீரத்தை, வெற்றியை, ஏற்றத்தைக் காட்டி நின்றது போலவே, தம்பி கருணாநிதியின் கைவண்ணம் நிரம்பிய கருத்துக் கோட்டம் எனத்தகும் “இதழ் வடிவு” தமிழகச் சிறப்பினை நாம் உணரச் செய்திடும் செயலினைச் செம்மையாகச் செய்துவருகிறது.

முரசொலி –

இதழ், கருத்தொலியும் காவிய ஒலியும், கவிதை ஒலியும் குறிக்கோள் ஒலியும் கொண்டதாகத் திகழ்ந்து வருவதனை நாடு நன்கறியும்.

முரசொலி –

மலர், ஆண்டுதோறும் நமக்குக் கிடைத்திடும் அணிகலன்.

முரசொலி –

மலர், கேடு களைந்திட விழைவோர்க்கு, நாடு வாழ்ந்திட வழி காண விரும்புவோர்க்கு, தேவைப்படும் எழுச்சியைத் தரவல்லது.

முரசொலி –

வாழ்க; வளர்க; தம்பி கருணாநிதியின் தொண்டு வெல்க, வளர்க!”

பேரறிஞர் அண்ணா அவர்களால் இவ்வாறு பலபடப் பாராட்டப்பட்ட, முரசொலி - என்னுடைய முதல் குழந்தை என்று அனைவராலும் எந்நாளும் பாராட்டப்படும் “முரசொலி” இதே நாளில்தான் - 73 ஆண்டுகளுக்கு முன்பு - 10-8-1942

அன்றுதான் - தொடங்கப்பட்டது. இன்று தமிழகத்திலே உள்ள உடன்பிறப்புகளால் ஆர்வமுடன் ஆதரிக்கப்படுகின்ற "முரசொலி" ஏடு, தொடக்கத்தில் திங்கள் தோறும் ஆயிரக்கணக்கிலே அச்சிடப்பட்டு ஊர்தோறுமுள்ள திராவிட இயக்கக் கிளைகளுக்கு அனுப்பப்பட்டது. அந்தக் கிளைக் கழகத்தினர் திரட்டித் தரும் நன்கொடைகளினால் "முரசொலி" துண்டு அறிக்கை வெளியிட்டு, கழகத்தை முரசொலி வளர்க்க, முரசொலியைக் கழகம் வளர்த்தது. என்னுடைய எழுத்துக் கலையை வளர்க்கவும் "முரசொலி" காரணமாக அமைந்தது. "முரசொலி"க்குப் பல எழுத்தாளர்கள் உண்டு. எனினும் நான் ஆயுள் கால நிரந்தர எழுத்தாளன். "சேரன்" என்பது என் புனை பெயர். தொடக்கத்தில் இதற்குச் செயலாளர் தென்னன், பொருளாளர் டி.எஸ். ராஜகோபால் - இருவரும் இன்றைக்கு இல்லை. முரசொலியின் நினைவில் என்றும் வாழ்வர்.

இந்த முரசொலியின், பொன்விழா மலருக்கு நான் எழுதிய கவிதையில்,

"அஞ்சுக அன்னையிடம் உயிர்ப்பால் அருந்தி,
அய்யாவின் கொள்கையின்பால், உவப்பால் தவழ்ந்து
அண்ணாவின் பேரன்பால் ஆளாகி வளர்ந்து,
இளமைத் துடிப்பால் இந்திப் போர்ப்படை கூட்டி
இலட்சிய முனைப்பால் முரசொலிக்க வந்தவன் நான்!

ஆதிமகன் வள்ளுவன் வழி முப்பால் தந்தவளே!
அணுப்பொழுதும் அப்பால் சென்றிடாமல் - எனை
அரவணைத்துக் காக்கின்ற தமிழே! உன் சார்பில்
போர்க்கள முரசின் பொன்விழா மலரை
ஆர்த்தெழும் உடன்பிறப்பாளர் அனைவருக்கும்;
நெஞ்சில் என்றும்

பூத்திருக்கும் தாய், தந்தை, பெரியார், அண்ணா - மற்றும்
வாழ்த்துகின்ற ஆன்றோர் சான்றோர்க்கும்;
காணிக்கை ஆக்குகின்றேன்"

- என எழுதியிருந்தேன்.

கழகப் பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் அவர்கள் முரசொலியின் பொன்விழாவுக்கு எழுதிய வாழ்த்துரையில்,

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் கேடயமாகத் திகழ்ந்துவரும் முரசொலி, தமிழ்ப் பயிர் வளர்க்கும் பண்ணையின் ஏராகவும் விளங்குகின்றது. எத்தனையோ அரசின் தடைகள், வழக்குகள், எதிர்பாராத இழப்புகள் இத்தனையும் தாங்கிக்கொண்டு, வேலாழ் முகத்தகளிறு என வீறு நடைபோட்டு வருவது முரசொலி. அதன் பொன்விழாவில் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு நின் பயணம் தொடர்க என்று வாழ்த்துகிறேன். இனமும் மொழியும் இழந்த மானம் மீட்டுத், தமிழர் தலைநிமிர்ந்து வாழும் வழிகாணச் செய்திடும் நாள் காண நீ வாழ்க என்று வாழ்த்துகிறேன். வாழ்த்திவிட்டு முரசொலியைப் புரட்டுகிறேன், கலைஞர் திருமுகத்தின் மறு தோற்றமாகவே காட்சி அளிப்பதைக் காண்கிறேன், வாழ்த்துகிறேன் மறுபடியும் - எந்நாளும் வாழ்கவென்றே” என்று குறிப்பிட்டதையும் இந்த நேரத்தில் நினைவுகூர்கிறேன்.

முரசொலியின் வளர்ச்சிக்கு - அந்த இதழையே போர்வாளாகவும், கேடயமாகவும் ஏந்திக்கொண்டு கழகத்தை நடத்துகின்ற என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே காரணம். அவர்களுக்கெல்லாம் இந்த நேரத்தில் நன்றி செலுத்துகிறேன். கழகத்தின் குரலாக விளங்கிவரும் “முரசொலி”, தமிழ் இனத்தின் எழுச்சிக்காகவும், மொழியின் முதன்மைக்காகவும், உரிமைகளை மீட்கவும் தனது தூய பணியினைத் தொடர மேலும் வளர்த்தெடுப்பீர்!

முரசொலி, கல்லிலும் முள்ளிலும் பயணம் செய்தது! முரசொலி, காட்டாறுகள் பலவற்றைக் கடந்து வந்தது! முரசொலி, கடும் விலங்குக் கூட்டத்தை வென்று வந்தது! முரசொலி, தமிழகத்தின் அரசியல்களத்தில் என்றும், இன்றும் ஒலித்து வருவது! இந்த முரசொலியின் 73வது பிறந்த நாளில் எனது அன்பு உடன்பிறப்புகளாம், அதன் வாசகர்கள் அனைவருக்கும், முரசொலியின் நிறுவனர் என்ற முறையில் உளம் நிறைந்த வாழ்த்துகள்!

அன்புள்ள,

மு.க.

10-8-2015

3974. சந்தேகம் களைவது ஜனநாயகக் கடமை அல்லவா?

உடன்பிறப்பே,

7-8-2015 அன்று சென்னைக்கு வந்த இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை அவரது வீட்டிற்கே சென்று சந்தித்ததோடு, அவரது வீட்டிலேயே மதிய விருந்திலும் கலந்து கொண்டார் என்று ஏடுகளில் செய்தி வந்ததைத் தொடர்ந்து, பல்வேறு நாளேடுகள் அ.தி.மு.க.விற்கும், பா.ஜ.க.விற்கும் இடையே 2016 தமிழகச் சட்டப் பேரவைப் பொதுத் தேர்தலுக்கான கூட்டணி ஏற்பட்டுவிட்டது என்றும், பா.ஜ.க.வுக்கு எத்தனை இடங்கள் என்றுகூடப் பேசி முடிவெடுக்கப்பட்டது என்றும் செய்திகளை வெளியிட்டுள்ளன. குறிப்பாக "மாலைமலர்" வெளியிட்ட செய்தியில், "போயஸ் தோட்டத்தில் நடந்த சந்திப்புக்கு மோடி தன்னுடன் தமிழகத் தலைவர்கள் யாரையும் அழைத்துச் செல்லவில்லை. 50 நிமிடங்கள் ஜெயலலிதாவுடன் பேசிய மோடி வருகிற சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிடுவது பற்றிப் பேசினார். அப்போது ஜெயலலிதா, கூட்டணிக்குத் தலைமை தாங்குவதும், பெரும்பான்மை இடங்களில் போட்டியிடுவதும் அ.தி.மு.க. வாகத்தான் இருக்க வேண்டும் என்பது உள்ளிட்ட நிபந்தனைகளை விதித்துள்ளார். அதற்கு மோடி தரப்பில் சம்மதம் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. கிட்டத்தட்ட கூட்டணியை இறுதி செய்து தொகுதிப் பங்கீடு வரை இரு தலைவர்களும் பேசி முடிவு செய்து விட்டதாகக் கூறப்படுகிறது. பா.ஜ.க. வுக்கு 65 இடங்கள் வரை கேட்கப்பட்டதாகவும், ஆனால் அதற்கு ஜெயலலிதா சம்மதிக்கவில்லை . அ.தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. இடம் பெற்ற போது அந்தக் கட்சிக்கு நாற்பது இடங்கள் கொடுக்கப்பட்டது. அதேபோல் பா.ஜ.க.வுக்கும் 40 இடங்கள்

கொடுக்க சம்மதித்ததாகக் கூறப்படுகிறது. இறுதி வடிவம் பெற்றுவிட்ட இந்தக் கூட்டணி மற்றும் தொகுதிப் பங்கீடு பற்றிய அறிவிப்புகள் தேர்தல் நெருங்கும் போது முறைப்படி அறிவிக்கப்படும் என்று கூறப்படுகிறது" என்று விரிவாக "மாலை மலரில்" தெரிவிக்கப்பட்டிருந்தது.

காங்கிரஸ் கட்சியின் தமிழ் மாநிலத் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், சட்டசபைத் தேர்தலை முன்னிட்டே பிரதமர் நரேந்திர மோடி மற்றும் முதல்வர் ஜெய லலிதாவின் சந்திப்பு நடந்தது என்றும், இதன் மூலம், பா.ஜ.க., அ.தி.மு.க. இடையே இருந்த மறைமுக அரசியல் உறவு அம்பலத்துக்கு வந்து விட்டது என்றும் திருச்சியில் செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறார். ஆனால் இந்தச் சந்திப்பு பற்றி பிரதமர் தரப்பிலோ, முதல்வர் தரப்பிலோ எந்த விளக்கமும் இதுவரை கூறப்படவில்லை. ஆனால் அரசியல் நோக்கர்கள் இயல்பாகச் சில சந்தேகங்களை எழுப்புகிறார்கள்.

ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில், சிறப்பு நீதிமன்றத்தில் அவர் தண்டிக்கப்பட்டு, கர்நாடக உயர் நீதிமன்றத்தில் சொத்தைக் காரணங்களின் அடிப்படையில் விடுதலை பெற்று, தற்போது இந்திய உச்ச நீதிமன்றத்தில் வழக்கு விசாரிக்கப்பட்டு வரும் நிலையில், பிரதமர் நரேந்திரமோடி அவர்கள், குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஜெயலலிதாவின் வீட்டுக்கே சென்று விருந்தில் கலந்து கொண்டது முறைதானா என்று ஒரு சிலர் சந்தேகப்படக் கூடும்.

உடல் நலம் சரியில்லாத ஜெயலலிதாவை மோடி சந்தித்தது அரசியல் நாகரிகம் என்று பா.ஜ.க.வின் தமிழ் மாநிலத் தலைவர் கூறிய போதிலும், உடல் நலம் இல்லாத போது விருந்து கொடுக்கவும், விருந்து அருந்தவும் என்பது பொருத்தமாக இருக்கிறதா? ஜெயலலிதாவுக்கு உடல் நலம் சரியில்லை என்று யாராவது சொன்னால் அவர்களது நாக்கை அறுப்பேன் என்று அ.தி.மு.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் பேசியதாக ஏடுகளில் செய்தி வந்ததே, அவர் பா.ஜ.க.வின் தமிழகத் தலைவரின் பேச்சைப் படித்தாரா? உடல் நலம் சரியில்லை என்று பா.ஜ.க. தமிழகத் தலைவர் கூறுகிறார். ஆனால் அந்தக் கட்சியைச் சேர்ந்த பிரதமரோ, ஜெயலலிதா வீட்டிற்கே சென்று விருந்து அருந்துகிறார். இதில் உள்ள முரண்பாட்டின் அடிப்படையில் சிலர் சந்தேகிக்கக் கூடும்.

பிரதமர் மோடி அவர்களே, வருமானத்திற்கு அதிகமான சொத்துக் குவித்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஜெயலலிதா வீட்டிற்கே சென்று மதிய விருந்தில் கலந்து கொண்டு விட்டு வரும்போது, ஜெயலலிதாவின் வழக்குகளை விசாரிக்கும் நீதிபதிகள் என்ன அணுகுமுறையினை மேற்கொள்வார்களோ என்று ஒரு சிலர் சந்தேகம் கொள்ளக் கூடும்.

நியாயத்தின் அடிப்படையிலே நீதிபதிகள் சுதந்திரமாகத் தீர்ப்பு கூறினால் கூட, அந்தத் தீர்ப்பு பிரதமரும், முதல் அமைச்சரும் சந்தித்த காரணத்தால்தான் தீர்ப்பு அவ்வாறு கூறப்பட்டது என்றும் சிலர் சந்தேகிக்கக் கூடுமல்லவா?

சென்னையில் நடந்த தேசிய கைத்தறி தின விழாவில் பிரதமர் மற்றும் ஆளுநர் பங்கேற்ற போது, விமான நிலையம் வரை சென்று அரை மணி நேரம் காத்திருந்து பிரதமரை வரவேற்ற தமிழக முதலமைச்சர் மட்டும் ஏன் அதிலே கலந்து கொள்ளவில்லை? நெசவாளர்கள் என்றால் முதல் அமைச்சருக்குப் பிடிக்காதா? பிரதமர் ஒரு மாநிலத்திற்கு வந்து அரசு நிகழ்ச்சி ஒன்றிலே பங்கேற்கும்போது, அந்த மாநில முதலமைச்சரும் கலந்து கொள்வதுதானே மரபு. ஆனால் தமிழக முதலமைச்சர் பங்கேற்காமல் தவிர்த்தது சரிதானா என்று சிலர் சந்தேகப்படக் கூடும்.

அதிலும்கூட, பிரதமர் போன்ற மிக முக்கிய விருந்தினர்கள் (வி.ஐ.பி.க்கள்) கலந்து கொள்கிற அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாதவர்களின் வாழ்த்துச் செய்திகளையோ, உரையையோ படிப்பது வழக்கம் இல்லை. ஆனால் பிரதமர் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியில், அழைப்பிதழிலேயே இடம் பெறாத மாநில முதலமைச்சர் ஜெயலலிதாவின் பேச்சு படிக்கப்பட்டது மரபுதானா என்று சிலர் சந்தேகம் எழுப்பக் கூடும்.

தமிழ்நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்கான கோரிக்கை மனுவை தலைமைச் செயலகத்திலோ அல்லது விமான நிலையத்திற்கே சென்று முதலமைச்சர் வரவேற்ற போது பொது இடத்திலோ வழங்காமல், பிரதமரை தன்னுடைய வீட்டிற்கே வரவழைத்துக் கொடுப்பது சரியான மரபுதானா என்று சிலர் சந்தேகப்படக் கூடும்.

பிரதமரை விமான நிலையம் வரை சென்று வரவேற்ற முதலமைச்சர் ஜெயலலிதா, மரபுப்படி அவரை வழியனுப்ப விமான நிலையத்திற்கு வந்திருக்க வேண்டுமல்லவா? அதுதானே பண்பாடு! ஏன் அந்தப் பண்பாட்டு மரபைக் காப்பாற்ற வரவில்லை என்ற சந்தேகமும் சிலருக்கு வரக்கூடும்.

சிறந்த காந்தியவாதியான சசிபெருமாள் மதுவிலக்குப் பிரச்சினைக்காக போராட்டம் நடத்தியவர் மறைந்து ஒரு வாரம் கழித்து அடக்கம் செய்யப்படுகிற துயரமான நேரத்தில், மதுவிலக்குக் கொள்கையிலே நாட்டம் உள்ள வர்கள் எல்லாம் அந்தச் சாவுக்காகப் பெரிதும் வருந்தி அஞ்சலி செலுத்துகின்ற அதேநேரத்தில், ஏன் மதுவிலக்குக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று தமிழகம் முழுவதும் உள்ள கட்சிகள் எல்லாம் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்ற கொந்தளிப்பான நேரத்தில், முதல் அமைச்சர் பிரதமரை அழைத்து விருந்தளிப்பது நாகரிகம்தானா; முக்கியமான ஒருவருடைய பிரிவை அலட்சியப்படுத்துவதாகாதா; என்ற சந்தேகம் சிலருக்கு வரக் கூடும்.

8-8-2015 தேதிய "இந்து" ஆங்கில நாளிதழில், "Skips protocal; calls on C.M. at her Residence" என்ற தலைப்பில், முதல் பத்தியில், "Not allowing protocal to stand in the way of political calculations, Prime Minister Narendra Modi met Tamil Nadu Chief Minister Jayalalithaa at her Poes Garden residence on Friday, and held one-to-one discussions on the prevailing political situation and pressing issues concerning the Centre and the State" (தன்னுடைய அரசியல் நடவடிக்கைகளுக்கு "அரசு மரபுகள்" எதுவும் குறுக்கிட அனுமதிக்காமல், பிரதமர் நரேந்திர மோடி தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை அவருடைய போயஸ் தோட்ட இல்லத்தில் வெள்ளிக்கிழமை அன்று தனியே சந்தித்து இருவரும் அரசியல் நிலவரம் குறித்தும், மத்திய-மாநில அரசுகளின் முக்கிய பிரச்சினைகள் குறித்தும் விவாதித்திருக்கிறார்கள்) என்று எழுதப்பட்டுள்ளதே; பிரதமரே மரபுகளைப் பற்றிக் கவலை கொள்ள வில்லை என்று "இந்து" நாளேடே எழுதியிருக்கிறதே என்று சிலர் சந்தேகப்படக் கூடும்!

பிரதமரை, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தன்னுடைய வீட்டிற்கே (போயஸ் தோட்ட இல்லம் சொத்துக் குவிப்பு வழக்கில் சம்பந்தப்பட்ட இடம்) அழைத்து அ.தி.மு.க. அரசின் கோரிக்கைகள் அடங்கிய மனுவினை கொடுத்த போது, கடந்த 20 நாட்களாக வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற - 22,000 தொழிலாளர்கள் பணியாற்றுகின்ற மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான நெய்வேலி நிலக்கரி தொழிற்சாலையில், தொழிலாளர்களுக்கான ஊதிய மாற்று ஒப்பந்தப் பிரச்சினை பற்றியும், அங்கே தொடர்ந்து நடைபெறும் போராட்டங்கள் பற்றியும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஏன் குறிப்பிடவில்லை என்று ஒரு சிலர் வருத்தப்பட்டுக் கேட்கக் கூடும்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்தியப் பொதுச் செயலாளர் திரு. சுதாகர் ரெட்டி நேற்றையதினம் அளித்த பேட்டியிலே கூட, "ஒரு மாநிலத்தின் முதல்வரை, பிரதமர் பார்க்க விரும்பினால், அவரை ராஜ்பவனுக்கு அழைத்துத்தான் பார்க்க வேண்டும். ஆனால் மரபை மீறி தமிழக முதல்வரை பிரதமர் மோடி அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசியுள்ளார்" என்றெல்லாம் சுட்டிக் காட்டியிருக்கிறாரே என்ற சந்தேகமும் சிலருக்கு வரக் கூடும்!

இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், இதுவரை பல்வேறு மாநிலங்களுக்கு, பல நிகழ்ச்சிகளிலே கலந்து கொள்வதற்காக சென்றிருக்கிறாரே, எந்த மாநிலத்திலாவது, ஏன் அவருடைய கட்சி ஆளுகின்ற மாநிலங்களிலேகூட, பிரதமர் முதல் அமைச்சரின் இல்லத்திற்கே சென்று விருந்திலே கலந்து கொள்ளவில்லையே, தமிழகத்திலே மட்டும் மரபை மீறியது முறைதானா என்ற சந்தேகமும் சிலருக்கு ஏற்படக் கூடும்!

இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர் அப்துல் கலாம் மறைந்த போது முதலமைச்சரால் போக முடியவில்லை; இஸ்லாமிய பெருமக்களுக்காக அவர் அழைப்பு விடுத்து நடைபெற்ற இஃப்தார் நிகழ்ச்சிக்கு முதலமைச்சரால் போக முடியவில்லை; ஏன், தமிழகத்தில் நிதிநிலை அறிக்கை நிறைவேறி நான்கைந்து மாதங்கள் கடந்து விட்டன; ஆனால் சட்டமன்றத்தைக் கூட்டி மானியக் கோரிக்கைகளை நிறைவேற்ற இந்த ஆட்சியினரால் முடியவில்லை; மதுவிலக்குக் கோரிக்கை மாநிலம் முழுவதும் எழுப்பப்பட்டு, தன்னெழுச்சியான போராட்டங்கள் நடந்து வரும்

நிலையில் அதுபற்றி விவாதிக்கச் சட்டப்பேரவையைக் கூட்ட முன் வரவில்லை; இந்த நிலையில் பிரதமருக்கு விருந்து அளிக்க மட்டும் எப்படி முடிகிறது என்று ஒரு சிலர் சந்தேகம் கேட்கக் கூடும்.

மிகப் பரவலாகப் பத்திரிகையாளர்களாலும், நடுநிலை யாளர்களாலும், அரசியல் விமர்சகர்களாலும் எழுப்பப்பட்டு விவாதிக்கப்பட்டு வரும் இந்தச் சந்தேகங்களை யெல்லாம் பிரதமர் அலுவலகமோ, முதலமைச்சர் அலுவலகமோ உரிய விளக்கத்தின் மூலம் போக்க வேண்டும் அல்லவா? போக்குவார்களா? சந்தேகங்களைக் களைவது ஜனநாயகக் கடமை அல்லவா?

அன்புள்ள,

மு.க.

12-08-2015

3975. கடுகளவும் நிறைவேற்றாத; கடல் அளவு அறிவிப்புகள்!

உடன்பிறப்பே,

சட்டப்பேரவை தொடங்கிவிட்டது. இனி ஒவ்வொரு நாளும் முதல் அமைச்சர் ஜெயலலிதா, பேரவை விதி 110இன் கீழ் அறிக்கைகளைப் படிக்கத் தொடங்கிவிடுவார். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110 என்ன கூறுகிறது என்றால், "பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப்பற்றி ஓர் அமைச்சர் அறிக்கை ஒன்றை அளிக்கலாம்" என்றுதான் உள்ளது. ஆனால் அந்த விதியில் உள்ள "ஓர் அமைச்சர்" என்பதை மாற்றி "முதலமைச்சர் மட்டுமே" என்று திரித்துப் பொருள்கொண்டு, கடந்த நான்காண்டு காலத்தில் எந்தத் துறை அமைச்சருக்கும் வாய்ப்பே கொடுக்காமல், முதலமைச்சர் ஒருவர் மட்டுமே தமிழகச் சட்டப்பேரவையில் 110வது விதியின்கீழ் அத்தனை அறிக்கைகளையும் படித்துக்கொண்டிருக்கிறார். இந்த நிலையில் கடந்த நான்காண்டு காலத்தில் ஜெயலலிதா 110வது விதியின்கீழ்ப் படித்த அறிக்கைகளிலே கூறப்பட்ட திட்டங்கள் என்னவாயின? நிறைவேறிவிட்டனவா? அல்லது ஏட்டளவிலேயே நின்றுபோய் விட்டனவா?

2011ஆம் ஆண்டு 8-6-2011 முதல் 13-9-2011 அன்று வரை முதலமைச்சர் ஜெயலலிதா 110வது விதியின்கீழ் 19 அறிக்கைகளைப்படித்தார். அந்த 19 அறிக்கைகளிலும் 54 அறிவிப்புகள் இருந்தன.

2012ஆம் ஆண்டு 29-3-2012 முதல் 2-11-2012 அன்று வரை முதலமைச்சர் ஜெயலலிதா 61 அறிக்கைகளைப் படித்தார். இந்த 61 அறிக்கைகளில் 99 அறிவிப்புகள் இடம்பெற்றிருந்தன.

2013ஆம் ஆண்டு 1-4-2013 முதல் 15-5-2013 அன்றுவரை முதலமைச்சர் ஜெயலலிதா 46 அறிக்கைகளைப் படித்திருக்கிறார். இந்த 46 அறிக்கைகளில் 189 அறிவிப்புகள் இடம்பெற்றிருந்தன.

2014ஆம் ஆண்டு 14-7-2014 முதல் 12-8-2014 அன்று வரை முதலமைச்சர் 39 அறிக்கைகளைப் படித்திருக்கிறார். இந்த 39 அறிக்கைகளில் 235 அறிவிப்புகள் இடம்பெற்றிருந்தன.

ஆக மொத்தம், 110வது விதியின்கீழ்க் கடந்த நான்காண்டுகளில் 165 அறிக்கைகளைப் படித்திருக்கிறார். ஒவ்வொரு அறிக்கையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட அறிவிப்புகளைச் செய்திருப்பதால், 165 அறிக்கைகளிலும், மொத்தம் 577 அறிவிப்புகளை முதலமைச்சர் ஜெயலலிதா செய்திருக்கிறார். இந்த 577 அறிவிப்புகளில் எத்தனை அறிவிப்புகளுக்கான திட்டங்கள் முடிந்து முழுமை பெற்றுள்ளன? எத்தனை திட்டங்கள் பாதியிலே நின்று கொண்டுள்ளன? எத்தனை திட்டங்கள் இன்னும் தொடங்கப்படாமலேயே உள்ளன? என்ன காரணத்தால்? என்பது பற்றிய விளக்கங்களை அ.தி.மு.க. அரசு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்; அது அரசின் கடமையும்கூட. ஏனென்றால் பேரவையிலே முதல்வராக இருந்தபோது, ஓ. பன்னீர்செல்வம் 2013-2014ஆம் ஆண்டு விதி 110இன்கீழ் ஜெயலலிதா 235 திட்டங்களை அறிவித்ததாகவும், அதில் 116 திட்டங்களுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார். நான் அப்போதே எஞ்சிய 120 திட்டங்களுக்கு அரசாணை ஏன் பிறப்பிக்கப்படவில்லை என்றே கேட்டிருந்தேன்.

எனக்குக் கிடைத்திருக்கும் தகவல்படி, அதாவது முதலமைச்சர் ஜெயலலிதாவினால் 110 விதியின்கீழ் அறிவிக்கப்பட்ட எந்தெந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் எஞ்சி நிற்கின்றன என்பதற்கான விவரத்தைத் தெரிவிக்கின்றேன்.

7-9-2011 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா 110வது விதியின்கீழ்ப் படித்த அறிக்கையில் “தூத்துக்குடி முதல் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அஞ்சு கிராமம் வரையில் உள்ள 113 கிலோ மீட்டர் சாலைப் பகுதி 257 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரு வழித்தடமாக அகலப்படுத்தப்பட்டு மேம்பாடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்” என்றார் ஜெயலலிதா. இந்த 257 கோடி ரூபாயில் வெறும் 17.40 கோடி ரூபாய்தான் செலவு செய்யப்பட்டுள்ளதாம். மூன்றாண்டுகளுக்கும் மேலான தாமதத்திற்கு என்ன காரணம் சொல்கிறார்கள் என்றால் நிலம் கையகப்படுத்தவேண்டி உள்ளதாம்.

அதே நாளன்று, "740 கோடி ரூபாய் மதிப்பில், 23 புதிய ரெயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்ப்பாலங்கள் கட்டும் பணிகள் 9 மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும்" என்று ஜெயலலிதா அறிவித்தார். இந்த 740 கோடியில், 15-12-2014 அன்றுவரை செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு தெரியுமா? 10 கோடி ரூபாய்தான். இந்த 23 பணிகளில், 8 திட்டங்களுக்கு நில எடுப்பு நடைபெற்று வருகிறதாம். 7 திட்டங்களுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறதாம். எஞ்சிய 8 திட்டங்கள் என்னவாயிற்று என்று தெரியவில்லை.

8-9-2011 அன்று ஜெயலலிதா 110வது விதியின்கீழ்ப் படித்த அறிக்கையில், "தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சார்பில் 2160 கோடி ரூபாய்ச் செலவில் "திருமழிசை துணைக் கோள் நகரம்" அமைக்கப்படும்" என்று அறிவித்தார். அறிவித்து நான்காண்டுகள் ஆகின்றன. எங்கே துணை நகரம்? 8-9-2011 அன்று அறிவித்த திட்டத்திற்கு அரசாணையே 5-3-2012 அன்றுதான் பிறப்பித்திருக்கிறார்கள். அதாவது ஆறு மாதங்களுக்குப் பிறகு! 2160 கோடி ரூபாய் அறிவித்தார்களே, எத்தனை கோடி ரூபாய் செலவழித்திருக்கிறார்கள் தெரியுமா? 15-12-2014 வரை 38.77 கோடி ரூபாய்தான் செலவழித்திருக்கிறார்கள்! உண்மையா? பொய்யா?

அதே அறிவிப்பில், "சென்னை அசோக்பில்லர் அருகில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான 3.73 ஏக்கர் இடம் எவ்விதப் பயன்பாட்டிற்கும் உட்படாமல் இருந்து வருகிறது. சென்னை மாநகரத்தில் வீட்டுத்தேவையைக் கருத்திலே கொண்டு இந்த 3.73 ஏக்கர் நிலப்பரப்பில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 554 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும்" என்று கூறினார் ஜெயலலிதா. எத்தனை குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன? எவ்வளவு கோடி ரூபாய் செலவழித்திருக்கிறார்கள்? ஒரு கோடி ரூபாய்கூடச் செலவழிக்கவில்லை. அறிவித்து ஆறு மாதங்கள் கழித்து அரசாணை பிறப்பிக்கப்பட்டு, திட்டக்கருத்துரு தயாரிப்பில் உள்ளதாம்!

"சென்னை, கோயம்பேடு தெற்காசிய விளையாட்டுக் கூட்டமைப்பு கிராமத்தில், 116 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பன்னடுக்கு வணிக வளாகம் ஒன்று கட்டப்படும்" என்று 8-9-

2011 அன்று ஜெயலலிதா விதி 110இன்கீழ்ப் படித்தார். எங்கே வணிக வளாகம்?

அதே இடத்தில் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 120 குடியிருப்புகள் கூடுதலாகக் கட்டப்படும் என்றும் ஜெயலலிதா அறிவித்தார். அறிவித்துப் பல மாதங்களுக்குப் பிறகு 5-3-2012இல் அரசாணை பிறப்பித்ததோடு சரி, நிதி ஒதுக்கீடு செய்து, டெண்டர் கோரி, பணி ஒப்படைத்து இன்னும் குடியிருப்புகள் கட்டப்படவில்லை.

"தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்வசம் தற்போது காலியாக உள்ள இடத்தில், சுமார் 100 கோடி ரூபாய்ச் செலவில், பசுமைத் திட்ட அம்சங்களுடன், 2 லட்சம் சதுர அடிப் பரப்பளவில், 17 மாடிகள் கொண்ட அலுவலக வளாகம் கட்டப்படும்" என்று 8-9-2011 அன்று ஜெயலலிதா அறிவித்தார். அலுவலக வளாகமும் வரவில்லை. அதற்கான அரசாணையும் பிறப்பிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அறிவிப்போடு சரி!

2011ஆம் ஆண்டு 110வது விதியின்கீழ் ஜெயலலிதா அறிவித்தத் திட்டங்களுக்கான மொத்த மதிப்பீடு 5423 கோடி ரூபாய். இதில் செலவிடப்பட்ட தொகை 970 கோடி ரூபாய்தான்! அதாவது 17.89 சதவீதம்தான் என்றால், அந்த அளவுக்குத்தான் திட்டங்கள் செயல் வடிவம் பெற்றிருக்கின்றன.

2012ஆம் ஆண்டு 29-3-2012 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா 110வது விதியின்கீழ்ப் படித்த நீண்ட அறிக்கையில் ஒரு திட்டம்! "660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் அனல் மின் விரிவாக்கத் திட்டம் என்னும் ஒரு புதிய திட்டத்தைச் செயல்படுத்த எனது தலைமையிலான அரசு தற்போது முடிவு செய்துள்ளது என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவிப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். சுமார் 3,960 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவக்கப்படும் இந்த அனல் மின் திட்டம் 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் தனது உற்பத்தியைத் தொடங்கும்" - 2012ஆம் ஆண்டு ஜெயலலிதா தமிழகச் சட்டப்பேரவையில் மிகப் பெரிய ஆரவாரத்தோடு செய்த அறிவிப்பு இது. அறிவிப்பு செய்து மூன்றரை ஆண்டுகள் உருண்டோடி விட்டன. அவர் கூறியவாறே 2015ஆம் ஆண்டு இறுதியும் வந்துவிட்டது. 3,960 கோடி ரூபாய் என்று அறிவித்ததற்கு மாறாக, 122 கோடி ரூபாய்தான்

இந்தத் திட்டத்திற்காக விடுவிக்கப்பட்டுள்ளது. மின் உற்பத்தி தொடங்கி விட்டதா? இந்தத் திட்டத்தின் 15-12-2014 நிலை என்ன தெரியுமா? "இத்திட்டத்திற்கான ஆரம்பகட்ட கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2017-2018ஆம் ஆண்டில் செயல்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது" என்பதுதான்! எப்படி அறிவிப்பு? எவ்வளவு வேகமான (?) செயல்பாடு! மின்வெட்டு தொடர்ந்து மாநிலத்தை வாட்டிக் கொண்டிருக்கும் நிலையில், மின் விரிவாக்கத் திட்டத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவம், அதன் உள்நோக்கமும் புரிகிறது அல்லவா?

7-5-2012 அன்று 110வது விதியின் கீழ் ஜெயலலிதா, காவேரி டெல்டா பகுதியின் வடிகால் வசதிகளை மேம்படுத்துவதற்காக 1,560 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டத்தை அறிவித்தார். அதன் மூலம் சுமார் நான்கரை லட்சம் ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும் என்றெல்லாம் பேரவையில் விஸ்தாரமாகத் தெரிவித்தார். என்ன ஆயிற்று? வடிகால் வசதிகளை மேம்படுத்தும் பணியில் என்ன நிலை? ஆலோசனை வழங்குவதற்கான வல்லுநர்களைத் தேர்வு செய்யும் முதல் கட்டப் பணிதான் தற்சமயம் நடைபெற்று வருகிறதாம், விரைவில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கிறார்கள். விவசாயிகளுக்கான அறிவிப்புக்கே காட்டப்படும் வேகம் அவ்வளவுதான்!

11-5-2012 அன்று ஓர் அறிவிப்பு! "பாரம்பரியம் மிக்க பழைய நீதிமன்றக் கட்டடங்கள் தொன்மை மாறாமல் புதுப் பொலிவுடன் விளங்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் சென்னை நகரில் இயங்கி வரும் பழமை வாய்ந்த ஜார்ஜ் டவுன் நீதிமன்றம், சைதாப்பேட்டை நீதிமன்றம், எழும்பூர் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள சிறு வழக்குகள் நீதிமன்றம் ஆகிய கட்டடங்களுக்கு 22 கோடி ரூபாய்ச் செலவில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று ஜெயலலிதா அறிக்கை பேரவையில் படித்தார். இப்போது என்ன கூறுகிறார்கள்? மேற்காணும் நீதிமன்றங்களுக்கு மாற்று இடம் கிடைத்த பின்னரே புதுப்பித்தல் பணி மேற்கொள்ளப்படும் என்றால் அறிவிப்பதற்கு முன்பே இந்த யோசனை வரவில்லையா? தற்போது அந்த

தொகையை வேறு நீதிமன்றங்களுக்குச் செலவு செய்வதற்காக 25-11-2014 அன்றுதான் அரசாணை பிறப்பித்திருக்கிறார்கள்.

அதே 11-5-2012 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா செய்த மற்றொரு பெரிய அறிவிப்பு "கெயில்" நிறுவனத்துடன் 4,000 கோடி ரூபாய்க்குப் புரிந்துணர்வு செய்து கொண்டிருப்பதாகவும், இதன் மூலம் மூன்று திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதாகும்.

3 ஆண்டுகள் ஓடிவிட்டன. தற்போது என்ன நிலை? இத்திட்டம் தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்பதுதான்!

அதே நாளில் எரிவாயு மூலம் 500 மெகாவாட் திறனுள்ள மின் உற்பத்தித் திட்டம் 2,000 கோடி ரூபாயில் மேற்கொள்ளப்படும் என்றும், அதே திட்டம் பிறகு மேலும் விரிவுபடுத்தப்பட்டு 10,000 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு செய்யப்படும் என்றும் மகிழ்ச்சி யோடு தெரிவித்தார். இந்தத் திட்டம் தொடர்பான வழக்கும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மின் உற்பத்திக்கான முக்கியமான இத்திட்டத்தில், உச்ச நீதிமன்ற வழக்கை விரைவுபடுத்தித் தீர்ப்பைப் பெறுவதற்கு என்ன நடவடிக்கை?

2012ஆம் ஆண்டில் மட்டும் செய்யப்பட்ட அறிவிப்புகளிலே கூறப்பட்ட திட்டங்களுக்கான மதிப்பீடு 18,188.81 கோடி ரூபாய். இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 10,025.49 கோடி ரூபாய். விடுவிக்கப்பட்ட தொகை 5,083.33 கோடி ரூபாய். ஆனால் செலவு செய்யப்பட்ட தொகை 5,004.48 கோடி ரூபாய் மட்டுமே! இந்தத் தொகையிலும் 4,294.16 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்கு மானியமாக வழங்கப்படுகிற தொகையாகும். இதையும் கழித்துவிட்டுப் பார்த்தால் 2012ஆம் ஆண்டு 110வது விதியின்கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்காகச் செலவிடப்பட்ட தொகை 710.32 கோடி ரூபாய்தான்! எதுவோ தேய்ந்து கட்டெறும்பு ஆயிற்று என்று கதை உண்டே; அது இதுதானோ?

2013ஆம் ஆண்டினை எடுத்துக் கொண்டால்,

1-4-2013 அன்று 215 கிலோ மீட்டர் நீளமுடைய 67 அரசு சாலைகள் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று ஜெயலலிதா மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டார். 15-12-2014 அன்று என்ன நிலை தெரியுமா? 2015-16இல்

தேசிய ஊரக வளர்ச்சி வங்கியின் நிதி உதவி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறதாம்!

அதே நாளில் மற்றொரு அறிவிப்பு! 948.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 11 மாவட்டங்களில் 18 ரெயில்வே மேம்பாலங்கள் அமைக்கப்படும் என்று பேரவையில் ஜெயலலிதா அறிவிப்பு செய்தார். ரெயில்வே துறையின் ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது என்பதுதான் இந்த அறிவிப்பின் கதி.

அதே நாளில் மற்றொரு அறிவிப்பு! மதுரை விமான நிலையத்திற்கு அருகில், ஒருங்கிணைந்த துணைக்கோள் நகரம் ஒன்று உருவாக்கப்படும். அங்கே 19,500 மனைகள் உருவாக்கப்படும். இதில் 14,300 மனைகள் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கும், 2,500 மனைகள் மத்திய வருவாய் பிரிவினருக்கும், 1,950 மனைகள் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கும் ஒதுக்கீடு செய்யப்படும். அடிப்படை வசதிகளான சாலைகள், குடிநீர் வசதி, கழிவு நீர் வடிகால் வசதி, தெரு விளக்குகள், மழை நீர் சேகரிப்புத் திட்டம் மற்றும் பூங்காக்கள் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இங்குக் குடியேறும் மக்களின் நலனுக்காகப் பள்ளி வளாகம், வணிக மனைகள், காவல் நிலையம், அஞ்சலகம், ஆரம்ப சுகாதார வசதி, தீயணைப்பு நிலையம் மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் என அனைத்து வசதிகளும் இங்கே உருவாக்கப்படும் என்றெல்லாம் பலத்த ஆரவாரத்திற்கிடையே ஜெயலலிதா பேரவையில் அறிவித்தார். 4-4-2013இல் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டத்திற்கு ஆறு மாதங்கள் கழித்து, 21-10-2013 அன்று அரசாணையும் வெளியிடப்பட்டு, ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டது. இப்போது என்ன நிலைமை? நாம் அறியோம் பராபரமே என்பது தான்!

அதுபோலவே சோழிங்கநல்லூர் பகுதியில் 612 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,500 பன்னடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டப்படும் என்று 4-4-2013 அன்று 110வது விதியின்கீழ் ஜெயலலிதா படித்தார்.

15-12-2014 அன்றைய தகவல்படி பணிகள் தொடங் கப்பட்டு விட்டதாம். மொத்தம் 612 கோடி ரூபாய்க்கான திட்டத்திற்கு அதுவரை செலவுசெய்யப்பட்ட தொகை வெறும் 15 இலட்சம்

ரூபாய்தான்! 20 மாதங்களாக நிலத்தை அளந்து எல்லைக் கற்கள் நடும் வேலை மட்டும்தான் முடிந்திருக்கும் போலிருக்கிறது!

சென்னை, காஞ்சிபுரம், கோயம்பத்தூர், ஈரோடு, கிருஷ்ணகிரி, சேலம், விருதுநகர், திண்டுக்கல் மற்றும் திருச்சி ஆகிய 9 மாவட்டங்களில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலத்தில்

1,630 தனி வீடுகள் மற்றும் 2,792 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் சுமார் 918 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்று பேரவையில் 110வது விதியின் கீழ் ஜெயலலிதா அறிவித்தார். இந்த 918 கோடி ரூபாய் திட்டத்திற்கு 56.29 கோடி ரூபாய்தான் 15-12-2014வரை செலவிடப்பட்டுள்ளது.

10-4-2013 அன்று படித்த அறிவிப்பு; 797 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். இதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 544.39 கோடி ரூபாய். ஆனால் விடுவிக்கப்பட்டுச் செலவிடப்பட்டது 91.85 கோடி ரூபாய். குடிநீர்த் திட்டப் பணிகளே அதோ கதிதான்!

திருநெல்வேலி மாநகராட்சி, ஆரணி, திருவத்திபுரம் மற்றும் பெரியகுளம் நகராட்சிகளில் 227.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்று 10-4-2013 அன்று ஜெயலலிதா படித்தார். தற்போதுதான் ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளதாகக் கூறினார்கள். குடிநீர்ப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. தாய்மார்கள் காலிக்குடங்களுடன் காத்திருக்கிறார்கள். தாகத்திற்குத் தண்ணீர் வழங்காமல் படுதோல்வி அடைந்துவிட்டது அ.தி.மு.க. அரசு!

25-4-2013 அன்று மிகப் பெரிய அறிவிப்புகள். "நீலகிரி மாவட்டத்தில், 7,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,000 மெகாவாட் மின் திறன் கொண்ட சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டம் உருவாக்கப்படும். இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகு என்ன நிலை? மின் உற்பத்தித் திட்டங்களில் எவ்வளவு அக்கறையின்மை, அலட்சியம்? இத்திட்டத்திற்கான அணை கட்டுவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுத்

தற்போதுதான் ஆய்வில் உள்ளதாம். ஆய்வு முடிவதற்குள் ஆட்சிக் காலம் முடிந்துவிடும்!

மின் விநியோகம் சீராக இருப்பதற்காக ஜப்பானிய நிதி உதவியுடன் 3,572 கோடி ரூபாயில் ஒரு திட்டம் அறிவித்தார்கள். தற்போதுதான் ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய்யப்பட்டு வருகிறதாம். 8,000 கோடி ரூபாயில் 56 துணை மின் நிலையங்களை அமைக்கப்போவதாக அறிவித்தார்கள். 763 கோடி ரூபாய்தான் செலவு செய்யப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டங்களின் மொத்த மதிப்பீடு 37,720.69 கோடி ரூபாய். இதில் செலவு செய்யப்பட்ட தொகை 6,488.76 கோடி ரூபாய். அதாவது 17.20 சதவிகிதம்தான்.

2014ஆம் ஆண்டினை எடுத்துக்கொண்டால், அரசு அச்சகத்திற்குப் புதிய கட்டடம் 21.59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப் போவதாக அறிவிக்கப்பட்டது. ஆரம்பக்கட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாம்.

குடிசை மாற்று வாரியத்தால் பத்தாயிரம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் 825 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்போவதாக அறிவித்தார்கள். 15-12-2014 அன்று என்ன நிலை என்றால், அரசாணை வெளியிடுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறதாம். நொச்சிக் குப்பத்தில் 534 குடியிருப்புகளை 48 கோடி ரூபாய் செலவில் கட்டப்போவதாகச் சொன்னார்கள். அரசாணை வெளியிடுவது பரிசீலனையிலே உள்ளதாம். ஒருவேளை அரசாணை வெளியிடக் காகிதத்தைத் தேடிக் கொண்டிருப்பார்களோ? கோயம்பேட்டில் அடுக்குமாடி அலுவலகக் கட்டடம் 63.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப் போவதாகச் சொன்னார்கள். இதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோருதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறதாம்.

செங்கல்பட்டு அருகில் மருத்துவப் பூங்கா 130 கோடியில் அமைக்கப்போவதாகப் படித்தார்கள். விரிவான திட்ட அறிக்கையை அனுப்பும்படி கோரப்பட்டுள்ளதாம். 24-7-2014 அன்று ராமநாதபுரம் மற்றும் திருவாடானை வட்டங்களில் தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலம் சுமார் 6,525 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று பேரவையில் ஜெயலலிதா அறிவித்தார். இத்திட்டத்திற்கான நில எடுப்புப்

பணிகள் 2016ஆம் ஆண்டு இறுதியில்தான் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம். அதே அறிக்கையில் வாலி நோக்கத்தில் 1500 கோடி ரூபாய் செலவில் கடல் நீரைச் சுத்திகரிக்கும் திட்டம் அமைக்கப்படும் என்றார்கள். இதிலும் எதுவும் நடைபெற வில்லை. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 920 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மின்னணுவியல் உற்பத்தித் திட்டம் அமைக்கப்படும் என்றார்கள். இதற்கான ஒப்புதல் மத்திய, மாநில அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறதாம்.

30-7-2014 அன்று, "குழந்தைகளின் சுகாதாரம் கருதி கழிவறைகளைச் சுத்தமாகப் பராமரிப்பதும் மிகவும் இன்றியமையாத பணி என்பதால், முதன் முறையாகக் கழிவறைகளைப் பராமரிப்பதற்காக 160 கோடியே 77 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம் 56 லட்சத்து 55 ஆயிரம் மாணவ, மாணவியர் பயனடைவார்கள்" என்று ஜெயலலிதா அறிவித்தார். இதற்கான கோப்பு 25-11-2014 அன்று நிதித்துறைக்கு அனுப்பப்பட்டதாம். திரும்பி வந்துவிட்டதா? அது என்ன, கனக விசயர் கல் சுமந்து வந்ததைப் போன்ற மிகக் கடினமான காரியமா?

31-7-2014 அன்று சென்னை மாநகரின் மின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக 338 கோடியே 8 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு துணை மின் நிலையங்களும், கமுதியில் 400 கிலோவோல்ட் துணை மின் நிலையம் 435 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், விருதுநகரில் துணை மின் நிலையம் ஒன்று 47 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் அமைக்கப்படும் என்று முதல் அமைச்சர் ஜெயலலிதா பேரவையில் படித்தார். 15-12-2014 தேதிய விவரப்படி, சிலவற்றுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளதாம். மேலும் சிலவற்றுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படவுள்ளனவாம்.

31-7-2014 அன்று ஜெயலலிதா 110வது விதியின்கீழ்ப் படித்த அறிக்கையில், "இந்த நிதியாண்டில் 28,000 மின் விநியோக மாற்றிகள் 660 கோடி ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்படும்" என்று அறிவித்தார். 15-12-2014 அன்றைய நிலவரப்படி, வரைவு கொள்முதல் ஆணைகள் ஒப்புக் கொள்ளப்பட்ட பின் கொள்முதல் ஆணைகள் வழங்கப்பட உள்ளதாம். அதே நாளில் கடலூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் இரண்டு தொழில் நுட்பக் கல்லூரிகள் 24

கோடியே 60 லட்ச ரூபாய் செலவில் தொடங்கப்படும் என்று கூறினார்கள். ஆனால் அதற்கான அரசாணை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக 15-12-2014இல் கூறுகிறார்கள்.

17 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3 புதிய மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்படும் என்றும், 17 கோடியே 55 லட்சம் ரூபாய் செலவில் நான்கு இடங்களில் உள்ள அரசு மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணைகள் மேம்படுத்தப்படும் என்றும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் சார்பில் 46 கோடியே 50 லட்சம் ரூபாய்ச் செலவில் கால்நடைத் தீவனப் பயன்பாட்டை ஊக்கப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் 4-8-2014 அன்று ஜெயலலிதா அறிவித்தார். ஆனால் 15-12-2014 தகவல்படி இதற்கான ஆணை வேண்டி முதலமைச்சர் அவர்களுக்குக் கோப்பு அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. அது என்னவானது என்பதை முதலமைச்சர்தான் விளக்க வேண்டும். அதே நாளில் பொதுப்பணித் துறை சார்பில் 670 கோடி ரூபாய்ச் செலவில் வேளாண் உற்பத்திக்கான திட்டங்களைச் செயல்படுத்தப் போவதாகக் கூறினார்கள். அதில் மொத்தம் 10 அறிவிப்புகளில், 86 கோடி ரூபாய்க்கான 3 அறிவிப்புகளுக்கு மட்டும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு நிதித் துறையின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. நிதித் துறை ஒப்புதல் அளித்துவிட்டதா என்பதை அரசுதான் விளக்க வேண்டும். இதர 7 அறிவிப்புகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கும் பணி தற்போதுதான் நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

7-8-2014 அன்று இரண்டு வணிக வரி அலுவலகங்கள் 60 கோடி ரூபாய்ச் செலவில் கட்டப்படும் என்ற அறிவிப்பு படிக்கப்பட்டது. அதே நாளில், 120 கோடி ரூபாய்ச் செலவில் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி ஒன்று ஓசூரில் நிறுவப்படும் என்றார்கள். 25 கோடி ரூபாய்ச் செலவில் பத்து சார்பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கிய 5 ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகங்கள் மற்றும் தனித்தனியாக 25 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும் என்றெல்லாம் அறிவித்தார்கள். இவை அரசின் துரித நடவடிக்கையில் உள்ளதாகவும், விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்று கூறப்பட்டது. ஆணை

தி.மு.க. அறக்கட்டளை

பிறப்பிக்கப்பட்டு விட்டதா என்ன? "ஆணையிட்டுள்ளேன், ஆணையிட்டுள்ளேன்" என்று அடிக்கடி கூறும் முதலமைச்சர்தான் பதில் கூற வேண்டும்.

113 கோடியே 26 லட்ச ரூபாய்ச் செலவில் "அம்மா பெண்ணை மகளிர் திறன் மேம்பாட்டுத் திட்டம்" செயல்படுத்தப்படும் என்று அறிக்கை படித்தார்கள். உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறதே தவிர, என்ன நடவடிக்கை என்று தெரியவில்லை.

2014ஆம் ஆண்டில் மட்டும் 23 ஆயிரத்து 42 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. அதில் செலவு செய்யப்பட்டது என்னவோ 271.92 கோடி ரூபாய்க்கான திட்டங்களுக்குத்தான். அதாவது 1.18 சதவிகிதம்தான்.

ஒட்டுமொத்தமாகக் கடந்த நான்காண்டுகளை எடுத்துக் கொண்டால், முதல் அமைச்சர் 110வது விதியின்கீழ்ப் படித்த அறிவிப்புகளுக்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை 84 ஆயிரத்து 374 கோடி ரூபாயாகும். இதில் செலவு செய்யப்பட்டதோ 12 ஆயிரத்து 733.60 கோடி ரூபாய்தான். 12.09 சதவிகிதம் தான்! 110வது விதியின்கீழ் முதலமைச்சர் சொன்னதோ, கடல் அளவு; செய்ததோ, கை அளவு தான்! இதுதான் 110வது விதியின்கீழ்ப் படித்த அறிக்கைகளின் கதி! இதையெல்லாம் தமிழ் மக்கள் கேட்டுக்கொள்ள வேண்டும், அதுதான் அவர்களின் தலைவிதி!

அன்புள்ள,

மு.க.

26-8-2015

42260

894-816

Comm.53

3976. ஏமாற்றுவோரிடமிருந்து தமிழகம் மீளுவதுதான் எப்போது?

உடன்பிறப்பே,

கடந்த நான்காண்டு காலத்தில், முதலமைச்சர் ஜெயலலிதா, தமிழகச் சட்டப்பேரவையில் 110வது விதியின்கீழ்ப் படித்த அறிக்கைகள் பற்றியும், அப்படி அறிவிக்கப்பட்ட திட்டங்களின் கதி என்ன என்பது பற்றியும் விரிவாக நான் எடுத்து விளக்கியிருந்தேன். "ஒட்டகக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்பதைப் போல, நான் இதுபற்றி விவரமாக எழுதிய அதே நேரத்தில், முதலமைச்சர் ஜெயலலிதா 25-8-2015 அன்று அவசர அவசரமாகப் பேரவையிலே நுழைந்து, வேக வேகமாக 110வது விதியின்கீழ் ஓர் அறிக்கையை - அதிலே "அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம்" உட்பட 22 அறிவிப்புகளைச் செய்துவிட்டு - அதற்கான "பாராட்டுரை"களைத் தோழமைக் கட்சியினர் ஆற்றிய பிறகு, அவையை விட்டுச் சென்றுவிட்டார். ஜெய லலிதா, அறிக்கையைப் படிப்பதற்காக வருகிறார்; அவையின் ஏனைய நடவடிக்கைகள் எதிலும் கலந்துகொள்வதில் அவருக்கு அக்கறையில்லை. முதலமைச்சர் 25-8-2015 அன்று அறிவித்த 22 அறிவிப்புகளும் மக்கள் நல்வாழ்வுத் துறை சம்பந்தப்பட்டவையாகும். இந்தத் துறை குறித்த மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம்; நடைபெறும் கூட்டத் தொடரில் 23-9-2015 அன்று விவாதிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டும் உள்ளது. இந்த நிலையிலே அந்தத்துறை சம்பந்தப்பட்ட 22 அறிவிப்புகளை முதலமைச்சர் 25-8-2013இல் படித்து விட்டார் என்றால், பிறகு எதற்காக அந்த மானியக் கோரிக்கை மீதான விவாதம்? அந்தத் துறையின் அமைச்சர்தான் எதற்காக இருக்கிறார்?

30-4-2013 அன்று முதலமைச்சர் தமிழகச் சட்டப்பேரவையில் 110வது விதியின்கீழ்ப் படித்த அறிக்கையில், "கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்தில் நிலவும் போக்குவரத்து நெரிசலைக் கருத்தில் கொண்டும், இங்கிருந்து செல்லும் பேருந்துகளில்

பாதிக்கு மேல் தென்மாவட்டங்களுக்குச் செல்பவையாக இருப்பதைக் கருத்தில் கொண்டும், தென் மாவட்டங்களிலிருந்து வந்துசெல்லும் பேருந்துகளுக்கென தெற்கத்திய பெருஞ்சாலை மற்றும் வெளிவட்டச் சாலை ஆகியவற்றிற்கு இடையே வண்டலூர் ரயில் நிலையத்திற்கு அருகில் ஒரு புறநகர் பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். வண்டலூரில் புதியதாக உருவாக்கப்படும் இந்தப் புறநகர் பேருந்து நிலையத்தில், புறநகர் பேருந்துகளை இயக்குவதற்கான இடம், மாநகரப் பேருந்துகளை இயக்குவதற்கான இடம், வாகனங்கள் நிறுத்துவதற்குத் தேவையான இடம், போக்குவரத்துப் பணிமனை வசதிகள், இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், பொதுமக்களுக்குத் தேவையான உணவகங்கள், சிறு கடைகள், பொதுக் கழிப்பிட வசதி ஆகிய எல்லா வசதிகளும் ஏற்படுத்தித்தரப்படும்" என்று ஜெயலலிதா அறிவித்து, அந்தச் செய்தி அப்போது ஏடுகளில் எல்லாம் பெரிதாக வந்தன.

தமிழகச் சட்டப்பேரவையில் முதலமைச்சர் ஜெயலலிதா 110வது விதியின்கீழ் இந்தத் திட்டத்தை அறிவித்து இரண்டு ஆண்டுகளும் நான்கு மாதங்களும் ஓடிவிட்டன! வண்டலூரில் புதிய பேருந்து நிலையம் வந்துவிட்டதா ஜெயலலிதா அந்த அறிவிப்பில் செய்த திட்டங்கள் எல்லாம் வந்துவிட்டனவா என்றால்; இல்லை! வேதனைதான் மிச்சம்.

இவ்வாறு வண்டலூரில் புறநகர் பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்று முதல் அமைச்சர் அறிவித்ததற்கு, அந்தப் பகுதி விவசாயிகள் அப்போதே எதிர்ப்பு தெரிவித்தனர் என்று செய்தி வந்துள்ளது. அந்தச் செய்தியில், புதிய பேருந்து நிலையத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த விவசாயிகள் கூறும்போது "வண்டலூர் வாலாஜாபாத்தை ஒட்டியுள்ள நஞ்சை விவசாய நிலத்தில் 100 ஏக்கர் பரப்பளவில் பல குடும்பங்கள் விவசாயம் செய்து வருகின்றன. ஏற்கனவே சாலை விரிவாக்கம், வண்டலூர் உயிரியல் பூங்கா அமைப்பதற்காகப் பல ஏக்கர் நிலங்களை அரசு எடுத்துள்ளது. 1985இல் வண்டலூர் பூங்காவைத் திறந்த அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். வண்டலூரில் ஏராளமான நிலங்கள் கையகப்படுத்தப் பட்டுவிட்டன. இனி ஒரு நிலம்கூட எடுக்கப்பட மாட்டாது என்றார். ஆனால் இப்போது விவசாய

நிலத்தில் புறநகர் பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்று இன்றைய முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருக்கிறார். விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க, புறநகர் பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும்" என்று கூறியதாக "தினமலர்" நாளேடு அப்போது எழுதியிருந்தது.

வண்டலூரில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்று முதல் அமைச்சர் பேரவையில் 110வது விதியின் கீழ் அறிக்கை படித்தவுடன், ஏற்கனவே வேளச்சேரியிலும், மாதவரத்திலும் புதிய பேருந்து நிலையங்கள் அமைக்கப்போவதாக தீட்டப்பட்ட திட்டங்கள் என்னவாயிற்று என்று அப்போதே நான் கேட்டிருந்தேன். அதற்கு அரசுத் தரப்பிலிருந்து பதில் வராவிட்டாலும், "தினமலர்" நாளேட்டில் 14-5-2013 அன்று வெளிவந்துள்ள செய்தியில், "வேளச்சேரி வெளியூர் பஸ் நிலையம் கைவிடப்படுகிறது - சி.எம்.டி.ஏ. புதிய முடிவு" என்ற தலைப்பில் செய்தி வந்தது.

"முதலமைச்சர் வண்டலூரில் புறநகர் பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்று 110வது விதியின்கீழ் அறிக்கை படித்து - அந்த அறிவிப்பை அந்தப் பகுதி விவசாயிகள் எம்.ஜி.ஆரின் வாக்குறுதியை எடுத்துக்காட்டி எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்ற நிலையில் தமிழக அரசு என்ன செய்யப் போகிறது? வண்டலூரில் விவசாயிகளின் எதிர்ப்பையும் மீறி புறநகர் பேருந்து நிலையம் வரப் போகிறதா? வேளச்சேரி, மாதவரம் புறநகர் பேருந்து நிலையங்களின் கதி என்ன? இதற்கான விளக்கங்களை முதல் அமைச்சர் மற்றொரு 110வது விதியின்கீழ் எப்போது படிப்பார்?" என்று 15-5-2013 அன்று நான் கேள்வி கேட்டிருந்தேன்.

நான் 15-5-2013 அன்று கேட்ட கேள்விக்கு, இரண்டாண்டுகள் கழித்து இப்போது 26-8-2015 அன்று; முதல் அமைச்சர் ஜெயலலிதா அல்ல, அந்தத் துறையின் அமைச்சர் வண்டலூர் பேருந்து நிலைய அறிவிப்பு பற்றி விளக்கம் அளித்திருக்கிறார். அமைச்சரின் அந்த விளக்கம் எந்த நாளேட்டிலும் வெளிவந்ததாகத் தெரியவில்லை. "இந்தியன் எக்ஸ்பிரஸ்" - 26-8-2015 தேதிய இதழில் மட்டும்தான் வந்துள்ளது. "தினமலர்" இணைய வெளியீட்டில் மட்டும் ஒரு சிறு பகுதியில் அமைச்சரின் இந்தப் பதிலை வெளியிட்டுவிட்டு, அச்சில்

வெளியாகும் பத்திரிகையில் அந்தப்பதிலை வெளியிடாமலே இருந்து விட்டார்கள். அமைச்சரின் பதில் வருமாறு :-

"The State Government has accorded administrative sanction for Rs. 376 crores to develop a mofussil bus terminus at Vandalur to decongest the CMBT at Koyambedu. Talks will be held with the land owners to acquire land, State Minister for Housing and Urban Development Minister R. Vaithilingam said on Tuesday. Replying to the discussion on demand for grants for the department in the Assembly, the Minister said a bus terminus near Vandalur-Walajabad road near the Vandalur railway station was announced by Chief Minister J. Jayalalithaa. But the process of land acquisition was being dalayed as the Centre's new land acquisition bill was awaiting Parliament approval".

(கோயம்பேட்டில் உள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, வண்டலூர் ரயில் நிலையம் அருகே 376 கோடி ரூபாய் மதிப்பில் புறநகர் பேருந்து நிலையம் ஒன்றினை அமைக்க மாநில அரசு நிர்வாக ஒப்புதலை வழங்கியுள்ளதாகவும்; நிலத்தை அரசு வசம் எடுத்துக்கொள்வது சம்பந்தமாக நில உரிமையாளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாகவும் செவ்வாய்க்கிழமை அன்று அமைச்சர் வைத்தியலிங்கம் பேரவையில் தெரிவித்தார். பேரவையில் மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளித்த அமைச்சர், ஏற்கனவே முதலமைச்சர் ஜெயலலிதா வண்டலூர் ரயில் நிலையம் அருகில் புறநகர் பேருந்து நிலையம் அமைக்கப்போவதாக அறிவித்தார் என்றும், மத்திய அரசின் நிலம் கையகப்படுத்துவதற்கான புதிய மசோதா நாடாளுமன்ற ஒப்புதலுக்காகக் காத்திருப்பதுதான் வண்டலூரில் புறநகர் பேருந்து நிலையம் அமைக்கத் தாமதம் ஆகக் காரணம் என்றும் அமைச்சர் பேரவையிலே தெரிவித்தார்.) மேலும், அந்தப் பகுதியிலே அமைந்துள்ள நிலங்களை ஒருங்கிணைத்து ஒரு விரிவான திட்டம் தீட்டி அதிலே பேருந்து முனையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பேரவையிலே அமைச்சர் வைத்தியலிங்கம் கூறியிருக்கிறார்.

இவ்வாறு அமைச்சர் பேரவையில் பதில் அளித்ததாக "எக்ஸ்பிரஸ்" ஆங்கில இதழில் செய்திவந்துள்ளது. இதன் மூலம் அமைச்சர் வைத்தியலிங்கம், முதலமைச்சர் ஜெயலலிதா நில எடுப்பிலே உள்ள பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் கருத்திலே

கொள்ளாமல் 2013ஆம் ஆண்டு இந்த அறிவிப்பினைச் செய்ததாகத் தற்போது கூறுகிறாரா? ஏனென்றால் அறிவிப்பைத் தான் செய்யவில்லை என்பதைப் போலவும் முதலமைச்சர் ஜெயலலிதா தான் அறிவித்ததாகவும் பேரவையில் பேசியதோடு மத்திய அரசின் புதிய நிலம் கையகப்படுத்தும் சட்டம் நிலுவையில் இருப்பதுதான், இந்தப் புறநகர் பேருந்து நிலையம் வர முடியாததற்குக் காரணம் என்றும் கூறுகிறார் என்றால், "ஏதோ காதிலே பூ சுற்றும் வேலை" என்பார்களே, அந்த வேலையிலேதான் அமைச்சர் ஈடுபட்டிருக்கிறாரோ? ஜெயலலிதா அறிவித்தது 2013ஆம் ஆண்டு. நாடாளுமன்றத்தில் நிலம் கையகப்படுத்தும் சட்டம் தாமதமாவது 2014-2015. இந்தச் சட்டம்தான் பேருந்து நிலையம் அமையத் தாமதம் ஏற்பட்டதற்கான காரணம் என்கிறார் அமைச்சர் என்றால், "பொய் சொன்னாலும், பொருத்தமா சொல்லுங்கடா, போக்கத்த பசங்களா" என்ற உடுமலை நாராயணக் கவிராயரின் வார்த்தைகள்தான் ஞாபகத்திற்கு வருகின்றன.

நில உரிமையாளர்களிடம் எல்லாம் நேரடியாக இனிமேல்தான் பேசப் போகிறார்களாம்! அமைச்சர் கூறுகிறார்! அப்படியானால் இந்த இரண்டு ஆண்டுகளாக என்ன செய்து கொண்டிருந்தார்கள்? வண்டலூரில் புறநகர் பேருந்து நிலையம் அமைக்கப்போவதாக ஜெயலலிதா பேரவையில் 110வது விதியின்கீழ் 2013ஆம் ஆண்டு அறிவித்துவிட்டு, இரண்டாண்டுகளுக்குப் பிறகு தற்போது அந்தத் திட்டத்திற்கான நிர்வாக ஒப்புதலே வழங்கியிருக்கிறார்கள் என்றால் எப்படிப்பட்ட பொய்யான அறிவிப்பினைப் பேரவையிலே செய்திருக்கிறார்? இந்தத் திட்டம் அறிவிக்கப்படுவதற்கு முன்பாகவே எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோதே, அந்தப் பகுதியில் நிலம் இனிமேலும் கையகப்படுத்தப்பட மாட்டாது என்று அறிவித்திருக்கிறார் அல்லவா? அந்த நிலையில் எதை அடிப்படையாக வைத்து வண்டலூரில் புறநகர் பேருந்து நிலையம் 376 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்போவதாகப் பேரவையில் அறிவித்தீர்கள்?

இப்படிப் பொய்யான அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் வைத்தியலிங்கம் நேற்று பேரவையில் பேசும்போது, "பொய் சொல்லியே அரசியல் பிழைப்பு நடத்தும் கருணாநிதியை நம்ப மக்கள் தயாராக இல்லை" என்று பேசியிருக்கிறார். பொய் சொல்லியே அரசியல் பிழைப்பு

நடத்துவோர் யார் என்ற உண்மை இப்போது தெளிவாகிறதா அல்லவா? அமைச்சர் பேரவையில் இது மட்டுமா பேசியிருக்கிறார்? மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதில் சொல்ல வந்த அமைச்சர், டாக்டர் ராமதாஸ் பற்றியும், அன்புமணி ராமதாஸ் பற்றியும் எந்த அளவுக்குக் கடுமையாக விமர்சிக்க முடியுமோ அந்த அளவுக்கு விமர்சனம் செய்திருக்கிறார். எதிர்க்கட்சித் தலைவர் விஜயகாந்த் பற்றியோ கேட்கவே வேண்டாம்! "மது விலக்குப் பிரச்சினையில் விஜயகாந்த் தள்ளாடுகிறார். குடித்தே ஒழிக்கக் கூடியவர் விஜயகாந்த்" என்றெல்லாம் அமைச்சர் தனது பதிலுரையில் பேரவையிலே நாகரிகமின்றித் தெரிவித்திருக்கிறார் என்றால் நடைபெறுவது சட்டமன்றம்தானா என்ற கேள்வி எழுகிறதா அல்லவா?

வண்டலூரைப் போலவேதான், 8-9-2011 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா 110வது விதியின்கீழ்ப் படித்த அறிக்கையில் 2,160 கோடி ரூபாய் செலவில் திருமழிசையில் துணைக்கோள் நகரம் அமைக்கப்படும் என்று அறிவித்தார். அறிவித்து நான்காண்டுகள் முடியப்போகிறதே, எங்கே துணைக்கோள் நகரம் என்று கேட்டிருந்தேன். அதற்கும் அமைச்சர் பேரவையில் பதில் கூறியிருக்கிறார். துணைக்கோள் நகரத்தை எங்கே அமைத்திருக்கிறார் என்று தெரிவித்துப் பதில் கூறியிருக்கிறாரா என்றால் கிடையாது. மாறாக, "Action is being taken to form a new satellite township with 12000 residential flats at an estimated cost of Rs. 2,160 crores over an extent of 311.05 acres at Thirumazhisai" அதாவது, 2,160 கோடி ரூபாய்ச் செலவில் திருமழிசையில் துணைக்கோள் நகரம் அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதாம்.

இதுபோலவே மதுரை விமான நிலையத்திற்கு அருகே துணைக்கோள் நகரம் ஒன்று 120 கோடி ரூபாய் மதிப்பில் உருவாக்கப் போவதாக ஜெயலலிதா 4-4-2013 அன்று 110வது விதியின்கீழ்ப் பேரவையில் படித்தார். அதுவாவது முடிந்துவிட்டதா என்று கேட்டிருந்தேன். அமைச்சர் வைத்தியலிங்கம் நேற்று பேரவையில் அளித்த பதில், "The preparation of concept and theme based layout for a Satellite township at Thoppur-Uchapatti in Madurai was under way" - அதாவது அந்தத் திட்டம் தொடக்கக் கட்டத்திலே இருக்கிறதாம். 120 கோடி ரூபாயில் எத்தனை கோடி

ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது? அமைச்சர் ஏன் பேரவையிலே அதைத் தெரிவிக்கவில்லை? தெரிவிக்க முடியாது; ஏன் என்றால் செலவழித்தது, வெறும் 7 இலட்சம் ரூபாய்தான்!

உடன்பிறப்பே, நான்காண்டுகளுக்கு முன்பும், மூன்றாண்டுகளுக்கு முன்பும் 110வது விதியின்கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் கதியே இதுவென்றால், தற்போது முதலமைச்சர் ஜெயலலிதா அன்றாடம் பேரவைக்கு 110வது விதியின்கீழ் அறிக்கை படிப்பதற்காக மட்டுமே வருகைதந்து, படித்துவிட்டுப் போய் விடுகிறாரே, இந்த அறிவிப்புகளுக்கு ஏதாவது பொருள் இருக்குமென்று கருத முடியுமா? அதிலும் முக்கியமான திட்டம் என்னவென்றால், "அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம்" தொடங்கப்படும் என்பதுதான். அதுவும் ஏதாவது புதிய திட்டமா என்றால் கிடையாது. ஏற்கனவே மருத்துவமனைகளில் நடைபெற்று வரும் திட்டம்தான். அதாவது ரத்த பரிசோதனை, ரத்தக் கொழுப்புப் பரிசோதனை, இதயப் பரிசோதனை போன்றவைகளை மருத்துவமனைகளிலே செய்து கொள்ளும் திட்டம். இதைத்தான் ஏதோ புதிய கண்டுபிடிப்பைப் போல அறிவித்திருக்கிறார்கள். ஆனால் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் முழு உடல் பரிசோதனைத் திட்டத்தைத் தொடங்கிட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியி லேயே 11-6-1999 அன்று ஆணையிடப்பட்டுள்ளது. முதல் அமைச்சருக்குச் சந்தேகம் இருந்தால், தலைமைச் செயலகத்தில் உள்ள பழைய அரசாணையை வாங்கிப் படித்துத் தெரிந்து கொள்ளலாம்.

அதிலும் அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம் ஆண்களுக்கான திட்டமாம்! "அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனைத் திட்டம்" என்பது மகளிருக்கான திட்டமாம். இப்படி ஒரு அறிவிப்பு. இதையே கிராமத்தில் செய்துகொண்டால், அதற்கு "அம்மா ஆரோக்கியத் திட்டம்" என்று பெயராம்! இன்னும் சொல்லப்போனால் கிராமப் பகுதி மற்றும் நகரப் பகுதிகளில் நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை அளிக்க ஏதுவாக "வருமுன் காப்போம் திட்டம்" என்ற பெயரிலே தி.மு. கழக ஆட்சியிலேயே 1997ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுவிட்டது.

பின்னர் வந்த அ.தி.மு.க. ஆட்சியில் கைவிடப்பட்ட இந்தத் திட்டம் 30-12-2006 அன்று மீண்டும் கழக ஆட்சியில் தொடங்கப்பட்டு, 28-2-2011 வரை தமிழகம் முழுவதிலும் 19 ஆயிரத்து 272 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 1 கோடியே 81 லட்சத்து 66 ஆயிரம் பேர் பயன் அடைந்துள்ளனர். ஆனால் இப்போதுதான் முதல் முறையாக இப்படியொரு திட்டத்தை அறிவிப்பதைப் போலச் செய்கிறார்கள் என்றால், இந்தத் துறையினர் தமிழக மக்கள் ஏதுமறியாத அப்பாவிகள் என நினைத்து ஏமாற்றுகிறார்களா? அல்லது முதலமைச்சர் ஜெயலலிதாவைப் புகழ்வதைப் போலக் காட்டிக்கொள்வதற்காக ஏதாவது புதிய திட்டத்தைத் தயாரித்துக் கொடுக்க வேண்டுமென்ற கட்டாயத்திற்காக இப்படியெல்லாம் பெயர்களைச் சூட்டி வேடிக்கை காட்டுகிறார்களா என்பதை வாக்களித்த மக்கள்தான் புரிந்துகொள்ள வேண்டும்.

அதைவிட முதலமைச்சரிடம் எப்படிப்பட்ட தவறான அறிக்கைகளையெல்லாம் எழுதிக் கொடுத்துப் போரவையிலே அறிவிக்கச் செய்கிறார்கள் என்பதை ஜெயலலிதா புரிந்துகொள்வது நல்லது. இத்தகைய அறிவிப்புகளை அப்படியே வரிக்கு வரி வெளியிடப் பத்திரிகைகளும், வானளாவப் புகழ சில அரசியல்வாதி களும் இருக்கின்றவரை, ஏமாறுகிறவர்கள் இருக்கின்றவரை ஏமாற்றுவோர் இருக்கத்தானே செய்வார்கள்! ஏமாறுகிறவர்கள் திருந்துவது எப்போது? ஏமாற்றுவோரின் பிடியிலிருந்து தமிழகம் மீளுவதுதான் எப்போது?

அன்புள்ள,

மு.க.

30-8-2015

3977. சூழ்ச்சிக்கு இரையாகாமல் சுயமரியாதைப் பயணம் தொடர்வோம்!

உடன்பிறப்பே,

23-10-2012 அன்று "முரசொலி"யில் ஓர் உடன்பிறப்பு மடல் தீட்டியிருந்தேன். "நீர் இடித்து நீர் விலகுவதா?" என்ற தலைப்பில் வந்த அந்தக் கடிதத்தை மீண்டும் ஒரு முறை நானே நேற்று முழுவதும் படித்தேன். ஏனென்றால் அதைப் படிக்க வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டது.

மதியம் உணவருந்த உட்கார்ந்தேன். கழகத்தின் முதன்மைச் செயலாளர், தம்பி துரைமுருகன் சட்டப் பேரவைப் பணிகளை முடித்து விட்டு என்னைச் சந்திக்க வந்தார். முகம் சரியாக இல்லை. சாப்பிட்டுக் கொண்டே விசாரித்தேன். "டைம்ஸ் ஆப் இந்தியா" ஆங்கில நாளேடு முதல் பக்கத்தில் டி.கே.எஸ். இளங்கோவன் அளித்த பேட்டி பற்றி செய்தி வெளியிட்டது. அதைப்பற்றி பத்திரிகையாளர்கள் கேள்வி கேட்கக் காத்திருக்கிறார்கள். தலைமைச் செயலகத்தில் சட்டப்பேரவையில் உள்ள கழகப் பொருளாளர், தம்பி மு.க. ஸ்டாலினிடம் செய்தியாளர்கள் அது பற்றிக் கேட்டதால், அவர் தான் என்னைத் தலைவரிடம் கலந்தாலோசிக்குமாறு அனுப்பி வைத்தார்" என்றார். உடனடியாக நான் கழக அமைப்புச் செயலாளர் தம்பி ஆர்.எஸ். பாரதியை அழைத்து, தலைமைக் கழகத்தின் சார்பில் ஓர் அறிக்கை வெளியிடச் சொல்லிவிட்டு, படுக்கையில் படுத்தேன். தூக்கம் வரவில்லை. மாலையில் ஒரு திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்காகச் செல்ல உத்தேசித்தபடி அங்கும் செல்லவில்லை. ஏன் மனம் சரியில்லை? அதற்கு என்ன காரணம்? அந்த நிலையில்தான் 2012ஆம் ஆண்டு நான் எழுதிய அந்தக் கடிதத்தை மீண்டும் எடுத்துப் படிக்க நேரிட்டது. அந்தக் கடிதத்திலே உள்ள சில பகுதிகள் வருமாறு:

> "நான் அடிக்கடி ஒன்றைச் சொல்லியிருக்கிறேன்; தந்தை பெரியார் அவர்கள் வலியுறுத்திச் சொல்வார் என்று குறிப்பிட்டே அதைச் சொல்லியிருக்கிறேன். அதுதான்

கழகத்தின் தாரக மந்திரங்களான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றுள் "கட்டுப்பாடு"தான் முக்கியம்! அதைத்தான் விழுப்புரம் முப்பெரும் விழாவில் நமது இனமானப் பேராசிரியர் நினைவூட்டி விரிவாக உரையாற்றினார். திராவிட முன்னேற்றக் கழகம் பல முறை தேர்தலில் தோற்றிருக்கலாம். பல முறை வெற்றி பெற்றிருக்கலாம். வெற்றி, தோல்வி பற்றி நாம் எந்தக் காலத்திலும் முறையே வெறியாட்டம் போட்டதோ, வீழ்ந்து பட்டதாக நினைத்ததோ இல்லை. ஆனால் கட்டுப்பாடு குலைந்தாலோ, சேதாரம் ஏற்பட்டாலோ பிறகு கழகத்தைக் காப்பாற்ற முடியாது! நானும், பேராசிரியரும் இருவருமே மாணவர்களாக இருந்த காலந்தொட்டு, இப்போது வரை ஓய்வின்றி உழைத்துக் கொண்டுதான் இருக்கிறோம். நாங்கள் ஓய்வெடுத்துக் கொண்டு கழக அலுவலகத்திற்கு வராமல் இருந்தால் எங்களைக் கேட்பவர்கள் யாரும் இல்லை. இருந்தாலும் கழக அலுவலகத்திற்கு வந்து கொண்டுதான் இருக்கிறோம். கழகம் தற்போது ஆளுங்கட்சி அல்ல. தமிழகத்தில் 2011ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், நாம் எதிர்க்கட்சியாகக் கூட வர முடியாத அளவிற்கு தோல்வியைக் கண்டு விட்டோம். நான் அதற்காக துவண்டா போய் விட்டேன்? கழகப் பணி ஆற்றாமல் இருந்து விட்டேனா? இந்த வயதிலும் எதற்காக அன்றாடம் எழுதுகிறேன்? காலையில் சாப்பிடுகிறேனோ, இல்லையோ, எத்தனை நாளிதழ்களைப் படிக்கின்றேன்? அத்தனை பத்திரிகைகளையும் உன்னால் வாங்கிப் படித்திட இயலாது என்பதால், அந்த இதழ்களையெல்லாம் படித்து விட்டு, அதிலே நீ தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகளையெல்லாம் - நீ மக்களுக்கு விளக்கி எடுத்துரைத்திட வேண்டியவற்றை யெல்லாம் தேடிப்பிடித்து, ஆளுகின்ற அரசைப் பற்றி எப்படிப்பட்ட செய்திகள், விமர்சனங்கள் எல்லாம் வருகின்றன, உச்ச நீதிமன்றத்தில், உயர் நீதிமன்றத்தில் இந்த ஆட்சியினரைப் பற்றி எப்படிப்பட்ட கருத்துக்கள், கண்டனங்கள் எல்லாம் வெளிவருகின்றன என்பதை யெல்லாம் தொகுத்து இடுப்பு ஓடிய ஓடிய சலிப்பின்றித் தெரிவிக்கிறேன்.

ஆனால் அந்த என்னுடைய கருத்துக்களை தமிழகத்திலே உள்ள நாளேடுகள் வேண்டா வெறுப்பாக, ஏதோ நாங்களும் வெளியிட்டோம் என்கிற அளவிற்கு, நடுநிலை நாளேடு என்று காட்டிக் கொள்வதற்காக இரண்டு பத்தி, மூன்று பத்தி என்று வெளியிடுகிறார்கள். முழுமையாக வெளியிட்டு, அந்தக் கருத்துக்கள் பரவினால், கழகத்தின் செல்வாக்கு கூடுதலாகி விடுமோ என்று ஆட்சியாளர்களைவிட, நமது இதழாளர்களுக்கு அக்கறையும், ஆர்வமும் அதிகமாக உள்ளது. ஆனால் அதே நேரத்தில் கழகத்திற்கு எதிர்ப்பான செய்திகள் என்றால் அதற்கு எவ்வளவோ முக்கியத்துவம் கொடுத்து, ஒரு வரி விடாமல் வெளியிட்டு, ஆட்சியாளர்களுக்கு அரவணைப்பு காட்டிட, அரசியல் ரீதியாக உதவிட முன் வருகிறார்கள். என்ன காரணம்? நம்மீது உள்ள வெறுப்பு என்பதை விட; ஆட்சியாளர்களைக் காப்பாற்றிட வேண்டுமென்பதிலே உள்ள முனைப்பு தான் காரணம்”

2012இல் நான் கூறியிருந்த நிலைதான் தற்போதும் நீடிக்கிறது. நமக்கு எதிராக “துரும்பு” போன்ற செய்தி கிடைத்தாலும், அதை “தூண்” போல் பெரிதாக ஆக்கி நாளேடுகளில் செய்தி வெளியிடுகிறார்கள். தலைமைக் கழகத்திலே செய்தித் தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன். “தத்துவ மேதை” என்று எங்களால் பாராட்டப்பட்ட தஞ்சை டி.கே. சீனிவாசன் அவர்களின் அருமைச் செல்வன். நல்ல படிப்பாளி. ஆனால் பத்திரிகைச் செய்தி, பேட்டி என்றால் அவருக்கு ஒரு ஈடுபாடு. அதனால்தான் அவரது விருப்பம் போலவே, கடந்த முறை அமைப்புச் செயலாளராக இருந்தவரை, தலைமைக் கழகச் செய்தித் தொடர்புச் செயலாளர் என்ற பதவியிலே நியமித்தோம். ஆனால் எல்லாவற்றுக்கும் ஒரு வரம்பு உண்டு அல்லவா? அதை மீறக் கூடாது அல்லவா? செய்தியை வெளியிட்ட அந்த “டைம்ஸ் ஆப் இந்தியா” பத்திரிகைக்கே, அவர் வரம்பு மீறியிருக்கிறார் என்பது தெரிந்ததால்தானே, முதல் பக்கத்திலும், எட்டாவது பக்கத்திலும் அவரது பேட்டியை மிகப் பெரிதாக வெளியிட்டுள்ளது. தலைமைக் கழகத்தினால் செயற்குழுவையோ, பொதுக்குழுவையோ கூட்டி, அதிலே கலந்துரையாடி அதன் பின்னர் வெளியிடப்பட வேண்டிய செய்திகளையெல்லாம், அந்தப் பேட்டியிலே சர்வ சாதாரணமாக டி.கே.எஸ். இளங்கோவன் கூறியோ, கூறாமலோ, அந்த ஆங்கில நாளேடு அதனைப் பெரிதாக வெளியிட்டுள்ளது. அது போதாதா

நம்முடைய ஊடகங்களுக்கு! கழக முன்னணியினரை எல்லாம் சூழ்ந்து கொண்டு விட்டார்கள். தொலைக்காட்சியிலே அவரது பேட்டி! 'மாலை மலர்' இதழிலே அவருடைய பேட்டி! அந்தப் பேட்டி தவறானது, தலைமைக் கழகத்திற்குச் சம்பந்தம் இல்லாதது என்று நாம் நேற்று மதியமே அறிக்கை விடுத்த பிறகும், இன்று காலையில் வெளிவந்த "தினமலர்" நாளிதழின் முதல் பக்கக் கொட்டை எழுத்து செய்தி என்ன தெரியுமா? "கூட்டணி பேர விவகாரத்தில் தி.மு.க.வில் மோதல் வெடித்தது! ஸ்டாலின் ஆதரவாளர் பேட்டியால் கருணாநிதி கோபம்" என்ற தலைப்பில் இளங்கோவனின் புகைப்படத்தையும் வெளியிட்டு செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். உண்மையில் சொல்லப்போனால், டிகே. எஸ். இளங்கோவனின் பேட்டியை என் கவனத்திற்குக் கொண்டு வந்ததே, தம்பி ஸ்டாலின்தான். ஆனால் "தினமலர்", "ஸ்டாலின் ஆதரவாளர் பேட்டியால் கருணாநிதி கோபம்" என்று தலைப்பிட்டு செய்தி வெளியிடுகிறது என்றால், எந்த அளவுக்கு அவர்களுக்கு நம்மீது காழ்ப்புணர்வு இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது அல்லவா? அது போலவேதான், "கருத்துக் கணிப்பு" என்ற பெயரிலே யாரோ சிலர் வெளியிடுகிறார்கள். அதனால் எந்தப் பயனும் விளைவதில்லை. அதை நான் நம்புவதுமில்லை. உண்மையில் அவர்களே மோதலை விலை கொடுத்து வாங்குவதைப் போல வெளியிடுகிறார்கள். உதாரணமாக கருத்துக் கணிப்பு எடுத்தவர்கள், முதலமைச்சர் பதவி தி.மு.க. வுக்குக் கிடைக்குமா? அ.தி.மு.க.வுக்குக் கிடைக்குமா? தே.மு.தி.க.வுக்குக் கிடைக்குமா? என்று கணக்கெடுத்து அறிவிப்பதுதான் முறை. யார் முதல்வர் என்று, அ.தி.மு.க.விலே ஜெயலலிதா பெயரை வெளியிட்டு விட்டு, தி.மு.க. என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக, கருணாநிதிக்கு எத்தனை பேர் ஆதரவு? ஸ்டாலினுக்கு எத்தனை பேர் ஆதரவு? என்று அவர்களே ஒரே கட்சியிலே இரண்டு பெயரைக் குறிப்பிட்டு, எதற்காக பிரச்சினையை உண்டாக்குகின்ற வகையில் கருத்துக் கணிப்பை வெளியிட்டிருக்கிறார்கள்? அ.தி.மு.க. விலே ஜெயலலிதாவுக்கு எவ்வளவு பேர் ஆதரவு? ஓ. பன்னீர் செல்வத்திற்கு எத்தனை பேர் ஆதரவு? என்றா கேட்டிருக்கிறார்கள்? தி.மு.கழகத்தில் மட்டும் இரண்டு பேரைக் குறிப்பிட்டு எதற்காகக் கணக்கெடுக்க வேண்டும்? கழகத்தில் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதுதான் கருத்துக் கணிப்பு எடுத்து வெளியிட்டவர்களின் நோக்கமா? அதுவும் தேர்தல் நெருங்குவதற்கு முன்பாகவே இப்படிப்பட்ட குழப்பத்தை ஏற்படுத்த எதற்காக முனைகிறார்கள்? திராவிட

முன்னேற்றக் கழகத்திலே யார் முதலமைச்சர் என்று நாங்களே கவலைப்படாத போது, கருத்துக் கணிப்பு எடுக்கின்றவர்களுக்கு ஏன் அக்கறை? தம்பி ஸ்டாலினே பல முறை, கழகத் தலைவர் கலைஞர் அவர்கள்தான் ஆறாவது முறையும் முதலமைச்சராக வருவார் என்று பல முறை சொன்ன பிறகும் வம்பு வளர்ப்பதில் அவர்களுக்கு என்ன அக்கறை? அதனால் ஸ்டாலினுக்குத்தான் எப்படிப்பட்ட தர்மசங்கடம்? அவர் கழகமே என் மூச்சு என்று அல்லும் பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கிறார். அவரை ஏன் இப்படியெல்லாம் வேதனைப்படுத்துகிறார்கள்?

அதிலும் சில பத்திரிகையாளர்கள் மேலும் மிகுந்த அக்கறையோடு, கழகத்திலிருந்து நீக்கி வைக்கப்பட்டுள்ள, என் மகன் மு.க. அழகிரி சென்னை வருகிற விமானம் எப்போது வருகிறது என்று தெரிந்து கொண்டு, விமான நிலையத்திற்கே சென்று இந்தக் கருத்துக் கணிப்பு பற்றி கேள்வி கேட்கிறார்கள் என்றால், அவர்களுக்கு ஏன் இந்தத் திடீர் அக்கறை? அந்தப் பேட்டிக்கு தனி முக்கியத்துவம் கொடுத்து சில ஏடுகள் வெளியிடுகின்றன என்றால், அவர் மீது உள்ள அக்கறை காரணமாகவா? அவரும் தன் தம்பி மீதுள்ள கோபத்தின் காரணமாக, என்னைப் புகழ்ந்து கூற, அதனால் என்ன பயன்? எதிர்ப்பாளர்களுக்கு இடம் கொடுத்து விடுகிறது! இருவருக்கும் இடையே புகுந்து, கழகத்தில் குழப்பத்தை ஏற்படுத்த முயலுவோருக்கு இடம் கொடுத்ததாக ஆகி விடுகிறது. டி.கே.எஸ்.இளங்கோவனின் பேட்டியையும், மு.க.அழகிரியின் பேட்டியையும் “தினமலர்” நாளேடு முதல் பக்கத்தில் கொட்டை எழுத்திலே வெளியிடுகிறது என்றால், எந்த அளவுக்கு அவர்களுக்கு நம்மீது குரோதம் என்பது புரிகிறதா? அல்லவா?

ஒருமுறை திருச்சியிலே நடைபெற்ற பொதுக் கூட்டத்திலே, அறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தந்தை பெரியார் அவர்கள் பேசினார்கள். அப்போது சொன்னார், “அண்ணாத்துரை சொன்னார் என்று கருணாநிதியும், அந்தக் கட்சியிலே உள்ளவர்களும் நாம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இந்த மூன்றையும் காப்பாற்ற வேண்டும் என்று அடிக்கடி சொல்கிறார்கள். நான் கருணாநிதிக்கு மாத்திரம் அல்ல, கருணாநிதி தலைமையிலே இருக்கின்ற கட்சித் தொண்டர்களுக்கெல்லாம், கட்சித் தோழர்களுக்கெல்லாம் சொல்வேன். நீங்கள் கடமையை மறந்தாலும் மறந்து விடுங்கள், கண்ணியத்தை நீங்கள் போற்றாமல் விட்டாலும் விட்டு விடுங்கள்.

ஆனால் கட்டுப்பாடு, அதை மாத்திரம் துறந்து விடாதீர்கள் என்று நான் கட்சித் தோழர்களுக்கு - தி.மு.க. நண்பர்களுக்கு சொல்வேன்" என்று பெரியார் அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொன்னார்.

ஏனென்றால், கட்டுப்பாடு இருந்தால் எல்லோரும் சேர்ந்து கண்ணியம் தவறிக் கூட நடக்கலாம். இது பெரியாருடைய வியாக்கியானம். கடமை கூட தவறி விடலாம். கட்டுப்பாட்டோடு இருந்தால் எவனும் எதுவும் செய்ய முடியாது. பெரியார் அவ்வளவு நிர்த்தாட்சண்யமாக, மூர்த்தன்யமாக சொன்ன அந்த வார்த்தையை இன்றளவும் கடைப் பிடிக்கின்ற காரணத்தினாலே தான் நம்முடைய கழகத்தை யாரும் அசைக்க முடியவில்லை , ஆட்ட முடிய வில்லை, வானுயர ஓங்கியிருக்கின்ற ஆல மரம் போல் திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு இருக்கின்றது.

ஆனால் இதன் வளர்ச்சியைத் தடுக்க - இந்த ஆட்சியாளர்கள் எடுக்கின்ற முயற்சி போதாது என்று, அவர்களுக்கு அனுசரணையாக தமிழகத்தில் நடைபெற்று வரும் ஒருசில நாளேடுகள் எப்படியெப்படியோ முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. "பத்திரிகா தர்மம்" என்பதையே அடியோடு குழி தோண்டிப் புதைத்து விட்டு, இப்படிப்பட்ட சூழ்ச்சிகளில் ஈடுபட்டு வரும் அப்படிப்பட்ட ஏடுகளுக்கு நாமே இரையாகி விடலாமா? இப்படியெல்லாம் செய்து கழகச் செயல்வீரர்களின் கவனத்தைத் திருப்ப முயலுகிறார்கள். அத்தகைய முயற்சிகளுக்கு கழகத்தவர்கள் இரையாகக் கூடாது, இரையாக வேண்டாம் என்பதற்காகவே இந்தக் கடிதம்!

"திராவிடம்" என்ற இனப் பெயரைக் காப்பாற்றவும் - "இன உணர்வை"ப் பாதுகாக்கவும் - அதைப் பரப்பிட பாடுபட்டு வருபவர்களுமான நம்மை நாமே வறுத்திக் கொண்டாலும் பரவாயில்லை என்று இந்த ஒப்புயர்வற்ற இயக்கத்தை நடத்தி வருகிறோம். இதை வீழ்த்திட, எதிரிகள் எத்தகைய சூழ்ச்சிகளைக் கையாண்டாலும், அந்தச் சூழ்ச்சிகள் அனைத்தும், "மலையில் மோதி வீழ்கிற சிற்றலைகள்" என்று கருதி நாம் நம்முடைய சுயமரியாதைப் பயணத்தை தொடர்ந்து கொண்டிருக்கிறோம்; மேலும் தொடர்வோம்!

அன்புள்ள,

மு.க.

05-09-2015

3978. முதலீட்டாளர்கள் மாநாடு: தேர்தலை முன்னிட்டு நடத்திய 'தகிடுதத்தம்' தானே!

உடன்பிறப்பே,

"தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிப்பது" என்று கிராமங்களில் ஒரு பழமொழி உண்டு. அதைப் போல நான்காண்டு காலமாக நன்றாகத் தூங்கிவிட்டு, தற்போது திடீரென்று தூக்கம் கலைந்து விழித்தெழுந்து, சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டைக் கூட்டி முதலீடுகளைக் குவிக்கப் போவதாக அறிவித்துக் கொண்டு, ஏதோ ஒரு நாடகத்தை நடத்தியிருக்கிறார்கள். அந்த மாநாட்டைப் பற்றி எழுதியுள்ள அனைத்து நாளேடுகளும், அந்த மாநாட்டையொட்டி அ.தி.மு.க.வினர் நடத்திய "குத்தாட்டம்" குறித்தும், நகரம் முழுவதும் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசல் மற்றும் பொதுமக்கள் முணுமுணுப்பு குறித்தும் எழுதத் தவறவில்லை. அ.தி.மு.க. ஆட்சியினர் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு இது போல முதலீட்டாளர்களையெல்லாம் அழைத்துப் பல நூறு கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் போடப்பட்டு விட்டது, பல நூறு பேருக்கு வேலைவாய்ப்பு என்றெல்லாம் ஒரு பெரிய விளம்பரம் செய்தார்கள். ஆனால் முதலீடும் வரவில்லை; வேலை வாய்ப்பும் ஏற்படவில்லை. அப்போது போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களே உருப்படியாக நிறைவேறவில்லை என்கிறபோது, அ.தி.மு.க. ஆட்சியினர் போகிற போக்கில் போடுகின்ற ஒப்பந்தங்களுக்கு ஏதாவது மதிப்பு இருக்கப் போகிறதா என்ன? அதனால் இப்போது வந்திருக்கும் தொழில் முதலீட்டாளர்கள்கூட மிகுந்த எச்சரிக்கையாகவும் கவனமாகவும் அடுத்த மூன்றாண்டுகளில் இவ்வளவு கோடி ரூபாய் முதலீடு செய்யப் போகிறோம், அடுத்து வரும் ஐந்தாண்டுகளில் இவ்வளவு கோடி ரூபாய் முதலீடு செய்யத் திட்டமிட்டிருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். தற்போது நடைபெறும் சர்வதேச முதலீட்டாளர் மாநாட்டிற்குப் பல்வேறு நாடுகளிலிருந்தும் முதலீட்டாளர்கள் வந்திருப்பதாக விளம்பரப்படுத்தியும்கூடத்

தொடக்க விழாவின்போது அன்னிய முதலீட்டாளர் எவரும் பேசியதாகத் தெரியவில்லை. தொழில் முதலீடு குறித்து அ.தி.மு.க. ஆட்சியினர் கடந்த நான்கரை ஆண்டுக்காலத்தில் என்ன செய்தார்கள், அதனால் ஏற்பட்ட விளைவுகள் என்ன என்பதைப் பற்றிச் சுருக்கமாகக் கூறுகிறேன்.

கடந்த ஆண்டு 13-2-2014 அன்று தமிழகச் சட்டப் பேரவையில், அ.தி.மு.க. அரசின் சார்பாக நிதிநிலை அறிக்கையைப் படித்த ஓ.பன்னீர்செல்வம், அந்த அறிக்கையின் பக்கம் 31இல் "நமது மாநிலத்தில் தொழில் வளத்தையும் கட்டமைப்பையும் மேலும் ஊக்குவிக்க இந்த அரசு, வரும் அக்டோபர் மாதத்தில் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டை சென்னையில் நடத்தும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன். இதற்காக இந்த வரவு செலவுத் திட்டத்தில் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது" என்று படித்தார். இது சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் படித்த அறிவிப்பு! ஆனால் அமைச்சர் பேரவையில் படித்தபடி அக்டோபர் மாதத்தில் முதலீட்டாளர் மாநாடு நடைபெற்றதா என்றால் அதுதான் இல்லவே இல்லை. நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்ட அறிவிப்புக்கே இந்தக் கதி!

இது பற்றிக் கேட்டால், 2012ஆம் ஆண்டிலேயே ஒரு முறை ஒரே நாளில் 12 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடுவதாகவும், அதன் மூலம் 36,855 பேருக்கு வேலை கிடைக்குமென்றும், 20 ஆயிரத்து 925 கோடி ரூபாய் முதலீட்டில் தொழிற்சாலைகள் தொடங்குமென்றும் பூதாகாரமாக அறிவிப்பு செய்தார்களே, மீண்டும் ஒருமுறை 5,081 கோடி ரூபாய்க்கு 16 நிறுவனங்களுடன் ஒப்பந்தம் கையெழுத்தானது என்று அறிவித்தார்களே; அந்த அறிவிப்புகள் எல்லாம் என்ன ஆயிற்று? காற்றோடு கலந்துவிட்டன. குறிப்பிட்டபடி 12 நிறுவனங்களும் தொழிற்சாலைகளைத் தொடங்கினவா? உறுதியளிக்கப்பட்ட முதலீடு வந்ததா? அதற்குப் பிறகு, ஏற்கனவே செய்த அறிவிப்புகளை யெல்லாம் மறந்து 26,625 கோடி ரூபாய் அளவிற்கு மொத்த முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு, அதன் தொடர்ச்சியாக 10,660 கோடி ரூபாய் அளவிலான முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும்,

இதனால் 10,022 பேருக்குக் கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்றும் புதிதாகத் தெரிவித்தார்கள்.

அதன் பிறகு, 2015ஆம் ஆண்டு மே மாதத்தில் முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறும் என்று பன்னீர்செல்வம் அறிவித்தார். அதுவாவது நடைபெற்றதா என்றால் இல்லை. முதலமைச்சர் ஜெயலலிதா கோவையில் பேசும்போது, அவருடைய மூன்றாண்டு கால ஆட்சியில் 33 இந்திய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுடன் 31,706 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருப்பதாகத் தெரிவித்திருந்தார். புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பல நிறுவனங்களுடன் போடலாம்; உண்மையில் தொழில்கள் தொடங்கப்பட்டால்தானே மாநிலத்துக்குப் பலன் ஏற்படும்! உண்மை நிலை என்ன? அதுபற்றி நான் அல்ல, பொதுவான வார இதழான "ஆனந்த விகடன்" என்ன எழுதியது தெரியுமா?

> "தமிழ்நாட்டில் செயல்படும் "ஹூண்டாய்" கார் தொழிற்சாலையின் விரிவாக்கம் ராஜஸ்தான், குஜராத் மாநிலங்களில் அமையலாம் என்று கூறப்படுகிறது. "இசுஸு" நிறுவனம் ஆந்திராவுக்குச் சென்று விட்டது. சென்னையில் செயல்படும் "செயின்ட் கோபைன்" கண்ணாடி தயாரிக்கும் நிறுவனத்தின் 1000 கோடி ரூபாய் மதிப்பிலான விரிவாக்க ஆலை, ராஜஸ்தானுக்குச் சென்று விட்டது. தமிழ்நாட்டின் ராம்கோ சிமெண்ட் நிறுவனமே, ஆண்டுக்கு 2.5 மில்லியன் டன் சிமெண்ட் உற்பத்தி செய்யும் தனது தொழிற்சாலையை ஆந்திராவில் அமைக்க அனுமதி பெற்றிருக்கிறது. இவற்றைத் தமிழ்நாட்டில் தக்கவைக்கும் முனைப்புகளில்கூட கவனம் செலுத்தவில்லை தொழில் துறை அமைச்சகம். கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகள் சுமார் 50 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்குக் குறைந்திருக்கின்றன என்கின்றன புள்ளி விவரங்கள்! தொழில் துறையில் பல தங்கு தடைகள் நிலவுவதால், பன்னாட்டு - உள்நாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்யத் தயங்குகின்றன. அந்த முதலீட்டாளர்களைத் தமிழ்நாடு நோக்கி ஈர்க்க ஒரு மாநாடு நடத்தக்கூடத் திறமை இல்லாமல்,

துவண்டு கிடக்கிறது தொழில்துறை அமைச்சகம். தொழில்துறை அமைச்சரைத் தொழிலதிபர்களால் சந்திக்கக்கூட முடிவதில்லை. மின்வெட்டு, நிர்வாகச் சிக்கல்கள், அதிகரிக்கும் செலவினங்கள் என, தொழில் முதலீட்டுக்குச் சாதகமான சூழல் தமிழ்நாட்டில் இல்லை என்பதால், பல பன்னாட்டு நிறுவனங்கள் தங்களது தொழிற்சாலைகளை வேறு மாநிலங்களுக்கு மாற்றும் முனைப்பில் இருக்கின்றன"

- என்று "ஆனந்த விகடன்" இதழ் ஜெயலலிதா அரசின் தொழில் துறைக்குச் சான்றிதழ் அளித்திருக்கிறது.

தமிழகத்தில் நடந்து வந்த "ஃபாக்ஸ்கான்" தொழிற்சாலை, மராட்டிய மாநிலத்திற்குச் செல்ல அங்கே 32 ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் போட்டிருக்கின்றது. ஏற்கனவே தமிழகத்தில் நடைபெற்று வந்த தொழில்களாவது தக்கவைக்கப்பட்டனவா? தமிழகத்தில் ஏற்கனவே செயல்பட்டு வந்த தூத்துக்குடி "ஸ்பிக்" நிறுவனமும், "மெட்ராஸ் பெர்டிலைசர்ஸ்" நிறுவனமும் மூடப்படும் நிலையில் இருக்கின்றன. "தமிழ்நாடு பெட்ரோ-ப்ராடக்ட்ஸ்" நிறுவனம், "திருச்சி டிஸ்டிலரீஸ்" நிறுவனம், "தூத்துக்குடி அல்கலின் கெமிகல்ஸ் நிறுவனம்" ஆகியவை ஏற்கனவே மூடப்பட்டு விட்டன. பல்லாயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் மூன்றாண்டுகளுக்கு முன்பே பணிகள் தொடங்கப்பட்ட கடலூர், "நாகார்ஜுனா பெட்ரோ கெமிகல்" தொழில் வளாகம் எப்போது உற்பத்தி தொடங்கும் என்றே தெரியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. பஞ்சாலைத் தொழில் பல பிரச்சினைகளினால் நலிந்து வருகிறது. பட்டாசு தயாரிக்கும் தொழில் மறைமுக ஆக்கிரமிப்பினால் நசுங்கிக் கொண்டிருக்கிறது. கைத்தறி - விசைத்தறித் தொழில் சுருங்கிச் சுருண்டு கொண்டிருக்கிறது. பொய் நெல்லைக் குத்திப் பொங்க நினைத்து, கை நெல்லை விட்ட கதைதான், தமிழகத்தில் நடந்து கொண்டிருக்கிறது!

மே மாதம் நடக்கவிருந்த இந்த மாநாட்டையொட்டி 13-2-2015 அன்று சென்னையில் நடைபெற்ற முன்னோட்ட மாநாட்டில் 18 ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஏழு நிறுவனங்களோடு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று மிகப் பெரிய விளம்பரம் செய்தார்களே தவிர அங்கே அந்த நிகழ்ச்சியே அந்த முன்னோட்ட மாநாட்டில் நடைபெறவில்லை என்பது வெட்கக்கேடு அல்லவா?

தமிழக அரசின் தொழில் அமைச்சர் "குறைந்த விலைக்கு நிலம் தருகிறோம், வரிச்சலுகையும் தருகிறோம் என்று சொல்லி, ஆந்திர மாநிலத்திற்கு அழைக்கிறார்கள். அது போல ஆந்திர முதல்வர் இந்தவழியாகச் சென்னைக்கு வந்து செல்லும் போதெல்லாம் நம் தொழிலதிபர்களை அழைத்துக் குறைந்த விலைக்கு நிலம் தருகிறோம் என்று பேசுவார்" என்று வெளிப்படையாகவே கூறினார். அதிலிருந்தே தமிழகத்தின் நிலைமை என்ன என்று அப்போதே தெரிந்துவிட்டது. இவர்கள் ஆளுகின்ற ஒரு மாநிலத்திற்கு வேறொரு மாநில முதல் அமைச்சர் வந்து கூட்டம் போட்டுத் தொழில் முதலீட்டாளர்களுக்கு நேரடியாகவே அழைப்பு விடுக்கிறார்கள் என்றால், அதற்காக இந்த ஆட்சியினர் வெட்கப் படத்தான் வேண்டும்.

கர்நாடக முதலமைச்சர் கோவையில் கூட்டம் போட்டு, தமிழகத் தொழில் முதலீட்டாளர்களை அழைக்கிறார் என்று நான் கற்பனையாகச் சொல்லிவிடவில்லை. "தினமலர்" நாளேடு தி.மு. கழக இதழ் அல்ல! தி.மு.க.வைக் கடுமையாக விமர்சிக்கின்ற ஏடுதான். அந்த இதழில் ஜனவரி 22ஆம் தேதி ஒரு செய்தி வந்தது. அதன் தலைப்பே, "தள்ளிவிடும் தமிழகம்; கவர்ந்திழுக்கும் கர்நாடகம் - கை நழுவிய 12 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு" என்பதாகும்.

இந்த நிலையில் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த நிறுவனங்கள் அதிக அளவில் தமிழகத்தில் முதலீடு செய்வது குறித்து, அந்நாட்டு வர்த்தகத் துறை அமைச்சருடனும், அதைப்போலத் தமிழகத்தில் மேலும் முதலீடு செய்வது குறித்து அமெரிக்காவின் தெற்கு கரோலினா மாகாணத்தின் கவர்னருடனும் பன்னீர்செல்வம் பேச்சு வார்த்தை நடத்தியதாக ஒரு செய்திவந்தது. அதுவும் என்னவாயிற்று என்று தெரியவில்லை.

சர்வதேச முதலீட்டாளர் மாநாடு மே மாதம் 23 மற்றும் 24ஆம் தேதிகளில் நடைபெறும் என்று அறிவித்து, முதலீட்டாளர்கள் மாநாட்டிற்காக வெளிநாட்டினரைக் கவர்ந்திழுக்கச் செல்வதாக ஒரு பிரச்சாரம் செய்யப்பட்டு, அதற்காக அதிகாரிகள் எல்லாம் வெளிநாடுகளுக்குப் படையெடுத்த செய்தியும் வந்தது. தமிழக அரசின் தொழில்அமைச்சர் சென்னையில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் வெளிநாடுகளில் இருந்து ஏராளமான தொழில் அதிபர்கள் வர உள்ளதாகவும், அதன் மூலம்

ஒரு இலட்சம் கோடி ரூபாய் தமிழகத்திலே முதலீடு செய்ய வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவித்தார். அவர் அவ்வாறு அறிவித்த ஒரு சில நாட்களிலேயே முதலீட்டாளர்கள் மாநாடு மேலும் தள்ளி வைக்கப்படுவதாக அரசினால் அறிவிக்கப்பட்டது. சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்க உள்ளூர் தொழில் அதிபர் களை அழைப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று சேலத்தில் நடைபெற்றதாகவும், அந்தக்கூட்டத்தில் தொழில் துறை அமைச்சர், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், தொழில் துறையின் சிறப்புச் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டதாகவும், அதிலே அமைச் சர்கள் பேசிய போது மே மாதத்தில் மாநாடு நடைபெறும் என்று பேசினார். ஆனால் அவர்களுக்குத் தெரியாமலேயே, மாநாடு ஒத்தி வைக்கப்பட்டுச் செப்டம்பரிலே நடைபெறும் என்று சென்னையில் அறிவிப்பு வந்தது.

சர்வதேச முதலீட்டாளர்களின் மாநாட்டின் மூலம் அனைவரும் ஆச்சரியப்படும் எண்ணிக்கையில் முதலீட்டாளர்களும் பல்லாயிரம் கோடி ரூபாய் முதலீடும் தமிழகத்திற்கு வரப்போகிறதென்று தொடர்ந்து வரும் செய்தியைக் கண்டு யாரும் மிரட்சி அடைய வேண்டாமென்று தலைப்பிட்டு "கணினி" இதழ் ஒன்று ஏராளமான விவரங்களைத் தெரிவித்திருக்கிறது. ஒரு இலட்சம் கோடி ரூபாய் முதலீட்டிற்கான ஒப்பந்தம் ஏற்படப் போகிறதென்று "டைம்ஸ் ஆப் இந்தியா" நாளேடு கூறுகிறது. மின்சாரத் துறையில் மட்டும் ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்கு அதிகமான முதலீட்டுக்கு ஒப்பந்தங்கள் போடப்பட்டு, மொத்த ஒப்பந்தம் இரண்டு இலட்சம் கோடி ரூபாயைத் தாண்டிவிடுமென்று "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ் தெரிவித்திருக்கிறது. பெரிதும் மிகைப்படுத்தப்படும் முதலீடுகளின் மூலம் ஒரு பைசா முதலீடுகூட வராத நிலையில், ஒரு தாளில் ஒப்பந்தம் போடப்படுவதையே மிகைப்படுத்தி செய்திகள் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றன. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் எவ்வாறு செயல்படுத்தப்படப் போகின்றன? எப்போது அவை செயலாக்கத்திற்கு வரும்? அதற்கான காலநிர்ணயம் ஏதும் செய்யப்பட்டிருக்கிறதா? புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் தமிழக அரசும், முதலீட்டாளர்களும், அவர்கள் வழங்கிடும் உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கான அடிப்படை ஆதாரங்களைப் பெற்றுள்ளார்களா? அரசின் தொழிற்கொள்கையும், அரசு அதிகாரிகளும் தொழில் திட்டங்களைச் சிறிதும் தாமதிக்காமல்

செயலாக்கத்திற்கு அனுமதித்து ஒத்துழைப்பார்களா? என்ற கேள்விகள், செய்திகளைப் படிக்கும் அனைவருடைய மனதிலும் எழுவது இயற்கையே! இவற்றில் முக்கியமான கேள்வி, கையெழுத்திடப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் எத்தனை ஒப்பந்தங்கள் உண்மையிலேயே செயலாக்கத்திற்கு வரப்போகின்றன என்பதுதான்! இந்தக் கேள்விக்கான பதிலைத் தேடுவதற்குமுன் தொழில் முதலீடுகள் சம்மந்தமாகத் தமிழகத்தில் கடந்த நான்காண்டுகளில் எத்தகைய முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் தெரிந்து கொண்டாக வேண்டும்.

2011ஆம் ஆண்டில் தமிழகத்தில் 73,298 கோடி ரூபாய் முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டதாகச் செய்திகள் வெளியிடப்பட்டன. ஆனால் அவற்றுள் வெறும் 235 கோடி ரூபாய் முதலீடு மட்டுமே தமிழகத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறது. உண்மையில் வந்து சேர்ந்த முதலீடு 0.3 சதவிகிதம்தான் என்பதை அறிய அனைவரும் வெட்கப்பட வேண்டும்!

2012ஆம் ஆண்டில் 21,253 கோடி ரூபாய் முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. ஆனால் 524 கோடி ரூபாய் முதலீடு மட்டுமே செயலாக் கத்துக்கு வந்திருக்கிறது. செயலாக்கத்துக்கு வந்துள்ள முதலீடு 2.4 சதவீதம் மட்டுமே.

2013ஆம் ஆண்டில் 27,380 கோடி ரூபாய் முதலீட் டுக்கான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு, 2292 கோடி ரூபாய் முதலீடு மட்டுமே வந்திருக்கிறது. செயலாக்கத்துக்கு வந்துள்ள முதலீடு 8.3 சதவீதம்தான்.

2014ஆம் ஆண்டில் 14,596 கோடி ரூபாய் முதலீட்டுக்கான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு, 2500 கோடி ரூபாய் முதலீடு மட்டுமே தமிழகத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறது. செயலாக்கத்துக்கு வந்திருக்கும் முதலீடு 17 சதவீதம்தான்.

2015ஆம் ஆண்டில் ஜூலை மாதம் வரை 17,412 கோடி ரூபாய் முதலீட்டுக்கான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு, வெறும் 41 கோடி ரூபாய் முதலீட்டுக்கான பணிகள் மட்டுமே நிறைவேறியிருக்கின்றன. செயலாக்கத்துக்கு வந்திருக்கும் முதலீடு வெறும் 0.2 சதவீதம் தான் என்பது எவரையும் தலை குனிய வைப்பதாகும்.

ஆக அ.தி.மு.க. ஆட்சியில் 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதம்வரை செயலாக்கத்துக்கு வந்துள்ள முதலீடு வெறும் 5.64 சதவீதம்தான். இவ்வாறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்படும் முதலீடுகளின் அளவுக்கும், உண்மையிலேயே செயலாக்கத்துக்கு வரும் முதலீடுகளின் அளவுக்கும் மிகப்பெரிய இடைவெளி இருப்பதற்கு, மின்சாரம், தண்ணீர், போக்குவரத்து வசதிகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு தேவையான அளவுக்கும் தரத்திற்கும் இல்லாததும், அரசின் தொழில்கொள்கையும் - அதிகார அமைப்பும் தொழில் முதலீட்டாளர்களுக்கு அனுசரணையான அணுகுமுறையினைக் கையாளாததும்தான். கடந்த நான்கரை ஆண்டுகளாகத் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு உகந்த முறையெதையும் பின்பற்றாமல், முதலீடுகளை ஈர்ப்பதில் மிகப் பெரிய தோல்வி ஏற்பட்ட பிறகு, 2016 தேர்தல் விளம்பரத்திற்காகக் கடைசி நேரத்தில் சாதிக்கப் போகிறோம் என்று சவடால் பேசுவது எந்த அளவுக்குச் சாத்தியமாகி நல்ல விளைவுகளை ஏற்படுத்தப் போகிறது?

அன்புள்ள,

மு.க.

11-9-2015

3979. முள்ளு முனையில் மூன்று குளம் வெட்டிய கதை!

உடன்பிறப்பே,

"முள்ளு முனையிலே மூணு குளம் வெட்டினேன்; அதிலே இரண்டு குளம் பாழ்; ஒண்ணுல தண்ணியே வரல" என்று சொல்வார்களே, அதைப் போலத்தான் ஜெயலலிதா கூட்டிய முதலீட்டாளர் மாநாடும், சர்க்கரை என்பது காகிதத்தில் எழுதி நாக்கில் தடவிக் கொண்டதைப் போல முடிந்துள்ளது. இருந்தாலும் வெட்கத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல், இந்த இரண்டே நாட்களில் 2 லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய்க்கு தமிழ் நாட்டுக்கு முதலீடு கிடைத்துள்ளது என்று ஜெயலலிதா அறிவித்திருக்கிறார். கடந்த ஓராண்டில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் 26 நாடுகளுக்குப் பயணம் செய்து, அதன் மூலமாக பல மாநிலங்களுக்கும் சேர்த்துக் கிடைத்த நேரடி முதலீடே மொத்தம் 1லட்சத்து 89 ஆயிரம் கோடி ரூபாய்தான் என்று மத்திய அரசின் தொழில் கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறையின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன; ஆனால் தமிழகத் தின் முதலமைச்சர் ஜெயலலிதா இரண்டே நாள் மாநாட்டில், உட்கார்ந்த இடத்திலிருந்தவாறே 2 லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டைக் குவித்த அதிசயம் இருக்கிறதே, "மந்திரத்திலே மாங்காய் விழுந்து வந்த கதை" தான்!

ஆனால் ஜெயலலிதா இந்த மாநாட்டை கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பே கூட்டியிருந்தால், இந்நேரம் இந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் தொடங்கி, தமிழகத் தெருக்களில் பாலும், தேனும் ஓடியிருக்குமே; அந்தப் பொன்னான வாய்ப்பை ஏன் நழுவ விட்டார்கள் என்றுதான் புரியவில்லை!

தமிழகத்தில் தொழில் தொடங்க விதிமுறைகள் எளிமை ஆக்கப்பட்டு விட்டதாம்; ஒரே மாதத்தில் தொழில் தொடங்க அனுமதி கிடைத்து விடுமாம்; ஜெயலலிதா அறிவித்திருக்கிறார்.

ஆனால் அங்கே நடைபெற்ற கருத்தரங்கில் அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த தொழிலதிபர் தனஞ்ஜெயன் தைரியமாக எழுந்து, "கடந்த இரண்டாண்டு காலமாக தொழில் தொடங்க கலெக்டர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சரியான ஆவணங்களைக் கொடுத்தேன். ஆனால் இதுவரை அனுமதி கிடைக்கவில்லை " என்றெல்லாம் அமைச்சருடன் வாக்குவாதம் செய்திருக்கிறார்.

இந்த மாநாடு பற்றி, இன்று வந்த "ஜூனியர் விகடன்" இதழில் எழுதப்பட்டுள்ள கட்டுரையின் சில பத்திகள் வருமாறு:

"குறைந்த விலைக்கு நிலம் தருகிறோம், வரிச் சலுகையும் அளிக்கிறோம் என ஆந்திராவும், கர்நாடகாவும் போட்டி போட்டுக் கொண்டு, தமிழகத்தில் கூட்டம் நடத்தி, முதலீட்டாளர்களை அழைத்தார்கள். கர்நாடக முதல்வர் சித்தராமையா கோவைக்கே வந்து கர்நாடகாவில் தொழில் தொடங்க வாருங்கள் என அழைப்பு விடுத்தார். அதனால், கர்நாடக மாநிலம் சாம்ராஜ் நகரில் புதிதாக அமைக்கப்பட்ட 1,595 ஏக்கர் பரப்பள விலான தொழிற்பூங்காவில் தமிழகத்தைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் சுமார் 12 ஆயிரம் கோடி ரூபாயை முதலீடு செய்தனர். அப்படித்தான் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவும் தமிழக முதலீட்டாளர்களை அழைத்தார். இவ்வளவும் நடந்த பிறகுதான், தமிழக அரசுக்கு திடீர் ஞானோதயம் உதித்தது.

ஜெயலலிதா பங்கேற்பதற்காக இவ்வளவு திட்டமிடும் ஆட்சியாளர்கள், முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கான விஷயங்களை ஆரம்பத்திலேயே செய்திருந்தால், அது சரித்திரம் ஆகியிருக்கும். 2016 சட்டசபைப் பொதுத் தேர்தலுக்கு சில மாதங்களே உள்ள நிலையில் குறுகிய கால இடை வெளியில் மாநாட்டை நடத்தி என்ன சாதிக்கப் போகிறார்கள்?

தொழில் தொடங்குவது தொடர்பாக முதலமைச் சரைச் சந்தித்துப் பேசுவதற்கான வாய்ப்பு தமிழ்நாட் டில் இல்லை . மற்ற மாநில முதல்வர்கள் பல மாநிலங் களுக்கும், நாடுகளுக்கும் நேரடியாகவே சென்று

முதலீடுகளைத் திரட்டி வருகின்றனர். ஆனால் ஜெயலலிதா, சென்னைக்கு வந்து சந்திக்க விரும்பும் தொழிலதிபர்களைக் கூட சந்திப்பது இல்லை.

தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துப் போவதாகச் சொல்லி "விஷன் 2023" என்ற தொலைநோக்குத் திட்டத்தை ஜெயலலிதா வெளியிட்டார். ஆனால், அதன் இலக்கை எட்டுவதற்கான நடவடிக்கைகள் முடங்கிப் போயிருக்கின்றன. "15 லட்சம் கோடியில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்" என "விஷன் 2023"ல் அறிவிக்கப்பட்டது. அதற்காக, 4.09 லட்சம் கோடி செலவிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 4 ஆயிரம் கோடி கூட ஒதுக்கப்படவில்லை. இதேபோல, "20 ஆயிரம் மெகாவாட் அளவுக்கு அனல் மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படும்" என அறிவிக்கப்பட்டும், அதன் இலக்கை எட்டவில்லை. செங்கல்பட்டு - தூத்துக்குடி, தூத்துக்குடி - கோவை, கோவை - செங்கல்பட்டு இடையே 24 ஆயிரம் கோடி ரூபாயில் முக்கோண 6 வழி மற்றும் 8 வழிச் சாலைகள், 1.88 லட்சம் கோடி ரூபாய்ச் செலவில் மத்திய அரசுடன் இணைந்து ரயில் பாதை மேம்பாடு, 25 ஆயிரம் கோடியில் விமான நிலைய விரிவாக்கத் திட்டம், 1,60,985 கோடி ரூபாயில் தொழில் துறைத் திட்டங்கள், 25 ஆயிரம் கோடி ரூபாயில் நகர்ப் புறங்களில் குடிசைகளில் வாழும் மக்களுக்குப் புதிய வீடுகள் என்ற விஷன் 2023 அறிவிப்புகள் எல்லாம் கானல் நீராகி விட்டது.

மெட்ரோ ரயிலைவிட மோனோ ரயில்தான் 'பெஸ்ட்' எனப் பக்கம் பக்கமாக அறிக்கை விட்டு மெட்ரோவை மட்டம் தட்டியவர்கள்தான், மெட்ரோ ரயில் திட்டத்துக்குச் சொந்தம் கொண்டாடினார்கள். மதுரை, கோவை, திருச்சியிலும் மோனோ ரெயில் திட்டம் கொண்டு வரப்படும் என்றும் சொன்னார்கள். எல்லாமே "புஸ்வாணம்" தான்.

கார் தொழிற்சாலைகளில் இருந்து துறைமுகத்துக்கு கார்களை எளிதாக அனுப்புவதற்காக மதுரவாயலில் இருந்து சென்னை துறைமுகத்துக்குப் பறக்கும் சாலைத்

திட்டத்தைக் கொண்டு வந்தது மத்திய அரசு. ஆனால், அதை முடக்கிப் போட்டு விட்டது தமிழக அரசு"

என்றெல்லாம் "ஜூனியர் விகடன்" எழுதியிருக்கிறதே, இதற்கு ஆட்சியாளர்களின் பதில் என்ன?

தென் மாவட்டங்களில் தொழில் தொடங்கினால் சிறப்புச் சலுகைகள் தரப்படும் என்று முதல் அமைச்சர் பேசியிருக்கிறார். கழக ஆட்சிக் காலத்திலேயே தென் மாவட்டங்களின் வளர்ச்சி குறித்து உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு. ரெத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையில் தென் மாவட்டங்களில் தொழில் வளம் பெருக வேண்டும் என்பதற்காகவும், அந்தப் பகுதிகளிலே வாழ்கின்ற மக்களுக்குப் பயன்படும் வகையில் முற்போக்கான திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென் பதற்காகவும் குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் பரிந் துரைகளின் அடிப்படையில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மத்திய அமைச்சராக இருந்த தம்பி முரசொலி மாறன் அவர்களின் பெருமுயற்சிகளின் காரணமாக நாங்குநேரியில் மிகப் பெரிய சிறப்புப் பொருளாதார பூங்கா ஒன்றினை அமைக்கத் திட்டமிட்டு அதற்கான அடிக்கல் நாட்டு விழாவும் நடைபெற்றது. அதன் பின்னர் வந்த ஆட்சியில் அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்கான ஏற்பாடுகள் முறையாகச் செய்யப்படவில்லை.

இதே நேரத்தில் கழக ஆட்சியில் இந்தத் துறை எவ்வாறு செயல்பட்டது என்பதையும் கூறுகிறேன்.

தமிழக தொழில் மற்றும் வர்த்தக வளர்ச்சிக்கு உதவிட முதலமைச்சர் தலைமையில் தொழில் வர்த்தகக் கூட்டமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்ட, "சிறப்புத் தொழில் முனைப்புக் குழு" (Special Task Force) 8.11.2006 அன்று அமைக்கப்பட்டது.

தமிழகத்தில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் போட்டியிடும் தன்மையை அதிகரித்து அவற்றின் செயல்திறனைப் படிப்படியாக மேம்படுத்துதல்; விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைத்திட, வேளாண் சார்ந்த தொழில்களை ஊக்குவித்தல், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் ஆண்டு வளர்ச்சி விகிதத்தை 10 சதவீதத்திற்கும் அதிகமாக நிர்ணயித்தல் போன்றவற்றைக் குறிக்கோள்களாகக் கொண்டு இந்தியாவிலேயே முதல் முறையாக 2008ஆம் ஆண்டில்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கான தனிக் கொள்கை உருவாக்கப்பட்டது.

2009-2010ஆம் ஆண்டிற்கான தொழில் துறை மானியக் கோரிக்கை தயாரிப்பதற்கு முன்பாக துணை முதலமைச்சராக இருந்த தம்பி மு.க.ஸ்டாலின் 13.6.2009 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழகத்திலுள்ள அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தர மற்றும் பெரும் தொழில் முனைவோர் கூட்டமைப்புகளின் கூட்டத்தைக் கூட்டி தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிக் கலந்தாலோசித்தார். அதன்பின் அத்தகைய கூட்டங்கள் நெல்லை, கோவை, திருச்சி, ஈரோடு ஆகிய இடங்களிலும் நடத்தப்பட்டன. மைய அரசின் மத்திய புள்ளிவிவர நிறுவனம் (Central Statistical Organisation) 2011இல், தனது 2008-09இல் தொழிற்சாலைகள் குறித்த ஆண்டு ஆய்வினை வெளியிட்டது. அந்த ஆய்வின்படி, "தமிழ்நாடு மொத்தம் 26,122 தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது; இதன் மூலம் தொழிற்சாலைகள் எண்ணிக்கையில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கிறது; தொழிற் சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையிலும் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. அதாவது தமிழ்நாட்டில் 17 இலட்சத்து 74 ஆயிரத்து 19 பேர் தொழிற் சாலைகளில் மட்டும் பணிபுரிகின்றனர்; " மொத்த முதலீட்டின் "வரிசையில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தை வகிக்கிறது; "மொத்த தொழில் உற்பத்தியில்" தமிழ்நாடு மூன்றாம் இடத்தை வகிக்கிறது; மேலும் "நிகர மதிப்பு கூடுதல்" அளவில் தொழிற்சாலை வரிசையில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தை வகிக்கிறது'' என்றெல்லாம் எழுதியிருந்தது.

"Wall Street Journal" தனது 2010, ஜூலை 8ஆம் நாளிட்ட இதழில் தமிழக அரசின் செயல்பாடுகளை மிகவும் புகழ்ந்து கூறியிருந்தது. மேலும், அந்த இதழில் "தமிழ்நாடு; வாகன உற்பத்தித் தொழிற்சாலைகளுக்குத் தேவையான நிலங்கள், சாலைகள் மற்றும் மின்சாரம் ஆகியவற்றை வழங்குவதில் மற்ற இந்திய மாநிலங்களை விடச் சிறப்பாகச் செயல்படுகிறது. மேலும், தொழில் தொடங்கவும், விரிவாக்கம் செய்யவும் 12க்கும் மேற்பட்ட அரசுத்துறை சார்ந்த அனுமதிகளை ஒற்றைச் சாளர முறையில் ஒரே இடத்தில் வழங்குகிறது'' என்றும் கூறிப் பாராட்டியது.

2006இல் கழக ஆட்சி அமைந்த பிறகு புதிய தொழில் கொள்கையை வகுத்து தொழில் வளர்ச்சிக்கு அளித்து வந்த ஊக்கம், தொழில் முதலீட்டாளர்களுடன் தொழில் நேயத்துடன் கொண்டுள்ள வெளிப்படையான அணுகுமுறை உலகத்தரத்திற்கு இணையாக மேம்படுத்தப்பட்டுள்ள தொழில் கட்டமைப்புகள் முதலியவற்றின் பயனாக ஐந்தாண்டுகளில் 5 இலட்சத்து 73 ஆயிரத்து 765 கோடியே 94 இலட்ச ரூபாய் அதிகரித்து மொத்த முதலீடு 2010 டிசம்பர்த் திங்களில் 7 இலட்சத்து 65 ஆயிரத்து 557 கோடியே 92 இலட்ச ரூபாய் என - ஏறத்தாழ நான்கு மடங்கு உயர்ந்து, தொழில் வளர்ச்சியில் ஓர் அமைதிப் புரட்சி ஏற்பட்டது.

மத்திய அரசின் கயிறு வாரிய துணைத் தலைவராக உள்ள கா.ராயர் சென்னையிலே சில மாதங்களுக்கு முன்பு செய்தியாளர்களைச் சந்தித்த போது, "மத்திய அரசின் சிறு, குறு, மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சகம் சார்பில், மத்திய கயிறு வாரியத்தின் (காயர் போர்டு) மூலமாக மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவியுடன் தமிழகத்தில் 100 கோடி ரூபாய் முதலீட்டில் கயிறு தொழில் பூங்கா அமைக்கும் திட்டம் உள்ளது. இதற்கு மத்திய அரசு 70 கோடி ரூபாய் நிதி உதவி அளிக்கத் தயாராக உள்ளது. மாநில அரசு 10 கோடி ரூபாய் மட்டுமே வழங்க வேண்டும். கதர், கிராம சர்வோதய சங்கத்தின் மூலமாக 20 கோடி ரூபாய் வழங்கினால் விழுப்புரத்தில் வழுதரெட்டி கிராமத்தில் 200 ஏக்கர் இடத்தில் இந்தத் தொழில் பூங்கா உருவாகும். ஆனால் தமிழக அரசு இதுவரை பூங்கா அமைக்க அனுமதி அளிக்கவில்லை. இது சம்பந்தமாக தமிழக ஊரகத் தொழில் துறை அமைச்சர் மோகனைச் சந்திக்க கடந்த இரண்டு மாதங்களாக முயன்றும் பார்க்க முடிய வில்லை. நமது நாட்டின் குடியரசுத் தலைவரைக் கூட எளிதில் பார்க்க முடியும், அவருடன் புகைப்படம் எடுக்க முடியும். ஆனால் தமிழக அமைச்சரை மத்திய அரசு அதிகாரியான என்னால் கூடச் சந்திக்க முடியவில்லை. தமிழகத்தில் ஆண்டுக்கு 500 கோடி ரூபாய் மதிப்பிலான தென்னை மட்டையும், நாறும் தீயிட்டுக் கொளுத்தி வீணாக்கப்படுகிறது" என்று தமிழக அரசு மீது குற்றஞ் சாட்டிய மத்திய அரசு அதிகாரியின் பேட்டி ஏடுகளில் வெளிவந்தது.

நம் மாநிலத்தில் புதிய தொழில்களைத் தொடங்கு கிறார்களோ இல்லையோ, இலாபத்தோடு இயங்கி வந்த "நோக்கியா", "பாக்ஸ்கான்" போன்ற தொழிற்சாலைகள்

எல்லாம், தொழிலாளர்களைத் தெருவிலே நிறுத்தித் தவிக்க விட்டு ஓடுகின்றன; ஆனால் ஆட்சியாளர்கள் பாராமுகமாக இருக்கின்றனர். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழப்புக் குறித்த கவலை துளியும் இல்லை அவர்களுக்கு. ஏன், தமிழக அரசோடு தொழில் தொடங்குவதற்காக ஒப்பந்தம் செய்து கொண்ட பல நிறுவனங்களே தங்கள் தொழில்களைத் தொடங்கியதாக இன்னும் செய்தி வரவில்லை.

2011இல் மைய அரசின் மத்திய புள்ளி விவர நிறுவனம், (Central Statistical Organisation) தனது 2008-2009இல் தொழிற்சாலைகள் குறித்து ஆண்டு ஆய்வினை வெளியிட்டது. அந்த ஆய்வின்படி,

- தமிழ்நாடு மொத்தம் 26,122 தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது; இதன் மூலம் தொழிற்சாலைகள் எண்ணிக்கையில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கிறது;
- தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையிலும் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. அதாவது தமிழ்நாட்டில் 17 லட்சத்து 74 ஆயிரத்து 19 பேர் தொழிற்சாலைகளில் மட்டும் பணி புரிகின்றனர்.
- "மொத்த முதலீட்டின்" வரிசையில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தை வகிக்கிறது.
- "மொத்த தொழில் உற்பத்தி"யில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தை வகிக்கிறது.
- மேலும் "நிகர மதிப்பு கூடுதல்" அளவில் தொழிற்சாலை வரிசையில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தை வகிக்கிறது.

என்றெல்லாம் கூறப்பட்டிருந்தது.

முதலீடுகளை வெற்றிகரமாக ஈர்ப்பதில் இந்தியாவின் சிறந்த மூன்று மாநிலங்களுள் தமிழகமும் ஒன்றாகத் திகழ்ந்தது, "ASSOCHAM" நிறுவனம் வெளியிட்ட "BIZCON" என்ற அறிக்கையில், வாகன உற்பத்தியிலும், ஏற்றுமதியிலும் இந்தியாவிலேயே மிகப் பெரிய மாநிலமாகத் திகழும் தமிழகம்,

வாகன உற்பத்தியில் சிறந்து விளங்கும் உலகின் முதன்மையான 10 மையங்களில் ஒன்றாக விளங்குகிறது'' என்று குறிப்பிட் டிருந்தது. இது கழக அரசு அறிவித்த ஒருங்கிணைந்த மிகப் பெரும் வாகனத் திட்டக் கொள்கையின் விளைவாக சாத்தியமாயிற்று.

4-2-2014 தேதிய நாளிதழ் ஒன்றுக்கு, அளித்த சிறப்புப் பேட்டியில், அன்றைய மத்திய அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் "மத்திய அரசின் தொழில் துறை சார்பில் ஒரு பிரமாண்டமான தொழில் வளர்ச்சித் திட்டம் தமிழகத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான முதலீட்டில் 90 சதவிகிதம் வரை மத்திய அரசு கடனாக வழங்கும். இந்தத் திட்டத்தைச் செயல் படுத்த தமிழக அரசு ஆர்வம் காட்டவில்லை " என்று தொடங்கி தமிழக அரசு எவ்வாறு தொழில் வளர்ச்சியில் அக்கறை இல்லாமல் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டியிருந்தாரே; முதலமைச்சர் ஜெயலலிதா அதற்கென்ன பதில் கூறப் போகிறார் என்று நான் அப்போதே கேட்டிருந்தேனே; முதலமைச்சரோ, துறையின் இந்த அமைச்சரோ ஏதாவது பதில் கூறினார்களா?

தி.மு. கழக ஆட்சியில் தொழிற்சாலைகளில் பணியாற்றிய பெண்களின் எண்ணிக்கை 4 இலட்சத்து 93 ஆயிரம் ஆகும். ஆனால் தற்போது அ.தி.மு.க. ஆட்சியில் தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற பெண்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 78 ஆயிரம். வேலை வாய்ப்பினை இழந்த பெண்களின் எண்ணிக்கை 1 இலட்சத்து 15 ஆயிரம் ஆகும். இலட்சக்கணக்கான பெண்கள் தமது வேலைவாய்ப்பினை இழந்ததுதான் தொழில் வளர்ச்சிக்கான அடையாளமா?

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி பற்றி சுப்பிரமணியம் சுவாமி அவர்களே அண்மையில் கூறும்போது, "தொழில் வளம், பொருளாதார வளர்ச்சி எதுவுமே இல்லை. இங்கிருக்கும் தொழில் அதிபர்களை, கர்நாடக முதல்வர் சித்தராமையா, தங்கள் மாநிலத்துக்குக் கவர்ந்து போயிருப்பதாக அறிந்தேன். தமிழகத்தில் இருந்து 12 ஆயிரம் கோடி ரூபாய்க்கான தொழில் முதலீடுகள், கர்நாடகத்துக்கு சென்ற முதலீட்டை, இங்கேயே தக்க வைக்க, தமிழக அரசு எந்த முயற்சியும் எடுக்காதது ஏன்? கடுமையான மின் பற்றாக்குறையும், அரசு அதிகாரிகளின் ஒத்துழையாமையும் எல்லா நிலைகளிலும் இருப்பதால், வெளி மாநிலங்களில் இருந்து யாரும் தமிழகத்தில், முதலீடு செய்ய முன்வரவில்லை.

தகவல் தொழில் நுட்பத் துறையில், தமிழகம், நாட்டிலேயே முதன்மையான மாநிலமாக வரும் என்று எதிர்பார்க்கப்பட்ட சூழ்நிலை மாறியிருக்கிறது. அதற்குக் காரணம், மாநில அரசு நிர்வாகம் சரியில்லாததே" என்று தெரிவித்திருக்கிறார் என்றால், முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களே, எங்கள் மீது கோபப்பட்டு என்ன பயன்?

நடைபெற்ற மாநாட்டில் அமெரிக்காவின் சன் எடிசன் நிறுவனம் 12 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்ய முன் வந்திருப்பதையும், அதானி நிறுவனம் 15 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்வோம் என்று அறிவித்திருப்பதையும் பெரிதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் இந்த இரண்டு நிறுவனங்களும் முதலீடு செய்யும் அதே துறையில் 15 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்ய முன் வந்தோம். தட்டில் கோடிகளை வைத்து தமிழகத்திற்கு மின்சாரம் தர வந்த எங்களை எட்டி உதைத்து துரத்தியடித்தது ஜெயலலிதாவின் அரசு என்று அந்த மாநாட்டில் பங்கேற்ற சீன கம்பெனியின் பிரதிநிதி ஒருவர் கூறியதாக "நக்கீரன்" இன்று எழுதியுள்ளது. இந்த இதழின் செய்தியாளர் அதிகாரிகளிடம் போடப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் பற்றி விசாரித்த போது, கடந்த நான்கரை ஆண்டுகளில் 60 ஆயிரத்து 620 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் போடப்பட்ட நிலையில், 43 ஆயிரம் கோடி ரூபாய்க்கான முதலீடுகளை மட்டுமே பெற முடிந்தது. இப்போது 2 லட்சத்து 42 ஆயிரம் கோடி ரூபாய்க்கான முதலீடுகள் என்று சொல்லப்பட்டுள்ள அறிவிப்பு சட்டமன்றத்தில் முதல்வர் படிக்கும் 110 அறிக்கையைப் போல ஆகி விடுமோ?" என்று கூறியதாக செய்தி வந்துள்ளது.

இப்படிப்பட்ட செய்திகளைப் படிக்கும்போது, நான் தொடக்கத்தில் கூறிய "முள்ளுமுனையிலே மூணு குளம் வெட்டினேன், அதிலே இரண்டு குளம் பாழ்; ஒன்றில் தண்ணியே வரல" என்ற பழமொழிதான் மீண்டும் ஞாபகத்திற்கு வருகிறது.

அன்புள்ள,

மு.க.

13-09-2015

3980. சிந்து வெளி நாகரிகம் சிதைந்திடப் பொறுப்பதுவோ?

உடன்பிறப்பே,

இன்று திராவிட இனத்தின் கலங்கரை விளக்கமாம் நமது பேரறிஞர் அண்ணா அவர்களின் 107வது பிறந்த நாள்!

55 ஆண்டுகளுக்கு முன்பு இதே செப்டம்பர் மாதம் 26ஆம் தேதியன்று கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் போது,

"திராவிட முன்னேற்றக் கழகம் ஓர் நல்ல வீணை; அதில் நாதம் குறையும் பொழுது அதன் நரம்புகளை, விசைகளைச் சரிபார்த்துக் கொண்டு தொடர்ந்து பயணம் செய்கிறோம். எனினும், "இந்த வீணை அறுந்து விடும்" என்று யாராவது கருதுவார்களானால், அவர்கள், அந்த நரம்பின் வலிவையும் அந்த வீணை ஆக்கப்பட்ட விதத்தையும், அது எழுப்பும் இசையையும் நுகர முடியாதவர்களென்று பொருள்"

என்று குறிப்பிட்டார்கள். அண்ணா குறிப்பிட்ட வாறே, இந்த வீணை அறுந்து விடும் என்று எதிர்பார்த்து, அறுந்துவிடாதா என்று ஏங்கி நிற்போர் இன்னும் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். அறுந்தே விட்டது என்று வாய்ப்பறை கொட்டியே வாழ்க்கை நடத்துவோரும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களைப் பற்றிக் கிஞ்சிற்றும் கவலைப்படாமல், நாம் இந்த வீணையின் நரம்புகளை, விசைகளைத் தேவைப்படும் போதெல்லாம் சரிபார்த்துக் கொண்டு, தொடர்ந்து இலட்சியப் பயணம் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தந்தை பெரியார் அவர்களின் 137வது பிறந்த நாள் விழாவினையும், அண்ணா அவர்களின் 107வது பிறந்த நாள் விழாவினையும், நமது கழகத்தின் 67வது பிறந்த நாள்

விழாவினையும் இணைத்து வழக்கம் போல இந்த ஆண்டும் முப்பெரும் விழாவினை இன்று கொண்டாட விருக்கின்ற நேரத்தில், நேற்றையதினம் "இந்து" ஆங்கில நாளிதழில் "முகமது அலி" என்பார் "சிந்து வெளி நாகரிகம்" பற்றியும், அதன் இன்றைய நிலை பற்றியும், புகைப்படத்துடன் எழுதியுள்ள ஒரு அருமையான கட்டுரையை நான் படித்திட நேரிட்டது. அதைப் படித்தபோது, "இன்பத் திராவிடம்" என்ற தலைப்பில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தீட்டிய தீந்தமிழ்க் கட்டுரையும், பழம்பெரும் கல்வெட்டாராய்ச்சி அறிஞர் ஐராவதம் மகாதேவன் அவர்களின் ஆய்வுக் குறிப்புகளும், கோவையில் 2010ஆம் ஆண்டு கழக ஆட்சியில் நடத்திய "செம்மொழி" மாநாட்டில், பத்து இலட்சம் ரூபாய் மதிப்பிலான "கலைஞர் கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதினை" முதல் முறையாகப் பெற்ற "பின்லாந்து" நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் அஸ்கோ பர்போலா அவர்களின் ஆராய்ச்சி முடிவுகளும் அடுக்கடுக்காக என் நினைவுகளை ஆட்கொண்டன.

அவற்றில் குறிப்பாகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் "இன்பத் திராவிடம்" கட்டுரை எழுதும்போது, "இழந்த இன்பத்தை எண்ணிடும்போது, உள்ளம் வேதனைப்படும். இன்பத்தை இழந்த துடன் துன்பத்திலும் சிக்கிவிட்டால், அந்த வேதனை பன்மடங்கு அதிகமாவதுடன் இழந்த இன்பத்தை மீண்டும் எப்படியேனும் பெற வேண்டுமென்ற எண்ணம் வலுத்துப் பெருத்து வீறிட்டு எழும். இதுவே இன்றைய தமிழர் நிலை - திராவிடர் இலட்சியம். தமிழ்நாடு என்றுமே தலைவணங்கி வாழ்ந்ததில்லையே! அசோகர், அக்பர் ஆகிய மன்னாதி மன்னர்கள் காலத்திலும், மண்டியிட்டதில்லை தமிழ்நாடு. அசோகர் கல்வெட்டு, கலிங்கத்தைக் கடும்போரில் அவர் வென்றதைக் காட்டுகிறது. அசோகரின் படை பலம் கலிங்கத்துப் போரில், இரத்தக்காடாகப் போரிட்ட வீரம் ஆகியவற்றைக் காட்டுகிறது. ஆனால், மற்றுமென்ன? இதில் வெற்றி பெறக்கூடிய அசோகர், திராவிட நாட்டை வெல்ல முடியவில்லை என்ற உண்மையை எடுத்துக்காட்டுகிறது. சேர, சோழ, பாண்டியர்கள் மண்டலாதிபதிகளாக வாழ்ந்தனர் அக்காலத்தில். அசோகர் காலத்தில், இவர்கள் அரசுரிமை இழக்காது தமிழ்நாட்டுத் தனிச் சிறப்பைக் காட்டவில்லையோ எனக்கேட்கிறோம். கிறிஸ்து பிறப்பதற்கு ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்னர் "தமிழர் என்ற

ஆரியரல்லாதார் தனி நாகரிகம், தனிமொழி, தனி வரலாற்றுடன், தனி நேஷனாக வாழ்ந்து வந்தனர்" என்று ஆசிரியர் பார்கீத்தர் கூறியுள்ளார். கிறிஸ்து பிறப்பதற்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு, "திராவிட நாட்டு மன்னர்கள் தங்கக் கொப்பரையில் சந்தனத் தைலத்தை ஊற்றி வைத்துக்கொண்டு வாழ்ந்தனர்" என்று கூறப்பட்டிருக்கிறது. மூன்றாவது நூற்றாண்டில் திராவிட நாட்டின் அமைப்பு பற்றி வரலாற்று நூல்களில் வரையப்பட்டிருக்கின்றன. திருநெல்வேலிக்குத் தென் கிழக்கே 15வது மைலில் உள்ள ஆதிச்சநல்லூரில் ஆராய்ச்சியாளர்கள், கல்வெட்டுகளையும் கண்டுபிடித்து எடுத்தனர். இதேவிதமான திராவிடச்சிறப்புச் சின்னங்கள், பஞ்சாபில், மண்காமரி ஜில்லாவிலுள்ள ஹாரப்பா என்ற இடத்திலும், சிந்து மாகாணத்தில் மொகஞ்சதாரோவிலும் கண்டெடுக்கப்பட்டன. எனவே, ஒரு காலத்தில் திராவிட நாகரிகம், திராவிட ஆட்சி, நெல்லையில் தொடங்கி நெடுக நெடுகச் சென்று சிந்து, பஞ்சாப் வரையிலும், அதற்கு அப்புறமும் சென்றது என்று விளங்குகிறது" என்றெல்லாம் அந்தக் கட்டுரையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் அப்போதே எழுதி நமது பழம் பெருமையினைப் பாரறியப் போற்றியிருக்கிறார்.

அகழ்வாராய்ச்சி அறிஞர் ஐராவதம் மகாதேவன் அவர்கள் கூறும்போதோ, "சிந்து சமவெளியின் முத்திரைகளைத் தொடர்ந்து ஆராய்ந்து அடையாளம் கண்டதில் அவை ஒன்றுக்கொன்று தொடர்புடைய, திராவிட மொழியின் துவக்ககாலச் சொற்குறியீடுகள் என்கிற முடிவுக்கு நான் வந்திருக்கிறேன்" என்று அறுதியிட்டு உறுதியாகத் தெரிவித்திருக்கிறார். இது தொடர்பான தமது சுமார் ஐம்பதாண்டு கால ஆய்வின் முடிவுகளைத் தொகுத்து அவர் ஓர் ஆய்வுக் கட்டுரையே வெளியிட்டிருக்கிறார். அவரது ஆய்வுக் கட்டுரையில், சிந்து சமவெளிக் குறியீடுகள் தொல் திராவிட எழுத்துரு வடிவங்கள் என்பது உறுதியாகத் தெரிய வந்திருப்பதாக அவர் அறிவித்திருக்கிறார். சிந்து சமவெளி முத்திரைகள் சொல்லும் செய்திகள், பெயர்கள், பொருள் எல்லாமே முந்தைய திராவிட மொழியின் வேர்கள் என்பதை விவரிப்பதாக அவர் தெரிவித்திருக்கிறார். பண்டைய தமிழகத்திற்கும், சிந்து சமவெளி நாகரிகத்திற்குமான விடுபடாத தொடர்பாகவே இந்த சிந்து சமவெளி எழுத்துருக்களைத் தாம் உணர்வதாகவும் அவர்

விளக்கியிருக்கிறார். சிந்து வெளியில் வாழ்ந்தவர்கள் தென்னகம் நோக்கி இடம்பெயர்ந்ததால் தென்னிந்தியாவில் அவர்களுடைய குடியேற்றம் நடந்திருக்கலாம் எனவும், இதன் காரணமாகவே சிந்து, திராவிடத்தின் நீட்சி, தமிழ் உள்ளிட்ட தென்னிந்திய திராவிட மொழிகளில் காணப்படுவதாகவும் ஐராவதம் மகாதேவன் தெரிவித்திருக்கிறார்.

அதுபோலவே செம்மொழி மாநாட்டில் விருது பெற்ற அறிஞர் அஸ்கோ பர்போலோ அவர்கள் இதே சிந்து வெளி நாகரிகம் பற்றித் தெரிவிக்கும்போது, "சிந்து சமவெளி நாகரிகம் நிலவிய ஹாரப்பா பகுதியில் கி.மு. 1870 மற்றும் 1890க்கும் இடைப்பட்டக் காலத்தில் எந்த மொழி என்று அறுதியிட்டுக் கூற முடியாத கற்களில் பொறிக்கப்பட்ட வடிவங்கள் கண்டெடுக்கப்பட்டன.

மேலும் அகழ்வாய்வு செய்ததில் மெசபடோமியா பகுதியில் பல எழுத்து வடிவங்கள் கண்டெடுக்கப்பட்டன. அதன் அடிப்படையில் சிந்து சமவெளி நாகரிகக் காலம் கி.மு. 2600 - 1900 என்பது ஆய்வுகள் மூலம் உறுதியானது. சிந்து சமவெளி நாகரிகம் அழிந்தபோதே, சிந்து சமவெளி எழுத்து வடிவங்களும் சேர்ந்து அழிந்துவிட்டன. ஆனாலும் பாதுகாக்கப்பட்ட சில எழுத்து வடிவங்கள் ஆய்வுக்கும் ஹாரப்பாவில் பயன்படுத்தப்பட்ட மொழியினை அறியவும் உதவியது. வரலாற்று மொழிகள் வாயிலாக நாம் அறிய முடிவது என்னவென்றால், சிந்து சமவெளிப் பகுதி மக்கள் (ஹாரப்பா) திராவிட மொழியைத்தான் பேசியிருக்க வேண்டும்" என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறு சிந்து வெளி நாகரிகம் பற்றி நமது மொழியின்பாலும், நாகரிகத்தின்பாலும் அக்கறையோடு தெரிவித்திருக்கின்ற நிலையில், அதற்கெல்லாம் பாதகம் ஏற்படுகின்ற வகையில் தற்போது நிலைமை உள்ளது என்பதைத்தான் "இந்து" ஆங்கில நாளிதழில் முகமது அலி அவர்கள் தனது கட்டுரையில் தெரிவித்திருக்கிறார்.

"தி இந்து" ஆங்கில நாளிதழில் "சிந்து சமவெளி நாகரிகத்தின் ஒரு பகுதியான "ஹாரப்பாவின் தொன்மை" தகர்க்கப்பட்டு, வீடுகள் கட்டவும், விவசாயநில விரிவாக்கத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது" என்ற தலைப்பில் வெளிவந்துள்ள

அந்தக் கட்டுரையில், "உத்தரப்பிரதேச மாநிலம் பக்பட் மாவட்டத்தில் உள்ள 5,000 ஆண்டுகள் பழமை வாய்ந்த "சிந்து சமவெளி" யில் மக்கள் வாழ்ந்தபகுதி தற்போது முறையாகப் பாதுகாக்கப்படாமல், அழிவின் விளிம்பில் உள்ளது. 1957ஆம் ஆண்டு அகழ்வாராய்ச்சியில் வெளிச்சத்திற்கு வந்த இந்த இடம், இந்தியாவிலேயே சரித்திரரீதியாக மிக முக்கியத்துவம் வாய்ந்த இடம் எனக் கருதப்பட்டது. கங்கைக்கும் யமுனைக்கும் இடையிலான இந்த இடத்தில் தொன்மைக் காலத்தில் மக்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் தென்பட்டன. ஆனால் தற்போது கிராம விவசாயிகள் தங்களுடைய விவசாயத்தை விரிவுபடுத்துவதற்காக பல நூற்றாண்டுகள் பழைமையும் பெருமையும் வாய்ந்த கட்டிட அமைப்புகளைத் தகர்த்து வருகின்றனர். சிலர் அந்தப் பகுதியில் தங்கள் வீடுகளையும், தங்கள் சமூகத்திற்கான நினைவிடங்களையும், கோயில் போன்ற அமைப்புகளையும் உருவாக்கி வருகிறார்கள். ஹாரப்பா கலாச்சாரத்தின் மையமான இந்தப் பகுதி கண்டுபிடிக்கப்பட்டதற்குப் பிறகு, பாதுகாக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது அந்த நிலை முற்றிலும் மாறி, சிறிது சிறிதாக அழிந்து வருகிறது. மிகத் தொன்மை மக்கள் வாழ்ந்த இந்தப் பகுதி ஹாரப்பா கலாச்சாரத்தின் இறுதிக் கட்டத்தைச் சுட்டிக் காட்டுவதாகும். நகர்ப்புற வடிவமைப்புக்குச் சிறப்பான முன்னோடி அடையாளமாக விளங்கும் இந்த நாகரிகம் கி.மு. 3,300 க்கும் கி.மு. 1,300க்கும் இடைப்பட்ட காலத்தில் மேலோங்கி விளங்கியதாகும். ஆக்கிரமிப்புகளின் காரணமாக, பழைமை வாய்ந்த இந்தப் பகுதி முன்பு இருந்ததில் முக்கால் பங்கு அழிக்கப்பட்டுவிட்டது. மத்திய அரசின் அகழ்வாராய்ச்சித் துறையைச் சார்ந்த அதிகாரி ஒருவர் கூறும்போது, மாநில அரசுக்கு ஆக்கிரமிப்புகளைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கடிதம் எழுதியதாகவும், ஆனால் அதிகாரிகள் மத்தியில் தொன்மை வாய்ந்த இந்த இடத்தைப் பற்றிய விழிப்புணர்வு சிறிதும் இல்லை" யென்றும் தெரிவித்திருக்கிறார்.

தமிழகத் தலைநகரில் முப்பெரும் விழாவினை நாம் எடுக்கின்ற நேரத்தில் நமது கவனத்தைக் கவருகின்ற வகையில் இந்தக் கட்டுரை வெளிவந்துள்ளது நமக்குக் கவலையை ஏற்படுத்துவதாக உள்ளது. இந்தக் கருத்துகளையெல்லாம் நமது மத்திய அரசுக்கு

எடுத்துச்சென்று, சிந்து வெளிநாகரிகம் காப்பாற்றப்படவும், மிகப் பழைமை வாய்ந்த ஓர் இனத்தின் அந்த நாகரிகம் தோன்றிய ஆதிகாலப் பகுதிகளின் தொன்மை சிறிதும் சிதைந்து விடாமல் பாதுகாக்கப்படவும் மத்திய பா.ஜ.க. அரசும், உத்திரப்பிரதேச மாநில அரசும் உதவிட வேண்டுமென்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் 107வது பிறந்த நாள் விழாவினைக் கொண்டாடுகின்ற இந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசும், குறிப்பாக பிரதமர் நரேந்திர மோடி அவர்களும், உத்திரப்பிரதேச முதல்வர் அகிலேஷ் யாதவ் அவர்களும் இந்தப் பிரச்சினையில் முக்கிய அக்கறையோடும், சரித்திரச் சிந்தனையோடும் ஈடுபட்டு, சிந்துவெளி நாகரிகத்தின் அடையாளச் சின்னங்களையும், நாகரிகப் பரப்பையும் காப்பாற்றிட முன்வர வேண்டுமென்று மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

அன்புள்ள,

மு.க.

15-9-2015

3981. நல்ல தருணம் இது; நழுவ விடலாமா?

உடன்பிறப்பே,

தந்தை பெரியார் அவர்களின் 137வது பிறந்த நாள் - பேரறிஞர் அண்ணா அவர்களின் 107வது பிறந்த நாள் - தி.மு. கழகத்தின் 67வது பிறந்த நாள் - என திராவிட இயக்கத்தின் மூன்று முக்கிய நிகழ்வுகளையும் இணைத்துக் கொண்டாடுகின்ற முப்பெரும் விழாவினை மிகுந்த எழுச்சியோடு நடத்தி முடித்திருக்கிறோம். அந்த விழாவில் இந்த ஆண்டு பெரியார் விருது பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயலாளராக அரும்பணியாற்றியவரும், தற்போது தலைமைக் கழகத்தின் சட்ட திட்டத் திருத்தக் குழுவில் உறுப்பினராக இருப்பவரும், சட்டப்பேரவை உறுப்பினராகவும், மாநிலங்களவை உறுப்பினராகவும் செயல்பட்டவருமான, ஆண்டிமடம் எஸ்.சிவசுப்பிரமணியம் அவர்களுக்கும், அண்ணா விருது கழகத்தின் சார்பில் நடத்தப்பட்ட பல்வேறு போராட்டங்களில் கலந்துகொண்டு சிறை சென்று, கர்நாடக மாநிலத்தில் பல ஆண்டுகாலமாகத் தொடர்ந்து கழகப் பணியாற்றி வரும் வி.தேவராசன் அவர்களுக்கும், பாவேந்தர் விருது முகவை மாவட்டத்தில் கழகம் வளர்த்த எம்.எஸ்.கே. சத்தியேந்திரன் குடும்பத்தைச் சேர்ந்தவரும், சத்தியேந்திரனின் இளவல் எம்.எஸ். கே. ராஜேந்திரனின் துணைவியாரும், நாடாளுமன்றத் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றவருமான, பவானி ராஜேந்திரன் அவர்களுக்கும், என் பெயரிலான, கலைஞர் விருது கழகத்தின் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு பல ஆண்டுக் காலமாக ஆதரவாளராகச் செயல்பட்ட மனுஷ்யபுத்திரன் அவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மனுஷ்ய புத்திரன் அவர்கள் தற்போது கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, அண்மையில் தன்னையும் கழகத்தில் உறுப்பினராக இணைத்துக் கொண்டார். அவர் நல்ல கவிஞருமும்கூட. அவருடைய பேச்சுகள் பலவற்றை நான் கேட்டுப் பாராட்டியிருக்கிறேன்.

அவரையும் சேர்த்து விருது பெற்ற இந்த நான்கு பேருக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் கொண்ட பொற்கிழியும் கேடயமும் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு விருது பெற்ற நான்கு பேரையும் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

பரிசு பெற்ற மாணவச் செல்வங்களையும், பரிசு பெற்ற ஆட்டோ தொழிலாளர்களையும் வாழ்த்துகிறேன். இத்துடன் நம்முடைய பணி முடிந்துவிட வில்லை. நான் கடந்த ஆண்டு முப்பெரும் விழாவிலே உரையாற்றும்போது, என் பேச்சின் இறுதியில் குறிப்பிட்டதை மறந்திருக்க மாட்டீர்கள் என்று கருதுகிறேன்.

"இந்தக் கழகத்திற்காக நாம் என்ன செய்தோம் என்பதுதான் ஒவ்வொரு நாளும் நாம் நமக்குள் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி. அது எதிர்காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்லக்கூடிய சக்தி வாய்ந்த கேள்வி, வலிமை வாய்ந்த கேள்வி என்பதை நினைவூட்டி, அந்த நினைப்போடு இந்தக் கழகத்தை வெற்றிபெறச் செய்யுங்கள். நான் அடுத்து வருகின்ற தேர்தல் வெற்றியை மட்டும் குறிப்பிடவில்லை. அந்த வெற்றியை யார் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் பெற்று விடலாம். அதைப் பெறுவதற்கு பணம் மாத்திரம் இருந்தால் போதும் என்ற சூழ்நிலை இன்றைக்கு; ஜனநாயகம் வாழ்ந்த தமிழகத்தில் ஏற்பட்டிருக்கின்றது. ஜனநாயகம் புறக்கணிக்கப்பட்டு, பணநாயகம் தலை விரித்தாடுகின்ற காலத்தில் நாம் நம்முடைய இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். எனவே ஜனநாயகத்தைக் காப்பாற்ற, பண நாயகத்தை வீழ்த்த - சர்வாதிகாரத்திற்கு இடம்தராத ஒரு சூழ்நிலையை உருவாக்க அனைவரும் ஒன்றுபட்டுப் பாடுபட வேண்டும். இளைஞர்கள், மாணவர்கள், தமிழர்களாகப் பிறந்த வர்கள் அனைவரும் தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை பேரும் இந்தச் சூளுரையை மேற்கொள்ள வேண்டும்" என்பதுதான் கடந்த ஆண்டு நான் கூறிய கருத்து.

அந்தக் கருத்துகள் கடந்த ஆண்டுக்கு மட்டும் உரிய கருத்துகள் அல்ல. இந்த ஆண்டிலும் நீங்கள் அனைவரும் மனதில் கொள்ள வேண்டிய கருத்தாகும். தமிழ்நாடு சட்டப்பேரவையின் பொதுத்தேர்தல் வர இன்னும் சில மாதங்கள்தான் உள்ளன. அடுத்த ஆண்டு முப்பெரும் விழா நடைபெறும்போது, தமிழ் நாட்டின் தலைவிதி மாற்றப்பட்டிருக்கும். மாற்றப்பட்டாக

வேண்டும். அந்தத் தலைவிதி மாற்றப்படாவிட்டால், தமிழ்நாட்டின் தலைவிதியே மாற்றப்பட்டு விடும். ஏன், தமிழ் நாட்டின் பெயரையே மாற்றி "அம்மா நாடு" என்று பெயர் வைத்தாலும் வைத்து விடுவார்கள்! தற்போது "அம்மா" பெயர் இல்லாத திட்டங்கள் ஏதாவது இன்னும் பாக்கி இருக்கிறதா? "டாஸ்மாக்" கடைகளுக்கும் "அம்மா" பெயர் வைக்கவேண்டியதுதானே? தமிழ்நாட்டிலே ஜனநாயகம் என்ற ஒன்று இருக்கிறதா? சட்டமன்றம் என்ற ஒன்று இருக்கிறதா? அங்கே எதிர்க் கட்சிகள் இயங்க இடம் அளிக்கப்படுகிறதா? அரசை எதிர்த்து யாராவது ஒரு வார்த்தை கூற வாய்ப்பு அளிக்கப்படுகிறதா? கடந்த ஒரு மாதமாகச் சட்டப்பேரவை நடைபெற்றிருக்கிறது. எந்த அறிவிப்பாக இருந்தாலும் "எனது தலைமையிலான அரசு" என்று பேச்சுக்குப் பேச்சுச் சொல்லிக் கொள்வதிலும், "நான் ஆணையிட்டேன்" என்று தனக்குத்தானே தட்டிக் கொடுத்துக் கொள்வதிலும்தான் நேரம் போகிறது. அமைச்சர்கள் மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கும் போதாவது முதல்வர் அவையிலே இருக்கிறாரா? பேரவையில் பிரதான எதிர்க்கட்சியான தே.மு.தி.க. உறுப்பினர்கள் மீதுள்ள நடவடிக்கையை ரத்து செய்து, ஜனநாயக மரபுகளைச் சற்று எண்ணிப்பார்த்து, அந்தக் கட்சி உறுப்பினர்களையும் அவை விவாதத்திலே பங்கேற்கச் செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தேன். அதற்கு அரசுத் தரப்பில் எந்தப் பதிலும் தரவில்லை. பேரவை நடக்கும்போது, அரசின் சார்பாக முக்கியமான அறிவிப்புகளை அவையிலேதான் செய்வது வழக்கம். ஆனால் முதலீட்டாளர் மாநாடு சம்மந்தமான முக்கியமான அறிவிப்புகளை எல்லாம் முதலமைச்சர் பேரவையில் தெரிவிக்காமல், அந்த மாநாட்டில் அறிவித்தார். ஒருவேளை அவர்களே, அவற்றையெல்லாம் முக்கியமான அறிவிப்புகளாகக் கருதவில்லையோ என்னவோ?

110வது விதியின்கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் முதலமைச்சர் ஜெயலலிதா செய்த அந்த அறிவிப்புகள் என்னவாயிற்று என்று விரிவாகக் கேட்டிருந்தேன். அதற்கு எந்தப்பதிலும் அரசுத்தரப்பில் இதுவரை சொல்லவில்லை. எல்லா அமைச்சர்களின் துறைகள் பற்றிய அறிவிப்புகளையும் முதலமைச்சரே படிக்கிறார். முக்கியமான பெரும் திட்டங்களையெல்லாம் கூட முதலமைச்சர் நேரில் செல்லாமல் "வீடியோ கான்பரன்ஸ்" மூலமாகத் தொடங்கி வைக்கிறார்.

கடந்த நான்காண்டு காலமாகத் தூங்கிவிட்டு, தற்போது பொதுத் தேர்தல் வருகிறது என்றதும் திடீரென்று தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டைக் கூட்டுவதாக அறிவித்து, அதுவும் கேலிக் கூத்தாக முடிந்துள்ளது. யாரும் இந்த ஆட்சியை நம்பி - ஆட்சியாளர்களின் வெற்று வார்த்தைகளை நம்பி, தொழில் தொடங்குவதாக இல்லை. ஆனால் ஆட்சியினரின் கெஞ்சலுக்கு இசைந்து பல கோடி ரூபாய் முதலீட்டில் தொழில் தொடங்குவதாக ஒரு சிலர் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதா இரண்டே நாள் மாநாட்டில் 2 லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய் தொழில் முதலீடு தமிழ்நாட்டிற் குக் கிடைத்துள்ளதாக அறிவித்தார். கடந்த ஓராண்டு காலத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் 26 நாடுகளுக்குப் பயணம் செய்து அதன் மூலமாக இந்தியாவின் பல மாநிலங்களுக்கும் சேர்த்துக்கிடைத்த முதலீடே மொத்தம் 1 லட்சத்து 89 ஆயிரம் கோடி ரூபாய்தான் என்று மத்திய அரசின் தொழில் கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறையின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் நமது முதலமைச்சர் இரண்டே நாளில் 2 லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய்க்கு முதலீட்டைப் பெற்றிருப்பதாகச் சொல்கிறார். இன்னும் சொல்லப்போனால், 2011ஆம் ஆண்டு ஜனவரியில், மோடி அவர்கள் குஜராத் மாநில முதலமைச்சராக இருந்தபோது, சர்வதேச முதலீட்டாளர்களை அழைத்து இரண்டு நாள் மாநாடு ஒன்றினை நடத்தினார். அப்போது அவரிடம், 7 ஆயிரத்து 936 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு, அதன் மூலம் 450 பில்லியன் டாலர், அதாவது 20.83 இலட்சம் கோடி ரூபாய்க்கான முதலீடுகளைக் குவிப்பதாக மாநாட்டுக்கு வந்திருந்த தொழில் முதலீட்டாளர்கள் எல்லாம் வாக்குறுதி அளித்தார்கள்.

ஆனால் உண்மையில் வந்த முதலீடு எவ்வளவு தெரியுமா? குஜராத், சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டில் கையெழுத்திடப்பட்ட 7,936 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், 2011ஆம் ஆண்டிலிருந்து 2015ஆம் ஆண்டு ஜூலை மாதம்வரை மொத்தம் 407 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்தான் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன; அதாவது அந்த மாநாட்டில் உறுதி அளிக்கப்பட்ட 20.83 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு கிடைக்கும் என்பதற்கு மாறாக, கடந்த நான்கரை ஆண்டுகளில், மோடி அவர்களின் பெரு முயற்சிகளுக்குப் பிறகும், 1 லட்சத்து 11 ஆயிரத்து 677 கோடி ரூபாய் முதலீடுகள்தான் குஜராத்

மாநிலத்திற்குக் கிடைத்திருக்கின்றன என்றால், தமிழ்நாட்டில் ஜெயலலிதாவின் அறிவிப்பு என்ன ஆகும் என்பது புரிகிறதா இல்லையா? கேழ்வரகில் நெய்வடியும் என்கிறார்களே; இவர்கள் சொல்வதையெல்லாம் நம்புவதற்கு, கேட்பவர்களுக்குப் புத்தி இல்லையா என்ன?

ஜெயலலிதா பேசும்போது தொழில் முதலீட்டில் தமிழகம் முதல் இடத்தில் இருக்கிறது, மூன்றாம் இடத்தில் இருக்கிறது என்றெல்லாம் கூறினார். ஆனால் இன்று ஏடுகளில், இந்தியாவில் தொழில் தொடங்க சிறந்த மாநிலம் என்ற பட்டியலில் தமிழகம் 12வது இடத்தில் இருப்பதாக உலக வங்கி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் எங்கும், எதுவும் நடைபெறாத தேக்க நிலைமை உள்ளது. எதிர்க் கட்சியினரைத்தான் வெளியேற்றி விட்டோமே என்று, அமைச்சர்கள் எல்லாம் கேள்வி கேட்பவர் யாரும் இல்லை என்ற இறுமாப்பான எண்ணத்தோடு நடந்துகொள்கிறார்கள்; பேரவையிலேயே உண்மைக்கு மாறான செய்திகளைச் சொல்லுகிறார்கள். மின்சாரத்தில் மிகை மாநிலமாகத் தமிழ்நாட்டை மாற்றி விட்டோம் என்று ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அறிவிக்கிறார்கள். ஆனால் உண்மை நிலைமையை மக்கள் அறிவார்கள். சென்னைத் தெருக்களிலே எரியும் விளக்குகளில் ஏதாவது ஒளி இருக்கிறதா? அதுபோலத்தான் குடிநீர்ப் பிரச்சினை. தாய்மார்கள் குடங்களைத் தூக்கிக் கொண்டு அலைகின்ற புகைப்படங்கள் தொடர்ந்து ஏடுகளில் வந்து கொண்டிருக்கின்றனவே? ஆனால் முதல் அமைச்சரிடம் அமைச்சர்களும், ஒரு சில அதிகாரிகளும் உண்மைக்கு மாறான வாக்குறுதிகளைக் கொடுக்கிறார்கள்.

தமிழகம் முழுவதிலும் மதுவிலக்குப் பிரச்சினை பற்றி எரிகிறது. சசி பெருமாள் என்ற காந்தியவாதியின் உயிரே போய் விட்டது. தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும் உடனடியாக மதுவிலக்கு கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று அறிக்கைகள் கொடுத்துள்ளன. நம்மைப் பொறுத்தவரையில் இன்னும் ஒரு படி மேலே போய் தி.மு. கழகம் ஆட்சிக்கு வந்தால் மது விலக்குக் கொள்கையை நடைமுறைப்படுத்துவோம் என்று திட்டவட்டமாக, தெளிவாக நான் அறிக்கையே கொடுத்து விட்டேன். ஆனால் ஆளுங்கட்சியினர் அதைப் பற்றி வாயே திறப்பதில்லை. மாறாக, அவர்களுக்கு வேண்டிய நபர்கள் நடத்தும்

மதுபான உற்பத்தித் தொழிற்சாலை கொள்ளை இலாபம் சம்பாதிக்க வழி வகை செய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில்தான் இன்னும் சில மாதங்களில் சட்டப்பேரவைக்கான பொதுத் தேர்தல் வரவுள்ளது. ஆளுங்கட்சியினருக்கு உள்ள நம்பிக்கையெல்லாம் கோடிக்கணக்கிலே குவித்து வைத்திருக்கின்ற லஞ்சப் பணத்தைக் கொண்டு, மக்கள் வாக்குகளை வாங்கி விடலாம் என்று நப்பாசையோடு இருக்கிறார்கள். எதிர்க்கட்சிகளிடம் ஒற்றுமை ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து ஒவ்வொரு கட்சியிலும் ஒரு சில முக்கியமானவர்களைக் "கொள்முதல்" செய்து, அவர்கள் மூலமாக எதிர்க்கட்சிகளிடம் தேர்தல் உடன்பாடு ஏற்படாமல் இருக்கப் பிரித்தாளும் முயற்சி மேற்கொள்கிறார்கள். அமைச்சர்களோ, தாங்கள் சம்பாதித்து வைத்திருக்கின்ற பணத்தில் ஒரு வாக்குக்கு எத்தனை ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்கலாம் என்று கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம்மிடம் பணம் இல்லை - வாகன வசதிகள் இல்லை - பத்திரிகை பலம் இல்லை. ஆனால் மக்களின் தூய்மையான நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் நம் பக்கம்தான் இருக்கின்றது. நமக்கு வெற்றியைத் தேடிக் கொடுப்பவைகளும் அவைகளேயாகும்.

நடுநிலையோடு நடக்கவேண்டிய பெரும்பாலான நாளேடுகள் மற்றும் வார ஏடுகளில் ஒரு சில, பத்திரிகாதர்மத்தை மறந்து, விளம்பர மாயையில் சிக்கி, அரசின் முழுப் பக்க விளம்பரங்களைப் பெற்றால்போதும் என்று, ஆளுங்கட்சியினரின் அடாவடித்தனங்களையும், ஜனநாயக விரோதமான செயல்களையும், அரசின் முறைகேடுகளையும் சுட்டிக்காட்ட மறுக்கிறார்கள். அதே நேரத்தில், நமது கழகத்தைப் பற்றி எவ்வளவு சிறுமைப்படுத்தி எழுத முடியுமோ, அந்த அளவுக்கு எழுதுகிறார்கள் - செய்திகளை வெளியிடுகிறார்கள். துரும்பைத் தூணாக்கி, பேனைப் பெருமாளாக்கி, தூபம் போடும் தொழிலைத் தொடர்ந்து செய்கிறார்கள். இந்த நிலையில்தான் நாம் பொதுத் தேர்தலைச் சந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படி இருக்கிற நிலையில் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். "நான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் அளந்து எடுத்து வைக்கிறேன்" (My steps are measured) என்று

அண்ணா சொன்னபடி நாம் நடந்துகொள்ள வேண்டும். பெரியவர் பக்தவத்சலம், அந்தக் காலத்தில் சொல்வாரே, தி.மு.க. தொண்டன் என்றால் "சிங்கிள் டீ"யைக் குடித்துவிட்டு அல்லும் பகலும் அயராமல் பணியாற்றுவான் என்று, அப்படிப்பட்ட தொண்டர்களாக நீங்கள் ஒவ்வொருவரும் மனமாற்றம் அடைந்திட வேண்டும்.

வாக்காளர் பட்டியலிலேயே ஆளுங் கட்சியினர், தேர்தல் ஆணையத்தின் தோள்களில் கை போட்டுக்கொண்டு மோசடி செய்ய முயற்சி செய்வது பற்றியெல்லாம் ஏற்கனவே தொடர்ந்து செய்திகள் வந்துள்ளன. உயிரோடு இல்லாதவர்களைப் பட்டியலிலே சேர்த்து, உயிரோடு இருப்பவர்களின் பெயர்களை எல்லாம் நீக்கி - சட்டத்துக்குப் புறம்பான இப்படிப்பட்ட தவறுகளையெல்லாம் கண்டறிந்து உரியவர்களிடம் புகார் கூறி, அவற்றைக் களைவதற்கான முயற்சியிலே ஈடுபட வேண்டும். கழக வழக்கறிஞர் அணியின் சார்பாக அந்தப் பணியிலே ஈடுபட்டுள்ளார்கள். தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்காகக் குழு ஒன்று அறிவிக்கப்பட்டு, அவர்கள் பணிகளும் வேகமாக நடைபெற்று வருகின்றன. கழகப் பொருளாளர், தளபதி மு.க.ஸ்டாலின், பிரச்சாரப் பணிகளிலே தீவிரமாக ஈடுபட்டு, கழகத்தின் முழு நேரத் தொண்டனாக மாநிலமெங்கும் பம்பரம் போல் சுற்றிச் சுழன்று பணியாற்றி வருகிறார். வரும், 20-9-2015 முதல் "நீண்ட நெடிய அணி வகுப்பு" என்பதைப் போல "நமக்கு நாமே" பயணத்தை மேற்கொண்டு தமிழகமெங்கும் மக்களைச் சந்தித்திட வரவிருக்கிறார். அவரது அந்தப் பிரச்சாரப் பயணத்தை மிக வெற்றிகரமாக ஆக்கித் தர வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு கழகத் தோழர்களுக்கும் உண்டு.

நானும் அன்றாடம், உடன்பிறப்பு மடல்கள் வாயிலாகவும், அறிக்கை மூலமாகவும் உங்களோடு தொடர்பு கொண்டு உரையாடுவேன். இந்த முறையும் தமிழர்கள் ஏமாந்து விட்டால் பிறகு தலை நிமிரவே முடியாத நிலை ஏற்பட்டுவிடும். இந்த முயற்சியிலே தோற்றுவிட்டால், பிறகு ஆப்பிரிக்க நாட்டிலே இருந்த நீக்ரோக்களும், அமெரிக்க நாட்டிலே இருந்த சிகப்பிந்தியர்களும் எந்தக் கதியைச் சந்திக்க நேர்ந்ததோ, அந்த நிலைதான் தமிழர்களுக்குக் கிடைக்கும். பால் பொங்கிவருகின்ற அந்தப் பக்குவமான நேரத்தில் தாய்மார்கள் குழந்தை அழுதாலும் எழுந்து போகமாட்டார்கள். வருகின்ற ஒரு சில மாதங்கள் பால்

பொங்குகின்ற காலம் - இந்த மாதங்களில் யார் யார் நம்முடைய கருத்துக்களைக் கேட்க மறுக்கின்றார்களோ அவர்களுடைய செவிவழி நமது கருத்துகள் நுழைந்து உள்ளத்திலே தங்கி அவர்களையெல்லாம் நம் பக்கத்திலே ஈர்த்துக் கொண்டு வருகின்ற பக்குவமான காலம்.

ஆனால் மக்களுக்கு உண்மையான நிலை இப்போதுதான் புரியத் தொடங்கியிருக்கிறது. புரிந்து கொண்ட மக்கள் நம்மை நோக்கி வேகமாக வந்து கொண்டிருக்கிறார்கள். திசைமாறிச் சென்றவர்கள் எல்லாம், தி.மு. கழகமே தமிழகத்தின் நம்பிக்கை என்று தீர்மானித்து, நம் பக்கம் அணி வகுக்கத் தொடங்கி விட்டார்கள். இந்த நேரத்தில் நாம் சோம்பியிருந்துவிடக் கூடாது. கடமை ஆற்றுவதிலிருந்து நழுவிவிடக் கூடாது. 2016ஆம் ஆண்டுத் தேர்தலில் நமக்குத்தான் அதிகப் பொறுப்பு இருக்கிறது. அதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. எதிரிகளின் பண பலத்தையோ, சூழ்ச்சிகளையோ கண்டு பயப்படத் தேவையில்லை. நமது இலட்சியம் மிகத் தூய்மையானது. அது இந்த முறை நிச்சயம் வெற்றி பெற்றே தீரும் என்று உங்களுக்குத் தெரிவிப்பதுடன், வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையாக உறுதியோடு ஒவ்வொருவரும் பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

19-9-2015

3982. எல்லோரையும் எப்போதும் ஏமாற்ற முடியுமா?

உடன்பிறப்பே,

மின்சார உற்பத்தி பற்றியும், மின்வெட்டு பற்றியும் அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் கடந்த நான்கரை ஆண்டு காலமாகத் தமிழ்நாட்டு மக்களை எப்படி உண்மைக்கு மாறான செய்திகளை அடுக்கடுக்காகச் சொல்லி ஏமாற்றி வருகிறார்கள் என்று அவ்வப்போது நாம் எடுத்துக் கூறியே வருகிறோம்.

ஆதாரமாக அண்மையில் வெளிவந்த சில நாளேடுகள் இந்த மின்வெட்டு குறித்தும், மின் தடை குறித்தும் என்னென்ன தெரிவித்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். நேற்றைய தினம் தமிழகச் சட்டப்பேரவையில் மின் துறை அமைச்சர் மின்வெட்டே கிடையாது என்று பலமுறை சொல்லியிருக்கிறார். ஆனால் நேற்றையதினம் காலையில் வெளிவந்த "டைம்ஸ் ஆப் இந்தியா" ஆங்கில நாளேட்டில் வந்த செய்தி என்ன தெரியுமா?

POWER CUTS ARE BACK IN STATE AS WIND POWER GENERATION REDUCES.

Shortage was 2400 MW in Last 2 days.

என்ற தலைப்பில் வந்துள்ள செய்தியில் -

"Close on the heels of Tamil Nadu organising a Global Investors' Meet with the promise of uninterrupted power supply to investors, the State has plunged into a serious power shortage.The shortage has been 2,400 MW in the last two days as wind power generation, which was about 2000 MW has almost stopped in the last two days. Power demand hovered around 13,338 MW on Wednesday evening, whereas the supply was only 11,055 MW... Due to the shortage, many districts witnessed power cuts on Wednesday evening and Thursday morning."

- என்று எழுதப்பட்டுள்ளது. உண்மை நிலை இவ்வாறிருக்க, தமிழகச் சட்டப்பேரவையில், மின் துறை அமைச்சர், மின்வெட்டே

தமிழகத்தில் இல்லை என்று ஒரு முறைக்குப் பல முறை கூறுகிறார் என்றால், பேரவையில் இப்படி உண்மைக்கு மாறான தகவல்களைக் கூறலாமா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

தமிழக அரசின் இந்த நிலைமையை தமிழகத்திலே உள்ள பெரும்பாலான நாளேடுகள் மறைத்த போதிலும், "தினகரன்" நாளேடு சற்று விரிவாகவே "தமிழகத்தின் பல மாவட்டங்களில் மீண்டும் 2 மணி நேரம் மின்வெட்டு - நள்ளிரவில் பொதுமக்கள் மறியல்" என்ற தலைப்பில் 25-9-2015 அன்று செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். அந்தச் செய்தியில், "தமிழகத்திற்குச் சராசரியாக நாள்தோறும் 13,940 மெகாவாட் மின்சாரம் தேவைப்படுகிறது. ஆனால் 10,400 முதல் 10,500 மெகாவாட் என்ற அளவிலேயே மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால், தனியாரிடம் 500 முதல் 600 மெகாவாட்வரை கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில் தமிழகத்தில் கடந்த சில வாரங்களாக மின் உற்பத்தி கணிசமாகக் குறைந்துள்ள நிலையில் சென்னை தவிர்த்து பெரும்பாலான மாவட்டங்களில் நேற்று முன்தினம் முதல் 2 மணி நேரம் மின்தடை செய்ய மின்வாரிய அதிகாரிகள் வாய்மொழி உத்தரவு பிறப்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதற்கு முன்னர் மின் பற்றாக்குறை ஏற்பட்ட போது, எந்தெந்த பகுதிகளில் எப்போது மின்தடை செய்யப்படும், எவ்வளவு நேரம் மின்தடை நீடிக்கும் என்பதை முன்னதாகவே மின்வாரிய அதிகாரிகள் தெரிவிப்பார்கள். ஆனால், தற்போது மின்தடை குறித்து எந்த அறிவிப்பையும் செய்யவில்லை. குமரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு 1 மணி நேரத்திற்கு ஒரு முறை மின்சாரம் தடைபட்டுக் கொண்டிருந்தது. இது பக்ரீத் பண்டிகைக்கு தயாராகிக் கொண்டிருந்த இஸ்லாமிய மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. தொடர் மின்வெட்டைக் கண்டித்து அழகியமண்டபம் பகுதி பொதுமக்கள் எஸ்.டி.பி.ஐ. நிர்வாகிகளுடன் இரவு 8 மணிக்குச் சாலையில் திரண்டனர். பின்னர் மறியலுக்கு முயன்றனர். அவர்களிடம் தக்கலை போலீசார் பேச்சுவார்த்தை நடத்தியபின் பொதுமக்கள் கலைந்து சென்றனர். நாகர்கோவில் இடலாக்குடியில் இரவு 11 மணியளவில் அப்பகுதி மக்கள் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர். 12 மணிக்கு மின்சாரம் மீண்டும் வந்ததால் மக்கள் போராட்டத்தைக் கைவிட்டுக் கலைந்து சென்றனர். நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களிலும் கடந்த 4 நாட்களாக அறிவிக்கப்படாத மின்வெட்டு அமல் படுத்தப்படுகிறது" என்றெல்லாம் எழுதியுள்ளது.

ஏன், கடந்த 16ஆம் தேதி தாம்பரம் நகரம், சிட்லப்பாக்கம் பேரூராட்சி மற்றும் குரோம்பேட்டையின் ஒரு பகுதியில் மின்தடை ஏற்பட்டு, நள்ளிரவுவரை மின்சாரம் வராததால் பொதுமக்கள் சிட்லப்பாக்கம் நேரு நகரில் உள்ள மின்வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்டு அதிகாரிகள் சமாதானத்திற்குப் பிறகு கலைந்து சென்றிருக்கிறார்கள்.

ஆனால் துறையின் அமைச்சர் தமிழகத்திலே மின்வெட்டே இல்லை என்று நம்மையும் ஏமாற்றுகிறார், சட்டப்பேரவையையும் ஏமாற்றுகிறார், ஏன், தமிழக முதலமைச்சரையும் ஏமாற்றி வருகிறார். அதை நம்பி 9-9-2015 அன்று உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பேசிய முதல்வர், "மின்வெட்டு முழுவதுமாகக் களையப்பட்டு இன்று மிகை மின் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது" என்றார். முதல்வர் அறிவித்து ஒரு மாதத்திற்குள்ளாகவே, தமிழ்நாடு மிகை மின் மாநிலம் என்று முதல் அமைச்சர் பேசியது எவ்வளவு பெரிய பொய் என்பதை மாநாட்டுக்கு வந்திருந்த முதலீட்டாளர்கள் புரிந்துகொண்டால், எந்த அளவுக்கு அது தமிழக அரசுக்குத் தலைகுனிவு என்பதை ஆட்சியாளர்கள்தான் கூறவேண்டும்.

அதே முதலீட்டாளர்கள் மாநாட்டில் ஜெயலலிதா பேசும்போது, "இந்தியாவில் வெளிநாட்டு நேரடி முதலீட்டை அதிகமாகப் பெறுகின்ற மூன்றாவது மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது" என்று தெரிவித்தார். உண்மைக்கு மாறாக நான் கூறவில்லை. அவருடைய பேச்சை அழகான கையேடாகத் தமிழக அரசின் செய்தித்துறை அச்சிட்டுக் கொடுத்துள்ளது. முதலமைச்சர் பேசி ஒருசில நாட்களுக்குள், மத்திய அரசும், உலக வங்கியும் இணைந்து, 98 அம்சங்களை அடிப்படையாக வைத்துத் தயாரித்த, தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலங்களின் தரவரிசைப் பட்டியலில், தமிழகம் 12வது இடத்தில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. "முதலீட்டுக்கு உகந்த மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் பின்னடைவு ஏன்?" என்ற தலைப்பில் "தினமலர்" வெளியிட்ட செய்தியிலேகூட, "முதலீட்டாளர்களின் குறைகளைத் தீர்க்கக் காலக்கெடு மற்றும் குறித்த கெடுவுக்குள் பணிகளை முடிக்காத அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கத் தமிழகத்தில் வழி இல்லை. ஆந்திரா மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்களில் இருப்பது போல், திட்ட அனுமதிகளை, உரிய நேரத்தில் அளிக்க உத்தரவாதம் வழங்கும் சட்டமும், தமிழகத்தில் இல்லை. தமிழகத்தில் "ஒற்றைச் சாளர முறையில் அனுமதி என்று

அரசு அறிவித்திருந்தாலும், அதற்கான பிரத்யேக இணையதளமே இல்லை. பஞ்சாப், ஆந்திரா ஆகிய மாநிலங்களில், ஒற்றைச் சாளர முறையில் மனு செய்திருந்தால், அவற்றின் நிலையை அறிய வெளிப்படையான வசதி உள்ளது. அது தமிழகத்தில் இல்லை" என்றும், இன்னும் விரிவாகச் செய்தி வெளியிட்டிருக்கிறார்கள்.

"ஆனந்த விகடன்" வார இதழில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சிந்தனையாளர் கனகராஜ் கூறும்போது, "எப்போதும் அந்நிய நேரடி முதலீடு சொன்னபடி வந்துவிடுவதில்லை. ஏதோ இரண்டரை லட்சம் கோடி ரூபாயும் நாளை காலையே வந்து குவிந்துவிடும் எனக் கூறப்படும் பிம்பம் உண்மையல்ல. முதலீட்டாளர்களுக்குத் தமிழ்நாடு அரசு அறிவித்திருக்கும் சலுகைகளில் முக்கியமானது - மூன்று நிமிடங்கள் மின்சாரம் துண்டிக்கப்பட்டால்கூட, அதற்கான இழப்பீட்டை அரசாங்கம் அளிக்கும்; தங்குதடையற்ற மின்சாரம் கிடைக்கும் மாநிலமாகத் தமிழ்நாடு இப்போது இருக்கிறதா? தடையற்ற மின்சாரம் வழங்க முடியாவிட்டால், அரசாங்கம் அளிக்க வேண்டிய இழப்பீட்டின் பிரமாண்டம் எவ்வளவு எனக் கணிக்க முடியுமா? குற்றம் சுமத்த வேண்டுமென்பதற்காகப் பொத்தாம் பொதுவாகச் சொல்லவில்லை. தமிழ்நாடு அரசு அறிவித்த "தொலைநோக்குத் திட்டம் 2023"ன் மொத்த முதலீடு 15 லட்சம் கோடி. அதில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்குத் தொகையான நான்கரை லட்சம் கோடி ரூபாயை மின்சாரத் துறைக்கு என முதலீடு செய்தார்கள். அதன் மூலம் 20 ஆயிரம் மெகாவாட் மின்சார உற்பத்தி செய்யப்படும், அதுவும் 2017 ஆம் ஆண்டுக்குள் 5,000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படும் என்று மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் முதல் அமைச்சர் ஜெயலலிதா அறிவித்தார். இதோ கண்ணுக்கு எட்டும் தொலைவில் வந்துவிட்டது 2017. ஆனால் மின்சாரம்? கடந்த மூன்று வருடங்களில் மின்சார உற்பத்தித் திட்டங்கள் எதுவும் உருப்படியாகச் செயல்படுத்தப்படவில்லை. ஆக 2017 ஆம் ஆண்டுக்குள் 500 மெகாவாட் மின்சாரத்தைக்கூட இவர்களால் தயாரிக்க முடியாது என்பதுதான் நிதர்சனம். இந்த நிலையில் எந்த நம்பிக்கையில் "மின்தடை ஏற்பட்டால் இழப்பீடு" எனத் தமிழ்நாடு அரசு வாக்குறுதி கொடுக்கிறது?" என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார்.

இந்த ஆட்சியினர்தான் எந்தத் திட்டத்தையும் செயல்படுத்துவதில்லையே, தொடர்ந்து அறிவிப்புகளை

வெளியிடும் ஒரே ஒரு காரியத்தைத்தானே சளைக்காமல் செய்து வருகிறார்கள்! அதனால் அறிவிப்பு செய்ததற்காகவே பேரவையில் பாராட்டுத் தீர்மானம் வேறு! மின் உற்பத்தி குறித்து கடந்த நான்கரை ஆண்டுகளில் இந்த ஆட்சியினர் செய்த அறிவிப்புகள்தான் எத்தனை? எத்தனை? குறிப்பாக சி.ஐ.டி.யு.வைச் சேர்ந்த தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் எஸ்.எஸ். சுப்பிரமணியம் கடந்த 23ஆம் தேதி "தீக்கதிர்" நாளிதழில் ஒரு பக்கக் கட்டுரையே மின்துறை பற்றி எழுதியிருக்கிறார். அதில் இந்த ஆட்சியினர் 110வது விதியின்கீழ்ப் பேரவையில் அறிவிக்கப்பட்ட மின் திட்டங்கள் பற்றியும், அந்தத் திட்டங்கள் எல்லாம் இன்னமும் தொடங்கப்படாமல் எந்த நிலையில் உள்ளன என்பதையும் விரிவாக எழுதப்பட்டுள்ளது.

29-3-2012 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா விதி 110இன் கீழ்ப் படித்த அறிக்கையில், "660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் அனல் மின் விரிவாக்கத் திட்டம் என்னும் ஒரு புதிய திட்டத்தைச் செயல்படுத்த எனது தலைமையிலான அரசு தற்போது முடிவு செய்துள்ளது என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சுமார் 3,960 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவக்கப்படும் இந்த அனல் மின் திட்டம், 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் தனது உற்பத்தியைத் தொடங்கும்" என்று அறிவித்தார். 2015ஆம் ஆண்டு இறுதி வந்துவிட்டது. என்ன ஆயிற்று இந்தத் திட்டம்? ஏன் உற்பத்தியைத் தொடங்கவில்லை?

மின்துறை அமைச்சர் நேற்றைய தனது உரையில், சூரிய ஒளி மின் உற்பத்தி பற்றி நீண்ட நேரம் பேசியிருக்கிறார். 20-10-2012 அன்று ஜெயலலிதா சூரிய சக்தி மூலம் 3000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டத்தை வெளியிட்டு, 2013, 2014, 2015ஆம் ஆண்டுகளில் தலா 1000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய தமிழக அரசால் திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவித்தார். ஆனால் மூன்றாண்டுகளுக்குப் பிறகு பேரவையில் துறையின் அமைச்சர் 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் 3 ஆயிரம் மெகாவாட் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம் நிறுவ இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகக் கூறியுள்ளார் என்றால் என்ன பொருள்? 2013ஆம் ஆண்டு 1000 மெகாவாட், 2014ஆம் ஆண்டு 1000 மெகாவாட் என்று அறிவித்ததெல்லாம் பொய்தானே?

12-9-2014 அன்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வெளியிட்ட ஆணையில் 12-9-2015க்குள்

சூரிய சக்தி மின்நிலையம் அமைத்து, மின் உற்பத்தியைத் துவக்குவோரிடம், மின்வாரியம் ஒரு யூனிட் மின்சாரத்தை 7.01 ரூபாய் விலையில் வாங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த ஆணையை 1-4-2016 வரை, அதாவது ஆறு மாத காலத்திற்கு நீட்டித்து, மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவு பிறப்பித்தது. ஏன் இந்தக் கால நீடிப்பு என்று நான் அப்போதே கேட்டேன். வெளி மாநிலங்களில் சூரிய சக்தி மின்சாரம் ஒரு யூனிட் ரூ. 5.40க்குக் கிடைக்கும்போது, ரூ. 7.01 என்ற அதிகமான விலை கொடுத்து வாங்கக் கால நீடிப்பு செய்தது ஏன்? அண்மையில் அதானி குழுமத்தோடு செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில்கூட ஒரு யூனிட் மின்சாரம் 7.01 ரூபாய்க்கு வாங்கத்தான் முடிவு செய்யப்பட்டிருப்பதாகச் செய்தி வந்தது. வெளியிலே குறைவான விலைக்குக் கிடைக்கும்போது, அதிக விலை கொடுத்து வாங்க ஒப்பந்தம் போடப்பட்டது ஏன்?

ஒழுங்குமுறை ஆணையத்தின் மூன்று உறுப்பினர்களில் ஒருவரான திரு. நாகல்சாமி அப்போதே ஆணையத்தின் இந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்த போதிலும், அதை மீறி ஆணை பிறப்பிக்கப்பட்டதா இல்லையா? மின்சாரத்தை வாங்கவுள்ள மின்வாரியமோ, மின்சாரத்தைப் பயன்படுத்தும் மின்நுகர் வோரோ யாரும் கோரிக்கை விடுக்காத நிலையில், ஆணையம் தன்னிச்சையாக இவ்வாறு கட்டண ஆணையை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்க என்ன காரணம்? குஜராத் அதானிக்காகத் தானா? இவ்வாறு கட்டண ஆணையை நீட்டிப்பது குறித்து மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் விவாதிக்கப்படவில்லை. அதிக விலை கொடுத்து ஒப்பந்தப்படி 25 ஆண்டுகளுக்கு மின்சாரம் வாங்கினால் 23 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்று கூறப்படுகிறதே, அதற்கு மின்துறை அமைச்சரின் பதில் என்ன?

மேலும் அமைச்சர் மற்ற மாநிலங்களின் கொள்முதல் விலை அதிகமாக உள்ளதாகக் கூறி குஜராத், ராஜஸ்தான், மகாராஷ்டிரா, உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களைக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் மத்தியப் பிரதேசத்தில் இதே அதானி குழுமம் ஒரு யூனிட் மின்சாரத்தை 6 ரூபாய் 4 காசுக்கு வழங்க ஒப்புதல் கொடுத்ததைப் பற்றி அமைச்சர் ஏன் வாய்திறக்கவில்லை? தனக்கு வசதியாக அதை மூடி மறைத்தது ஏன்?

இன்னும் சொல்லப்போனால், 24-11-2013 தேதிய தினமலரிலேயே "தமிழகத்தில் சூரிய மின் உற்பத்தித் திட்டம் அம்பேல்" என்ற தலைப்பில் ஒரு செய்தி வெளிவந்தது. அந்தச் செய்தியில், "இந்தத் திட்டத்தில் ஏராளமான குளறுபடிகள் உள்ளதாலும், அதைக் கவனிக்க மின்துறை அமைச்சர் நத்தம் விஸ்வநாதன் ஆர்வம் காட்டாததாலும் சூரிய மின் சக்தி சாதன உற்பத்தியாளர்கள், முதல்வரைச் சந்தித்து முறையிட முடிவு செய்துள்ளனர்" என்றும் அப்போதே எழுதியது.

ஒட்டுமொத்தமாக அமைச்சரின் பதிலில் தற்போது மின்வெட்டு இல்லை என்றும், மின்தடைதான் உள்ளது என்றும் சொல்லியிருக்கிறார். இதிலிருந்து மின்தடை என்ற தொழில்நுட்பப் பெயரால் எதார்த்தத்தில் தொடர்ந்து நிலவிவரும் மின்வெட்டு என்பதை இல்லை என்பதைப் போலச் சாமர்த்தியமாகச் சொல்லி நிரூபிக்கப் பார்க்கிறார்கள். மின்வெட்டு இருக்கிறதா இல்லையா என்பதை நானல்ல, ஏடுகளில் வெளிவந்த செய்தியையே தெரிவித்துவிட்டேன். ஏன், நேற்று வெளிவந்த "காலைக்கதிர்" இதழில் "மின்வெட்டில் இருளில் மூழ்கிய ஜி.எச்., மெழுகு வர்த்தி ஏற்றிச் சமாளித்த நோயாளிகள்" என்ற தலைப்பில் ஒரு செய்தியும், "மூன்று மணி நேர மின்வெட்டால் அவதி - 2,170 மெகாவாட் பற்றாக்குறை" என்ற தலைப்பில் ஒரு செய்தியும் வெளிவந்துள்ளன. இப்படி நாட்டில் நடப்பதையெல்லாம் மறைத்துவிட்டு மின்வெட்டே இல்லை என்று அமைச்சர் பேரவையில் உண்மைக்கு மாறான தகவலைச் சொல்வதால் மின்வெட்டால் மக்கள் அனுபவித்துவரும் வேதனைகள் குறைந்து விடுமா? சிலரைப் பல நாள் ஏமாற்றலாம், பலரைச் சிலநாள் ஏமாற்றலாம், ஆனால் எல்லோரையும் எப்போதும் ஏமாற்ற முடியாது! அதுபோல அ.தி.மு.க. ஆட்சியின் அவலங்களை முழுமையாகப் புரிந்து கொண்டு வரும் தமிழ்நாட்டு மக்களை எப்போதும் ஏமாற்ற முடியாது என்பதை அமைச்சர் உணரும் காலம் அண்மையிலே தான்; வெகு தொலைவில் இல்லை!

அன்புள்ள,

மு.க.

27-9-2015

3983. சட்டப்பேரவை கண்ட கண்கொள்ளாக் காட்சிகள்!

உடன்பிறப்பே,

என்னதான் தமிழகத்தில் நடைபெறுகிறது? ஆட்சி என்ற ஒன்று இருக்கிறதா? இருந்தால் அது செயல்படுகிறதா? வரும், வரும் என்று சொல்லப்பட்டு வந்த தமிழகச் சட்டப்பேரவைத் தொடர் கூட்டமும், ஆளுநர் உரையாற்றிய நாளிலிருந்து கணக்கிட்டால், 29 நாட்கள் நடைபெற்று முடிந்து விட்டது! ஆளுநர் உரையாற்றிய நாள் 17-2-2015. நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது, 25-3-2015. தற்போது மானியக் கோரிக்கைகள் மீது சுதந்திர உணர்வு சிறிதுமில்லாத விவாதங்கள் 18 நாட்கள் பெயரளவில் நடைபெற்று "அம்மா" புராணத்தோடு அமைச்சர்கள் பதிலளித்து முடித்து விட்டனர். அமைச்சர்கள் தங்கள் துறைகளின் மூலம் எத்தனை கோடி ரூபாய்க்கான அறிவிப்புகளைச் செய்தனர், அந்தத் துறையின் விவாதங்கள் முடிவுற்ற சில நாட்களுக்குப் பிறகு, அதே துறையைச் சார்ந்த எத்தனை அறிவிப்புகளை 110வது விதியின் கீழ் முதலமைச்சர் ஜெயலலிதா பேரவையில் படித்தார்? அன்றாடம் இந்த ஒரே பணிக்காக மட்டும், முதலமைச்சர் பேரவைக்கு வருவதும், முதலமைச்சர் அவைக்குள் நுழைந்ததும், அவர் இருக்கும்போது வேறு யாரும் எந்தப் பிரச்சினையையும் பற்றிக் கேள்வி கேட்கக் கூடாது என்பதற்காக; கேள்வி பதில்கள் ஒத்தி வைக்கப்படுவதும், உடனடியாக முதலமைச்சர் ஏற்கனவே தயாரித்துத் தரப்பட்ட அறிக்கையை 110வது விதியின் கீழ் படிப்பதும், ஆளுங்கட்சியினர் ஒருசேர மேஜையைத் தட்டுவதும், உடனே ஆளுங்கட்சிக்கு நெருக்கமான ஒரு சிலர், அந்த அறிக்கையின் கீழ் செய்யப்பட்ட அறிவிப்பைப் பாராட்டுவதும், இறுதியாகப் பேரவைத் தலைவர், ஜெயலலிதா படித்த அறிக்கைக்காக ஆகா, ஓகோ என்று "கின்னஸ்" என்றும், "மகாபாரத - இராமாயணம்" என்றும் வானளாவப் பாராட்டுவதுதான் தாமதம், அடுத்த நிமிடமே பேரவையாவது, வேறவையாவது என்று வந்த

வேகத்திலேயே எழுந்து வெளியே சென்று விடுவதும்தான் இந்தச் சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் முழுவதும் நாடு கண்ட கண்கொள்ளாக் காட்சி! ஒரே நாள் முதல்வருக்கான காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மட்டும் ஜெயலலிதா பேரவையில் இருந்திருக்கிறார். எனவே பேரவையில் தொடர்ந்து அமர்ந்து கலந்து கொள்ளக்கூடிய அளவுக்கு, அவரது உடல்நிலை நன்றாகத்தான் உள்ளது என்பதில் மகிழ்ச்சி! எனினும், வேண்டுமென்றே அவையையும், ஜனநாயகத்தையும், மக்கள் பிரச்சினைகளையும் அலட்சியம் செய்கின்ற வகையில்தான் மற்ற மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்களை அவர் புறக்கணித்திருக்கிறார் என்றே நினைக்கத் தோன்றுகின்றது.

பேரவையில் எதிர்க்கட்சிகளின் சார்பில் கொடுக் கப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்களும், கவன ஈர்ப்புத் தீர்மானங்களும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் படவில்லை. பல்வேறு துறைகளிலிருந்து பதில்கள் வரவில்லை, வரவில்லை என்ற பதிலைத்தான் பேரவைத் தலைவர் தெரிவிக்கிறார். தொடர் கூட்டமே முடிந்து விட்டது. இருந்தாலும் பல துறைகளிலிருந்து பதில்கள் வரவில்லை என்றால், அ.தி.மு.க. ஆட்சியில் அந்தத் துறைகள் எல்லாம் பேரவையின் மாண்புகளை மதித்து எவ்வாறு பணிகளை ஆற்றுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறதல்லவா?

48 ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டதில், ஒன்றுகூட அரசால் எடுத்துக் கொள்ளப்பட வில்லை . 300 கவன ஈர்ப்புத் தீர்மானங்களில் 14 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் மட்டுமே பெயருக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன என்றால், எந்த அளவுக்கு மாநில மக்களின் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளுக்கு இந்த ஆட்சியிலே முன்னுரிமை தரப்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஆனால் முதலமைச்சர் 110வது விதியின் கீழ் 181 அறிவிப்புகளைச் செய்ததாகப் பேரவைத் தலைவர் அவையில் தெரிவித்துப் போற்றிப் புகழ்ந்திருக்கிறார். அந்த அறிவிப்புகளை ஒவ்வொன்றாக முதலமைச்சர் அவையில் செய்த போது நன்றியும், பாராட்டும் கூறிய உறுப்பினர்கள், மொத்த எண்ணிக்கையைத் தெரிவித்தபோதும் பாராட்டியிருக்கிறார்கள். கடந்த ஆண்டுகளில் 110வது விதியின் கீழ் செய்யப்பட்ட அறிவிப்புகளின் கதி என்ன என்று திரும்பத் திரும்ப எதிர்க்கட்சிகள் கேட்ட போதிலும்

அதைப் பற்றி எந்தவிதமான வெள்ளை அறிக்கையோ, பதிலோ தரப்படவில்லை. அதிலிருந்தே அவற்றின் கதி எப்படிப்பட்டது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். இன்று ஒரே நாளில்தான் நாளேடுகளில் எத்தனை எத்தனை செய்திகள்?

டெல்லியில் காவிரி கண்காணிப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றுள்ளது. அந்தக் கூட்டத்திலும் தமிழகத்துக்கு தண்ணீர் தர இயலாது என்று டெல்டா மாவட்ட விவசாயிகளின் தலையில் இடி விழுந்ததைப் போல, கர்நாடக அரசு கை விரித்து விட்டது. காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பின்படி தமிழகத்திற்கு ஆண்டுக்கு 92 டி.எம்.சி. தண்ணீரைக் கர்நாடகா தரவேண்டும். கர்நாடக அரசு கடந்த ஆகஸ்ட் மாதம் வரை 48 டி.எம்.சி. தண்ணீரை நமக்குத் தர வேண்டியுள்ளது. அக்டோபர் முதல் வரும் 2016 ஜனவரி வரை 47.5 டி.எம்.சி. தண்ணீரைத் தர வேண்டும். ஆனால் கர்நாடக அரசு அதிகாரிகள் அங்கும் மழை இல்லாமல் வறட்சி நிலை நிலவுவதாகவும், தண்ணீர் தர இயலாத சூழ்நிலை உள்ளதாகவும் கூட்டத்தில் தெரிவித்து விட்டார்கள். எனவே பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்து விட்டது.

இந்த நிலையில் இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள சம்பாப் பயிரைக் காப்பாற்றக் கோரி, காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் வேதனை முற்றிய விரக்தியோடு, கடையடைப்பு, ரெயில் மறியல், பேருந்து மறியல் போன்ற போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

தமிழகம் முழுவதும் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட சத்துணவு அலுவலர்கள் பணியாற்றி வருகின்றார்கள். அவர்கள் பணி நிரந்தரம், ஊதிய உயர்வு, காலிப் பணியிடங்களை நிரப்புதல் போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடி வருகிறார்கள். சென்னை மாநகரில் அவர்கள் பேரணி நடத்தி, முதல்வரைச் சந்திக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்த போது, அவர்கள் பிரதிநிதிகளை அமைச்சரிடம் அழைத்துச் செல்வதாகக் கூறி, இழுத்தடித்து ஏமாற்றிய காரணத்தால் சாலை மறியலில் ஈடுபட முனைந்து, அவர்கள் மீது காவல் துறையினர் தடியடி நடத்தியிருக்கிறார்கள். ஆனால் பேரவையில் மற்ற அமைச்சர்களைப் போலவே, இந்தத் துறை அமைச்சரும் தடியடி நடத்தப்படவில்லை என்று உண்மைக்கு மாறானதைச் சொல்லி மறுத்திருக்கிறார்.

மேலும் விவசாயிகள் மீது ஜப்தி நடவடிக்கையை நிறுத்தி கடன் தள்ளுபடி செய்ய வேண்டும், தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவித்து விவசாயிகளுக்கு உரிய வறட்சி நிவாரணம் பாகுபாடின்றி வழங்க வேண்டும் என்பது உட்பட ஆறு அம்சக் கோரிக்கையை வலியுறுத்தி தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தினர் அண்ணா சாலையில் அரை நிர்வாணப் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள்.

திருவள்ளூர் மாவட்டத்தில், புதிதாகத் திறக்கப்பட்ட மணல் குவாரியை உடனே மூடக்கோரி, கொசஸ்தலை ஆற்றில் குடியேறும் போராட்டம் நடத்திய 313 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மீன் பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்களின் படகு மீது கப்பலால் மோதி, இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்திய போது, படகு உடைந்து கடலில் மூழ்கியது. கடலில் குதித்த வில்வராஜ் என்ன ஆனார் என்றே தெரியவில்லை. மற்ற மூன்று பேரை இலங்கைக் கடற்படையினர் சிறை பிடித்தனர். வில்வராஜை மற்றொரு படகில் தேடிச் சென்ற மீனவர்களையும் இலங்கைக் கடற்படையினர் தாக்கி விரட்டியடித்துள்ளனர். தமிழக அரசின் சார்பில் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டால், உடனடியாக பிரதமருக்குக் கடிதம் எழுதுவதோடு தங்கள் பணி முடிந்து விட்டதாகக் கருதுகிறது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி அருகே சூரிய மின் சக்தி நிலையம் அமைக்க தமிழக அரசு அதானி குழும நிறுவனத்திற்கு அனுமதி கொடுத்ததின் தொடர்ச்சியாக அந்தப் பகுதிகளில் உள்ள விளை நிலங்களை குறைந்த விலைக்கும், முறைகேடாகவும் இடைத் தரகர்கள் மூலமாக வாங்குகின்ற முயற்சி அங்கே நடைபெறுகிறது. இதன் காரணமாக கிராம மக்கள் ஆத்திரமடைந்து அதானி குழும ஊழியர்கள் இரண்டு பேர் அரிவாள் வெட்டுக்கு ஆளாகி மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

செம்மஞ்சேரி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தடுப்பு ஊசி போடப்பட்ட மூன்று மாதக் குழந்தை ஒன்று உடல் நலம் பாதிக்கப்பட்டு, உடனடியாக சிகிச்சை அளிக்கப்படாததால் இறந்ததின் காரணமாக அந்தக் குழந்தையின் உறவினர்களும், நண்பர்களும் ராஜீவ் காந்தி சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டுள்ளார்கள்.

சட்டக் கல்லூரி மாணவர்கள் இரண்டு குழுவாகப் பிரிந்து கடும் மோதலில் ஈடுபட்டிருக்கிறார்கள். தண்டையார்பேட்டையில் இன்று ஒரே நாளில் மூன்று வீடுகளில் கொள்ளையடிக்கப்பட்டு, காவல் நிலையத்தை மக்கள் முற்றுகையிட்ட சம்பவமும் நடைபெற்றுள்ளது.

பேரவையில் கடைசி நாளன்று முதலமைச்சர் ஜெயலலிதா 110வது விதியின் கீழ் படித்த அறிக்கை களில் ஒன்று பெண் எழுத்தாளருக்கு "அம்மா இலக்கிய விருது" ஆண்டுதோறும் அளிக்கப்படவிருக்கிறதாம். அதையும் முதலமைச்சர் தனக்குத்தானே அறிவித்துக் கொண்டார். "அம்மா" பெயரிலான அந்தத் திட்டத்தைக் கூட வேறு ஒருவரைக் கொண்டு அறிவித்திட இந்த ஆட்சியினர் விரும்பவில்லை. அ.தி.மு.க. ஆட்சியில், கட்சியின் தலைவி பெயரை ஓரிரு திட்டங்களோடு நிறுத்திக் கொள்ளலாம். ஆனால் "அம்மா" பெயரில் எத்தனை திட்டங்கள்? அவ்வாறு வைத்துக் கொள்ளக் கொஞ்சமாவது கூச்சமாக இருக்காதா? அரசு என்ன, இவர்களுடைய சொந்தக் கட்சி உடைமையா?

'அம்மா' மாளிகை, 'அம்மா' மருந்தகம், 'அம்மா' தண்ணீர், 'அம்மா' உப்பு, 'அம்மா' சிமெண்ட், 'அம்மா' உணவகம், 'அம்மா ' குடிநீர், 'அம்மா' அமுதம் பல்பொருள் அங்காடிகள், 'அம்மா' விதைகள், 'அம்மா' குழந்தை நலப் பரிசு பெட்டகம் (அம்மா பேபி கேர் கிட்), 'அம்மா' முழு உடல் பரிசோதனை - என்ற வரிசையில் இப்போது செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத் தின் விருதுகளுக்குப் போட்டியாக, "அம்மா இலக்கிய விருது" அறிவிக்கப்பட்டுள்ளது.

பொன்னேரியில் 13,314 கோடியில் தொழில் முனையமாம்; நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஏதாவது நம்பும்படியாக இருக்கிறதா?

தமிழ்நாடு அரசின் ஆண்டு நிதி நிலை அறிக்கை எத்தனை கோடி ரூபாய் கொண்டது? நேற்றைய முதல் துணை மதிப்பீடுகள்கூட வெறும் 1,012.30 கோடி ரூபாய்க்குத்தான் கோரப்பட்டு ஒப்புதல் தரப்பட்டுள்ளது! மானியக் கோரிக்கைகள் மீது எத்தனை கோடி ரூபாய்க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது? இந்தத் தொடரில் அதாவது நான்கரை ஆண்டுகளில் முதலமைச்சர்

செய்த 181 அறிவிப்புகளுக்கான நிதி மதிப்பீடு எவ்வளவு? அந்தத் தொகையை எந்த நிதியிலிருந்து ஒதுக்கப் போகிறார்கள்? அந்த நிதிக்கு அவையின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதா? ஒப்புதல் பெறப்படா விட்டால் அவைகள் எல்லாம் நிறைவேறாத திட்டங்களா? சட்டப்பேரவையின் ஒப்புதல் பெறாமல் எந்தச் செலவினமும் செய்யக் கூடாது என்று இந்திய அரசியல் சட்டம் 266வது பிரிவில் சொல்லப்பட்டுள்ளதே; அந்தப் பிரிவுக்கு அ.தி.மு.க. ஆட்சியைப் பொறுத்தவரை எவ்விதப் பொருளும் கிடையாதா? இதுபற்றி இந்த இதழ் "ஜூனியர் விகடன்", "கழுகார்" பதில்களில் - "தமிழகம் ஏற்கனவே கடன் சுமையில் தத்தளித்துக் கொண்டு இருக்கும் நிலையில் தினமும், விதி எண். 110ன்படி புதிய புதிய திட்டங்களை அறிவிக்கிறார்களே, இதற்கெல்லாம் பணம் எங்கிருந்து வரும்?" என்ற கேள்விக்கு, "திட்டம் செயல்பட்டால்தானே நிதி தேவை, அறிவித்து வைப்போம் என்று அறிவித்தால் என்ன கவலை ?" என்ற பதிலைத்தான் அளித்திருக்கிறார்கள். தொழில் முதலீடுகள் எவ்வளவு என்பதை அறிவிப்பதில் செய்ததைப் போன்ற பச்சை மோசடிதான் இந்த 110வது விதியின் கீழ் செய்கின்ற அறிவிப்புகளிலும் உள்ளது.

இவ்வளவிற்கும் இடையேதான் அ.தி.மு.க. ஆட்சி நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. காவல் துறை மானியத்தின் மீது பதிலளித்த முதலமைச்சர் ஜெயலலிதா தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு உச்சாணிக் கொம்பிலே இருப்பதாகக்கூறிக் கொண்டார். ஆனால் கடந்த பத்து நாட்களில் சட்டம் ஒழுங்கு என்ன நிலை? 20-9-2015 அன்று கூடுவாஞ்சேரியில் பட்டப் பகலில் பிரபல ரவுடி வெட்டிக் கொலை - 21-9-2015 அன்று துரைப்பாக்கத்தில் கூலித் தொழிலாளி சீனிவாசன் கொலை - தியாகராய நகரில் பெண்ணிடம் நகை பறிப்பு - அம்பத்தூர் அருகே நான்கு இலட்சம் திருட்டு - மணலியில் இருந்து சென்னை வந்த பேருந்தில் பெண்ணிடம் நகை பறிப்பு - அண்ணாநகர் திருமண மண்டபத்தில் ஒன்றரை லட்சம் மொய்ப்பணம் திருட்டு - திண்டுக்கல் கோர்ட்டு அருகே ரவுடி வெட்டிக் கொலை - உளுந்தூர்பேட்டை அருகே 100 பவுன் நகைகள் கொள்ளை - திருச்செந்தூர் அருகே தேங்காய் வியாபாரி ராஜலிங்கம் கொலை - 22-9-2015 அன்று நெல்லையில் பா.ஜ.க. பிரமுகர் படுகொலை - மறைமலைநகரில் வணிகர் சங்க பேரமைப்பு நிர்வாகி விஜய்கணேசன் வெட்டிக் கொலை - 23-9-2015 அன்று சென்னை ராயப்பேட்டையில் ரவுடி முரளி குத்திக் கொலை -

திருப்பெரும்புதூர் அருகே கொள்ளையர்கள் 2 பேர் அடித்துக் கொலை - 24-9-2015 அன்று எண்ணூரில் அம்மன் கோவிலில் உண்டியல் உடைத்துக் கொள்ளை - மேற்கு மாம்பலத்தில் பெண் பேபி அம்மாள் படுகொலை, நகை கொள்ளை - சிட்லபாக்கத்தில் பெண் கவுன்சிலரிடம் நகை பறிப்பு - 25-9-2015 அன்று வத்தலகுண்டு நிதி நிறுவனத்தில் பட்டப் பகலில் ஆறு கோடி ரூபாய் நகை, 17 லட்சம் ரூபாய் கொள்ளை - சோழவரத்தில் மனைவி சரளா அடித்துக் கொலை - ரெயில்வே பெண் ஊழியரிடம் கத்தி முனையில் கொள்ளை - 26-9-2015 அன்று வண்டலூர் அருகே ரியல் எஸ்டேட் அதிபர் பாபு கொலை - குன்றத்தூரில் ஆசிரியை வீட்டில் 5லட்சம் ரூபாய் நகை, பணம் கொள்ளை - திருவள்ளூர் அருகே பகுஜன் சமாஜ் கட்சி செயலாளர் பிரபாகரன் வெட்டிக் கொலை - 27-9-2015 அன்று தண்டையார் பேட்டையில் பெண்ணின் கை, காலை கட்டிப் போட்டு நகை கொள்ளை - தாம்பரம் அருகே சப் இன்ஸ்பெக்டர் வீட்டில் 30 பவுன் நகை கொள்ளை - மாடம்பாக்கத்தில் இஞ்சினியர் வீட்டில் 30 சவரன் நகை திருட்டு - வடசென்னை ஆர்.கே. நகரில் நள்ளிரவில் வீடு புகுந்து பெண்ணிடம் செயின் பறிப்பு - 28-9-2015 அன்று ஐ.டி. பெண் ஊழியர் அடித்துக் கொலை - தண்டையார் பேட்டையில் 3 வீடுகளில் பூட்டை உடைத்துக் கொள்ளை என்ற பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது, தமிழகத்திலே ஒரு பொய்யான - போலியான - பொதுமக்களுக்கு எந்தவிதத்திலும் பயனில்லாத ஆட்சிதான் நடைபெற்று வருகிறது என அனைத்துப் பிரிவினரும் எண்ணுகிறார்கள். அமைச்சர்கள் எல்லாம் எந்தவித மான அச்சமும் இன்றி இருக்கின்ற கொஞ்ச நாட்களில் எப்படியெல்லாம் குவிக்கலாம் நிதியை என்பதிலேயே நாட்டம் செலுத்துகிறார்கள். அதிகாரிகளில் சிலரோ யார் போனால் என்ன, யார் வந்தால் என்ன என்ற பாணியிலே நடந்து கொள்கிறார்கள். சில எதிர்க்கட்சிகளோ, அடுத்து அவர்கள்தான் ஆட்சிக் கட்டிலிலே அமரப் போவதாகவும், அவர்களில் ஒருவர்தான் முதல் அமைச்சர் என்ற கற்பனையோடு காரியமாற்றி வருகிறார்கள். ஆளுங்கட்சியின் தலைமையோ எதிர்க்கட்சிகளிடம் ஒற்றுமை இல்லை; யாரும், யாருடனும் சேர்ந்து விடாமல் பார்த்துக் கொண்டாலே போதும்; என்று இந்த நிலையில் தாங்கள் குவித்து வைத்துள்ள நிதியிலிருந்து ஒரு பகுதியை எடுத்து விட்டாலே போதும்; பண

பலமும், பத்திரிகை பலமும் தங்களுக்கு மட்டும்தானே என்று நினைக்கிறார்கள். இந்தத் திருகுதாள வேலைகளை யெல்லாம் புரிந்து கொண்டு தங்களுக்காக உண்மையாக உழைப்பவர்கள் யார், எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தால் நாட்டிற்கு நல்லது நடக்கும் என்பதைக் கூர்ந்து கவனித்து, கணித்து, அதற்கேற்பச் செயல்பட முன்வர வேண்டுமென்பதுதான் மிகப் பெருவாரியான தமிழர்களின் விருப்பம். அந்த விருப்பத்தைச் சிதறாமல் நிறைவேற்றிட தமிழ்நாட்டு மக்களே முன்வாருங்கள், முன்வாருங்கள் என்று அன்போடு அழைக்கின்றேன்!

அன்புள்ள,

மு.க.

01-10-2015

3984. ஜெயலலிதாவின் சவால், சாகசமா சண்டித்தனமா?

உடன்பிறப்பே,

தமிழகச் சட்டப்பேரவையில் முதலமைச்சர் ஜெயலலிதா, காவல் துறை மானியத்திற்குப் பதில் கூறும்போது எனக்கொரு சவால் விடுத்தது உங்களுக்கெல்லாம் நினைவில் இருக்குமென்று கருதுகிறேன்.

சென்னை உயர் நீதிமன்றப் பாதுகாப்பு குறித்து; சென்னை உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி தெரிவித்த ஒரு கருத்து பற்றி நான் விடுத்த அறிக்கையைச் சுட்டிக்காட்டிய ஜெயலலிதா, அந்த வழக்கிலே இணைந்து கொள்ளத் தயாரா என்று எனக்கு சவால் விடுத்தார். தி.மு.கழக ஆட்சியிலே நீதிமன்றத்தில் நடந்ததையெல்லாம் தொகுத்துக் கூறியதோடு, ஜெயலலிதா மேலும் பேரவையில் கூறும் போது, "கருணாநிதியும், தி.மு.க.வினரும், உயர் நீதிமன்றத்திற்கு மத்திய பாதுகாப்புப் படை தான் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும், மாநிலக் காவல் துறையினால் சரியான பாதுகாப்பு அளிக்க முடியாது என்றும் கருதுகிறார்களா? இந்த வழக்கில் தங்களை இணைத்துக் கொண்டு மனு தாக்கல் செய்யத் தயாரா? இதனை கருணாநிதிக்கு ஒரு சவாலாகவே நான் விடுக்கிறேன்" என்றும் பேசினார்.

19-9-2015 அன்று நான் விடுத்த அறிக்கையில், ஆதாரமில்லாமல் எதையும் கூறி விட வில்லை. "தி இந்து" ஆங்கில நாளிதழில், 19-9-2015 முதல் பக்கத்தில் வந்துள்ள செய்தியிலே, "No Confidence in State Police, observes C.J." என்ற தலைப்பில் வந்த செய்தியில், "Chief Justice S.K. Kaul on Friday made an oral observation in the open Court that he has lost confidence in State Police" - அதாவது தலைமை நீதிபதி எஸ்.கே. கவுல் அவர்கள் மாநிலக் காவல் துறை மீது நம்பிக்கையை இழந்து விட்டதாக வெள்ளிக் கிழமை அன்று நீதிமன்றத்தில் வெளிப்படையாகத் தெரிவித்தார்

என்று வெளிவந்த செய்தியினை எடுத்துக் காட்டியிருந்தேன். தமிழக அரசின் சார்பில் வாதாடிய வழக்கறிஞர், நீதிமன்றங்களில் மத்திய போலீஸ் பாதுகாப்பு தேவையற்றது, தமிழகப் போலீஸ் பாதுகாப்பு போதுமானது என்றெல்லாம் வாதாடிய போது, தலைமை நீதிபதி குறுக்கிட்டு, "விமான நிலையம், துறைமுகம் ஆகியவற்றில் உள்ளது போல மத்தியப் பாதுகாப்பு வழங்கினால் என்ன தவறு உள்ளது? பல முறை உத்தரவிட்டும் கோர்ட் வளாகத்தில் போராட்டம், ஆர்ப்பாட்டம் என நடத்துகிறார்கள். எனவே தமிழகப் போலீசார் மீது நம்பிக்கை இல்லை" என்று தலைமை நீதிபதி கருத்து வெளியிட்டிருக்கிறார் என்றால், இதற்கு காவல் துறையின் பொறுப்பேற்றுள்ள முதல் அமைச்சர் மக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டுமா? வேண்டாமா? உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியே இவ்வாறு கருத்துக் கூறியிருக்கிறார் என்றால், எதிர்க் கட்சிகள் ஜெயலலிதா அரசின் காவல் துறை மீது கொண்டுள்ள கருத்துகள் முற்றிலும் உண்மை என்றுதானே ஆகிறது?" என்று குறிப்பிட்டு, "இந்து" நாளிதழில் வெளிவந்த தலைமை நீதிபதியின் கருத்துக்கு இந்த அரசின் பதில் என்ன என்றுதான் கேட்டிருக்கிறேன்.

அதற்குத்தான் பேரவையில், முதலமைச்சர் ஜெயலலிதா, "சென்னை உயர் நீதிமன்றத்துக்குப் பாதுகாப்பு இல்லை என்றும், பாதுகாப்பு அளிக்க தமிழகப் போலீஸ் தவறி விட்டது என்றும் கருணாநிதி சொல்கிறார். எனவே மத்திய தொழில் பாதுகாப்புப் படை காவல் போடப்பட வேண்டும் என்கிறார்" என்றெல்லாம் கூறினார்.

15-9-2015 தேதிய "இந்து" பத்திரிகையில் வந்துள்ள செய்தியிலேயே, "Pulling up the State Government and the Police for failing to prevent protesters from entering its premises on Monday, the Madras High Court has called upon the authorities to take immediate steps to declare its premises a "High Security Zone" and provide security cover by the Central Industrial Security Force (CISF)" என்று கூறப்பட்டுள்ளது.

எனது அறிக்கையில், "நான் தெரிவித்த கருத்துகள் அனைத்துமே நீதிபதிகள் கூறியதாக ஏடுகளில் வெளிவந்த கருத்துகள்தான்! இதைக் கூறுவதற்காக நான் இந்த வழக்கில் இணைந்து நீதிமன்றத்தில் மனுச் செய்ய வேண்டுமென்பதுதான்

ஜெயலலிதாவின் சவால் என்றால், அதற்கு நான் தயார்! நான் தெரிவித்த கருத்துகள் நீதிபதிகள் கூறியதாக ஏடுகளில் வெளிவந்தவை என்று நீதிமன்றம் ஒப்புக் கொள்ளுமேயானால், முதலமைச்சர் ஜெயலலிதா அதை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கேட்கத் தயாரா?" என்றும் கேட்டிருந்தேன். வழக்கம் போல எனது இந்தக் கேள்விக்கு முதலமைச்சரிடமிருந்து எந்தவிதமான பதிலும் இல்லை.

சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தின் பாதுகாப்புக்கு மத்திய காவல் துறையின் பாதுகாப்பா? மாநில அரசின் பாதுகாப்பா? என்பதற்கான வழக்குதான் 30-10-2015 அன்று உயர் நீதிமன்ற முதல் அமர்வின் முன்னால் விசாரணைக்கு வந்து, அப்போது தலைமை நீதிபதி சஞ்சய் கவுல் அவர்களும், நீதிபதி டி.எஸ். சிவஞானம் அவர்களும் தீர்ப்புக் கூறி, அந்தத் தீர்ப்பு ஏடுகளிலே வெளி வந்துள்ளது. "டைம்ஸ் ஆப் இந்தியா" ஆங்கில நாளேடு, இந்தச் செய்திக்கு வெளியிட்டுள்ள தலைப்பு, "High Court orders CISF cover on its premises / Slams Govt., Wants Forces by Nov. 16" என்பதாகும். "உயர்நீதிமன்றம், தனது வளாகத்திற்கு மத்திய போலீஸ் பாதுகாப்புக்கு உத்தரவிட்டுள்ளது / அரசைத் தாக்கியதோடு, நவம்பர் 16 அன்று பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்" என்று தலைப்பிட்ட, அந்தச் செய்தியில், "-A new security system provided by the CISF should be operational at the Madras High Court by November 16, the first bench of the court has ordered, flaying the State Government's shifting stands on bringing the court under central security blanket. The Court asked the Tamil Nadu Government to deposit Rs. 16.6 crore, as demanded by the Centre for deploying CISF, within one week. An irate first bench of Chief Justice Sanjay Kishan Kaul and Justice T.S. Sivagnanam said: "We note with a deep sense of regret that games are being played in respect of a sensitive issue like the security of the court. We express our deep anquish as this issue is being unnecessarily made into more of an ego issue with political overtures rather than looking into the larger canvass of security requirements of the high court" என்று எழுதப்பட்டுள்ள து. அதாவது, "சுதந்திரமான ஓர் அமைப்பைக் கொண்டு உயர் நீதிமன்றத்துக்கு தற்காலிகமாக பாதுகாப்பு வழங்குவது அவசியம். எனவே சென்னை உயர் நீதிமன்றத்துக்கு நவம்பர் 16ஆம் தேதி முதல் மத்திய போலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். அடுத்த ஆறு மாதத்

துக்கு மத்தியப் படை பாதுகாப்பு வழங்கும். இதற்காக மத்திய அரசு கோரிய வைப்புத் தொகையான 16 கோடியே 60 லட்சம் ரூபாயை ஒரு வாரத்திற்குள் தமிழக அரசு செலுத்த வேண்டும். மேலும் நீதிபதிகள் கூறும்போது, நீதிமன்றப் பாதுகாப்பு போன்ற முக்கியமான பிரச்சினை விளையாட்டாகக் கருதப்படுவதற்காக நாங்கள் எங்களுடைய வருத்தத்தை வெளிப்படுத்த விரும்புகிறோம். உயர் நீதிமன்றப் பாதுகாப்பாக இதனை எடுத்துக் கொள்ளாமல், அரசியல் உள்நோக்கத்தோடு தேவையில்லாமல் இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டதற்காக வேதனையை வெளிப்படுத்த விரும்புகிறோம்" என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

சென்னை உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பையும் எதிர்த்து, தமிழக அரசு அவசர அவசரமாக உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப் போவதாக இன்று செய்தி வந்துள்ளது. தமிழகச் சட்டப்பேரவையில் 22-9-2015 அன்று, தலைமை நீதிபதி அவர்கள் அவ்வாறு பேசவில்லை என்று ஜெயலலிதா கூறி, என்னைச் சவாலுக்கெல்லாம் அழைத்தாரே; அவரது கருத்தில் எந்த அளவுக்கு உண்மை இருக்கிறது என்பது இப்போது திட்டவட்டமாகத் தெளிவாகிறதா இல்லையா?

உயர் நீதிமன்றம் 30-10-2015 அன்று அளித்த தீர்ப்பைப் பற்றிய விவரம் இது. 29.10.2015 அன்று இதே உயர் நீதிமன்றம் மற்றொரு தீர்ப்பை அளித்தது. அதாவது, சென்னை கோட்டூர்புரத்தில் கடந்த தி.மு. கழக ஆட்சியில், தெற்கு ஆசியாவிலேயே இல்லாத அளவுக்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நினைவாகக் கட்டப்பட்ட எழில்மிகு நூலகத்தை, ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததிலிருந்து எந்த அளவுக்கு பராமரிக்காமல் வீணடித்து வருகிறார் என்பதை கடந்த நான்காண்டு காலமாக பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாகவும், அதுபற்றி அவ்வப்போது நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளின் வாயிலாகவும் தமிழகம் நன்கறியும். இது பற்றிய வழக்கினை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற முதல் அமர்வு, வழக்கறிஞர்கள் பி.டி. ஆஷா, எம். சுந்தர் ஆகியோர் அடங்கிய 2 பேர் குழுவை நியமித்து நூலகத்தை ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டது.

இந்த வழக்கை கடந்த ஆகஸ்ட் மாதம் விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதிகள் நூலகத்தின் குறைகளைச் சரி செய்து, முறையாகப் பராமரித்து, மேம்படுத்த வேண்டுமென்று உத்தரவிட்டனர்.

கடந்த செப்டம்பர் மாதம் வழக்கு விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் பராமரிப்புப் பணி நிலவர அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், பராமரிப்புப் பணிகள் எப்போது முடிவடையும் என்ற திட்ட அறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவிட்டனர். இந்த வழக்குதான் 29-10-2015 அன்று மீண்டும் நீதிபதிகள் முன்னால் விசாரணைக்கு வந்தது. அப்போது அரசுத் தரப்பில் திட்ட அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, மேலும் அவகாசம் கேட்கப்பட்டது. மனுதாரர் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள் வில்சன், மனோன்மணியம் ஆகியோர், உயர் நீதிமன்றம் உத்தரவிட்டும் அரசு உத்தரவை அமல்படுத்த வில்லை என்றனர். இறுதியாக நீதிபதிகள் கூறும்போது, "உயர் நீதிமன்ற உத்தரவை அரசு ஏன் அமல்படுத்தவில்லை ? பல முறை உத்தர விட்டும் அவகாசம் கொடுத்தும் அமல்படுத்தவில்லை. இதில் தயக்கம் காட்டுவது ஏன்? கடைசியாக இறுதி அவகாசம் கொடுக்கிறோம். அடுத்த ஆண்டு ஜனவரி 8ஆம் தேதி உயர் நீதிமன்ற உத்தரவின்படி அனைத்து வசதிகளை யும் அண்ணா நூலகத்தில் ஏற்படுத்தித் தர வேண்டும். அதன் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறு தாக்கல் செய்யத் தவறும் பட்சத்தில் தமிழகப் பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் நேரில் ஆஜராக உத்தரவிட நேரிடும்" என்றெல்லாம் கடுமையாக கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். (Beef up Security at Library or face action" - Will Summon Edu. Secretary if Order is not followed : H.C.)

இந்த வழக்கில் மேதகு நீதிபதிகள் அண்ணா நூலகம் பற்றி பல முறை இந்த அரசுக்கு எச்சரிக்கை செய்தும், திரும்பத் திரும்ப அந்தத் தீர்ப்புகளை காதில் போட்டுக் கொள்ளாமல் அ.தி.மு.க. அரசு செயல்பட்டு வருகிறது. அதற்கெல்லாம் காரணம், தி.மு. கழக ஆட்சியில் அந்த நூலகம் கட்டப்பட்டது என்பதுதான்!

சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகளையும், நீதிபதிகளின் கருத்துரைகளையும் பெரிதும் மதித்து அவற்றின் மீது உரிய நடவடிக்கைகளை அரசு சார்பில் மேற்கொண்டு, அரசுக்கும் - நீதிமன்றத்திற்கும் இடையே நல்லுறவையும் நல்லிணக்கத்தையும் பாதுகாத்து வளர்த்திட வேண்டிய பெரும் பொறுப்பு முதலமைச்சராக இருக்கும் ஜெயலலிதாவுக்கு உள்ளது. மேலும், அண்மைக் காலத்தில் நீதிமன்ற அவமதிப்புகளுக்குத்

தமிழக அரசு பெருமளவுக்கு உட்படுத்தப்பட்டு வருவது ஜெயலலிதா அரசுக்கு நிச்சயமாக அவப்பெயரையே ஈட்டித் தரும். இவற்றையெல்லாம் ஊன்றிக் கவனித்து தவறுகளைக் களைந்து அரசு நிர்வாகத்தை ஆக்கபூர்வமான வழியில் நடத்திச் செல்வதை விடுத்து, உயர் நீதிமன்றத்தின் உள்ளக் கிடக்கையை ஊராருக்குத் தெளிவுபடுத்திடும் நோக்கில் ஆதாரத்தோடு அறிக்கை வெளியிட்ட என்னை, சட்டப்பேரவையில் பதிலுரையின் போது சவாலுக்கழைப்பது சாகசமா? சண்டித்தனமா? என்பதைத் தமிழகம் நன்றாகவே புரிந்து கொள்ளும்!

அன்புள்ள,

மு.க.

02-11-2015

3985. கடுகு சிறுத்தாலும் காரம் போகாது என்பதைக் கழகம் பெறவிருக்கும் வெற்றியின் மூலம் மெய்ப்பித்துக் காட்டுவோம்!

உடன்பிறப்பே,

12-3-2015 அன்று "கொள்கை காத்திட குவியட்டும் தேர்தல் நிதி" என்ற தலைப்பில் நான் எழுதிய மடலில், உங்களையெல்லாம் கனிவுடன் நோக்கி, "2016ஆம் ஆண்டு ஏப்ரல், மே திங்களில் தமிழக அரசின் சட்டப் பேரவைக்கான பொதுத் தேர்தல் வரவுள்ளது. ஐந்தாண்டு காலம் இந்த நாட்டு மக்கள் பட்ட துன்பங்களுக்கெல்லாம் விடிவு காலம் ஏற்பட விருக்கிறது" என்று தொடங்கி, கழகத்தின் தேர்தல் நிதிக்குக் கணிசமாக வழங்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு ஒரு சில திங்கள்கள் ஆகின்றன.

நேற்றுவரையில் நீங்கள் அன்போடு அளித்த - ஆர்வத்தோடு வழங்கிய அந்த நிதி, சிறு துளி பெரு வெள்ளமாகப் பெருகி - 21 கோடியே 93 இலட்சத்து 96 ஆயிரத்து 534 ரூபாய் என்ற அளவுக்குச் சேர்ந்துள்ளது. இந்த 22 கோடி ரூபாயை, தமிழக ஆளுங்கட்சி பல வகைகளிலும் குவித்து வைத்திருக்கின்ற மிகப்பெரு நிதியோடு ஒப்பிட்டால், சிறு கடுகாகத்தான் தோன்றும். ஆனால் "கடுகு சிறுத்தாலும் காரம் போகாது" என்ற முதுமொழிக்கொப்பத்தான், இந்த நிதியை நானும் நம்முடைய கழக உடன்பிறப்புகளும் கருதி மகிழ்வோம் என்பதை நிதி வழங்கிய கழக உடன்பிறப்புகளாம் நீங்கள் நன்கறிவீர்கள். இந்தத் தேர்தல் நிதியினை இந்த அளவுக்குப் பெற்றுக் கொண்ட வகையில் நானும், நமது கழகத்தின் பொருளாளர் மற்றும் கழகச் செயல்வீரர்கள் அனைவரும் பெருமை கொள்கிறோம்.

ஆனால் உடன்பிறப்புகளே, பெருமை கொள்வது மாத்திரம் காரிய வெற்றிக்குப் போதுமா என்றால் போதவே போதாது.

வரும் தேர்தல்கள் சட்டமன்றம் ஆனாலும், நாடாளுமன்றம் ஆனாலும், இரண்டு மன்றங்களிலும் நம்முடைய கழகத்தினர் பெரும் எண்ணிக்கையில் இடம்பெற வேண்டும். அதற்கேற்ப உடன்பிறப்புகளே, உங்களுடைய பணி அமைந்திட வேண்டும். தேர்தல் பணிகளை மாத்திரம் சிறப்பாக ஆற்றிவிட்டுத் தேர்தல் நிதியைத் திரட்டுவதில் சிந்தனை இல்லாமல் அக்கறை காட்டாமல் இருந்து விடக்கூடாது. அதிலும் நீங்கள் மேலும் ஆர்வம் காட்டுவீர்களேயானால், நீங்கள் தந்துள்ள - இன்னும் தரப்போகிற தேர்தல் நிதியை வைத்து அனைவரும் மகிழத்தக்க வெற்றியை வரப் போகின்ற தேர்தல்களில் நாம் பெறுவோம் என்ற நம்பிக்கை எனக்கு முழுமையாக இருக்கின்றது.

தமிழகத்தில் நடைபெறுகின்ற ஆட்சியினை அடையாளம் கண்டுகொள்கிற வாய்ப்பு - அந்த வாய்ப்பில் ஏழையெளியோர் அனுதினமும் அனுபவித்து வருகின்ற துயரத்தை நேரடியாகவே கண்டு கலங்குகின்ற நிலை - நமக்கும், நடுநிலையாளர்களுக்கும் பொதுவாக நாட்டு மக்களுக்கும் ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலையில், நீங்கள் இதுவரை திரட்டித் தந்துள்ள இந்த 22 கோடி ரூபாய் தேர்தல் நிதி, தேர்தலைச் சந்திக்க, மிக முக்கியமான செலவுகளுக்குக்கூடப் போதாது என்பதை நீங்களும் அறிவீர்கள்; நானும் உணருகிறேன்.

எனவே நீங்கள் மேலும் தர இருக்கின்ற தேர்தல் நிதி, உங்களுடைய சக்திக்கு உட்பட்டது எவ்வளவு ஆயினும், குறிப்பாக வெள்ளிக் காசுகளாக இருந்தாலும்கூட, அதை நான் தங்கக் காசுகளாகக் கருதித்தான் பெற்றுக்கொள்வேன்.

தொடர்ந்து தேர்தல் நிதி வழங்கும் பணியை மேலும் என்னை ஊக்குவிக்கும் வகையில், "கழகத்தை எங்கள் உழைப்பால் கட்டிக் காப்போம் - எதிர்ப்பினை நெட்டித் தள்ளுவோம்" என்ற உங்கள் உணர்வுகளைச் செயல் மூலம் காட்ட இந்தத் தேர்தல் நிதி மட்டுமல்ல; திராவிட இன உணர்வை மேலும் வளர்க்க ஒன்றுபட்டு உழைப்போம் என்ற உறுதியை நீங்கள் மேற்கொள்ளுவீர்களேயானால், இந்த நிதி தரும் மகிழ்ச்சியைவிடப் பெரும் மகிழ்ச்சியை நான் பெறுவேன்.

நம்முடைய கழகம் தமிழ்நாட்டின் தலையெழுத்தை நிர்ணயிக்கப் பாடுபடுகின்ற பாட்டாளி மக்களைக் கொண்ட பேரியக்கம் என்பதையும், திராவிட இனத்தைக் காப்பாற்று வதற்காகத் தந்தை பெரியார் அவர்களாலும், பேரறிஞர் அண்ணா அவர்களாலும் உருவாக்கப்பட்டு, இன்று நமது சமுதாய எதிரிகளை வீழ்த்துவதற்கான சம்மட்டியாக நாம் கைகளிலே ஏந்தி அறப்போர் ஆயுதங்களாகப் பயன்படுத்தி அன்றுதொட்டு இன்றுவரை, தமிழ்ச் சமுதாயத்தைப் பாதுகாக்கவும், பெரும் படை கொண்டோ - பண மூட்டைகளைக் கொண்டோ இந்த ஒப்பற்ற இயக்கத்தை - இனமான இயக்கத்தை - திராவிடர்களுடைய அரசியல், சமுதாய இழிவினை நீக்கி, எந்நாளும் ஏற்றம் பெற இடைவிடாது உழைக்கின்ற கழகத்தின் மாமணிகளாம் இளைஞர், மகளிர், மாணவர் ஆகிய பல தரப்பட்டவர்களை, படை வீரர்களாகக் கொண்டு - இந்தப் பாசறை பெரு வெற்றியினைப் பெற்று, ஈடு இணையற்ற இனமானக் கோட்டை இது; இதனை எவராலும் வீழ்த்திட இயலாது என்ற நம்பிக்கையைச் செயல் வடிவமாக ஆக்கிக் காட்டுவதற்கு ஜனநாயகத்தில் தேர்தல் வெற்றிகளே அடையாளச் சின்னங்கள் ஆகும்; நம்பிக்கை நட்சத்திரங்கள் ஆகும் என்பதையும் மெய்ப்பிக்கும் வகையில் என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே, நீங்கள் வழங்கி வருகின்ற இந்தத் தேர்தல் நிதி எண்ணிக்கையில் எளிமையாகத் தெரிந்தாலும், உங்கள் இடத்தில் நான் கொண்டுள்ள நம்பிக்கையை ஒவ்வொரு நாளும் என் நெஞ்சில் வளர்த்துக் கொண்டுதான் இருக்கிறது என்பதை உறுதிபடக் கூறிக்கொள்கிறேன்.

நம்முடைய எதிரிகள் என்னென்னவோ செய்து கொல்லைப் புறமாகக் குவித்துவைத்துள்ள பெரு நிதியை எண்ணிப் பார்த்து, தேர்தல் வருவதற்கு இன்னும் இருப்பது ஒரு சில மாதங்களே, அது ஒவ்வொரு தமிழனுடைய தலை எழுத்தையும் நிர்ணயிக்கப் போகும் தேர்தல், அதில் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய கடமையை ஆற்ற வேண்டும் என்பதையெல்லாம் உணர்ந்து தேர்தல் நிதியை மேலும் மேலும் வழங்குவதிலும், இந்த அரசின் ஊழல்களை, முறைகேடுகளை, சீர்கேடுகளையெல்லாம் பொதுமக்களிடம் எல்லா வகையிலும் எடுத்துக் கூறுவதிலும் அக்கறையோடு பணியாற்ற வேண்டும்.

இந்த உறுதிக்கு ஒரு நாள்கூட ஊறு வராமல், தொடர்ந்து தேர்தல் நிதி வழங்கும் பணியை மேலும் என்னை ஊக்குவிக்கும் வகையில், "கழகத்தை எங்கள் உழைப்பால் கட்டிக் காப்போம் - எதிர்ப்பினை நெட்டித் தள்ளுவோம்" என்ற உங்கள் உணர்வுகளைச் செயல் மூலம் காட்ட இந்தத் தேர்தல் நிதி மட்டுமல்ல; திராவிட இன உணர்வை மேலும் வளர்க்க ஒன்றுபட்டு உழைப்போம் என்ற உறுதியை நீங்கள் மேற்கொள்ளுவீர்களேயானால், இந்த நிதி தரும் மகிழ்ச்சியைவிடப் பெரும் மகிழ்ச்சியை நான் பெறுவேன்.

உடன்பிறப்பே, நான் இவ்வாறு கூறிவிட்டதால், அளித்த நிதியே போதும் என்று நீங்கள் ஆறுதல் கொண்டுவிடக் கூடாது. நான் முன்பே எழுதியது போல, நம்முடைய எதிரிகள் என்னென்னவோ செய்து கொல்லைப் புறமாகக் குவித்து வைத்துள்ள பெரு நிதியை எண்ணிப் பார்த்து, தேர்தல் வருவதற்கு இன்னும் இருப்பது ஒரு சில மாதங்களே, அது ஒவ்வொரு தமிழனுடைய தலை எழுத்தையும் நிர்ணயிக்கப் போகும் தேர்தல், அதில் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய கடமையை ஆற்ற வேண்டும் என்பதையெல்லாம் உணர்ந்து தேர்தல் நிதியை மேலும் மேலும் வழங்குவதிலும், இந்த அரசின் ஊழல்களை, முறைகேடுகளை, சீர்கேடுகளை யெல்லாம் பொதுமக்களிடம் எல்லா வகையிலும் எடுத்துக் கூறுவதிலும் அக்கறையோடு பணி யாற்ற வேண்டும்.

ஒவ்வொரு தேர்தல் நேரத்திலும், நான் கேட்டவுடன் இல்லையென்று மறுக்காமல் அள்ளிக் கொடுக்கும் உடன்பிறப்புகள் என்னோடு இருக்கிறீர்கள் என்பதை நான் நன்றாகவே அறிவேன். எனவே உங்களிடம் கேட்காமல் இந்த நேரத்தில் நான் வேறு யாரிடம் சென்று கேட்க முடியும்? பணக்காரர்களிடம், தொழில் முதலாளிகளிடம், பல கோடி ரூபாய் வைத்திருப்போரிடம் நான் தேர்தல் நிதி கேட்டுப் பழக்கப்பட்டவன் அல்ல. உடன்பிறப்பே, உன்னிடம்தான் நான் திரும்பத் திரும்பக் கேட்டுவருகிறேன்.

நீயும் தவறாமல் கொடுத்துக் கொண்டே வருகிறாய். ஆனால் நம்முடைய எதிரியிடம் குவிந்திருக்கும் பண பலத்தை எண்ணிடும்போது, இப்போது நீ கொடுத்துள்ள நிதி போதவே போதாது என்பதை உணர்ந்து, நாட்கள் இன்னும் சிலதான்

இருக்கின்றன என்பதையும் மனதிலே கொண்டு, வெட்டி வா என்றால், கட்டி வரும் உள்ளத்தோடு பெருநிதியைக் கொண்டு வந்து கழக நிதியோடு சேர்ப்பதிலும், தேர்தல் பணிகளைத் தொய்வில்லாமல் ஆற்றுவதிலும் இன்றிலிருந்தே நீ முனைப்புக் காட்டிட வேண்டும். தேர்தல் பணிகள் குறித்துத் தொடர்ந்து நேரம் கிடைக்கும்போதெல்லாம் அவ்வப்போது எழுதுகிறேன். கடுகு சிறுத்தாலும் காரம் போகாது என்பதைக் கழகம் பெற இருக்கும் வெற்றியின் மூலம் மெய்ப்பித்துக் காட்டுவோம்!

அன்புள்ள,

மு.க.

27-12-2015

3986. வரும் ஜனவரி 5 அன்று சென்னையில் ஆர்ப்பாட்டம் ஏன்?

உடன்பிறப்பே,

23-12-2015 அன்று தி.மு.கழக அலுவலகத்தில் என்னுடைய தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், டிசம்பர் திங்கள் தொடக்கத்தில் தமிழகத்திலே நடந்துவிட்ட வெள்ள நாசங்களுக்கும், இழப்புகளுக்கும் - இங்கே ஆட்சியை நடத்தும் அ.தி.மு.க. அரசுதான் பொறுப்பேற்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில், 5-1-2016 செவ்வாய்க்கிழமை அன்று காலை 10 மணி அளவில் சென்னை மாநகரில் என்னுடைய தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அறிவிக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட சைதாப்பேட்டையில் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தலாம் என்று நமது மாவட்டக் கழகச் செயலாளர், மா. சுப்பிரமணியம் காவல் துறையிடம் அனுமதி கோரியபோது, சென்னை மாவட்டத்தில் குறிப்பிட்ட மூன்று இடங்களில் ஒரு இடத்திலே தான் ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி உண்டு என்று தெரிவித்ததன் பேரில், தற்போது சென்னை, சேப்பாக்கம் அரசினர் விடுதி அருகில் ஆர்ப்பாட்டத்தை நடத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டம் சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட இடத்திலே நடைபெற்றபோதிலும், ஆர்ப்பாட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் பெருமழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களான சென்னை தெற்கு மாவட்டம், மேற்கு மாவட்டம், கிழக்கு மாவட்டம், வடக்கு மாவட்டம் ஆகிய மாவட்டங்களின் சார்பில் சிறப்பாகச் செய்துவருகிறார்கள். மேலும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், காஞ்சிபுரம் வடக்கு, தெற்கு மாவட்டங்கள், திருவள்ளூர் தெற்கு, வடக்கு மாவட்டங்கள் ஆகிய மாவட்டங்களிலிருந்து பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான உடன்பிறப்புகளும், பொதுமக்களும் வந்து கலந்து கொள்வதற்கான

ஏற்பாடுகளை அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்களும் இணைந்து செய்து வருகிறார்கள்.

2016ஆம் ஆண்டு, கழகத்தைப் பொறுத்தவரையில் கண்டன ஆர்ப்பாட்டத்துடன்தான் தொடங்குகிறது. எதற்காகக் கண்டன ஆர்ப்பாட்டம்? 100 ஆண்டுகளில் சென்னை சந்தித்திராத மழை என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. நவம்பர் 9ஆம் தேதி 13.6 செ.மீ. மழை - நவம்பர் 13, 16, 23 ஆகிய தேதிகளிலும் மழை கொட்டியது. நவம்பர் 16ஆம் தேதி அதிகப்பட்சமாக 24.6 செ.மீ. மழை பெய்தது. 23ஆம் தேதி 14 செ.மீ. மழை. நவம்பர் இறுதியில் இரண்டு நாட்கள் தொடர்ச்சியாக 20 செ.மீ. மழை. நவம்பர் மாதத்தில் மட்டும் 119.73 செ.மீ. என்ற அளவுக்கு மழை. வெள்ளத்தினால் விளைந்த விபரீதங்கள் என்ன? சொல்ல வேண்டியது யார்? அரசு அல்லவா? எத்தனை பேர் இறந்தார்கள்? எத்தனை வீடுகள் அழிந்தன? எத்தனை தொழில்கள் நாசமாகின? எவ்வளவு ரூபாய் இழப்பு? ஏதாவது பட்டியல் அரசினால் தரப்பட்டதா? வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட முதலமைச்சர் சென்ற இடங்கள் எத்தனை? எந்தெந்த பகுதிகளுக்கு முதலமைச்சர் சென்றார்? முதலமைச்சரால் எத்தனை அறிக்கைகள் தரப்பட்டன? முதலமைச்சர் எத்தனை முறை பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்? ஏதாவது விவரம் தரப்பட்டதா? ஒரே ஒரு முறை -

"வாட்ஸ்-அப்" மூலமாக ஜெயலலிதா உரையாற்றியிருக்கிறார். அதிலும் முதலமைச்சர் தமிழ்நாட்டு மக்களுக்கெல்லாம் ஆறுதல் உரை வழங்கியிருக்கிறார். வீட்டிலே தொலைபேசி மணி அடித்து அதை எடுத்தால் முதலமைச்சர் ஜெயலலிதா ஆற்றும் உரைதான்! அது உண்மையில் முதலமைச்சர் ஜெயலலிதா பேசியதுதானா? அல்லது அவருடைய குரலில் வேறு யாராவது பேசுகிறார்களா? அந்தப் பேச்சில் பாதிக்கப்பட்ட மக்களையெல்லாம் கவலைப்பட வேண்டாம் என்றும், தான் அவர்களையெல்லாம் பார்த்துக் கொள்கிறேன் என்றும் உறுதிமொழி கூறினாரே? என்ன செய்தார்? ஒரே ஒரு நாள் தொகுதி மக்களைப் பார்த்து ஆறுதல் கூறப் போனார்; அப்போதுகூடப் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்த்துத் தமிழ்நாட்டு மக்களே, ரத்தத்தின் ரத்தங்களே என்றெல்லாம்கூட விளிக்கவில்லை. மாறாக அப்போதும் தேர்தல் கண்ணோட்டம்தான்; "வாக்காளப் பெருமக்களே" என்றுதான் ஒவ்வொரு கூட்டத்திலும் அழைத்தார். ஏடுகள் எல்லாம் அதைப்

பெரிதாக வெளியிட்டிருந்தன. அது பற்றி ஏதாவது விளக்கம் அளித்தாரா? ஒன்றும் கிடையாது!

தொடர் மழை காரணமாகப் பள்ளி, கல்லூரிகளுக்கு 22 நாட்கள் விடுமுறை. தேர்வுகள் எல்லாம் ஒத்திவைக்கப்பட்டன. சென்னையில் சாலைகள் எல்லாம் மழையில் மூழ்கியது. ரயில் தண்டவாளங்களில் தண்ணீர் தேங்கி, ரயில் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது. விமான நிலையமே மூடப்பட்டது. வெளியூர் மக்கள் திரும்ப தங்கள் ஊருக்குச் செல்ல வழியில்லாமல் ரயில்வே ஸ்டேஷன்களில் தங்கினர். ஓட்டல்கள் மூடப்பட்டதால் சாப்பிட எதுவும் கிடைக்கவில்லை. குழந்தைகளுக்குப் பால், ரொட்டிகள் கூட இல்லாமல் மக்கள் அவதிப்பட்டனர். தொடர்ந்து நான்கைந்து நாட்கள் மின்சாரமே இல்லை. தொலைபேசிகள் வேலை செய்ய வில்லை. மக்கள் பட்டது அவதியோ அவதி! அடித்தட்டு மக்களும், மத்திய தர வகுப்பினரும் பட்டதுன்பங்களுக்கு அளவே இல்லை. ஆனால் அவர்களின் துயரத்தில் பங்கேற்கக்கூடிய அரசா தமிழகத்தில் நடைபெற்றது?

தேர்தல் நேரத்தில் "செய்வீர்களா? செய்வீர்களா?" என்று கேட்டு வாக்குகளைப் பெற்ற முதலமைச்சர் ஜெயலலிதா நேரில் வந்து ஆறுதல் கூறவில்லை. மாறாக அ.தி.மு.க. தொண்டர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வழங்கிய நிவாரணப் பொருள்களிலேகூட "அம்மா"வின் உருவப்பட ஸ்டிக்கர்களைப் பிடிவாதமாக ஒட்டுவதிலேதான் அக்கறை காட்டினார்கள். குறிப்பாக "ஜெயா" தொலைக்காட்சி அலுவலகத்தைக் காப்பாற்ற தண்ணீர் உள்ளே வராமல் இருக்க மணல் மூட்டைகளை அடுக்கி வைத்ததோடு, வாசலிலேயே ஒரு தீயணைப்பு வாகனமும் தயாராக நின்றது.

என்னுடைய செயலாளர் ஒருவரின் வீட்டில் கீழ்ப் பகுதி முழுவதும் நீர் புகுந்து மாடியில் சென்று தங்க முயற்சி செய்து கீழே இறங்கவும் முடியாமல், சாப்பாட்டிற்கும் ஒன்றும் கிடைக்காமல், பின்னர் நான் என்னுடைய பாதுகாவலர் ஒருவரை அனுப்பி, அவரையும், அவரது மனைவியையும் காப்பாற்றி, தொடர்ந்து நான்கைந்து நாட்கள் ஓட்டலில் தங்கியிருந்தார். என்னுடைய மருத்துவர் ஒருவர், வீட்டிலிருந்து தப்பிச் சென்னைக்கு

அப்பால் அவருடைய நண்பர் இல்லத்தில் சென்று நான்கைந்து நாட்கள் தங்கியிருக்கிறார். அறிவாலயத்தில் பணியாற்றும் பல நண்பர்களின் வீடுகளில் தண்ணீர் புகுந்து ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் பல ஆயிரம் ரூபாய் இழப்பு. என்னுடைய பாதுகாவலர்கள் பலரே பல குடியிருப்புகளுக்குச் சென்று உயிருக்குத் தவித்துக் கொண்டிருந்தவர்களைக் காப்பாற்றிய விவரத்தை எல்லாம் என்னிடம் நேரில் வந்து கூறினார்கள். மிகவும் சிரமப்பட்டு கார் வாங்கியவர்கள், நீருக்குள் கார் மூழ்கிவிட்ட காரணத்தால், என்னதான் இன்சூரன்ஸ் செய்திருந்தபோதிலும், தற்போது என்ன செய்வது என்று தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தக் கொடுமையை எதிர்த்துத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், குறிப்பாக இளைஞர்களும் ஆற்றிய அளப்பரிய பணிகளுக்கு நாமனைவரும் தலைவணங்க வேண்டும். தங்கள் உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் உழைத்தார்கள். ஆனால் தேர்தல் நேரத்தில் "செய்வீர்களா? செய்வீர்களா?" என்று கேட்டு வாக்குகளைப் பெற்ற முதலமைச்சர் ஜெயலலிதா நேரில் வந்து ஆறுதல் கூறவில்லை. மாறாக அ.தி.மு.க. தொண்டர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வழங்கிய நிவாரணப் பொருள்களிலேகூட "அம்மா"வின் உருவப்பட ஸ்டிக்கர்களைப் பிடிவாதமாக ஒட்டுவதிலேதான் அக்கறை காட்டினார்கள். குறிப்பாக "ஜெயா" தொலைக்காட்சி அலுவலகத்தைக் காப்பாற்றத் தண்ணீர் உள்ளே வராமல் இருக்க மணல் மூட்டைகளை அடுக்கி வைத்ததோடு, வாசலிலேயே ஒரு தீயணைப்பு வாகனமும் தயாராக நின்றது.

ஆனால் எங்கள் வீட்டு வாசலிலேயே தண்ணீர் நிரம்பி, கார் வரை சூழ்ந்த நிலையில் பகுதிக் கழகச் செயலாளர் இயந்திரத்தின் உதவியால் தண்ணீரை அப்புறப்படுத்தியிருக்கிறார். ஒரு சில நாட்கள் ஏடுகளே வெளிவர முடியவில்லை. இரண்டு நாட்கள் கழித்து வெளிவந்த பத்திரிகைகளில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் மக்கள் பட்டபாடுகள் எல்லாம் வெளிவந்தன. குழந்தை குட்டிகளைத் தூக்கிக்கொண்டு ஆற்றில் இறங்கி வருவதைப் போலச் சாலைகளில் வந்த காட்சிகள்!

இவ்வளவு துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் யார் காரணம்? இயற்கை மட்டுமா காரணம்? செம்பரம்பாக்கம் ஏரியைத் திறக்க உரிய நேரத்தில் அரசினர் அனுமதி அளித்திருந்தால், டிசம்பர் 1ஆம்

தேதி அன்று மட்டும் ஒரே நேரத்தில் ஏராளமான நீரைத் திறந்து சென்னையை மூழ்கடித்திருக்க வேண்டிய சிரமம் நேர்ந்திருக்காது அல்லவா?

சென்னைவாழ் மக்கள் எல்லாம் இவ்வாறு அவதிப்பட்டுக் கொண்டிருக்க வேண்டிய நேரத்தில், அவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட முன்வராவிட்டாலும் முதல் அமைச்சர் என்ன செய்கிறார்? தலைமைச் செயலகத்திற்கு வந்து பணக்காரர்களிடமும், தொழிலதிபர்களிடமும் நிவாரண நிதித் தொகையை வாங்குகிறார் - காணொலி காட்சி மூலமாக எதையாவது திறந்து வைத்துப் புகைப்படங்களை ஏடுகளில் வரச் செய்கிறார். அவ்வாறு அவர் வருவதற்கே எத்தனை ஏற்பாடுகள்? தயவுசெய்து சென்னையிலே உள்ள மக்கள் அவர் வரும் வழியிலே உள்ள தெருவுக்கு வந்து பாருங்கள்! எத்தனையெத்தனை வரவேற்புப் பதாகைகள் தெரியுமா? இதோ, இன்று கட்டப்பட்டுள்ள "ப்ளக்ஸ் போர்டுகள்" - அதிலே உள்ள வார்த்தைகளில் சிறு குறிப்பை மட்டும் பாருங்கள்!

"கருணையின் பிறப்பிடமே" என்ற தலைப்பில் ஒரு பெரிய போர்டு - வைத்திருப்பவர் யார் தெரியுமா? வருவாய்த் துறை அமைச்சர்!

"கருணைக் கடலே" என்ற தலைப்பில் ஒரு பெரிய போர்டு - உபயம் - அமைச்சர் வேலுமணி!

"வள்ளலின் வாரிசே" என்ற தலைப்பில் ஒரு போர்டு - அதுவும் அமைச்சர் வேலுமணிதான்!

"ஏழைகளின் ஒளி விளக்கே" என்ற தலைப்பிலான தட்டியை வைத்திருப்பவர் அமைச்சர் தங்கமணி!

"கழகத்தின் காவல் தெய்வமே" - "எங்கள் உயிர் மூச்சே" என்ற தட்டிகளை வைத்திருப்பவர் அமைச்சர் வைத்தியலிங்கம்!

"வெற்றியின் விலாசமே" என்ற தலைப்பிலும் - "எங்கள் குல சாமியே" என்ற தலைப்பிலும் - "அறிவுத்திறமே ஆற்றல் கரமே" என்ற தலைப்பிலும், "விவசாயிகளின் விடிவெள்ளியே" என்றும் "ஏழைகளின் ஏந்தலே" என்றும் "அற்புத வரமே" என்றும், "விடியல் தந்த வெற்றித் திருமகளே" என்றும், "ஈகையின் பிறப்பிடமே" என்றும், "பசுமைக்கு வித்திட்ட எங்கள் பாசத் தாயே" என்றும், "வாகையின் வசிப்பிடமே" என்றும், "காவிரித்

தாயே” என்றும், அமைச்சர்கள் வரிசையாக, மக்கள் நடந்து செல்வதற்குக்கூட வழியில்லாமல் தட்டிகளை வைத்திருப்பதை யார் வேண்டுமென்றாலும் சென்று இன்றும் காணலாம்.

சென்னை மாநகர மேயர் என்ன போர்டு வைத்திருக்கிறார் தெரியுமா? “உண்மையின் உயிர் மூச்சே! உலகெங்கும் உங்கள் மூச்சே! மாநகராட்சியின் ஊக்கமே! உயிரே” என்ற நீண்ட தலைப்பில் மிகப் பெரிய விளம்பர போர்டு வைத்திருக்கிறார். தவறு அதிகமாகச் செய்தவர் அல்லவா? அதனால் பெரிய போர்டு!

மக்கள் எல்லாம் பிழைப்பு போய் விட்டதே என்று கதறுகின்ற நிலையில், முதல் அமைச்சர் வீட்டு வாசலில் இத்தனை வரவேற்புத் தட்டிகள்! அவருடைய வீட்டு வாசலிலே மட்டும் அலங்கார வளைவுகள் அல்ல. அவர் சென்னையிலே தலைமைச் செயலகத்தில் இருந்தவாறு திருப்பூரில் ஒரு பள்ளமான பகுதியிலே கட்டப்பட்டுள்ள கலெக்டர் அலுவலகத்தைத் திறந்து வைத்திருக்கிறார். ஆனால் திருப்பூர் நகரிலே இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு ஜெயலலிதாவின் உருவப் படங்கள் தாங்கிய பிளக்ஸ் போர்டுகள்!

ஆனால் இதேநேரத்தில் இந்த ஆட்சியினரின் உண்மை உருவத்தைப் பற்றி பல வார ஏடுகள் விரிவாகவே எழுதி வருகின்றன. இதோ; “நக்கீரன்” இந்த வார இதழில், “மறைக்கப்படும் மரணக் கணக்கு” என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரை யில் சில பகுதிகள்!

இவ்வளவு துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் யார் காரணம்? இயற்கை மட்டுமா காரணம்? செம்பரம்பாக்கம் ஏரியைத் திறக்க உரிய நேரத் தில் அரசினர் அனுமதி அளித்திருந்தால், டிசம்பர் 1ஆம் தேதி அன்று மட்டும் ஒரே நேரத்தில் ஏராளமான நீரைத் திறந்து சென்னையை மூழ்கடித்திருக்க வேண்டிய சிரமம் நேர்ந்திருக்காது அல்லவா?

“தமிழக மக்களின் மனதில் மறக்க முடியாத ஆழமான வடுக்களை ஏற்படுத்திய மழை வெள்ளத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளைத் தமிழக அரசு மறைத்துத் தவறான புள்ளி விவரங்களைச் சொல்கிறது என்கிற குரல் மாநில

முழுவதும் எதிரொலிக்கிறது. வெள்ளத்தால் தமிழகம் எவ்வளவு பாதிக்கப்பட்டது என்கிற கணக்கு முழுமையாகத் திரட்டப்படுவதற்கு முன்பே வெள்ள நிவாரணம் 26 ஆயிரம் கோடி ரூபாய் தேவை என ஜெ. மத்திய அரசிடம் கோரிக்கை வைத்திருப்பது தமிழக அரசு வெள்ள நிவாரணப் பணிகளில் வெளிப்படைத் தன்மையாகச் செயல்படவில்லை என்பதைத் தெளிவாகக்காட்டுகிறது என்கிறார்கள் இயற்கைப் பேரிடர் பாதித்த பகுதிகளில் பணிபுரியும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்! மழை வெள்ளம் வரப்போகிறது என முன்கூட்டியே அறிவித்தும் மாநில அரசு கண்டு கொள்ளவில்லை. பாதிப்பை ஏற்படுத்திய வெள்ளத்தில் இருந்து மக்களைக் காக்கவும் முயற்சி எடுக்காமல் இருக்கிறது ஜெ. அரசு என்கிற குரல் தமிழ்நாடு முழுவதும் வெளிப்பட ஆரம்பித்திருக் கிறது" என்றெல்லாம் "நக்கீரன்" எழுதியுள்ளது.

"புதிய தலைமுறை" இதழில் இயக்குனர் தங்கர்பச்சான் கூறும்போது, "ஈக்காட்டுத்தாங்கலில்தான் என்னோட வீடு இருக்கு. எங்க தெருவில் வசிக்கும் நண்பர்கள் இருபத்து நான்கு பேரோடு எட்டு நாட்களாக எங்கள் வீட்டு மாடியில்தான் இருந்தோம். ஹெலிகாப்டர் மூலமோ, படகு மூலமோ ஏதாவது உதவி கிடைக்குமா என்று எவ்வளவோ எதிர்பார்த்தோம். எனது விவசாய நிலம், இரண்டு கார், இரண்டு பைக்குன்னு சொத்துகளை இழந்திருக்கிறேன். அதுக்கு மேல பெரிய சொத்தான நான்கு நண்பர்களை இழந்திருக்கேன். செம்பரம்பாக்கம் ஏரியின் கொள்ளளவு என்னங்கிறது தெரியும். ஏரியில் வந்து சேருகிற நீருக்கேற்ப உபரி நீரை வெளியேற்றக் கூடவா தெரியாது? ஏற்கனவே மழை நீரில் தத்தளித்துத் தவித்துக் கொண்டிருக்கிற மக்களிடம் சொல்லாமல் கொள்ளாமல் முன்னறிவிப்பின்றித் திடீரென நடு இரவில் ஏரியைத் திறந்துவிட்டதால்தான் இவ்வளவு பாதிப்பு. இப்போது உள்ள ஆட்சியாளர்களை நாம் எவ்வளவு முயன்றாலும் மாற்ற முடியாது. அதனால், வரவிருக்கும் ஆட்சியாளர்களை நாம் தான் சரியாகத் தேர்வு செய்ய வேண்டும்" என்றெல்லாம் "புதிய தலைமுறை" இதழில் எழுதியிருக்கிறார்.

"ஜூனியர் விகடன்" இதழ், "நவம்பர் 28ஆம் தேதி காலையிலேயே, பொதுப் பணித் துறை அதிகாரிகள், தலைமைச் செயலாளருக்கு "ரெட் சிக்னல்" காட்டிவிட்டார்கள். "இரண்டு நாட்களில் அதிகமான மழை பெய்யப் போவதாகத் தகவல்

வருகிறது. எனவே அதற்கு நாம் தயாராக வேண்டும்" என்பதுதான் இவர்களது கோரிக்கை. "மேலே கேட்டுச் சொல்கிறோம்" என்று சொல்லப்பட்டது. தகவல் இல்லை. 29ஆம் தேதி காலையில் இதே தகவல் பொதுப்பணி அதிகாரிகளால் தரப்பட்டது. மாலையும் தரப்பட்டது. அப்போது சிக்னல் எதுவும் காட்டப்படவில்லை. "இதோ முதல்வரைச் சந்திக்கப் போகிறேன், உடனே தகவல் தருகிறேன்" என்று தலைமை அதிகாரி ஒருவர் சொன்னாரே தவிர, தகவல் தரவில்லை. அரசாங்கக் கணக்குப்படியே இவ்வளவு தண்ணீரை ஒரே நாள் இரவில் திறந்ததால்தான் சென்னை மூழ்கியது" என்று தெளிவாகக் காரணத்தை ஜி.வி. எழுதியுள்ளது.

"மக்களிடையே தெளிவுபடுத்த தி.மு.கழகம் நீதி விசாரணை வேண்டுமென்று கோரியது. அதற்கு எந்த விளக்கமோ, பதிலோ கிடைக்காத காரணத்தால்தான் ஜனவரி 5ஆம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம் சென்னையிலே நடைபெறுகிறது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள வேண்டியது உங்கள் ஒவ்வொருவருடைய கடமை. கலந்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆர்ப்பாட்டத்தில் சந்திப்போம்!"

இதை எழுதிய ஜூனியர் விகடன் ஒடிசா மாநிலத்திலும், ஆந்திர மாநிலத்திலும் இதுபோன்ற மழை வெள்ளம், புயல் 2013ஆம் ஆண்டு ஏற்பட்டபோது, அந்த மாநிலங்களின் முதலமைச்சர்கள் எவ்வாறு செயல்பட்டார்கள் என்பதையும் ஒரு கட்டுரையாக வெளியிட்டுள்ளது. அதில், அந்த இரண்டு முதல்வர்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மத்தியில் முழங்கால் அளவு தண்ணீரில் நின்றுகொண்டு பேசுகின்ற புகைப்படங்களும் வெளிவந்துள்ளன. குறிப்பாக ஆந்திர முதல்வர், நண்பர் சந்திரபாபு நாயுடு பற்றிக் குறிப்பிடும்போது, "ஹைதராபாத்தில் இருந்து விசாகப்பட்டினம் வந்த சந்திரபாபு நாயுடு பாதிக்கப்பட்ட பகுதிகளை ஒன்றுவிடாமல் பார்த்தார். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி நிவாரணப் பணிகளை விரைவுபடுத்தினார். அவர் தங்குவதற்குக்கூட அங்குச் சரியான இடம் இல்லை. அரசு விடுதிகள் புயலால் சேதம் அடைந்திருந்ததால், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்த பேருந்திலேயே தங்கியதுடன், அதிலேயே

தூங்கினார். இரண்டாவது நாளாகப் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை சந்திரபாபு நாயுடு பார்வையிட்டார். நிவாரணப் பணிகள் அவருக்குத் திருப்தி அளிக்கும் வகையில் இல்லை. அதிகாரிகளைக் கடுமையாக எச்சரித்தார். இது குறித்து அவர் பத்திரிகையாளர்களிடமும் வெளிப்படையாகப் பேசினார்" என்று ஆந்திர முதல்வரைப் பற்றிய எழுதிய அதே இதழ், நம்முடைய தமிழக முதலமைச்சரைப் பற்றி என்ன எழுதியது தெரியுமா? "தமிழகத்தில் சென்னை, கடலூர் உட்பட வட மாவட்டங்களில் கடந்த அக்டோபர் 28ஆம் தேதியில் இருந்து ஒரு மாதத்துக்கும் மேலாகக் கனமழை பெய்தது. வானிலைமைய இயக்குநர் ரமணன், கனமழை என்ற வார்த்தையைத் தவிர "அதி கன மழை" என்றுகூட எச்சரித்துப் பார்த்தார். ஆனால், அந்த வார்த்தைகூடத் தமிழக அரசையும், முதல்வரையும் தூக்கத்தில் இருந்து எழுப்பவில்லை? முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எதுவுமே எடுக்கப்படவில்லை. ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் போலவோ, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவைப் போலவோ ஏன் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவில்லை? ஓட்டு கேட்பதற்காக ஊர், ஊராகச் சென்று உங்கள் சகோதரி வந்திருக்கிறேன் என்று கூறிக் கொள்பவர், சென்னை மக்கள் துயரத்தில் தவித்தபோது என்ன செய்தார்?"என்று கேள்வி கேட்டுள்ளது. ஆளுங்கட்சி இதற்கெல்லாம் பதில் கூறாவிட்டாலும், கமலஹாசன் பெயரில் வந்த ஒரு அறிக்கைக்கு நிதியமைச்சர் ஏழு பக்கங்களில் பதிலளிக்கிறார்.

நடுநிலை நாளேடுகள் எல்லாம் இவ்வாறு தமிழக அரசைக் கேள்வி கேட்டபோது அரசின் சார்பில் எந்த விளக்கமும் தரப்படவில்லை. அதனால்தான் இதற்குக் காரணம் யார் என்பதை மக்களிடையே தெளிவுபடுத்த தி.மு.கழகம் நீதி விசாரணை வேண்டுமென்று கோரியது. அதற்கு எந்த விளக்கமோ, பதிலோ கிடைக்காத காரணத்தால்தான் ஜனவரி 5ஆம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம் சென்னையிலே நடைபெறுகிறது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள வேண்டியது உங்கள் ஒவ்வொருவருடைய கடமை. கலந்துகொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆர்ப்பாட்டத்தில் சந்திப்போம்!

அன்புள்ள,

மு.க.

30.12.2015

3987. திவாலாகிறதா தமிழகத்தின் நிதி நிலை?

உடன்பிறப்பே,

"திவாலாகும் தமிழ்நாடு" என்ற தலைப்பில் "தினகரன்" நாளேட்டில் ஒரு செய்திக் கட்டுரை வந்துள்ளது. அதைப் படித்ததால், ஜெயலலிதா ஆட்சியின் ஐந்தாண்டுக் கால முடிவில் தமிழக அரசின் கடன் சுமையும், நிதி நிலையும் எவ்வாறு உள்ளன என்பதை நீயும் அறிந்து, மற்றவர்களுக்கும் விளக்க வேண்டுமென்பதற்காகச் சில புள்ளி விவரங்களைத் தந்திட விரும்புகிறேன்.

ஜெயலலிதாவின் ஐந்தாண்டுக் கால ஆட்சி முடியப்போகிறது. சட்டப்பேரவைக்கான பொதுத் தேர்தலும் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. இப்போதுள்ள நிலைமையில் மின் வாரியக் கடன்களைச் சேர்க்காமல், தமிழக அரசுக்கு உள்ள மொத்தக் கடன் 2 இலட்சத்து 11 ஆயிரத்து 483 கோடி ரூபாயாகும். அதாவது தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொருவருடைய தலையிலும், 28 ஆயிரத்து 778 ரூபாய் கடன் சுமை இருக்கிறது. அ.தி.மு.க. ஆட்சியில் சுமார் ஒன்றரை இலட்சம் கோடி ரூபாய் கடன் ஏற்கனவே இருந்ததை விடக் கூடுதலாகி இருக்கின்றது.

இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் ஜெயலலிதா ஏற்கனவே 2001-2006 ஆண்டுகளில் ஆட்சியிலே இருந்தபோது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 22.29 சதவிகிதம் அளவிற்கு கடன் சுமை வைத்திருந்தார். 2006-2011 தி.மு. கழக ஆட்சியில் கடன் சுமை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 19.58 சதவிகிதமாகக் குறைந்தது.

தி.மு. கழக அரசின் மீது இந்தியாவின் நிதி அமைச்சராக அப்போதிருந்த திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் 9-4-2011 அன்று சென்னையிலே கூறும்போது, "இந்தியாவில் நிதி ஒழுங்கையும், நிலைத்தன்மையையும் திருப்திகரமாகக் கடைப் பிடித்துவரும் ஒரு சில மாநிலங்களுள் தமிழகமும் ஒன்றாகும். தமிழக அரசின் கடன்

அளவு, பரிந்துரைக்கப்பட்ட அளவை விட மிகவும் குறைவாகவே உள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்து ஒரு நாள் கூட தன் கணக்கில் பணம் இல்லாமல், கூடுதல் வரைவுத் தொகையை - ஓவர்-டிராப்ட்டை தமிழக அரசு பெற்றதில்லை " என்று கழக அரசின் சிறப்பான நிதி மேலாண்மை குறித்துப் பாராட்டிச் சொல்லியிருந்தார். ஆனால் இன்றைய அ.தி.மு.க. ஆட்சியின் நிலை குறித்து ஆங்கில நாளேடுகள் எல்லாம் சொல்வது என்ன?

2011-ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பத்து மாத காலத்தில் பால் விலை உயர்வு, பேருந்துக் கட்டண உயர்வு ஆகியவற்றைத் தொடர்ந்து மின் கட்டண உயர்வினை ஒரேயடியாக 37 சதவிகித அளவிற்கு உயர்த்தி அறிவித்தார்கள்.

2001ஆம் ஆண்டு ஜெயலலிதா முதல் அமைச்சராக வந்தபோதும், 1-12-2001 முதல் மின் கட்டணங்களை உயர்த்தினார். மீண்டும் 15-3-2003 அன்றும் 1398 கோடி ரூபாய்க்கு மின் கட்டண உயர்வுகளைச் செய்தார். அன்றையதினம் தான் தி.மு. கழக ஆட்சியில் வழங்கப்பட்ட விவசாயம் மற்றும் குடிசைகளுக்கான இலவச மின்சாரத்தை ரத்து செய்து அறிவித்தார். வீடுகளுக்கான மின் கட்டணத்தை 22.13 சதவிகிதமும், கல்வி நிலையங்களுக்கு 16.61 சதவிகிதமும் உயர்த்தினார்.

அப்படியும் தமிழ்நாட்டில் நிதி நிலைமை எவ்வாறு உள்ளது?

"இந்து" வெளியிட்டுள்ள செய்தியில், "It's Official and out in the open. The State Government's financial health is quite bad. It was revealed in an innocuous statement by Chief Minister, 0. Pannerselvam" அதாவது "அது அலுவல் சம்பந்தப்பட்டது ; ஆனாலும் வெளியே வந்து விட்டது. மாநில அரசின் நிதி நிலைமை மிக மோசமாக உள்ளது" என்று எழுதப்பட்டிருந்தது.

13-2-2014 அன்று அன்றைய முதலமைச்சரும், இன்றைய நிதியமைச்சருமான ஓ.பன்னீர் செல்வம் பேரவையில் படித்த நிதி நிலை அறிக்கையில் பக்கம் 68இல், "2014-2015ஆம் ஆண்டில் வருவாய் உபரி 289.36 கோடி ரூபாயாக இருக்கும்" என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அவருடைய இந்தக் கணிப்பு தவறாகி விட்டது. இந்த நிதியாண்டின் முதல் ஆறு மாத நிறைவில், தமிழ்நாடு அரசின் வருவாய்ப் பற்றாக்குறை 7,652 கோடி ரூபாயாக இருப்பதாக "இந்து" பத்திரிகை தெரிவித்தது.

அரசின் வரி வருவாய், மொத்த வருவாயில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் அதிகமாக இருப்பது வழக்கம். ஆனால் எதிர்பார்த்த அளவுக்கு வருவாய் வரவில்லை என்பது 2014ஆம் ஆண்டின் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான அரசின் செயல்பாடுகளைப் பார்த்தபோது தெரிய வந்தது. 91 ஆயிரத்து 835 கோடி ரூபாய் மாநில அரசின் சொந்த வரி வருவாயாகக் கிடைக்க வேண்டுமென்று மதிப்பிடப்பட்டதற்கு மாறாக, 37 ஆயிரத்து 56 கோடி ரூபாய் மட்டுமே அந்தக் காலகட்டத்தில் கிடைத்துள்ளது. மாநில அரசின் வரி வருவாயில் உள்ள பல்வேறு இனங்களின் புள்ளி விவரங்களைப் பார்க்கும் போது, எந்தத் துறையும் எதிர்பார்த்த அளவுக்கு வருவாயை ஈட்ட வில்லை என்பதை அறியலாம். எதிர்பார்க்கப்பட்ட மாநில அரசின் வருவாய் 20.3 சதவிகிதமென்றால், வந்திருப்பது 14.6 சதவிகிதம்தான் ; மத்திய வரி மற்றும் மத்திய அரசின் ஒதுக்கீடு மூலமாக 49 சதவிகித வருவாய் கிடைக்குமென்று எதிர்பார்த்ததற்கு மாறாக, 37.68 சதவிகிதம்தான் வரவு வந்துள்ளது.

"The early signs of the declining financial health were visible even during the previous year (2013-2014) when the State registered a revenue deficit of about Rs. 1,790 crore, as per supplementary accounts. The revenue deficit came after two successive years of revenue surplus" (சென்ற ஆண்டே, அதாவது 2013-2014 நிதியாண்டிலேயே 1,790 கோடி ரூபாய் அளவுக்கு மாநிலத்தில் வருவாய்ப் பற்றாக்குறை ஏற்பட்ட போதே தமிழக நிதி நிலை மோசமாகிக் கொண்டு வருவதற்கான அறிகுறிகள் வெளிப்படையாகத் தெரிந்தன. இரண்டாண்டுகள் தொடர்ந்து வருவாய் உபரி ஏற்பட்டதற்குப் பிறகு, வருவாய்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது) என்று அ.தி.மு.க. அரசின் நிதி நிலையை "இந்து" நாளேடு அப்போதே தோலுரித்துக் காட்டியிருந்தது.

இன்னும் சொல்லப்போனால் "ஜூனியர் விகடனில்" "நிதி நெருக்கடியில் தமிழக அரசு" என்ற தலைப்பில் செய்தியாளர் எஸ்.ஏ.எம். பரக்கத் அலி விளக்கக் கட்டுரை ஒன்றையே தீட்டி யிருந்தார். அதில், "எந்த இலக்கையும் எட்ட முடியாமல் நிதித் துறை தடுமாறி வருகிறது. டாஸ்மாக் வருவாயை உயர்த்துவதில் தான் அரசு அதிக அக்கறை எடுத்துக் கொண்டது. அந்த அளவுக்கு நிர்வாகத் திறமையை மற்ற துறைகளிலும் காட்டி யிருந்தால்,

மொத்த வருவாய் அதிகரித்திருக்கும். அரசின் மெத்தனம்தான் இதற்குக் காரணம். இதைச் சமாளிக்க கடன் வாங்குவதைத் தவிர அரசுக்கு வேறு வழியில்லை. ஏற்கனவே ஒரு லட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாய் கடனில் தமிழக அரசு தத்தளித்துக் கொண்டிருக்கிறது. இதனால் மாநிலத்தின் மொத்த வளர்ச்சியும் பாதிக்கப்படும். பழைய வரி பாக்கிகளை வசூலிக்கவும், வரி ஏய்ப்பைத் தடுக்கவும் அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. தமிழக அரசின் கடன் தவிர மின்வாரியத்தின் கடன் ஒன்றரை இலட்சம் கோடி ரூபாய் இருக்கிறது. பொதுத் துறை நிறுவனங்களின் கடனையும் சேர்த்தால் தமிழகத்தின் மொத்தக் கடன் சுமை நான்கு இலட்சம் கோடி ரூபாயைத் தாண்டும்" என்று நிதித் துறை வட்டாரம் தெரிவித்ததாக விரிவாக "ஜூனியர் விகடன்" எழுதியிருந்தது.

கூவம் நதியைச் சீரமைக்க ரூ. 3,833.62 கோடியில் பெரும் திட்டம், ஆறுகள் இணைப்பு வெள்ளத் தடுப்புப் பணிக்கு ரூ. 5,166 கோடி, 3 வழித் தடங்களில் ரூ. 8,350 கோடியில் மோனோ ரெயில் திட்டம், ரூ. 1,075 கோடியில் நெமிலிச்சேரியையும் மீஞ்சூரையும் இணைக்கும் இரண்டாம் கட்ட வெளிவட்டச் சாலை, சென்னை டி.பி.ஐ. வளாகத்தில் ஒருங்கிணைந்த அறிவுசார் பூங்கா, தேர்வாய்க் கண்டிகை, திருக்கண்டலம், ராமஞ்சேரி ஆகிய இடங்களில் தலா ஒரு டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட புதிய ஏரிகள் என கடந்த நிதி நிலை அறிக்கைகளில் அறிவிக்கப்பட்ட பல அறிவிப்புகள் எல்லாம் என்ன ஆயின? விளம்பரக் காற்றில் பறந்து போய் விட்டனவோ!

ஏன்? தமிழக அரசு அலுவலர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் போனஸ் வழங்கப்பட்டு வருகிறது. தமிழர் திருநாள், பொங்கல் விழாவிற்கு இன்னும் இரண்டு வார காலம் மட்டுமே உள்ள நிலையில், தமிழக அரசு உடனடியாக போனஸ் வழங்குவதற் கான அறிவிப்பினைச் செய்திட வேண்டும். - 13-2-2014 அன்று தமிழகச் சட்டப்பேரவையில், அ.தி.மு.க. அரசின் சார்பாக நிதி நிலை அறிக்கையைப் படித்த அன்றைய முதலமைச்சர் ஓ. பன்னீர் செல்வம், அந்த அறிக்கையின் பக்கம் 31இல் "நமது மாநிலத்தில் தொழில் வளத்தையும் கட்டமைப்பையும் மேலும் ஊக்குவிக்க இந்த அரசு வரும் அக்டோபர் மாதத்தில் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டை சென்னையில் நடத்தும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

இதற்காக இந்த வரவு செலவுத் திட்டத்தில் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது" என்று படித்தார்.

இது 2014 ஆம் ஆண்டு பெப்ரவரியில் நிதி நிலை அறிக்கையில் படித்த அறிவிப்பு! ஆனால் அமைச்சர் பேரவையில் படித்தபடி அக்டோபர் மாதத்தில் முதலீட்டாளர் மாநாடு நடை பெற்றதா என்றால் இல்லை.

2012 ஆம் ஆண்டிலேயே ஒரே நாளில் 12 கம்பெனிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடுவதாகவும், அதன் மூலம் 36,855 பேருக்கு வேலை கிடைக்குமென்றும், 20 ஆயிரத்து 925 கோடி ரூபாய் முதலீட்டில் தொழிற்சாலைகள் தொடங்குமென்றும் பூதாகாரமாக அறிவிப்பெல்லாம் செய்து, ஏடுகளில் எல்லாம் பெரிதாகச் செய்தி வெளியிட்டார்கள். அந்த 12 கம்பெனிகளின் முதலீடும் தமிழகத்திற்கு வந்து அவர்கள் எல்லாம் தொழில்களைத் தொடங்கி விட்டார்களா, அந்தக் கம்பெனிகளில் 36 ஆயிரத்து 855 பேர் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்களா என்ற விவரங்களை யெல்லாம் அரசின் சார்பில் மக்களுக்கு தெரிவித்தால் நல்லது என்று கேட்டுக் கொண்டோம். ஆனால் ஆட்சியினர் வாயே திறக்கவில்லை. நடந்திருந்தால் அல்லவா நாவசைக்க முடியும்!

மீண்டும் ஒரு முறை 5,081 கோடி ரூபாய்க்கு 16 நிறுவனங்களுடன் ஒப்பந்தம் கையெழுத்தானது என்றும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட தொழில் நிறுவனங்கள் இன்னமும் உற்பத்தி பணியைத் துவக்கவில்லை என்றும் செய்தி வந்தது. மேலும் கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில், 26,625 கோடி ரூபாய் அளவிற்கு மொத்த முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு, அதன் தொடர்ச்சியாக 10,660 கோடி ரூபாய் அளவிலான முதலீடுகள் மட்டுமே செய்யப்பட்டுள்ளன என்றும், இதனால் 10,022 பேருக்கு கூடுதல் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்கள்.

அதன் பிறகு 2015 ஆம் ஆண்டு மே மாதத்தில் முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறும் என்று அன்றைய முதலமைச்சர் பன்னீர்செல்வம் அறிவித்தார். சட்டப்பேரவைக்கான பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு ஓராண்டே உள்ள நிலையில், 2015 மே மாதத்தில் மாநாடு நடத்தி என்ன பயன் ஏற்படப்

போகிறது என்று நான் அப்போதே கேட்டிருந்தேன். அதற்கும் பதிலளிக்கவில்லை.

மே மாதம் நடக்கவிருந்த இந்த மாநாட்டை யொட்டி 13-2-2015 அன்று சென்னையில் நடைபெற்ற முன்னோட்ட மாநாட்டில் 18 ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஏழு நிறுவனங்களோடு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று மிகப் பெரிய விளம்பரம் செய்தார்களே தவிர அங்கே அந்த நிகழ்ச்சி நடைபெற்றதா?

இந்த முதலீட்டாளர்கள் மாநாடு இவ்வாறு தள்ளி வைக்கப்படக் கூடக் காரணம், ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு மேல் முறையீட்டு வழக்கில் ஜெயலலிதா விடுதலையாகி, அவர் முதலமைச்சர் பொறுப்பிலே இருக்கிற போது இந்த மாநாடு நடைபெற வேண்டும் என்பதற்காகத்தான் மாநாடு மீண்டும் மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டது. அதை உண்மை என்று நிரூபிப்பதைப் போல முதலமைச்சராக ஜெயலலிதா வந்த பிறகுதான் முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது. ஆனால் அந்த மாநாட்டில் முதல் அமைச்சர் ஜெயலலிதா அறிவித்தவாறு இரண்டு இலட்சத்து 42 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டுக்கான தொழில்கள் வந்தனவா? இல்லை என்பதுதான் வேதனையான பதில்! அ.தி.மு.க. அரசின் நான்காண்டு கால ஆட்சி முடிவடைந்து, ஐந்தாம் ஆண்டு ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், இந்த ஆட்சியினர் தமிழ்நாட்டு மக்களை எந்த அளவுக்குக் கடனிலே சிக்க வைத்திருக்கிறார்கள் என்பது பற்றி "டைம்ஸ் ஆப் இந்தியா" ஆங்கில நாளேடு ஒரு நீண்ட கட்டுரையை, வரைபடத்தோடு வெளியிட்டிருந்தது. அந்தச் செய்திக்குத் தலைப்பு "How Tamil Nadu Government Debt keeps people in Red ? With Interest Payments climbing, State has little left to help the Poor who depend on Moneylenders" (தமிழக அரசு வாங்கியுள்ள கடன்கள் மாநில மக்களை எத்தகைய அபாய கட்டத்திற்குக் கொண்டு சென்றுள்ளன? அரசு செலுத்திட வேண்டிய வட்டித் தொகை அதிகரித்துக் கொண்டே செல்வதால், வட்டிக்குப் பணம் தருபவர்களைச் சார்ந்திருக்கும் ஏழைகளுக்கு உதவிட மாநில அரசிலும் சொற்பத் தொகையே எஞ்சியிருக்கிறது)

அதாவது தி.மு. கழக ஆட்சியில் சுமார் 90 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு கடன் இருந்தது, தற்போது 2 இலட்சத்து 11 ஆயிரத்து

483 கோடி ரூபாய் என்ற அளவுக்கு அந்தக் கடன், அதாவது முன்பு இருந்ததை விட 234.98 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது.

தமிழகத்தின் கடன் எவ்வளவு என்பதை ஆண்டு வாரியாகப் பார்த்தால் - 2010-2011இல் 91,050 கோடி ரூபாய் - 2011-2012இல் 1,03,999 கோடி ரூபாய் - 2012-2013இல் 1,20,205 கோடி ரூபாய் - 2013-2014இல் 1,40,042 கோடி ரூபாய் - 2014-2015இல் 1,78,171 கோடி ரூபாய் - 2015-2016இல் 2,11,483 கோடி ரூபாய் என்று அ.தி.மு.க. ஆட்சியில் கடனை வெகுவாகப் பெருக்கியிருக்கிறார்கள் என்று நானல்ல, "டைம்ஸ் ஆப் இந்தியா" ஆங்கில நாளேடு எழுதியது. அதாவது தி.மு. கழக ஆட்சியில் இருந்ததை விட, அ.தி.மு.க. ஆட்சியில் கடன் சுமார் 200 சதவிகிதத்திற்கு மேல் அதிகரித்துள்ளது.

தி.மு. கழக ஆட்சியில் 2010-2011ஆம் ஆண்டு வருவாய்ப் பற்றாக்குறை 3,396.45 கோடி ரூபாய் ஏற்படும் என்றும், நிதிப் பற்றாக்குறை 16,222.13 கோடி ரூபாயாக இருக்கும் என்றும் நிதிப் பற்றாக்குறை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 3.72 சதவிகிதமாக இருக்கும் என்றும் நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் நான்காண்டு கால அ.தி.மு.க. ஆட்சிக்குப் பிறகு வருவாய்ப் பற்றாக்குறையோ, நிதிப் பற்றாக்குறையோ தி.மு. கழக ஆட்சியில் இருந்ததைவிடக் குறைந்திருக்கிறதா என்று பார்த்தால், கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில், 2015-2016ஆம் ஆண்டிற்கான வருவாய்ப் பற்றாக்குறை 4,616.02 கோடி ரூபாயாக இருக்கும் என்றும், நிதிப் பற்றாக்குறை 31,829.19 கோடி ரூபாயாக இருக்குமென்றும் கணிக்கப்பட்டுள்ளது. கழக ஆட்சியோடு ஒப்பிடும்போது, அ.தி.மு.க. ஆட்சியில் வருவாய்ப் பற்றாக்குறை 1,219.57 கோடி ரூபாயும், நிதிப் பற்றாக்குறை 15,607.06 கோடி ரூபாயும் உயர்ந்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

அ.தி.மு.க. ஆட்சியில் கடன் சுமை பெருகி விட்டது. வருவாய்ப் பற்றாக்குறையும், நிதிப் பற்றாக்குறையும் அதிகமாகி "பற்றாக்குறை" என்னும் நோயால் பாதிக்கப்பட்டு விட்டது தமிழகம். அரசின் கட்டண விகிதங்கள் அதிகமாகி, அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் விண்ணளவுக்கு உயர்ந்து விட்டன. இயற்கையால் பெய்த பெருமழையோடு, செயற்கையான வெள்ளமும் இணைந்து மக்களின் வாழ்க்கையைத் தலைகீழா

கப் புரட்டிப் போட்டு விட்டது. ஏழையெளிய நடுத்தர மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி விடியல் வரும் வரை காத்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. தமிழகத்தின் நிதி நிலையோ திவால் திசையை நோக்கி வேகமாகப் பயணித்துக் கொண்டிருக்கிறது! ஐந்தாண்டுக் கால அ.தி.மு.க. ஆட்சியின் அவலச் சாதனை இதுதானா?

அன்புள்ள,

மு.க.

31-12-2015

3988. நீதியில் ஊழலுக்கு நிச்சயம் இடம் இல்லை!

உடன்பிறப்பே,

"ஜெ.வுக்கு எதிரான வழக்கு: நீதிபதி மாற்றம்" என்ற தலைப்பில் 'தினமலர்' நாளேட்டிலும் - "ஜெ. சொத்துக் குவிப்பு வழக்கில் நீதிபதி மாற்றம்" என்ற தலைப்பில் "தி இந்து" தமிழ்நாளேட்டிலும்- "சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கு விசாரணை நீதிபதி மாற்றம்" என்ற தலைப்பில் "தினத்தந்தி நாளேட்டிலும் - "சுப்ரீம் கோர்ட்டில் ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கு, நீதிபதி திடீர் மாற்றம்" என்ற தலைப்பில் "தினகரன்" நாளேட்டிலும் -"Assets Case: New Judge on SC Bench" என்று "தி இந்து" ஆங்கில நாளேட்டிலும் 8-1-2016 அன்று ஒரு செய்தி வெளிவந்துள்ளது.

குறிப்பாக அந்தச் செய்திகள், ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கின் மேல் முறையீட்டை விசாரித்து வந்த நீதிபதிகளில் ஒருவர் மாற்றப்பட்டுள்ளார் என்ற தகவலைத் தெரிவிக்கின்றன. இந்த அமர்வில் ஆரம்பத்தில் நீதிபதி பினாகி சந்திர கோஷ் அவர்கள் முதன்மை நீதிபதியாகவும், அவருக்குத் துணையாக நீதிபதி அகர்வால் அவர்களும் நியமிக்கப் பட்டிருந்தார்கள். கடைசியாக 23-11-2015 அன்று விசாரணை நடைபெற்ற போது, மேல்முறையீட்டின் இறுதி வாதத்தைக் கேட்பதற்கான தேதி ஜனவரி 8ஆம் தேதி நிர்ணயிக்கப்படும் என்றும், அன்று முதல் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் விசாரணை நடைபெறும் என்றும் குறிப்பிட்டிருந்தன. இந்த வழக்கு பற்றிய விவரத்தை நினைவுக்குக் கொண்டு வரச் சுருக்கமாகக் கூறுகிறேன்.

1991-1996ஆம் ஆண்டுகளில், தமிழக முதலமைச்சராக ஜெயலலிதா இருந்த போது, வருமானத்துக்கு அதிகமாக 66 கோடி ரூபாய் சொத்து குவித்ததாக தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத் துறை 1996ஆம் ஆண்டு வழக்குப் பதிவு செய்தது. அந்த வழக்குதான் கடந்த 19 ஆண்டுகளாக பல்வேறு நீதிமன்றங்களில் நடந்து,

தற்போது உச்ச நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கிறது. பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை நடைபெற்று, சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஜான் மைக்கேல் குன்ஹா அவர்கள் 27-9-2014 அன்று ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோருக்கு தலா நான்காண்டுகள் சிறைத் தண்டனையும், ஜெயலலிதாவுக்கு ரூ. 100 கோடியே 1 லட்சமும், மற்ற மூவருக்கும் தலா 10 கோடியே 10 ஆயிரம் ரூபாயும் அபராதமும் விதித்து தீர்ப்பு அளித்தார். இதைத் தொடர்ந்து ஜெயலலிதா உட்பட நால்வரும், சிறையிலே அடைக்கப்பட்டனர்.

இவ்வாறு தண்டிக்கப்பட்டு சிறையிலே இருந்த ஜெயலலிதா ஜாமீனில் வெளியே வர முயற்சி செய்து, உச்ச நீதிமன்றம் வரை அந்த வழக்கு சென்று, உச்ச நீதி மன்றத் தலைமை நீதிபதி டத்து அவர்கள், 17-11-2014 அன்று ஜெயலலிதாவை ஜாமீனில் விடுதலை செய்தார். அவ்வாறு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ஜெயலலிதாவை ஜாமீனில் விடுவித்து, ஜெயலலிதாவின் அப்பீல் மனுவை கர்நாடகா உயர் நீதிமன்றம் மூன்று மாதங்களுக்குள் விசாரித்து தீர்ப்பளிக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்த போது, அந்தத் தீர்ப்பு பற்றியும், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி டத்து அவர்கள் பற்றியும் அப்போதே கடுமையான விமர்சனங்கள் ஏடுகளில் வெளிவந்தன.

அதன் பிறகு ஜெயலலிதா செய்த மேல்முறையீட்டின் மீது பெங்களூர் உயர் நீதிமன்றத்தின் சிறப்பு அமர்வில் ஜனவரி 5 துவங்கி மார்ச் 11 வரை வழக்கு நடைபெற்றது. குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக வாதாடிய வழக்கறிஞர்களிடம் நீதிமன்றத்திலேயே, விசாரணையின் போதே, அந்த வழக்கை விசாரித்த நீதிபதி குமாரசாமி அவர்கள் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்து, அந்தக் கருத்துகள் எல்லாம் ஏடுகளிலே தொடர்ந்து வெளிவந்தன. குறிப்பாக அவர்களுடைய வாதத்தில் எந்தவிதமான ஆதாரங்களும் எடுத்துக் காட்டப்படவில்லை என்றும், குன்ஹா அவர்களின் தீர்ப்பிலே போடப்பட்டிருந்த 150க்கு மேற்பட்ட முடிச்சுகளை அவிழ்க்கவில்லை என்றும், அவர்களின் வாதத்தில் போதிய மதிப்பெண்கள் பெற வில்லை என்றும், குன்ஹா அளித்த தீர்ப்பைத்தான் மீண்டும், தானும் தர வேண்டிய நிலையே உள்ளதென்றும் வெளிப்படையாக நீதிமன்றத்திலேயே நீதிபதி குமாரசாமி தெரிவித்திருந்தார்.

இதற்கிடையே உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு (நீதிபதிகள் தீபக் மிஸ்ரா, ஆர்.கே. அகர்வால், பிரபுல்ல சி. பந்த் அடங்கியது) அளித்த ஒரு தீர்ப்பில், கர்நாடக உயர் நீதிமன்றத்தில் வரவிருந்த தீர்ப்பைப் பற்றிக் குறிப்பிடும் போது, "குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது கூறப்பட்டுள்ள குற்றத்தின் முக்கியத்துவத்தை உயர் நீதிமன்ற நீதிபதி (குமாரசாமி) கருத்திலே கொள்ள வேண்டும். ஊழல், சமூகத்தை எப்படி (கரையான் போல) அரித்து வருகிறது என்பது குறித்து உயர் நீதிமன்றம் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும். நீதிமன்றத்தின் முன்னுள்ள சாட்சியங்களை முழுமையாகவும் ஒருங்கிணைத்தும் மதிப்பீடு செய்து தீர்ப்பளிக்க வேண்டும். விருப்பு வெறுப்பின்றி அளிக்கும் தீர்ப்பு பாரபட்சமின்றி தீர்க்கமாக எடுத்துரைக்கப்பட வேண்டும்" என்றெல்லாம் குறிப்பிட்டிருந்தது.

இன்னும் சொல்லப்போனால், உச்ச நீதிமன்ற நீதிபதி மதன் பி.லோகுர் அவர்கள், "ஒரு கிரிமினல் வழக்கை எப்படி நடத்தக் கூடாது என்பதற்கு இந்த மேல் முறையீடு வழக்கு ஒரு சான்று. கிரிமினல் வழக்குகளில் நீதி வழங்கும் முறை தோற்றுவிட்டது. இதைச் சீர்படுத்த வேண்டும். அதற்கான நேரம் வந்து விட்டது" என்று தெரிவித்திருந்தார்.

உச்ச நீதிமன்ற அமர்வு இவ்வாறு அசாதாரணமாக கருத்துகளைத் தெரிவிக்கக் காரணம் என்ன?

உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு ஒரு சில நாட்களுக்கு முன்பு, உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அவர்களே பெங்களூர் வந்ததாகவும், குற்றஞ்சாட்டப்பட்ட ஜெய லலிதாவுக்கு ஆதரவாகத் தீர்ப்புக் கிடைக்க பல்வேறு முயற்சிகள் நடைபெறுவதாகவும் அப்போது செய்திகள் பேசப்பட்டன.

11-5-2015 அன்று கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி குமாரசாமி, ஜெயலலிதாவை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளித்தார். அதனை அ.தி.மு.க. வினர் வெற்றியாக கொண்டாடினர். ஜெயலலிதாவும் நீதி வென்றதாகக் அறிக்கை விடுத்தார். நம்மைப் பொறுத்த வரையில் நீதிபதி குமாரசாமி நீதிமன்றத்தில் விசாரணை நடத்திய போது கூறிய மொழிகளுக்கும், தீர்ப்புக்கும் மிகப் பெரிய வேறுபாடு இருக்கிறதே என்ற சந்தேகம் வந்தது. ஆனால் தீர்ப்பையே திருப்பிப் போடுகின்ற அளவுக்கு

அடுத்த நாளே தீர்ப்பிலே உள்ள மிகப் பெரிய தவறுகள் குறித்து பலரும் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர்.

அதாவது நீதிபதி குமாரசாமி, ஜெயலலிதா தரப்பினர் பல்வேறு வங்கிகளில் வாங்கிய கடன்களையெல்லாம், ஜெயலலிதாவின் வருமானமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கூறி, இந்தியன் வங்கியிலிருந்து ஜெயலலிதா தரப்பினர் கடன்களைப் பெற்றார்கள் என்ற பட்டியலையும், அதன் கூட்டுத் தொகையையும் தனது

தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார். அந்தப் பட்டியலை நீதிபதி குறிப்பிட்டவாறு சற்று விரிவாகச் சொல்ல வேண்டுமேயானால்,

ஜெயா பப்ளிகேஷன்ஸ் பெற்ற கடன்	1,50,00,000
குணபூசனியிடமிருந்து மாற்றப்பட்ட கடன்	3,75,00,000
ஜெயலலிதா பெற்ற கடன்	90,00,000
ஜெ. ரியல் எஸ்டேட் பெற்ற கடன்	25,00,000
ஜெ.எஸ். ஹவுசிங் பெற்ற கடன்	12,46,000
ஜெ. பார்ம் ஹவுஸ் பெற்ற கடன்	50,00,000
சசிகலா பெற்ற கடன்	25,00,000
வி.என். சுதாகரன் பெற்ற கடன்	1,57,00,000
ராமராஜ் அக்ரோ மில்ஸ் பெற்ற கடன்	1,65,00,000
மகாலட்சுமி திருமண மண்டபத்திற்காக கடன்	17,85,274

ஆக மொத்தம் ஜெயலலிதா தரப்பினர் பெற்ற கடன் 24,17,31,274 ரூபாய் என்று நீதிபதி குமாரசாமி அவர்கள் தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால் மேலேகண்ட பட்டியலில் உள்ள பத்து கடன் தொகையையும் கூட்டல் கணக்குத் தெரிந்த யார் ஒருவரை விட்டுக் கூட்டச் சொன்னாலும், அதன் கூட்டுத் தொகை 10,67,31,274 ரூபாய்தான் வரும். ஆனால் கர்நாடக மாநில உயர் நீதிமன்ற நீதிபதி தனது தீர்ப்பில் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், இதன் கூட்டுத் தொகை 24,17,31,274 ரூபாய் என்றும், இந்தக் கூட்டுத் தொகையின் அடிப்படையில் தான் ஜெயலலிதா மீது

சொத்துக் குவிப்பு வழக்கு 66 கோடி ரூபாய்க்குத் தொடுத்தது தவறு என்றும் வியாக்யானம் செய்து, அவரை விடுதலை செய்தார்.

அது மாத்திரமல்ல; வருவாய்க்கு மேல் சொத்துக் குவிப்பு பத்து சதவிகித அளவுக்குள் இருந்தால், அதற்குத் தண்டனை இல்லை என்ற சட்ட விதி, தற்போதுள்ள சட்டத்திலே இடம் பெறவில்லை என்றும், 1988ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோதே இந்தச் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தத்தில் இடம் பெறவில்லை என்றும் விரிவாகவும், விளக்கமாகப் பலராலும் எடுத்துக் கூறப்பட்டது. இந்த விவரங்களையெல்லாம் பலரும் எடுத்துக் காட்டி, தீர்ப்பிலே இவ்வாறு இமாலயத் தவறு உள்ளது, எனவே இந்தத் தீர்ப்பை மாற்ற வேண்டும், அதற்கு உதவியாக இந்த வழக்கில் கர்நாடக அரசு தானே உச்ச நீதிமன்றத்திலே மேல் முறையீடு செய்ய வேண்டுமென்று வலியுறுத்தினார்கள்.

"தி டைம்ஸ் ஆப் இந்தியா" - 22-5-2015 அன்று - ஜெயலலிதாவின் வழக்கில் குமாரசாமி அளித்த தீர்ப்பு பற்றி மிகவும் விளக்கமாக "Curious Case of Amma Assets : Overlooking the obvious" - From Calculation To take on Gifts, Karnataka High Court Order has many Loopholes - என்ற தலைப்பிட்டு எழுதியது. கர்நாடக உயர் நீதிமன்றத்தின் 919 பக்கத் தீர்ப்பில் வழக்கத்துக்கு மாறான பல செய்திகளும், முடிவுகளும் இடம் பெற்றுள்ளன என்று குறிப்பிட்டு ஒன்பது முறைகேடுகளை 'டைம்ஸ் ஆப் இந்தியா' புள்ளி விவரங் களோடு விளக்கியிருந்தது.

"தீக்கதிர்" (23-5-2015) நாளேடு, "சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயலலிதா விடுதலை செய்யப்பட்டிருந்தாலும், சொத்து மதிப்பை நீதிபதி தவறாகக் கணக்கிட்டதாலேயே, அவருக்கு இந்த விடுதலை கிடைத்துள்ளது என்றும், இந்தக் கணக் கில் ஏற்பட்ட தவறைச் சரி செய்தால், தீர்ப்பு மறுபடியும் மாறும் என்றும் சட்ட வல்லுநர்கள் பலரும் கூறியுள்ளனர்" என்று எழுதியது.

சொத்துக் குவிப்பு வழக்கில் கர்நாடக உயர் நீதி மன்ற நீதிபதி அளித்த தீர்ப்பில் கூட்டல் கணக்கில் தவறு செய்துள்ளதை எடுத்துக்காட்டி, பிழையான கூட்டல் கணக்கின் அடிப்படையில் வழங்கப்பட்ட அந்தத் தீர்ப்பை ரத்து செய்ய வேண்டுமென்று கோரித்தான் கர்நாடக மாநில அரசும், கழகப் பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியரும் உச்ச நீதிமன்றத்திலே மேல் முறையீடு

செய்து அந்த வழக்குதான் தற்போது நடைபெற்று வருகிறது. இந்த மேல் முறையீட்டு வழக்கு முதலில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பினாகி சந்திர கோஷ், ஆர்.கே. அகர்வால் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது

நீதிபதிகள் இந்த வழக்கில் ஜெயலலிதா உள்ளிட்ட நான்கு பேரும் பதில் மனு தாக்கல் செய்ய உத்தர விட்டதோடு, ஜெயலலிதாவின் மனுவுக்குப் பதில் அளித்து கர்நாடக அரசு மற்றும் கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் சார்பில் மனு அளிக்கக் கோரி அவையும் தாக்கல் செய்யப்பட்டு விட்டன. வழக்கின் அடுத்த கட்ட வாதம் ஜனவரி 8ஆம் தேதி நடைபெறும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில்தான் உச்ச நீதிமன்றத்தின் இணைய தளத்தில் 7-1-2016 அன்று இந்த வழக்கு விசாரணை குறித்து வெளியிடப்பட்ட அறிவிப்பில், நீதிபதி ஆர்.கே. அகர்வால் அவர்கள் மாற்றப்பட்டு, அவருக்குப் பதிலாக நீதிபதி அமிதவராய் நியமிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருந்தது. வழக்கு விசாரணை தொடங்கப்பட்டு நடைபெற்றுக் கொண் டிருந்த நேரத்தில், இந்த முக்கியமான வழக்கில் நீதிபதி மாற்றம் என்பது வழக்கறிஞர்கள் மத்தியிலும், ஊடகங்கள் மத்தியிலும் பரபரப்பாகப் பேசப்படுகிறது. மாற்றப்பட்டுள்ள நீதிபதி ஆர்.கே. அகர்வால் அவர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாக இருந்தவர் என்றும், நேர்மையான நீதிபதி என்று பெயரெடுத்த அவர், தற்போது இந்த வழக்கில் இருந்து ஒதுங்கிக் கொள்ள விருப்பம் தெரிவித்ததால்தான், அவர் மாற்றப்பட்டுள்ளதாகவும் வழக்கறிஞர்கள் மத்தியில் ஒரு உரையாடல் நிலவுகிறதாம்.

நீதிபதிகள் மாற்றம் மட்டுமல்ல; உச்ச நீதிமன்றத்தின் சார்பில் 6.1.2016 அன்று “Elimination List” பட்டியல் ஒன்று வெளியானது. உச்ச நீதிமன்றத்தில் அதிகப்படியான முக்கிய வழக்குகள் தேங்கிக் கிடப்பதால், நீதிபதிகளுக்குக் கூடுதல் பணிச்சுமை ஏற்பட்டுள்ளதால், ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு மேல் முறையீட்டு வழக்கு விசாரணை 8-1-2016 அன்று நடைபெறாது என்றும் உச்ச நீதிமன்றப் பதிவுத் துறை இந்தத் தகவலைத் தெரிவித்திருப்பதாகவும் செய்தி வந்தது.

ஆனால் 7.1.2016 அன்று இந்தச் செய்தியைத் தொடர்ந்து "Supplementary List for Friday the 8th January, 2016" என்ற பட்டியலில், ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு மேல் முறையீட்டு வழக்கினை, விசாரணைப் பட்டியலிலே இணைத்து உச்ச நீதிமன்றம் வெளியிட்டிருக்கிறது. இதுபோன்ற செயல்பாடுகள் என்ன காரணத்திற்காக இப்படியெல்லாம் நடைபெறுகின்றன? எதற்காக 8ஆம் தேதி விசாரணைக்காகப் போடப்பட்டிருந்த வழக்கினை நீக்கினார்கள்? பிறகு எதற்காக அதே நாளில் அந்த வழக்கினைச் சேர்த்தார்கள்? முதலிலே இரண்டு குறிப்பிட்ட உச்ச நீதிமன்ற நீதிபதிகள் இந்த வழக்கினை விசாரிப்பார்கள் என்று அறிவித்து விசாரணையையும் தொடங்கினார்கள். பிறகு தற்போது திடீரென்று ஏன் ஒரு நீதிபதியை மாற்றியிருக்கிறார்கள்? - என்பதை யெல்லாம் பார்க்கும்போது சற்றுக் குழப்பமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும், சட்ட நெறிமுறைகளின் தலைமைப்பீடமான உச்ச நீதி மன்றம் ஏதோ ஒரு காரணத்திற்காக இந்த நடவடிக்கைகளை சட்ட ரீதியாகவே செய்திருக்கும் என்பதிலும், சட்டத்தின் வழிமுறைகளில் எந்த முனையிலிருந்தும் எவ்விதத் தலையீட்டையும் உச்ச நீதிமன்றம் நிச்சயம் அனுமதிக்காது என்பதிலும், நீதியின் மீது நம்பிக்கை உள்ளவர்களுக்கெல்லாம் நம்பிக்கை இருக்கவே செய்கிறது.

அன்புள்ள,

மு.க.

10-01-2016

3989. நெஞ்சு பொறுக்குதில்லையே, நிலை கெட்டோரை நினைத்தால்!

உடன்பிறப்பே,

அன்பு - அறிவு - ஆற்றல் ஆகியவற்றின் திருவுருவாம் பேரறிஞர் அண்ணா அவர்களின் புகழ்ப் பெயரை இணைத்துக் கொண்டிருக்கும் கட்சியின் இன்றைய தலைவி ஜெயலலிதா, ஆட்சி அதிகாரத்தைத் தமிழக மக்கள் கொடுத்திருக்கிறார்கள் என்ற ஆணவ எண்ணத்தால், அவர் இந்த ஐந்தாண்டுகளில் அரங்கேற்றியிருக்கும் அட்டூழியங்கள் ஒன்றா, இரண்டா? எத்தனையோ? அவற்றில் ஒன்றுதான் அறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தைத் திட்டமிட்டு அலங்கோலப்படுத்தியது. நல்வாய்ப்பாக, சென்னை உயர் நீதிமன்றத் தலையீட்டினால் நூலகம் உயிர் பிழைத்திருக்கிறது; எனினும் உருக்குலைந்திருக்கிறது என்ற உண்மையினை மறைப்பதற்கில்லை. ஒவ்வொரு முறையும் உயர் நீதிமன்றம் தலையிட்டும்கூட, அதன் உத்தரவுகளை உதாசீனப்படுத்தி, தொடர்ந்து அலட்சியம் செய்து வந்ததால், ஜெயலலிதா அரசுக்கு இறுதி எச்சரிக்கை அதாவது "அல்டிமேட்டம்" என்பார்களே, அதைப் போலக் கடும் இடித்துரை வழங்கியுள்ளது.

அண்ணா நூற்றாண்டு நூலகம் பற்றிய வழக்கு 8-1-2016 அன்று விசாரணைக்கு வந்தபோது, சென்னை உயர் நீதிமன்றத்தில் வெளிவந்த விசாரணை விபரங்கள், இந்த வழக்கின் பாதையில் அடுத்து எழுந்துள்ள குறிப்பிடத்தக்க மைல் கல் என்றே கூற வேண்டும்.

நீதிமன்ற ஆய்வுக் குழு 8-1-2016 அன்று சமர்ப்பித்துள்ள அறிக்கையில் இதுவரை அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வில்லை என்று தெரிவித்துள்ளது. புத்தகங்கள், மின் விளக்குகள், கேமராக்கள் சீரமைப்பு, சுகாதார வசதி ஆகியவற்றை ஒரு மாத காலத்திற்குள் சீரமைக்கவில்லை என்றால்

பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் நேரில் ஆஜராக வேண்டும் என்றும் சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அன்பு - அறிவு - ஆற்றல் ஆகியவற்றின் திருவுருவாம் பேரறிஞர் அண்ணா அவர்களின் புகழ்ப் பெயரை இணைத்துக் கொண்டிருக்கும் கட்சியின் இன்றைய தலைவி ஜெயலலிதா, ஆட்சி அதிகாரத்தைத் தமிழக மக்கள் கொடுத்திருக்கிறார்கள் என்ற ஆணவ எண்ணத்தால், அவர் இந்த ஐந்தாண்டுகளில் அரங்கேற்றியிருக்கும் அட்டூழியங்கள் ஒன்றா, இரண்டா? எத்தனையோ? அவற்றில் ஒன்றுதான் அறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தைத் திட்டமிட்டு அலங்கோலப்படுத்தியது. நல்வாய்ப்பாக, சென்னை உயர் நீதிமன்றத் தலையீட்டினால் நூலகம் உயிர் பிழைத்திருக்கிறது; எனினும் உருக்குலைந்திருக்கிறது என்ற உண்மையினை மறைப்பதற்கில்லை.

ஆசியாவின் மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றான அண்ணா நூற்றாண்டு நூலகம் தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்டு, திறக்கப்பட்டது என்பதற்காக அ.தி.மு.க. ஆட்சியில் முறையான பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவில்லை. மேலும் அதனை குழந்தைகள் மருத்துவமனையாகவும், கல்யாண மண்டபமாகவும் மாற்றிட மேற்கொண்ட முயற்சிகள் எல்லாம் நீதிமன்றக் கண்டனங்களாலும், தமிழறிஞர்கள், மாணவர்களின் எதிர்ப்பாலும் நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், நூலகத்திற்குத் தேவையான புத்தகங்களை வாங்காமலும், உள்கட்டமைப்பு வசதிகளைப் பராமரிக்காமலும் தொடர்ந்து அ.தி.மு.க. அரசு புறக்கணித்து வருகிறது என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் மனோன்மணி என்பவர் வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கைத் தலைமை நீதிபதி எஸ்.கே.கவுல், நீதிபதி புஷ்பா சத்ய நாராயணா ஆகியோரடங்கிய முதன்மை அமர்வு விசாரித்தது.

29.10.2015 அன்று தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு உத்தரவிட்டதைத் தொடர்ந்து நீதிமன்ற உத்தரவுகள் முழுமையாக அமல்படுத்தப்பட்டு நூலகம் பராமரிக்கப்படுகிறதா

என நீதிமன்ற ஆணையாளர்கள் 29.11.2015 மற்றும் 2.1.2016 ஆகிய நாட்களில் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தனர். இந்த வழக்கு விசாரணையில் 8-1-2016 அன்றும் மூத்த வழக்கறிஞர் வில்சன் ஆஜராகி வாதாடினார். அப்போது அவர், "அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 500 கேமராக்கள் பழுதாகியிருக்கின்றன. இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்கள் சேதமடைந்திருக்கின்றன. நூலகம் முறையாகப் பராமரிக்கப்படாததால் வாசகர்கள் வாசிக்க முடியாமல் அவதிப் படுகின்றனர்" என்று வாதிட்டார்.

மேலும் நீதிமன்ற உத்தரவு முழுமையாக அமல்படுத்தப்படாததால் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. ஞானதேசிகன், பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் திருமதி சபீதா மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் டாக்டர் கண்ணப்பன் ஆகியோர் மீது உயர்நீதிமன்றம் தானாக முன்வந்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வாதிட்டார்.

குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள், விளக்கு வசதிகள், மின் தூக்கி வசதி ஆகியவை முழுமையாக ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்றும், ஆன்-லைன் வசதி செய்யப்படவில்லை என்றும், புத்தகங்கள் காணாமல் போவதைத் தடுக்கும் வகையில் பாதுகாப்புக் கருவிகள் முறையாகச் செயல்படுத்தப்படவில்லை என்றும், கண்காணிப்புக் கேமரா மூலம் பதிவு செய்யப்படுவதில்லை என்றும், கலையரங்கம் உள்ளிட்டவை வாடகைக்கு விட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், போதுமான பணியாளர்களை நியமிக்கவில்லை என்றும், பணி விதிகள் உருவாக்கப்படவில்லை என்றும் அதனால் நூலகப் பணியாளர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இல்லாத நிலை உள்ளது என்றும் வில்சன் வாதிட்டார்.

ஆணையாளர்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட குறைகளையும், மனுதாரர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட குறிப்புரையையும், மூத்த வழக்கறிஞர் வில்சன் அவர்களின் வாதத்தையும் பதிவு செய்த தலைமை நீதிபதி அவர்கள்; நீதிமன்ற உத்தரவினை முழுமையாகச் செயல்படுத்தி, நூலகத்தினை முறையாகப் பராமரிக்க வேண்டும் என்று கட்டளையிட்டு

அதற்காகத் தமிழக அரசிற்கு வரும் பிப்ரவரி 26-ஆம் தேதி வரை காலக்கெடு வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

சென்னை உயர் நீதிமன்றத்தின் இந்த உத்தரவினைப் படித்தபோது, அண்ணா நூலகத்தைப் பற்றிய பல நிகழ்வுகள் எனது நெஞ்சத்தில் பளிச்சிட்டன. அவற்றை உனக்கு நினைவு படுத்தவே இந்தக் கடிதம்!

அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தை 15-9-2010 அன்று திறந்துவைத்து நான் உரையாற்றியபோது, "நூலகம் அண்ணா பெயரால் அமைய வேண்டும் என்ற எண்ணம் இப்போது ஏற்பட்டதல்ல. கடந்த நிதி நிலை அறிக்கையில் சொல்லப்பட்ட கருத்தின் செயலாக்கம் மட்டும் அல்ல இது. அண்ணா பெயரால் - தந்தை பெரியார் பெயரால் - புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பெயரால் நூலகங்களை வாசக சாலைகளை அமைத்து, தமிழகத்தின் வீதிதோறும், ஊர்தோறும், குக்கிராமம்தோறும் இயக்கத்தி னுடைய கருத்துக்களை எடுத்துச்சொல்ல வேண்டுமென்ற வழிமுறையிலேதான் இப்போதும் ஒரு நூலகத்தை அமைப்ப தென்றால், அது அண்ணா பெயரிலே அமைய வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்குத் தோன்றி அதை அறிவித்து, இன்றைக்குச் செயல்படுத்தி உங்களுடைய வாழ்த்துக்களை யெல்லாம் பெற்றிருக்கிறோம்" என்று நூலகத்திற்கு அண்ணா பெயரைச் சூட்டியதற்கான அடிப்படையை எடுத்துச் சொன்னேன்.

அறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் கழக ஆட்சியில் நூலகம் ஒன்றை நான் கட்டித்திறந்து வைத்தேன் என்ற அடங்காத அழுக்காறு காரணமாக, ஜெயலலிதா எப்படியெல்லாம் சிறுமை எண்ணத்தோடு அதைச் சீர்குலைத்துச் சிதைத்திடத் தொடர்ந்து முயற்சித்து வருகிறார் என்பதையும்; உயர்நீதிமன்றம் மட்டும் தலையிடாது இருந்திருக்குமானால் அண்ணாவைப் பற்றிய நினைவோடு நாம் கண்ட கனவு எப்படியெல்லாம் சின்னாபின்னமாகப் போயிருக்கும் என்பதையும் எண்ணிப் பார்த்தால், நெஞ்சு பொறுக்குதில்லையே?

ஒவ்வொரு வீட்டிலும் புத்தக சாலை வேண்டும் என்று அண்ணா சொன்னாரே, அதைப்போல ஒவ்வொரு நகரத்திலும்,

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களிலும் ஒரு புத்தக சாலை வேண்டும் என்ற அந்தக் கொள்கையின் அடிப்படையில் இன்றைக்கு இந்த நூலகம் அமைக்கப்பட்டிருக்கின்றது; இது அண்ணாவின் கனவு நிறைவேறியுள்ள காட்சி என்று நான் விளக்கியதை என்னால் எங்ஙனம் மறந்திட இயலும்?

உயர்ந்த எண்ணங்களின் உருவகமாக எழுப்பப் பட்ட அறிவுக் கோயிலாம் அண்ணா நினைவு நூலகத்தை மாற்றப்போவதாக ஜெயலலிதா அறிவித்தபோது என்னுள் அலை மோதிய குமுறல்களை எழுத்தால் இயம்பிட இயலாது! தமிழக முதலமைச்சர், ஜெயலலிதா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தமிழர் நலனைப் பற்றிச் சிந்தித்துத் தீட்டப்பட்ட திட்டங்களை யெல்லாம் மாற்றிப் புரட்டிப்போட்டதைத் தொடர்ந்து, என்னால் தொடங்கி வைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தையும் மாற்றுவதாக அறிவித்திருந்தார். அதைப்பற்றி என்னிடம் செய்தியாளர்கள் கேட்ட போது "இதனை; தன்மானமுள்ள தமிழர்கள், தமிழ் அறிஞர்கள் முடிவுக்கே விட்டுவிடுகிறேன்" என்றுதான் சொன்னேன். தன்மானமுள்ள தமிழர்களும், தமிழ் அறிஞர்களும் இன்னும் சொல்லப்போனால் தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சிகளுமே கட்சி வித்தியாசம் கருதாமல், ஜெயலலிதாவின் சர்வாதிகார எல்லையைச் சுட்டிக்காட்டும் அந்த முடிவினை அறிந்து துடித்துப் போய்க் கடுமையாக எதிர்த்தார்கள். ஏடுகள் எல்லாம் ஜெயலலிதாவின் முடிவினைக் கண்டித்துத் தலையங்கங்கள் எழுதின.

4-11-2011 தேதிய "தீக்கதிர்", "அ.தி.மு.க. அரசு சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தைக் குழந்தைகள் மருத்துவமனையாக மாற்றப்போவதாக அறிவித்ததை அறிந்த எவரும் அதிர்ச்சி அடையாமல் இருந்திருக்க முடியாது. தெற்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகமாகச் செயல்படும் நூலகத்திற்கு நாள்தோறும் எண்ணற்ற மாணவர்களும், ஆராய்ச்சியாளர்களும், கல்வியாளர்களும், சட்ட நிபுணர்களும் வந்து செல்கிறார்கள். அந்த அளவிற்கு அந்த நூலகத்தில் பல்துறை புத்தகங்கள் உள்ளன. இந்திய ஆட்சிப் பணி தேர்வுக்குத் தயாராகும் மாணவர்கள் நாள்தோறும் இந்த நூலகத்தைப் பயன்படுத்தி வருகிறார்கள். மாணவர் நலனில்

அக்கறையற்ற அரசு என்பதை மீண்டும் ஒரு முறை அ.தி.மு.க. அரசு நிரூபித்துள்ளது" என்று "தீக்கதிர்" தலையங்கம் எழுதியது.

"Let the Library Stay" என்ற தலைப்பில் "இந்து" ஆங்கில இதழ், "The decision of the Tamil Nadu Government to shift the Anna Centenary Library from the spacious, well-equipped modern building in Kotturpuram, Chennai, is difficult to justify on any ground" என்று 5-11-2011 அன்று எழுதியது.

"டைம்ஸ் ஆப் இந்தியா" ஆங்கில இதழ், "ஜெயலலிதா தனது அரசியல் எதிராளியான கலைஞரின் திட்டத்தைக் குலைக்க எடுத்துள்ள நடவடிக்கைக்கு ஆதரவு இருக்காது. பொது மக்கள் உணர்வுக்கு எதிராக அரசியலில் வெற்றிபெற முடியாது. விபரீதமான விளைவுகளை உருவாக்கும் என்பதை அரசு நினைவிலே கொள்வது நல்லது" என்று எழுதியது.

அண்ணா நினைவு நூலகத்தை மாற்றப் போவதாக அரசு அறிவித்தவுடன் அதனை எதிர்த்துத் தன்மான உணர்ச்சி கொண்ட வழக்கறிஞர்களில் சிலர் சென்னை உயர் நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்து, உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அதனை உடனடியாக விசாரணைக்காக எடுத்துக்கொண்டு விசாரித்தும் இருக்கிறார்கள். நீதிமன்றத்திலேயே தலைமை நீதிபதி அவர்கள் அரசு வழக்கறிஞரிடம், கோட்டூர்புரத்தில் அமைக்கப்பட்டபிரமாண்ட நூலகத்தை மாற்றுவது ஏன் என்றும், அதற்கு என்ன அவசியம் என்றும், அரசு வழக்கறிஞர் அரசியல்வாதியாகப் பேசுகிறாரா என்றும் கேட்டதோடு, அண்ணா நினைவு நூலக இடமாற்றத்துக்குத் தடை விதித்தார்.

"அரசால் முற்றிலும் கைவிடப்பட்ட அண்ணா நூலகம் - புத்தகம், பராமரிப்பின்றி முடங்கும் அபாயம் - மக்கள் வரிப் பணம் வீணா போச்சு" என்ற தலைப்பில் "தினமலர்" நாளேடு அண்ணா நூலகம் பற்றி விரிவாக 30-3-2015 அன்று செய்தி ஒன்றை வெளியிட்டது. அண்ணா நூலகத்தை முடக்கும் முயற்சி, நீதிமன்றத்தால் நிறுத்தப்பட்ட போதும், நூலகம் உண்மையில் கொஞ்சம் கொஞ்சமாக முடங்கி வருகிறது. இதுகுறித்து, நூலக ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் கூறும்போது, "நூலகத்தின் நிலை குறித்து, கடந்த நான்காண்டுகளாக, பள்ளிக் கல்வித் துறைக்கும் தமிழக அரசுக்கும் பல மனுக்களை அனுப்பியுள்ளோம்.

ஆனால், அரசியல் காரணங்களால், இந்த நூலகத்தை முடக்கி வைத்துள்ளனர். எந்த ஓர் அரசு அதிகாரியும், நூலகத்தில் ஆய்வுக்கு வருவதில்லை. ஊதிய உயர்வோ, பதவி உயர்வோ, அரசின் கவனிப்போ இல்லாததால், நூலகம் முடங்கிவிடுமோ என்ற அச்சத்தில் இதுவரை 23 பேர் ராஜினாமா செய்துவிட்டனர். மற்றவர்களும் வேறு பணிகளைத் தேடுகின்றனர். புத்தகங்கள் வாங்காததால் வாசிக்க வருபவர்களும் நாளுக்கு நாள் குறைந்து வருகின்றனர். இந்த நூலகம், சர்வதேச அந்தஸ்து பெறும் என்ற நம்பிக்கையுடன் இருந்த நாங்கள், தற்போது சாதாரண நூலகங்களில் ஒன்றாக முடங்கிவிடுமோ என்ற வேதனையில் உள்ளோம்" என்று நூலகப் பணியாளர்கள் நொந்துபோன தமது உள்ளத்தை வெளிப்படுத்தியதாகத் "தினமலர்" நாளேடு சுட்டிக்காட்டியது.

"தினமணி" நாளேடு, "அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் நடைபெற்ற ஒரு திருமண வரவேற்பின்போது, நூலக வளாகத்திலேயே திருமண வீட்டினர் சமைத்துள்ளனர். இதன் காரணமாக நூலகத்தின் அமைதி கெடுவதோடு, அந்த வளாகமும் மாசடைவதாக நூலக வாசகர்கள் புகார் தெரிவித்தனர்" என்று எழுதியிருந்தது.

The Times of India - "Anna Library auditorium turns into marriage hall" - "Sanctity Breached" - The Anna Centenary Library is being let out for marriage receptions in violation of a Government Order" என்ற தலைப்போடு, புகைப் படத்தையும் வெளியிட்டு; "People Unhappy" - என்றும் "Chennaiites not happy with the move" என்றும் விளக்கமாகவே எழுதியிருந்தது.

"இந்து" நாளிதழ் தனது இரண்டாம் பக்கத்திலேயே "Library auditorium turns into Wedding Hall - Officials term marriage `cultural programme' to allow such functions at Anna Centenary Library" என்று பெரிய தலைப்பிட்டு வெளியிட்டுள்ள செய்தியில் "The auditorium, considered one of the finest in the City, was also the chosen venue when U.S. Secretary of State Hillary Clinton addressed a huge gathering in the city last July. However, conduct of wedding receptions, with caterers taking up space under a shamiana for cooking and serving, have raised questions about maintenance of the auditorium" என்று

அண்ணா நூலகம் எவ்விதம் பாழடிக்கப்படுகிறது என்று "இந்து" எழுதியிருந்தது.

இந்தச் செய்திகளை நான் ஏடுகளில் படித்தவுடன் வழக்கறிஞர் தம்பி வில்சனை என் வீட்டிற்கு அழைத்து, இந்தப் பிரச்சினையை உயர்நீதிமன்றத்தின் கவனத்திற்கு உடனே கொண்டுசெல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அவரும் தலைமை நீதிபதியின் கவனத்திற்கு இதனைக் கொண்டுசென்று, முறையிட்டதின் பேரில் மேதகு தலைமை நீதிபதி அவர்கள் அண்ணா நூலகத்தைத் திருமணத்திற்காக வாடகைக்கு விட்டது பற்றித் தனது கண்டனத்தைத் தெரிவித்து, இனிமேல் அவ்வாறு செய்யக்கூடாது என்றும் வேறு ஏதாவது திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்காக முன்பணம் வாங்கியிருந்தால்கூட அதனைத் திரும்ப ஒப்படைத்துவிட வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

அ.தி.மு.க. ஆட்சி தொடங்கியவுடனேயே பேரறிஞர் அண்ணா நினைவு நூலகத்தை ஜெயலலிதா எழும்பூரில் உள்ள டி.பி.ஐ. வளாகத்திற்கு மாற்றப்போவதாகவும், தற்போதுள்ள கட்டிடத்தில் குழந்தைகள் மருத்துவமனை தொடங்கப்போவதாகவும் அறிவித்தார். அது குறித்த வழக்கில் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி இக்பால், நீதிபதி சிவஞானம் ஆகியோர் அடங்கிய முதன்மை அமர்வு அப்போதே, "இப்படி ஒரு அருமையான, நவீன வசதி கொண்ட, நேர்த்தியான முறையில் உருவாக்கப்பட்ட சிறந்த நூலகத்தை இடமாற்றம் செய்வது ஏன்? மருத்துவமனை கட்டுவதென்றால் மெரினா கடற்கரையில் கட்டலாமே! அரசின் இந்த முடிவு உள்நோக்கம் கொண்டது" என்று குறிப்பிட்டிருந்தனர். The Madras High Court warned the Tamil Nadu Government that withdrawal of any existing facility or activity at the Anna Centenary Library would be viewed "Very Seriously" (Times of India, 17-2-2012)

நீதிபதிகள் இவ்வாறு உத்தரவிட்ட பிறகு, வேறு வழியில்லாமல் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம் கழக அரசு தொடங்கிய இடத்திலேயே நடந்து வருகிறது. ஆனால் நூலகத்திற்குச் சென்று படிப்போர் முழுமையாகப் பயன்படுத்த முடியாத அளவிற்கு, முறையாக நடத்தாமல், ஏனோதானோவென்று அலட்சிய உணர்வோடும் பிடிவாதத்தோடும் ஜெயலலிதாவின் அ.தி.மு.க. அரசு தொடர்ந்து புறக்கணித்து வருவதால்தான், 8-1-2016 அன்று

சென்னை உயர்நீதிமன்றம் இறுதி எச்சரிக்கையாக உத்தரவினைப் பிறப்பித்திருக்கிறது.

அறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் கழக ஆட்சியில் நூலகம் ஒன்றை நான் கட்டித் திறந்து வைத்தேன் என்ற அடங்காத அழுக்காறு காரணமாக, ஜெயலலிதா எப்படியெல்லாம் சிறுமை எண்ணத்தோடு அதைச் சீர்குலைத்துச் சிதைத்திடத் தொடர்ந்து முயற்சித்து வருகிறார் என்பதையும்; உயர்நீதிமன்றம் மட்டும் தலை யிடாது இருந்திருக்குமானால் அண்ணாவைப் பற்றிய நினைவோடு நாம் கண்ட கனவு எப்படியெல்லாம் சின்னாபின்னமாகப் போயிருக்கும் என்பதையும் எண்ணிப்பார்த்தால், நெஞ்சு பொறுக்குதில்லையே?

அன்புள்ள,

மு.க.

12-1-2016

3990. கண்ணின் வலியா? கழுகத்தின் வலிவா? எதில் கவனம் செலுத்துவது?

உடன்பிறப்பே,

இன்று நான் உனக்கு எழுதும் கடிதத்தில், 1953ஆம் ஆண்டு நான் சந்தித்த கார் விபத்து பற்றியும், அதனால் என்னுடைய ஒரு கண் பாதிக்கப்பட்டது பற்றியும், அந்தப் பாதிப்பு இன்றுவரையில் என்னைத் தொல்லைப்படுத்தி வருவதைப் பற்றியும் விவரிக்க விரும்புகிறேன்.

1953ஆம் ஆண்டு முகவை மாவட்டத்தைச் சேர்ந்த பரமக்குடியில் எனக்கு ஒரு பாராட்டு விழாப் பொதுக் கூட்டம். அதில் கலந்துகொள்ள சென்னையில் மாலை மூன்று மணிக்குக் காரில் புறப்பட்டேன். குறித்த நேரத்தில் பரமக்குடி போய்ச் சேர வேண்டுமே என்பதற்காக கார் சற்று வேகமாகச் சென்று கொண்டிருந்தது. திருச்சி அருகில் சென்று கொண்டிருந்தபோது, கொம்பு நீளமாக உள்ள ஒரு கொடி ஆடு காரின் ரேடியேட்டரில் பாய்ந்ததால், கார் பழுதாகி, வேறொரு வாடகைக் கார் எடுத்துக் கொண்டு பரமக்குடிக்குப் புறப்பட்டேன். என்னுடன் காரில் அன்பில் தர்மலிங்கம், திருச்சி பராங்குசம், திருவாரூர் தென்னன் ஆகியோர் வந்தார்கள். மேடைக்குச் செல்லும் வரை மதுரை முத்து கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார். நான் போனதும் பேசத் தொடங்கி, இரவு ஒரு மணிக்குக் கூட்டம் முடிவுற்றது. மறுநாள் திருச்சி தேவர் மன்றத்தில் சிறப்புக் கூட்டம். திரும்பும்போது அசதியின் காரணமாக நானும், நண்பர்களும் கண்ணயர்ந்து விட்டோம். வாடகைக் காரை ஓட்டிய தோழரும் சற்றுக் கண்ணயர்ந்து விட்டார். அதனால் திருச்சி வரும் வழியில் திருப்பத்தூர் பயணிகள் விடுதிக்கு அருகில் கார் மைல் கல்லில் மோதி, மைல் கல்லும் உடைந்து, பயணிகள் விடுதியின் முன்புறவாயில் கதவில்போய் மோதிக் கொண்டுநின்றது. இதற்கிடையே காருக்குள் இருந்த நாங்கள் உருண்டோம். நண்பர்களுக்குக் காயம் எதுவும் இல்லை. ஆனால் என் மூக்குக்குள்ளேயிருந்து ரத்தம் “குபு குபு” எனக் கொட்டியது.

முதல் சிகிச்சை செய்துகொண்டு திருச்சி வந்து சேர்ந்தோம். மறுநாள் காலையில் முகமே வீங்கி, என்னுடைய இடது கண்ணில் வலி தொடங்கியது.

வலியோடு திருச்சி நிகழ்ச்சியிலும், கன்னியாகுமரி மாவட்ட நிகழ்ச்சியிலும் கலந்துகொண்டு சென்னை திரும்பி, நண்பர் முல்லை சத்தி பிடிவாதமாக என்னை வேலூர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கே தான் மருத்துவர் கண்ணிற்குள் ஒரு சிறு நரம்பில் கீறல் ஏற்பட்டிருப்பதாகவும், குறைந்தது ஆறு மாத காலத்திற்காவது எழுதவோ, கூட்டங்களில் பேசவோ, படிக்கவோ கூடாது என்று கூறினார். பொது வாழ்வில் ஈடுபட்ட எனக்கு அதையெல்லாம் கடைப்பிடிக்க முடியுமா என்ன?

கழகம் மேலும் வலிவும் பொலிவும் பெற வேண்டும் என்பதற்காகத்தான் கண் வலியையும் பொருட்படுத்தாமல் நான் கடமையாற்றி வருகிறேன் என்பதை நீ நன்றாகவே உணர்ந்திருப்பாய். உணர்ந்து பார்ப்பதோடு மட்டுமல்லாமல், ஒரு தொகுதிக்குப் பல பேர் விருப்ப மனுக்கள் தாக்கல் செய்திருக்கலாம். ஆனால் ஒருவரைத்தான் நமது கழகத்தின் சார்பில் ஒரு தொகுதியிலே நிறுத்த முடியும். மேலும் சில தொகுதிகளை தோழமைக் கட்சிகளுக்கு வழங்க நேரிடலாம். அந்தத் தொகுதிகளுக்கு விருப்ப மனுக்கள் தாக்கல் செய்தவர்கள் தலைமைக் கழகத்திலே கட்டிய தொகை மீண்டும் திரும்பத் தரப்பட்டுவிடும் என்று தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதையெல்லாம் நன்றாகச் சிந்தித்துப் பார்த்து, கழகம் வெற்றி பெற வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசியலிலும், கலை உலகிலும் எனக்கு மிக நெருங்கிய நண்பர்களான இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர்., நடிகமணி டி.வி. நாராயணசாமி ஆகியோரின் விருப்பத்தை நிறைவேற்ற, சென்னையில் ஓட்டல் ஒன்றில் "மணிமகுடம்" நாடகத்தின் கடைசி காட்சிகளை எழுதிக்கொண்டிருக்கும்போது, திடீரென்று என் இடது கண்ணில் ஒரு ஈட்டி பாய்ந்தது போன்ற வேதனை! கையில்

இருந்த பேனாவையும், தாளையும் வீசி எறிந்து விட்டு, "அய்யோ" என்று அலறினேன்.

எப்படியோ வீடு வந்தேன். வீட்டார் என்னைப் பார்த்துக் கதறினார்கள். இடது கண் பெரிதாக வீங்கி விட்டது. குத்தல் வலி உயிரைப் பிளந்தது. தாங்க முடியாத வேதனை. சென்னையில் மிகச் சிறந்த மருத்துவர் முத்தையா வந்து பார்த்துவிட்டு, உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கவேண்டுமென்றார். கண் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். அறுவைச் சிகிச்சை நடைபெற்றது. பன்னிரண்டு முறை அறுவைச் சிகிச்சை நடத்தினார்.

1953-54ஆம் ஆண்டிலிருந்து அந்தக் கண் பாதிக்கப்பட்ட நிலையிலேயே வேதனைகளைத் தாங்கிக்கொண்டு அரசியல் பயணத்தைத் தொடர்ந்தேன். 1967ஆம் ஆண்டு செப்டம்பரில் மீண்டும் ஏற்பட்ட பயங்கரக் கார் விபத்து ஒன்றில் நான் சிக்கி, கண்ணில் ஏற்கனவே இருந்து வந்த வலி மேலும் அதிகமாயிற்று. அவ்வப்போது மருத்துவர்கள் முத்தையா, ஆப்ரகாம், இராமலிங்கம், மதுரை வெங்கட சாமி போன்றவர்கள் சிகிச்சை அளித்து வந்தபோதிலும், கண்ணில் ஊசியால் குத்துவது போன்ற வேதனை தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. ஏன், அந்த வலி இன்றும் என்னை வேதனைப்படுத்திக் கொண்டுதான் உள்ளது.

இதற்கிடையே 1967ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அனைவரும் ஒற்றுமையோடு ஆற்றிய அரும் பணிகள், தொடர்ப் பிரச்சாரம் காரணமாகத் தி.மு.கழகம் வெற்றி பெற்று, அண்ணா அவர்கள் தலைமையில் ஆட்சி அமைந்தது. ஆனால் 1969ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் நம்மையெல்லாம் விட்டு மறைந்த பிறகு, நான் முதலமைச்சர் பொறுப்பையேற்ற போதும், கண் வலி தொடர்ந்து கொண்டுதான் இருந்தது.

1971ஆம் ஆண்டில், இந்தியாவிலே உள்ள மிகச் சிறந்த கண் மருத்துவர்கள் வழங்கிய அறிவுரையின் பேரில் வெளிநாடு சென்று கண்ணில் அறுவை சிகிச்சை செய்துகொள்வதென்ற முடிவுக்கு வந்து அமெரிக்கா சென்றேன். பால்டிமோர் நகரில் உள்ள "ஜான்ஹாப்கின்ஸ்" மருத்துவமனையில் புகழ்பெற்ற மருத்துவ நிபுணர் மாமுனி என்பவர் எனக்கு அறுவை சிகிச்சை செய்தார். அதன் காரணமாக எனக்குத் தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்த

கண் வலி சற்றுக் குறைந்தபோதிலும், அவ்வப்போது அந்த வலி இன்னமும் தொடர்ந்து வந்த வண்ணமே உள்ளது. ஏன், அந்த வலி இன்றளவும் என்னை வேதனைப்படுத்திக்கொண்டே இருக்கிறது. அந்தக் கண்ணின் வலி அதிகமா? அல்லது அவ்வப்போது என்னோடு தொடர்ந்து அரசியல் பயணம் நடத்தியோர் தந்த மன வலி அதிகமா? என்ற கேள்விகளோடு என் கழகப் பணியும், பொதுப்பணியும் தொடர்ந்து கொண்டேதான் உள்ளது. இந்த நிலையிலும், என் கண் வலி அதிகமாக இருக்கும்போதெல்லாம் டாக்டர் அகர்வால் அவர்களிடமும், அவர் மறைந்த பிறகு அவரது மகன் அமர் அகர்வால் அவர்களிடமும் சிகிச்சை பெற்றுக்கொண்டு அரசியல் பணிகளைத் தொடர்ந்து ஆற்றி வருகிறேன்.

எனக்கு வலி, தொல்லை எவ்வளவு இருந்தாலும், நமது கழகத்திற்கும், தமிழகத்திலே வாழும் மக்களுக்கும் இன்னமும் பணியாற்ற வேண்டுமென்று என் உள்ளத்திலே எழுகின்ற உணர்ச்சியினால்தான் நான் தொடர்ந்து பணியாற்றி வருகிறேன் என்பதை நீ உணர்ந்துகொள்ள வேண்டும்.

இதற்கிடையேதான் 2016ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கான பணிகள் தொடங்கி, தற்போது கழக உடன்பிறப்புகள் விருப்ப மனுக்களைத் தாக்கல் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு நாளும், தலைமைக் கழகத்திலிருந்து எத்தனை பேர் விருப்ப மனுக்களைப் பெற்றுச் சென்றார்கள், எத்தனை பேர் மனு தாக்கல் செய்தார்கள் என்று தகவல்கள் தரப்படுகின்றன. அன்றாடம் காலையிலும், மாலையிலும் சுமார் 50 பேருக்குக் குறையாமல், குடும்பம் குடும்பமாக வந்து ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் என்று தேர்தல் நிதி என்னிடம் வழங்கி வருவதை அவர்களின் பெயர்களோடு முரசொலியில் வெளியிடப்படுவதை நீயே கண்டிருப்பாய்! அவ்வாறு சேர்ந்த நிதியே இன்று வரை 26 கோடியே 84 இலட்சத்து 30 ஆயிரத்து 936 ரூபாய் என்பது எனக்குள்ள கண் வலியை மறக்கவே செய்கிறது. கழகம் மேலும் வலிவும் பொலிவும் பெறவேண்டும் என்பதற்காகத்தான் கண் வலியையும் பொருட்படுத்தாமல் நான் கடமையாற்றி வருகிறேன் என்பதை நீ நன்றாகவே உணர்ந்திருப்பாய். உணர்ந்து பார்ப்பதோடு மட்டுமல்லாமல், ஒரு தொகுதிக்குப் பல பேர் விருப்ப மனுக்கள் தாக்கல் செய்திருக்கலாம். ஆனால் ஒருவரைத்தான் நமது கழகத்தின் சார்பில் ஒரு தொகுதியிலே நிறுத்த முடியும்.

மேலும் சில தொகுதிகளைத் தோழமைக் கட்சிகளுக்கு வழங்க நேரிடலாம். அந்தத் தொகுதிகளுக்கு விருப்ப மனுக்கள் தாக்கல் செய்தவர்கள் தலைமைக் கழகத்திலே கட்டிய தொகை மீண்டும் திரும்பத்தரப்பட்டு விடும் என்று தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதையெல்லாம் நன்றாகச் சிந்தித்துப் பார்த்து, கழகம் வெற்றி பெற வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கண்ணின் வலியா? கழகத்தின் வலிவா? எதில் கவனம் செலுத்துவது? என்ற நோக்கத்தோடு நான் பணியாற்றுவதைப் புரிந்துகொண்டு, நீயும் கழகத்தின் வெற்றிக்காக எப்போதும் போல் ஓயாது உழைப்பாய் என்ற நம்பிக்கையோடும், உழைக்க வேண்டுமென்ற வேண்டுகோளோடும் இந்தக் கடிதத்தை நிறைவு செய்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

9-2-2016

3991. நமக்கு நாமே - ஸ்டாலின் அரசியல் வாழ்வில் ஒரு மைல் கல்!

உடன்பிறப்பே,

12-2-2016 அன்று காலையில் என்னுடைய உதவியாளர் நித்யா என்னிடம் வந்து தளபதி அண்ணன் இன்றோடு 234 தொகுதிகளிலும் தான் மேற்கொண்ட "நமக்கு நாமே" பயணத்தை முடிக்க விருக்கிறார். அந்தப் பயணம் முடிந்தவுடன் நேரில் உங்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற வருகிறார் என்று கூறியவுடன் அவசர அவசரமாகக் குளித்து விட்டு "பொருளாளர்" வருகைக்காகத் "தலைவர்" நான் காத்திருந்தேன்! அப்போது என்னுடைய கவனமும் நினைவும் எதிரே இருந்த தொலைக் காட்சிப் பெட்டியிலே பதியவில்லை; என்னிடம் சொல்லாமலேயே 1976ஆம் ஆண்டுக்குப் போய்விட்டன.

1976ஆம் ஆண்டு நெருக்கடி நிலை பிரகடனப் படுத்தப்பட்டு, "மிசா" சட்டத்தின்படி கழகத்தினர் வேட்டையாடப்பட்டார்கள். கழகத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமன்றி, இன்றைய திராவிடர் கழகத் தலைவரும், அன்றைய பொதுச் செயலாளருமான இளவல் கி. வீரமணி, விடுதலை சம்பந்தம், நடிகவேள் எம்.ஆர். இராதா மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர், பழைய காங்கிரஸ் கட்சியினர் எனப் பலரும் கைது செய்யப்பட்டுச் சிறையிலே இருந்தனர். சென்னை மாவட்டத்தில் கைதான சிலரைக் குறிப்பிட வேண்டுமென்றால் முரசொலி மாறன், ஆற்காடு வீராசாமி, ஏ.வி.பி. ஆசைத்தம்பி, நீலநாராயணன், மு.க. ஸ்டாலின், சிட்டிபாபு, ஆர்.டி. சீத்தாபதி, டி.ஆர்.பாலு, அ.செல்வராசன், சா.கணேசன், சோ.மா. ராமச்சந்திரன், பழக்கடை ஜெயராமன், ஆயிரம் விளக்கு உசேன், வழக்கறிஞர் ஆர். கணேசன் என்று நீண்ட பட்டியலே உண்டு. சென்னையைப் போலவே மற்ற மாவட்டங்களிலே உள்ள கழக முன்னணியினர் எல்லாம் கைது செய்யப்பட்டுச் சிறைக் கொட்டடியில் தள்ளப்பட்டனர்.

1976ஆம் ஆண்டு நெருக்கடி நிலை பிரகடனப் படுத்தப் பட்டு, "மிசா" சட்டத்தின்படி கழகத்தினர் வேட்டையாடப்பட்டார்கள். திருமணமாகி ஒரு சில மாதங்களே முடிவுற்ற நிலையில்தான் ஸ்டாலின் கைது செய்யப்பட்டார். ஸ்டாலினைச் சுற்றிச் சிறை அதிகாரிகள் சூழ்ந்து நிற்க, முழுக்கை சட்டை போட்டுக் கையை மூடிக் கொண்டிருந்த நிலையில் நாங்கள் காண நேரிட்டது. என்னைக் கண்டதும், தன் கண்களில் ததும்பியிருந்த கண்ணீரை வெளிவராமல் மறைத்துக்கொண்டு என் எதிரே அமர்ந்திருந்தார். "அடித்தார்களாமே; உண்மையா?" என்று கேட்டேன். "இல்லை" என்று தலையை மட்டும் ஆட்டினார். வாய் திறந்து வார்த்தைகளில் சொன்னால் கதறி அழுது விடக் கூடும் என்ற உணர்ச்சி நிலை! அன்று சந்தித்த அதே ஸ்டாலினைத் தான், நான் 12-2-2016ஆம் தேதி காலையில் கோபாலபுரத்தில் சந்தித்தேன்.

மாநிலத்தில் மற்ற சிறைகளில் இருந்த மிசாக் கைதிகளைக் காண அவர்களது நெருங்கிய உறவினர்கள் வாரம் ஒருமுறை அனுமதிக்கப்பட்டபோதும் சென்னைச் சிறையிலே இருந்த மிசாக் கைதிகளைக் காண பெற்றோருக்கோ உறவினருக்கோ அனுமதியில்லை. முக்கியத் தலைவர்கள் எல்லாம் சிறைக்குள் கடும் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்ற செய்தி மட்டும் பரவி, அந்த உடன்பிறப்புக்களின் இல்லத்தினர் என்னைச் சந்தித்துக் கதறினார்கள். அதன் பிறகு காவல் துறையின் தலைமை அதிகாரியை நானே தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நாளைக்குள் சிறையில் உள்ள மிசாக் கைதிகளைக் காண அவர்களுடைய உறவினர்களுக்கு அனுமதி தராவிட்டால், சிறை வாயிலில் நான் சாகும்வரையில் உண்ணாவிரதம் மேற்கொள்வதாக அறிவித்த பிறகுதான் அனுமதி வழங்கப்பட்டது. அந்த முறையில்தான் மாறனையும் ஸ்டாலினையும் பார்க்க நான், எனது குடும்பத்தினருடன் சிறைக்குச் சென்றேன். மாறனுக்கு உடல் நலிவு ஏற்பட்டு, "ஜன்னி" கண்டு சென்னைப் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாக அங்கே சென்றிருந்த போதுதான் செய்தி சொல்லப்பட்டது; பிறகு ஸ்டாலினைப் பார்க்க மட்டும் அனுமதித்தார்கள்.

திருமணமாகி ஒருசில மாதங்களே முடிவுற்ற நிலையில் தான் ஸ்டாலின் கைது செய்யப்பட்டார். ஸ்டாலினைச் சுற்றி சிறை அதிகாரிகள் சூழ்ந்து நிற்க, முழுக்கை சட்டை போட்டுக் கையை மூடிக் கொண்டிருந்த நிலையில் நாங்கள் காண நேரிட்டது. என்னைக் கண்டதும், தன் கண்களில் ததும்பியிருந்த கண்ணீரை வெளிவராமல் மறைத்துக் கொண்டு என் எதிரே அமர்ந்திருந்தார். "அடித்தார்களாமே; உண்மையா?" என்று கேட்டேன். "இல்லை" என்று தலையை மட்டும் ஆட்டினார். வாய் திறந்து வார்த்தைகளில் சொன்னால் கதறி அழுதுவிடக் கூடும் என்ற உணர்ச்சி நிலை!

அன்று சந்தித்த அதே ஸ்டாலினைத்தான், நான் 12-2-2016ஆம் தேதி காலையில் கோபாலபுரத்தில் சந்தித்தேன். அதுவரை என் மனதிலே நிழலாடிக் கொண்டிருந்த நினைவுகளை ஒதுக்கிவிட்டு, ஸ்டாலினை நெஞ்சார வாழ்த்தினேன். 234 தொகுதிகள் - 2015 செப்டம்பர் 20ஆம் தேதி கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலையருகே ஸ்டாலின் தொடங்கிய "நமக்கு நாமே" விடியல் மீட்புப் பயணம், 2016 பெப்ரவரி 12ஆம் தேதி தியாகராயநகரில் நிறைவடைந்துள்ளது. நடுவே 146 நாட்களில், இடையில் ஒருசில நாட்கள் வேறு சில கழக நிகழ்ச்சிகளிலே கலந்துகொண்டுவிட்டு, மற்ற நாட்களில் எல்லாம் தமிழகம் முழுவதும் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியையும் உள்ளடக்கித் தனது பயணத்தைத் தம்பி ஸ்டாலின் வெற்றிகரமாக முடித்துள்ளார். தமிழகத்திலே உள்ள அனைத்துத்தரப்பு மக்களின் பிரதிநிதிகளையும் அழைத்து அவர்களின் கோரிக்கைகள் மற்றும் குறைகளையெல்லாம் நேரடியாகக் கேட்டிருக்கிறார். இடையில் பெரு வெள்ளத்தினாலும், மழையினாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் சென்று அங்கேயுள்ள மக்களைச் சந்தித்து ஆறுதல் தெரிவித்ததோடு, நிவாரண உதவிகளையும் வழங்கியிருக்கிறார். அவருடைய இந்தப் பயணம் முழு வெற்றி பெற, மாவட்டக் கழகச் செயலாளர்கள் எல்லாம் அல்லும் பகலும் அயராமல் ஆற்றிய அரும் பணியைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால் எந்த மாவட்டக் கழகச் செயலாளரும், அந்தப் பணியைச் சுமையென நினைக்காமல், சிரமமாக நினைத்துப் பாராமல் மிகுந்த மகிழ்ச்சியோடும், ஆர்வத்தோடும் அந்தப் பணியினை மேற்கொண்டார்கள் என்பதை நான் அறிவேன். இன்னும் சொல்லப்போனால், அந்தப் பயணத்தின்போது ஸ்டாலின் உடல் அளவில் அங்கெல்லாம்

சென்றபோது, அவரது உணர்வுகளில் எனது நினைவுகளும், எண்ணங்களும்தான் நிறைந்திருந்தன.

பயணத்தின்போது, அவரைக் கண்டு மகிழ்ந்த அந்தத் தாய்மார்கள் - வழி நடுவே அவரை மறைத்துக் கை குலுக்கிக் களிப்புற்ற கூட்டத்தினர் - முக மலர்ச்சியோடு தங்களுடைய சிறிய "டீக்கடை"க்குள் அழைத்துச் சென்று, ஸ்டாலினுக்கு "டீ" வழங்கிய அந்தப் பெரிய உள்ளங்கள் - தாங்கள் பெற்ற குழந்தைகளை ஸ்டாலின் கைகளிலே கொடுத்து அவர் அந்தக் குழந்தைகளைப் பாசத்தோடு நெஞ்சார அணைப்பது கண்டு மகிழ்ந்த தாய்மார்கள் - இவர்கள் எல்லாம் மறக்க முடியாதவர்கள்.

இன்னும் சொல்லப்போனால், பயணத்திற்கு முன்பாகவே ஸ்டாலின் என்னைச் சந்தித்து, தான் இவ்வாறு ஒரு சுற்றுப் பயணத்தில் கலந்துகொள்ளப்போவதாகத் தெரிவித்து, அந்தப் பயணத்திற்கு "அப்பா! ஒரு பெயரை நீங்கள்தான் சூட்ட வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். அன்று இரவு முழுவதும் எனக்குத் தூக்கம் வரவில்லை! இந்தப் பயணத்திற்கு என்ன பெயர் வைப்பது என்று தான் யோசித்துக் கொண்டே இருந்தேன். அதன் பிறகு தான் "நமக்கு நாமே" என்ற பெயர் என் நினைவிலே வந்து, மறுநாள் காலையில் என்னைச் சந்தித்த ஸ்டாலினிடம் அந்தப் பெயரை எழுதிக் கொடுத்தேன். 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் செல்லும் வகையில் மூன்று கட்டங்களாகப் பயணத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. கடந்த நான்கு மாதங்களில் சுமார் 3 கோடி மக்களையாவது அவர் இந்தப் பயணத்திலே சந்தித்திருப்பார்.

"நமக்கு நாமே" பயணத்தைப் பற்றிய செய்திகள் தமிழக மக்களிடம் பரவி ஆளுங்கட்சியினரிடையே பீதியை ஏற்படுத்தத் தொடங்கியது. அதேநேரத்தில் உயர்ந்த இடத்திலே இருப்பவர்களும், அரசிலே உள்ள மூத்த அதிகாரிகளும் "நமக்கு நாமே" பற்றிய செய்திகளைப் பரிமாறிக் கொள்ள ஆரம்பித்தார்கள். பயணத்தின் ஒவ்வொரு நாள் காலையிலும் ஸ்டாலின் என்னைத் தொலைபேசியிலே தொடர்புகொண்டு, முதல் நாள் நடை பெற்ற முக்கிய நிகழ்ச்சிகளையெல்லாம் எடுத்துச்சொல்லும் போது, ஒரு புறம் மகிழ்ச்சியாக இருந்தாலும், அவனது மெலிந்த உடல் இதையெல்லாம் தாங்கிக்கொள்ளுமா என்று எனக்கு நானே எண்ணிக் கவலைப்பட்டாலும், அதை வெளியே காட்டிக் கொண்டதில்லை.

தம்பி ஸ்டாலின் தமிழகம் முழுதும் 234 தொகுதிகளிலும் மேற்கொண்ட "நமக்கு நாமே" விடியல் மீட்புப் பயணம் நமது கழக உடன்பிறப்புகளுக்கிடையே எழுச்சியையும், மக்களிடையே நம்பிக்கை கலந்த விழிப்புணர்ச்சியையும், நடுநிலையாளர்களிடையே நல்லெண்ணத்தையும், எதிர்க்கட்சியினரிடையே மருட்சியையும், பத்திரிகைகள் உள்ளிட்ட ஊடகத்தாரிடையே ஆக்கப்பூர்வமான ஆர்வத்தையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது என்றால் அது மிகையல்ல. "நமக்கு நாமே" என்ற பெயரே எல்லோருடைய இல்லங்களிலும் இரண்டறக் கலந்து விட்ட சொல்லாகியிருக்கிறது. மொத்தத்தில் ஸ்டாலினின் இந்தப் பயணம் வெற்றிப் பயணம்; கழக வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய புதுமைப் பயணம்; இந்தப் பயணம் தம்பி ஸ்டாலினின் அரசியல் வாழ்க்கையில் மிக முக்கியமானதொரு மைல் கல்!

மக்களை நேரில் சந்திக்க வேண்டும், அவர்களிடம் ஆட்சியினரின் தவறுகளை எடுத்துரைக்க வேண்டும் என்று தம்பி ஸ்டாலினுக்கு இப்போது வந்த எண்ணம் எனக்கும் அந்தக் காலத்தில் தோன்றாமல் இல்லை. 26-11-1980 அன்று திருச்செந்தூர் கோயில்வளாக விடுதியில் அறநிலையத் துறையின் உதவி ஆணையாளர் சுப்ரமணியப் பிள்ளை, ஆளுங்கட்சியைச் சேர்ந்த அறங் காவலர்களால் படுகொலை செய்யப்பட்டு, அதற்குத் தற்கொலை என்று பெயர் சூட்டி மறைத்திட முயன்றபோது தி.மு. கழகம் போர்க் குரல் கொடுத்தது. விசாரணைக்காக நியமிக்கப்பட்ட நீதிபதி பால் அவர்கள், தனது அறிக்கையிலே குறிப்பிட்ட குற்றவாளிகள்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்து தி.மு. கழகத்தின் சார்பில் எனது தலைமையில் 15-2-1982 அன்று மதுரையிலிருந்து திருச்செந்தூர்வரை கழகத் தோழர்கள் உடன் நடந்து வர "நீதி கேட்டு நெடிய பயணம்" ஒன்றை நான் மேற்கொண்டேன்.

மதுரையிலிருந்து திருச்செந்தூர்வரை 200 கிலோ மீட்டர் தூரம் - எட்டு நாட்கள் - எட்டுப் பொதுக் கூட்டங்கள் - பல இலட்சம் மக்களைச் சந்தித்த நிகழ்வு அது! அந்தப் பயணம் மேற்கொண்டபோது மூன்றாவது நாள் காலையில் என் கால்

முழுவதும் கொப்பளங்கள். என்னுடன் பயணத்தில் வந்த உதவியாளர் கொப்பளங்களைக் கண்டு கதறி, பயணத்தை முடித்துக் கொள்ளலாம் என்று கூறியதை நான் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. என்னுடன் பயணத்தில் வந்த மருத்துவர்கள் கொப்பளங்களுக்கு வழி நெடுக சிகிச்சை அளித்துக்கொண்டே வந்தனர். அந்த நினைவுதான் எனக்கு தம்பி ஸ்டாலின் தொலை பேசியில் பேசியபோது வந்தது.

தம்பி ஸ்டாலின் தமிழகம் முழுதும் 234 தொகுதிகளிலும் மேற்கொண்ட "நமக்கு நாமே" விடியல் மீட்புப் பயணம் நமது கழக உடன்பிறப்புகளுக்கிடையே எழுச்சியையும், மக்களிடையே நம்பிக்கை கலந்த விழிப்புணர்ச்சியையும், நடுநிலையாளர்களி டையே நல்லெண்ணத்தையும், எதிர்க்கட்சியினரி டையே மருட்சியையும், பத்திரிகைகள் உள்ளிட்ட ஊடகத்தாரிடையே ஆக்கப்பூர்வமான ஆர்வத்தையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது என்றால் அது மிகையல்ல. "நமக்கு நாமே" என்ற பெயரே எல்லோருடைய இல்லங்களிலும் இரண்டறக் கலந்துவிட்ட சொல்லாகியிருக்கிறது. மொத்தத்தில் ஸ்டாலினின் இந்தப் பயணம் வெற்றிப் பயணம்; கழக வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய புதுமைப் பயணம்; இந்தப் பயணம் தம்பி ஸ்டாலினின் அரசியல் வாழ்க்கையில் மிக முக்கிய மானதொரு மைல் கல்!

திராவிட முன்னேற்றக் கழகம் தற்போது பெற்றுள்ள எழுச்சிக்கு, அ.தி.மு.க. ஆட்சியாளர்களின் அடுத்தடுத்த தவறுகள் காரணம் என்றாலும், தம்பி மு.க. ஸ்டாலின் மேற்கொண்ட இந்த "நமக்கு நாமே" பயணத்தின் காரணமாக அனைத்துத் தரப்பு மக்களும் கழகத்தின் மீது பாசமும் நேசமும் கொண்டு ஆதரவு அளிக்க முன் வந்துள்ளார்கள் என்று சொன்னால் அது மிகையல்ல. கழகத்தின் இத்தகைய எழுச்சிக்குக் காரணமாகவும், துணையாகவும் இருந்த கழகத்தின் பொருளாளர் தம்பி மு.க. ஸ்டாலினை, அவரது நமக்கு நாமே பயணம் 234 தொகுதிகளிலும் முடிவுற்றிருக்கிற இந்த நேரத்தில் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

அன்புள்ள,

மு.க.

15-2-2016

3992. நாளைக்கு வரும் வெற்றிக்கு இன்றே அச்சாரமாவோம்!

உடன்பிறப்பே,

தமிழ்நாடு சட்டப்பேரவைக்கான 15வது பொதுத் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிட விரும்பி, தலைமைக் கழகத்தில் விருப்பமனு தாக்கல் செய்தவர்களை, நாளை (22-2-2016) திங்கட்கிழமை காலை முதல் சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேர்காணல் வாயிலாகச் சந்தித்து தொகுதி நிலவரம், ஒவ்வொருவருக்கும் உள்ள வெற்றி வாய்ப்பு, ஆகியவற்றைப் பற்றி அறிந்திடவும் ஆய்வு செய்திடவும், நானும், பொதுச்செயலாளர் பேராசிரியர், பொருளாளர் மு.க.ஸ்டாலின், முதன்மைச் செயலாளர் துரைமுருகன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோரும் ஆர்வத்துடன் இருக்கிறோம்.

22ஆம் தேதியன்று காலையில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம் மாவட்டங்கள்; அன்று மாலையில் விருதுநகர், தேனி, திண்டுக்கல் மாவட்டங்கள்; 23ஆம் தேதியன்று காலையில் சிவகங்கை, மதுரை புறநகர், மதுரை மாநகர், ஈரோடு மாவட்டங்கள்; அன்று மாலையில் கோவை, கோவை மாநகர், சேலம், திருப்பூர் மாவட்டங்கள்; 24ஆம் தேதியன்று காலையில் புதுக்கோட்டை, நாமக்கல், திருச்சி மாவட்டங்கள்; அன்று மாலையில் கரூர், பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்கள்; 25ஆம் தேதியன்று காலையில் நாகை, திருவாரூர், தஞ்சை, கடலூர் மாவட்டங்கள்; மாலையில் விழுப்புரம், கிருஷ்ணகிரி, தருமபுரி, நீலகிரி மாவட்டங்கள்; 26ஆம் தேதியன்று காலையில் திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் மாவட்டங்கள்; அன்று மாலையில் திருவள்ளூர், சென்னை மாவட்டங்கள்; 27ஆம் தேதி காலையில் புதுவை, காரைக்கால் (புதுவை) ஆகிய இடங்களுக்கான நேர்காணல் நடைபெறுமென்று ஏற்கனவே நமது கழகப் பொதுச்செயலாளர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

விருப்பமனு தாக்கல் ஜனவரி 24 ஆம் தேதி தொடங்கி பிப்ரவரி 9 ஆம் தேதிவரை நடைபெற்றதன் மூலம் தலைமைக் கழகத்தில் 12 கோடியே 97 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது. 5,648 பேர்கள் போட்டியிடுவதற்கான மனுக்கள் வரப்பெற்றுள்ளன. நேர்காணலுக்கு வருவோர் தங்களுடைய ஆதரவாளர்களையெல்லாம் உடன் அழைத்து வர அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

விருப்பமனு தாக்கல் செய்தவர்கள் அனைவருமே கழகத்திற்காகப் பாடுபட்டவர்கள்; ஏதோ ஒரு வகையில் கழகத்திற்காக உழைத்தவர்கள்; பல பேர் கழகம் நடத்திய போராட்டங்களில் கலந்துகொண்டு சிறை சென்றவர்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனால் நான் ஏற்கனவே தெரிவித்ததைப் போல ஒரு தொகுதியில் கழகத்தின் சார்பில் ஒருவரைத் தான் நாங்கள் தேர்ந்தெடுக்கமுடியும். ஒரு தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிடப் பலர் தகுதி உடையவர்களாக இருக்கக் கூடும். அவர்களில் ஒருவருக்கு வெற்றி வாய்ப்பு அதிகமாக இருக்கலாம். அப்படிப்பட்டவரைத் தேர்ந்தெடுப்பது அதுவும் "சமன் செய்து சீர்தூக்குங் கோல் போல் அமைந்து" தேர்ந்தெடுப்பது என்பது எவ்வளவு கடினமான காரியம் என்பதை நீ நன்றாகவே அறிவாய். எல்லோருக்கும் நல்வாய்ப்பு வரும்; தன்னுடைய சுற்று வரும்வரை காத்திருக்கக் கற்றுக்கொண்டிருப்பவருக்குத்தான் காரியம் கைகூடும் என்பதை மறக்கக் கூடாது. இதைத்தான் அண்ணா அவர்கள் ஆங்கிலத்தில் "We should learn to Wait till our Turn comes" என்று அழகாகச் சொல்லியிருக்கிறார்.

அண்ணா அவர்கள் இது மட்டுமா கூறினார்? "பீரோ நிறைய ஏராளமான பட்டுப் புடவைகள் இருந்தபோதிலும் - இன்று செல்லும் இந்தத் திருமணத்திற்கு இந்தக் கலர் பட்டுப் புடவையை எடுத்துக்கட்டிக் கொள்கிறேன் என்றால், அடுத்து இன்னொரு திருமணத்திற்குச் செல்லும் போது மற்றொரு புடவையை எடுத்துக் கட்டிக் கொள்வேன். இன்று இதனைக் கட்டிக் கொள்வதால் மற்றது எல்லாம் பிடிக்காது என்று அர்த்தமல்ல" என்ற உவமைக் கதையும் அண்ணா தானே சொன்னார்? அதை மறந்து விடலாமா?

விருப்பமனு தாக்கல் செய்தவர்களிடம் நான் விடுக்கும் வேண்டுகோள், இந்தத் தேர்தல் நம்முடைய கழகம் பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்றே தீர வேண்டும்

என்பதற்கான தேர்தல். இந்தத் தேர்தலில் நாம் வெற்றி பெற வேண்டுமென்று மனு தாக்கல் செய்தோர் எண்ணாமல், தி.மு.கழகம் வெற்றி பெற வேண்டும், அண்ணா கண்ட சின்னமாம் - அண்ணா தந்த, அண்ணா வென்ற சின்னமாம் உதய சூரியன் வெற்றி பெற வேண்டுமென்ற அசைக்க முடியாத எண்ணத்தோடு இருக்க வேண்டும். போட்டியிட வாய்ப்புக் கிடைத்தோரும், நமக்கு வாய்ப்புக் கிடைத்துவிட்டது, நமக்கு எதிராகப் போட்டியிட மனுச் செய்தவர்களைக் "கவனித்துக்" கொள்ளலாம் என்ற எதிர்மறை நோக்கிலும் போக்கிலும் நடந்துகொள்ளாமல், அனைவரையும் அன்போடு அரவணைத்துச் சேர்த்துக்கொண்டு, கழகத்தின் வெற்றிக்காக முழுமூச்சுடன் பாடுபட வேண்டும்.

நம்முடைய தோழமைக் கட்சிகள் இன்னும் யார் யார்; கூட்டணி சார்பாக அவர்கள் எந்தெந்த இடங்களில் போட்டியிடுகிறார்கள்; என்பதெல்லாம் இனிதான் முடிவு செய்யப்பட வேண்டும். நேர்காணல் நடைபெற்றதாலேயே அந்தத் தொகுதியில் நமது கூட்டணி சார்பாகத் தி.மு.கழகம்தான் போட்டியிடப் போகிறது என்று கருதிவிட முடியாது. இந்த முக்கியப் பணியின் பரிமாணத்தை மறந்து அலட்சியப்படுத்திவிட்டு, தேர்தலுக்கு முன்னரே, நம்முடைய உடன்பிறப்புகளே ஒருவருக்கொருவர் ஒருசில இடங்களில் மோதிக்கொள்கின்ற நிலை ஏற்படுமானால், அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் செய்கின்ற அக்கிரமங்களையும், பெருந்தவறுகளையும் மக்கள் மனதிலிருந்து மறைத்து, நம்முடைய உள்கட்சிப் பிரச்சினைகளை ஊதிப் பெரிதாக்கிட ஊடகத் துறையிலே உள்ள வைத்தி, வரதன் போன்ற ஒரு சிலர் வயிற்றெரிச்சல் காரணமாக முனைந்திடக் கூடும்.

அந்த ஒரு சிலர் ஆதிக்கசக்திகளின் அங்கங்களாக இருப்பவர்கள் அல்லது பல்வேறு பலன்களை எதிர்பார்த்து ஆதிக்க சக்திகளை ஆதரிப்பவர்கள். அவர்களுக்குப் பத்திரிகா தர்மத்தைப் பற்றியும் கவலையில்லை; பொதுமக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளைப் பற்றியும் அக்கறை இல்லை. சேவைத் துறையை வாணிபத் துறையாகக் கருதுபவர்கள். அந்த ஒரு சிலர், எதிரணியில் தூணே விழுந்தாலும் அதைத் தூசியாகக் கூடக் காட்ட மறுப்பவர்கள்; நம்மிடையே ஒரு தூசு பறந்தாலும், அதைத் தூணே சாய்ந்து விட்டதாகக் கதைகட்டி விடுபவர்கள். நாடாளுமன்றத் தேர்தலில் கண்ட ருசியின் தொடர்ச்சியாக

ஆளுங்கட்சியினர் இப்போதும் தேர்தல் அதிகாரிகளில் ஒரு சிலரைப் பிடித்துப் பையிலே போட்டுக்கொண்டு இலட்சக்கணக்கில் போலி வாக்காளர்களைச் சேர்த்தது பற்றியோ, பொங்கி வழியும் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள் பற்றியோ, பொதுமக்கள் நலனுக்கெதிரான செயல்பாடுகள் பற்றியோ ஏதேனும் ஒரு மூலையிலாவது சுட்டிக்காட்டுகிறார்களா? அனைத்தையும் ஜமக்காளத்திற்குள் மூடிச் சுருட்டி மறைத்திடத்தானே படாதபாடுபடுகிறார்கள்!

நமது கழகத்தோடு எந்தக் கட்சியும் இணைந்து கூட்டணி அமைத்துவிடக் கூடாது; ஆளும் அ.தி.மு.க.வுக்கு எதிராகச் சுனாமியைவிட வேகமாகச் சுழன்றடித்து நாளும் பன் மடங்கு பெருகி வரும் எதிர்ப்பு வாக்குகளைச் சிதறிடச் செய்ய வேண்டும்; கழகம் தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்ற பொல்லாத நோக்கில் அரசின் உளவுத் துறையோடு இணைந்து, ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு விதமான கற்பனைக் கதைகளை வெளியிட்டு, பொதுமக்களைக் குழப்புவதிலே தொடர்ந்து ஈடுபாடு காட்டி வருகிறார்கள். அவர்களே கூட்டணிக்குக் கட்சிகளைச் சேர்க்கிறார்கள். எந்தக் கட்சிக்கு எத்தனை இடங்கள் என்பதை அவர்களே முடிவு செய்கிறார்கள்; இந்தக் கட்சி, இந்தக் கட்சியோடு சேருவதற்கு என்னென்ன நிபந்தனைகள் என்று அவர்களே முடிவு செய்து வெளியிடுகிறார்கள். இந்தக் கட்சி, இந்தக் கட்சியோடு சேருவது, நம்பிக்கை மற்றும் தத்துவ முரண்பாடாக அல்லவா இருக்கும் என்று துவேஷ எண்ணத்தை விதைக்கிறார்கள். ஆளுங்கட்சிக்கு வலியச் சென்று ஆள் சேர்க்கும் வேலையைச் செய்கிறார்கள்; நம்மோடு யாரும் சேர்ந்துவிடக் கூடாது என்ற நோக்கில் வெட்டி விலக்கிவிட எத்தனிக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை, தண்ணீரைவிட ரத்தம் கெட்டியானது (Blood is thicker than Water) என்பதை அவர்களுடைய ஒவ்வொரு காரியத்தின் மூலமும் உணர்த்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எப்படிப்பட்ட தகிடுதத்த வேலைகளிலும், தந்திரோபாயங்களிலும் இறங்கினாலும் அவை அனைத்தையும் அடித்து நொறுக்கித் தூள் தூளாக்கித் தூக்கி எறிந்துவிட்டுக் கழகக் கூட்டணி வெற்றி பெறுவது உறுதி. இது போல எத்தனையோ சூழ்ச்சிக்காரர்களையும், நேரடியாக அல்லாமல் முக்காடு போட்டுக்கொண்டு வரும் சவால்களையும் பிடரியைப் பிடித்து உலுக்கி ஓரங்கட்டி ஒதுக்கி விட்டு இலட்சியப் பயணத்தில் தொடர்ந்து முன்னேறி வருபவர்கள் நாம் என்பதற்கு நமது கடந்த கால வரலாறு சான்று பகரும். எனவே

உடன்பிறப்புகள் நமக்கிடையே சிறு வேற்றுமையைக்கூடப் பெரிதுபடுத்திட நினைத்தால், அந்த நினைப்பே, "ஒரு சிலர்" என்று குறிப்பிட்டேனே, அவர்களுக்கு உற்சாகம் அளித்துவிடும் என்பதை மறந்துவிடக் கூடாது.

தேர்தலுக்கு முன்னரே, நம்முடைய உடன் பிறப்புகளே ஒருவருக்கொருவர் ஒருசில இடங்களில் மோதிக் கொள்கின்ற நிலை ஏற்படுமானால், அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் செய்கின்ற அக்கிரமங்களையும், பெருந்தவறுகளையும் மக்கள் மனதிலிருந்து மறைத்து, நம்முடைய உள்கட்சிப் பிரச்சினைகளை ஊதிப் பெரிதாக்கிட ஊடகத் துறையிலே உள்ள வைத்தி,வரதன் போன்ற ஒரு சிலர் வயிற்றெரிச்சல் காரணமாக முனைந்திடக் கூடும்.

நமது கழகத்தோடு எந்தக் கட்சியும் இணைந்து கூட்டணி அமைத்துவிடக் கூடாது; ஆளும் அ.தி.மு.க.வுக்கு எதிராகச் சுனாமியைவிட வேகமாகச் சுழன்றடித்து நாளும் பன்மடங்கு பெருகிவரும் எதிர்ப்பு வாக்குகளைச் சிதறிடச் செய்ய வேண்டும்; கழகம் தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்ற பொல்லாத நோக்கில் அரசின் உளவுத்துறையோடு இணைந்து, ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு விதமான கற்பனைக் கதைகளை வெளியிட்டு, பொதுமக்களைக் குழப்புவதிலே தொடர்ந்து ஈடுபாடு காட்டிவருகிறார்கள். அவர்களே கூட்டணிக்குக் கட்சிகளைச் சேர்க்கிறார்கள். எந்தக் கட்சிக்கு எத்தனை இடங்கள் என்பதை அவர்களே முடிவு செய்கிறார்கள்; இந்தக் கட்சி, இந்தக் கட்சியோடு சேருவதற்கு என்னென்ன நிபந்தனைகள் என்று அவர்களே முடிவுசெய்து வெளியிடுகிறார்கள். இந்தக் கட்சி, இந்தக் கட்சியோடு சேருவது, நம்பிக்கை மற்றும் தத்துவ முரண்பாடாக அல்லவா இருக்கும் என்று துவேஷ எண்ணத்தை விதைக்கிறார்கள்.

அண்ணா அவர்கள் ஒருமுறை பேசியதை மீண்டும் நினைவுபடுத்த வேண்டுமென்றால், "திராவிட முன்னேற்றக் கழகம் ஓர் அரசியல் கட்சி மட்டுமல்ல; இது ஒரு சமுதாயச்

சீர்திருத்த இயக்கம். இதில் ஈடுபட்டிருக்கின்ற அத்தனை பேரும், யார் யார் எந்தெந்த இடத்தில் இருப்பது என்பதல்ல; யார் யார் எந்தெந்த நேரத்தில் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வது என்பதும் முக்கியமல்ல ; ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொறுப்பை ஏற்றிருப்பது இந்த இயக்கத்திலே அமைந்திருக்கின்ற போர்ப் பாசறை போன்றதாகும். இதிலே பகைவர்கள் உள்ளே புக நினைத்தால், அவர்கள் எங்கள் நெருக்கத்தின் இடையில் சிக்கிக் கூழாகிப் போவார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம், ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்திலிருந்து பணியாற்ற வேண்டுமென்பதற்கு ஏற்பட்டிருக்கிற ஓர் அமைப்பே தவிர, வேறு ஏற்றத் தாழ்வுகள், மனமாச்சர்யங்கள் எங்களுக்குள் இருக்கிறதென்று மாற்றார்கள் கருதினால், நாங்கள் வளர்ந்த வரலாற்றை அவர்கள் தெரிந்துகொண்டவர்கள் அல்லர் என்றுதான் சொல்லவேண்டும். நாங்கள் ஒரு தாயின் வயிற்றில் பிறக்காததற்குக் காரணம், ஒரு தாயின் வயிறு இத்தனை பிள்ளைகளையும் தாங்காது என்பதுதான்" என்று 26-9-1960 அன்று சென்னை கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் உருக்கமாகக் கூறியதை நாம் என்றும் நினைவில் நிறுத்தியிருப்பதை அறியாத மாற்றார் - நம்மிடையே பிளவு ஏற்படாதா, இடையில் நாம் புகுந்து ரத்தம் குடிக்க முடியுமா என்று ஏங்கிய நிலையில் காத்துக்கிடக்கும் எதிரிகள் ஏமாந்துதான் போவார்கள்!

எனவே கழக உடன்பிறப்புகள் சிறு வேற்றுமை இருந்தாலும் அதனை மறந்து, "குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை" என்பதை நினைத்து, அண்ணா அவர்கள் கூறிய புடவை உவமையை மனதிலே கொண்டு, இந்த முறை இன்னார் செயலாளராகப் பணியாற்றினாரா; அடுத்த முறை மற்றொருவர் அந்தப் பொறுப்புக்கு வரட்டும் என்று விட்டுக்கொடுக்கும் பெரும் நோக்கோடு கழக உடன் பிறப்புகள் உணர்ந்து பணியாற்ற வேண்டும் என்பதை எச்சரிக்கையாக உங்களுக்குத் தெரிவிக்கின்றேன். மாறாக, நாங்கள் மோதியே தீருவோம் என்ற ரீதியில் நிகழ்வுகள் நடக்குமானால், அது மோதுவோருக்கும், மோதுவோரின் சொந்த வீடான இந்த இயக்கத் திற்கும் தீங்காக முடியும் என்பதையும் "ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு" என்பதையும் நினைவிலிருந்து சிறிதும் அகன்று விடாமல் நிறுத்திக்கொள்ள வேண்டுகிறேன்.

எனவே நாளை முதல் வேட்பாளர் நேர்காணலுக்காக வரும் கழக உடன்பிறப்புகள் என்னுடைய இந்தக் கருத்துகளை மனதிலே தாங்கி, நம்முடைய முக்கியக் குறிக்கோள்; தி.மு.கழகம் வெற்றி பெற வேண்டும், தி.மு.கழக ஆதரவுபெற்ற வேட்பாளர் வெற்றி பெற வேண்டும் என்பதாக இருக்க வேண்டுமே தவிர, தனிப்பட்ட முறையில் நாம் வெற்றி பெறவேண்டும் என்பதாக இருக்கக் கூடாது. இப்போது இந்த வாய்ப்புக் கிடைக்காவிட்டால், பிற்காலத்தில் இதைவிடப் பெரிய வாய்ப்புக் கிடைக்கும், அப்படியே நமக்குக் கிடைக்காமல் போனாலும் கழகத்திற்குக் கிடைக்கும் வெற்றியே, கழக உடன்பிறப்புகளுக்கும் கிடைக்கும் வெற்றி என்ற உன்னத நோக்கத்துடனும், நம்பிக்கையுடனும் நேர்காணலுக்கு வர வேண்டுமென்று அன்புடன் அழைக்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

21-2-2016

393. கேட்டது வெண்ணெய்; தருவது சுண்ணாம்பா?

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை ஐம்பது சதவிகிதமாக உயர்த்த வகைசெய்யும் மசோதாவினை அ.தி.மு.க. அரசு அவசர அவசரமாக, பேரவையின் இறுதி நாளன்று எந்தவிதமான முன்னறிவிப்பும், விவாதமும் இல்லாமல் ஒரே நாளில் முன்மொழிந்து அன்றைக்கே பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றியிருக்கிறார்கள். மகளிர்பால் அ.தி.மு.க. அரசுக்கு திடீரென்று இவ்வளவு அக்கறை வரக் காரணம் விரைவில் வரவிருக்கின்ற சட்டப் பேரவைப் பொதுத் தேர்தல்தான் என்பது கிராமங்களிலே உள்ள சிறுமிகளுக்குக்கூடப் புரியும். ஐந்தாண்டு கால ஆட்சியில் இதைப் பற்றி அரைக்கணம்கூட நினைத்துப் பார்க்காமல், தேர்தல் இரண்டு மாதங்களில் வருகிறது என்றதும், இந்த அறிவிப்பினைச் செய்து தாய்மார்களின் கவனத்தைக் கவர்ந்து காரியத்தைச் சாதித்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள். ஆனால் அ.தி.மு.க. அரசு "காரியம் ஆகும்மட்டும் காலைப்பிடி; காரியம் ஆனபிறகு கழுத்தைப் பிடி" என்ற பழமொழிக்கேற்பவே நடந்து கொள்கிறது என்பது தமிழ்நாட்டுத் தாய்மார்களுக்கு நன்றாகவே தெரியும்!

பொதுவாக இதுபோன்ற முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானங்கள் பேரவையில் இரண்டு நாட்கள் முன்பாகவே முன்மொழியப்பட்டு, அதற்குப் பிறகு ஒரு நாள் நிகழ்ச்சி நிரலில் முன்கூட்டியே குறிப்பிட்டு, அதன் பிறகு விவாதித்து முடிவெடுப்பதுதான் வழக்கம். ஆனால் இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரை தீர்மானம் முன்மொழிதலும், விவாதித்தலும் ஒரே நாளில் நடைபெற்றிருப்பதிலிருந்தே, ஆளுங்கட்சியினரின் தேர்தல் நேரச்சலுகை இது என்பது நன்றாகவே விளங்குகிறது.

தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை ஐம்பது சதவிகிதமாக உயர்த்தவகை செய்யும் மசோதாவினை அ.தி.மு.க. அரசு அவசர அவசரமாக, பேரவையின் இறுதி நாளன்று எந்தவிதமான முன்னறிவிப்பும், விவாதமும் இல்லாமல் ஒரே நாளில் முன்மொழிந்து அன்றைக்கே பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றியிருக்கிறார்கள். மகளிர்பால் அ.தி.மு.க. அரசுக்குத் திடீரென்று இவ்வளவு அக்கறை வரக் காரணம் விரைவில் வரவிருக்கின்ற சட்டப்பேரவைப் பொதுத் தேர்தல்தான் என்பது கிராமங்களிலே உள்ள சிறுமிகளுக்குக் கூடப் புரியும்.

ஆனால், தாய்மார்களுக்கு முதன் முதலாக உள்ளாட்சிகளில் 33 சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்கப்பட்டது 1996ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியிலேதான். அதன் காரணமாக தமிழகம் முழுவதிலும் 44,143 பெண்கள் உள்ளாட்சி நிர்வாகங்களில் பதவி பெற்றனர்.

1989இல் இந்தியாவிலேயே முதல் முறையாக அரசுப் பணிகளில், வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் திட்டம் தி.மு. கழக ஆட்சியில்தான் நடைமுறைப்படுத்தப்பட்டு, பல்லாயிரக்கணக்கான பெண்கள் அரசு வேலை வாய்ப்புகள் பெற வழிவகுக்கப்பட்டது.

1990இல் தி.மு. கழக ஆட்சியிலேதான் இந்தியாவிலேயே முதல்முறையாகப் பெண்களுக்குச் சம சொத்துரிமை வழங்கி, தனிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளில் மகளிர்க்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.

இந்த நேரத்தில் தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்த காலத்தில், தமிழகத் தாய்மார்களுக்காக என்னென்ன சாதனைகளைச் செய்திருக்கிறது என்பதை நினைவுபடுத்துவது எனது கடமையெனக் கருதுகிறேன்.

- ❖ 1973இல் தமிழகக் காவல் துறையில் முதன்முதலாகப் பெண் காவலர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். அதனால், இன்று கூடுதல் டி.ஜி.பி.வரை

ஆயிரக்கணக்கான பெண்கள் - காவல்துறையில் வேலைவாய்ப்புகளைப் பெற்று மகிழ்கின்றனர்.

❖ 1975இல் ஏழைப் பெண்களுக்கு இலவசதையல் இயந்திரம் வழங்கும் திட்டம், விதவை மறுமணத் திட்டம் ஆகியவை தொடங்கப்பட்டன.

❖ சாதி வேறுபாடுகளை அகற்றும் நோக்கத்தில் 1968இல் தொடங்கப்பட்டுத் தங்கப் பதக்கம் வழங்கி ஊக்குவிக்கப்பட்ட கலப்புத் திருமணத் திட்டம், 1989 இல் அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம் எனப் பெயரிடப்பட்டு, கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதியருக்கு 5 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது. 1996-இல் இந்த நிதி உதவி 10 ஆயிரம் ரூபாய் என உயர்த்தப்பட்டதுடன், மணமக்களில் ஒருவர் ஆதிதிராவிடர் எனில் 1997 முதல் 20 ஆயிரம் ரூபாய் என்றும் 2010 முதல் 25 ஆயிரம் ரூபாய் என்றும் உயர்த்தப்பட்டது.

❖ 1989இல் 8ஆம் வகுப்புவரை படித்த ஏழைப் பெண்களின் திருமணங்களுக்கு உதவிட மூவலூர் மூதாட்டியார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, இத்திட்ட நிதியுதவியாக 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. கிராமப்புறப் பெண்களின் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் 1996இல் 10ஆம் வகுப்பு வரை படித்த ஏழைப் பெண்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் என நிதியுதவியை உயர்த்தியதுடன், 2006இல் 15 ஆயிரம் ரூபாய் எனவும் 2008இல் 20 ஆயிரம் ரூபாய் எனவும் 2010இல் 25 ஆயிரம் ரூபாய் எனவும் உயர்த்தப்பட்டது.

❖ ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவைத் தாய்மார்களின் மகள் திருமண நிதிஉதவித் திட்டம்; டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமணத் திட்டம்; அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதிஉதவித் திட்டம், - ஆகிய மூன்று திட்டங்களின்கீழ் வழங்கப்பட்ட நிதியுதவி 1989 இல் 5 ஆயிரம் ரூபாய் என்றும், 1997-98இல் 7 ஆயிரம்

ரூபாய் என்றும், 1999-2000இல் 10 ஆயிரம் ரூபாய் என்றும், 2007ல் 15 ஆயிரம் ரூபாய் என்றும், 2008இல் 20 ஆயிரம் ரூபாய் 2010இல் 25 ஆயிரம் ரூபாய் என்றும் படிப்படியாக உயர்த்தப்பட்டுள்ளது.

❖ 1989இல், ஏழைப் பெண்கள் உயர்கல்வி பெறுவதை ஊக்குவித்திட ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் 2008 முதல் ஏழைப் பெண்களுக்கு பட்ட மேற்படிப்புவரை இலவசக் கல்வி அளிக்கப்பட்டது.

❖ 1989இல் ஏழை கர்ப்பிணிப் பெண்கள் ஊட்டச்சத்து பெறுவதற்காக நிதியுதவி வழங்கும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2006இல் இத்திட்டத் தின்கீழ் கர்ப்பிணிப்பெண்களுக்கு 6000 ரூபாய் நிதியுதவி வழங்கப்படுகிறது.

❖ ஆதரவற்ற விதவைப் பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோருக்கு வழங்கப் படும் மாத ஓய்வூதியம் 100 ரூபாய் என்பது 1997 இல் 150 ரூபாயாகவும், 2000இல் 200 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டதுடன், 2006இல் 200 ரூபாய் என்பது 400 ரூபாயாகவும், 2010இல் 500 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது.

❖ விதவைப் பெண்களுக்கும், கணவனால் கைவிடப் பட்ட பெண்களுக்கும் 18 வயதிற்கு மேற்பட்ட மகன் இருந்தாலும் முதியோர் உதவித் திட்டத்தின் கீழ்ப் பயனாளிகள் எண்ணிக்கைக்கு வரம்பின்றி உதவித்தொகை வழங்கிட 2.6.1998 அன்று ஆணையிடப்பட்டது.

❖ ஏழ்மை நிலையிலுள்ள பெண்களை வாழவைக்கும் திட்டமாக, 50 வயது கடந்தும் திருமணம் ஆகாமல், உழைத்து வாழமுடியாத சூழலில் வாழ்ந்துவரும் 12 ஆயிரத்து 904 ஏழைப் பெண்களுக்கு மாதம்தோறும் 400 ரூபாய் நிதியுதவி வழங்கும் திட்டம் ஜூலை

2008 முதல் புதிய திட்டமாகத் தொடங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டது.

- ❖ 2 இலட்சத்து 12 ஆயிரத்து 981 சத்துணவுப் பணியாளர்கள் பயன்பெற காலமுறை ஊதியமும், ஓய்வூதியத் திட்டமும் அனுமதிக்கப்பட்டது.
- ❖ கிராமப்புற மகளிர்க்கு மகப்பேறு உதவிகள் எந்த நேரமும் கிடைத்திடும் வண்ணம், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் கூடுதல் செவிலியர்களும் மருத்துவர்களும் நியமிக்கப்பட்டு 24 மணி நேர மருத்துவச் சேவை அளிக்கப்பட்டது.
- ❖ திருக்கோயில்களில் செயல்படும் அறங்காவலர் குழுக்களில் மகளிர் ஒருவரை அறங்காவலராக நியமிப்பது சட்டமாக்கப்பட்டது.
- ❖ 1989ஆம் ஆண்டு மே திங்களில் கழக அரசு தர்மபுரியில் தொடங்கிய மகளிர் திட்டத்தின் மூலம் தமிழகம் முழுவதும் கிராமப்புறங்களில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் பல உருவாக்கப்பட்டன. அவற்றின் மூலம் கிராமப்புறப் பெண்கள் குழுவாகச் சேர்ந்து தொழில் புரிந்து வருவாய் ஈட்டித் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட முடிந்தது.
- ❖ 2006 தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிக்கான தினப்படி ஏழரை ரூபாய் என்பது 45 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.
- ❖ 73 இலட்சத்து 60 ஆயிரம் மகளிர் உறுப்பினர்களைக் கொண்ட 4 இலட்சத்து 74 ஆயிரத்து 874 மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வந்தன.
- ❖ இக்குழுக்களுக்கு 2009 முதல் வழங்கப்பட்ட வங்கிக் கடன் 9 ஆயிரத்து 845 கோடியே 20 இலட்சம் ரூபாய்; இதில் மே 2006க்குபின், கடந்த நான்கரை ஆண்டுகளில் வழங்கப்பட்ட வங்கிக் கடன் மட்டும் 8 ஆயிரத்து 80 கோடி ரூபாயாகும் என்பது இத்திட்டத்தின் மூலம்

மகளிர் முன்னேற்றத்தில் கழக அரசு செலுத்தி வந்த அக்கறைக்குச் சிறந்த சான்றாகும்.

❖ 2006-07 ஆம் ஆண்டு முதல், நகர்ப்புற சுயஉதவிக் குழுக்களுக்குச் சுழல்நிதி வழங்கும் திட்டத்தினை அறிமுகப்படுத்தி, 5 ஆண்டுகளில் 96,699 நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 96.70 கோடி சுழல்நிதி மானியமாக வழங்கப்பட்டது.

❖ ஆண்டுதோறும் பொதுவாக 25,000 முதல் 30,000 சுய உதவிக் குழுக்களுக்கு மட்டுமே சுழல்நிதி வழங்கப் பட்டது. ஆனால், 2008-09 ஆம் ஆண்டில் அதுவரை சுழல்நிதி பெறாத தகுதி வாய்ந்த 1.50 இலட்சம் சுயஉதவிக் குழுக்களுக்கும் சுழல்நிதி மானியம் வழங்க அரசு முடிவுசெய்து அதன்படி, சுழல்நிதி மானியம் பெறாத, அனைத்து 1,50,000 சுயஉதவிக் குழுக்களுக்கும் வங்கிக் கடனுடன் 150 கோடி ரூபாய் சுழல்நிதி வழங்கப்பட்டது.

❖ 2009-10 ஆம் ஆண்டில் 70,000 சுயஉதவிக் குழுக் களுக்கு 70 கோடி ரூபாய் சுழல்நிதி மானியமாக வழங்க அனுமதி தந்து, 69,000 சுயஉதவிக் குழுக்களுக்குச் சுழல்நிதி வழங்கப்பட்டது.

2010-11 ஆம் ஆண்டில் 50,000 ஊரக சுயஉதவிக் குழுக்களுக்கும் 20,000 நகர்ப்புற சுயஉதவிக் குழுக்களுக்கும், சுழல்நிதி மானியம் வழங்க 70 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு; இதுவரை, 63,967 சுயஉதவிக் குழுக்களுக்குச் சுழல்நிதி வழங்கப்பட்டது.

சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு முன்பு அ.தி.மு.க, ஆட்சியில் ஒருமுறை கூட ஊதிய விகிதம் உயர்த்தி வழங்கப்படவில்லை. ஆனால் கழக ஆட்சியிலேதான் அவர்களுக்கு மூன்று முறை ஊதிய விகிதம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

கழக ஆட்சியிலேதான், சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களில் பத்தாண்டுப் பணி முடித்தவர்களுக்கு, ஒரு ஊதிய உயர்வும், 20 ஆண்டு

பணி முடித்தவர்களுக்கு மற்றொரு ஊதிய உயர்வும் வழங்கப்பட்டது.

அ.தி.மு.க ஆட்சியில் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வந்த சத்துணவு சமையலர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடி உதவியாளர்கள் ஆகிய அனைவருமே கழக ஆட்சியிலேதான் சிறப்பு ஊதிய விகிதம் பெற்றனர்.

தமிழகத்தில் தற்போது மூன்றரைக் கோடி பெண்கள் உள்ளனர். அவர்கள் அனைவருமே "டாஸ்மாக்" கடைகளை இழுத்து மூட வேண்டும்; மதுவினால் சீரழியும் குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டும்; மதுவிலக்கை உடனே நடைமுறைப்படுத்திட வேண்டும் என அ.தி.மு.க. ஆட்சிக்கு எதிராக அறப்போராட்டம் நடத்தினர். அறப்போர் நடத்திய பெண்களை அ.தி.மு.க. அரசின் காவல் துறையினர் அவமானப்படுத்திடும் வகையில், மனித உரிமைகளுக்கு மாறாக நடந்து, கைது நடவடிக்கைவரை சென்றனர். இவையனைத்தும் தமிழக மகளிர் மனதில் நீறு பூத்த நெருப்பாகக் கனன்றுகொண்டிருக்கிறது. இதிலிருந்து மகளிர் கவனத்தைத் திசை திருப்பவே, இந்த 50 சதவிகித இடஒதுக்கீடு.

சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு கழக ஆட்சியிலேதான், முதல்முறையாக 1.6.2009 முதல் மாதந்தோறும் வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி ஆகியவைகளும், 100 ரூபாய் மருத்துவப்படியும், 2000 ரூபாய் பண்டிகைக்கால முன்பணமும் வழங்கப்பட்டன. சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு அ.தி.மு.க. ஆட்சியில் மாதாந்திர ஓய்வூதியம் எதுவும் வழங்கப்படவில்லை. ஆனால் கழக ஆட்சியிலேதான் ஓய்வுப் பெற்ற சத்துணவு அமைப்பாளர்களுக்கும், அங்கன்வாடிப் பணியாளர்களில் சமையலர்களுக்கும், முதல் நிலை அங்கன்வாடி உதவியாளர்களுக்கும் - சமையல் உதவியாளர்களுக்கும், இரண்டாம் நிலை அங்கன்வாடி உதவியாளர்களுக்கும் முறையே மாதந்தோறும் ரூபாய் 700, ரூபாய் 600, ரூபாய் 500 என்று முதல் முறையாக ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

முதல் தலைமுறையாகத் தொழில் முனையும் மகளிர் 250 பேருக்கு 50 ஆயிரம் ரூபாய்வரை மானிய உதவி வழங்கும் திட்டம் 1996இல் அறிமுகம் செய்யப்பட்டு உதவிகள் வழங்கப்பட்டன.

தொழில் வளாகங்களில் - தொழில்மனை ஒதுக்கீட்டில் மகளிர் தொழில் முனைவோருக்கு முன்னுரிமை வழங்கும் திட்டம் 96 முதல் தொடங்கப்பட்டது.

மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மோட்டார் பொருத்திய 25 வாகனங்கள் இலவசமாக வழங்கப்பட்டு, மீனவமகளிர் மீன்விற்பனைக்கு உதவி செய்யப்பட் டுள்ளது.

1998இல் முதலில் மதுரையிலும், பின்னர் பல பகுதிகளிலுமாக மொத்தம் 230 இடங்களில் முழுவதும் மகளிர் நடத்தும் நியாய விலைக் கடைகள் தொடங்கப்பட்டு வெற்றிகரமாக நடைபெற்று வந்தன.

கிராமப்புறங்களில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் மூலமாகச் செயல்படுத்தப்பட்ட மகளிர் சிறுவணிகக் கடன் திட்டத்தின்கீழ் 535 மகளிர் குழுக்களுக்கு 2000ஆம் ஆண்டு அக்டோபர்வரை ரூ.2.33 கோடி கடன் வழங்கப்பட்டது.

திருவள்ளூர், கோவை மாவட்டங்களில் கிராமப்புறங் களுக்கும் பரிட்சார்த்தமாக இத்திட்டம் விரிவுபடுத்தப் பட்டு, அது பெற்றுவரும் வரவேற்பின் காரணமாக அனைத்து மாவட்டங்களின் கிராமப் புறங்களுக்கும் தற்போது விரிவுபடுத்தப்பட்டது.

கழக அரசு வெளியிட்ட ஆணைகளின் மூலம் தொடக்கப் பள்ளிகளில் பெண்கள் அதிக அளவில் ஆசிரியைகளாக நியமனம் செய்யப்படுவதற்கு வழி ஏற்பட்டது. கழக ஆட்சியில் பள்ளிகளில் பணிபுரிந்த மொத்த ஆசிரியர்கள் 1,66,187 பேரில் ஆசிரியைகள் 98,291.

1.6.1975-இல் தொடங்கப்பட்ட திட்டத்தின்கீழ்க் கழக ஆட்சியில் எண்ணிக்கை வரம்பின்றி விதவைப் பெண்கள் எல்லோருக்கும் உதவித் தொகை வழங்கப்பட்டது. 1996 முதல் இத்திட்டத்தின்கீழ்ப் பயன்பெற்ற விதவைப் பெண்கள் 3,86,149 பேர். 1996 முதல் இத்திட்டத்தின்கீழ்க் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் 63,566 பேர் பயன் பெற்றுள்ளனர்.

தமிழகத்தில் தற்போது மூன்றரைக் கோடி பெண்கள் உள்ளனர். அவர்கள் அனைவருமே "டாஸ்மாக்" கடைகளை இழுத்து மூடவேண்டும்; மதுவினால் சீரழியும் குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டும்; மதுவிலக்கை உடனே நடைமுறைப்படுத்திட வேண்டும் என அ.தி.மு.க. ஆட்சிக்கு எதிராக அறப்போராட்டம் நடத்தினர். அறப்போர் நடத்திய பெண்களை அ.தி.மு.க. அரசின் காவல் துறையினர் அவமானப்படுத்திடும் வகையில், மனித உரிமைகளுக்கு மாறாக நடந்து, கைது நடவடிக்கைவரை சென்றனர். இவையனைத்தும் தமிழக மகளிர் மனதில் நீறு பூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருக்கிறது. இதிலிருந்து மகளிர் கவனத்தைத் திசை திருப்பவே, இந்த 50 சதவிகித இட ஒதுக்கீடு. இதனால் கழக ஆட்சியில் முதன் முதலாக 44,143 பெண்கள் உள்ளாட்சி நிர்வாகங்களில் பதவி பெற்றனர் என்ற எண்ணிக்கை சற்று உயர்ந்து 60 ஆயிரம் என ஆகலாம்; அதாவது 16 ஆயிரம் பேர் என எண்ணிக்கை உயரலாம். மூன்றரைக் கோடிப் பெண்களின் மதுவிலக்கு எனும் உள்ளக் கிடக்கையை நிறைவேற்றிட முன் வராமல்; அ.தி.மு.க. அரசு, பதவிக்கு மேலும் 16 ஆயிரம் பேர் எனச் சொல்லி ஏமாற்றிட எத்தனிப்பது, "பூ" கேட்கும் மகளிர்க்கு "காகிதப் பூ"வைக் காட்டுவதற்கு ஒப்பானதாகும்; தமிழக மகளிர் கேட்டது "வெண்ணெய்"; ஜெயலலிதா தருவது "சுண்ணாம்பா?"

அன்புள்ள,

மு.க.

24-2-2016

3994. பொய்யைத் திரும்பத் திரும்பச் சொன்னால் உண்மையாகிவிடுமா?

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதாவும், மின்துறை அமைச்சரும் தங்கள் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மாற்றி விட்டதாக அடிக்கடி சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் 16-2-2016 அன்று பேரவையில் படிக்கப்பட்ட இடைக்கால நிதிநிலை அறிக்கையில் பத்தி 43இல், "கடந்த ஐந்து ஆண்டுகளில் புதிய திட்டங்களைச் செயல்படுத்தியதன் மூலமாக 4,455.50 மெகாவாட் உற்பத்தித்திறன்" கிடைத்திருப்பதாக எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்ட வாசகம் இது. ஆனால் உண்மையில் கடந்த ஐந்தாண்டுகளில் புதிய திட்டங்களைச் செயல்படுத்தியதன் மூலமாக 4,455.50 மெகாவாட் மின் உற்பத்தி தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிறதா? அப்படி கிடைத்திருந்தால் எந்தெந்த மின் திட்டங்கள் மூலம் எத்தனை மெகாவாட் மின் உற்பத்தி கிடைத்தது? அந்த மின் உற்பத்தித் திட்டங்கள் எந்த ஆட்சிக் காலத்திலே எப்போது தொடங்கப்பட்டன? உண்மையில் அவை அ.தி.மு.க.வின் கடந்த ஐந்தாண்டுகளில் தொடங்கப்பட்ட திட்டமா? என்பதை ஆதாரப்பூர்வமாக ஜெயலலிதாவோ அல்லது துறையின் அமைச் சரோ வெளிப்படையாகச் சொல்லத் தயாரா?

2011ஆம் ஆண்டு, அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன், 4-8-2011 அன்று பேரவையில் படித்த நிதிநிலை அறிக்கையின் 68வது பத்தியில், "மாநில அரசு, வட சென்னை மூன்றாம் நிலை, நான்காம் நிலை உற்பத்தி, உடன்குடி, எண்ணூர் இணைப்பு, குந்தா விசை சேமிப்பு ஆகிய மின் உற்பத்தி திட்டங்களை விரைவுபடுத்தும். இத்திட்டங்களின் மூலம் அடுத்த ஐந்தாண்டுகளில் கூடுதலாக 5,100 மெகாவாட் மின்சக்தி கிடைக்கும். 2011-2012ஆம் ஆண்டில் 4,800 கோடி ரூபாய்ச் செலவில் 800 மெகாவாட்

உடன்குடி விரிவுத் திட்டம், 9,600 கோடி ரூபாய்ச் செலவில் 1,600 மெகாவாட் உப்பூர் அனல் மின்திட்டம், 3,600 கோடி ரூபாய்ச் செலவில் 40 ஆண்டு பழமை வாய்ந்த எண்ணூர் அனல் மின் இயந்திரத்திற்குப் பதிலாக 600 மெகாவாட் திறன் கொண்ட புதிய மின் இயந்திரம் நிறுவும் திட்டம், 4,800 கோடி ரூபாய்ச் செலவில் 800 மெகாவாட் தூத்துக்குடி நான்காம் நிலை உற்பத்தித் திட்டம் ஆகியவை தொடங்கப்படும்" என்று அறிவித்தார்களே, இந்தத் திட்டங்கள் எல்லாம் தொடங்கப்பட்டு விட்டனவா?

உண்மையில் கடந்த ஐந்தாண்டுகளில் புதிய திட்டங்களைச் செயல்படுத்தியதன் மூலமாக 4,455.50 மெகாவாட் மின் உற்பத்தி தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிறதா? அப்படிக் கிடைத்திருந்தால் எந்தெந்த மின் திட்டங்கள் மூலம் எத்தனை மெகாவாட் மின் உற்பத்தி கிடைத்தது? அந்த மின் உற்பத்தித் திட்டங்கள் எந்த ஆட்சிக் காலத்திலே எப்போது தொடங்கப்பட்டன? உண்மையில் அவை அ.தி.மு.க.வின் கடந்த ஐந்தாண்டுகளில் தொடங்கப்பட்ட திட்டமா? என்பதை ஆதாரப்பூர்வமாக ஜெயலலிதாவோ அல்லது துறையின் அமைச்சரோ வெளிப்படையாகச் சொல்லத் தயாரா?

இதற்கும் 2015-2016ஆம் ஆண்டு அ.தி.மு.க. அரசின் சார்பாக பேரவையில் வைத்த கொள்கை விளக்கக் குறிப்பில் விளக்கம் அளித்திருக்கிறார்கள். "நடப்பில் உள்ள மின் உற்பத்தித் திட்டங்களின் தற்போதைய நிலை" என்ற தலைப்பில், இந்தத் திட்டங்கள் என்ன நிலையில் உள்ளன என்று கூறினார்கள். அதன்படி, எண்ணூர் அனல் மின் திட்ட விரிவாக்கம் பற்றிக் கூறும்போது, அந்தத் திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் இப்போதுதான் நடைபெற்று வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டலம் அனல் மின் திட்டம் நீதிமன்றத்திலே உள்ளது. இன்னும் பணி தொடங்கப்படவில்லை. வடசென்னை அனல் மின் திட்டம் நிலை - 3 ஒப்பந்தப் புள்ளிகள் கோரும் நிலையிலே உள்ளது. உப்பூர் அனல் மின் திட்டப் பணிகளும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரும் நிலையில்தான் உள்ளது. எண்ணூர் மாற்று அனல் மின் திட்டத்திற்கு நிலம் சார்ந்த சுற்றுச்

சூழல் தாக்க ஆய்வுக்கான பணி ஆணை கலந்தாய்வாளருக்கு 16-7-2015 அன்று வழங்கப்பட்டுள்ளது. ஆய்வுக்கான பணிக்கே ஆறு மாதங்களுக்கு முன்புதான் ஆணை பிறப்பிக்கப்பட் டுள்ளது. திட்டம் எப்போது தொடங்குமோ? உடன்குடி அனல் மின் திட்டம் நிலை 1 திட்டத்திற்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, அதன் மீது நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையிலே உள்ளது. உடன்குடி அனல் மின் திட்டம் நிலை 2க்கு அரசாணை 3-2-2015 அன்றுதான் வெளியிடப்பட்டுள்ளது. தற்போது நிலம் தேர்வு செய்யப்பட்டு வருகிறதாம். உடன்குடி அனல் மின் திட்டம் நிலை 3க்கு கடல் மற்றும் நிலம் சார்ந்த சுற்றுச்சூழல் தாக்க ஆய்வுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோருவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறதாம். குந்தா நீரேற்று மின் திட்டம், நீலகிரியில் அமைக்க தற்போதுதான் சுரங்கப் பணிகளுக்கான ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது. இன்னமும் திட்டம் தொடங்கப்படவில்லை. இதற்குப் பிறகு முதல் அமைச்சர் ஜெயலலிதா 110வது விதியின்கீழ்த் தொடங்கப் போவதாக அறிவித்த சில்லஹல்லா திட்டமும் இன்னும் தொடங்கப்படவில்லை.

இந்த விவரங்கள் எல்லாம் அ.தி.மு.க. ஆட்சியில் அவையிலே வைக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பிலேயே இடம் பெற்றவையாகும். இந்த விவரங்களிலிருந்து 2011 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் எந்தெந்த மின் திட்டங்களைத் தொடங்கப்போவதாக அறிவித்தார்களோ, அதில் எந்தத் திட்டமும் ஐந்தாண்டுகள் முடிவடைந்த நிலையிலும் தொடங்கப்படவில்லை என்பதைத் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் புரிந்துகொள்ள முடியும். எனவே கடந்த மாதம் நிதிநிலை அறிக்கையில் படித்த "கடந்த ஐந்தாண்டுகளில் புதிய திட்டங்களைச் செயல்படுத் தியதன் மூலமாக 4,455.50 மெகாவாட் உற்பத்தி" என்ற விவரம் முற்றிலும் உண்மைக்கு மாறானது. இந்த 4,455.50 மெகாவாட் உற்பத்தித் திறன் என்பது முழுக்க முழுக்கத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டங்களிலிருந்து கிடைத்த மின்சாரம் என்பதுதான் உண்மை.

அ.தி.மு.க. ஆட்சியில் ஒரு மெகாவாட் மின்சாரம்கூட உற்பத்தி செய்யவில்லையா என்று ஜெயலலிதா கேட்பாரானால், அவருக்குச் சொல்கிறேன். 27 மெகாவாட் மின்சாரம் மட்டும்தான் அவருடைய ஆட்சியில் துவக்கப்பட்ட திட்டங்களிலிருந்து

மின் உற்பத்திகிடைத்திருக்கிறது. ஆனால் கடந்த ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் (2011-2016) தொடங்கப்பட்ட திட்டங்களிலிருந்து ஒரு யூனிட் கூட மின்சாரம் கிடைக்கவில்லை. அ.தி.மு.க. ஏற்கனவே ஆட்சியிலே இருந்த 2001-2006ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்ட திட்டங்களிலிருந்து வெறும் 27 மெகாவாட் மின்சாரமும், எஞ்சிய 4,428 மெகாவாட் மின்சாரம், தி.மு. கழக ஆட்சியிலே தொடங்கப்பட்ட திட்டங்களிலிருந்தும், மத்திய அரசு திட்டங்களிலிருந்தும்தான் நிதிநிலை அறிக்கையில் தற்போது குறிப்பிட்டுள்ள 4,455 மெகாவாட் கிடைத்துள்ளது என்பதுதான் உண்மையான விளக்கம்.

2011லிருந்து 2015ஆம் ஆண்டுவரை எந்தெந்த திட்டங்களிலிருந்து மின்சாரம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன; அந்தத் திட்டங்கள் எல்லாம் யார், யாருடைய ஆட்சிக் காலத்தில், எப்போது தொடங்கப்பட்டன என்ற விவரங்களையும் நான் விரிவாகக் கூறுகிறேன்.

1. பவானி கட்டளை கதவணை 2 - இந்தத் திட்டம் 1996-97இல் தி.மு. கழக ஆட்சியில் 99.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 30 மெகாவாட்.

2. வல்லூர் (அலகு 1) - இந்தத் திட்டம் 2007ஆம் ஆண்டில் தி.மு. கழக ஆட்சியில் 8,444 கோடி ரூபாய் மதிப்பீட்டில் என்.டி.பி.சி.யும், தமிழக மின்வாரியமும் இணைந்து தொடங்கப்பட்டது. 500 மெகாவாட்.

3. பவானி கட்டளை கதவணை - 2 - இந்தத் திட்டம், 1996-1997இல் தி.மு.க. ஆட்சியில் 99.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 30 மெகாவாட்.

4. மேட்டூர் அனல் மின் திட்டம் நிலை - 3 - இந்தத் திட்டம், 2008இல் தி.மு.க. ஆட்சியில் 3,550 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 600 மெகாவாட்.

5. வடசென்னை அனல் மின் நிலையம் (நிலை 2) (அலகு 1) -இந்தத் திட்டம் 2008இல் தி.மு.க. ஆட்சியில் 3,095 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 600 மெகாவாட்.

6. வட சென்னை (நிலை 2) (அலகு 2) - இந்தத் திட்டம், 2008இல் தி.மு.க. ஆட்சியில் 2718 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 600 மெகாவாட்.

7. வல்லூர் (அலகு 3) - இந்தத் திட்டம் 2007இல் தி.மு. கழக ஆட்சியில் 8444 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 500 மெகாவாட்.

8. தூத்துக்குடி அனல் மின் நிலையம் - அலகு 1 - இந்தத் திட்டம் 2007இல் தி.மு.க. ஆட்சியில் 4910 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 500 மெகாவாட்.

9. பெரியார் வைகை நீர்மின் உற்பத்தித் திட்டம் 2 - இந்தத் திட்டம் 2003-2004இல் அ.தி.மு.க. ஆட்சியில் 14.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 2.5 மெகாவாட்.

10. பெரியார் நீர் மின்திட்டம் (அலகு 1) - இந்தத் திட்டம், 2003-2004இல் அ.தி.மு.க. ஆட்சியில் 18.83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 4 மெகாவாட்.

11. பெரியார் நீர் மின் திட்டம் (அலகு 2) - இந்தத் திட்டம் 2004-2005இல் 18.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அ.தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டது. 4 மெகாவாட்.

12. பெரியார் நீர் மின் திட்டம் (அலகு 4) - இந்தத் திட்டம் 2004-2005இல் அ.தி.மு.க. ஆட்சியில் 18.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 4 மெகாவாட்.

13. பவானி கட்டளை கதவணை 3 - இந்தத் திட்டம் 2004-2005இல் அ.தி.மு.க. ஆட்சியில் 49.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 10 மெகாவாட்.

14. பெரியார் - வைகை நீர் மின் திட்டம் - 3 - இந்தத் திட்டம் 2004-2005இல் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 2.5 மெகாவாட்.

15. சிம்மாதிரி நிலை - 2 (அலகு 1) - இந்தத் திட்டம், மத்திய அரசுக்குச் சொந்தமானது. 500 மெகாவாட்.

16. சிம்மாதிரி நிலை - 2 (அலகு 2) - இந்தத் திட்டம், மத்திய அரசுக்குச் சொந்தமானது 500 மெகாவாட்.

17. கூடங்குளம் அலகு 1 - இந்தத் திட்டம் மத்திய அணு மின் கழகத்தால் தொடங்கப்பட்டது. 1000 மெகாவாட்.

18. நெய்வேலி அனல் மின் நிலையம் - விரிவாக்கம் 2 - (அலகு 2) - இந்தத் திட்டம் மத்திய அரசுக்குச் சொந்தமானது. 250 மெகாவாட்.

மின் துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ள இந்த 18 திட்டங்களையும் எடுத்துக்கொண்டால், 3,860 மெகாவாட் மின்சார உற்பத்திக்கான திட்டங்கள், 22,915 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஏற்கனவே நடைபெற்ற தி.மு.கழக ஆட்சியிலும் - வெறும் 27 மெகாவாட் மின்சார உற்பத்திக்கான திட்டங்கள் மட்டுமே 134.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்கனவே நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியிலும் - 2,250 மெகாவாட் மின்சார உற்பத்திக்கான திட்டங்கள் மத்திய அரசின் மூலமாகவும் தொடங்கப்பட்ட திட்டங்களாகும். மத்திய அரசின் திட்டங்களின் மூலமாக தமிழகத்திற்குக் கிடைத்தது 1,459.50 மெகாவாட் மின்சாரம்.

தமிழக முதலமைச்சரும், மின் துறை அமைச்சரும் திரும்பத் திரும்ப தாங்கள் ஏதோ 5,346.50 மெகாவாட் மின்சாரத்தைத் தங்கள் ஆட்சிக்காலத்திலே திட்டமிட்டு - நிதி ஒதுக்கீடு செய்து - டெண்டர் கோரி - பின்னர் பணிகளை நிறைவு செய்து மின் உற்பத்தி செய்திருப்பதைப் போல, திரும்பத் திரும்ப மக்களிடம் திசை திருப்பும் வகையிலே எடுத்துக்கூறி ஏமாற்றி வருகிறார்களே, இதிலே உண்மை ஏதாவது இருக்கிறதா? இந்த விபரங்களனைத்தையும் மறைத்துவிட்டு, முதலமைச்சரும், மின் துறை அமைச்சரும் “கடந்த நான்காண்டுகளில் அ.தி.மு.க. ஆட்சியில் திட்டமிட்டுத் தொடங்கப்பட்ட புதிய மின் உற்பத்தியின் மூலம் 5346.5 மெகாவாட் கூடுதல் மின்சாரம் பெறப் பட்டுள்ளது” என்று தம் நெஞ்சறிந்த பொய்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் யாரை ஏமாற்ற இந்த நாடகம்?

2011ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு அறிவித்த ஏராளமான மின் திட்டங்களிலிருந்து ஏதாவது ஒரு மெகாவாட் மின்சாரமாவது கிடைத் திருக்கிறதா? அவற்றின் கதி என்ன? அதற்கு ஏன் அமைச்சர் பதில் அளிக்கவில்லை?

முதலமைச்சரும், மின் துறை அமைச்சரும் "கடந்த நான்காண்டுகளில் அ.தி.மு.க. ஆட்சியில் திட்டமிட்டுத் தொடங்கப்பட்ட புதிய மின் உற்பத்தியின் மூலம் 5346.5 மெகாவாட் கூடுதல் மின்சாரம் பெறப்பட்டுள்ளது" என்று தம் நெஞ்சறிந்த பொய்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் யாரை ஏமாற்ற இந்த நாடகம்?

2011ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு அறிவித்த ஏராளமான மின் திட்டங்களிலிருந்து ஏதாவது ஒரு மெகாவாட் மின்சாரமாவது கிடைத்திருக்கிறதா? அவற்றின் கதி என்ன? அதற்கு ஏன் அமைச்சர் பதில் அளிக்கவில்லை?

தமிழகச் சட்டப்பேரவையில் அன்றைய முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் பேசும்போது 2011ஆம் ஆண்டு ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பின்னர் இதுவரை முடிக்கப்பட்ட திட்டங்கள், நடுத்தர கால மற்றும் நீண்ட காலக் கொள்முதல் வாயிலாக 4,640 மெகாவாட் மின்சாரம் பெறப்படுகிறது என்று பொத்தாம் பொதுவாக, குறிப்பிட்டு அதற்கான அடிப்படை ஆதாரங்கள் மற்றும் புள்ளி விபரங்கள் எதுவும் இல்லாமல் அறிவித்தார்.

17-2-2015 அன்று இந்த அரசின் சார்பாக ஆளுநர் ஆற்றிய உரையில், பக்கம் 25இல் "மொத்தமாக மாநிலத்தின் மின் உற்பத்தித் திறன் கடந்த நான்காண்டுகளில் 3,358 மெகாவாட் அளவு அதிகரித்துள்ளது" என்று கூறப்பட்டுள்ளது. அப்போதே தே.மு.தி.க. எம்.எல்.ஏ., திரு. மோகன்ராஜ் இது பற்றிக் கூறும்போது, "தகவல் அறியும் சட்டத்தின்" அடிப்படையில் மின் உற்பத்தி பற்றி விவரம் கேட்டதாகவும், அதற்கு ஒரு மெகாவாட் கூட அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு மின் உற்பத்தி செய்யப்படவில்லை என்று தெரிய வந்ததாகவும் தெரிவித்திருக்கிறார். அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு புதிய மின் உற்பத்தித் திட்டத்தை உருவாக்கி, நிறைவேற்றி, அதன் மூலம் இதுவரை ஒரு மெகாவாட் மின்சாரம் கூட உற்பத்தி செய்யவில்லை என்று ஆதாரங்களோடு ஏடுகளும் எழுதியிருக்கின்றன.

ஆனால் ஜெயலலிதாவும், மின்துறை அமைச்சரும் எந்த விளக்கத்தையும் காதிலே போட்டுக்கொள்ளாமல், "தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மாற்றி விட்டோம்!" என்று சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லும் கிளிப்பிள்ளை போலச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே என்றால்; திரும்பத் திரும்பச் சொல்லப்படும் பொய் உண்மையாகி ஊராரை மயக்கிவிடாதா என்ற நப்பாசைதான். இவர்கள் இடையறாமல் சொல்லும் இந்தச் செய்தி, பற்றியெரியும் நெருப்புக்குள் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் பஞ்சுக்கொப்பானது என்பதை நாள்தோறும் மின்வெட்டின் பாதிப்புக்கு ஆளாகிவரும் நாட்டு மக்கள் நன்றாகவே அறிவர்!

அன்புள்ள,

மு.க.

3-3-2016

3995. எல்லோரும் கேட்பது ஏழு பேரின் விடுதலையே!

உடன்பிறப்பே,

இந்தியாவின் முன்னாள் பிரதமர், இளந்தலைவர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, ஜெயக்குமார், ரவிச்சந்திரன், ராபர்ட் பயஸ் ஆகிய ஏழு பேருக்கு விசாரணை நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. பின்னர் நளினி, ஜெயக்குமார், ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன் ஆகியோரின் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. இந்த ஏழு பேரையும் விடுதலை செய்யக் கோரி உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் மரண தண்டனை பெற்ற முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் தண்டனையையும் ஆயுள் தண்டனையாகக் குறைத்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கில் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி பி. சதாசிவம் கூறும்போது, “எங்களது தீர்ப்பில், மூன்று குற்றவாளிகளின் மரண தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டுள்ளது என்று மட்டுமே குறிப்பிட்டுள்ளோம். அவர்களை விடுதலை செய்வது தொடர்பாக நாங்கள் எதுவும் கூறவில்லை. சம்பந்தப்பட்ட மாநில அரசு வழக்கமான சட்ட நடைமுறைகளைப் பின்பற்றலாம் என்று தீர்ப்பில் தெளிவுபடுத்தி உள்ளோம். அந்த நடைமுறைகளின் படி குற்றவாளிகள் முறைப்படி கோரிக்கை மனு அளிக்க வேண்டும். அதன் பின் மாநில அரசு சம்பந்தப்பட்ட விசாரணை நீதிமன்றத்திடம் அறிக்கை கோர வேண்டும். அதன் பின்னரே உரிய முடிவெடுக்க வேண்டும். குற்றவாளிகள் விடுதலை செய்யப்படக் கூடாது என்பது எங்கள் நோக்கம் அல்ல. எல்லாவற்றுக்கும் வழிகாட்டு நெறிமுறைகள் உள்ளன. அவற்றைத்தான் பின்பற்ற வேண்டும். குற்றவாளிகளை விடுதலை செய்வது தொடர்பான சட்ட நடைமுறைகளை அனைத்து மாநில அரசுகளும் அறிந்து

வைத்திருக்க வேண்டும்” என்று விரிவாக நீதிபதி சதாசிவம் கூறியிருக்கிறார். இதை வைத்துப்பார்க்கும்போது, நம்முடைய மாநில அரசுதான் இந்தப் பிரச்சினையைச் சட்டப்படி முறையாக அணுகவில்லை என்று தெரிகிறது.

2-12-2015 அன்று உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு அளித்த தீர்ப்பில், மத்தியப் புலனாய்வுத் துறை தொடுத்த வழக்கில், ஆயுள் சிறை தண்டனை அனுபவித்து வரும் ராஜீவ் காந்தி கொலைக் கைதிகள் ஏழு பேரையும் விடுதலை செய்வது தொடர்பாக முடிவெடுப்பதற்கான முதன்மையும் அதிகாரமும் மத்திய அரசுக்கே உண்டு என்று தெரிவித்திருக்கிறது. இந்தத் தீர்ப்புக்குப் பிறகு, அதன் தொடர்ச்சியாக, அ.தி.மு.க. அரசு உடனடியாக அவர்களை விடுதலை செய்வது சம்மந்தமாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு அரசியல் ஆதாயத்திற்காக இந்தப் பிரச்சினையைக் கையிலெடுத்ததைப் போலவே, தற்போதும் தேர்தல் வருகிறது என்றதும், இதன் காரணமாக வாக்குகளைக் கவரலாம் என்ற எண்ணத்தோடு அ.தி.மு.க. அரசு மத்திய அரசுக்குத் தலைமைச் செயலாளரைக் கொண்டு கடிதம் எழுதியிருக்கிறது.

2-12-2015 அன்று உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு அளித்த தீர்ப்பில், மத்தியப் புலனாய்வுத் துறை தொடுத்த வழக்கில், ஆயுள் சிறை தண்டனை அனுபவித்து வரும் ராஜீவ் காந்தி கொலைக்கைதிகள் ஏழு பேரையும் விடுதலை செய்வது தொடர்பாக முடிவெடுப்பதற்கான முதன்மையும் அதிகாரமும் மத்திய அரசுக்கே உண்டு என்று தெரிவித்திருக்கிறது. இந்தத் தீர்ப்புக்குப் பிறகு, அதன் தொடர்ச்சியாக, அ.தி.மு.க. அரசு உடனடியாக அவர்களை விடுதலை செய்வது சம்மந்தமாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு அரசியல் ஆதாயத்திற்காக இந்தப் பிரச்சினையைக் கையிலெடுத்ததைப் போலவே, தற்போதும் தேர்தல் வருகிறது என்றதும், இதன் காரணமாக வாக்குகளைக் கவரலாம் என்ற எண்ணத்தோடு அ.தி.மு.க. அரசு மத்திய அரசுக்குத்

தலைமைச் செயலாளரைக் கொண்டு கடிதம் எழுதியிருக்கிறது. அந்தக் கடிதத்தைக்கூட அன்றாடம் ஏதாவது ஒரு பிரச்சினைக்காக பிரதமருக்கு கடிதம் எழுதுகின்ற முதல் அமைச்சர் ஜெயலலிதா தன் பெயரிலே எழுதாமல், தலைமைச் செயலாளரைக் கொண்டு அந்தக் கடிதத்தை எழுதவைத்துள்ளார் என்பதிலிருந்தே முக்கியமான இந்தப் பிரச்சினைக்கு முதலமைச்சர் ஜெயலலிதா எந்த அளவுக்கு முக்கியத்துவம் தந்திருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறதல்லவா?

தமிழக அரசு எதைச் செய்தாலும் அதை எதிர்க்க வேண்டுமென்று நினைக்காமல், தமிழகத் தலைமைச் செயலாளர் இந்த ஏழு பேரையும் விடுதலை செய்வது குறித்து மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார் என்ற செய்தி கேள்விப்பட்டதும் அன்று இரவே அதனை வரவேற்று, மத்திய அரசுக்கு அந்தக் கடிதத்தின்படி அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டேன்.

உச்ச நீதிமன்றம் இறுதியாக அளித்துள்ள தீர்ப்பு, தமிழ் நாளேடு ஒன்றின் தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பதைப் போல, சட்டச் சிக்கல் மீதான விளக்கம்தானே தவிர, பேரறிவாளன், சாந்தன், முருகன் உள்ளிட்டோரின் விடுதலையை முற்றிலுமாகத் தடுக்கக்கூடிய அம்சம் எதுவும், அந்தத் தீர்ப்பில் இல்லை என்று தான் வழக்கறிஞர்கள் கூறுகிறார்கள். சி.பி.ஐ. போன்ற மத்திய அரசின் புலனாய்வு அமைப்புகளால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தண்டனை பெற்ற கைதிகளை விடுதலை செய்யும் அதிகாரம், சி.பி.ஐ. அமைப்பைத் தன்னுடைய அதிகாரத்தின் கீழே வைத்திருக்கின்ற மத்திய அரசுக்குத்தான் உள்ளது என்றும், அதன்படி தொடர்புடைய அரசு முடிவு செய்ய வேண்டுமென்கிற போது, குறிப்பிட்ட இந்த வழக்கில் மத்திய அரசுக்குத்தான் அதிகாரம் உள்ளது என்பதும்தான் தற்போதைய உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் பொருளாகும். அதாவது மத்திய அரசின் அனுமதியுடன் விடுவிக்கப்பட வேண்டும் என்பதுதான் இதன் மையநோக்கம்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் கருணை மனுக்கள் மீது குடியரசுத் தலைவர் மிகவும்

தாமதமாக முடிவெடுத்ததாகக் கூறி, அவர்களின் தண்டனையை ஆயுள் சிறையாக உச்ச நீதிமன்றம்தான் குறைத்தது. மேலும் இந்த வழக்கில் இந்த மூவருடன் சேர்த்து ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த நளினி (முருகனின் மனைவி), ரவிச்சந்திரன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் ஏற்கனவே சுமார் 20 ஆண்டுகளை சிறையில் கழித்துள்ளதால், அவர்களை விடுதலை செய்வது குறித்துத் தமிழக அரசு முடிவெடுக்கலாம் என்றும் உச்ச நீதிமன்றம்தான் கூறியது. உச்ச நீதிமன்றமே கூறிய காரணத்தால், 7 பேரையும் விடுதலை செய்ய தமிழகச் சட்டப்பேரவையில் மாநில அரசு 2014ஆம் ஆண்டு பெப்ரவரியில் தீர்மானம் நிறைவேற்றியது. தீர்மானம் நிறைவேற்றியதும், குற்றஞ்சாட்டப்பட்டவர்களைத் தமிழக அரசு விடுதலை செய்ய முடிவெடுத்ததும் தவறு அல்ல. அப்படிச் செய்தபோது மத்திய அரசுக்குக் கட்டளையிடும் விதத்தில், குறிப்பிட்ட நாட்களுக்குள் அதற்கு ஒப்புதல் தரவேண்டும் என்று, அப்போது நிபந்தனை விதிப்பதைப் போல ஜெயலலிதா அரசு நடந்து கொண்டிருக்கத் தேவையில்லை. அப்படி இறுமாப்போடு தமிழக அரசு இறுக்கமாகக் கருத்து தெரிவித்த காரணத்தால் தான், தமிழக அரசின் விடுதலை நடவடிக்கையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு மேல் முறையீடு செய்திட நேரிட்ட தென்று சட்ட வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள். இப்போது கூட நளினி செய்தியாளர்களிடம் கூறும்போது, முதலமைச்சர் ஜெயலலிதா விரைவிலேயே அவர்களையெல்லாம் விடுதலை செய்வார் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துள்ளார். அதிலிருந்தே அவர்களின் விடுதலை தாமதமாவதற்குக் காரணம் தமிழக அரசுதான் என்பது தெளிவாகிறது. 2015 டிசம்பரில் சென்னை உயர் நீதிமன்றத்தில் நளினி தொடுத்திருக்கும் வழக்கில் இதுவரை பதில் மனு தாக்கல் செய்யாமல் தாமதித்து வரும் தமிழக அரசு நளினியின் அந்தப் பேட்டிக்குப் பிறகுதான் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளது.

தமிழக அரசு எந்த நோக்கத்தோடு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியது என்று நமக்கு மட்டுமல்ல; “இந்து” ஆங்கில நாளிதழ் இந்தச் செய்தியை வெளியிட்ட போது அதுபற்றித் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறது.

3-3-2016 தேதிய "இந்து" "In political terms, questions are likely to be raised by the Opposition as to why the AIADMK Government did not attempt the Constitutional route of advising the Governor to remit the life sentences under Article 161 of the Constitution (Power of Pardon, Remission etc.). The Constitution Bench had approvingly cited earlier judgments that held that this power of the Governor and the President's corresponding power under Article 72 were constitutional remedies that "Will remain untouched". (இந்திய அரசியல் சட்டத்தின் 161வது பிரிவின்படி மாநில அரசு ஆளுநரை அணுகி ஆயுள் தண்டனையைக் குறைத்து மன்னிப்பு வழங்குவதற்கான அரசியல் சட்ட வழிமுறையை அ.தி.மு.க. அரசு ஏன் பின்பற்றவில்லை என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் எழக்கூடும். அரசியல் சட்டத்தின் 72வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவரின் அதிகாரம் இது போன்ற பிரச்சினைகளில் அரசியல் சட்டரீதியாக பரிகாரம் காணப் பயன்படுத்தப்படக் கூடியதாகும். அந்த அதிகாரம் அரசியல் சட்டத்தில் எந்தவித மாற்றமும் இல்லாமல் அப்படியே இருக்கிறது.)

24 ஆண்டுகளுக்குமேல் சிறையில் இருந்து வாடிக்கொண்டிருப்பவர்களை விடுதலை செய்யும் அதிகாரம் யாருக்கு உள்ளது, மத்திய அரசுக்கு உள்ளதா, மாநில அரசுக்கு உள்ளதா, நீதிமன்றத்திற்கு உள்ளதா என்றெல்லாம் இன்னமும் வாதிட்டுப் பட்டிமன்றம் நடத்திக் கொண்டிராமல், அவர்கள் ஏழு பேரையும் உடனடியாக விடுவிக்க மத்திய அரசு அல்லது 161வது பிரிவின்படி தமிழக அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மீண்டும் ஒரு முறை கேட்டுக்கொள்கிறேன்.

"இந்து" செய்தியாளர் இவ்வாறு கருத்துத் தெரிவித்திருப்பது மாத்திரமல்ல; குற்றவாளிகளில் ஒருவரான நளினியின் வழக்கறிஞர் திரு. எம். ராதாகிருஷ்ணன் கூறும்போது,

"M. Radhakrishnan, a defence lawyer, has termed as a "pretence" the Tamil Nadu Government's letter to the Centre, seeking its views on its decision to free all the convicts in the Rajiv Gandhi assassination case. Mr. Radhakrishnan is the lawyer for Nalini, whose death sentence was commuted to life by the State Government in 2000.

He said: "The State Government can release all the life convicts today under Article 161 of the Constitution. The power under Article 161 is unfettered. The Constitution Bench of the Supreme Court is categorical that this power is untouchable by the court. There is no need to obtain any permission or any views from the Central Government for releasing the life convicts. The State Government is well within its right to release them immediately under Article 161."

"The letter simply says they are going to seek a review of the Constitution Bench's judgment, which is unnecessary. The State Government is playing with the lives of these seven life convicts. This is highly regrettable."

நளினியின் வழக்கறிஞர் திரு. ராதாகிருஷ்ணன், தமிழக அரசு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருப்பது பாசாங்கு காட்டுவதாகும். மாநில அரசு இந்திய அரசியல் சட்டத்தின் 161வது பிரிவின்படி ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுவிக்க அதிகாரம் படைத்ததாகும். உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு இந்த அதிகாரம் நீதிமன்றத்தால் கேள்வி கேட்கப்படக் கூடியதல்ல என்றே அழுத்தந்திருத்தமாகக் கூறியிருக்கிறது. எனவே இந்த ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுவிக்க மத்திய அரசின் அனுமதியோ, கருத்துரையோ தேவையில்லை. தமிழக அரசு ஆயுள் தண்டனைக் கைதிகள் ஏழு பேரின் உயிர்களோடு விளையாடிக் கொண்டிருக்கிறது. இது பெரிதும் வருந்தத்தக்கதாகும் என்று ராதாகிருஷ்ணன் கூறியிருக்கிறார்.

இந்தக் கருத்தைத்தான் தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் எதிரொலிக்கும் வகையில், "ராஜீவ் காந்தி கொலையில் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிக்கக் கோரி மத்திய அரசுக்குத் தமிழக அரசு கடிதம் எழுதியுள்ளது. ஆளுங்கட்சிக்கு (அ.தி.மு.க.வுக்கு) தேர்தல் நேரத்தில்தான்

தமிழர்களின் உணர்வுகள் தெரிகிறது. தேர்தலுக்காகத் தமிழர்களின் உணர்வுகளைப் பயன்படுத்திக்கொள்ள முயற்சி செய்கின்றனர். இது ஜெயலலிதா நடத்தும் நாடகம். கால அவகாசம் எவ்வளவோ இருந்தும் அப்போது இந்த முடிவை எடுக்கவில்லை. இந்த விஷயம் மனிதாபிமானத்துடன் அணுக வேண்டிய ஒன்று" என்று தெரிவித்திருக்கிறார். இதே கருத்தைத் தமிழகக் காங்கிரஸ் கட்சித் தலைவர், ஈ.வி.கே.எஸ். இளங்கோவனும், வேறு சில கட்சிகளின் தலைவர்களும் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தப் பிரச்சினையில் ஜெயலலிதாவின் உள்நோக்கத்தை "டைம்ஸ் ஆப் இண்டியா" நாளிதழ் "Parties will be careful not to play into the hands of AIADMK - With remission move, Jaya may divide Cong. and DMK - Tries to gain Political Dividends" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது. அதாவது "அ.இ.அ.தி.மு.க.வின் இந்த முயற்சியில் அரசியல் கட்சிகள் மாட்டிக் கொள்ளாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் - ஜெயா; காங்கிரஸ் கட்சிக்கும் தி.மு.க.வுக்கும் இடையே பிளவு ஏற்படுத்த முயற்சிக்கலாம் - அதன் மூலம் அரசியல் இலாபம் அடைய எண்ணுகிறார்" என்ற தலைப்பில் டைம்ஸ் ஆப் இந்தியா வெளியிட்டுள்ள செய்தியில், மத்திய அரசுக்கு எழுதிய கடிதத்தின் வாயிலாக ஜெயலலிதா என்ன நினைக்கிறார் என்பதைத் தொகுத்து எழுதியுள்ளது.

4-3-2016 அன்று "இந்து" இதழ் இதற்காக எழுதியுள்ள தலையங்கத்திலேயே,

"The decision of the AIADMK Government in Tamil Nadu to release the seven life convicts is a politically partisan attempt to corner Chief Minister Jayalalithaa's electoral rivals and place the National parties in a spot ahead of the Assembly Elections. It needs a perverse disregard for normative politics to convert the humanitarian issue of grating freedom to prisoners incarcerated for nearly a quarter century into an electoral trump card. The AIADMK regime could have explored the scope for a constitutional remedy such as invoking the Governor's clemency power under Article 161. Instead, it has chosen a legally discredited route for political gains" (ஜெயலலிதா தன்னுடைய அரசியல் எதிரிகளைச் சிக்கலுக்கு உள்ளாக்கவும், தேசிய கட்சிகளுக்குப் பிரச்சினையை

ஏற்படுத்தவும் அரசியல் ரீதியாகக் குறுகிய மனப்பான்மையோடு இந்தப் பிரச்சினையைக் கையாண்டிருக்கிறார். ஏறத்தாழ கால் நூற்றாண்டுக் காலம் சிறைப்படுத்தப்பட்டுள்ள கைதிகளுக்கு விடுதலை அளிக்கும் மனிதாபிமானப் பிரச்சினையை தேர்தல் ஆதாயத்துக்காக மாற்றியதில்; நியதிசார்ந்த அரசியல் விபரீதமாக அலட்சியப்படுத்தப்பட்டுள்ளது. அ.தி.மு.க. அரசு இந்திய அரசியல் சட்டத்தின் 161வது பிரிவின்படி ஆளுநரின் மன்னிப்பு அதிகாரத்தைப் பயன்படுத்துவதைப் பற்றி ஆய்வு செய்திருக்கலாம். அதற்குப் பதிலாக, அரசியல் ஆதாயங்களுக்காக சட்டப்படி தவறான வழிமுறையை ஜெயலலிதா தேர்ந் தெடுத்திருக்கிறார்) என்று தெளிவாகவும், திட்டவட்ட மாகவும் ஜெயலலிதாவின் உள்நோக்கத்தைப் படம்பிடித்துக் காட்டியுள்ளது. இதைப்போலவே "தினமணி" நாளேடும் தனது தலையங்கத்தில் "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்ற விவிலியத்தின் கருத்தை மையமாக வைத்து எழுதியிருக்கிறது.

23-10-2008 அன்று தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்தபோது, ஜெயலலிதா "விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயல்பட்டு, நளினி உள்ளிட்ட ராஜீவ் கொலைக் குற்றவாளிகளை முதல்வர் கருணாநிதி மரண தண்டனையிலிருந்து தப்புவிக்க முயற்சி செய்கிறார். கருணாநிதி ஆட்சிக்கு வரும்போதெல்லாம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான பேச்சுகள் தமிழகத்தில் பகிரங்கமாக நடைபெறுகின்றன. அவர் இதையெல்லாம் தடுத்து நடவடிக்கை எடுப்பதில்லை. என் ஆட்சியாக இருந்தால் நான் கடுமையாக நடவடிக்கை எடுத்திருப்பேன்" என்று ஜெயலலிதா சொன்னதையும், 19-2-2014 அன்று அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றபோது, "பேரறிவாளன் உட்பட ஏழு பேரையும் விடுதலை செய்யும் தமிழக அரசின் உத்தரவு மகிழ்ச்சி அளிக்கிறது. ஏழு பேரையும் விடுதலை செய்ய மத்திய அரசு விரைவில் ஒப்புதல் வழங்கவேண்டும்" என்று நான் கூறியதையும் நடுநிலையாளர்கள் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

தமிழக அரசு சார்பில் இந்தப் பிரச்சினை குறித்து மத்திய அரசுக்கு எழுதியுள்ள கடிதத்தின் உள்நோக்கம் எதுவாக இருந்த போதிலும், மிகவும் தாமதமாகி விட்ட இந்த கட்டத்திலாவது இவர்களை விடுதலை செய்வது குறித்து, மத்திய அரசு

மனிதாபிமானத்துடன் அணுகிட வேண்டும். மத்திய அரசின் உள்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் அவர்கள் நேற்று மக்களவையில் கூறும்போது, தமிழக அரசின் முடிவை மத்திய அரசு ஆய்வு செய்து வருகிறது என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். 24 ஆண்டுகளுக்குமேல் சிறையில் இருந்து வாடிக்கொண்டிருப்பவர்களை விடுதலை செய்யும் அதிகாரம் யாருக்கு உள்ளது, மத்திய அரசுக்கு உள்ளதா, மாநில அரசுக்கு உள்ளதா, நீதிமன்றத்திற்கு உள்ளதா என்றெல்லாம் இன்னமும் வாதிட்டுப் பட்டிமன்றம் நடத்திக் கொண்டிராமல், அவர்கள் ஏழு பேரையும் உடனடியாக விடுவிக்க மத்திய அரசு அல்லது 161வது பிரிவின்படி தமிழக அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மீண்டும் ஒரு முறை கேட்டுக்கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

6-3-2016

3996. அவசரகதியில் அடிக்கல் நாட்டு விழாக்களும் அரைகுறையான வெள்ள நிவாரணப் பணிகளும்!

உடன்பிறப்பே,

தமிழகம் முழுவதும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறைக்கு வந்துவிட்டன. ஆனால் அதற்குள் தன் நினைவுக்கு வந்த திட்டங்களுக்கெல்லாம் முதல் அமைச்சர் ஜெயலலிதா அன்றாடம் அடிக்கல் நாட்டியிருக்கிறார். தேர்தல் இரண்டு மாதங்களில் வரப்போகிறது என்பது நன்றாகத் தெரிந்திருந்தும், அரசின் திட்டங்களுக்கு அவசரம் அவசரமாக அடிக்கல் நாட்டி விளம்பரப்படுத்திக் கொள்கின்ற ஒரே முதலமைச்சர், தமிழகத்தின் முதல் அமைச்சராகத்தான் இருக்க முடியும்!

20-2-2016 அன்று தமிழகச் சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கப்பட்டுப் பேரவை முடிவுற்றது. நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் மிகக் குறுகிய காலமான நான்கு நாட்கள் மட்டுமே நடைபெற்ற போதே, ஒவ்வொரு நாளும் முதலமைச்சர் ஜெயலலிதா வழக்கம் போல 110வது விதியின்கீழ்ப் பல்வேறு திட்டங்களை அறிவிப்பது தொடர்ந்தது. பேரவை ஜனவரி 20ஆம் தேதி ஒத்திவைக்கப்பட்ட பிறகு, செயல்படுவதைப் போல வெளி உலகுக்குக் காட்டிக் கொள்வதற்காக, திறப்பு விழாக்களும், அடிக்கல் நாட்டு விழாக்களும் அன்றாடம் தொடர்ந்து கொண்டே இருந்தன. அந்தக் காணொலிக் காட்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில்தான் தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்துவிட்டன.

25-2-2016 அன்று "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின்கீழ்ச் சீருடைப் பணியாளர்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகளை முதலமைச்சர் ஜெயலலிதா திறந்து வைத்திருக்கிறார். இந்தத் திட்டம் அறிவித்தது எப்போது தெரியுமா? 3-5-2012 அன்று முதலமைச்சர் தமிழகச் சட்டப்பேரவையில் "உங்கள் சொந்த

இல்லம்" திட்டத்தின்கீழ் 36 ஆயிரம் வீடுகள் காவலர்களுக்காகக் கட்டப்படும் என்றும், அதற்கான விலையை காவல் துறையினர் விருப்பத்திற்கேற்ப ரொக்கமாகவோ மாதத் தவணையிலோ செலுத்தலாம் என்றும் அறிவித்தார். நான்காண்டுகள் முடிந்து போன பின்னரும் கூட, அறிவித்த 36 ஆயிரம் வீடுகளில், இப்போது ஜெயலலிதா திறந்து வைத்திருப்பது வெறும் 2,673 வீடுகள்தான். அந்த வீடுகளைப் பெற்றவர்களிடமும் உடனடியாகத் தொகையைக் கட்ட வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறார்களாம்.

27-2-2016 அன்று பொதுப்பணித் துறை சார்பில் 120 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கட்டடங்களுக்கும் 626 கோடியே 93 இலட்சத்து 47 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான பொதுப்பணித் துறையின் திட்டங்களுக்கும் ஜெயலலிதா அடிக்கல் நாட்டியிருக்கிறார்.

அதே 27 ஆம் தேதியன்று தலைமைச் செயலகத்தில் இராமநாதபுரம் மாவட்டம் - உப்பூரில் 12,778 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படவுள்ள அனல் மின் திட்டத்திற்கு ஜெயலலிதா அடிக்கல் நாட்டினார். உப்பூர் மின் நிலையம், 4-8-2011 அன்று நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. ஆட்சி அமைந்த தொடக்கத்தில் அறிவிக்கப்பட்ட இத்திட்டத்திற்கு, ஆட்சி முடியப்போகும் நேரத்தில் ஜெயலலிதா அடிக்கல் நாட்டியிருக்கிறார். அப்போது திட்ட மதிப்பு 9,600 கோடி ரூபாய். ஏற்பட்ட தாமதத்தினால் தற்போதைய செலவு 12,778 கோடி ரூபாய். கூடுதல் செலவு 3,178 கோடி ரூபாய்.

அதே நிகழ்ச்சியில் 119 கோடியே 22 லட்சத்து 33 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியிருக்கிறார். 27 ஆம் தேதி ஜெயலலிதா இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட போதிலும், செய்தித் துறை 1-3-2016 அன்றுதான் இதுபற்றிய செய்தி வெளியீட்டினைச் செய்தது.

28-2-2016 அன்று டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் 193 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு முதல் முறையாகக் கோட்டையை விட்டு வெளியே வந்து ஜெயலலிதா அடிக்கல் நாட்டினார்.

1-3-2016 அன்று 1354 கோடியே 78 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான பாலங்கள் மற்றும் சாலைப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினாராம்.

கரூர் மருத்துவக் கல்லூரிக்கு வாங்கல் சாலையில் 25 ஏக்கர் நிலம் தனியார் மூலம் தானமாக வழங்க முன்வரப்பட்டது. நகராட்சியின் கவுன்சில் கூட்டம் 29-2-2016 அன்று மாலை 5.30 மணிக்கு நடந்துள்ளது. அதற்கு முன்பாக அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர் விஜய பாஸ்கர் அங்கே வந்து கவுன்சிலர்கள் மத்தியில் ரகசிய பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்.

வாங்கல் சாலையில் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் என்று இதுவரை சொல்லப்பட்டு வந்தது, திடீரென்று இடம் மாற்றப்பட்டு, நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் மருத்துவக் கல்லூரி வரக்காரணம் என்ன? அதுவும் அதற்கான கருத்துருவை அனுப்ப நகர் மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அதே சூழ்நிலையில், அவசர அவசரமாக அடிக்கல் நாட்டப்பட்டதன் காரணம் என்ன? முதலில் செந்தில் பாலாஜி போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது வாங்கல் சாலையில் மருத்துவக் கல்லூரி கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டதாகவும், தற்போது அவர் பதவியிலே இல்லாததால், அந்தத் திட்டத்தை அப்படியே சுருட்டி முடக்கிவிட்டு, தற்போது சணப்பிரட்டி பகுதியில் மருத்துவக் கல்லூரியை அமைக்க முடிவு செய்திருப்பதாகவும் கூறுகிறார்கள். இந்தச் செய்தி உண்மைதானா?

நெடுஞ்சாலைத் துறை சார்பில் 1,354 கோடியே 78 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள பாலங்கள், மேம்பாலங்கள், ரெயில்வே மேம்பாலங்களுக்கும் - நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் 119 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களுக்கும் - தகவல் தொழில் நுட்பத் துறை சார்பில் 93 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கும் - பேரூராட்சிகளில் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ்

420 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கும் முதலமைச்சர் ஜெயலலிதா அடிக்கல் நாட்டியிருக்கிறார்.

"தினமலர்" நாளிதழ் 2.3.2016இல், "முதல்வர் துவக்கி வைக்கும் நிகழ்ச்சிகள் குறித்த செய்தி வெளியீடுகள் அனைத்தையும், ஒரே நாளில் செய்தித் துறை வெளியிடாது. ஒன்றிரண்டை வெளியிட்டுவிட்டு, மற்றவற்றை, முதல்வர் தலைமைச் செயலகம் வராத நாளில் வெளியிடுவது வழக்கம். சட்டசபை தேர்தல் தேதி அறிவிக்கப்பட உள்ளதால், நேற்று செய்தித் துறை சார்பில் அனைத்து நிகழ்ச்சிகளின் துவக்க விழா குறித்த செய்திகளும் பத்திரிகைகளுக்கு வழங்கப்பட்டன" என்று எழுதியுள்ள வாசகங்கள், அ.தி.மு.க. அரசின் செய்தித் துறை எவ்வாறு செயல்படுகிறது என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

மேலும், கரூர் மற்றும் புதுக்கோட்டையில் புதிதாக அமையவுள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு 458 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கல்லூரிக் கட்டிடங்கள் மற்றும் மருத்துவமனைக் கட்டிடங்களுக்கு ஜெயலலிதா அடிக்கல் நாட்டியிருக்கிறார்.

கரூர் மருத்துவக் கல்லூரிக்கு 1-3-2016 அன்று ஜெயலலிதா அடிக்கல் நாட்டுகிறார். ஆனால் கரூர் நகராட்சியின் சிறப்புக் கூட்டம் மூலம் மருத்துவக் கல்லூரிக்கான இடம் ஒதுக்கீடு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தமிழகச் சட்டசபையில் 2014ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையில், கரூர் அரசு மருத்துவமனை 150 மாணவர்கள் சேர்க்கையுடன் மருத்துவக் கல்லூரியாகத் தரம் உயர்த்தப்படும் என்று ஜெயலலிதா உத்தரவிட்டார். கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் கரூரில் புதிய மருத்துவக் கல்லூரி துவக்குவதற்காக 229 கோடியே 46 இலட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி முதல்வர் உத்தரவிட்டார். அதையடுத்து கரூர் மருத்துவக் கல்லூரிக்கு வாங்கல் சாலையில் 25 ஏக்கர் நிலம் தனியார் மூலம் தானமாக வழங்க முன்வரப்பட்டது. நகராட்சியின் கவுன்சில் கூட்டம் 29-2-2016 அன்று மாலை 5.30 மணிக்கு நடந்துள்ளது. அதற்கு முன்பாக அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர் விஜயபாஸ்கர் அங்கே வந்து கவுன்சிலர்கள் மத்தியில் ரகசியப் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார். அதன் பிறகு நடந்த சிறப்புக் கூட்டத்தில் கரூர் நகராட்சி சணப்பிரட்டி கிராமத்தில் நகராட்சிக்குச் சொந்தமான 30.27 ஏக்கர் நிலத்தை மருத்துவமனை

அமைக்க இடம் வழங்க, மருத்துவக் கல்லூரித் தலைவர் கோரியுள்ளார். நகராட்சிக்கு எவ்வகையிலும் இழப்பு ஏதுமின்றி கேட்புத் துறையான சுகாதாரத் துறைக்கு அரசு எடுத்த முடிவின் அடிப்படையில் வழங்க, மன்றத்தில் அனுமதி வழங்கப்படுகிறது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வாங்கல் சாலையில் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் என்று இதுவரை சொல்லப்பட்டு வந்தது, திடீரென்று இடம் மாற்றப்பட்டு, நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் மருத்துவக் கல்லூரி வரக் காரணம் என்ன? அதுவும் அதற்கான கருத்துருவை அனுப்ப நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அதே சூழ்நிலையில், அவசர அவசரமாக அடிக்கல் நாட்டப்பட்டதன் காரணம் என்ன? முதலில் செந்தில் பாலாஜி போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது வாங்கல் சாலையில் மருத்துவக் கல்லூரி கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டதாகவும், தற்போது அவர் பதவியிலே இல்லாததால், அந்தத் திட்டத்தை அப்படியே சுருட்டி முடக்கிவிட்டு, தற்போது சணப்பிரட்டி பகுதியில் மருத்துவக் கல்லூரியை அமைக்க முடிவு செய்திருப்பதாகவும் கூறுகிறார்கள். இந்தச் செய்தி உண்மைதானா? அதனால்தான் மருத்துவக் கல்லூரிக்கு, அறிவித்து இரண்டாண்டுகள் கழித்து, 1-3-2016 அன்று அவசர அவசரமாக அடிக்கல் நாட்டப்பட்டதா?

அ.தி.மு.க. அரசின் பதவிக் காலம் முடியும் நிலையில் முதலமைச்சர் ஜெயலலிதா பல்வேறு அறிவிப்புகளையும் திட்டப் பணிகளையும் அவசர அவசரமாகத் தொடங்கியும், திறந்து வைத்தும் இருக்கிறார். ஐந்தே நாட்களில் ஜெயலலிதா அடிக்கல் நாட்டிய திட்டங்களின் மதிப்பு எவ்வளவு தெரியுமா? 15 ஆயிரத்து 192 கோடியே 68 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்புக்கான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியிருக்கிறார். இந்தத் திட்டங்கள் எல்லாம் எப்போது நடைமுறைக்கு வரும்? இதற்கான தொகை நிதி நிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளதா? பேரவையின் அனுமதி கிடைத்துள்ளதா? மக்களை ஏமாற்றுவதற்காகப் போகிற போக்கில் அறிவிக்கப்பட்ட திட்டங்களா?

பெருமழையால் பாதிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பெற்ற கடன்களுக்காக வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய வட்டியில் 3 சதவிகிதம் வட்டி மானியம் வழங்க முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இந்த

உத்தரவை ஜெயலலிதா 1-3-2016 அன்று வெளியிட்டிருக்கிறார். பெருமழை பெய்தது 2015ஆம் ஆண்டு நவம்பர் இறுதியிலும், டிசம்பர் மாதத் துவக்கத்திலுமாகும். இதற்குப் பிறகு மூன்று மாத காலமாக இந்த அறிவிப்பை வெளியிடாமல் இருந்ததற்கான காரணம் என்ன? இடைக்கால நிதிநிலை அறிக்கையில் கூறியிருக்கலாம் அல்லவா? மழையினால் பாதிக்கப்பட்ட சிறு குறு தொழில் நிறுவனங்களுக்கு வட்டி மானியம் அளிக்க வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் கேட்ட போதே அறிவித்திருக்கலாம் அல்லவா? இடைக் கால நிதிநிலை அறிக்கைக்குப் பிறகு ஒவ்வொரு நாளும் 110வது விதியின்கீழ் அறிக்கை படித்தார்களே, அப்போதுகூடச் சொல்லவில்லையே ஏன்? அப்போதெல்லாம் சொல்லியிருந்தால், அந்தச் சலுகையை உரியவர்களுக்கு வழங்கியிருக்க வேண்டும். இப்போது அறிவித்தால், "தேர்தல் பற்றிய அறிவிப்பு வந்துவிட்டது; என்ன செய்ய?" என்று பதில் கூறித் தப்பித்துக் கொள்ளலாம் அல்லவா?

இந்த ஆட்சியில் எந்தத் தரப்பினரையும் வாழ விடாமல் தொடர்ந்து வாட்டி வதைப்பதோடு, பசிக்கு ரொட்டித் துண்டு கேட்ட மக்களிடம் போய், "கேக் வாங்கிக் கொள்ளுங்கள்" என்றுரைத்த கொடுங்கோலனைப் போல; அடிக்கல் நாட்டு நிகழ்ச்சிகள் என்றும், நிறைவேற்ற முடியாத, நிறைவேற்ற நேரம் இல்லாத பல்வேறு அறிவிப்புகளையும் நாட்டு மக்களை ஏமாற்றுவதற்காக ஜெயலலிதா கடைசி நேரத்தில் செய்திருக்கிறார். இந்த விவரங்களையெல்லாம் உடன்பிறப்பே, நீ ஆங்காங்கு பொதுமக்களிடம் உரைத்து, உணர்த்திட வேண்டும். தேர்தல் பணிகளில் முதலில் ஆற்ற வேண்டிய பணி, பொதுமக்களுக்கு உண்மைகளை தெரியப்படுத்த வேண்டும் என்பதுதான்! அந்தப் பணிகளை நீ ஆக்கபூர்வமாக ஆற்றி வருவாய் என்பதை நான் நன்கறிவேன். இருந்தாலும் அந்தச் செய்திகளோடு இந்த உண்மைகளையும் மக்களுக்குத் தெளிவாக்கிடுக!

இந்த அறிவிப்போடு மேலும் சில அறிவிப்புகளையும் சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்காக 1-3-2016 அன்று ஜெயலலிதா செய்திருக்கிறார். அந்த அறிவிப்புகளைச் செய்ய ஏன் இந்தக் காலதாமதம்? துறை மூலமாக இதற்கான கோப்பு

முதலமைச்சரின் ஒப்புதலுக்காக வந்து அதிலே கையெழுத்திடவே இவ்வளவு காலதாமதமா?

தமிழ்நாட்டில் மிகப் பெரிய மழை பெய்து, வெள்ளம் பெருக்கெடுத்தோடி பல நூறு பேர் உயிரிழக்கவும், பல இலட்சம் குடும்பங்கள் உடமையிழக்கவுமான பதற்ற நிலை உருவாகி, அதற்கான நிவாரணத் தொகை இன்னும் முழுமையாக வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எல்லாத் திசைகளிலிருந்தும் வருகிறது. உதாரணமாக இன்றைய (6-3-2016) "தினமலர்" நாளிதழிலேயே "நிவாரணம் கிடைக்கல : நான்கு இலட்சம் குடும்பங்கள் புலம்பல்" என்ற தலைப்பில் முதல் பக்கத்திலேயே சென்னை, திருவொற்றியூர், மற்றும் மணலி பகுதிகளில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோர், நிவாரணத் தொகை கிடைக்காததைக் கண்டித்து திருவொற்றியூர் தாலுகா அலுவலகத்தை முற்றுகையிட்ட செய்தி புகைப்படத்தோடு வந்துள்ளது. அந்தச் செய்தியில், ஜனவரி 11க்குள் அனைவருக்கும் நிவாரணத் தொகை அவர்களின் வங்கிக் கணக்கில் சேர்க்கப்படும் என்று முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்ததாகவும், ஆனால் இரண்டு மாதங்களுக்கு மேலாகியும், இன்னும் நான்கு இலட்சம் குடும்பங்களுக்கு மேல் நிவாரணம் கிடைக்கவில்லை என்றும் எழுதியிருக்கிறார்கள். சென்னையிலேயே இப்படிப்பட்ட கதி என்றால், பாதிப்புக்குள்ளான மற்ற மாவட்டங்களின் நிலை எப்படிப் பட்டதோ?

பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட சிறு வணிகர்கள் மற்றும் சாலையோர வியாபாரிகளுக்குக் கூட்டுறவு வங்கிகளில், வட்டியில்லாமல் 5000 ரூபாய் கடன் வழங்கப்படும் என்று அறிவித்து அதற்காக சிறப்பு முகாம்கள் எல்லாம் நடந்தன. இந்தக் கடன்கள் ஆளுங்கட்சியினருக்கு மட்டும் சுமார் 100 கோடி ரூபாய் அளவுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும், அப்படி வழங்கப்பட்ட காரணத்தால், கூட்டுறவு வங்கிகள் திவால் நிலைக்கு வந்து விட்டன என்றும் செய்தி வந்துள்ளது.

விவசாயிகளின் வேதனை நிலைமை பற்றியோ விளக்கவே வேண்டியதில்லை. விவசாயிகள் சங்கத் தலைவர், திரு. அய்யாக்கண்ணு அளித்திருக்கும் பேட்டியிலே கூட, "விவசாயப் பிரதிநிதிகளை முதல்வர் ஜெயலலிதா சந்திக்கவே மறுக்கிறார். மத்திய அரசு வழங்கிய வறட்சி நிவாரணம் ரூ. 1774 கோடியை

தென்னை, மா, எலுமிச்சை விவசாயிகளுக்கு வழங்கவும் மறுக்கிறார். இந்தப் போக்கைக் கண்டித்தும் விவசாயிகளின் வேளாண் கடன்களைத் தள்ளுபடிசெய்ய வலியுறுத்தியும் மார்ச் ஒன்றாம் தேதி ஜெயலலிதா வீட்டை முற்றுகையிடும் போராட்டத்தை அறிவித்திருந்தோம். இதன் பிறகாவது பேச்சுவார்த்தை நடத்துவார் என்று பார்த்தால் எங்கள் மீது அடக்குமுறைகளை ஏவிவிடுகிறார். தீவிரவாதிகளைப் போல எங்களை நடத்துகிறார். இந்த அரசு விவசாயிகளைத் துச்சமாக நினைக்கிறது. ஊருக்குச் சோறு போடும் எங்களை இந்த அம்மையார் மண்ணைத் தின்ன வைத்துவிட்டார்" என்று மனம் நொந்து போய்க் கூறியிருக்கிறார்.

இவ்வாறு இந்த ஆட்சியில் எந்தத் தரப்பினரையும் வாழவிடாமல் தொடர்ந்து வாட்டி வதைப்பதோடு, பசிக்கு ரொட்டித் துண்டு கேட்ட மக்களிடம் போய், "கேக் வாங்கிக் கொள்ளுங்கள்" என்றுரைத்த கொடுங்கோலனைப் போல; அடிக்கல் நாட்டு நிகழ்ச்சிகள் என்றும், நிறைவேற்ற முடியாத, நிறைவேற்ற நேரம் இல்லாத பல்வேறு அறிவிப்புகளையும் நாட்டு மக்களை ஏமாற்றுவதற்காக ஜெயலலிதா கடைசி நேரத்தில் செய்திருக்கிறார். இந்த விவரங்களையெல்லாம் உடன்பிறப்பே, நீ ஆங்காங்கு பொதுமக்களிடம் உரைத்து, உணர்த்திட வேண்டும். தேர்தல் பணிகளில் முதலில் ஆற்ற வேண்டிய பணி, பொதுமக்களுக்கு உண்மைகளைத் தெரியப்படுத்த வேண்டும் என்பதுதான்! அந்தப் பணிகளை நீ ஆக்க பூர்வமாக ஆற்றி வருவாய் என்பதை நான் நன்கறிவேன். இருந்தாலும் அந்தச் செய்திகளோடு இந்த உண்மைகளையும் மக்களுக்குத் தெளிவாக்கிடுக!

அன்புள்ள,

மு.க.

7.3.2016

3997. அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் மதுவிலக்கைச் சொல்லி மக்களை ஏமாற்ற முயற்சியா?

உடன்பிறப்பே,

"திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் மதுவிலக்கை அமல்படுத்த தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்று 21-7-2015 அன்று நான் அறிவித்தேன்.

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 10-8-2015 திங்கள்கிழமையன்று மாவட்டத் தலைநகரங்களில், அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர் தலைமையில் மதுவிலக்கை நடைமுறைப்படுத்தக் கோரி அறவழியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்" என்று 3-8-2015 அன்று நான் விடுத்த அறிக்கையில் தெரிவித்திருந்தேன். அவ்வாறே ஆர்ப்பாட்டங்களும் வெற்றிகரமாகத் தமிழகமெங்கும் நடைபெற்றன.

இந்த மதுவிலக்குப் பிரச்சினை பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் சிலர் பொத்தாம்பொதுவில், தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்தபோதுதானே, மதுவிலக்கை ரத்து செய்தது. எனவே தி.மு.கழகத்தால்தான் எல்லாம் கெட்டுவிட்டது என்ற ரீதியில் உள்நோக்கத்தோடு, ஏற்கனவே அரசியல் காரணத்திற்காகச் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லி, அதையே உறுதி செய்துவிட வேண்டும் என்ற எண்ணத்தோடு தொடர்ந்து பேசி வருகிறார்கள்.

தி.மு. கழக ஆட்சியில் மது விலக்கு ஒத்திவைக்கப்பட்டது என்றாலும், அப்போதே நான் கூறியிருக்கிறேன்; இதனைத் திராவிட முன்னேற்றக் கழகம் முழு மனதோடு கொண்டு வரவில்லை என்றும், அப்போதுள்ள தமிழகத்தின் நிதிநிலைமைதான் அதற்குக் காரணம் என்றும் பல முறை விளக்கியிருக்கிறேன்.

2003ஆம் ஆண்டு ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அரசே மதுவிற்பனைக்காக "டாஸ்மாக்" நிறுவனத்தைத் தொடங்கி, அரசே ஊருக்கு ஊர் மது விற்பனைக் கடைகளைத் திறந்தது முக்கியமான இந்தத் தகவலையும் ஒரு சிலர் பொதுமக்கள் பார்வையிலிருந்து மறைத்திட முயற்சிக்கிறார்களே தவிர, மனசாட்சிக்கு ஊறு விளைவிக்காமல் வெளிப்படையாகச் சொல்வதில்லை.

மதுவிலக்கை ஒத்திவைத்துத் தமிழகச் சட்டப்பேரவையில் நான் உரை நிகழ்த்தும்போதுகூட, கூறியது என்ன?

"புனித நோக்கத்துடன் இந்தியப் புவி முழுவதும் எந்தக் கொள்கை விரிவாக்கப்பட வேண்டுமென்று காந்தியடிகள் கூறினாரோ, அந்தக் கொள்கை அவர் ஏந்திய கொடி நிழலில் அணி வகுத்து நின்ற அவர்தம் தானைத் தளபதிகளாம் மாநில முதல்வர்களாலேயே பின்பற்ற முடியாமல் போனது மட்டுமல்ல; மத்திய அரசினை நடாத்தும் மகாத்மாவின் வாரிசுகளாலும் புறக்கணிக்கப்பட்டது வேதனை தரும் செய்தியாகும். கொழுந்து விட்டெரியும் நெருப்பு வளையத்திற்குள் கொளுத்தப்படாத கற்பூரமாகத் தமிழ்நாடு எத்தனை நாளைக்குத்தான் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்" என்று சட்டப்பேரவையில் பேசினேனே தவிர, மனச்சாட்சி இடம்கொடுக்காத நிலையில்தான் மதுவிலக்குச் சட்டம் ஒத்திவைக்கப்படுவதாக அறிவித்தேன்.

29-6-1971 அன்று நிதிநிலை அறிக்கைமீதான பொது விவாதத்திற்குப் பதிலளித்து நான் உரையாற்றும்போது "மாண்புமிகு உறுப்பினர்களின் - தோழமைக் கட்சி நண்பர்களின் உணர்ச்சியை மதிக்கிறேன். பாராட்டுகிறேன். அவர்களில் சிலபேர் என்னைக் கெஞ்சிக்கூடக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மன்றாடிக் கேட்பதாகக்கூடச் சொன்னார்கள். அவர்களை எல்லாம்விட நான் வயதிலே சிறியவன். அப்படி மன்றாடிக் கேட்டதை, கெஞ்சிக் கேட்டதைத் தயவு செய்து திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள். இதைத் தவிர வேறு வழி இல்லை என்ற காரணத்தால்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம். அதுவும் ஒத்திவைத்திருக்கிறோம் என்றுதான் கூறியிருக்கிறோம்" என்றுதான் கூறினேன்.

1971இல் தி.மு. கழக அரசு; கள், சாராயக் கடைகளைத் திறந்தது என்றாலும், 1974இல் - தி.மு. கழக ஆட்சிக் காலத்திலேயே, மீண்டும் மதுக் கடைகளை மூடி, மது விலக்கை நடைமுறைப்படுத்தியது. திறந்ததை மறக்காமல் சொல்லிக் கொண்டிருப்பவர்கள், மூடியதை மட்டும் வசதியாக மூடி மறைப்பது சரிதானா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஒத்திவைப்பது என்பது மீண்டும் நடைமுறைக்கு வரும் என்ற அடிப்படையில்தானே? தி.மு. கழக ஆட்சிக் காலத்திலேயே, தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அமல்படுத்தும் சட்ட முன் வடிவு தமிழக சட்டமன்றத்தில் ஒருமனதாக 22-8-1974 அன்று நிறை வேற்றப்பட்டது.

அதற்குப் பிறகு வந்த அ.தி.மு.க. ஆட்சியிலே என்ன செய்தார்கள்? தி.மு.கழக ஆட்சியிலே கொண்டுவந்த மதுவிலக்கு ரத்து என்பது, தி.மு. கழக ஆட்சியிலேயே மீண்டும் திரும்பப் பெறப்பட்டு, மதுவிலக்கு நடைமுறைக்கு வந்துவிட்டது என்பதுதான் உண்மை, உண்மை.

ஆனால், 1981இல் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். மீண்டும் கள், சாராய விற்பனைக்காக, மது விலக்கை ரத்து செய்தார். இந்த உண்மையை ஒரு சிலர் உரக்கச் சொல்வதில்லை; காரணம் அ.தி.மு.க. ஆட்சி என்றாலே ஏற்படும் அச்சம்!

அதற்குப் பிறகு, 2001இல் இன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தபோது மது ஒழிப்பு பிரகடனம் செய்தார். எனினும், ஜெயலலிதா ஆட்சியின் அந்த ஆண்டில் மட்டும் - மதுவிலக்கு சட்டத்தின்கீழ் 2 லட்சத்து 75 ஆயிரம் பேர்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஜெயலலிதா குறுகிய காலத்தில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு காரணமாகப் பதவி விலகி, ஓ.பன்னீர்செல்வம் முதல்வராக இருந்தபோது, அந்நிய மது வகைகள், 100 மில்லி 15 ரூபாய் என்கிற மலிவு விலையில் 2002 ஜனவரி முதல் வாரத்திலிருந்து விற்பனைக்கு வரும் என்று அறிவித்தார்.

2003ஆம் ஆண்டு ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அரசே மதுவிற்பனைக்காக "டாஸ்மாக்" நிறுவனத்தைத் தொடங்கி, அரசே ஊருக்கு ஊர் மது விற்பனைக் கடைகளைத் திறந்தது. முக்கியமான இந்தத் தகவலையும் ஒரு சிலர் பொதுமக்கள்

பார்வையிலிருந்து மறைத்திட முயற்சிக்கிறார்களே தவிர, மனசாட்சிக்கு ஊறு விளைவிக்காமல் வெளிப்படையாகச் சொல்வதில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் மதுவிலக்குக் கொள்கையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று சில மாதங்களுக்கு முன்பு நான் அறிவித்த பிறகு, பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், முன்னணியினரும், சமூக ஆர்வலர்களும், பத்திரிகையாளர்களும், மகளிர் அமைப்புகளும் தொலைபேசி வாயிலாகவும், நேரிலும் என்னைத் தொடர்புகொண்டு அந்த அறிவிப்பை வரவேற்றதோடு, நல்ல முடிவு என்றும் கூறினார்கள். என்னுடைய அறிவிப்பு அனைத்துத் தரப்பிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்றால் அது மிகையல்ல!

22-12-2008 அன்று பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்களும், மற்றும் பல்வேறு அமைப்புகளின் தலைவர்களும் என்னைச் சந்தித்து தமிழகத்தில் மது விலக்கை அமல்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தியபோது, அவர்கள் கூறியதில் ஒத்த கருத்துடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு, 2006ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு தமிழகம் முழுவதிலும் 1300 மதுக் கூடங்களை (பார்) மூடியுள்ளது என்பதையும், அதேபோல் 128 சில்லறை மது விற்பனைக் கடைகளும் மூடப்பட்டுள்ளன என்பதையும் நினைவூட்டினேன்.

மேலும், தொடர்ந்து படிப்படியாக முழு மதுவிலக்கினை எய்திடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும், அதுவரையில் ஆலயங்கள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், மசூதிகள், தேவாலயங்கள் போன்ற பொது இடங்களுக்கு அருகில் மதுக்கடைகள் அமையாமல் எச்சரிக்கையுடன் நடவடிக்கை மேற்கொள்வது என்று முடிவெடுத்துள்ளது என்றும், மதுக்கடைகள் திறந்திருக்கும் நேரத்தில் 1 மணி நேரத்தைக் குறைத்து - மதுக்கடைகள் இயங்கும் என்றும் அறிவித்ததோடு, அதற்கிணங்க ஆணையும் பிறப்பிக்கப்பட்டது.

மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் முதன் முதலாக மதுவிலக்கு ஒத்திவைக்கப்பட்டதைப் போலச் சிலர் பிரச்சாரம்

செய்துவருகிறார்கள். இதுவும் உண்மையல்ல. 1937இல் ராஜாஜி தலைமையில் சென்னை மாகாண அரசு அமைந்ததும், அதுவரை சென்னை மாகாணத்தில் நடைமுறையில் இல்லாத மதுவிலக்கை அமல்படுத்தினார். ஆனால் அதுவும் 1939இல் முடிவுக்கு வந்தது. அந்த 1937ஆம் ஆண்டிலேகூட, ராஜாஜி முதலமைச்சராக இருந்தபோதேகூட, சென்னை மாகாணத்தில் இருந்த 25 மாவட்டங்களில், நான்கு மாவட்டங்களில் மட்டும்தான், அதாவது சேலம், சித்தூர், கடப்பா, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில்தான் மதுவிலக்கு நடைமுறையில் இருந்தது. மற்ற மாவட்டங்களில் 1937ஆம் ஆண்டிற்கு முன்பிருந்த நிலைமைதான் இருந்து வந்தது. 1948இல் ஓமந்தூரார் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் தமிழகத்தில் முழு மதுவிலக்கை நடைமுறைப்படுத்தினார். இதுதவிர மற்ற காலங்களில் அதாவது 1937க்கு முன்பும் சரி, 1939க்குப் பின்பு 1948ஆம் ஆண்டுவரையிலும் சரி, தமிழகத்திலே மதுவிலக்கு நடைமுறையிலே இல்லை என்பதைச் சற்று யோசித்துப் பார்த்தால், தமிழகத்திலே தி.மு. கழக ஆட்சியில்தான் முதன் முதலாக மதுவைப் புகுத்தி விட்டார்கள் என்ற வாதம், எந்த அளவுக்கு உண்மைக்குப் புறம்பானது என்பதையும், தி.மு. கழகத்தைப் பொறுப்பாக்குவது எப்படிப்பட்ட திரிபுவாதம் என்பதையும் தெரிந்துகொள்ளலாம்.

இன்னும் சொல்லப்போனால், மதுவிலக்கு குறித்து 13-9-1969இல் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஓர் அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கையின் இறுதியில், "மதுவிலக்குக் கொள்கையில் தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியத்துணைக் கண்டத்திலுள்ள எந்தத் தனி மனிதனுக்கோ, எந்தக் கட்சிக்கோ உள்ள அக்கறையைவிட, அந்தக் கொள்கை மக்களுக்குத் தேவையானது என்பதில், தி.மு. கழகத் தலைவரும், தமிழக முதல்வருமான கலைஞருக்கு அதிக அக்கறையும், அதிகப் பிடிப்பும் உண்டு என்பதை மற்றையோரைவிட அழுத்தமாக என்னால் துணிந்து கூற முடியும்" என்று தெரிவித்ததையும், அதற்குப்பின் அவரே "ஆனந்த விகடன்" பத்திரிகையிலே "நான் ஏன் பிறந்தேன்" என்ற தலைப்பிலே எழுதிய நீண்ட தொடர் கட்டுரையிலே விரிவாக எழுதியதையும் ஜெயலலிதாவின் தலைமையிலே உள்ள அ.தி.மு.க.விலே தற்போதுள்ளவர்கள் - புதியதாக வந்தவர்கள் வேண்டுமானால் மறந்திருக்கலாம்; ஆனால் நானும்

மறக்கவில்லை; இந்தப் பிரச்சினையைத் தொடர்ந்து உற்று நோக்கி வருவோரும் மறக்கவில்லை.

காந்தியவாதி சசிபெருமாள்! அறுபது வயதைக்கூட எட்டவில்லை. குமரி மாவட்டத்தில் உள்ள ஒரு டாஸ்மாக் கடையை மூட வேண்டுமென்பதற்காகத்தான் போராட்டம். அந்த ஒரு கடையை மூடுவதற்கு ஒப்புக் கொண்டிருந்தால் பிரச்சினையே வந்திருக்காது. தமிழகமெங்கும் போராட்டமும் பெருகியிருக்காது. ஆனால் இந்த ஆட்சியிலே எதைக் கவனித்தார்கள்; இதைக் கவனிப்பதற்கு? "செல்போன்டவரில்" எத்தனை மணி நேரம் அவரால் இருக்க முடியும்? சம்பந்தப்பட்டவர்கள் ஒரு மணி நேரத்திற்குள் அங்கே வந்து பிரச்சினையைப் பேசி முடிவு கண்டிருந்தால், மதுவிலக்குக்காகவே தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டிருந்த சசி பெருமாள் இறந்திருப்பாரா?

மதுவிலக்குப் பிரச்சினை குறித்து தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சிகளும் அறிக்கை வெளியிட்ட பிறகும், தன்னெழுச்சியான போராட்டம் தொடர்ந்து நடைபெற்று, காவல்துறையின் அடக்குமுறை ஏவி விடப்பட்ட நிலையிலும், அதுபற்றித் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஒரு வார்த்தைகூட அப்போது கூறவில்லை. காரணம், அவர் மனதில் குடியமர்ந்துள்ள சர்வாதிகார மனோபாவம்! அதுபற்றி அப்போது "ஆனந்த விகடன்" "தீயன அகலட்டும்" என்ற தலைப்பில் எழுதியுள்ள தலையங்கமே பொருத்தமான பதிலாக அமையும். அந்தத் தலையங்கம் வருமாறு :- "தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா; மது விலக்கு குறித்தோ, மதுக்கடைகளின் எண்ணிக்கையைக் குறைப்பது குறித்தோ, டாஸ்மாக் மதுக் கடைகளுக்கு எதிரான போராட்டங்கள் குறித்தோ ஒரு வார்த்தைகூட இதுவரை சொல்லவில்லை. சசி பெருமாள் மரணத்துக்கு முன்னர் இருந்தே தமிழ்நாட்டில் டாஸ்மாக்குக்கு எதிரான போராட்டங்கள் முழு வீச்சுடன் தொடங்கிவிட்டன. அவரது மரணத்துக்குப் பிறகு அவை தீவிரமடைந்தன. கல்லூரி மாணவர்கள், குடும்பத்தலைவிகள், பொது நல அமைப்புகள் என தமிழ்நாடு எங்கும் போராட்டங்கள் தொடருகின்றன. அத்தனை அரசியல் கட்சிகளும் தங்கள் பங்குக்குக் களத்தில் நிற்கின்றன. போராட்டங்கள் தீவிரமடைய தொடங்க, ஆகஸ்ட் 15ஆம் தேதி மதுக்கடைகளின் எண்ணிக்கையைக் குறைப்பது தொடர்பான அறிவிப்பை முதலமைச்சர் வெளியிடுவார் என்ற செய்திகள் அரசுத்

தரப்பில் இருந்து ஊடகங்களில் கசியவிடப்பட்டன. போராட்டங்கள் குறித்து ஒரு வார்த்தைகூடப் பேசாத முதல் அமைச்சர், டாஸ்மாக் கடைகளில் வன்முறைகளில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிக்கை வெளியிட்டார். அரசே நடத்தும் மது வியாபாரம் குறித்துத் தங்கள் நிலைப்பாடு என்ன என்பதை முதலமைச்சர் அறிவித்தாக வேண்டும். ஒருவேளை தேர்தல் நெருக்கத்தில் டாஸ்மாக் தொடர்பான அறிவிப்புகளை வெளியிட்டால், வாக்கு அறுவடை செய்யத் தோதாக இருக்கும் என அரசு திட்டமிட்டுத் தாமதித்தால், அது மிகத் தவறானது. கேடு எனத் தெரிந்த பின்னர், அந்தக் கணமே அதைக் கைவிடுவதே சரி. தீயன உடனே அகலட்டும்....நல்லன உடனே தொடங்கட்டும்”

- என்று ஆனந்தவிகடன் விரிவாகத் தலையங்கம் தீட்டியது.

2016ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் மே திங்கள் வருவதால், எல்லாவற்றிலும் எப்போதும் ஏமாற்று வித்தையையே தொடர்ந்து கையாண்டு வருவதைப் போல, தேர்தலில் மக்களை ஏமாற்றுகின்ற நோக்கத்தோடு, ஏமாற்றி வாக்கு அறுவடை செய்துவிடலாம் என்ற நப்பாசையோடும், கபட எண்ணத்தோடும், அ.தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில், தாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், மதுவிலக்கைக் கொண்டுவரப் போவதாக அறிவிக்க இருக்கிறதாம்! ஆட்சியிலே இருந்த ஐந்தாண்டுகளில் செய்திட மனம் வராததை, தேர்தல் அறிக்கையில் ஊரை ஏமாற்றச் செய்யப் போகிறார்களாம்!

மதுவிலக்குக் கொள்கையை மத்திய அரசு இந்தியா முழுவதும் கொண்டுவராத நிலையிலேயே, தாங்கள் ஆட்சிக்கு வந்தால் மதுவிலக்கினைக் கொண்டு வருவோம் என்று தேர்தல் அறிக்கையிலே அறிவிப்பார்களானால், அது பாமர மக்களை ஏமாற்றுவதற்காகச் செய்யப்படும் “கண்கட்டும் வித்தை” அறிவிப்பாகத்தான் இருக்கமுடியும்.

ஆனந்தவிகடனின் தலையங்கத்தை மெய்ப்பிக்கும் விதத்தில்தான் சில செய்திகள் தற்போது வந்து கொண்டிருக்கின்றன. அதாவது 2016ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் மே திங்கள் வருவதால், எல்லாவற்றிலும் எப்போதும்

ஏமாற்று வித்தையையே தொடர்ந்து கையாண்டு வருவதைப் போல, தேர்தலில் மக்களை ஏமாற்றுகின்ற நோக்கத்தோடு, ஏமாற்றி வாக்கு அறுவடை செய்து விடலாம் என்ற நப்பாசையோடும், கபட எண்ணத்தோடும், அ.தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில், தாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், மது விலக்கைக் கொண்டு வரப் போவதாக அறிவிக்க இருக்கிறதாம்! ஆட்சியிலே இருந்த ஐந்தாண்டுகளில் செய்திட மனம் வராததை, தேர்தல் அறிக்கையில் ஊரை ஏமாற்றச் செய்யப் போகிறார்களாம்!

இதே ஆண்டு, ஜனவரியில் தமிழகச் சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதம் நடைபெற்றபோது, "மதுவிலக்குக் கொள்கையை மத்திய அரசு இந்தியா முழுவதும் கொண்டு வந்தால் நாங்கள் ஆதரிக்கிறோம் என்று சொல்கிறோம்" என்று "மிடாஸ்" அமைச்சர் நத்தம் விசுவநாதன் கூறினார். தி.மு.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் மு.க. ஸ்டாலின், அண்டை மாநிலங்களைப் பின்பற்றிப் படிப்படியாகவாவது, மதுவிலக்கை அமல்படுத்துமாறு மிகுந்த கவலையோடு கேட்டுக்கொண்டபோது, அமைச்சர் நத்தம் விசுவநாதன் அதற்கும் மறுத்து விட்டார். ஆனால் தற்போது தேர்தல் வருகிறது என்றதும், மதுவிலக்குக் கொள்கையை மத்திய அரசு இந்தியா முழுவதும் கொண்டுவராத நிலையிலேயே, தாங்கள் ஆட்சிக்கு வந்தால் மதுவிலக்கினைக் கொண்டுவருவோம் என்று தேர்தல் அறிக்கையிலே அறிவிப்பார்களானால், அது பாமர மக்களை ஏமாற்றுவதற்காகச் செய்யப்படும் "கண்கட்டும் வித்தை" அறிவிப்பாகத்தான் இருக்கமுடியும்.

அன்புள்ள,

மு.க.

18.3.2016

3998. நம்பிக்கை எனக்கு நிரம்பவே உண்டு!

உடன்பிறப்பே,

ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசில் என்னதான் நடக்கிறது? கடந்த ஐந்தாண்டு காலமாக ஆட்சியில் இருந்த அமைச்சர்கள் மீதெல்லாம் அவ்வப்போது பல்வேறு புகார்கள் வெளிவந்தன. குறிப்பாக மின்துறை அமைச்சர்மீது பல கோடி ரூபாய் ஊழல் புகார்கள் எல்லாம் பூர்வாங்க ஆதாரங்களுடன் கூறப்பட்டன. அப்போதெல்லாம் முதலமைச்சர் ஜெயலலிதா அவற்றைக் கண்டுகொள்ளாமல் பாராமுகமாகவே இருந்தார். தற்போது என்ன நிலைமை?

அன்றாடம் நாளேடுகளைப் பிரித்தால் வருகின்ற செய்திகள் எத்தகையவை? அமைச்சரவையில் ஜெயலலிதாவுக்கு அடுத்த இடத்தில், ஏன் இரண்டு முறை நீதிமன்ற நடவடிக்கைகளால் ஜெயலலிதா பதவியிலிருந்து இறங்க வேண்டிய நேரத்தில் முதலமைச்சராகவே இருந்தவர் ஓ. பன்னீர்செல்வம். இன்றும் அவர்தான் நிதியமைச்சர். ஆனால் அவருடைய கதி என்ன? அவருடைய நடவடிக்கைகளைக் கண்காணிக்க ஜெயலலிதா வாய்மொழி உத்தரவு உளவுத் துறைக்குப் பிறப்பித்து, அவர்கள் பன்னீர்செல்வத்திற்கு எங்கெங்கே எவ்வளவு சொத்து, என்னென்ன முறைகேடுகளைச் செய்திருக்கிறார், எம்.எல்.ஏ. சீட் வாங்கித் தருவதாக அவருடைய ஆதரவாளர்கள் வசூலித்த பணம் எத்தனை கோடி என்ற விவரங்களையெல்லாம் திரட்டியிருக்கிறார்களாம்.

ஓ. பன்னீர்செல்வத்தின் தம்பி செய்த தவறால் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த நாகமுத்து என்ற பூசாரி கடிதம் எழுதிவிட்டு உயிர்துறந்தது பற்றி எதிர்க்கட்சிகள் குறைகூறியபோது அந்த அமைச்சர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா? கிடையாது. இன்று அதே ஓ.பி.எஸ்.சின் மகன்கள் செய்கின்ற தவறுகள் பற்றி புலனாய்வுத் துறை ஆராய்ந்து அறிக்கை கொடுக்கிறதாம்.

ஓ. பன்னீர்செல்வம், நத்தம் விசுவநாதன், பழனியப்பன் ஆகிய மூன்று அமைச்சர்களும் மாநிலம் முழுதும் பலரிடம் எம்.எல்.ஏ. சீட் வாங்கித் தருவதாகக் கோடி கோடியாக வசூல் செய்திருப்பதெல்லாம் அன்றாடம் செய்திகளாக வந்து கொண்டிருக்கின்றன. இந்த மூன்று அமைச்சர்களும் சென்னையை விட்டு வெளியே செல்லக் கூடாது என்று "கார்டன்" உத்தர விட்டுள்ளதாம். அதோடு, இவர்கள் கட்சி நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளக் கூடாது என்று தடை ஆணையாம்.

இதே அமைச்சர்கள், மற்றும் அவர்களுடைய ஆதரவாளர்கள் மீதும் எதிர்க்கட்சிகள் கடந்த ஐந்தாண்டு காலமாகப் புகார்களையெல்லாம் அடுக்கடுக்காக எடுத்துக் கூறியபோது அதைப் பற்றி முதலமைச்சர் காதில் போட்டுக் கொண்டாரா? தற்போது அந்தப் புகார்கள் எல்லாம் உண்மை என்று ஆகிவிட்ட நிலையில், இதற்காக இந்த அரசாங்கம் மக்களுக்குத் தருகின்ற விளக்கம் என்ன? தற்போது வெளிப்படையாக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் ஜெயலலிதா வழக்கமாக நடத்தும் கபட நாடகங்கள்தானா? நாட்டு மக்களை ஏமாற்றித் திசை திருப்புவதற்காக போடுகின்ற நய வஞ்சகக் கூத்துகளா?

ஆனால் ஜெயலலிதாவின் இந்த நாடகங்களைக் கண்டு ஏமாறுவதற்கு நாட்டு மக்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்ல! ஜெயலலிதா நடத்திய இது போன்ற பழைய நாடகத்தை ஏற்கனவே கண்டு பின்னணிக் கதைகளைப் புரிந்துகொண்டவர்கள். ஏன் தற்போது ஜெயலலிதா உடன் வாழ்கின்ற சசிகலா பற்றியே ஜெயலலிதா என்ன சொன்னார்? எப்படி நடந்து கொண்டார்? நாட்டிற்குத் தெரியாதா? சசிகலா வெளியேற்றம், மீண்டும் அடைக்கலம் என்பனவெல்லாம் நாடகத்தின் காட்சிகள் என்பது புரியாதா?

நிதியமைச்சர் ஓ. பன்னீர்செல்வத்தின் ஆதரவாளர்கள், அ.தி.மு.க. மீனவர் பிரிவு துணைச் செயலாளர் டி. ரமேஷ், வேளச்சேரி எம்.எல்.ஏ. அசோக், தேனி மாவட்டம் எல்லப்பட்டி முருகன், காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர்கள் சின்னையா,

தண்டரை மனோகரன், விஜயபாஸ்கர், தாம்பரம் கரிகாலன், வரகூர் அருணாசலம் ஆகியோரது பதவிகள் பறிக்கப்பட்டுள்ளன. நத்தம் விசுவநாதனின் நெருங்கிய நண்பரான பழனி நகரச் செயலாளர், கே. மாரியப்பன் பதவியும் பறிக்கப்பட்டது. தொடர்ந்து தென் சென்னை தெற்கு மாவட்ட அ.தி.மு.க. செயலாளராக நியமிக்கப்பட்ட எம்.எம். பாபுவின் மாவட்டச் செயலாளர் பதவியும், ஜெயலலிதா பேரவைச் செயலாளர் பொறுப்பில் இருந்த டி.ஆர்.என். வரதராஜன், தேனி மாவட்ட மாணவர் அணிச் செயலாளர் பொறுப்பில் இருந்த ஆர்.ஆர். ஜெகதீஸ், ஆண்டிப்பட்டி ஒன்றியம் மாவட்டப் பிரதிநிதி பொறுப்பில் இருந்த எம். ராஜ்குமார் ஆகியோர் பதவிகளும் பறிக்கப்பட்டுள்ளன.

ஓ. பன்னீர்செல்வத்தின் நிழல் என்று வர்ணிக்கப்பட்டு வந்த சீனி கந்தசாமி, போயஸ் கார்டன் முன்னாள் ஊழியர் ரமேஷ்குமார், சிவகாசியைச் சேர்ந்த சிவக்குமார் ஆகிய 3 பேர் சென்னையில் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் விசாரணை நடத்தியதில், நீலாங்கரையில் சொகுசு பங்களாவை வாடகைக்கு எடுத்து, மாநிலம் முழுவதும் பன்னீர் செல்வம் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் உதவியுடன் ஏராளமானவர்களிடம் கோடிக்கணக்கில் பணம் வசூலித்துள்ளதாகத் தெரிவித்தனர். அவர்கள் மூவரும், நாங்கள் அப்பாவிகள், எங்களுக்குச் சம்பளம் மட்டுமே கொடுத்தனர், முழுப் பணத்தையும் மேலிடத்தில் கொடுத்துவிட்டோம், ஏராளமானவர்களிடம் நாங்கள் பணம் வாங்கிக் கொடுத்துள்ளோம் என்று கூறியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் ஓ. பன்னீர்செல்வம் அவர்களை ஓரங்கட்டி, சென்னையில் முடக்கி வைத்திருப்பதாகக் கூறுகிறார்கள். அவருடைய நெருங்கிய நண்பர் செல்லமுத்து, கடமலை மயிலை ஒன்றியத் தலைவர் முருக்கோடை ராமர் இல்லத் திருமணங்கள் எல்லாம் அவருடைய தலைமையிலேதான் நடைபெறுவதாக இருந்தாலுங்கூட, கலந்துகொள்ள வில்லையாம். அந்த அழைப்பிதழ்களில்கூட வழக்கமாக இடம்பெறும் ஜெயலலிதாவின் புகைப்படம் இடம்பெறவில்லையாம். திருமணத்தில் கலந்து கொள்ளப் பயணம் புறப்பட்ட பிறகு, ரத்தாகி விட்டதாம்.

"அமைச்சர் ஓ.பி.எஸ். எங்கே?" என்றே நாளேடு ஒன்று தலைப்பிட்டுச் செய்தி வெளியிட்டுள்ளது. அந்தச் செய்தியில், "தமிழக நிதியமைச்சர் பன்னீர் செல்வத்துக்கு ஆட்சி மேலிடத்தில்

ஏற்பட்ட சிக்கலைத் தொடர்ந்து, அவர் தொடர்பான வதந்திகள், நாலாபுறமும் றெக்கை கட்டிப் பறக்கின்றன. குறிப்பாக "வாட்ஸ்-அப்"யில் அவர் பற்றிய செய்திகள், நொடிக்கொரு முறை வந்து பன்னீர்செல்வம் ஆதரவாளர்களைக் கலக்கம் அடைய வைத்துள்ளது. இந்நிலையில் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் சென்னையில் உள்ள அமைச்சர் பங்களாவில் சிறை வைக்கப்பட்டுள்ளதாகவும்; சென்னைக் கிழக்குக் கடற்கரை சாலையில் உள்ள பங்களாவில் சிறை வைக்கப்பட்டுள்ளதாகவும் "வாட்ஸ்-அப்" மூலம் வதந்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. தேனி மாவட்டத்தில் அமைச்சர் பன்னீர்செல்வத்துக்குச் சொந்தமான தோப்பில் உள்ள பங்களா ஒன்றில் அவர் சிறை வைக்கப்பட்டுள்ளதாகவும் செய்தி பரப்பப்பட்டுள்ளது" என்று "தினமலர்" இன்று எழுதியுள்ளது.

நத்தம் விஸ்வநாதனின் ஆதரவாளர்களான திண்டுக்கல் தகவல் தொழில் நுட்பப் பிரிவுச் செயலாளர் தர்மலிங்கம், சாணார்பட்டி ஒன்றிய ஜெயலலிதா பேரவை இணைச் செயலாளர் மணி என்கிற சுப்பிரமணி, நத்தம் சட்டமன்றத் தொகுதி பொதுக் குழு உறுப்பினர் மேட்டுக்கடை செல்வராஜ் ஆகியோரது பதவிகள் பின்னர் பறிக்கப்பட்டன. இதில் மேட்டுக்கடை செல்வராஜ், நத்தம் விஸ்வநாதனின் மருமகனும், மாவட்டப் பொறுப்பாளருமான கண்ணனின் நெருங்கிய நண்பர். கண்ணனின் பினாமி என்று அழைக்கப்படுபவர்.

தூத்துக்குடியில் அமைச்சர் சண்முகநாதனின் உதவியாளர் கிருஷ்ணமூர்த்தியைத் தூத்துக்குடி போலீசார் கைது செய்திருக்கிறார்கள். தூத்துக்குடி மாவட்டத்தில் கட்சிப் பதவிகள் முதல் வேலைவாய்ப்பு, டிரான்ஸ்பர் ஆகிய பணிகளுக்குக் கிருஷ்ணமூர்த்தி பணம் வாங்கிக்கொண்டு செயல்படுவதாகத் தரப்பட்ட புகாரின் மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நெல்லை மாவட்டத்தில் ஓ.பி.எஸ்.சின் பினாமியாகச் செயல்பட்ட அரசு ஒப்பந்தக்காரர், ஆர்.எஸ். முருகன் மீது பாளை போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளார்கள். அவர் தலைமறைவாக உள்ளார்.

இந்தச் செய்திகள் பற்றி அரசின் விளக்கம் என்ன? இதே அமைச்சர்கள், மற்றும் அவர்களுடைய ஆதரவாளர்கள் மீதும் எதிர்க்கட்சிகள் கடந்த ஐந்தாண்டு காலமாகப் புகார்களையெல்லாம் அடுக்கடுக்காக எடுத்துக் கூறியபோது அதைப் பற்றி முதலமைச்சர்

காதில் போட்டுக்கொண்டாரா? தற்போது அந்தப் புகார்கள் எல்லாம் உண்மை என்று ஆகிவிட்ட நிலையில், இதற்காக இந்த அரசாங்கம் மக்களுக்குத் தருகின்ற விளக்கம் என்ன? தற்போது வெளிப்படையாக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் ஜெயலலிதா வழக்கமாக நடத்தும் கபட நாடகங்கள்தானா? நாட்டு மக்களை ஏமாற்றித் திசை திருப்புவதற்காகப் போடுகின்ற நயவஞ்சகக் கூத்துகளா?

ஆனால் ஜெயலலிதாவின் இந்த நாடகங்களைக் கண்டு ஏமாறுவதற்கு நாட்டு மக்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்ல! ஜெயலலிதா நடத்திய இது போன்ற பழைய நாடகத்தை ஏற்கனவே கண்டு பின்னணிக் கதைகளைப் புரிந்துகொண்டவர்கள். ஏன் தற்போது ஜெயலலிதா உடன் வாழ்கின்ற சசிகலா பற்றியே ஜெயலலிதா என்ன சொன்னார்? எப்படி நடந்து கொண்டார்? நாட்டிற்குத் தெரியாதா? சசிகலா வெளியேற்றம், மீண்டும் அடைக்கலம் என்பனவெல்லாம் நாடகத்தின் காட்சிகள் என்பது புரியாதா?

27-8-1996 அன்று ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கை ஒன்றில், "ஒரு குடும்பத்தோடு எனக்கிருந்த தொடர்பை மையப்படுத்திக் கடந்த சில மாதங்களாக எனக்கு எதிராக எழுந்த கழகத்தினர் சிலரின் விமர்சனம், பத்திரிகைகளின் கேலி, எதிர்மறையான அரசியல் விமர்சனங்கள் ஆகியன குறித்து, இன்று என் நிலையை வெளிப்படையாகத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். கழகச் செயற்குழுக்கூட்டத்தில் எனது உரையில் தோல்விக்குக் காரணமாக நான் குறிப்பிட்டிருந்த சில காரணங்களுள் முக்கியமானதொரு காரணமாக ஒட்டுமொத்தமாக எல்லோராலும் கூறப்படும் காரணம், எனக்கும் சசிகலா மற்றும் அவரது குடும்பத்தினருக்குமிடையே இருந்த தொடர்பேயாகும். சசிகலா மற்றும் அவரது குடும்பத்தினர் ஒரு அதிகார மையமாகவும், சட்டதிட்டங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு அதிகார வட்டமாகவும் செயல்பட்டு வந்துள்ளார்கள் என்ற எண்ணம் மக்கள் மனதில் பதிந்துள்ளது தெளிவாகத் தெரிகிறது. சசிகலா மற்றும் அவரது குடும்பத்தினர் பற்றிப் பத்திரிகைகள் ஏராளமாக எழுதியுள்ளன. பொது மேடைகளிலும் தெருமுனைகளிலும் இக்குடும்பத்தைப் பற்றிப் பல விஷயங்கள் பேசப்பட்டுள்ளன. இவற்றில் சில உண்மைச் சம்பவங்களும் செய்திகளும் உண்டு. சசிகலா என்

வீட்டிலேயே தங்கியிருந்ததால் அவரது உறவினர்கள் சிலரது விமர்சனத்திற்குரிய நடவடிக்கைகள் எனது அனுமதியோடும் ஆதரவோடும்தான் நடைபெற்றன என்ற தவறான அபிப்பிராயத்தை மக்கள் மனதில் ஆழமாகப் பதியச் செய்தது. எனவே கட்சி பெரிதா? அல்லது சசிகலாவுடனான தொடர்பு பெரிதா? என்று நான் தீர்மானித்துக்கொள்ள வேண்டும் என கழக உடன்பிறப்புகள் வற்புறுத்துவதால் அனைவரது விருப்பத்திற்கேற்ப சசிகலாவோடும் அவரது குடும்பத்தினரோடும் எனக்கு இருந்த தொடர்புகள் அனைத்தையும் இந்த நாள் முதல் விலக்கிக் கொள்கிறேன் என்பதை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நாள் முதல் எனக்கு வளர்ப்பு மகன் என்று எவரும் கிடையாது என்பதைத் திட்டவட்டமாக அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். கழக உடன்பிறப்புகளின் ஏகோபித்த வேண்டு கோளுக்கிணங்க சசிகலாவிடமிருந்தும், சுதாகரனிடமிருந்தும் என்னை முழுமையாக விலக்கிக்கொள்ள வேண்டிய கட்டாயமும் அவசியமும் ஏற்பட்டுள்ளது" என்று ஏதோ கட்சியையும், தனது வீட்டையும் சுத்திகரிக்க முனைந்து முடிவெடுத்து விட்டவரைப் போல ஜெயலலிதா வேடம் போட்டாரே! நாட்டு மக்கள் மறந்தா விட்டனர்?

ஓர் அரசில் அமைச்சரவை என்பது கூட்டுப் பொறுப்பு. அமைச்சர்கள் தவறு செய்தால், அந்தத் தவறுகளுக்கு முதலமைச்சர்தான் பொறுப்பேற்க வேண்டும். அ.தி.மு.க. ஆட்சியில் இந்த ஐந்தாண்டு காலத்தில் எத்தனை முறை அமைச்சர்கள் மாற்றப்பட்டார்கள்? அமைச்சர்கள் மாற்றப்பட்டார்கள் என்றால், அமைச்சர்கள் தவறுகளும் முறைகேடுகளும் செய்த காரணத்தால்தான் மாற்றப்பட்டார்கள். அப்படி மாற்றப்பட்ட அமைச்சர்கள் சிலரே பிறகு மீண்டும் அமைச்சர்களாகச் சேர்த்துக்கொள்ளப் பட்டார்கள். அப்படியென்றால் அவர்கள் ஏற்கனவே செய்த தவறு என்ன ஆயிற்று?

இவ்வாறு நாடகத்தில் வரும் தனி மொழியைப் (Dramatic Monologue) போல எழுதப்பட்ட கடிதத்திற்கு எத்தனை நாட்கள் உயிர் இருந்தது? அந்தக் கடிதத்தில் எழுதியவற்றில் எத்தனை நாட்கள் ஜெயலலிதா உறுதியோடு இருந்தார்? "மீண்டும் பழைய

குருடி, கதவைத் திறடி" என்பதைப் போல மறுபடியும் சசிகலா குடும்பத்தினர் ஜெயலலிதாவோடு இணைந்து ஒரே வீட்டில் வாழத் தொடங்கினார்களே; அந்த ஓரங்க நாடகமாவது நீடித்ததா? சில மாதங்களுக்குப் பிறகு, நாடகத்தின் திடுக்கிடும் திருப்பமாகச் சசிகலாவும், அவரது குடும்பத்தினரும் கட்சியிலிருந்து நீக்கப்படுவதாக ஓர் அறிக்கை. அவரது கணவரே கைது. மற்றும் நெருங்கிய உறவினர்கள் கைது. தொடர்ச்சியாக ஏடுகளிலே செய்தி. பின்னர் சசிகலாவை மீண்டும் சேர்த்துக் கொண்டார். அவரது கணவர் சிறையிலிருந்து வெளியே வந்து, "நான் பொய்ப் புகாரில் கைது செய்யப்பட்டேன். புகார் கொடுத்தவர்களே தற்போது திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். என்னை "என்கவுண்டர்" செய்ய காவல் துறை முயற்சி செய்தது" என்றெல்லாம் கோபம் கொப்பளிக்கச் செய்தியாளர்களிடம் சொன்னார். பின்னர் அவரது கோபமும் குறைந்து, கரைந்து அந்த வழக்கு அப்படியே நீர்த்துப் போய்விட்டது.

இவையெல்லாம் ஜெயலலிதாவுக்கு பழகிப்போன சம்பவங்கள்; ஏனென்றால் அனைத்தும் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட காட்சிகள்! அவற்றை நினைவூட்டும் நிகழ்வுகள்தான் தற்போது மீண்டும் தேர்தலையொட்டி காட்சிப்படுத்தப்படுகின்றனவா?

இன்னும் நடக்கப்போகின்ற வேடிக்கைகள், வினோதங்கள், ஏமாற்று நாடகங்கள் ஏராளம், ஏராளம்! வரப்போகின்ற காட்சிகளையும் - அவற்றின் உட்பொருளையும் சேர்த்துப் பொதுமக்களிடம் கொண்டு போய்த் தெளிவுபடுத்த வேண்டியது உன்னுடைய கடமை! அந்தக் கடமையைக் கச்சிதமாய் ஆற்றிடுவாய் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்பவே உண்டு.

ஓர் அரசில் அமைச்சரவை என்பது கூட்டுப் பொறுப்பு. அமைச்சர்கள் தவறு செய்தால், அந்தத் தவறுகளுக்கு முதலமைச்சர்தான் பொறுப்பேற்க வேண்டும். அ.தி.மு.க. ஆட்சியில் இந்த ஐந்தாண்டு காலத்தில் எத்தனை முறை அமைச்சர்கள் மாற்றப்பட்டார்கள்? அமைச்சர்கள் மாற்றப்பட்டார்கள் என்றால், அமைச்சர்கள் தவறுகளும் முறைகேடுகளும் செய்த காரணத்தால்தான் மாற்றப்பட்டார்கள். அப்படி மாற்றப்பட்ட

அமைச்சர்கள் சிலரே பிறகு மீண்டும் அமைச்சர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அப்படியென்றால் அவர்கள் ஏற்கனவே செய்த தவறு என்ன ஆயிற்று? முறைகேடுகள் செய்த அமைச்சர்களை நீக்குவதும், பின்னர் அந்த முறைகேடுகள் மக்களுக்கு மறந்து போனதும் மீண்டும் சேர்த்துக்கொள்வதும் தொடர்ந்து நடந்ததுதானே? பொதுமக்களின் நினைவாற்றல் குறைவானது (Public Memory is short) என்பதை எப்படியெல்லாம் பயன்படுத்திக் கொள்கிறார்கள்? ஓர் அமைச்சரவையில் தவறு செய்த அமைச்சர்களே இத்தனை பேர் என்றால், அந்தக் கட்சியின் செயல்பாடு எத்தகையது? அந்தக் கட்சியை ஆட்சிக்கு வரவிடலாமா? ஓர் ஆட்சியிலே உள்ள அமைச்சர்களைப் பற்றி எதிர்க்கட்சியினர் குற்றம்சாட்டுவது என்பது ஆச்சரியமல்ல. ஒரு அமைச்சரவையில் உள்ள மூத்த அமைச்சர்களைப் பற்றி, ஆட்சியினரே அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை வைக்கின்ற நேரத்தில், அந்த அரசைப் பற்றி தனியே விளக்கம்வேறு கூறிட வேண்டுமா? தொடர்ச்சியாக நடக்கும் நாடகங்களைப் பற்றியும் இந்த வேடிக்கை வினோதங்களைப் பற்றியெல்லாம் உடன்பிறப்பே, பொதுமக்களிடம் விளக்கம் அளித்து நினைவூட்டிட வேண்டியது உன்னுடைய கடமை அல்லவா? ஏற்கனவே இது பற்றியெல்லாம் நாட்டு மக்களிடம், அவர்கள் புரிந்துகொள்ளும்படி, புரிந்து கொண்டதை நினைவிலே வைத்துக்கொள்ளும்படி நீ விளக்கிக் கொண்டிருப்பாய் என்பதை நான் நன்கறிவேன். இருந்தாலும் உன்னோடு தகவலைப் பகிர்ந்துகொள்ள வேண்டியது என்னுடைய பணி அல்லவா? அந்த அளவில் தான் இதையெல்லாம் உன் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இன்னும் நடக்கப்போகின்ற வேடிக்கைகள், வினோதங்கள், ஏமாற்று நாடகங்கள் ஏராளம், ஏராளம்! வரப்போகின்ற காட்சிகளையும் - அவற்றின் உட்பொருளையும் சேர்த்துப் பொதுமக்களிடம் கொண்டு போய்த் தெளிவுபடுத்த வேண்டியது உன்னுடைய கடமை! அந்தக் கடமையைக் கச்சிதமாய் ஆற்றிடுவாய் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்பவே உண்டு.

அன்புள்ள,

மு.க.

19.3.2016

3999. விஷ்ணுப்ரியா வழக்கை சி.பி.ஐ.தான் விசாரிக்க வேண்டும்!

உடன்பிறப்பே,

நேற்று (18-3-2016) காலையில், கழகப் பொருளாளர் தம்பி மு.க. ஸ்டாலின், ஆறு மாதங்களுக்குமுன் மர்மமான முறையில் மறைந்த, காவல் துறை அதிகாரி, திருச்செங்கோடு மாவட்ட உதவிக் கண்காணிப்பாளர், விஷ்ணுப்ரியாவின் அருமைத் தந்தை திரு. எம். ரவி அவர்களையும், அவருடைய நெருங்கிய உறவினர்கள் சிலரையும், என்னைச் சந்திப்பதற்காக அழைத்து வந்தார். நான் அவர்களைப் பார்த்ததும், அவர்கள் அனைவரும் ஒரே குரலில், "விஷ்ணுப்ரியாவின் மறைவு தற்கொலையால் ஏற்பட்டது அல்ல, அவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அதுபற்றிய உண்மை உலகத்திற்குத் தெரியவேண்டும். அதற்காக தாங்கள் இந்தச் சம்பவம் பற்றி சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று வலியுறுத்தியும், தமிழக அரசு அதற்குச் செவிசாய்க்கவில்லை" என்றெல்லாம் அடுக்கடுக்காக இந்த அரசின் மீது குற்றச்சாட்டுகளைக் கூறினார்கள். அவர்களுக்கு நான் ஆறுதல் கூறி அனுப்பினேன்.

விஷ்ணுப்ரியா தலித் சமூகத்தைச் சேர்ந்தவர். குறிப்பாக அருந்ததியினருக்கான உள் இட ஒதுக்கீட்டில் பணி வாய்ப்புப் பெற்ற முதல் காவல்துறை அதிகாரி.

காவல் துறையில் பணியாற்றுபவர்களில் தற்கொலை செய்து கொண்டவர்கள் என்று எடுத்துக் கொண்டால், 2012ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 58 தற்கொலைகள் (இந்தியாவிலேயே முதல் இடம்); 2013ஆம் ஆண்டில் 31 பேர் காவல் துறையில் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று தேசிய குற்றப் பதிவு ஆவணம் கூறுகிறது. அதாவது, இந்தியாவிலேயே மராட்டியத்திற்கு அடுத்து தமிழகத்திலேதான் அதிக தற்கொலைகள் நடந்துள்ளன. கடந்த ஐந்தாண்டுகளில் தமிழகத்திலே காவல் துறையில் நடந்த முக்கிய

தற்கொலைகள் என்று எடுத்துக்கொண்டால், மைலாப்பூர் சட்டம் ஒழுங்கு இன்ஸ்பெக்டர் ராஜசேகர், மதுரையில் தலைமைக் காவலர் நாகையசாமி, மதுரையில் மகளிர் துணை ஆய்வாளர்கள் எஸ்தர், ரெங்கநாயகி, ஆவடியில் முத்தையா என்ற துணை ஆய்வாளர், பரங்கிமலையில் ரவிச்சந்திரன் என்ற ஆய்வாளர், நாகலாபுரத்தில் கருப்பாயி போன்றவர்களைக் கூறலாம்.

விஷ்ணுப்ரியாவின் மறைவு குறித்து "ஜூனியர் விகடனில்" அப்போது, "ஒரு டி.எஸ்.பி.யையே இந்தப் பாடுபடுத்துவார்கள் என்றால், சாதாரண பொதுமக்களை இந்தப் போலீஸ் அதிகாரிகள் என்னவெல்லாம் செய்யமாட்டார்கள் என்பதற்கு உதாரணம் இந்தச் சம்பவம். தான் சொன்னதைச் செய்ய வேண்டும் என்றும், தனக்கு இடைஞ்சலாக இருக்கும் காரியத்தை எதன் பொருட்டும் செய்யக்கூடாது என்றும், கட்டுப்பாடு விதிக்கப்பட்டு,

ஓர் அடிமையைப் போல் நடத்தப்பட்டுள்ளார் விஷ்ணுப்ரியா. பெண் என்பதற்காக கொச்சைப்படுத்தப்பட்டு நடத்தப்பட்டுள்ளார். அதுவும் தலித் என்பதால் கூடுதலாக அவமானப்படுத்தப்பட்டும் உள்ளார். படித்து வந்து விட்டால் பெண்ணுக்கு அவமானம் வராது என்றும், அதிகாரம் பொருந்திய பதவிக்குப் போய்விட்டால் தலித்களுக்கு மரியாதை கிடைத்துவிடும் என்றும் யார் சொன்னது? சமூகத்தின் கூரிய நகம், ஒருவன் எங்கிருந்தாலும் பிறாண்டிக் கிழிக்கும் என்பதற்கு உதாரணம் இந்த மரணம்" என்று "ஜூனியர் விகடன்" எழுதியிருப்பது ஆழமாக எண்ணிப் பார்க்கத்தக்கது.

டி.எஸ்.பி., விஷ்ணுப்ரியா இறந்தவுடன், தி.மு. கழகம் உட்பட, தமிழகத்திலே உள்ள அத்தனை எதிர்க்கட்சிகளும், அதுபற்றி சி.பி.ஐ. விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொண்டன. ஆனால் அவசர அவசரமாக முதலமைச்சர் ஜெயலலிதா சி.பி.ஐ. விசாரணைக்கு மறுத்து, தமிழக அரசின் கட்டுப்பாட்டிலே உள்ள சி.பி., சி.ஐ.டி., விசாரணையே போதும் என்று அறிவித்துவிட்டார். தற்போது அடுக்கடுக்காகச் செய்திகள் வருகின்றன. முதலில் விஷ்ணுப்ரியா எழுதிய கடிதத்தில் ஒரு சில பக்கங்களைக் காணவில்லை என்றார்கள்; பிறகு அந்தக் கடிதத்தில் இருந்த கையெழுத்தே அவருடையது அல்ல என்றார்கள்; கடிதமே அவரால் எழுதப்பட்டது அல்ல என்றார்கள்; அவருடைய முக்கியமான கேமரா காணப்படவில்லை என்றார்கள்; அவர் தூக்குமாட்டிக் கொண்டதாகக் கூறப்பட்ட இடம் பற்றியும்,

தூக்குமாட்டிக் கொண்ட நிலையில், அவருடைய கால்கள் கீழே தரையிலே இருந்தன என்றெல்லாம் சந்தேகத்தை ஏற்படுத்தும் செய்திகள் வருகின்றன.

மறைந்த விஷ்ணுப்ரியாவின் தற்கொலையை அடுத்து, அவரது நெருங்கிய தோழியும், இராமநாதபுரம் மாவட்டத்தில் கீழக்கரை டி.எஸ்.பி.யாகப் பணியாற்றி வருபவருமான மகேஸ்வரி, சேலத்தில் செய்தியாளர்களிடம் கூறும்போது, "வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.48 மணியளவில் என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விஷ்ணுப்ரியா பேசிக்கொண்டிருந்தார். அப்போது, நாமக்கல் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மற்றொரு இணைப்பில் அழைப்பதாகக் கூறிவிட்டு எனது இணைப்பைத் துண்டித்தார். அதன் பிறகு விஷ்ணுப்ரியாவின் செல்லிடப்பேசி அணைத்து வைக்கப்பட்டது. அதன் பிறகே அவர் தற்கொலை செய்துகொண்டதாகத் தகவல் தெரியவந்தது. கோகுல்ராஜ் கொலை வழக்கு முறையாக விசாரணை செய்யப்படவில்லை. இந்த வழக்கில் தொடர்பில்லாத சிலரை உயர் அதிகாரிகளின் நெருக்கடியால் கைது செய்து சிறையில் அடைத்ததுடன், அவர்கள் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்றும் நிர்ப்பந்தம் செய்யப்பட்டதாகவும் என்னிடம் விஷ்ணுப்ரியா தெரிவித்தார். விஷ்ணுப்ரியா நேர்மையான அதிகாரி. உயர் அதிகாரிகளின் நெருக்கடி, ஒருமையில் பேசியது, போலீஸ் வேலைக்குத் தகுதி இல்லாதவர் என அவமரியாதையாகத் திட்டியது போன்ற காரணங்களால் அவர் தற்கொலைக்குத் தூண்டப்பட்டுள்ளார். இந்த வழக்கு விசாரணையை சி.பி.ஐ.க்கு மாற்ற வேண்டும். உயர் அதிகாரிகளைப் பணியிடை நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றெல்லாம் டி.எஸ்.பி., மகேஸ்வரி அப்போதே விரிவாகத் தெரிவித்திருக்கிறார்.

"இஞ்சினீயர் கோகுல்ராஜ் கொலை வழக்கு குறித்து ஆரம்பத்தில் இருந்தே, முக்கியக் குற்றவாளிகள் தப்புவதற்கு உயர் அதிகாரிகள் உடந்தையாக இருப்பதாகப் புகார் எழுந்தது. போலியான குற்றவாளிகளை ஆஜர்படுத்தினால்தான், உண்மையான குற்றவாளிகள் தப்பமுடியும். இதனால் சென்னையில் இருந்து ஏ.டி.ஜி.பி. அந்தஸ்தில் உள்ள உயர் அதிகாரி ஒருவர் இந்த வழக்கு குறித்து எஸ்.பி., மற்றும் டி.எஸ்.பி.யிடம் தொடர்ந்து, நாங்கள் சொல்வது போலச் செய்ய வேண்டும் என்று

வற்புறுத்தி வந்துள்ளதாகக் கூறப்படுகிறது. ஏ.டி.ஜி.பி.யை வேறு யாராவது வற்புறுத்தினார்களா என்பது தெரியவில்லை. ஆனால் இதற்குப் பின்னால் பெரிய சதிவலை இருக்கலாம். குறிப்பாக அதிகாரத்தில் உள்ள அரசியல் வாதிகளுக்குத் தொடர்பு இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. இதனால் இந்த வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்ற வேண்டுமென்று போலீஸ் அதிகாரிகள் வட்டாரத்திலும் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது" என்றும் ஏடுகளில் அப்போது எழுதப்பட்டிருந்தது.

"விஷ்ணுப்ரியாவின் மேல் அதிகாரியான நாமக்கல் காவல் துறை கண்காணிப்பாளர் எஸ்.ஆர். செந்தில் குமார் அவர்களைப் பற்றிச் சில குற்றச்சாட்டுகளைத் தெரிவித்ததோடு, இருந்தாலும் அந்த அதிகாரி அங்கிருந்து மாற்றப்படவில்லை என்றார். அவருடைய மகள் விஷ்ணுப்ரியா, கோகுல்ராஜ் கொலை வழக்கினைத் தவிர்த்து மேலும் சில வழக்குகளைக் கையாண்டதாகவும், அந்த வழக்குகள் விசாரணையின்போதுதான் பல அச்சுறுத்தல்களுக்கு ஆட்பட்டதாகவும், தன் மனைவியிடம் விஷ்ணுப்ரியா கூறியதை விசாரணை அதிகாரிகளிடம் தன் மனைவி தெரிவித்தபோதிலும், அதுபற்றி எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை" என்றும் வருத்தப்பட்டார்.

முன்னாள் டி.ஜி.பி., திலகவதி கூறுகையில், "விஷ்ணுப்ரியாவின் மரணம் மர்மம் நிறைந்தது. விசாரணையின் முடிவில்தான் உண்மை வெளிவரும். டி.எஸ்.பி. விஷ்ணுப்ரியா தற்கொலை விவகாரத்தில் சி.பி., சி.ஐ.டி. விசாரணை அமைக்கப்பட்டுள்ளது. அது நேர்மையாக இருக்காது. காரணம், அது தமிழக அரசின் கீழுள்ள போலீஸ். ஆகவே சி.பி.ஐ. விசாரணை அமைத்தால் மட்டுமே உண்மை வெளிவரும்" என்றெல்லாம் கருத்துத் தெரிவித்திருந்தார். டி.ஜி.பி.யாக இருந்தவரே, மாநில சி.பி.,சி.ஐ.டி. விசாரணையில் நேர்மை இருக்காது, உண்மை வெளிவராது என்று தெரிவித்திருப்பதை, நடுநிலையாளர்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

நேற்றையதினம், விஷ்ணுப்ரியாவின் தந்தையும், அவரது உறவினர்களும் சென்னையில் என்னை வீட்டிலே சந்தித்து,

என்னிடம் நேரில் கூறிய சில சம்பவங்கள் முக்கியமானவை. என்னிடம், தன் மகள் தற்கொலை செய்துகொண்டு இறந்ததற்குக் குடும்பப்பிரச்சினை காரணம் அல்ல என்று கூறியதோடு, "இதுபற்றி சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடும்வரை விஷ்ணுப்ரியாவின் உடலை வாங்கமாட்டோம்; எனது மகள் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்குக் கோழை கிடையாது. அவரது மரணத்துக்கு உயர் அதிகாரிகளே காரணம். கோகுல்ராஜின் கொலை வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகளின் மிரட்டலும், அது தொடர்பான உயர் அதிகாரிகளின் நெருக்கடியும் இருப்பதாக விஷ்ணுப்ரியா கூறிவந்தார். இந்த வழக்கைத் திசைதிருப்பவே குடும்பப் பிரச்சினை எனப் போலீசார் கூறி வருகின்றனர். அவர் எழுதிய கடிதத்தில் 4 பக்கத்தை மட்டுமே போலீசார் காட்டினர். மீதியுள்ள பக்கங்களை மறைத்துவிட்டனர். விஷ்ணுப்ரியாவின் மடிக்கணினி, இரண்டு செல்லிடப் பேசிகள், கேமரா ஆகியவற்றைப் போலீசார் கைப்பற்றி உள்ளனர். செல்லிடப் பேசியில் உள்ள ஆதாரங்களைப் போலீசார் அழிக்க முயற்சிக்க வாய்ப்புள்ளது. இந்த வழக்கில் போலீசார் நடத்தும் விசாரண மீது நம்பிக்கை கிடையாது. எனவே இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்ற வேண்டும்" என்றெல்லாம் அப்போதே தெரிவித்திருந்ததையெல்லாம் எனக்கு நினைவூட்டினார்.

விஷ்ணுப்ரியாவின் தந்தை ரவி, "விஷ்ணுப்ரியாவின் மேல் அதிகாரியான நாமக்கல் காவல்துறை கண்காணிப்பாளர் எஸ்.ஆர். செந்தில்குமார் அவர்களைப் பற்றிச் சில குற்றச்சாட்டுகளைத் தெரிவித்ததோடு, இருந்தாலும் அந்த அதிகாரி அங்கிருந்து மாற்றப்படவில்லை என்றார். அவருடைய மகள் விஷ்ணுப்ரியா, கோகுல்ராஜ் கொலை வழக்கினைத் தவிர்த்து மேலும் சில வழக்குகளைக் கையாண்டதாகவும், அந்த வழக்குகள் விசாரணையின்போதுதான் பல அச்சுறுத்தல்களுக்கு ஆட்பட்டதாகவும், தன் மனைவியிடம் விஷ்ணுப்ரியா கூறியதை விசாரணை அதிகாரிகளிடம் தன் மனைவி தெரிவித்த போதிலும், அதுபற்றி எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை" என்றும் வருத்தப்பட்டார்.

திருச்செங்கோடு டி.எஸ்.பி. என்ற முறையில், திருச்செங்கோடு பகுதியில் ஒரு நம்பர் லாட்டரிச் சீட்டினை ஒழித்ததற்குக் காரணமாக விளங்கியவர் விஷ்ணுப்ரியா. உண்மையில் லாட்டரிக்

கடைகளைச் சோதனையிட்டு, பலரைக் கைது செய்து ரிமாண்டுக்கு அனுப்பியவர் இவர் என்ற பெருமைக்குரியவர். மேலும் நாமக்கல் எஸ்.பி. செந்தில்குமாரின் விருப்பத்திற்கு எதிராக "டாஸ்மாக்" கடைகளில் சோதனை நடத்தியுள்ளார். உண்மையைக் கூற வேண்டுமானால், இந்தக் கடைகளில் சோதனையிட்டதற்காகக் காலை முதல் மாலை வரை அலுவலகத்தில் காத்திருக்க வைத்ததோடு, சட்டப்படி நடவடிக்கை எடுத்ததற்காக விஷ்ணு ப்ரியாவை எஸ்.பி., கடுமையாகக் கோபித்துக் கொண்டிருக்கிறார். இருவருக்குமிடையே இதனால் மோதல் ஏற்பட்டது.

முக்கியமான கொலை வழக்கான மில் உரிமையாளர் ஜெகன்னாதன் வழக்கில் விஷ்ணுப்ரியாவும் ஒரு மேற்பார்வை அதிகாரி. அந்த வழக்கில் விஷ்ணுப்ரியா வைத்திருந்த வீடியோ கேமராவில் சிலவற்றைப் பதிவுசெய்து வைத்திருந்தார். இந்த வீடியோ கேமராவையும், வேறு சில லேப்டாப், இரண்டு அலைபேசிகள் மற்றும் சில முக்கியக் கருவிகள், விஷ்ணுப்ரியா மறைந்த அதே 18ஆம் தேதியன்று மாலையிலேயே எஸ்.பி., செந்தில்குமாரால் எடுத்துச் செல்லப்பட்டு விட்டன. விஷ்ணுப்ரியா தன்னிடம் வைத்திருந்த கேமராவிலும், லேப்டாப்பிலும், தான் விசாரணை நடத்திய வழக்குகள் பற்றிய பல முக்கியமான தகவல்களையெல்லாம் பதிவுசெய்து வைத்திருந்தார். மேலும் தன் மகள் பத்திரப்படுத்தி வைத்திருந்த பத்து பென்-டிரைவ்களையும் காணவில்லை. காணாமல் போன இந்தப் பொருள்கள் பற்றி எந்தவிதமான விசாரணையும் நடத்தப்படவே இல்லை என்ற விபரங்களை என்னிடம் விஷ்ணுப்ரியாவின் தந்தை வருத்தத்தோடு தெரிவித்தார்.

விஷ்ணுப்ரியாவின் செல்போன் எடுத்துச் செல்லப்பட்ட அன்று நள்ளிரவில் அது யாரோ சிலரால் கையாளப்பட்டது, விஷ்ணுப்ரியாவின் தோழியான கீழக்கரை டி.எஸ்.பி. மகேஸ்வரியின் செல்போன் வாயிலாகக் கண்டறியப்பட்டது என்றும், நள்ளிரவில் தன் மகளின் செல்போனை ஆய்வு செய்தது யார் என்றும் கேள்வி எழுப்பினார். மேலும் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி, தன் மகளுக்கு அனுப்பிய வாட்ஸ்-அப் செய்தியின் மூலமாகவும் தன் மகளுடைய செல்போன் யாராலோ சோதிக்கப்பட்டது நிச்சயமாகிறது என்றும், அது பற்றியெல்லாம் தீவிர விசாரணை நடத்தப்பட

வேண்டுமென்றும் விஷ்ணு ப்ரியாவின் தந்தை கேட்டுக் கொண்டார்.

ஜெயலலிதா ஆட்சியிலே அதிகாரிகள் தற்கொலைகளும், அதிலே உண்மைச் சம்பவங்களை மனசாட்சி சிறிதுமின்றி மறைத்துத் திசைதிருப்புகின்ற முயற்சிகளும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. அனைவரும் இந்தச் சம்பவத்தில் சி.பி.ஐ. விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்திய நேரத்தில், அ.தி.மு.க. அரசு அவசர அவசரமாக சி.பி., சி.ஐ.டி., விசாரணை என்று அறிவித்திருப்பதிலிருந்தே, இந்த வழக்கில் உண்மைச் சம்பவங்களை மறைப்பதற்கான முயற்சி தொடங்கி நடைபெறுகிறதோ என்றுதான் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

விஷ்ணுப்ரியா இறந்தவுடன், நாமக்கல் அடிஷனல் எஸ்.பி., சேவியர் பெஸ்கி உடனடியாகச் சென்னைக்கு மாற்றப்பட்டார் என்றும், இந்த வழக்கு விசாரணைக்கு அவர் அங்கேயிருந்தால் ஆபத்து என்று கருதியவர்கள்தான், அவரை அங்கிருந்து உடனடியாக மாற்றிவிட்டார்கள் என்றும், அவரை எதற்காக அவ்வளவு அவசரமாக மாற்றினார்கள் என்றும் திரு. ரவி கேள்வி எழுப்பினார்.

தன் மகள் விஷ்ணுப்ரியா தூக்கிட்டுக் கொண்டதாகக் கூறப்படும் அறையின் உயரம் 12 அடிதான் இருக்குமென்றும், அவர் தூக்கிட்டுக் கொண்டதாகக் கூறப்படும் வளைவு, சுவருக்குள் இருக்கிறது என்றும், அதற்குள் கயிறையோ, புடவையோ நுழைக்க முடியாதென்றும், எனவே தனது மகளின் இறப்பு தற்கொலையா அல்லது கொலையா என்பது பற்றி மாநில அரசின் கட்டுப்பாட்டில் வராத சுதந்திரமான, விருப்பு வெறுப்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டியது மிகவும் அவசியம் என்றும், அப்போதுதான் தனக்கு தன் மகள் இறந்தது பற்றி உண்மை தெரிய வரும் என்றும் திரு. ரவி வலியுறுத்திக் கூறினார்.

அவர் என்னிடம் அளித்த மனுவிலேகூட, "தமிழக அரசு, எனது மகள் மரணத்தைத் தற்கொலையாகக் காட்டிடவே முயன்றது. தமிழக அரசு மற்றும் காவல் துறை உயர் அதிகாரிகளின் கூட்டு

முயற்சியால் தடயங்கள் அழிக்கப்பட்டதுடன், உண்மை மூடி மறைக்கப்பட்டுள்ளது. காவல் துறை உயர் அதிகாரிகளே இந்த மரணத்தில் ஈடுபட்டிருக்கும்பொழுது, நீதிக்குப் புறம்பாக நடக்கும் அதிகாரிகளைப் பாதுகாக்கும் அரசிடமிருந்து எங்களுக்கு எவ்வாறு நியாயம் கிடைக்கும்? இது சம்மந்தமாக நான் சி.பி.ஐ. விசாரணை கோரி தமிழக அரசிடம் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டும், அதன் பிறகு இது சம்மந்தமாக முறையாக மனுக்கொடுத்தும், இன்றுவரை தமிழக அரசிடமிருந்து எந்தவித நியாயமும் எங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கவில்லை" என்றெல்லாம் வேதனையைக் கொட்டியிருக்கிறார்கள்.

விஷ்ணுப்ரியாவின் தந்தையும், ஏனையோரும் இந்த வழக்கு குறித்து தெரிவித்துள்ள கருத்துகள் அலட்சியப்படுத்தப்படக் கூடியவையல்ல. ஜெயலலிதா ஆட்சியிலே அதிகாரிகள் தற்கொலைகளும், அதிலே உண்மைச் சம்பவங்களை மனசாட்சி சிறிதுமின்றி மறைத்துத் திசைதிருப்புகின்ற முயற்சிகளும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. அனைவரும் இந்தச் சம்பவத்தில் சி.பி.ஐ. விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்திய நேரத்தில், அ.தி.மு.க. அரசு அவசர அவசரமாக சி.பி., சி.ஐ.டி., விசாரணை என்று அறிவித்திருப்பதிலிருந்தே, இந்த வழக்கில் உண்மைச் சம்பவங்களை மறைப்பதற்கான முயற்சி தொடங்கி நடைபெறுகிறதோ என்றுதான் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

எனவே விஷ்ணுப்ரியாவின் தற்கொலையில் நியாயம் கிடைத்து, உண்மை விவரங்கள் நாட்டுக்குத் தெரிய, பல்வேறு தரப்பிலும் கேட்டுக்கொண்டுள்ளபடி, இந்த வழக்கினை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்ற வேண்டும். அப்படிச் செய்யத் தாமதித்தாலும், தவறினாலும், மக்கள் மத்தியில் விஷ்ணுப்ரியாவின் மரணம் குறித்து ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் பல்வேறு சந்தேகங்கள் உறுதிப்பட்டு விடுமேயன்றி, சிறிதும் மாறாது!

அன்புள்ள,

மு.க.

20-3-2016

4000. சூதும், வாதும் வேதனையில் முடியும்!

உடன்பிறப்பே,

கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் ஜெயலலிதா, மக்களுக்குச் சொன்ன உறுதிமொழிகளை நிறைவேற்றி நாட்டின் நலனைப் பேணிப் பாதுகாப்பதைவிட, தன்னுடைய அமைச்சர்கள் தொடர்ந்து முறைகேடுகள் - ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை அனைவருக்கும் தெரிந்த காரணங்களுக்காக உள்நோக்கத்தோடு அனுமதிப்பதும், அவர்களுடைய நடவடிக்கைகள் எல்லை மீறிப்போய் பொதுமக்கள் முகம் சுளித்ததும், "எனக்குத் தெரியாமல் என்னென்னவோ நடந்து விட்டது" என்று கபட நாடகமாடி, அவர்களை அமைச்சரவையிலிருந்து நீக்குவதும், "அம்மாதான் நடவடிக்கை எடுத்து விட்டாரே" என்ற எண்ணத்தில் மக்கள் அனைத்தையும் மறந்ததும், மீண்டும் அவர்களை அமைச்சரவையிலே சேர்த்துக்கொள்வதும் என்ற சங்கிலித் தொடர் போன்ற சாகசத்திலேயே கவனம் செலுத்தித் தமிழகத்தைச் சுயநல வேட்டைக் காடாக மாற்றிவிட்டார். இப்போது மக்களின் கண்களில் மண்ணைத் தூவி, வேறொரு தந்திரத்தைக் கையாண்டு வருகிறார். அவருக்குத் தெரிந்தும் தெரியாமலும் ஒருசில அமைச்சர்கள் வாங்கிச் சேர்த்த ஏராளமான பணத்தையும், சொத்துக்களையும் காவல் துறையைக் கொண்டு மிரட்டிப் பணிய வைத்து ஒப்படைப்பு வேட்டை நடத்திவருவதை, பெரும்பாலான ஏடுகள் மறைத்தாலும் ஒருசில ஏடுகள் மனசாட்சிக்குப் பயந்து விபரங்களை வெளியிடத்தான் செய்கின்றன.

அ.தி.மு.க. அரசின் ஐந்தாண்டு கால ஆட்சி முடியவிருக்கிற நேரத்தில், ஆட்சியின் கோணல் நிர்வாகத்தைப் பற்றி, "தி இந்து" தமிழ் இதழில், திரு. சமஸ் எழுதியிருக்கும் செய்திக் கட்டுரையின் சில பகுதிகளை மட்டும் கூற வேண்டுமேயானால்,

"இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அதிசயமாக, 5 ஆண்டுகளுக்குள் தன் அமைச்சரவையை 24 முறை

மாற்றியவர் ஜெயலலிதா. 2011இல் ஜெயலலிதாவுடன் சேர்ந்து பதவியேற்ற அமைச்சர்களில் மூன்றில் ஒரு பங்கினர் மட்டுமே இப்போது பதவியில் நீடிக்கின்றனர்.

மிகப் பெரிய பொருளாதாரக் குற்றங்களைப் புரிந்திருக்கும் அமைச்சர்கள் மீது இதுவரை முதல் தகவல் அறிக்கைகூடப் பதிவு செய்யப்படவில்லையே, ஏன்? கடுங் கிரிமினல் குற்றவாளிகளான அவர்களைக் கைது செய்யாதது ஏன்? விரிவான விரைவான விசாரணைக்குட்படுத்திச் சட்டப்படி உரிய தண்டனை பெற்றுத் தருவதற்கான நடவடிக்கையைத் தொடங்காதது ஏன்? "சட்டத்தின் முன் அனைவரும் சமம்" என்னும் போது, அமைச்சர்கள் அதற்கு விதி விலக்கா? அமைச்சரவையிலிருந்து உடனடியாக நீக்காமல் நேரில் அழைத்து ரகசிய விசாரணையும், பேரமும் நடத்தி, ஓரங்கட்டி ஒதுக்கி வைத்துவிட்டால் மட்டும் போதுமா?

2011இல் தி.மு.க. அரசு கஜானாவைக் காலி செய்துவிட்டுப் போய்விட்டது என்று ஜெயலலிதா சொன்னபோது, தி.மு.க.வின் நிர்வாகச் சீர்கேட்டுக்கான உதாரணமாக அவர் கூறியது, தி.மு.க. விட்டுச் சென்ற ஒரு இலட்சம் கோடி ரூபாய்க் கடன். 2016இல் இந்த ஆட்சி முடிவுக்கு வரும்போது, ஜெயலலிதாவிட்டுச் செல்லும் கடன் 2.11 இலட்சம் கோடி ரூபாய். தி.மு.க. விட்டுச் சென்ற கடனாவது காலங்காலமாகத் தொடர்ந்து வந்த அரசுகள் விட்டுச் சென்ற கடன்களின் நீட்சி. தனது ஐந்தாண்டு ஆட்சியில் மட்டும், அதைவிட அதிகமான கடனை உருவாக்கியிருக்கிறது அ.தி.மு.க. அரசு. இது எந்த வகையான நிர்வாகத்துக்கான சான்று?

பள்ளிக் கல்வித் துறையில் மட்டும் ஐந்தாண்டுகளுக்குள் ஆறு முறை அமைச்சர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். சராசரியாக ஓராண்டுக்குமேல் கூட ஒரு துறையில் ஒரு அமைச்சர் நீடிக்கும் வாய்ப்பில்லை என்றால், அந்தத் துறையின் நிலை என்னவாக இருக்கும்?"

- என்று பல்வேறு விபரங்களை "தி இந்து" நாளேடு வெளியிட்டிருக்கிறது. மேலும் "ஜூனியர் விகடன்" இதழில் "5 ஆண்டுகள்....50 மந்திரிகள் - 23 தடவை பந்தாடப்பட்ட

அமைச்சர்கள்” என்ற தலைப்பில் வெளிவந்த ஒரு கட்டுரையில் கூட,

“2011ஆம் ஆண்டு மே மாதம் அ.தி.மு.க. அரசு பொறுப்பேற்ற போது அமைந்த அமைச்சரவையில் முதல்வர் ஜெயலலிதாவுடன் சேர்ந்து மொத்தம் 34 பேர் அமைச்சராகப் பொறுப்பேற்றனர். ஜூன் 27ம் தேதி முகமது ஜான், அமைச்சரவையில் சேர்க்கப்பட்டார். மேலும், சில அமைச்சர்களின் துறைகளும் மாற்றம் செய்யப்பட்டன. முதலாவது அமைச்சரவை மாற்றம் நடந்த சில தினங்களிலேயே அடுத்த மாற்றத்தை நடத்தி அமைச்சர்களை நடுங்கச் செய்தார் ஜெ. 2011 ஜூலை மாதம் 3ஆம் தேதி சட்டத்துறை அமைச்சராக இருந்த இசக்கி சுப்பையா மீது எழுந்த புகாரைத் தொடர்ந்து அவரை அமைச்சரவையிலிருந்து நீக்கினார். அவருக்குப் பதிலாகச் செந்தூர் பாண்டியனைச் சேர்த்து புதிய அரசு பொறுப்பேற்று இரண்டு மாதங்களில் மூன்றாவது அமைச்சரவை பதவியேற்பு விழாவும் நடைபெற்றது. அடுத்த அதிரடி, நவம்பர் மாதம் நடந்தேறியது. நவம்பர் 4ஆம் தேதி தமிழக அமைச்சரவையில் சூறாவளி மாற்றம் ஏற்பட்டது. ஆறு அமைச்சர்கள் நீக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாகப் புதிதாக ஆறு அமைச்சர்கள் பதவியேற்றனர். மேலும் அமைச்சரவையில் செல்வாக்காக இருந்த செங்கோட்டையனின் சரிவு, இந்த அமைச்சரவை மாற்றத்தில் இருந்துதான் ஆரம்பித்தது. செங்கோட்டையனின் துறையும் மாற்றம் கண்டது. சர்ச்சையில் சிக்கிய அமைச்சர் பரஞ்ஜோதி 2011 டிசம்பர் 9ம் தேதி ராஜினாமா செய்தார். அமைச்சராக இருந்த செல்வி ராமஜெயத்தின் பதவியும் பறிக்கப்பட்டது. இருவருக்கும் பதிலாக உள்ளே வந்தவர்கள்தான் எம்.எஸ்.எம். ஆனந்தன், வளர்மதி ஆகியோர். அமைச்சரவையில் பவர்ஃபுல் அமைச்சராக வலம் வந்த செங்கோட்டையன், முக்கியத்துவம் இல்லாத ஐ.டி. துறைக்குத் தூக்கியடிக்கப்பட்டு, மீண்டும் வருவாய்த் துறைக்கு மாற்றப்பட்டு, ஆறாவது அமைச்சரவை மாற்றத்தில் அவரது அமைச்சர் பதவியும் பறிபோனது.

அமைச்சரவை மாற்றத்தில் அதிகம் பாதிக்கப்பட்ட துறை, பள்ளிக் கல்வித் துறைதான். முதலாவது அமைச்சரவையில் இந்தத் துறைக்கு அமைச்சர் சி.வி. சண்முகம், அவர் சில மாதங்களில் மாற்றப்பட்டுப் புதிதாக அமைச்சரவையில் இணைந்த அக்ரி கிருஷ்ணமூர்த்தியிடம் துறை ஒப்படைக்கப்பட்டது. அடுத்த சில

மாதங்களில் அவரிடம் இருந்து என்.ஆர். சிவபதிகைக்குச் சென்று, அதன்பின் வைகைச்செல்வனுக்கும், அவருக்கு அடுத்து உயர் கல்வித் துறை அமைச்சராக இருந்த பழனியப்பனுக்குக் கூடுதல் துறை என பந்தாடப்பட்டது. இறுதியாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த கே.சி. வீரமணியிடம் இந்தத் துறை இருந்து வருகிறது.

ஜெ. முதல்வராகப் பொறுப்பேற்றபோது அவருடன் அமைச்சர்களாகப் பொறுப்பேற்று அதன்பின் பதவி இழந்து மீண்டும் அமைச்சர்களாக வந்தவர்கள் கோகுல இந்திரா, ஆர்.பி. உதயகுமார், பி.வி. ரமணா, எஸ்.பி. சண்முகநாதன், எஸ்.பி. வேலுமணி, எம்.எஸ்.எம். ஆனந்தன், அக்ரி கிருஷ்ணமூர்த்தி, என்.ஆர். சிவபதி உள்ளிட்டோர். இரண்டாவது முறையாக அமைச்சரவையில் வாய்ப்புக் கிடைத்தும், அதிலும் கோட்டை விட்டவர்கள் அக்ரி கிருஷ்ணமூர்த்தி, என்.ஆர். சிவபதி ஆகிய இருவர்தான். கடைசியாக இரண்டு மாதங்களுக்கு முன் வாட்ஸ்அப்பில் வந்த படத்தால் பதவி இழந்தார் பி.வி. ரமணா.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே அமைச்சரவை பதவியேற்பு விழா நடைபெறும். ஆனால், கடந்த ஐந்தாண்டுகளில் முதல் முறை அமைச்சரவை பதவியேற்பு ஒரு முறை, ஜெ. பதவி பறிபோய் 2014 ஓ.பி.எஸ். தலைமையில் இரண்டாவது முறை, 2015ல் ஜெ. மீண்டும் முதல்வராகப் பதவியேற்றபோது மூன்றாவது முறை என மூன்று முறை ஒட்டுமொத்த அமைச்சரவையும் பதவியேற்றது. 15-க்கும் அதிகமான முறை ஆளுநர் மாளிகையில் அமைச்சரவை பதவியேற்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. இதுவும் ஒரு சாதனைதான்.

2011 முதல் 2016 வரையிலான ஐந்து ஆண்டுகளில் 23 முறை அமைச்சரவை மாற்றம் கண்டுள்ளது. மரியம் பிச்சையில் தொடங்கிய மாற்றம், கடந்த மாதம் நீக்கப்பட்ட சின்னையா வரை கிட்டத்தட்ட அரை சதம் எம்.எல்.ஏ. க்கள் இந்த ஐந்தாண்டுகளில் அமைச்சர் நாற்காலிகளில் அமர்ந்து சென்றுள்ளனர்" என்று ஜெயலலிதா ஆட்சியில் நடைபெறும் அமைச்சரவைப் பந்தாட்டம் பற்றி "ஜூனியர் விகடன்" கட்டுரை எழுதியுள்ளது.

அமைச்சர்கள் மாற்றம் பற்றி இவ்வாறு எழுதியதோடு இல்லாமல், பொறுப்பில் உள்ள அமைச்சர்கள் எல்லாம்

சட்டப்படி ஆற்ற வேண்டிய கடமைகளுக்கு எதிராக எவ்வாறு செயல்படுகிறார்கள் என்பது பற்றிச் சில ஏடுகள் எழுதுகின்றன. குறிப்பாக ஜெயலலிதா அரசின் மூத்த அமைச்சர்கள் பற்றியும், அவர்களின் உதவியாளர்கள் பற்றியும், அவர்களுக்குத் துணை போகும் அதிகாரிகள் பற்றியும் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கிற சில செய்திகளைப் பாருங்கள். இதுபற்றி "தி இந்து" கட்டுரையில் வெளிவந்துள்ள செய்தி மட்டும் இதோ :-

"அமைச்சரவையில் உள்ள மூத்த அமைச்சர்களான ஓ. பன்னீர்செல்வம், நத்தம் விசுவநாதன், பழனியப்பன், வைத்தியலிங்கம், பழனிச்சாமி ஆகியோர், வரவிருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில் நிற்பதற்கு இடம்பெற்றுத் தருவதாகக் கூறி, தலைமைக்குத் தெரியாமல் நூற்றுக்கு மேற்பட்டவர்களிடம் பணம் வசூலித்ததாகப் பேசப்படுகிறது.

ஓ. பன்னீர்செல்வம், நத்தம் விசுவநாதன் ஆகிய இருவரும் ஊழல் முறைகேடுகளில் ஈடுபட்டதாகவும், ஏகப்பட்ட சொத்துகளை வாங்கிக் குவித்திருப்பதாகவும் பேசப்படுகிறது. இவர்கள் தலைமையிடம் வரவழைக்கப் பட்டு, விசாரிக்கப்பட்டதாகவும், அவர்கள் முறைகேடாகச் சேர்த்த சொத்துகள் யாவும் பறிமுதலாக்கப்படுவதாகவும் நடவடிக்கைகள் தொடர்வதாகவும் பேசப்படுகிறது. ஒரு அமைச்சர் பதவி நீக்கப்பட்டபின், பண மோசடியில் அவர் ஈடுபட்டதாக வழக்குப் பதிவாகிறது. இன்னொரு அமைச்சரின் உதவியாளர் அரசுசார் நிறுவனங்களில் ஒப்பந்தங்கள் வாங்கித் தரப் பலரிடம் பணம் வசூலித்து ஏமாற்றியதாகக் கைது செய்யப்படுகிறார். அ.தி.மு.க.வின் உள்கட்சி விவகாரம் மட்டும் அல்ல இது. அரசு சம்பந்தப்பட்டது, மாநிலத்தின் நலன்கள் சம்பந்தப்பட்டது, மக்கள் சம்பந்தப்பட்டது. அமைச்சர்கள் முறைகேட்டில் ஈடுபட்ட தாகச் சொல்லப்படும் பணம் மக்கள் பணம். அவர்கள் செய்த தவறுகளாகப் பேசப்படும்யாவும் பொருளாதாரக் குற்றங்கள்" என்று "தி. இந்து" கட்டுரை எழுதியிருக்கிறது.

மன்னார்குடி அமைச்சர் ஒருவர் "ஆம்னி" பேருந்தில் மூட்டை மூட்டையாகப் பணத்தையும், நகைகளையும் ஏற்றிச் சென்னைக்குக் கொண்டுவந்த செய்தியை அந்த பேருந்தின் அதிபரே ஏடுகளில் வெளியிட்ட செய்தியும் வந்துள்ளது.

முதலமைச்சர் ஜெயலலிதா அல்லது அ.தி.மு.க. அரசு ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் பகல் கொள்ளைகள் பற்றி அதிகாரப்பூர்வமாக இதுவரை எந்தப் பதிலும் சொல்லாமல் இருப்பதிலிருந்தே ஏடுகளிலும், அறிக்கைகளிலும் வருகின்ற செய்திகள் எல்லாம் உண்மை என்றே மக்கள் நம்புகிறார்கள். ஒருவேளை அமைச்சர்கள் மீது நடவடிக்கை எடுத்தால், அவர்கள் மேல்இடத்துக்குக் கட்டிய கப்பத்தைப் பற்றிய விவரங்களை வெளியிட்டுவிடுவார்களோ என்ற பயம் காரணமாக அனைத்தும் மறைக்கப்படுகிறதா?

ஏடுகளிலே வெளிவந்துள்ள மிகக்கடுமையான இந்தச் செய்திகள் பற்றி, அரசியல் கட்சித் தலைவர்கள் விடுத்துள்ள அறிக்கையில், தமிழ்நாட்டில் கடந்த 2011ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு மக்கள் நலப் பணிகள் நடந்தனவோ இல்லையோ, அனைத்துத் துறைகளிலும் ஊழல்கள், முறைகேடுகள், சுரண்டல்கள் ஆகியவை மட்டும் முழு நேரமும் நடக்கும் முக்கியப் பணிகளாக நடைபெற்றுவருகின்றன. கிழக்குக் கடற்கரைச் சாலையில் "அமரேந்திரா" எனும் அடுக்கு மாடிக் குடியிருப்பைக் கட்டி வரும் "காஸா கிராண்ட்" நிறுவனம், நியூயார்க் நகரில் விலை உயர்ந்த ஓட்டல், லண்டனைச் சேர்ந்த ரியல் எஸ்டேட் நிறுவனமான "ஓக்லி பிராப்பர்ட்டி சர்விசஸ்" - ஆகியவற்றில் அமைச்சர் ஒருவர் செய்திருக்கும் பல ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகள் பற்றி ஊரெங்கும் பேசப்படுகிறது. தற்போது மூத்த அமைச்சர்களிடமிருந்து பறிக்கப்பட்ட பணம் மற்றும் சொத்துக்களின் மதிப்பு மட்டும் 30 ஆயிரம் கோடி ரூபாய் என்றும், அப்பணம் மேலிடத்தின் கணக்கில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும், இதுபற்றி விசாரணை நடத்த வேண்டுமென்றும், முறைகேடாக வசூலிக்கப்பட்ட பணம் அரசுக் கருவூலத்தில் சேர்க்கப்பட வேண்டுமென்றும் அரசியல் தலைவர்கள் சிலர் எடுத்துச் சொல்லி வருகிறார்கள். ஆனால் அமைச்சர்களாக இருந்துகொண்டு, அதிகார துஷ்பிரயோகம் செய்து முறைகேடுகள் - ஊழல் மூலம் சேர்த்த பல்லாயிரக் கணக்கான கோடி ரூபாய்ப் பணம் மற்றும் சொத்துக்களைப் பறிமுதல் செய்து சொந்தக் கணக்கில் வரவு வைத்துக் கொள்வதற்கு எந்தச் சட்டம் அனுமதிக்கிறது? மிகப் பெரிய பொருளாதாரக் குற்றங்களைப் புரிந்திருக்கும்

அமைச்சர்கள் மீது இதுவரை முதல் தகவல் அறிக்கைகூடப் பதிவு செய்யப்படவில்லையே, ஏன்? கடுங்கிரிமினல் குற்றவாளிகளான அவர்களைக் கைது செய்யாதது ஏன்? விரிவான விரைவான விசாரணைக்குட்படுத்திச் சட்டப்படி உரிய தண்டனை பெற்றுத் தருவதற்கான நடவடிக்கையைத் தொடங்காதது ஏன்? "சட்டத்தின் முன் அனைவரும் சமம்" என்னும் போது, அமைச்சர்கள் அதற்கு விதிவிலக்கா? அமைச்சரவையிலிருந்து உடனடியாக நீக்காமல் நேரில் அழைத்து ரகசிய விசாரணையும், பேரமும் நடத்தி, ஓரங்கட்டி ஒதுக்கிவைத்து விட்டால் மட்டும் போதுமா? என்று எழுப்பப்படும் கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் நாட்டு மக்களுக்கு விளக்கமளித்திட வேண்டும் என்ற கடமையைத் தட்டிக் கழித்து, முதலமைச்சர் ஜெயலலிதா அல்லது அ.தி.மு.க. அரசு ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் பகல் கொள்ளைகள் பற்றி அதிகாரப்பூர்வமாக இதுவரை எந்தப் பதிலும் சொல்லாமல் இருப்பதிலிருந்தே ஏடுகளிலும், அறிக்கைகளிலும் வருகின்ற செய்திகள் எல்லாம் உண்மை என்றே மக்கள் நம்புகிறார்கள். ஒருவேளை அமைச்சர்கள் மீது நடவடிக்கை எடுத்தால், அவர்கள் மேல் இடத்துக்குக் கட்டியகப்பத்தைப் பற்றிய விவரங்களை வெளியிட்டு விடுவார்களோ என்ற பயம் காரணமாக அனைத்தும் மறைக்கப்படுகிறதா?

ஆளும் அ.தி.மு.க.வுக்கெதிராக நாள்தோறும் பல்கிப் பெருகித்திரண்டு வரும் வாக்குகளைச் சிதறிடச் செய்ய, மலையெனக் குவித்து வைத்திருக்கும் பணத்தையும், ஒரு சில பத்திரிகையாளர்களையும், உளவுத் துறையினரையும் பயன்படுத்தித் தந்திரங்களையும், சூழ்ச்சிகளையும் ஏவி வருகிறார். இத்தகைய சூது, சொற்ப சுகத்தைத் தரலாம்; ஆனால் "சூதும் வாதும் வேதனையில் முடியும்!" வரவிருக்கின்ற தேர்தலின் மூலம் தமிழக மக்கள் தரவிருக்கும் ஜனநாயக ரீதியிலான தண்டனையிலிருந்து ஜெயலலிதா தப்பவே முடியாது!

குற்றச் செயல்களையெல்லாம் மறைத்திடவும், கவனத்தைத் திசை திருப்பிடவும், முதலமைச்சர் ஜெயலலிதா, தேர்தலில் போட்டியிட விருப்பமனுவுடன் பணம் கட்டிய அத்தனை பேரையும்

அழைத்து "நேர் காணல்" நடத்தாமல், ஏதோ பெயருக்கு ஒரு சிலரை மட்டும் தன் வீட்டிற்கே அழைத்து நாட்டு மக்களையும், ஏன் அவருடைய கட்சிக்காரர்களையும் ஏமாற்றும் நாடகத்தை நடத்துவதோடு; ஆளும் அ.தி.மு.க.வுக்கெதிராக நாள்தோறும் பல்கிப் பெருகித் திரண்டுவரும் வாக்குகளைச் சிதறிடச் செய்ய, மலையெனக் குவித்து வைத்திருக்கும் பணத்தையும், ஒருசில பத்திரிகையாளர்களையும், உளவுத் துறையினரையும் பயன்படுத்தித் தந்திரங்களையும், சூழ்ச்சிகளையும் ஏவி வருகிறார். இத்தகைய சூது, சொற்ப சுகத்தைத் தரலாம்; ஆனால் "சூதும் வாதும் வேதனையில் முடியும்!" வரவிருக்கின்ற தேர்தலின் மூலம் தமிழக மக்கள் தரவிருக்கும் ஜனநாயக ரீதியிலான தண்டனை யிலிருந்து ஜெயலலிதா தப்பவே முடியாது!

அன்புள்ள,

மு.க.

25-3-2016

4001. உன்னால் முடியாதது உலகினில் ஏதும் உண்டோ?

உடன்பிறப்பே,

தமிழ்நாடு பதினைந்தாவது சட்டப்பேரவைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டு, வரும் ஏப்ரல் 22 அன்று முதல் வேட்பு மனு தாக்கல் தொடங்குகிறது. ஜனநாயக மரபுகளையொட்டி, கழகத்தின் சார்பில் விருப்ப மனு அளித்த அனைவருடனும் "நேர்காணல்" நிறைவுற்று, மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரையும் அழைத்துக் கலந்தாலோசனை செய்து, அவர்களுடைய கருத்துக்களைப் பெற்று, பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் வழங்கிய அறிவுரை, கழகப் பொருளாளர் தம்பி மு.க.ஸ்டாலின் விடுத்த வேண்டுகோள், முதன்மைக் கழகச் செயலாளர் தம்பி துரைமுருகன் கூறிய கருத்துரை ஆகியவற்றின் அடிப்படையில் நான், "இந்தத் தேர்தலை ஒரு அறைகூவலாக ஏற்றுக்கொண்டு குறைந்தபட்சம் சிறிய மாவட்டங்களில் இரண்டு தொகுதிகளிலும், பெரிய மாவட்டங்களில் மூன்று நான்கு தொகுதிகளிலாவது நீங்கள் வென்று காட்டுவீர்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன்" என்று வெளிப்படையாகத் தெரிவித்த எனது உள்ளக் கிடக்கையை நிறைவேற்றிக் காட்டிடும் நெஞ்சுரத் தோடு தேர்தல் பணிகளைத் தொடர்ந்து ஆற்றி வருவாய் என்ற உறுதி எனக்கு நிரம்பவே இருக்கிறது.

நாம் விரும்பி ஏற்றுக் கொண்டுள்ள ஜனநாயகப் பாதையில், இதுவரை கழகம் சந்திக்காதகளங்கள் இல்லை; காணாத வெற்றிகள் இல்லை; பெறாத விழுப்புண்களும் இல்லை. கடந்த 25 ஆண்டுக் காலத் தேர்தல் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், 1989இல் தி.மு. கழகம் வெற்றிபெற்று ஆட்சியில் அமர்ந்தது. அதற்குப் பின் 1991இல் அ.தி.மு.க., 1996இல் மீண்டும் தி.மு.க., 2001இல் அ.தி.மு.க., 2006இல் தி.மு.க., 2011இல் அ.தி.மு.க. என்று தொடர்ந்து மாற்றத்தை விரும்பும் மக்களின் கட்டளைக்கேற்ப,

மாறி மாறி ஆட்சி வாய்ப்பு அமைந்து வருகிறது. நிரூபணமாகி வரும் அந்த நிரலின்படி பார்த்தாலும்கூட, 2016 பொதுத் தேர்தலில் தி.மு. கழகம்தான் ஆட்சி அமைத்திடும் வாய்ப்பு பிரகாசமாக இருக்கிறதென்று நடுநிலையாளர்கள் நம்பிக்கை தெரிவிக்கிறார்கள். 2016 பொதுத் தேர்தலில் நாம் பெறப்போகும் வெற்றி, ஆகமொத்த தமிழக மக்களுக்குச் சொந்தமான மகத்தான வெற்றி.

கழகத்திற்கும், தமிழக மக்களுக்கும் இடையே உள்ள உறவு இறுக்கமாகப் பின்னிப் பிணைந்துள்ள உறவு. இதை எந்த வீண்புரளிகளாலும், விதண்டா வாதங்களாலும், விஷமப் பிரச்சாரங்களாலும் புரட்டிப் போட்டுவிட முடியாது. உறவின் அடிப்படையை மறுத்து அறுத்து விடவும் முடியாது. ஐந்தாண்டு காலம் அராஜக ஆட்சி நடத்தி, கருத்துச் சுதந்திரத்தின் கழுத்தை நெரித்து, ஜனநாயக மாண்புகளைச் சாக்காட்டுக்கு அனுப்பி, சட்டமன்ற மரபுகளை வெட்டிச் சாய்த்து, சர்வாதிகாரத்திற்குப் புதியதோர் ஆசனம் அமைத்துத் தந்துள்ள அ.தி.மு.க. ஆட்சிக்குத் திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஒரே மாற்று என்பது தமிழக மக்களின் மனதில் நீங்கா இடம் பெற்று விட்ட நிஜம் என்ற நிலையை யாராலும் அசைக்க முடியாது.

திராவிட முன்னேற்றக் கழகம், தமிழக மக்களுக்கு ஆற்றிய அரும்பணிகள், ஐந்து முறை ஆட்சியில் இருந்தபோது செய்த ஆற்றல்மிகு சாதனைகள், இன்றைக்குத் தமிழகத்தில் பட்டிதொட்டிகளில் எல்லாம் நினைவேட்டின் பதிவுகளாக நிலை பெற்றிருக்கின்றன.

ஒவ்வொரு முறை கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதும், மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதற்கு உகந்த நலத் திட்டங்கள், நீண்ட கால சமூக - பொருளாதார வளர்ச்சிக்கு வழி அமைக்கும் அடிப்படைக் கட்டமைப்புத் திட்டங்கள், நதி நீர் இணைப்புத் திட்டங்கள், குடிநீர்த் திட்டங்கள், கல்விச் சிறப்பு, விவசாய மேம்பாடு மற்றும் தொழில் முன்னேற்றத்திற்கான திட்டங்கள் என்று நிறைவேற்றப்பட்டுள்ளதை மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள். அதனால்தான் எப்போதெல்லாம் அ.தி.மு.க. ஆட்சியில் இருக்கிறதோ, அப்போதெல்லாம் அடுத்து

தி.மு.க. ஆட்சி அமைந்தே ஆக வேண்டுமென்ற ஆர்வத்தில் மக்கள் அனைவரும் ஒருமுகமாகக் கழகத்திற்கு வாக்களித்து தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

கழகத்திற்கும், தமிழக மக்களுக்கும் இடையே உள்ள உறவு இறுக்கமாகப் பின்னிப் பிணைந்துள்ள உறவு. இதை எந்த வீண் புரளிகளாலும், விதண்டாவாதங்களாலும், விஷமப் பிரச்சாரங்களாலும் புரட்டிப் போட்டுவிட முடியாது. உறவின் அடிப்படையை மறுத்து அறுத்துவிடவும் முடியாது. ஐந்தாண்டு காலம் அராஜக ஆட்சி நடத்தி, கருத்துச் சுதந்திரத்தின் கழுத்தை நெரித்து, ஜனநாயக மாண்புகளைச் சாக்காட்டுக்கு அனுப்பி, சட்டமன்ற மரபுகளை வெட்டிச் சாய்த்து, சர்வாதிகாரத்திற்குப் புதியதோர் ஆசனம் அமைத்துத்தந்துள்ள அ.தி.மு.க. ஆட்சிக்கு திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஒரே மாற்று என்பது தமிழக மக்களின் மனதில் நீங்கா இடம்பெற்றுவிட்ட நிஜம் என்ற நிலையை யாராலும் அசைக்க முடியாது.

நாட்டில் நிலவும் நானாவிதச் சூழ்நிலைகளும் தமக்குச் சிறிதும் சாதகமாக இல்லை என்பதால்தான், ஆளுங்கட்சியினரே ஒரு சதித் திட்டத்தை வகுத்து, அதை நிறைவேற்றுவதற்கு நெஞ்சில் வஞ்சகத்தைத் தவிர வேறு எதுவும் இல்லாத சிலரைப் பிடித்து, "தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் மோசம்" என்று இரண்டையும் ஒரே தராசில் வைத்துப் பிரச்சாரம் செய்யவைத்து, குழப்பத்தை ஏற்படுத்த முயற்சித்து வருகிறார்கள். அரசியல் துறையிலும், ஊடகத் துறையிலும் உள்ள அந்த ஒரு சிலர், அ.தி.மு.க.வை ஏனோதானோவென மேலெழுந்தவாரியாக ஒப்புக்காகக் குறை சொல்வதும், தி.மு.க.வை வேண்டுமென்றே வம்புக்கு இழுத்துச் சேற்றை வாரி இறைப்பதும் என்ற தீய வழியில் இறங்கிவிட்டார்கள். மக்கள் நலனுக்கு எதுவுமே செய்யாத அ.தி.மு.க. ஆட்சியை - உருப்படியாக ஒரு திட்டத்தையும் நிறைவேற்றாத அ.தி.மு.க. ஆட்சியை - ஒரு மெகாவாட் மின்சாரம்கூட உற்பத்தி செய்ய இயலாத அ.தி.மு.க. ஆட்சியை - ஏற்கனவே இருக்கின்ற தொழிற் சாலைகளை வரிசையாக மூடிய அ.தி.மு.க. ஆட்சியை - தொடர் மழைக்கும், அதனால் விளைந்த பெருவெள்ளச் சூழலுக்கும் இடையே செம்பரம்பாக்கம் ஏரியைத் திடீரென்று திறந்துவிட்டுச் செயற்கைப் பேரிடரை உருவாக்கி, சென்னை உள்ளிட்ட மூன்று மாவட்ட மக்களை அகதிகள் எனும் அவலத்திற்கு ஆளாக்கிய

அ.தி.மு.க. ஆட்சியின் புரையோடிய புண்களை, போலிப் பட்டாடை போர்த்தி மறைத்துவிட்டு, "தி.மு.கழகம் மோசம்" என்ற விஷமப் பிரச்சாரத்தில் அந்த ஒரு சிலர் ஈடுபட்டுள்ளார்கள். அ.தி.மு.க.வுக்கு, தி.மு.க.தான் ஒற்றை மாற்று என்று நிலைத்துவிட்ட உண்மையை எப்படியாவது நீர்த்துப்போகச் செய்துவிட வேண்டுமென்று ஆளுங்கட்சி விரித்திருக்கும் வஞ்சக வலையைத் தூக்கிப்பிடித்துக் கொண்டிருப்பவர்களாக அந்தச் சிலர் தம்மையும் குறைத்துக்கொண்டு, அரசியலின் தரத்தையும் குறைத்து வருவதை நீ நன்குணர்வாய்!

அ.தி.மு.க. ஆட்சியின் புரையோடிய புண்களை, போலிப் பட்டாடை போர்த்தி மறைத்துவிட்டு, "தி.மு.கழகம் மோசம்" என்ற விஷமப் பிரச்சாரத்தில் அந்த ஒரு சிலர் ஈடுபட்டுள்ளார்கள். அ.தி.மு.க.வுக்கு, தி.மு.க. தான் ஒற்றை மாற்று என்று நிலைத்துவிட்ட உண்மையை எப்படியாவது நீர்த்துப் போகச் செய்துவிட வேண்டுமென்று ஆளுங்கட்சி விரித்திருக்கும் வஞ்சக வலையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருப்பவர்களாக அந்தச் சிலர் தம்மையும் குறைத்துக் கொண்டு, அரசியலின் தரத்தையும் குறைத்து வருவதை நீ நன்குணர்வாய்!

ஆட்சியில் இருந்துகொண்டு ஐந்தாண்டுகளும் அநியாயங்களைச் செய்துகொண்டிருப்பது அ.தி.மு.க. இந்த அராஜக ஆட்சியாளர்களை அகற்ற வேண்டுமென்று, அதற்கான தருணத்திற்காக ஆர்வத்தோடு காத்திருக்கும் மக்களுக்கு ஆதரவாகப் பேசிட முனைந்திருப்பதாகச் சொல்லிக் கொள்பவர்கள், அ.தி.மு.க.வை அகற்றுவதில்தானே தீவிரம் காட்ட வேண்டும்? அதை விடுத்து, அ.தி.மு.க.வை ஆட்சியிலிருந்து தூக்கி எறிந்திடத் துணிவோடும் உரிய வலிமையோடும் எதிர் நிற்கும் தி.மு.கழகத்தை இழித்தும் பழித்தும் பேச வேண்டிய அவசியமென்ன? அப்படிப் பேசுவது யாருக்குத் துணை செய்யும்? அவர்களின் உள்நோக்கம் என்ன என்பதைப் புரிந்துகொள்ள முடியாத ஏமாளிகளா தமிழ்நாட்டு மக்கள்? அந்த ஒரு சிலர், தமது சுய முன்னேற்றத்திற்கு உழைப்பதைவிட மக்கள் விரோத, ஜனநாயக விரோத, அ.தி.மு.க. ஆட்சியை எப்படியாவது மீண்டும்

ஒரு முறை ஆட்சிக் கட்டிலிலேயே நிலைக்கவைத்துவிட முடியுமா என்பதற்காகவே கடை விரித்துவைத்துக் கூவிகூவிப் பார்க்கிறார்கள்.

நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் பலமுனைப் போட்டி ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அது மட்டுமல்லாமல், இதுவரை தமிழகம் கண்டிராத அதிசயமாகச் சில முதலமைச்சர் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளார்கள். முதலமைச்சர் வேட்பாளராக காமராஜர் அவர்களோ, அறிஞர் அண்ணா அவர்களோ, நானோ, எம்.ஜி.ஆர். அவர்களோ தேர்தலுக்கு முன்பே அறிவித்துக் கொண்டு களம் புகுந்ததில்லை. முதலமைச்சராகக் கனவு காண்பது அவரவர் உரிமை. அதில் யாரும் தலையிட முடியாது. ஆனால் பலமுனைப் போட்டியால், தி.மு. கழகத்தின் வாய்ப்பு ஒளி மிக்கதாக இல்லை; மங்கலாகவே உள்ளது என்று அந்த ஒரு சிலர் தர்க்க ரீதியாகப் பேசுவதைப் போல நினைத்துக் கொண்டு தவறான வாதத்தைப் பரப்ப முயற்சிக்கின்றனர். கடந்த காலத் தேர்தல்களை நீ ஆராய்ந்து பார்த்தால் உனக்கே உண்மை விளங்கும்.

1989ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில்; திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்சிஸ்ட் கட்சி மற்றும் ஜனதா கட்சியுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டது; அ.தி.மு.க. (ஜெ) அணியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இடம்பெற்றிருந்தது; அ.தி.மு.க. (ஜா) அணியில் சிவாஜி கணேசனின் தமிழக முன்னேற்ற முன்னணி இருந்தது; காங்கிரஸ் கட்சி, தா. பாண்டியனின் யு.பி.சி.ஐ. கட்சியுடன் கூட்டணி அமைத்திருந்தது. இந்தத் தேர்தலில் 202 இடங்களில் போட்டியிட்ட தி.மு.க., 169 இடங்களைக் கைப்பற்றி ஆட்சி அமைத்தது. தி.மு. கழக அணியிலே இருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 15 இடங்களிலும், ஜனதா கட்சி 4 இடங்களிலும் வெற்றி பெற்றன. அ.தி.மு.க. (ஜெ) அணி 27 இடங்களையும், அ.தி.மு.க. (ஜா) அணி 2 இடங்களையும் பிடித்தன.

1989 போலவே 1996 தேர்தலிலும் பலமுனைப் போட்டி தான். தி.மு.க. - தமிழ் மாநிலக் காங்கிரஸ் கூட்டணி; அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி; மார்க்சிஸ்ட் கட்சி - ம.தி.மு.க., கூட்டணி; பா.ம.க - திவாரி காங்கிரஸ் கூட்டணி என நான்கு முனைப் போட்டி நிலவியது. அந்தத் தேர்தலில் 182 இடங்களில் போட்டியிட்ட தி.மு.க., 173 இடங்களைக் கைப்பற்றி ஆட்சி அமைத்தது. 168

இடங்களில் போட்டியிட்ட அ.தி.மு.க. 4 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. தமிழ் மாநிலக் காங்கிரஸ் 39 இடங்களிலும், பா.ம.க. 4 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன. தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. வுக்கு மாற்று என்று அறிவித்துக் களம் இறங்கிய ம.தி.மு.க. ஒரு தொகுதியிலும் வெற்றி பெறவில்லை.

2006இல் நடைபெற்ற தேர்தலில் மும்முனைப் போட்டி. தி.மு.க. தலைமையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியும், அ.தி.மு.க. தலைமையில் ஒரு கூட்டணியும், "இந்த இரண்டு கூட்டணிகளையும் வீழ்த்துவேன்" என்று தனித்துப் போட்டியிட்ட விஜயகாந்த் கட்சியும் களம் இறங்கின. தி.மு.கழகம் தலைமையிலான கூட்டணி 163 இடங்களில் வெற்றி பெற்றது. தி.மு.க. 132 இடங்களில் போட்டியிட்டு 96 இடங்களில் வெற்றி பெற்றிருந்தாலும், தோழமைக் கட்சிகளின் ஆதரவுடன் தனித்தே ஆட்சி அமைத்தது என்பது குறிப்பிடத்தக்கது. அ.தி.மு.க. கூட்டணி 69 இடங்களைக் கைப்பற்றியது. விஜயகாந்தின் தே.மு.தி.க. 232 தொகுதிகளில் போட்டியிட்டு, 1 தொகுதியில் மட்டுமே வெற்றி பெற்றது.

நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் பலமுனைப் போட்டி ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அது மட்டுமல்லாமல், இதுவரை தமிழகம் கண்டிராத அதிசயமாகச் சில முதலமைச்சர் வேட்பாளர்கள் அறிவிக்கப் பட்டுள்ளார்கள். முதலமைச்சர் வேட்பாளராக காமராஜர் அவர்களோ, அறிஞர் அண்ணா அவர்களோ, நானோ, எம்.ஜி.ஆர். அவர்களோ தேர்தலுக்கு முன்பே அறிவித்துக் கொண்டு களம் புகுந்ததில்லை. முதலமைச்சராகக் கனவு காண்பது அவரவர் உரிமை. அதில் யாரும் தலையிட முடியாது. ஆனால் பலமுனைப் போட்டியால், தி.மு. கழகத்தின் வாய்ப்பு ஒளி மிக்கதாக இல்லை; மங்கலாகவே உள்ளது என்று அந்த ஒரு சிலர் தர்க்க ரீதியாகப் பேசுவதைப் போல நினைத்துக்கொண்டு தவறான வாதத்தைப் பரப்ப முயற்சிக்கின்றனர். கடந்தகாலத் தேர்தல்களை நீ ஆராய்ந்து பார்த்தால் உனக்கே உண்மை விளங்கும்.

இப்படிப் பலமுனைப் போட்டிகள் ஏற்பட்ட தேர்தல்களில் தி.மு. கழகம் வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது என்பதும்; ஏற்கனவே தமிழகம் மாற்று அரசியல், பலமுனைப் போட்டி என்பனவற்றைச் சந்தித்து இருக்கிறது என்பதும் கடந்த கால வரலாறு நமக்குச் சுட்டிக்காட்டும் நிகழ்வுகள்!

சமூக - பொருளாதார வீழ்ச்சியிலிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்ற, தமிழகத்தை மீண்டும் முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சிப் பீடத்தில் அமர்த்தி, தங்களுக்கு அரண் அமைத்துக்கொள்ள வாக்காளர்கள் தயாராகி விட்டார்கள். ஒவ்வொரு நாளும் பெருகி வரும் அந்த ஆர்வத்தைப் புரிந்துகொண்டு, விழிப்போடு வேகம் குறையாமல் பணியாற்றினால் போதும்; எதிர்மறை சக்திகளின் புலம்பல்களுக்கு ஜனநாயக ரீதியாக முடிவுரை தீட்டப்பட்டுவிடும்.

மாற்று அரசியல், தி.மு.க. - அ.தி.மு.க. அணிகளுக்குப் போட்டியாக மூன்றாவது அணி, பல முனைப் போட்டி ஆகியவை தமிழகத்தில் ஏற்கனவே பரிசோதித்துப் பார்க்கப்பட்டவைதான். எனினும் பழகிப்போன பழைய காட்சிகளே தற்போது 2016 தேர்தல் மேடைகளிலும் அரங்கேறியிருக்கிறது. “In a Political Landscape dominated by the Dravidian Majors, the Third Front has never been a viable alternative for over five decades” (தி.மு.க. வும், அ.தி.மு.க. வும் நல்ல பலத்துடன் விளங்கும் தமிழக அரசியல் களத்தில், கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாகவே மூன்றாவது அணி என்பது வெற்றி பெறும் மாற்று அணியாக விளங்கியதில்லை) என்று 25-3-2016 அன்று “தி இந்து” ஆங்கில நாளேடு சுட்டிக்காட்டியிருப்பது அரசியல் வரலாற்றில் அசைக்க முடியாத உண்மையாகும். மேலும் 27-3-2016 அன்று “தி இந்து” தமிழ் நாளேட்டில், “மாற்றம் எனும் சொல் கேட்பதற்கு எவ்வளவு வசீகரிக்கக் கூடியதோ, அவ்வளவுக்குக் கையாளும்போது அபாயகரமானது. கைப்பிடியற்ற வாள் அது. எதிரியைத் தாக்குகிறதோ இல்லையோ; சரியாகக் கையாளவில்லை எனில், கையாள்வோரின் கைகளை அது பதம் பார்ப்பது நிச்சயம். அடிப்படையில் தூய்மை வாதத்தை முன் நிறுத்தும் சொல் மாற்றம் என்பது. இடதுசாரிகளிடம் தூய்மைவாதப் பேச்சு அதிகம்; தூய்மைவாதப் பேச்சுக்கான செயல்பாடு குறைவு. இடதுசாரிக் கூட்டணியை விஜயகாந்த் கூட்டணியாக மாற்றியதன் மூலம் இடதுசாரிகள் தங்கள் தலையில் மட்டும் மண்ணை அள்ளிப்

போட்டுக் கொள்ளவில்லை. இத்தனை நாட்களும் எதை மையப் பொருளாகப் பேசினார்களோ, அதையும் அவர்களே கேலிப் பொருளாக்கிவிட்டார்கள். கூடவே மூன்றாவது அணிக்கான ஒரு காத்திரமான சாத்தியத்தையும் நாசமாக்கி விட்டார்கள்" என்று எழுத்தாளர் திரு. சமஸ் ஆய்வு செய்திருப்பது நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

இன்று (29-3-2016) "தினமலர்" நாளேடு வெளியிட்டுள்ள கட்டுரை ஒன்றில், "பா.ம.க.வுக்குப் பரவலான பலம் இல்லை. பா.ஜ.க.வுக்கு வெற்றிப் பழத்தை எட்டிப் பறிக்கும் அளவுக்குப் பலம் போதாது. முதல் மூன்று இடங்களில் உள்ள கட்சிகளால் மட்டுமே இந்தத் தேர்தல் பந்தயத்தில் பங்கேற்க முடியும். இதில் முரண்பாடுகள் நிறைந்த மூன்றாவது அணியில் உள்ள தலைவர்கள் பிரச்சாரப் பீரங்கிகளாக இருக்க முடியுமே தவிர, எதிரிகளை வீழ்த்தும் போர் வீரர்களாக மாற முடியாது. எனவே தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. இடையேதான் நேரடிப் போட்டி நிலவுகிறது" என்று 'தினமலர்' எழுதியிருக்கிறது. மாற்று அரசியல், மூன்றாவது அணி, நான்காவது அணி, கூட்டணி ஆட்சி என்பதெல்லாம் கற்பனையில் தோன்றிய மறுகணமே காலாவதியாகி விட்டன.

உடன்பிறப்பே, எந்த அடிப்படையைக் கொண்டு, எப்படிக் கணக்குப் போட்டுப் பார்த்தாலும், வரும் 2016 சட்டப்பேரவைத் தேர்தலில் கழகத்தின் வெற்றி கல் மேல் எழுத்து. எனவே இன்றே களத்தில் கவனம் செலுத்து. 1971 ஆம் ஆண்டு தேர்தல் களத்தில் நிகழ்த்திய அந்தச் சரித்திரச் சாதனையை - இதுவரை வேறு எவராலும் மிஞ்ச முடியாத அந்த அரிய சாதனையை விஞ்சும் ஆற்றல் நம்முடைய கழகத்திற்குத்தான் உண்டு என்பதை மெய்ப்பித்திடும் வகையில் தீவிரமாகக் களப் பணி ஆற்றிடுக! உடன்பிறப்பே, உன்னால் முடியாதது உலகினில் ஏதும் உண்டோ?

அன்புள்ள,

மு.க.

30.3.2016

4002. ஒவ்வொருவரும் "ஸ்டாலினைப்" போல உழைத்திடுவீர்!

உடன்பிறப்பே,

2016 மே மாதம், 16ஆம் தேதியன்று நடைபெற வுள்ள தமிழகச் சட்டப்பேரவைப் பொதுத் தேர்தலுக்கான பிரச்சாரத்தின் முதல் கட்டமாக, துண்டறிக்கை விநியோகிக்கும் பணியை, கழகத்தின் பொருளாளர், தம்பி மு.க. ஸ்டாலின், சென்னை - ராதாகிருஷ்ண நகரில் 8-4-2016 அன்று தொடங்கி வைத்திருக்கிறார். இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்திடும்விதமாகத் துண்டறிக்கை விநியோகம் தொடங்கப்பட்டிருக்கிறது. "முடங்கிய அரசு - மூழ்கிய தமிழகம்" எனும் தலைப்பில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அச்சியற்றப்பட்டிருக்கும் இந்தத் துண்டறிக்கை - "திவாலான தமிழகம், தத்தளித்த தமிழகம், வேலையில்லாத் திண்டாட்டம், தலைவிரித்தாடும் ஊழல், தள்ளாடும் தமிழகம், மூச்சு முட்டும் விலைவாசி உயர்வு, சந்திசிரிக்கும் சட்டம் ஒழுங்கு, விரக்தியின் விளிம்பில் விவசாயிகள், பஞ்சராகிப் போன அ.தி.மு.க. தேர்தல் வாக்குறுதிகள், 110வது விதியின் கீழ் வெத்துவேட்டு அறிவிப்புகள் - என்ற துணைத் தலைப்புகளில் மிகவும் சுருக்கமாகவும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும் விளக்க மளித்து, "முடியட்டும் அ.தி.மு.க. ஆட்சி! விடியட்டும் தி.மு.க. ஆட்சி" என்ற முத்தாய்ப்பான முழக்கத்துடன் முடிவடைகிறது. கழகத்தின் இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, தொழிலாளர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் உடன்பிறப்புகளும் இந்தத் துண்டறிக்கையினை, தெருமுனைப் பிரச்சாரம், திண்ணைப் பிரச்சாரம் போன்ற வழக்கமான நமது பிரச்சார முறைகளின் மூலம் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் கொண்டு சென்று வழங்கி, வாக்காளர்களைத் தனித்தனியாகச் சந்தித்து விளக்கமளித்து, சர்வாதிகார இருளை அகற்றிடவும், ஜனநாயக

ஒளி விளக்கை ஏற்றிடவும், தேவையான அடிப்படைப் பணியை ஆர்வத்தோடு ஆற்றிட வேண்டுமென்று விரும்புகிறேன்.

நமது கழகத்தின்மீது திட்டமிட்டு, இட்டுக்கட்டிய பொய்களையும், வறட்டு வதந்திகளையும் பரப்பி வரும் சில ஊடகத்தினர் உள்ளிட்ட எதிர்க்கட்சியினரின் பிரச்சார முதுகெலும்பை உடைத்தெறியும் வலிமை கழகத்திற்கு இன்று நேற்று அல்ல; என்றைக்கும் உண்டு என்பதும்; எந்தவித சதியையும் அடியோடு தகர்த்துத் தவிடு பொடியாக்கும் சாதுர்யம் நமது தோழர்களுக்கு நிரம்ப உண்டு என்பதும் வரலாற்றின் சாட்சியங்களுக்குத் தெரியும் ..

ஐந்தாண்டு காலம்தான் எனினும், அளவற்ற அவலங்களையும், எல்லையற்ற துன்பங்களையும், இரக்கம் சிறிதுமற்ற அரக்க குணத்தோடு மக்கள் மீது சுமத்திய அ.தி.மு.க. அரசினை அகற்றியே தீர வேண்டுமென்ற தீர்மானத்தோடும், திடச் சிந்தனையோடும் எல்லா நிலைகளிலும் உள்ள கழக நிர்வாகிகள், கழகச் சொற்பொழிவாளர்கள் உள்ளிட்ட பல இலட்சம் தோழர்கள் விறுவிறுப்பாக, விவேகத்துடன் இடையறாப் பணியாற்றிட எப்போதோ தொடங்கிவிட்டார்கள் என்ற செய்தி எனது செவிகளில் பாய்ந்திடும் தேனாகும். "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?" என முழங்கி, உடன்பிறப்புகள் அனைவரும் களத்தில் நிமிர்ந்து நிற்பதைப் பார்த்து எனது நெஞ்சம் நிறைகிறது; நினைவு மணக்கிறது!

ஆணவமும், ஆதிக்க மனப்பான்மையும் மிகுந்திருக்கும் அ.தி.மு.க. ஆட்சியினர், தங்களுக்கு எதிரான வாக்குகள் ஒருமுகப்படுத்தப்படாமல் சிதறிவிட வேண்டுமென்ற உள்நோக்கத்துடன், பல முனைக் கூட்டணிகளை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டாலும், அதற்கு உளவுத் துறையும், காவல் துறையில் சிலரும் எவ்வளவு தூரம் உறுதுணை புரிந்தாலும், கழகத் தோழர்கள் கருத்தொருமித்துக் களம் இறங்கிவிட்டால் எதிரிகளின் முயற்சி முனைகூட வெளியேவராமல் முறி அடிக்கப்படும் என்பதை முழுதும் அறிந்திருப்பவன் நான். நமது கழகத்தின் மீது திட்டமிட்டு, இட்டுக்கட்டிய பொய்களையும், வறட்டு வதந்திகளையும் பரப்பி வரும் சில ஊடகத்தினர் உள்ளிட்ட எதிர்க்கட்சியினரின்

பிரச்சார முதுகெலும்பை உடைத்தெறியும் வலிமை கழகத்திற்கு இன்று நேற்று அல்ல; என்றைக்கும் உண்டு என்பதும்; எந்தவித சதியையும் அடியோடு தகர்த்துத் தவிடுபொடி யாக்கும் சாதுர்யம் நமது தோழர்களுக்கு நிரம்ப உண்டு என்பதும் வரலாற்றின் சாட்சியங்களுக்குத் தெரியும்.

தி.மு. கழகம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே ஆதிக்க சக்திகள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், தி.மு.க. இதோ படுத்து விட்டது, அதோ அழிந்து விட்டது என்று வாய்ச்சவடால் காட்டி வருகின்றன. பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த இயக்கத்தை வழி நடத்திக் கொண்டிருந்த காலகட்டத்திலேயே ஒரு சிலர், மன வேறுபாடு காரணமாகக் கழகத்தை விட்டு வெளியேறிய போது, "முடிந்தது கழகம்" என முனகினர் சிலர். அண்ணா அவர்களின் மறைவுக்குப் பின்னர், கழகத்தைத் தலைமையேற்று நடத்திச் செல்வதில், ஏற்பட்ட கருத்து மோதல் கண்டு, கழகம் "கரைந்து போய் விடுமென்று" கணித்தனர் சிலர். எம்.ஜி.ஆர். வெளியேறிய போது, "கழகம் கலகலத்துப் போகும்" என்று கனவு கண்டனர் சிலர். கழக ஆட்சி, முதல் முறையாகக் கலைக்கப்பட்டு, நூற்றுக்கணக்கான கழக முன்னணியினர் "மிசா" சட்டத்தின்கீழ்க் கைது செய்யப்பட்டு, சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்பட்ட போது, "அடக்கு முறையில் கழகம் அடங்கிப்போய்விடும்" என்று எதிர்பார்த்தனர் சிலர். கழகம் தொடர்ந்து சட்டப் பேரவைக்கான மூன்று தேர்தல்களில் வெற்றி வாய்ப்பை இழந்ததும், "இனி தி.மு.க. தோல்வியில் துவண்டு படுத்து விடும்" என்றனர் சிலர். மீண்டும் கழகம் கம்பீரமாக எழுந்து நின்று, வென்று, ஆட்சி நடத்தி வந்த போது இரண்டாவது முறையாகக் கழக ஆட்சி கலைக்கப்பட்ட போதும், ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டபோதும், பிறகு நடந்த தேர்தலில் கழகம் பெருந்தோல்வி அடைந்தபோதும், "கழகம் இனி அவ்வளவுதான்" என்று ஆசையோடு அறிவித்தனர் சிலர். இப்படிக் கழகம் கலகலத்துப் போய்விட்டதென்று கடந்த ஐம்பதாண்டுகளாகவே வெளியிடப்பட்ட ஆரூடங்களையெல்லாம் அப்புறப்படுத்திவிட்டுத்தான், இன்றைக்குக் கழகம் அகிலமே கண்டு அதிசயிக்கும் அளவுக்கு இமயமென உயர்ந்து நிற்கிறது.

ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் தமிழகத்தில் விழுந்துள்ள கொலைகள், நடந்துள்ள கொள்ளைகள், சீரழிந்து நிற்கும் சட்டம் ஒழுங்கு, இளைஞர்களை வாட்டி வதைக்கும்

வேலையில்லாத் திண்டாட்டம், மதுக்கடைகளால் தாய்மார்கள் படும் இன்னல்கள், தங்களுக்குரிய சலுகைகள் கிடைக்காமல் நியாயம் கேட்டுப் போராடும் அரசு அலுவலர், சத்துணவுப் பணியாளர், மாற்றுத் திறனாளிகள், அப்படிப் போராடுவோருக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்படும் காவல் துறையினரின் காட்டாட்சி தர்பார், அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து அப்பாவி மக்கள் மீது ஏற்றியிருக்கும் பேருந்துக் கட்டணம், மின் கட்டண உயர்வு, பால் விலையை லிட்டருக்குப் பதினாறு ரூபாய் ஏற்றிய கொடுமை, விண்ணை முட்டி நிற்கும் விலைவாசி, வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் விவசாயிகள் - இப்படி அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தை அடியோடு சிதைத்துச் சின்னாபின்னப்படுத்திய அ.தி.மு.க. ஆட்சியின் அவலங்களைப் பட்டிதொட்டியெங்கும் எடுத்துச்சென்று எதிரொலித்திடச் செய்வதன் அவசியத்தை நீ உணர்வாய்!

பேரறிஞர் அண்ணா அவர்கள் கழகத்தை வழிநடத்திக் கொண்டிருந்த காலத்தில், கழகத்தை வளர்த்தெடுக்க ஊன் உறக்கமின்றிக் காலை முதல் நள்ளிரவுவரை பட்டிதொட்டியெங்கும் சென்று பிரச்சாரத்தை மேற்கொண்டும், கழக உடன்பிறப்புகளைத் தனித்தனியாகச் சந்தித்து உரையாடி ஊக்குவித்தும் இடையறாமல் நான் ஆற்றி வந்த பணியை இப்போது நினைவுகூர்ந்திடும் வகையில் அமைந்திருக்கிறது தம்பி மு.க. ஸ்டாலின், ஓய்வின்றி ஓடியாடி உழைத்துக் கொண்டிருப்பது!

தம்பி ஸ்டாலின் ஒருவர் மட்டும் உழைத்தால் போதாது; நீங்கள் ஒவ்வொருவரும் ஸ்டாலினைப் போல உழைப்பீர்! தமிழ் மக்களுக்காக உழைப்பீர்! நல்ல நம்பிக்கையோடு உழைப்பீர்! வெற்றி நமதே!

உடன்பிறப்பே, உன் பிரச்சாரம் எப்படி இருக்க வேண்டும்? மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக்கொடுக்க வேண்டுமா என்ன? ஆனாலும் சில தகவல்களை மட்டும் உனக்குக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

ஜெயலலிதா ஆட்சியில் தமிழகத்தில் 2011ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை 9,948 படுகொலைகளும், ஒரு

இலட்சம் கொள்ளைகளும், திருட்டுகளும் நடந்திருக்கின்றன. தமிழகத்தில் தினமும் 7 கொலைகளும், 70 கொள்ளைகளும் நடக்கின்றன. கொலையோ, கொள்ளையோ நடக்காத நாளே இல்லையென்று சொல்லும் அளவுக்கு நிலைமை முற்றிப்போய் விட்டது. பெண்களுக்கெதிரான குற்றங்களும் அதிகரித்து விட்டன. கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் 2,335 பெண்கள் பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றனர். பெண்களுக்கெதிராக நடந்திருக்கும் குற்றங்களின் எண்ணிக்கை மட்டும் இருபதாயிரத்திற்கும் அதிகம்.

தாழ்த்தப்பட்டோருக்கு எதிராகத் தாக்குதல் மற்றும் பாலியல் வன்முறை அதிகமாக நடைபெறும் முதல் ஐந்து மாநிலங்களில் தமிழகமும் ஒன்று என்று தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவர் திரு புனியா குற்றஞ்சாட்டியிருக்கிறார். 2011 முதல் 2015 ஏப்ரல் மாதம்வரை ஆதி திராவிடர்களுக்கு எதிராக நடத்தப் பட்ட வன்முறையில் 213 கொலைகள் நடைபெற்றுள்ளன; 192 பேர் பலத்த காயமடைந்துள்ளனர். அதே கால கட்டத்தில் 118 பாலியல் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்படி கடந்த நான்கரை ஆண்டுகளில் மட்டும் 6,074 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன.

“பீரோ ஆப் போலீஸ் ரிசர்ச் அண்ட் டெவலப் மெண்ட்” வெளியிட்டுள்ள அறிக்கையின்படி இந்தியாவிலேயே அதிகமான போராட்டங்கள் நடைபெறும் மாநிலம் தமிழ்நாடுதான் என்றும், கடந்த நான்கரை ஆண்டுகளில் 21,232 போராட்டங்கள் நடைபெற்றுள்ளதாகவும் கூறியுள்ளது. சமூக அமைதியின்மையின் வெளிப்பாடான ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்களில் தமிழகம் இந்தியாவில் முதன்மை மாநிலமாகத் திகழ்வது மிகவும் மோசமான அறிகுறி அல்லவா?

டெல்டா மாவட்டங்களில் இரு போகச்சாகுபடி என்பது இப்போது எட்டாக் கனியாகி விட்டது. விவசாயப் பெருமக்களின் வாழ்வாதாரம் முறையாகக் காப்பாற்றப்படவில்லை. தமிழகத்தில் 2,123 விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டார்கள் என்று தேசிய குற்ற ஆவணக் காப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, தமிழகத்தின் கடன் சுமை 2011-2012இல் 1,03,999 கோடி ரூபாய் என்று தொடங்கி,

2015-2016இல் 2,11,482 கோடி ரூபாய் என்ற அளவுக்கு அதிகமாகி இருக்கிறது. தமிழகத்தில் தனி நபர் பட்டிருக்கும் கடனைப் பொறுத்தவரை, அ.தி.மு.க. ஆட்சியில், தமிழ்நாடு முதல் இடம் வகிக்கிறது. மேற்கு வங்கம், குஜராத், மராட்டியம் என எல்லா மாநிலங்களையும்விடத் தமிழகத்தில்தான் தனி நபர் கடன் கிராமங்களில் 45,803 ரூபாயாகவும், நகரங்களில் 1,16,404 ரூபாயாகவும், மிக அதிகமாக இருக்கிறது என்று "நேஷனல் சாம்பிள் சர்வே" அலுவலகம் புள்ளி விவரம் தந்திருக்கிறது.

அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப்பின் இதுவரை, புதிய மின்சார உற்பத்திக்கென்று, தனியே திட்டம் தீட்டி, "டெண்டர்" கோரி, பணிகளை ஒப்படைத்து நிறைவேற்றியோ, ஒரு மெகாவாட் மின்சாரம்கூட உற்பத்தி செய்யவோ இல்லை.

2011 பொதுத் தேர்தலின் போது அ.தி.மு.க.வினர் கொடுத்த வாக்குறுதிகளில் 90 சதவிகிதம் நிறைவேற்றப் படவில்லை.

2011 முதல் 2016 வரை ஜெயலலிதா சட்டப் பேரவையில் 110வது விதியின்கீழ்ப் படித்த 187 அறிக்கைகளிலே கூறப்பட்ட திட்டங்களின் மொத்த மதிப்பு மட்டும் 1,72,196.14 கோடி ரூபாய்.

தமிழக அரசின் வருவாய் வரவுகள் ஒரு ஆண்டுக்கு எவ்வளவு என்று பார்த்தால் சராசரியாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய். ஓராண்டு அரசின் வருவாய் வரவுகளுக்கும் அதிகமான தொகை செலவாகும் திட்டங்களை முதல் அமைச்சர் ஜெயலலிதா பேரவையில் 110வது விதியின்கீழ் வெளியிட்டிருக்கிறார். ஆனால் 110வது விதியின்கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்களில் 15 சதவிகிதம்கூட இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

புள்ளி விவரங்கள் சுட்டிக் காட்டும் விபரங்களின்படி, இந்தியாவில் உள்ள 21 பெரிய மாநிலங்களில், தமிழ்நாடு ஒட்டுமொத்த வளர்ச்சியில் இருபதாவது இடத்தையும், உள்கட்டமைப்பு வசதிகளில் பதினேழாவது இடத்தையும், கல்வித் துறையில் பதிமூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது என்பது தமிழக வளர்ச்சியில் ஏற்பட்டிருக்கும் தளர்ச்சியைத்தானே சுட்டிக் காட்டுகிறது.

உடன்பிறப்பே, இதைப் போன்ற தகவல்களைத் தொகுத்து வைத்துக்கொண்டு, ஒவ்வொரு தகவலையும், ஒவ்வொரு நாளிலும் சந்திப்போரிடம் எல்லாம் எடுத்து விளக்கிடுக; திரும்பத்

திரும்ப விளக்கிடுக! அப்படிச் செய்யும்போது, சர்வாதிகார எதிர்ப்பு சாகரமாகப் பெருகிவிடும்! ஊருக்கு ஊர், தெருவுக்குத் தெரு, வீட்டுக்கு வீடு, திண்ணைக்குத் திண்ணை தினந்தோறும் செல்! மக்களுடன் திண்ணையில் அமர்ந்து அவர்கள் தரும் தண்ணீரைக் குடித்துவிட்டுப் பிரச்சாரம் செய்!

8-4-2016 அன்று தம்பி மு.க. ஸ்டாலின் சென்னையில் தலைமையேற்று முன்னெடுத்திருக்கும் தேர்தல் பிரச்சாரத்தின் தொடர்ச்சியாக, வாக்காளர் ஒவ்வொருவரையும் நேரில் சந்தித்து, தலைமைக் கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்டிருக்கும் துண்டறிக்கையினை விநியோகம் செய்து, அ.தி.மு.க. ஆட்சியின் ஜனநாயக விரோத - மக்கள் விரோத கொடூர மனப்பான்மையை விளக்கி, அ.தி.மு.க. ஆட்சி மடியவும், கழக ஆட்சி மீண்டும் மலரவும் உறுதி மேற்கொள்வீர்!

கழகப் பொருளாளர், தம்பி ஸ்டாலின் ஏற்கனவே "நமக்கு நாமே" என்ற திட்டமிட்டு, தமிழகம் முழுவதும் மக்களைச் சந்தித்திருக்கிறார். அந்த "நமக்கு நாமே" பயணத்தைக் கழக உடன்பிறப்புகள் ஒவ்வொருவரும் நகல் எடுத்து, தங்கள் பகுதியில், நாள் - நேரம் குறிப்பிட்டு அறிவித்துவிட்டு உடனடியாகத் துவங்க வேண்டுமென்று உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன்.

8-4-2016 அன்று தம்பி மு.க. ஸ்டாலின் சென்னையில் தலைமையேற்று முன்னெடுத்திருக்கும் தேர்தல் பிரச்சாரத்தின் தொடர்ச்சியாக, வாக்காளர் ஒவ்வொருவரையும் நேரில் சந்தித்து, தலைமைக் கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்டிருக்கும் துண்டறிக்கையினை விநியோகம் செய்து, அ.தி.மு.க. ஆட்சியின் ஜனநாயக விரோத - மக்கள் விரோத கொடூர மனப்பான்மையை விளக்கி, அ.தி.மு.க. ஆட்சி மடியவும், கழக ஆட்சி மீண்டும் மலரவும் உறுதி மேற்கொள்வீர்! பேரறிஞர் அண்ணா அவர்கள் கழகத்தை வழிநடத்திக் கொண்டிருந்த காலத்தில், கழகத்தை வளர்த்தெடுக்க ஊன் உறக்கமின்றிக் காலை முதல் நள்ளிரவு வரை பட்டி தொட்டியெங்கும் சென்று பிரச்சாரத்தை மேற்கொண்டும், கழக உடன்பிறப்புகளைத் தனித்தனியாகச் சந்தித்து உரையாடி ஊக்குவித்தும் இடையறாமல் நான் ஆற்றி வந்த பணியை

இப்போது நினைவுகூர்ந்திடும் வகையில் அமைந்திருக்கிறது தம்பி மு.க. ஸ்டாலின், ஓய்வின்றி ஓடியாடி உழைத்துக் கொண்டிருப்பது! தம்பி ஸ்டாலின் ஒருவர் மட்டும் உழைத்தால் போதாது; நீங்கள் ஒவ்வொருவரும் ஸ்டாலினைப் போல உழைப்பீர்! தமிழ் மக்களுக்காக உழைப்பீர்! நல்ல நம்பிக்கையோடு உழைப்பீர்! வெற்றி நமதே!

அன்புள்ள,

மு.க.

10.4.2016

4003. இறுதியில் ஏமாறப் போவது ஜெயலலிதாதான்!

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதா சட்டப்பேரவைப் பொதுத் தேர்தல் பிரச்சாரத்தை 9-4-2016 அன்று துவக்கியிருக்கிறார். மிகப் பெரிய மேடை அமைத்து, அதிலே அம்மையார் ஒருவரை மட்டும் உயரே தனிப் பீடத்தில் அமர வைத்து, காவலுக்கு மூன்று நான்கு காவலர்கள் துப்பாக்கியோடு நிற்க, வேட்பாளர்கள் எல்லாம் மேடைக்கு கீழே பதிவிசாய் கும்பிட்ட கைகளோடு நின்று கொண்டிருக்க, முதலமைச்சர் ஜெயலலிதா தனக்கே உரிய "வசை புராணத்தை"ப் பாடி முடித்திருக்கிறார். எதிர்க்கட்சிகளின் தொடர்ச்சியான குற்றச்சாட்டுகளுக்கு முதலமைச்சர் ஜெயலலிதா பதில் கூறாவிட்டாலும், அவர் கூறியுள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஜனநாயகத்தை மதித்து நாம் பதிலளிக்கக் கடமைப்பட்ட வர்கள் அல்லது பதிலளிக்கத் தெரிந்தவர்கள். ஆட்சியிலே இருந்த காலத்தில் மதுவிலக்குப் பிரச்சினைக்காக சசிபெருமாள் போன்ற சமூகக் காவலர்கள் உயிர் துறந்த போதும், மதுவிலக்கைக் கொண்டு வருவோம் என்று அறிவிக்க முன்வராத ஜெயலலிதா, மதுவிலக்குப் பிரச்சாரப் பாடல் பாடியதற்காகக் கோவன் போன்றோர் மீது தேச விரோத வழக்குத் தொடுத்த ஜெயலலிதா, மீண்டும் ஆட்சிக்கு வந்தால், படிப்படியாக மதுவிலக்குக் கொண்டு வரப்போவதாக அறிவித்திருக்கிறார். அதை நம்புவதற்குத் தமிழ் நாட்டு மக்கள் தயாராக இருக்கிறார்களா என்பது வேறு பிரச்சினை.

முதலமைச்சர் ஜெயலலிதா தனது பேச்சில் மது விலக்கைப் பற்றி நானோ, தி.மு.க.வோ பேசக் கூடாது என்றும், தமிழகத்திலே மது விலக்கை ரத்து செய்தது தி.மு. கழக ஆட்சியிலேதான் என்றும் இத்தனை ஆண்டுக் காலமாக அரைத்த மாவையே திரும்பவும் அரைத்திருக்கிறார். அவரது இந்தக் குற்றச் சாட்டுக்கு நாமும் பலமுறை பதில் கூறி விட்டோம். ஆனாலும் அவருக்குப் பேசுவதற்கோ, குறை சொல்வதற்கோ வேறு எதுவும் கிடைக்காததால், அதையே திரும்பவும் பேசியிருக்கிறார்.

தூங்குபவர்களை எழுப்பலாம், தூங்குவது போல பாசாங்கு செய்பவர்களை எழுப்ப முடியுமா?

தி.மு. கழக ஆட்சியில் மது விலக்கு ஒத்தி வைக்கப்பட்டது என்றாலும், அப்போதே நான் கூறியிருக்கிறேன்; இதனை திராவிட முன்னேற்றக் கழகம் முழு மனதோடு கொண்டு வரவில்லை என்றும், அப்போதுள்ள தமிழகத்தின் நிதி நிலைமைதான் அதற்குக் காரணம் என்றும் பலமுறை விளக்கியிருக்கிறேன்.

மதுவிலக்கை ஒத்தி வைத்து தமிழகச் சட்டப்பேரவையில் நான் உரை நிகழ்த்தும்போது கூட கூறியது என்ன?

"புனித நோக்கத்துடன் இந்தியப் புவி முழுவதும் எந்தக் கொள்கை விரிவாக்கப்பட வேண்டுமென்று காந்தியடிகள் கூறினாரோ, அந்தக் கொள்கை அவர் ஏந்திய கொடி நிழலில் அணிவகுத்து நின்ற அவர்தம் தானைத் தளபதிகளாம் மாநில முதல்வர்களாலேயே பின்பற்ற முடியாமல் போனது மட்டுமல்ல, மத்திய அரசினை நடாத்தும் மகாத்மாவின் வாரிசுகளாலும் புறக்கணிக்கப்பட்டது வேதனை தரும் செய்தியாகும். கொழுந்து விட்டெரியும் நெருப்பு வளையத்திற்குள் கொளுத்தப்படாத கற்பூரமாகத் தமிழ்நாடு எத்தனை நாளைக்குத்தான் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்" என்று சட்டப்பேரவையில் பேசினேன் என்பதை ஜெயலலிதா மறைத்து விட முடியாது. மனச்சாட்சி இடம் கொடுக்காத நிலையில்தான் மதுவிலக்குச் சட்டம் ஒத்தி வைக்கப்படுவதாக அறிவித்தேனே தவிர வேறல்ல. முதலமைச்சர் ஜெயலலிதா இதையெல்லாம் வசதியாக தனது பேச்சிலே மறைத்து விட்டார்; தேர்தல் என்றதும் பொய்யுரை ஆற்றப் புறப்பட்டிருக்கிறார்!

29-6-1971 அன்று நிதி நிலை அறிக்கை மீதான பொது விவாதத்திற்குப் பதிலளித்து நான் உரையாற்றும் போது "மாண்புமிகு உறுப்பினர்களின் - தோழமைக் கட்சி நண்பர்களின் உணர்ச்சியை மதிக்கிறேன். பாராட்டுகிறேன். அவர்களில் சிலபேர் என்னைக் கெஞ்சிக் கூடக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மன்றாடிக் கேட்பதாகக் கூடச் சொன்னார்கள். அவர்களை எல்லாம்விட நான் வயதிலே சிறியவன். அப்படி மன்றாடிக் கேட்டதை, கெஞ்சிக் கேட்டதைத் தயவு செய்து திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள். **இதைத் தவிர வேறு வழி இல்லை என்ற**

காரணத்தால்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கி றோம். அதுவும் ஒத்தி வைத்திருக்கிறோம் என்றுதான் கூறியிருக்கிறோம்" என்றுதான் மிகுந்த பணிவன்போடு விளக்கினேன்.

ஜெயலலிதா தனது பேச்சில், மூதறிஞர் ராஜாஜி அவர்கள் கொட்டும் மழையில் என்னை இல்லத்திலே சந்தித்து, காலில் விழுந்து இறைஞ்சும் வகையில் கெஞ்சினார் என்றெல்லாம் மிகைப்படுத்தி, கற்பனைக் கதை அளந்திருக்கிறார். ராஜாஜி மதுவிலக்கு பற்றி என்னைச் சந்தித்துப் பேசிய போது மழையே பெய்யவில்லை. காலில் விழுந்தும் கேட்கவில்லை. என்னைச் சந்தித்துக் கேட்டது உண்மை. ஆனால் அரசின் நிதி நிலை பற்றி நான் அவரிடம் விளக்கிக் கூறினேன் என்பதுதான் உண்மை.

1971இல் தி.மு. கழக அரசு; கள், சாராயக் கடைகளைத் திறந்தது என்றாலும், 1974இல் - தி.மு. கழக ஆட்சிக் காலத்தி லேயே, மீண்டும் மதுக்கடைகளை மூடி, மது விலக்கை நடைமுறைப்படுத்தியது. திறந்ததை மறக்காமல் சொல்லிக் கொண்டிருப்பவர்கள், மூடியதை மட்டும் வசதியாக மூடி மறைப்பது சரிதானா என்பதை நடுநிலையாளர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். வரலாற்றைச் சொல்லும் போது, நடந்ததை நடந்தபடி சொல்லவேண்டும்; சொந்தக் காரணங்களுக்காக திரிபு வாதத்தைத் திணிக்கக் கூடாது.

ஒத்தி வைப்பது என்பது மீண்டும் நடைமுறைக்கு வரும் என்ற அடிப்படையில்தானே? தி.மு. கழக ஆட்சிக் காலத்திலேயே, தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அமல்படுத்தும் சட்ட முன்வடிவு தமிழக சட்டமன்றத்தில் ஒருமனதாக

22-8-1974 அன்று நிறைவேற்றப்பட்டதா இல்லையா? முதலமைச்சர் ஜெயலலிதா அவரது பேச்சில் இதை அப்படியே மறைத்து விட்டாரே, ஏன்? வழக்கம் போல இந்தப் பிரச்சினையிலும் தன் நெஞ்சறியப் பொய் பேசியிருக்கிறாரே?

அதற்குப் பிறகு வந்த அ.தி.மு.க. ஆட்சியிலே என்ன செய்தார்கள்? **தி.மு.கழக ஆட்சியிலே கொண்டு வந்த மதுவிலக்கு ரத்து என்பது, தி.மு. கழக ஆட்சியிலேயே மீண்டும் திரும்பப் பெறப்பட்டு, மதுவிலக்கு நடைமுறைக்கு வந்து விட்டது என்பதுதான் உண்மை, உண்மை. இதை உண்மைக்குப் புறம்பானது என்று யாராவது சொல்ல முடியுமா?**

ஆனால், 1981இல் அ.தி.மு.க. ஆட்சியில் மீண்டும் கள், சாராய விற்பனைக்காக, மது விலக்கை ரத்து செய்தார்களா இல்லையா? அப்படி ரத்து செய்யப்படவில்லை என்று எவராவது எடுத்துரைத்திட முடியுமா?

ஜெயலலிதா குறுகிய காலத்தில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு காரணமாகப் பதவி விலகி, ஓ. பன்னீர்செல்வம் முதல்வராக இருந்தபோது, அந்நிய மது வகைகள், 100 மில்லி 15 ரூபாய் என்கிற மலிவு விலையில் 2002 ஜனவரி முதல் வாரத்திலிருந்து விற்பனைக்கு வரும் என்று அறிவித்தாரா இல்லையா?

2003ஆம் ஆண்டு ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அரசே மது விற்பனைக்காக "டாஸ்மாக்" நிறுவனத்தைத் தொடங்கி, அரசே ஊருக்கு ஊர் மது விற்பனைக் கடைகளைத் திறந்ததா இல்லையா? "டாஸ்மாக்" கடைகள் ஊருக்கு ஊர் திறக்கப்பட்டதே ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில்தானே? இப்படி நடந்ததா இல்லையா?

திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் மதுவிலக்குக் கொள்கையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று சில மாதங்களுக்கு முன்பு நான் அறிவித்த பிறகு, பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், முன்னணியினரும், சமூக ஆர்வலர்களும், பத்திரிகையாளர்களும், மகளிர் அமைப்புகளும் தொலைபேசி வாயிலாகவும், நேரிலும் என்னைத் தொடர்பு கொண்டு அந்த அறிவிப்பை வரவேற்றதோடு, நல்ல முடிவு என்றும் கூறினார்கள். என்னுடைய அறிவிப்பு அனைத்துத் தரப்பிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்றால் அது மிகையல்ல!

22-12-2008 அன்று பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்களும், மற்றும் பல்வேறு அமைப்புகளின் தலைவர்களும் என்னைச் சந்தித்து தமிழகத்தில் மது விலக்கை அமல்படுத்த வேண்டுமென்று வலியுறுத்திய போது, அவர்கள் கூறியதில் ஒத்தக் கருத்துடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு, 2006ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு தமிழகம் முழுவதிலும் 1300 மதுக் கூடங்களை (பார்) மூடியுள்ளது என்பதையும், அதேபோல் 128 சில்லறை மது விற்பனைக் கடைகளும் மூடப்பட்டுள்ளன என்பதையும் நினைவூட்டினேன்.

மேலும், தொடர்ந்து படிப்படியாக முழு மது விலக்கினை எய்திடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும், அதுவரையில் ஆலயங்கள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், மசூதிகள், தேவாலயங்கள் போன்ற பொது இடங்களுக்கு அருகில் மதுக்கடைகள் அமையாமல் எச்சரிக்கையுடன் நடவடிக்கை மேற்கொள்வது என்று முடிவெடுத்துள்ளது என்றும், மதுக்கடைகள் திறந்திருக்கும் நேரத்தில் ஒரு மணி நேரத்தைக் குறைத்து - மதுக் கடைகள் இயங்கும் என்றும் அறிவித்ததோடு, அதற்கிணங்க ஆணையும் பிறப்பிக்கப்பட்டதா இல்லையா?

மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் முதன் முதலாக மதுவிலக்கு ஒத்தி வைக்கப்பட்டதைப் போல ஜெயலலிதா நேற்றைய தினம் பேசியிருக்கிறார். இதுவும் உண்மையல்ல; இதுவும் ஜெயலலிதா செய்யும் வரலாற்றுத் திரிபுதான்! 1937இல் ராஜாஜி தலைமையில் சென்னை மாகாண அரசு அமைந்ததும், அதுவரை சென்னை மாகாணத்தில் நடைமுறையில் இல்லாத மதுவிலக்கை அமல்படுத்தினார். ஆனால் அதுவும் 1939இல் முடிவுக்கு வந்தது. அந்த 1937 ஆம் ஆண்டிலே கூட, ராஜாஜி முதலமைச்சராக இருந்த போதே கூட, சென்னை மாகாணத்தில் இருந்த 25 மாவட்டங்களில், நான்கு மாவட்டங்களில் மட்டும்தான், அதாவது சேலம், சித்தூர், கடப்பா, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில்தான் மதுவிலக்கு நடைமுறையில் இருந்தது. மற்ற மாவட்டங்களில் 1937 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்த நிலைமைதான் இருந்து வந்தது. 1948இல் ஓமந்தூரார் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் தமிழகத்தில் முழு மதுவிலக்கை நடைமுறைப்படுத்தினார். இதுதவிர மற்ற காலங்களில் அதாவது 1937க்கு முன்பும் சரி, 1939க்குப் பின்பு 1948 ஆம் ஆண்டு வரையிலும் சரி, தமிழகத்திலே மதுவிலக்கு நடைமுறையிலே இல்லை என்பதை சற்று யோசித்துப் பார்த்தால், தமிழகத்திலே தி.மு. கழக ஆட்சியில்தான் முதன் முதலாக மதுவைப் புகுத்தி விட்டார்கள் என்ற ஜெயலலிதாவின் வாதம், எந்த அளவுக்கு விதண்டாவாதம் என்பதையும், தி.மு. கழகத்தை யும் என்னையும் மட்டும் பொறுப்பாக்குவது ஜெயலலிதா வின் எப்படிப்பட்ட தரமில்லாத அரசியல் என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

இன்னும் சொல்லப்போனால், மதுவிலக்கு குறித்து 13-9-1969இல் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஓர் அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கையின் இறுதியில், "மதுவிலக்குக் கொள்கையில் தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள எந்தத் தனி மனிதனுக்கோ, எந்தக் கட்சிக்கோ உள்ள அக்கறையை விட, அந்தக் கொள்கை மக்களுக்குத் தேவையானது என்பதில், தி.மு. கழகத் தலைவரும், தமிழக முதல்வருமான கலைஞருக்கு அதிக அக்கறையும், அதிகப் பிடிப்பும் உண்டு என்பதை மற்றையோரைவிட அழுத்தமாக என்னால் துணிந்து கூற முடியும்" என்று தெரிவித்ததையும், அதற்குப் பின் அவரே "ஆனந்த விகடன்" பத்திரிகையிலே "நான் ஏன் பிறந்தேன்" என்ற தலைப்பிலே எழுதிய நீண்ட தொடர் கட்டுரையிலே விரிவாக எழுதியிருக்கிறார் என்பதையும் ஜெயலலிதா மறந்து விட்டாரா? அல்லது மறைத்து விட்டாரா?

காந்தியவாதி சசிபெரு மாள்! அறுபது வயதைக் கூட எட்டவில்லை. குமரி மாவட்டத்தில் உள்ள ஒரு டாஸ்மாக் கடையை மூட வேண்டுமென்பதற்காகத்தான் போராட்டம். அந்த ஒரு கடையை மூடுவதற்கு ஒப்புக் கொண்டிருந்தால் பிரச்சினையே வந்திருக்காது. தமிழகமெங்கும் போராட்டமும் பெருகியிருக்காது. ஆனால் இந்த ஆட்சியிலே எதைக் கவனித்தார்கள்; இதைக் கவனிப்பதற்கு? "செல்போன் டவரில்" எத்தனை மணி நேரம் அவரால் இருக்க முடியும்? சம்பந்தப்பட்டவர்கள் ஒரு மணி நேரத் திற்குள் அங்கே வந்து பிரச்சினையைப் பேசி முடிவு கண்டிருந்தால், மதுவிலக்குக்காகவே தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டிருந்த சசி பெருமாள் அகால மரணம் அடைந்திருப்பாரா?

மதுவிலக்கு பிரச்சினை பற்றி சில நாட்களுக்கு முன்பு "ஆனந்த விகடன்" "தீயன அகலட்டும்" என்ற தலைப்பில் எழுதியுள்ள தலையங்கத்தில், "தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா; மது விலக்கு குறித்தோ, மதுக்கடைகளின் எண்ணிக்கையைக் குறைப்பது குறித்தோ, டாஸ்மாக் மதுக்கடைகளுக்கு எதிரான போராட்டங்கள் குறித்தோ ஒரு வார்த்தைகூட இதுவரை சொல்லவில்லை. சசி பெருமாள் மரணத்துக்கு முன்னர் இருந்தே தமிழ்நாட்டில் டாஸ்மாக்குக்கு எதிரான போராட்டங்கள் முழு வீச்சுடன் தொடங்கி விட்டன. அவரது மரணத்துக்குப் பிறகு அவை தீவிரமடைந்தன. கல்லூரி

மாணவர்கள், குடும்பத் தலைவிகள், பொது நல அமைப்புகள் என தமிழ்நாடு எங்கும் போராட்டங்கள் தொடருகின்றன. அத்தனை அரசியல் கட்சிகளும் தங்கள் பங்குக்கு களத்தில் நிற்கின்றன. போராட்டங்கள் தீவிரமடைய தொடங்க, ஆகஸ்ட் 15ஆம் தேதி மதுக்கடைகளின் எண்ணிக்கையை குறைப்பது தொடர்பான அறிவிப்பை முதலமைச் சர் வெளியிடுவார் என்ற செய்திகள் அரசுத் தரப்பில் இருந்து ஊடகங்களில் கசியவிடப்பட்டன. போராட்டங் கள் குறித்து ஒரு வார்த்தைகூட பேசாத முதல் அமைச்சர், டாஸ்மாக் கடைகளில் வன்முறைகளில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிக்கை வெளியிட்டார். அரசே நடத்தும் மது வியாபாரம் குறித்து தங்கள் நிலைப்பாடு என்ன என்பதை முதலமைச்சர் அறிவித்தாக வேண்டும். ஒருவேளை தேர்தல் நெருக்கத்தில் டாஸ்மாக் தொடர்பான அறிவிப்புகளை வெளியிட்டால், வாக்கு அறுவடை செய்யத் தோதாக இருக்கும் என அரசு திட்டமிட்டுத் தாமதித்தால், அது மிகத் தவறானது. கேடு எனத் தெரிந்த பின்னர், அந்தக் கணமே அதைக் கைவிடுவதே சரி. தீயன உடனே அகலட்டும்....நல்லன உடனே தொடங்கட்டும்”

என்று ஆனந்தவிகடன் விரிவாகத் தலையங்கம் தீட்டியது.

ஆனந்தவிகடனின் தலையங்கத்தை மெய்ப்பிக்கும் விதத்தில்தான் எல்லாவற்றிலும் எப்போதும் ஏமாற்று வித்தையையே தொடர்ந்து கையாண்டு வருவதைப் போல, தேர்தலில் மக்களை ஏமாற்றுகின்ற நோக்கத்தோடு, ஏமாற்றி வாக்கு அறுவடை செய்து விடலாம் என்ற நப்பாசையோடும், கபட எண்ணத்தோடும், அ.தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால், மதுவிலக்கை படிப்படியாகக் கொண்டு வரப் போவதாக அறிவித்திருக்கிறார். ஆட்சியிலே இருந்த ஐந்தாண்டுகளில் செய்திட மனம் வராததை, மீண்டும் ஆட்சிக்கு வந்தால் செய்யப்போவதாக ஊரை ஏமாற்றச் செய்யப் போகிறார்களாம்! “ஏய்த்துப் பிழைக்கும் தொழிலே சரிதானா?” என்று எம்.ஜி.ஆர். பாடிய பாடல்தான் மக்களின் நினைவுக்கு வரும்!

இதே ஆண்டு, ஜனவரியில் தமிழகச் சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதம் நடைபெற்றபோது, “மதுவிலக்குக் கொள்கையை மத்திய அரசு இந்தியா முழுவதும் கொண்டு வந்தால் நாங்கள் ஆதரிக்கிறோம் என்று சொல்கிறோம்” என்று அமைச்சர் நத்தம் விசுவநாதன் கூறினார். தி.மு.க. சட்டமன்றக்

கட்சித் தலைவர் மு.க. ஸ்டாலின், அண்டை மாநிலங்களைப் பின்பற்றி படிப்படியாகவாவது, மதுவிலக்கை அமல்படுத்துமாறு மிகுந்த கவலையோடு கேட்டுக் கொண்டபோது, அமைச்சர் நத்தம் விசுவநாதன் அதற்கும் மறுத்து விட்டார். ஆனால் தற்போது தேர்தல் வருகிறது என்றதும், மதுவிலக்குக் கொள்கையை மத்திய அரசு இந்தியா முழுவதும் கொண்டு வராத நிலையிலேயே, தாங்கள் ஆட்சிக்கு வந்தால் மதுவிலக்கினைப் படிப்படியாகக் கொண்டு வருவோம் என்று ஜெயலலிதா சொல்வது ஊரை ஏமாற்றுவதற்காகத்தானே? இப்படிச் சொல்லி யாரை வேண்டுமானாலும் ஏமாற்றலாம்; தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது! தேர்தல் பிரச்சாரத்தில் திசை திருப்பும் திரிபு வாதத்தைக் கையிலெடுத்திருக்கிறார்; இறுதியில் ஏமாறப் போவது ஜெயலலிதாதான்!

அன்புள்ள,

மு.க.

11-04-2016

4004. என்ன பாட்டு பாடத் தோன்றும்?

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதா, கடந்த ஐந்தாண்டுகளாகத் தமிழக மக்கள் நலனை முற்றாகப் புறக்கணித்து, எல்லாப் பிரச்சினைகளிலும் ஆணவம் - அலட்சியம் காட்டி, எடுத்தேன் - கவிழ்த்தேன் என்று நடந்து, நிர்வாகத்தை நிர்மூலப்படுத்தி விட்டு, தற்போது அவருடைய தேர்தல் பிரச்சார முதல் கூட்டத்தில் அ.தி.மு.க. ஆட்சியின் சாதனைகளைப் பற்றியெல்லாம் கேட்போர் வாய் பிளந்து கேட்கும் அளவுக்குப் பேசித் தனக்குத்தானே பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களே! நீங்கள் சர்வ காலமும் சஞ்சாரம் செய்து கொண்டிருக்கும் வானத்திலிருந்து தயவுசெய்து சற்றுக் கீழே இறங்கி வாருங்கள்! நேரிடையாக நாட்டில் என்ன நடக்கிறது என்பதை நிதானமாகப் பார்த்துப் புரிந்துகொள்ளுங்கள்!

இதோ, 10-4-2016 தேதிய "தி இந்து" தமிழ் நாளேட்டில் வந்துள்ள செய்தியைப் பாருங்கள்! தலைப்பு - "இளைஞர் படுகொலை, விவசாயி தற்கொலை உள்ளிட்ட சம்பவங்கள், தமிழக அரசுக்கு ஒரே மாதத்தில் 6 நோட்டீஸ் - மனித உரிமை ஆணையம் அனுப்பியது!"

இந்தத் தலைப்பில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் ஆறு சம்பவங்கள் தொடர்பாக விளக்கம் கேட்டுத் தமிழக அரசுக்கு தேசிய மனித உரிமை ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது என்றும், என்னென்ன சம்பவங்கள் என்றும் விரிவாகச் செய்தி வந்துள்ளது. மனித உரிமை ஆணையமே ஒரே மாதத்தில் இந்த அரசுக்கு ஆறு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறது என்றால், அ.தி.மு.க. ஆட்சியின் கீர்த்தி எப்படிப்பட்டது என்பது விளங்குகிறதல்லவா? அ.தி.மு.க. அரசுக்கு நீதிமன்றங்கள் வழங்கியிருக்கும் நித்திய கண்டனங்கள் வேறு ஏராளமாகக் குவிந்திருக்கின்றன!

மனித உரிமை ஆணையம் அனுப்பிய நோட்டீஸ் ஆறு என்றால், உயர் நீதிமன்றம் இந்த அரசுக்கு அனுப்பிய நோட்டீஸ் எண்ணற்றவை! அத்துடன் அரசு உயர் அதிகாரிகளுக்கு உயர் நீதிமன்றம் எத்தனை முறை அபராதம் விதித்திருக்கிறது என்ற பட்டியலைப் பார்த்தால், ஜெயலலிதாவின் ஆட்சித் திறமை பளிச்சென விளங்கும்!

தேர்தல் அறிக்கையிலே அறிவித்த 54 திட்டங்களையும் நிறைவேற்றி விட்டதாகச் சென்னை தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் முழங்கிய ஜெயலலிதா, கடந்த ஐந்தாண்டு காலத்தில் சட்டப்பேரவையில் 110வது விதியின்கீழ் 1 இலட்சத்து 72 ஆயிரத்து 196 ரூபாய் மதிப்புள்ள 187 அறிவிப்புகளை பலத்த வரவேற்போடு அறிவித்தாரே, அந்த அறிவிப்புகளில் எத்தனை அறிவிப்புகளை நிறைவேற்றியிருக்கிறார் என்பது பற்றி வாயே திறக்கவில்லையே ஏன்? அதைப் பற்றி வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் சார்பில் பல முறை கேட்டும் அரசு அதற்குத் தயாராகவில்லையே ஏன்?

ஜெயலலிதாவின் ஆட்சியைப் பற்றியும், நடவடிக்கைகள் பற்றியும் தமிழ்நாட்டு மக்கள் திருப்தி அடைவது கூட இருக்கட்டும்; அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் திருப்தியோடு இருக்கிறார்களா? ஏன், அவருடைய அமைச்சரவையில் இருந்தவர்கள், இருப்பவர்களில் எத்தனை பேர் அவருக்குப் பின்னால் என்னென்ன பேசுகிறார்கள்? பதவியிலே இருப்போர், தங்கள் பதவிப் பாதுகாப்புக்காக அவரைப் புகழ்ந்துகூறிக் குளிரச் செய்யலாமே தவிர, சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் எல்லாம் ஜெயலலிதாவை மனதாரப் பாராட்டுகிறார்களா?

ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கில், அவருக்காக ஆஜரான வழக்கறிஞர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதைப் பற்றி நாளிதழிலேயே செய்தி வந்திருக்கிறதே? ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கிலே தங்கள் பிள்ளைகளையும், குடும்பத்தையும் மறந்து அல்லும் பகலும் பாடுபட்ட வழக்கறிஞர்கள் பலர் என்றபோதிலும், அவர்களில் பலருக்கு

இந்தப் பொதுத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கொடுக்கப்பட வில்லையாம்!

ஜெயலலிதா விடுதலை பெற்ற பிறகு, அந்த வழக்கறிஞர்களையெல்லாம் அழைத்துப் பாராட்டுவார் என்று எதிர்பார்த்ததாகவும், அதைக்கூடச் செய்யவில்லை என்றும், ஆனால் சில காலம் மட்டும் அந்த வழக்கில் ஆஜரான நவனீத கிருஷ்ணன் போன்றவர்களுக்கு அட்வகேட்-ஜெனரல், டி.என்.பி.எஸ்.சி. தலைவர், ராஜ்யசபா எம்.பி., போன்ற பதவிகள் வழங்கப்பட்டதாகவும் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்களாம்.

அந்தக் காலத்தில் "கீறல் விழுந்த எச்.எம்.வி. கிராமபோன் ரிகார்ட் மாதிரி சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்கிறாயே" என்பார்கள்! அதைப்போல முதலமைச்சர் ஜெயலலிதா வாயே திறக்க மாட்டார். எப்போதாவது திறந்தால் வெளியே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று தெரியாமலே, "தமிழ்நாடு மின் மிகை மாநிலமாக ஆகி விட்டது, தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது" என்று ஏற்கனவே பலமுறை சொன்னதை, திரும்பத் திரும்பச் சொல்லத் தவறுவதே இல்லை.

ஆனால் உண்மை நிலவரம் என்ன? இந்தக் கேள்விக்கு 10-4-2016 தேதிய "தினமலர்" நாளேட்டிலேயே பதில் உள்ளது. "அறிவிக்கப்படாத மின் வெட்டு, தூக்கம், தண்ணீரின்றி தவிப்பு" என்ற தலைப்பில் "அடையாறு, வேளச்சேரி சுற்று வட்டாரங்களில், அறிவிக்கப்படாத மின்வெட்டு நிலவுவதால், பகுதிவாசிகள் பல்வேறு சிரமங்களைச் சந்திக்கின்றனர். அடையாறு, பெசன்ட் நகர், திருவான்மியூர், தரமணி, வேளச்சேரி, கிண்டி பகுதிகளில் கடந்த சில நாட்களாக, தினமும், பகல், இரவு நேரங்களில் அறிவிக்கப்படாத மின்வெட்டு ஏற்படுகிறது. சாலைப் பணி மற்றும் மின்மாற்றி அமைக்கும்போது ஏற்படும் கேபிள் பழுதால் மின் வெட்டு ஏற்படுவதாக, மின்வாரிய அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால், எந்தப் பணியும் நடக்காத இடத்தில்கூட, மின்வெட்டு உள்ளது" என்று செய்தி வெளியிட்டு, ஜெயலலிதாவின் பேச்சு எவ்வளவு தவறான தகவல் என்பதை எடுத்துக்காட்டி உள்ளது.

நாளேட்டில் வந்துள்ள தகவல், "பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பதைப் போல, மாநிலத்தின் பல்வேறு

இடங்களிலும் நாள்தோறும் நடக்கும் மின்வெட்டுக்கு ஒரு எடுத்துக்காட்டு மட்டும்தான்!

2011ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்பே மக்களிடம் ஜெயலலிதா என்ன வாக்குறுதி கொடுத்தார் தெரியுமா? "மூன்றே மாதத்தில் மின்வெட்டைப் போக்குவேன்" என்று சொன்னார் ஜெயலலிதா. மூன்று மாதங்கள் அல்ல; முப்பது மாதங்கள் அல்ல; அறுபது மாதங்கள் ஓடிவிட்டன. மின்வெட்டு போகவும் இல்லை; சாகவும் இல்லை. இந்த ஐந்து வருடத்தில் மின்வெட்டால் மாணவர்கள் பாதிக்கப்பட்டார்கள். சிறு மற்றும் குறுந்தொழில்கள் பாதிக்கப்பட்டன. பெரிய தொழிற்சாலைகள் தமிழகத்தில் தொழில் தொடங்கவே வராமல் அஞ்சி அலறி ஓடின.

அம்பத்தூர் தொழிற்பேட்டை, கோவை பகுதியில் உள்ள சிறு மற்றும் குறுந்தொழில்கள் மிக மோசமாக நலிவடைந்து, தொழிற்பேட்டைகளில் இருந்த தொழில் நிறுவனங்கள் எல்லாம் இழுத்து மூடப்பட்டதை ஜெயலலிதா நேற்றைய தினம் மறந்து விட்டுப் பேசியிருக்கிறார். மறந்துவிட்டுப் பேசினாரா? அல்லது வேண்டுமென்றே உண்மையை மறைத்துவிட்டுப் பேசினாரா?

ஜெயலலிதா, சொன்னது எதையும் செய்வதற்காகச் சொல்வதில்லை என்பதைத் தமிழக மக்கள் தெரிந்தே வைத்திருக்கிறார்கள். தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடும் முதலமைச்சர் ஜெயலலிதா, பொய் மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டுவதை விட்டுவிட்டு, உண்மை ஏதாவது கைவசம் இருந்தால், அதைப்பற்றிப் பேசட்டும்! இல்லாவிட்டால் "பொய்யிலே பிறந்து, பொய்யிலே வளர்ந்த, முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களே" என்றுதான் பாடத் தோன்றும்.

இன்றைய (11-4-2016) "தினமலர்" நாளேடு இரண்டாம் பக்கத்திலேயே - "விசாரணை வளையத்தில் தமிழ்நாடு மின் வாரியம் - நிலக்கரி இறக்குமதியில் கறுப்புப் பணம் பதுக்கல்" என்ற தலைப்பில் அரைப்பக்கத்திற்குச் செய்தி வெளியிட்டுள்ளது. முதல் அமைச்சர் இப்படிப்பட்ட செய்திகளைப் படித்தாலே அவருக்கு

எழுதிக் கொடுப்பதெல்லாம் எவ்வளவு உண்மைக்கு மாறான தகவல்கள் என்பதை அவராலேயே புரிந்துகொள்ள முடியும்.

ஜெயலலிதா தனது பேச்சின் துவக்கத்திலேயே 2011ஆம் ஆண்டு, அவர் வெளியிட்ட அ.தி.மு.க.வின் சார்பிலான தேர்தல் அறிக்கையில் அறிவித்த அனைத்துத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுவிட்டன என்று கூறியிருக்கிறார்.

2011ஆம் ஆண்டு அவர் வைத்த அ.தி.மு.க. சட்டமன்ற தேர்தல் அறிக்கையில் சிலவற்றை மட்டும் இங்கே நினைவுப்படுத்துகிறேன்.

- அனைத்து கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் 4 வருடத்திற்குள் மும்முனை மின்சார இணைப்பு வழங்கி, மின்சாரம் தடையில்லாமல் கிடைக்க வழி காணப்படும்.
- மின் திருட்டைத் தடுக்க ஓய்வு பெற்ற ராணுவ வீரர்கள் மூலம் "மின்சாரப் பாதுகாப்புப் படை" அமைக்கப்படும்.
- 2012-க்குள் (இரு வருடங்களுக்குள்) 151 நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில், நகராட்சிக் கழிவைக் கொண்டு 1000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்.
- 2013-க்குள் பத்து 300 மெகாவாட் "சோலார் எனர்ஜி பார்க்" உருவாக்கப்பட்டு 3000 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படும்.
- காற்றாலை மின்சாரம் 30 சதவீதமாகவும், அணு சக்தி மின்சாரம் 25 சதவீதமாகவும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- 160 கிராமப் பஞ்சாயத்துகளில் 200 கிலோ வாட் உயிரிதிரல் (பையோ கேஸ்) இயற்கை எரிபொருள் மின்சாரம் உற்பத்திசெய்ய நடவடிக்கை. இதனால் கிராமப்புறங்களில் 64000 பேருக்கு வேலை வாய்ப்பு.
- வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள வீடுகளுக்குச் சூரிய ஒளி மின்சாரம்.
- கிராமப்புற தெரு விளக்குகள் சூரிய ஒளி மின்சாரத்தில் செயல்பட நடவடிக்கை.

மின்சாரம் பற்றி மட்டும் அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கூறப்பட்ட வாக்குறுதிகள் இவை.

இந்த வாக்குறுதிகள் எல்லாவற்றையும் காற்றில் வேகமாகப் பறக்க விட்டுவிட்டு, ஐந்தாண்டு காலமாக "மின் மிகை மாநிலம்" "மின்வெட்டு நீக்கம்" என்ற பொய்யைத் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார். இந்த மந்திரத்தால் மாங்காய் விழுந்து விடுமா?

"தேர்தல் அறிக்கையில் கூறியதையெல்லாம் நிறைவேற்றி விட்டோம்" என்று ஜெயலலிதா தேர்தல் பிரச்சார முதல் கூட்டத்தில் முழங்கியதைவிட, இன்னும் குரலை உயர்த்தி, சட்டப்பேரவையில் "2011 சட்டசபைத் தேர்தலில் நாங்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியதோடு, அதற்கு மேலும் தமிழக மக்களுக்குப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளோம்" என்று முழங்கினார்.

இதற்கு தி.மு. கழகத்தின் சார்பில் அல்ல, "ஜூனியர் விகடன்" தனது 7-2-2016 இதழில் "5 ஆண்டு கால ஆட்சி.....தேர்தல் வாக்குறுதிகள்..... நிறைவேற்றி விட்டாரா முதல்வர்?" என்ற தலைப்பிலேயே மூன்று பக்கங்களுக்குப் பத்திரிகையாளர் எஸ்.ஏ.எம். பரக்கத் அலி விரிவாக எழுதியிருக்கிறார்.

அதில் "புஸ்வாண வாக்குறுதிகள்" என்ற தலைப்பில், "சென்னை டு கன்னியாகுமரி கடலோர சாலைத் திட்டம் - தென் தமிழகத்தில் "ஏரோ பார்க்" - ஆன்லைன் வர்த்தகம் தடுக்கப்படும் - திருப்பூர் சாயக் கழிவுகளைச் சுத்திகரிக்க விஞ்ஞானக் கழிவு அகற்றும் நிலையம் - 58 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இலவச பஸ் பாஸ் - மின்னணு ஆளுமையின்கீழ் அனைத்துக் காவல் நிலையங்கள் - விவசாயிகளைப் பங்குதாரர்களாகக் கொண்ட 6 ஆடை அலங்கார சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் - பள்ளிகளில் தாய்மொழியோடு பிறமொழிகள் பயில சிறப்புப் பயிற்சிகள் - நீதிமன்றங்களில் தமிழ் மொழி - தமிழில் படித்தவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பில் முன்னுரிமை - வன விலங்குகள் குடியிருப்பு - விவசாய நிலங்களுக்குள் புகுவதைத் தடுக்க நடவடிக்கை - தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியை இரண்டு மடங்காக்குவோம் - மொபைல் மின்னணு ஆளுமைத் திட்டம்" என்று பெட்டிச் செய்தியாகவும் வெளியிட்டுள்ளது.

குறிப்பாக அந்த கட்டுரையின் துவக்கத்தில், "அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சொன்ன வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி விட்டதாக ஜெயலலிதா சொன்னது, வெற்று வீர வசனம் மட்டுமே. 90 சதவிகித வாக்குறுதிகள் பஞ்சராகிப் போயின. தேர்தல் காலத்தில் கொளுத்திப்போட்ட கலர் மத்தாப்புகள் புஸ்வாணமாகி விட்டன" என்றும் எழுதியிருக்கிறார்கள்.

அந்தக் கட்டுரையில் கூறப்பட்டிருந்த ஒருசில பகுதிகளை மட்டும் குறிப்பிடுகிறேன். அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டிருந்த வாசகங்களை அப்படியே கூறிவிட்டு, அதன் கதி என்ன என்பதையும் "ஜூனியர் விகடன்" எழுதியிருந்தது.

"இருண்ட தமிழகம் ஒளி பெறத் தடையில்லா மின்சாரம். இதற்காகச் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்" என தேர்தல் அறிக்கையில் அறிவித்தார்கள். அந்தச் சிறப்புத் திட்டம் எப்போது வரும் என்பது ஆட்சியாளர்களுக்கே வெளிச்சம். "4 ஆண்டுகளுக்குள் மும்முனை மின்சாரம், மின்சார திருட்டை ஒடுக்க முன்னாள் ராணுவத்தினரின் மின்சாரப் பாதுகாப்புப் படை, மின்சாரம் தவறாகப் பயன்படுத்துவது தடுக்கப்படும்" என்கிற வாக்குறுதிகள் எல்லாம் கிழிந்து தொங்குகின்றன.

"கேபிள் டி.வி. அரசு மானியத்துடன் குறைந்த கட்டணத்தில் வழங்கப்படும்" என்றார்கள். மாதம் 70 ரூபாய் கட்டணத்தில் கேபிள் டி.வி. என நிறைவேற்றினார்கள். ஆனால், 70 ரூபாய் கட்டணம் எங்கே வசூலிக்கப்படுகிறது எனத் தெரியவில்லை. "மீனவர் பாதுகாப்புப் படை, 13 குளிர் சாதன மீன் பூங்காக்கள், நடுக்கடல் மீன் பதப்படுத்தல் மற்றும் ஏற்றுமதிக் கப்பல் பூங்கா எல்லாம் எப்போது வரும் என்பதை "மக்களால் நான். . . மக்களுக்காக நான்" எனச் சொல்லும் ஜெயலலிதாதான் சொல்ல வேண்டும்.

"தமிழகத்தின் தெற்கு, கிழக்கு, மேற்குப் பகுதிகளிலும் ஆட்டோமொபைல், தொலைத் தொடர்பு, எலெக்ட்ரானிக்ஸ், கட்டுமானம், கப்பல் கட்டும் துறைகள் ஊக்குவிக்கப்பட்டு செயல்படுத்தப்படும்; கப்பல் கட்டுமானத் துறையில் 10 ஆயிரம் கோடி ரூபாய் அந்நிய நாட்டு முதலீடு ஈர்க்க நடவடிக்கைகள்; நிலம் கொடுக்கும் விவசாயிகளைப் பங்குதாரர்களாக மாற்றிச் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உருவாக்கப்படும்" எனத் தொழில் துறைக்குத் தரப்பட்ட வாக்குறுதிகள் என்னவாயின?

மத்திய அரசின் நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தை முதலில் ஆதரித்து, பிறகு ஜகா வாங்கியது, முதலீட்டாளர்கள் மாநாட்டை ஆட்சியின் அந்திமக்காலத்தில் நடத்தியது, இவை எல்லாமே தொழில் துறையின் மீது காட்டிய அக்கறைக்கு சாம்பிள்கள்.

தயவுதாட்சண்யம் இல்லாமல் சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்படும் என்றார்கள். 5 ஆண்டுகளில் 9,948 கொலைகளும், ஒரு இலட்சம் கொள்ளைகளும் நடந்திருப்பது, சட்டம் ஒழுங்குக்குக் கிடைத்த நற்சான்றிதழ்.

அமைச்சர் செல்லூர் ராஜு அலுவலகத்தில் குண்டு வீச்சு, ராமஜெயம் கொலை வழக்கு, தர்மபுரி, விழுப்புரம் சாதி வன்முறைகள், பரமக்குடி துப்பாக்கிச் சூடு எனச் சட்டம் - ஒழுங்கு சந்திசிரித்தது.

"திரைப்படத் துறையினர் பிரச்சினைகள் தீர்க்கப்படும்" என்பதும் ஒரு வாக்குறுதி. விஸ்வரூபம், துப்பாக்கி, தலைவா ஆகிய படங்கள் தியேட்டரை எட்டிப்பார்ப்பதற்குத் தலைமைச் செயலகத்தின் கதவுகளைத்தானே தட்ட வேண்டியிருந்தது. தரமான படங்களுக்கு மானியம், சின்னத்திரை விருதுகள், அண்ணா, எம்.ஜி.ஆர்., கண்ணதாசன், சிவாஜி பெயர்களில் வழங்கப்படும் கலைத் துறை வித்தகர்கள் விருதுகளையும் மூட்டைகட்டி வைத்தார்கள்."

இப்படி ஜி.வி. கட்டுரை மேலும் பல விபரங்களுடன் நீண்டு கொண்டே போகிறது. இந்த அழகில்தான் முதலமைச்சர் ஜெயலலிதா தனது முதல் பிரச்சாரக் கூட்டத்திலேயே தேர்தல் அறிக்கையில் தெரிவித்த அனைத்துத் திட்டங்களையும் நிறைவேற்றி விட்டதாக முழங்கியிருக்கிறார்.

தேர்தல் அறிக்கையில் தெரிவித்த சில திட்டங்களைப் பற்றிய பட்டியலைத்தான், அதுவும் ஜூனியர் விகடன் போன்ற இதழ்கள் கடந்த சில வாரங்களுக்கு முன்பு எழுதியவற்றையெல்லாம் தேடியெடுத்து இங்கே குறிப்பிட்டிருக்கிறேன். முதலமைச்சர் ஜெயலலிதா, இந்த இதழைப்படித்திருந்தால், தனது தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் இந்தக் கருத்தைப் பேசியிருக்க மாட்டார்; பொய்களைச் சொல்லத் துணிந்திருக்க மாட்டார்!

தேர்தல் அறிக்கையிலே அறிவித்த 54 திட்டங்களை யும் நிறைவேற்றி விட்டதாகச் சென்னை தேர்தல் பிரச்சாரக்

கூட்டத்தில் முழங்கிய ஜெயலலிதா, கடந்த ஐந்தாண்டு காலத்தில் சட்டப்பேரவையில் 110வது விதியின்கீழ் 1 இலட்சத்து 72 ஆயிரத்து 196 ரூபாய் மதிப்புள்ள 187 அறிவிப்புகளைப் பலத்த வரவேற்போடு அறிவித்தாரே, அந்த அறிவிப்புகளில் எத்தனை அறிவிப்புகளை நிறைவேற்றியிருக்கிறார் என்பது பற்றி வாயேதிறக்க வில்லையே ஏன்?

அதைப்பற்றி வெள்ளை அறிக்கை வெளியிடவேண்டுமென்று எதிர்க்கட்சிகள் சார்பில் பல முறை கேட்டும் அரசு அதற்குத் தயாராகவில்லையே ஏன்? ஜெயலலிதா, தேர்தல் அறிக்கையிலே சொன்ன வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை; சட்டப்பேரவையில் 110வது விதியின்கீழ் சொன்ன திட்டங்களையும் நிறைவேற்றவில்லை; நிறைவேற்றாததைப் பற்றிக் கவலைப்படவும் இல்லை.

ஜெயலலிதா, சொன்னது எதையும் செய்வதற்காகச் சொல்வதில்லை என்பதைத் தமிழக மக்கள் தெரிந்தே வைத்திருக்கிறார்கள். தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடும் முதலமைச்சர் ஜெயலலிதா, பொய் மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டுவதை விட்டுவிட்டு, உண்மை ஏதாவது கைவசம் இருந்தால், அதைப்பற்றிப் பேசட்டும்! இல்லாவிட்டால் "பொய்யிலே பிறந்து, பொய்யிலே வளர்ந்த, முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களே" என்றுதான் பாடத் தோன்றும்.

அன்புள்ள,

மு.க.

12.4.2016

4005. தமிழகத்தில் ஏற்பட்டிருப்பது மலர்ச்சியல்ல; மக்கள் கிளர்ச்சியே!

உடன்பிறப்பே,

சென்னை தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் சொன்ன பொய்களின் தொடர்ச்சியாக, விருத்தாசலம் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திலும் முதலமைச்சர் ஜெயலலிதா வழக்கம் போல தன்னால் முடிந்த அளவு பொய்களைச் சொல்லத் தவறவில்லை. மத்திய அரசு கொண்டு வந்துள்ள 'உதய்' திட்டத்தில் தமிழக அரசு பங்கு பெறாதது குறித்து ஒரு சில மத்திய அமைச்சர்களும், தி.மு.க. தலைவர் கருணாநிதியும் தமிழக அரசைக் குறை கூறி வருகின்றனர் என்று ஜெயலலிதா பேசியிருக்கிறார். மத்திய அரசின் 'உதய்' திட்டத்தில் தமிழக அரசு பங்கு பெறாதது பற்றி மத்திய அமைச்சர் கூறிய குறைகளைத்தான் நான் எடுத்துக்காட்டி, இதற்கு முதல் அமைச்சரின் பதில் என்ன என்று கேட்டிருந்தேனே தவிர, "உதய்" திட்டத்தை ஆதரித்தோ, எதிர்த்தோ எனது கருத்து எதையும் நான் கூறவே இல்லை. அப்படிக் கூறாத நிலையில், ஜெயலலிதா ஏன் நிழல் யுத்தம் நடத்தியிருக்கிறார்?

மத்திய அமைச்சர் ஜவடேகர் தனது பேட்டியில் கூறும்போது, "தமிழக மின் வாரியத்துக்கு கடந்த ஆண்டில் மட்டும் 12 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. மின் திருட்டு அதிகரித்து வருகிறது. அப்படி இருந்தும் தமிழகத்தில் மின்சாரத் துறையை நட்டத்திலிருந்து மீட்கவும், வருவாயை அதிகரிக்கவும் உதவும் மத்திய அரசின் "உதய்" எனும் திட்டத்தைச் செயல்படுத்த மாநில அரசு முன்வரவில்லை. இத்திட்டத்தைப் பின்பற்றும் மற்ற மாநிலங்கள் நல்ல பலனைப் பெற்றுள்ளன. மற்ற மாநிலங்களில் செயல்படுத்தியதன் மூலம் 1.80 இலட்சம் கோடி ரூபாய் அளவுக்குக் கிடைத்துள்ளது. ஆனால், தமிழக அரசுக்கு மக்கள் நலனில் அக்கறை இல்லை. நியாயமான நுகர்வோர் பயன் பெறுவதைத் தமிழக அரசு விரும்பவில்லை " என்றும்

மத்திய அமைச்சர் தெரிவித்திருப்பதை, நான் எடுத்துக்காட்டி, இதற்கு முதல் அமைச்சர் விளக்கம் அளிக்க வேண்டுமென்றுதான் எழுதியிருந்தேன். எனது அறிக்கையில் "உதய்" திட்டத்தை தமிழக அரசு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் கூறவில்லை. மத்திய அமைச்சர்கள் அந்தத் திட்டத்தைப் பற்றி தமிழக அரசு மீது சாட்டியுள்ள குற்றச்சாட்டிற்கு என்ன விளக்கம் என்றுதான் நான் கேட்டிருக்கிறேன்.

இந்தத் திட்டம் பற்றி தற்போது விளக்கம் அளித்துள்ள ஜெயலலிதா, மத்திய அமைச்சர் பேட்டியளித்தவுடன் அப்போதே பதில் கூறியிருக்கலாமே? அப்படிப் பதில் கூறியிருந்தால் பிரச்சினையே எழுந்திருக்காதே! அப்போது வாயை மூடிக் கொண்டிருந்து விட்டு, தற்போது விருத்தாசலத்தில் போய் என் மீது பாய்வானேன்? பேசுவதற்கு வேறு பொருள் இல்லை என்பதால், ஜெயலலிதா, நான் சொல்லாததைச் சொன்னதாகக் கற்பனை செய்து கொண்டு பதில் கூறியிருக்கிறார்.

மேலும் நேற்றையதினம் (13.4.2016) திருச்சிக்கு வந்திருந்த மத்திய அமைச்சர், பியுஷ் கோயலிடம் ஜெயலலிதாவின் நிலைப்பாடு குறித்து கேள்வி கேட்டபோது, "மாநில அரசின் பிடிவாத குணத்தால் என்னால் முதல்வர் ஜெயலலிதாவைச் சந்திக்க முடியவில்லை. இந்தத் திட்டம் குறித்து தமிழக அரசுக்கு ஏற்பட்டுள்ள அய்யப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்காக இணைச் செயலாளர் தலைமையிலான குழுவை அனுப்பியிருந்தேன். மாநில அரசு கேட்ட கேள்விகளுக்கு அவர்களும் தெளிவாக விளக்கமளித்துள்ளார்கள். "உதய்" திட்டம் தொடர்பாக ஜெயலலிதா அளித்துள்ள விளக்கம் ஆதாரமற்றது; தவறானது" என்று மத்திய அமைச்சர் தெளிவாக்கியிருக்கிறார். மத்திய அமைச்சரும், தமிழக முதலமைச்சரும் மாறி மாறி இந்தத் திட்டம் பற்றி கேள்விகளை எழுப்பிக் கொண்டிருக்கிறார்களே, இதன் உண்மை நிலை என்ன என்று மக்களுக்குத் தெளிவாக்க வேண்டாமா என்றுதான் நான் கூறியிருந்தேன்.

பா.ஜ.க. வின் தேசியத் தலைவர் அமித்ஷா திருச்சியில் செய்தியாளர்களிடம் 13.4.2016 அன்று பேசும் போது, "மத்தியில் ஆளும் நரேந்திர மோடி அரசு பல சாதனைத் திட்டங்களைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தது. ஆனால் மாநில அரசு அதற்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை. பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத்

திட்டம், ஏழைகள் காப்பீடு திட்டம் போன்றவை மாநில அரசு ஒத்துழைக்காததால் அடித்தட்டு மக்களைச் சென்றடைய வில்லை. இந்தியாவிலேயே தமிழகம் ஊழல் மிகுந்த மாநிலமாக உள்ளது. ஊழல் மிகுந்த ஆட்சி தமிழகத்தில்தான் நடைபெறுகிறது" என்று தமிழக அரசு மீது அமித்ஷா குற்றஞ்சாட்டியிருக்கிறாரே, அதற்காவது முதலமைச்சர் ஜெயலலிதா உரிய பதிலைக் கூற வேண்டாமா?

மத்திய அமைச்சர்கள் தங்களால் முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்திக்க இயலவில்லை என்று ஒருவர் அல்ல, இரண்டு மூன்று பேர் தொடர்ந்து கூறியதற்கு, வெங்கைய நாயுடு சந்தித்தார் என்று ஜெயலலிதா பூசி மெழுகியதோடு, மத்திய அமைச்சர்கள் ஜெயலலிதாவை எவ்வெப்போது சந்தித்தார்கள் என்பது பற்றி ஓ.பன்னீர்செல்வம் ஏற்கனவே அறிக்கை கொடுத்துவிட்டார் என்றும் கூறி, அது தான் பதில் என்று விருத்தாசலத்தில் ஜெயலலிதா கூறியிருக்கிறார். ஓ.பன்னீர்செல்வம் கொடுத்த அறிக்கையில், முதலமைச்சர் ஜெயலலிதா மத்திய அமைச்சர்களை விழாக்களிலும், வேறு சில நிகழ்ச்சிகளிலும் சந்தித்த விவரங்களையெல்லாம் அறிக்கையாகக் கொடுத்திருக்கிறாரே தவிர, தமிழகத்தின் தேவைகளுக்காக முதலமைச்சர் ஜெயலலிதா மத்திய அமைச்சர்களை எவ்வெப்போது சந்தித்தார் என்ற விவரங்களை ஓ.பன்னீர்செல்வம் தனது அறிக்கையிலே தெரிவிக்கவில்லை என்பதை ஜெயலலிதா வசதியாக மறைத்துவிட்டார்.

மேற்குத் தொடர்ச்சி மலை பாதுகாப்பு தொடர்பாக தமிழகம் இன்னும் அறிக்கை அனுப்பவில்லை என்று கருணாநிதி கூறியிருப்பதும் பொய்யான குற்றச்சாட்டு என்று ஜெயலலிதா பேசியிருக்கிறார். இந்தக் குற்றச்சாட்டையும் ஜெயலலிதா மீது நான் கூறவே இல்லை. நான் கூறியதெல்லாம், மத்திய அமைச்சர் மேலும் கூறும்போது, "மேற்குத் தொடர்ச்சி மலை பாதுகாப்பு தொடர்பாக அதைச் சுற்றியுள்ள தமிழகம் உள்பட 7 மாநிலங்களின் அறிக்கை கேட்கப்பட்டது. இதில் 6 மாநிலங்கள் மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பியுள்ளன. ஆனால் தமிழக அரசு மட்டும் இதுவரை எந்தவிதமான அறிக்கையும், பதிலும் அளிக்கவில்லை. "நான் நூற்றுக்கும் மேற்பட்ட முறை தமிழக முதல்வரைச் சந்திக்க முயன்றும், சந்திக்க முடியவில்லை" என்றெல்லாம் மத்திய

அமைச்சர் தெரிவித்திருப்பது சாதாரணமான குற்றச்சாட்டு அல்ல; தமிழக அரசின் மீதும், முதலமைச்சர் ஜெயலலிதா மீதும் தொடுக்கப்பட்டிருக்கும் மிகக் கடுமையான குற்றச்சாட்டு" என்றுதானே தவிர நானாக இந்தக் குற்றச்சாட்டைக் கூறவே இல்லை என்பதை முதலமைச்சர் ஜெயலலிதா அவருடைய அலுவலகத்தில் பழைய நாளேடுகள் இருந்தால் எடுத்துப் பார்த்து, அந்தக் குற்றச்சாட்டைக் கூறியது யார் என்பதை இனியாவது புரிந்து கொள்வது நல்லது. ஜெயலலிதா இப்படி மத்திய அமைச்சர்களைச் சந்திக்க மறுத்தது இருக்கட்டும்; தேர்தலுக்குத் தேர்தல் மட்டும் பறந்து சென்று பிரச்சாரம் செய்யும் ஜெயலலிதா, இந்த ஐந்தாண்டுகளில் மாவட்டங்களுக்கு நேரில் சென்று எத்தனை முறை மக்களைச் சந்தித்துப் பேசினார்?

எல்.இ.டி. பல்புகள் பற்றி நான் குழப்பிக் கொண்டு கேள்விகளைக் கேட்டிருப்பதாக ஜெயலலிதா விருத்தாசலத்தில் பேசியிருக்கிறார். எல்.இ.டி. பல்புகளைப் பற்றி நான் குழப்பிக் கொள்ளவில்லை. மத்திய அமைச்சர் கூறும்போது, "மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு 100 ரூபாய் விலையில் எல்.இ.டி. பல்புகளை வழங்குகிறது. அப்படி இருந்தும் தமிழக அரசு இந்தத் திட்டத்துக்கு ஒத்துழைக்கவில்லை. ஆனால், அதற்கு மாறாக வெளி மார்க்கெட்டில் எல்.இ.டி. பல்புகளைத் தமிழக அரசு வாங்கி வருகிறது. இதிலிருந்து தமிழக அரசு அதிக விலைக்கு விற்பவர்களுக்கு சாதகமாகச் செயல்பட்டு வருகிறது என்பது நிரூபணமாகியுள்ளது" என்றும் ஆதாரப்பூர்வமாக தமிழக அரசின் மீது ஊழல் குற்றஞ்சாட்டியிருக்கிறார். அதற்கு என்ன விளக்கத்தைத் தமிழக அரசு கூறுகிறது என்றுதான் எனது அறிக்கையிலே கேட்டிருக்கிறேன். முதலமைச்சர் ஜெயலலிதா, எல்.இ.டி. பல்புகள் பற்றி ஆங்கில நாளேடுகளிலும், ஜூனியர் விகடன் இதழிலும் என்னென்ன எழுதப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களைத் தெரிந்து கொள்ளா மல், அவற்றில் என்னென்ன எழுதப்பட்டுள்ளன என்று நான் எடுத்து எழுதியிருந்ததையும் ஒழுங்காகப் படித்து தெரிந்து கொள்ளாமல், அந்தத் திட்டம் பற்றி எனக்குப் புரியவில்லை என்று, எல்லாம் தனக்குத் தெரியும் என்ற அகந்தையோடு பேசியிருக்கிறார், ஜெயலலிதா. அதே பாணியில் பதில் சொல்வது எளிது. அது என்னுடைய வயதுக்கும் அனுபவத்திற்கும் ஏற்புடையதல்ல.

மக்களிடமிருந்து வாக்குகளை வாங்குவதற்காகத் தேர்தல் முடியும் வரை ஜெயலலிதா "உங்களால் நான், உங்களுக்காக நான்" என்று உருகுவார்; தேர்தல் முடிந்து வெற்றி பெற்று அரியாசனத்தில் வீற்றிருந்த வரை, "எனது அரசு, நான் ஆணையிட்டேன்" என்று "இனி எல்லாம் நான், நான், நானேதான்" என்ற சர்வாதிகார பாணியில் ஆணவத்தின் நுனிக் கொம்பேறி சதிராடியதைத் தமிழக மக்கள் மறந்து விட வில்லை.

"ஒரு தாய்க்குத் தன் பிள்ளைக்குத் தேவை யானது தெரியும். எனவே உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பது இந்தத் தாய்க்குத் தெரியும்" என்று விருத்தாசலம் பொதுக் கூட்டத்தில் தாய் (?) வேடம் போட்டிருக்கிறார்.

டாஸ்மாக் கடைகளை மூட வேண்டுமென்று தமிழகத்துத் தாய்மார்கள் தன்னெழுச்சியாகப் போராட்டம் நடத்திய போது, அவர்கள் மீது காவல்துறையினர் வன்முறையை ஏவியதும், கைது செய்ததும்தான், ஒரு தாய் தனது பிள்ளைகளை நடத்தும் விதமா?

மின் வெட்டு - மின் பற்றாக்குறையால் தேர்வுகளுக்குத் தயாராகும் மகளிர் முறையாகப் படிக்க முடியாமல் அவர்களுடைய படிப்பைப் பாழாக்கியதுதான், ஒரு தாய் தன் பெண் குழந்தைகளின் தேவை யறிந்து செய்யும் உதவியா?

நீதிமன்ற உத்தரவுகள் இருந்தும், அவற்றைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், 20 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்களை வீட்டுக்கனுப்பியதன் காரணமாக ஆயிரக்கணக்கான தாய் மார்களும் பெண் குழந்தைகளும் ஆற்றாது அழுத கண்ணீர்தான், ஒரு தாய் தன் குழந்தைகளுக்கு என்ன செய்ய வேண்டும் என்று தெரிந்தே வழங்கிய பரிசுப் பொருளா? -

ஒரு தாயின் ஆட்சியில்தான், கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் 2335 பெண்கள் பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றனர், பெண்களுக்கெதிராக இருபதாயிரத்திற்கும் அதிகமான குற்றங்கள் நடந்திருக்கின்றன; என்பவைதான் தாயின் தகைமைக்குச் சான்றுகளா? ஒரு தாயின் கீழ்ப் பணியாற்றி வந்த தலித் பெண் போலீஸ் அதிகாரி விஷ்ணுப்ரியா தற்கொலை செய்து கொண்டாரே, ஏன்?

செயற்கைப் பேரிடராய் சென்னை உள்ளிட்ட மாவட்டங்களில் பல இலட்சம் தாய்மார்கள் தங்களுடைய உறையுளையும்

உடைமைகளையும் இழந்து அகதிகளாகி ஆற்றவியலா அல்லல்களுக் காளாகி அலைக்கழிக்கப்பட்டார்களே, அது இந்தத் தாய்க்குத் தெரிந்தேதான் நடந்ததா? வெறும் வாய்ச் சொல்லால் "தாய்" என்று தன்னைத்தானே அழைத்துக் கொள்வதால், தாய்மைப் பண்புகள் ஓடி வந்து ஒட்டிக் கொள்ளுமா?

"எனக்கென்று தனியே ஏது குடும்பம்?" என்றும் ஜெயலலிதா கேட்கிறார். ஒருவருக்குக் குடும்பம் என்று ஒன்று இருப்பது குற்றமில்லை; எனினும் ஜெயலலிதா தனியாகவா வாழ்ந்து கொண்டிருக்கிறார்? உடன்பிறவாச் சகோதரி, அந்தச் சகோதரியின் ஏராளமான சொந்தங்கள் எல்லோரும் போயஸ் கார்டன் மாளிகையில்தானே வசிக்கிறார்கள்? அங்கிருந்து கொண்டுதானே பல முனைகளிலும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்! ஒரு குடும்பம் அல்ல; பல குடும்பங்களை உடன் வைத்துக்கொண்டு, குடும்பம் எனக்கு ஏது என்றால்; குதர்க்கம் என்றல்லவா மக்கள் நினைத்துக் கொள்கிறார்கள்!

மதுவிலக்கு பற்றி, அதன் வரலாற்று ரீதியான ஆதாரங்களின் அடிப்படையில், தொடர்ச்சியான நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டி நான் விளக்கமாகக் கூறிய பிறகும், ஜெயலலிதா அவைகளைப் படிக்காமலேயோ, அல்லது படித்ததை மறைத்து விட்டோ, திரும்பத் திரும்ப ஒவ்வொரு கூட்டத்திலும் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை என்பதைப் போல, மதுவிலக்கை தி.மு. கழக அரசுதான் ரத்து செய்தது என்று சாதித்து வருகிறார். தமிழக அரசுக்கு அப்போதிருந்த நிதி நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, மதுவிலக்கை கழக அரசு ஒத்திதான் வைத்தது; அதுவும் ஒரு சில ஆண்டுகளுக்குத்தான்! 1974ஆம் ஆண்டு , தி.மு. கழக ஆட்சியிலேயே மது விலக்கு மீண்டும் என்னாலேயே கொண்டு வரப்பட்டுவிட்டது. இப்போது நடைபெற்று வரும் மதுக் கடைகள் முதன் முதலாக அ.தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டவை தான். ஆனால் இந்த உண்மையை அப்படியே ஒதுக்கி வைத்து விட்டு, முதலமைச்சர் பதவியிலே இருப்பவர் ஊருக்கு ஊர் சென்று சொன்ன பொய்களையே மீண்டும் சொல்லி மக்களை ஏமாற்ற நினைப்பது சரிதானா? பொய்களைச் சொல்வதில், ஜெயலலிதாவுக்கு இருக்கும் தகுதியை யாராலும் விஞ்ச முடியாது!

தமிழகத்தில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது, மலர்ச்சி தோன்றியிருக்கிறது என்று தேர்தல் பிரச்சாரத்தில் ஜெயலலிதா

பேசி வருகிறார். இந்த ஐந்தாண்டுக் கால ஜெயலலிதா ஆட்சியில் தமிழகத்தில் ஏற்பட்டிருப்பது வளர்ச்சியல்ல; இதுவரை ஏற்படாத தளர்ச்சி! மலர்ச்சியல்ல; பல முனைகளிலும் மக்கள் கிளர்ச்சியே!

அன்புள்ள,

மு.க.

15-04-2016

4006. ஒரே நோக்குடன் உழைத்திடுவீர்! வெற்றி நமதே!

உடன்பிறப்பே,

பதினைந்தாவது பொதுத்தேர்தல் வரும் மே திங்கள் 16ஆம் நாள் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியில் இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி சார்பில் 41 இடங்களிலும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி சார்பில் 5 இடங்களிலும், மனித நேய மக்கள் கட்சி சார்பில் 5 இடங்களிலும், புதிய தமிழகம் கட்சி சார்பில் 4 இடங்களிலும், மக்கள் தே.மு.தி.க. சார்பில் 3 இடங்களிலும், பெருந்தலைவர் மக்கள் கட்சி, தமிழ்நாடு விவசாயிகள், தொழிலாளர்கள் கட்சி, சமூக சமத்துவப் படைக் கட்சி ஆகியவை தலா ஓரிடத்திலும் என்று 61 தொகுதிகள் தோழமைக் கட்சியினருக்கு வழங்கப்பட்டு, திராவிட முன்னேற் றக் கழகம் 173 தொகுதிகளில் போட்டியிடுகிறது. காங்கிரஸ் கட்சிக்கு 41 இடங்கள் ஒதுக்கியதிலேகூட, ஆற்காடு தொகுதி காங்கிரஸ் கட்சிக்கு என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்ட போதிலும், பின்னர் கழகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த சோளிங்கர் தொகுதியில் காங்கிரஸ் கட்சி போட்டி யிடுவது என்றும், ஆற்காடு தொகுதியில் கழகம் போட்டியிடுவதென்றும் இரண்டு கட்சியினரும் கலந்து பேசி ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றையதினம் (13-4-2016) திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடவுள்ள 173 வேட்பாளர்களின் பெயர்களும் அறிவிக்கப்பட்டுள்ளது. போட்டியிடுகின்ற கழக வேட்பாளர்கள் எல்லாம் என்னைச் சந்தித்து மகிழ்ந்து சால்வை அணிவிக்கின்ற நேரத்தில், அதே தொகுதியில் போட்டியிட விருப்ப மனு தாக்கல் செய்து, ஆய்வுக்கும் வந்து, தற்போது வாய்ப்புக் கிடைக்காத நிலையில் அவர்கள் எல்லாம் வருந்துவார்களே, அவர்களை எல்லாம் எப்படி நேரில் சந்திப்பது என்ற வேதனைதான் என் மனதைக் குடைகிறது. எனக்கே மிக நன்றாகத் தெரிந்தவர்கள், கழகத்திற்காக நீண்ட காலம் அரும்பாடுபட்டவர்கள்,

கழகம் நடத்திய போராட்டங்களில் ஈடுபட்டு காராக்கிரகத் தில் வாடியவர்கள் சிலருக்கும், அவர்களுடைய அருமை வாரிசுகளுக்கும் நான் வாய்ப்பளிக்க வேண்டுமென்று விரும்பிய நேரத்திலே, அவர்களை விட வேறு சிலருக்குத்தான் வெற்றி வாய்ப்பு அதிகம், இந்தத் தேர்தலில் விருப்பமானவர்களுக்கு வாய்ப்பு அளிப்பதைவிட, வெற்றி வாய்ப்பு அதிகமுள்ளவர்களுக்கு வாய்ப்பு அளிப்பதுதான் சிறப்பானது என்ற சரியான கருத்து சொல்லப்பட்ட காரணத்தால், நான் விரும்பிய சிலருக்கு வாய்ப்பு அளிக்க முடியாமல் போய் விட்டது. அதனால் அவர்கள் எல்லாம் வருந்துவார்களே என்ற வேதனைதான் எனக்கு மிகுதியாக உள்ளது. அவர்களில் சிலருடைய பெயர்களையே குறிப்பிட நான் நினைத்த போதும், ஒருவர் பெயரை மட்டும் குறிப்பிட்டால், மற்றவர்களைக் குறிப்பிட வில்லையே என்ற நிலை ஏற்பட்டு விடும்.

திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிடும் 173 இடங்களில் 97 பழைய முகங்களுக்கும், 76 புது முகங்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. 19 மகளிருக்குப் போட்டியிட வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. கழக வேட்பாளர்கள் 173 பேரில், 106 பேர் பட்டதாரிகளாவர். அதிலும் 9 பேர் டாக்டர்கள்; 27 பேர் வழக்கறிஞர்கள்; 12 பேர் இஞ்சினீயர்கள்; 19 பேர் முது நிலைப் பட்டதாரிகள், முனைவர் எனும் பி.எச்டி ஆய்வு பட்டம் பெற்றோர் 3 பேர்; இளநிலைப் பட்டதாரிகள் 36 பேர். இவர்கள் எல்லாம் விருப்ப மனு தாக்கல் செய்து, நேர்காணலுக்கும் வந்து, நேர்காணலில் நானும், பொதுச் செயலாளர் பேராசிரியரும், பொருளாளர் ஸ்டாலினும், முதன்மைச் செயலாளர் துரைமுருகனும், அமைப்புச் செயலாளர் ஆலந்தூர் ஆர்.எஸ். பாரதியும் பிப்ரவரி 22ஆம் தேதி தொடங்கி மார்ச் 7ஆம் தேதி வரை கலந்து கொண்டு, சுமார் 5 ஆயிரம் பேரை நேர்காணல் செய்து, அவர்களின் தகுதிகள், வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு மற்றும் சூழ்நிலைகள் இவற்றையெல்லாம் கடந்த சில வாரங்களாக ஆய்ந்தறிந்து தேர்வு செய்யப்பட்டவர்களின் பெயர்கள்தான் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளன.

விருப்ப மனு தாக்கல் செய்தவர்கள் அனைவருமே கழகத்திற்காகப் பாடுபட்டவர்கள்; ஏதோ ஒரு வகையில் கழகத்திற்காக உழைத்தவர்கள்; பல பேர் கழகம் நடத்திய

போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்கள் என்பதில் எனக்கு எப்போதும் சந்தேகமில்லை. ஆனால் நான் ஏற்கனவே தெரிவித் ததைப் போல ஒரு தொகுதியில் கழகத்தின் சார்பில் ஒருவரைத்தான் தேர்ந்தெடுக்க முடியும். ஒரு தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட பலர் தகுதி உடையவர்களாக இருக்கக்கூடும். அவர்களில் ஒருவருக்கு ஒப்பீட்டளவில் வெற்றி வாய்ப்பு அதிக மாக இருக்கலாம். அப்படிப்பட்டவரைத் தேர்ந் தெடுப்பது, அதுவும் "சமன் செய்து சீர்தூக்குங் கோல் போல் அமைந்து" தேர்ந்தெடுப்பது என்பது எவ்வளவு கடினமான காரியம் என்பதைப் பற்றி நான் முன்பே தெரிவித்திருக்கிறேன்.

சில தொகுதிகளில் நாங்கள் வெற்றி வேட்பாளர் என்று தேர்ந்தெடுத்து அறிவிப்பதற்காகக் காத்திருந்த நிலையில், அந்தத் தொகுதிகள் தோழமைக் கட்சிகளுக்கு அளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. ஒரு தொகுதிக்கு பல பேர் விருப்ப மனு தாக்கல் செய்த நிலையில் அவர்களில் பலரும் வெற்றி வேட்பாளர்கள் என்று கருதினாலும் அதிலே ஒருவரைத்தான் எங்களால் அறிவிக்க முடிந்தது.

அறிவிக்கப்படாதவர்கள் யாரும் வருத்தப்படக் கூடாது. அந்தத் தொகுதிகள் அனைத்திலும் "தி.மு. கழகம்தான் போட்டியிடுகிறது" என்ற உறுதியான எண்ணத்தோடு உழைத்திட வேண்டும். அனைத்துத் தொகுதிகளிலும் உங்களுக்காக மேலும் நான் தொடர்ந்து உழைத்திட, உங்களுக்குப் பதிலாக நான் போட்டியிடுகிறேன், நமது சின்னம் உதய சூரியன், மற்றும் நம் தோழமைக் கட்சிகளின் சின்னம் என்ற உணர்வோடு அல்லும் பகலும் அரும் பாடுபட வேண்டும். எல்லோருக்கும் நல் வாய்ப்பு வரும்; தன்னுடைய சுற்று வரும் வரை காத்திருக்கக் கற்றுக் கொண்டிருப்பவருக்குத்தான் காரியம் கை கூடும் என்பதை மறக்கக் கூடாது. இதைத்தான் அண்ணா அவர்கள் ஆங்கிலத்தில் "We should learn to Wait till our Turn comes" என்று அழகாகச் சொல்லியிருக்கிறார் என்பதை நான் முன்பே ஒரு முறை சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

விருப்ப மனு தாக்கல் செய்தவர்களுக்கு நான் விடுக்கும் வேண்டுகோள், இந்தத் தேர்தல், நம்முடைய கழகம் பெரும்பான் மையான இடங்களில்

வெற்றி பெற்று, தமிழக மக்களின் நலனுக்காக ஆட்சி அமைத்தே தீர வேண்டும் என்பதற்கான தேர்தல். இந்தத் தேர்தலில் தாம் வெற்றி பெற வேண்டுமென்று கழகத்தில் மனு தாக்கல் செய்தோர் எண்ணாமல், தி.மு. கழகம் வெற்றி பெற வேண்டும், அண்ணா கண்ட சின்னமாம் - அண்ணா தந்த, அண்ணா வென்ற சின்னமாம் உதய சூரியன் வெற்றி பெற வேண்டுமென்ற அசைக்க முடியாத எண்ணத்தோடு இருக்க வேண்டும். போட்டியிட வாய்ப்புக் கிடைத்தோரும், நமக்கு வாய்ப்புக் கிடைத்து விட்டது, நமக்கு எதிராகப் போட்டியிட மனு செய்தவர்களைக் "கவனித்துக்" கொள்ளலாம் என்ற எதிர்மறை நோக்கிலும் போக்கிலும் நடந்து கொள் ளாமல், அனைவரையும் அன்போடு அரவணைத்துச் சேர்த்துக் கொண்டு, கழகத்தின் வெற்றிக்காக முழு மூச்சுடன் பாடுபட வேண்டும். -

அண்ணா அவர்கள் ஒருமுறை பேசியதை நான் ஏற்கனவே நினைவுபடுத்தியது போல, "திராவிட முன்னேற்றக் கழகம் ஓர் அரசியல் கட்சி மட்டுமல்ல; இது ஒரு சமுதாயச் சீர்திருத்த இயக்கம். இதில் ஈடுபட்டிருக்கின்ற அத்தனை பேரும், யார் யார் எந்தெந்த இடத்தில் இருப்பது என்பதல்ல; யார் யார் எந்தெந்த நேரத்தில் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வது என்பதும் முக்கியமல்ல; ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொறுப்பை ஏற்றிருப்பது இந்த இயக்கத்திலே அமைந்திருக்கின்ற போர்ப் பாசறை போன்றதாகும். இதிலே பகைவர்கள் உள்ளே புக நினைத்தால், அவர்கள் எங்கள் நெருக்கத்தின் இடையில் சிக்கிக் கூழாகிப் போவார்கள். திராவிட முன்னேற்றக் கழகம், ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்திலிருந்து பணியாற்ற வேண்டுமென்பதற்கு ஏற்பட்டிருக்கிற ஓர் அமைப்பே தவிர, வேறு ஏற்றத் தாழ்வுகள், மனமாச்சர்யங்கள் எங்களுக்குள் இருக்கிறதென்று மாற்றார்கள் கருதினால், நாங்கள் வளர்ந்த வரலாற்றை அவர்கள் தெரிந்து கொண்டவர்கள் அல்லர் என்றுதான் சொல்ல வேண்டும். நாங்கள் ஒரு தாயின் வயிற்றில் பிறக்காததற்குக் காரணம், ஒரு தாயின் வயிறு இத்தனை பிள்ளைகளையும் தாங்காது என்பதுதான்" என்று 26-9-1960 அன்று சென்னை கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் உருக்கமாகக் கூறியதை நாம் என்றும் நினைவில் நிறுத்தியிருப்பதை அறியாத மாற்றார், நம்மிடையே பிளவு ஏற்படாதா, இடையில் நாம் புகுந்து ரத்தம்

குடிக்க முடியுமா என்று ஏங்கிய நிலையில் காத்துக் கிடக்கும் எதிரிகள் இறுதியில் ஏமாந்துதான் போவார்கள்!

எனவே கழக உடன்பிறப்புகள் சிறு வேற்றுமை இருந்தாலும் அதனை மறந்து, "குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை" என்பதை நினைத்து, அண்ணா அவர்கள் கூறிய "புடவை உவமை"யை மனதிலே கொண்டு, இந்த முறை இன்னார் செயலாளராகப் பணியாற்றினாரா; அடுத்த முறை மற்றொருவர் அந்தப் பொறுப்புக்கு வரட்டும் என்ற விட்டுக் கொடுக்கும் விசாலமான நோக்கோடு கழக உடன்பிறப்புகள் உணர்ந்து பணியாற்ற வேண்டும் என்பதை எச்சரிக்கையாக உங்களுக்குத் தெரிவிக்கின்றேன். மாறாக, நாங்கள் மோதியே தீருவோம் என்ற ரீதியில் நிகழ்வுகள் நடக்குமானால், அது மோதுவோருக்கும், மோதுவோரின் சொந்த வீடான இந்த இயக்கத்திற்கும் தீங்காக முடியும் என்பதையும்; அது வேட்பாளர்களையும் பாதித்து நம் அனைவரையும் பாதித்து, தமிழகத்தின் எதிர்காலத்தையே பாதித்து விடும் என்பதையும், "ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு" என்பதையும் நினைவிலிருந்து சிறிதும் அகன்று விடாமல் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டுகிறேன். கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு காத்து, கழகத்தின் வெற்றி, உதய சூரியனின் வெற்றி என்ற ஒரே நோக்குடன் உழைத்திடுவீர்! வெற்றி நமதே!

அன்புள்ள,

மு.க.

15-04-2016

4007. அ.தி.மு.க. அரசின் நீதிமன்றக் கண்டனங்கள் ஏராளம்!

உடன்பிறப்பே,

தி.மு.கழக ஆட்சியில், ஆசியாவின் மிகப் பெரிய நூலகங்களில் ஒன்றான அண்ணா நூற்றாண்டு நூலகம் கட்டப்பட்டு, என்னால் திறந்து வைக்கப்பட்டது என்பதற்காக ஜெயலலிதாவின் அ.தி.மு.க. ஆட்சியில் முறையான பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவில்லை. மேலும் அதனைக் குழந்தைகள் மருத்துவமனையாகவும், கல்யாண மண்டபமாகவும் மாற்றிட மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் நீதிமன்றக் கண்டனங்களாலும், தமிழறிஞர்கள் மற்றும் மாணவர்களின் கடும் எதிர்ப்பாலும் நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், நூலகத்திற்குத் தேவையான புத்தகங்களை வாங்காமலும், உள்கட்டமைப்பு வசதிகளைப் பராமரிக்காமலும் தொடர்ந்து அ.தி.மு.க. அரசு புறக்கணித்து வருகிறது என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் மனோன்மணி என்பவர் வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கைத் தலைமை நீதிபதி எஸ்.கே.கவுல், நீதிபதி புஷ்பா சத்யநாராயணா ஆகியோர் அடங்கிய முதன்மை அமர்வு விசாரித்தது.

29.10.2015 அன்று தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு உத்தரவிட்டதை அடுத்து, நீதிமன்ற உத்தரவுகள் முழுமையாக அமல்படுத்தப்பட்டு, நூலகம் பராமரிக்கப்படுகிறதா என நீதிமன்ற ஆணையாளர்கள் ஆய்வு செய்து 8.1.2016 அன்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கையில், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் எதுவும் மேம்படுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அண்ணா நூலகம் தொடர்பான வழக்கு 15.4.2016 அன்று தலைமை நீதிபதி அமர்வு முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது வாதிட்ட மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், "உயர்நீதி மன்றம் பலமுறை உத்தரவிட்டும், அண்ணா நூலகத்தில்

அடிப்படை வசதிகள் எதுவும் இதுவரை செய்யப்படவில்லை" என்று எடுத்துரைத்தார். அதைக் கேட்ட நீதிபதிகள், "தமிழக அரசின் செயலுக்குக் கடும் கண்டனம் தெரிவிக்கிறோம். நீதிமன்ற உத்தரவை அரசு அமல்படுத்தாதது ஏன்? அரசுக்கு விருப்பம் இருந்தால் 48 மணி நேரத்தில் எதையும் செய்து முடிப்பீர்கள். இல்லாவிட்டால் எதுவும் செய்யமாட்டீர்கள். உங்கள் பணி எங்களுக்கு வேதனை அளிக்கிறது. ஜூன் 30ஆம் தேதிவரை இறுதிக் கெடு விதிக்கிறோம். அதற்குள் வசதிகளைச் செய்து கொடுக்காவிட்டால், நீதிமன்றமே அண்ணா நூலகத்தைத் தனது கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்டு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்துப் பராமரிக்கத் தொடங்கும்" என்று தமிழக அரசை உயர்நீதிமன்றம் மிகக் கடுமையாக எச்சரிக்கை செய்துள்ளது.

அண்ணா நூலகத்தைப் பொறுத்தவரை, சென்னை உயர் நீதிமன்றம் ஜெயலலிதா அரசுக்குக் கண்டனம் தெரிவித்திருப்பது இது முதல் முறையல்ல; பல முறை கண்டனம், கடும் கண்டனம், எச்சரிக்கை எனத் தெரிவித்திருந்த போதிலும், அவற்றைப் பற்றி அ.தி.மு.க. அரசு சிறிதும் கவலை கொள்ளவோ, உயர் நீதிமன்ற உத்தரவை மதித்து உரிய நடவடிக்கை எடுக்கவோ இல்லை. இப்படி அண்ணா நூலக வழக்கில் மட்டுமல்ல, வேறு பல வழக்குகளிலும் அ.தி.மு.க. அரசின்மீது தொடர்ந்து கண்டனக் கணைகள் பாய்ந்திருக்கின்றன. எடுத்துக்காட்டுகளுக்காக, ஒருசில வழக்குகளை மட்டும் இங்கே விளக்குகிறேன்.

அண்ணா நூலகத்தைப் பொறுத்தவரை, சென்னை உயர் நீதிமன்றம் ஜெயலலிதா அரசுக்குக் கண்டனம் தெரிவித்திருப்பது இது முதல் முறையல்ல; பலமுறை கண்டனம், கடும் கண்டனம், எச்சரிக்கை எனத் தெரிவித்திருந்த போதிலும், அவற்றைப் பற்றி அ.தி.மு.க. அரசு சிறிதும் கவலை கொள்ளவோ, உயர் நீதிமன்ற உத்தரவை மதித்து உரிய நடவடிக்கை எடுக்கவோ இல்லை.

ஜெயலலிதாவின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்காக சென்னை தீவுத்திடலைத் தயார் செய்யும் முறைகளில் ஏற்பட்ட பிரச்சினைகள் குறித்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வழக்கில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் ஆஜராகி, "அ.தி.மு.க.வுக்குச்

சாதகமாக அதிகாரிகள் செயல்பட்டுள்ளனர். தேர்தல் நடத்தை விதிமுறை மீறப்பட்டுள்ளது. உயர் நீதிமன்ற உத்தரவும் மீறப்பட்டுள்ளது" என்று எடுத்துரைத்ததை ஏற்று, கடுமையான அணுகுமுறையை மேற்கொண்டு, சென்னை உயர் நீதிமன்றம் சட்ட ஆணையர் ஒருவரை நியமித்து, அவர் தலைமையில் குழு ஒன்று தீவுத்திடலுக்கு நேரில் சென்று அங்குள்ள நிலவரம் குறித்து ஆய்வு செய்து நீதிமன்றத்திற்கு அறிக்கை அளித்திட உத்தரவிட்டிருக்கிறது. இந்த வழக்கில் உயர் நீதிமன்றம், "தற்போதைய நிலையே தொடர வேண்டும்" என்று 7-4-2016 அன்று வழங்கிய உத்தரவைத் தேர்தல் ஆணையமும் முறையாக அனுசரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வி கற்பதில், வசதிகள் குறைந்த கிராமப்புற மாணவர்களுக்கும், வசதிகள் நிறைந்த நகர்ப்புற மாணவர்களுக்கும் இடையே இருந்து வந்த பாகுபாட்டை அகற்றிடும் நோக்கத்தோடு, கழக ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது சமச்சீர் கல்வி. 2011ல் அ.தி.மு.க.வினர் ஆட்சிக்கு வந்ததும் வராததுமாக சமச்சீர் கல்வியில் கைவைத்தனர். கழக ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட முற்போக்குத் திட்டமாயிற்றே? பாகுபாட்டினை அகற்றி, சமநீதி வழங்கி, சமன்பாட்டை உருவாக்கிடும் முயற்சியாயிற்றே? சும்மாயிருப்பார்களா அ.தி.மு.க. ஆட்சியினர். சமச்சீர் கல்வியைச் சாகடிக்க முயன்ற சண்டாளத்தனம் தொடர்பான பிரச்சினை சென்னை உயர்நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. 19-7-2011 அன்று சென்னை உயர் நீதிமன்றம், "சமச்சீர் கல்வியின் தரம், நிறைவேற்றும் முறை பற்றி ஆய்வு செய்திடத்தான் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. அதைச் செய்யாமல், திட்டத்தை இந்த ஆண்டு நிறைவேற்றலாமா, அடுத்த ஆண்டு நிறைவேற்றலாமா என்று ஆராய்ச்சி நடத்த உத்தரவிடவில்லை. அதைக்கூடப் புரிந்து கொள்ளாமல் சமச்சீர் கல்வியை இந்த ஆண்டு நிறைவேற்ற முடியாது என்று தமிழக அரசு அறிக்கை கொடுக்கிறது. சமச்சீர் கல்விச் சட்டம் செல்லும் என்று ஏற்கனவே உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அதை எதிர்த்த மனுக்களை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. இந்தச் சூழ்நிலையில் சட்டத் திருத்தம் என்ற பெயரில் சமச்சீர் கல்வியைத் தமிழக அரசு நிறுத்திவைத்துள்ளது. இது கல்வி பெறும் உரிமையைப் பாதுகாக்கும் அரசியல் சாசனச் சட்டத்திற்கு

எதிரானது" என்று உயர் நீதிமன்றம் ஜெயலலிதா அரசைக் கடுமையாகக் கண்டித்தது.

இந்திய மருத்துவக் கல்விக் கவுன்சில் விதிகளின்படி, மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவமனைகளில் தீயணைப்பு மற்றும் தீ தடுப்புச் சாதனங்கள், சாய்தளப் பாதை போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பான வழக்கில், சென்னை உயர் நீதிமன்றம் அறிக்கை தாக்கல் செய்ய தமிழக அரசுக்கு உத்தரவிட்டது. ஆனால் அரசுத் தரப்பில் எவ்வித பதில் மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதற்குக் கால அவகாசம் கோரியபோது, அதனை ஏற்க மறுத்த நீதிபதிகள், "எத்தனை முறை அவகாசம் வழங்குவது? ஒவ்வொரு முறையும் இதுபோல கால அவகாசம் கேட்பது சரியானதல்ல" என்று கண்டனம் தெரிவித்ததோடு, தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலாளருக்குப் பத்தாயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

மதுரையில் உள்ள இளம்சிறார் காப்பகத்தில் அடிப்படை வசதிகள் இல்லை என்று வெளியான தகவலின் அடிப்படையில் சென்னை உயர்நீதிமன்றம் தானாக முன்வந்து வழக்கு ஒன்றைப் பதிவு செய்தது. அந்த வழக்கில் தமிழக அரசின் சமூக நலத் துறையைச் சேர்ந்த அதிகாரி தாக்கல் செய்த அறிக்கையில், "திருச்சியில் சிறார்காப்பகம் அனைத்து வசதிகளுடன் கட்டப்பட உள்ளது" என்பது உள்ளிட்ட விவரங்களைக் கூறியிருந்தார். இந்த அறிக்கையைப் படித்துப்பார்த்த உயர் நீதிமன்ற நீதிபதிகள், "நாங்கள் மதுரை சிறார் காப்பகம் குறித்து விவரங்கள் கேட்டால், சமூக நலத்துறை அதிகாரி திருச்சியில் கட்டப்பட உள்ள காப்பகத்தின் விவரங்களைத் தாக்கல் செய்துள்ளார். நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவைக் கூடச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை" என்று கண்டனம் தெரிவித்தனர். பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால், கொட்டைப் பாக்கு என்ன விலை? என்ற பழமொழியைப் போலல்லவா இருக்கிறது ஜெயலலிதா அரசின் பதில்!

சென்னையை அடுத்த மவுலிவாக்கத்தில் 2014, ஜூன் 28ம் தேதி பதினோரு மாடிக் கட்டிடம் இடிந்து விழுந்து 61 தொழிலாளர்கள் பலியாகினர். இது தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடக் கோரி கழகப் பொருளாளர் மு.க.ஸ்டாலின் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். மேலும் கட்டிடம் இடிந்தது

தொடர்பாக அமைக்கப்பட்ட நீதிபதி ஆர்.ரகுபதி தலைமையில் நடந்த விசாரணைக் கமிஷனின் அறிக்கையை வெளியிட உத்தரவிட வேண்டுமென்றும் மு.க.ஸ்டாலின் கேட்டிருந்தார். இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதிகள், "ரகுபதி விசாரணைக் கமிஷன் அறிக்கையைச் சட்டசபையில் தாக்கல் செய்யக் காலதாமதம் செய்தால், சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டியது வரும்" என்று ஜெயலலிதா அரசுக்கு எச்சரிக்கை விடுத்தனர்.

கொடைக்கானல் பிளசண்ட் ஸ்டே ஓட்டல் வழக்கில் ஜெயலலிதா குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தபோது, தருமபுரியில் ஒரு பேருந்துக்குத் தீ வைக்கப்பட்டு, கோவை வேளாண் பல்கலைக் கழக மாணவியர் மூன்று பேர் தீயில் கருகி உயிரிழந்தனர். அந்த வழக்கில் இரண்டாண்டு சிறைத் தண்டனை பெற்ற டி.கே.ராஜேந்திரன் என்பவர் சிறையில் இருந்து வெளிவந்த உடன், தருமபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்படி அவரைத் தேர்ந்தெடுத்தது செல்லாது என்று அறிவிக்க வேண்டும் என்று கேட்டுச் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், "சிறைத் தண்டனை பெற்றவர் எப்படி கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகப் பதவி வகிக்க அனுமதிக்கப்பட்டார்" என்று கண்டனம் தெரிவித்தது.

தமிழக அரசுத் துறைகளில் பதவி உயர்வில் மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்க ஆணையிடக் கோரி சொக்கலிங்கம் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அதற்குப்பதில் மனு தாக்கல் செய்யும்படி தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறை மற்றும் உயர் கல்வித் துறைச் செயலாளர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டும், அவர்கள் பதில் மனு தாக்கல் செய்யவில்லை. தமிழக அரசின் இத்தகைய அலட்சியப் போக்கினைக் கண்டு சினம் கொண்ட சென்னை உயர் நீதிமன்றம் தமிழக அரசுக்குக்கடும் கண்டனம் தெரிவித்ததோடு, இரண்டு துறைகளுக்கும் தலா பத்தாயிரம் ரூபாய் அபராதமும் விதித்தது. மேலும் மூன்றாவது முறையும் உயர் கல்வித் துறையின் சார்பில் பதில் மனு தாக்கல் செய்யவில்லை என்பதால், கோபமுற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகள், தமிழக அரசின்

உயர் கல்வித் துறைக்கு மீண்டும் பத்தாயிரம் ரூபாய் அபராதம் விதித்து உத்தரவிட்டனர்.

நீதிமன்றங்களின் கண்டனங்கள், எச்சரிக்கைகள், இடித்துரைகள், அபராதங்கள், நேரில் ஆஜராக வேண்டும் என்ற நெருக்கடிகள் ஆகியவை ஓர் அரசைக் கூனிக் குறுகச் செய்திட வேண்டிய - வெட்கித் தலைகுனிய வேண்டிய நிகழ்வுகளாகும். இப்படிப்பட்ட வெட்கக் கேடான திருப்பங்களை மிக அதிகமான வழக்குகளில் சந்தித்து வருவது இந்தியாவிலேயே ஜெயலலிதா அரசு மட்டும்தான் என்பது தமிழகத்திற்குப் பெருமை சேர்ப்பது ஆகாது; சிறுமையிலும் சிறுமை ஏற்படுத்துவது ஆகும்.

இன்னும் இவைபோன்ற ஏராளமான வழக்குகள்! நீதிமன்றங்களின் கண்டனங்கள், எச்சரிக்கைகள், இடித்துரைகள், அபராதங்கள், நேரில் ஆஜராக வேண்டும் என்ற நெருக்கடிகள் ஆகியவை ஓர் அரசைக் கூனிக்குறுகச் செய்திட வேண்டிய - வெட்கித் தலைகுனிய வேண்டிய நிகழ்வுகளாகும். இப்படிப்பட்ட வெட்கக்கேடான திருப்பங்களை மிக அதிகமான வழக்குகளில் சந்தித்து வருவது இந்தியாவிலேயே ஜெயலலிதா அரசு மட்டும்தான் என்பது தமிழகத்திற்குப் பெருமை சேர்ப்பது ஆகாது; சிறுமையிலும் சிறுமை ஏற்படுத்துவது ஆகும். ஆனால், அதைப் பற்றி எல்லாம் அ.தி.மு.க. அரசு சிறிதும் அலட்டிக் கொள்ளவில்லை; நீதிமன்றக் கண்டனங்கள் யாவும் நெடுஞ்சுவர் மீது எய்யப்பட்ட அம்புகள் என எண்ணி, விலகி நின்று ஜெயலலிதா அரசு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது!

அன்புள்ள,

மு.க.

17.4.2016

4008. வானத்தில் பறக்கும் ஜெயலலிதாவுக்கு உண்மை தெரியாது!

உடன்பிறப்பே,

தேர்தல் பிரச்சாரம் செய்ய ஜெயலலிதா தொடங்கிய நாளிலிருந்து, என்னைப் பற்றி ஏதாவது குறை சொல்லிப் பேசாவிட்டால் அவருக்கு பேசிய மன நிறைவே இருக்காது போலும்! ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் அவர் எழுப்பும் பிரச்சினைகளின் மூலம் நாட்டு மக்களுக்கு விளக்கம் அளிக்க நல்ல வாய்ப்பு கிடைக்கிறது என்ற வகையில் மகிழ்ச்சிதான். வாக்களிக்கப் போகும் முன்னர், ஜெயலலிதாவின் குற்றச்சாட்டுகளையும் படிக்கட்டும், நான் அவற்றிற்கு அன்றாடம் தருகின்ற விரிவான பதில்களையும் படிக்கட்டும், எது உண்மை, யார் பக்கம் நியாயம் என்று தெளிவடையட்டும்!

அருப்புக்கோட்டையில் பேசிய அம்மையார், "கச்சத் தீவு தாரை வார்க்கப்பட்டதற்குக் கருணாநிதி உடந்தை என்பதை நான் அழுத்தம் திருத்தமாகக் குற்றம் சாட்டுகிறேன். அ.தி.மு.க. ஆட்சி அமைந்த வுடன் உச்ச நீதிமன்றத்தின் மூலம் கச்சத் தீவு மீட்கப்பட்டுத் தமிழக மீனவர்களின் உரிமைகள் நிலைநாட்டப்படும்" என்று குறிப்பிட்டிருக்கிறார். மீண்டும் அ.தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன் கச்சத்தீவு மீட்கப்படுமாம்! இது 2016ஆம் ஆண்டு! சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்பு, ஆம் 25 ஆண்டுகளுக்கு முன்பு, 1991ஆம் ஆண்டு, 15-8-1991 அன்று கோட்டையில் விடுதலை நாளையொட்டி கொடியேற்றிவிட்டுப் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா, "கச்சத் தீவை மீட்டே தீருவேன்" என்று சூளுரைத்தாரே, அதற்குப் பிறகு இவ்வளவு காலமும் என்ன செய்து கொண்டிருந்தார்? கச்சத் தீவை ஏன் மீட்கவில்லை? தேர்தல் என்றதும் கச்சத் தீவு நினைவுக்கு வருகிறதோ? "கச்சத் தீவை மீட்டே தீருவேன்" என்ற ஜெயலலிதா, அடுத்த எட்டே மாதத்தில் அதாவது 20-4-1992 அன்று தமிழகச் சட்டப்பேரவையில் பேசிய ஜெயலலிதா என்ன சொன்னார்

தெரியுமா? "கச்சத் தீவை மீட்பது என்பது விரைவில் நடக்கக் கூடிய, நடைபெறக் கூடிய ஒன்றாகத் தெரியவில்லை" என்று, மீட்பதற்கு முற்றுப்புள்ளி வைத்ததைப் போலப் பேசியது அவைக் குறிப்பில் இன்னமும் இருக்கிறது.

இந்தப் பிரச்சினையில் நான் துரோகம் செய்துவிட்டதாக "அம்மையார்" இதுவரை எத்தனை முறை அறிக்கை விடுத்திருக்கிறார் என்று எண்ணித்தான் பார்க்க வேண்டும்! ஒவ்வொரு முறையும், கச்சத் தீவினை நானும், மத்திய அரசும் சேர்ந்துகொண்டு தாரைவார்த்து விட்டதாகப் புகார்களை அடுக்கத் தொடங்கி விடுவார்!

கச்சத் தீவைத் தாரைவார்க்க தி.மு. கழகம் எந்தக் காலத்திலும் ஒப்புக்கொள்ளவில்லை; தாரைவார்க்க உடன்படவும் இல்லை என்பதை எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் நான் அறை கூவல் விட்டுச் சொல்லத் தயார்! தி.மு. கழகத்தைப் பொறுத்து மாத்திரமல்ல; தி.மு. கழக ஆட்சியைப் பொறுத்தும் பல நேரங்களில் கச்சத் தீவு பிரச்சினையை எழுப்பி, "கச்சத் தீவை மீட்டுக் கொடுங்கள்" என்று கேட்கத் தவறியதும் இல்லை. கச்சத் தீவிலே மீனவர்களுக்கு உள்ள உரிமை பாதிக்கப்படுவதை எடுத்துக்காட்டி, அந்தப் பாதிப்பை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்கவும் கழக அரசு தவறியதே இல்லை என்றெல்லாம் நான் பல முறை திரும்பத் திரும்ப விளக்கிய பிறகும், மீண்டும் அதே குற்றச்சாட்டுகளை ஜெயலலிதா எழுப்புகிறார் என்றால் என்ன அர்த்தம்? அவரிடம் பேசுவதற்கு வேறு பொருள் இல்லை என்றுதானே கருத வேண்டியிருக்கிறது!

30-9-1994இல் தமிழக முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா, அப்போது பிரதமராக இருந்த திரு. நரசிம்மராவ் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், "The ceding of this tiny island to the Island Nation had been done by the Government of India in the interest of better bilateral relations" அதாவது, "தீவு நாடான இலங்கைக்கு, இந்தச் சின்னஞ் சிறிய தீவினை (கச்சத் தீவை) இந்திய அரசு பிரித்துக் கொடுத்தது, இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலே நல்லுறவு நிலவிட வேண்டும் என்பதற்காகத்தான்" - என்று அப்போதும் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா, கச்சத்தீவை விட்டுக் கொடுத்ததை நியாயப்படுத்திக் குறிப்பிட்டது உண்டா இல்லையா என்று 19-7-2013 அன்று நான் எனது "உடன்பிறப்பு"

மடலில் கேட்டிருந்தேனே, அதற்கு இன்றுவரை ஜெயலலிதா ஏன் பதில் சொல்லவில்லை? "திருடன் கையில் தேள் கடித்ததைப் போல" என்ற ஒரு பழமொழியைச் சொல்வார்களே! அதைப் போன்றதா இதுவும்?

ஒப்பந்தம் 28-6-1974 அன்று கையெழுத்தான உடனேயே, அதற்கு அடுத்த நாளே 29-6-1974 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நான் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, அதில் கச்சத் தீவு பற்றித் தீர்மானம் நிறைவேற்றியது உண்மையா இல்லையா? ஆனால் அ.தி.மு.க. அந்தத் தீர்மானத்தை ஆதரித்துக் கையெழுத்திட அப்போதே மறுத்துவிட்டது. அதே 29-6-1974 அன்று நான் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில்,

"Dear Prime Minister,

On behalf of the Government of Tamil Nadu and on behalf of the people of Tamil Nadu, I am constrained to express our deep sense of disappointment over the recent Indo-Sri Lanka Agreement, according to which, Sri Lanka's claim to Katchathivu has been conceded by the Government of India. May I express the hope that you will take into consideration the decision contained in the Resolution and take appropriate action?"

- என்று எழுதியிருக்கிறேன். இதுதான் கச்சத் தீவினை நான் தாரை வார்த்துவிட்டேன் என்பதற்கான ஆதாரமா? இதுதான் நான் துரோகம் செய்ததற்கான அடையாளமா? ஜெயலலிதா விளக்கம் அளிப்பாரா?

1974ஆம் ஆண்டு தி.மு. கழகம் ஆட்சியில் இருந்தபோதே, கழகப் பொதுக்குழுவில், "இந்தியாவுக்குச் சொந்தமானதும், தமிழ்நாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதுமான கச்சத் தீவின்மீது இலங்கைக்கு அரசுரிமை வழங்கும் வகையில் இந்திய அரசு செய்துள்ள ஒப்பந்தத்தை, கழகப் பொதுக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது. தமிழ்நாட்டு மக்களின் உணர்ச்சிக்கு எதிராக இந்த ஒப்பந்தம் அமைந்துவிடக் கூடாது என்று தமிழக தி.மு.க. அரசு பல முறை ஆதாரங்களுடன் மத்திய அரசை அணுகித் தடுத்தும்கூட, அதனை அலட்சியப்படுத்திவிட்டு மத்திய அரசு கச்சத் தீவை இலங்கைக்கு அளித்துள்ள செயல் வேதனை தருவதாகும்" என்றெல்லாம் தீர்மானம் நிறை வேற்றியிருக்கிறது.

தீர்மானம் நிறைவேற்றியது மட்டுமல்ல, 24-7-1974 அன்றே கச்சத் தீவுப் பிரச்சினைக்காகத் தமிழகம் முழுவதும் கண்டனப் போராட்டங்களை தி.மு.க. நடத்தியது பொய்யா? தஞ்சை மாவட்டத்தில் நடை பெற்ற கூட்டங்களிலே முதலமைச்சராக இருந்த நானே கலந்து கொள்ளவில்லையா?

சுமார் கால்நூற்றாண்டுக்கு முன்பு, ஆம் 25 ஆண்டுகளுக்கு முன்பு, 1991ஆம் ஆண்டு, 15.8.1991 அன்று கோட்டையில் விடுதலை நாளையொட்டி கொடியேற்றிவிட்டுப் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா, ''கச்சத் தீவை மீட்டே தீருவேன்'' என்று சூளுரைத்தாரே, அதற்குப் பிறகு இவ்வளவு காலமும் என்ன செய்து கொண்டிருந்தார்? கச்சத்தீவை ஏன் மீட்கவில்லை? தேர்தல் என்றதும் கச்சத்தீவு நினைவுக்கு வருகிறதோ? ''கச்சத் தீவை மீட்டே தீருவேன்'' என்ற ஜெயலலிதா, அடுத்த எட்டே மாதத்தில் அதாவது 20.4.1992 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் பேசிய ஜெயலலிதா என்ன சொன்னார் தெரியுமா? ''கச்சத் தீவை மீட்பது என்பது விரைவில் நடக்கக் கூடிய, நடைபெறக் கூடிய ஒன்றாகத் தெரியவில்லை'' என்று மீட்பதற்கு முற்றுப்புள்ளி வைத்ததைப் போலப் பேசியது அவைக் குறிப்பில் இன்னமும் இருக்கிறது.

23-7-1974 அன்று நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்சினை வந்தபோது, "தமிழகத்துக்குச் சொந்தமான கச்சத் தீவை இலங்கைக்கு விட்டுக்கொடுத்ததை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்" என்று அப்போது தி.மு.கழக உறுப்பினராக இருந்த நண்பர் இரா.செழியன் குறிப்பிட்டாரா இல்லையா? "தமிழக அரசைக் கலந்தாலோசிக்காமல், மத்திய அரசு தன்னிச்சையாக இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது ஜனநாயக விரோதப் போக்காகும்" என்று மாநிலங்களவையில் கழக உறுப்பினர் நண்பர் எஸ்.எஸ். மாரிசாமி தெரிவித்தாரா இல்லையா? இந்த நிகழ்வுகளெல்லாம் ஜெயலலிதாவுக்குப் புரியாதா?

அதைத் தொடர்ந்து நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்திலேயே, அதாவது 21-8-1974 அன்று பேரவையில் அரசின் சார்பில் என்னால் முன்மொழியப்பட்ட தீர்மானம்,

“இந்தியாவுக்குச் சொந்தமானதும், தமிழ் நாட்டுக்கு நெருங்கிய உரிமைகள் கொண்டதுமான கச்சத் தீவுப் பிரச்சினையில் மத்திய அரசு எடுத்துள்ள முடிவு பற்றி இந்தப் பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, மத்திய அரசு இதனை மறு பரிசீலனை செய்து, கச்சத் தீவின் மீது இந்தியாவிற்கு அரசுரிமை இருக்கும் வகையில் இலங்கை அரசுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தைத் திருத்தி அமைக்க முயற்சி எடுத்து, தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறது” என்பதாகும். இதெல்லாம் துரோகத்திற்கான ஆதார ஆவணமா? இதையும் ஜெயலலிதாவினால் புரிந்துகொள்ள முடியாதா?

தி.மு.கழகம் ஆட்சியிலே இருந்தபோது கருணாநிதி கச்சத் தீவை மீட்க ஏன் ஒரு துரும்பைக்கூடக் கிள்ளிப்போடவில்லை என்று ஜெயலலிதா திரும்பத் திரும்பக் கேட்டு வருகிறார். 1991 முதல் 1996ஆம் ஆண்டு வரையிலும், 2001 முதல் 2006ஆம் ஆண்டு வரையிலும், ஏன் இப்போது 2011 முதல் ஐந்தாண்டுகளாக ஜெயலலிதாதானே ஆட்சியிலே இருக்கிறார், இவர் ஏன் கச்சத் தீவை மீட்கவில்லை என்று நான் கேட்டிருந்தேனே, அதற்குத் தனது நீண்ட பேச்சில் இப்போதாவது ஜெயலலிதா பதில் கூறியிருக்கலாமே! ஏன் பதில் இல்லை?

17-8-1991 அன்றே “தினமணி” நாளேடு எழுதிய தலையங்கத்தில், “1974இல் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி திருமதி பண்டார நாயகாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில், இரு நாடுகளுக்கும் இடையே நல்லுறவு ஏற்பட, கச்சத்தீவை இலங்கைக்கு விட்டுக்கொடுப்பதாக அறிவிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகு முன்னர் இதைப் பற்றி தமிழக மக்களிடம் மத்திய அரசு கலந்தாலோசிக்கவில்லை” என்று “தினமணி” அப்போதே எழுதியிருந்தது. அதே தலையங்கத்தில், “1976இல் இந்திய நாட்டில் அமலில் இருந்த நெருக்கடி காலத்தில், மக்களைக் கலந்தாலோசிக்காமல் இலங்கை அரசுடன் செய்து கொண்ட மற்றொரு ஒப்பந்தத்தின் மூலம், இந்திய மீனவர்களுக்கு கச்சத் தீவின் அருகில் மீன் பிடிக்கும் பரம்பரை உரிமையும் விட்டுக் கொடுக்கப்பட்டது” என்று எழுதப்பட்டிருப்பதில் இருந்தே, தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்தபோது மீன் பிடிக்கும் உரிமை விட்டுக் கொடுக்கப்பட்டதாகக் கூறுவது சுத்தப் பொய், பித்தலாட்டம்

என்பதைப் புரிந்துகொள்ளலாம். ஜெயலலிதா, தனக்கு மிகவும் நெருக்கமான "தினமணி" நாளேட்டின் தலையங்கத்தைக்கூட நம்பவில்லை என்றால், அதற்கு யார்தான் என்ன மருத்துவம் செய்ய முடியும்?

17-8-1991 அன்றே ''தினமணி'' நாளேடு எழுதிய தலையங்கத்தில், ''1976இல் இந்திய நாட்டில் அமலில் இருந்த நெருக்கடி காலத்தில், மக்களைக் கலந்தாலோசிக்காமல் இலங்கை அரசுடன் செய்துகொண்ட மற்றொரு ஒப்பந்தத்தின் மூலம், இந்திய மீனவர்களுக்கு கச்சத் தீவின் அருகில் மீன் பிடிக்கும் பரம்பரை உரிமையும் விட்டுக் கொடுக்கப்பட்டது'' என்று எழுதப்பட்டிருப்பதில் இருந்தே, தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்தபோது மீன் பிடிக்கும் உரிமை விட்டுக் கொடுக்கப்பட்டதாகக் கூறுவது சுத்தப்பொய், பித்தலாட்டம் என்பதைப் புரிந்து கொள்ளலாம். ஜெயலலிதா, தனக்கு மிகவும் நெருக்கமான ''தினமணி'' நாளேட்டின் தலையங்கத்தைக்கூட நம்பவில்லை என்றால், அதற்கு யார்தான் என்ன மருத்துவம் செய்ய முடியும்?

2006ஆம் ஆண்டு தி.மு. கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு கூட, கச்சத் தீவுப் பிரச்சினையில் அ.தி.மு.க. ஆட்சி 1991ஆம் ஆண்டு பேரவையிலே கொண்டு வந்த தீர்மானத்தையும் நினைவூட்டி 22-9-2006 அன்று நான் இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் - "I am sure you are also aware of the fact that the Legislative Assembly of Tamil Nadu had passed a Resolution in 1991 on this issue wherein the Tamil Nadu Legislative Assembly called upon the Government of India to take all urgent action and efforts necessary to get back Katchathivu and restore it to the Indian territory apart from moving the Sri Lankan Government to pay compensation for families of fishermen killed by the Sri Lankan Navy as well as those who have lost their belongings in the attacks by them. Government of India was also requested to move the Sri Lankan Government to create "Congenial conditions for Tamil Nadu fishermen

to lead a peaceful life" -- என்றும் நினைவூட்டியதை எல்லாம் ஜெயலலிதா வசதியாக மறைத்து விடுவது சரியானதுதானா?

கிறித்தவர்களும், மற்றவர்களும் ஆண்டுதோறும் கச்சத் தீவுக்குச் சென்று அந்தோணியார் திருவிழாவில் கலந்து கொள்வார்கள். 1983ஆம் ஆண்டுக்குப்பிறகு அந்தத் திருவிழாவே நடக்கவில்லை. 2010ஆம் ஆண்டு கழக ஆட்சியிலேதான் நான் முதலமைச்சராக இருந்தபோது மத்திய அரசிடம் இதுபற்றிப் பேசி மீண்டும் அந்தக் கோவில் திருவிழா நடைபெற்றது.

23-7-2003 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா அன்றைய பிரதமர் வாஜ்பய் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், "The best possible solution is to get the island of Katchathivu and adjacent seas on lease in perpetuity solely for fishing, drying of nets and pilgrimage. Sri Lanka's Sovereignty over Katchathivu could be upheld at the same time." - **அதாவது கச்சத் தீவையும், அதற்கு அருகிலே உள்ள கடல் பகுதிகளையும் தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதற்கும், வலைகளைக்காய வைப்பதற்கும், யாத்திரை செல்வதற்கும் நிரந்தரக் குத்தகைக்குப் பெறலாம்; அதே நேரத்தில் கச்சத் தீவில் இலங்கை நாட்டுக்குள்ள இறையாண்மையை ஏற்றுக்கொள்ளலாம்** - என்று இப்படியெல்லாம் அன்றைக்கு குத்தகை - இறையாண்மை என்று எழுதியவர்தான் இன்றைக்கு அருப்புக்கோட்டை கூட்டத்தில் என்னைப் பார்த்துக் கேள்விக்கணை தொடுக்கிறார்!

ஜெயலலிதா ஏற்கனவே ஒருமுறை வெளியிட்ட அறிக்கையிலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார். "கச்சத் தீவு பிரச்சினை என்பது மற்றொரு நாட்டுடனான பிரச்சினை. அதை மீட்கக் கூடிய அதிகாரம் மத்திய அரசிடம்தான் இருக்கிறது. மாநில முதலமைச்சருக்கு அந்த அதிகாரம் இருந்திருந்தால் அன்றைக்கே கச்சத் தீவு மீட்கப்பட்டிருக்கும்" என்று அவரே வெளியிட்டிருக்கிறார். இப்படிச் சொன்ன ஜெயலலிதா, என்னைப் பார்த்துக் கேள்வி கேட்பானேன்? மத்திய அரசைப் பார்த்தல்லவா கேட்க வேண்டும்! இவர்தான் மத்திய அமைச்சர்களைப் பார்ப்பதற்கே நேரம் ஒதுக்காதவர் ஆயிற்றே!

எனவே "கச்சத் தீவை மீட்கும் அதிகாரம் மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது" என்றும்; "இந்தியாவிற்கும்

இலங்கைக்கும் இடையே நல்லுறவு வேண்டும் என்பதற்காகத் தான் கச்சத் தீவு இலங்கைக்குக் கொடுக்கப்பட்டது" என்றும்; "கச்சத்தீவில் இலங்கைக்கு உள்ள இறையாண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்றும் ஏற்கனவே பேசிய, அறிக்கை விடுத்த ஜெயலலிதா, அவ்வளவையும் திரைபோட்டு மறைத்து மூடி விட்டு, கச்சத் தீவை நான் தாரைவார்த்து விட்டேன் என்றும், தான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அதை மீட்பேன் என்றும் தற்போது தேர்தல் நேரத்தில் பேசுவது தான் உண்மையான கபட நாடகம்; மக்களை ஒரு முறை, இரண்டு முறை ஏமாற்றலாம், ஆனால் எப்போதும் பொய் மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டி விட்டு அதன் மூலம் வெற்றி காண்போம் என்று ஜெயலலிதா எண்ணுவதை நாட்டு மக்கள் இனியும் நம்பத் தயாராக இல்லை. அந்த உண்மை, வானத்திலேயே பறந்து கொண்டிருக்கும் ஜெயலலிதாவுக்கு தெரியாது; மண்ணில் இறங்கி வந்தால்தான் தெரியும்!

அன்புள்ள,

மு.க.

18-4-2016

4009. நமது புதிய ஆட்சி பூத்திட;
பொய் முகத்தை அடையாளம் காட்டு!

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதா, மதுவிலக்கு பற்றி அவருடைய கேள்விகளுக்கு நாம் என்னதான் எவரும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் விளக்கமாக பதில் அளித்தபோதிலும், மதுவிலக்கு பற்றிப் பொய் பேசுவதை அவர் நிறுத்துவதாக இல்லை. தற்போது கழகத்தின் தேர்தல் அறிக்கையில், "தமிழ்நாட்டில் மதுவிலக்கை அமல்படுத்த சட்டம் இயற்றப்படும். மதுவிலக்கை அமல்படுத்தும் நடைமுறையை மேற்கொள்வதால் அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுசெய்ய உரிய திட்டங்கள் செயல்படுத்தப்படும். தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகம் (டாஸ்மாக்) கலைக்கப்பட்டு, இந்த விற்பனைக் கழகத்தின் மூலம் தற்போது செய்யப்பட்டு வரும் மதுபான விற்பனை முற்றிலும் நிறுத்தப்படும்"என்று கூறப்பட்டுள்ளது.

ஆனால் மதுவிலக்குப் பிரச்சினையில், தமிழகச் சட்டப்பேரவையில் இந்தத் துறையின் அ.தி.மு.க. அமைச்சர் படிப்படியாகக்கூட மதுவிலக்கைக் கொண்டுவர இயலாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்து, அது அனைத்து நாளேடுகளிலும் வந்தது. அதற்குப் பிறகு தற்போது தேர்தல் பிரச்சாரத்தில் ஜெயலலிதா பேசும்போது, அமைச்சர் பேரவையில் தெரிவித்ததற்கு மாறாக, தமிழகத்தில் படிப்படியாக மதுவிலக்கைக் கொண்டுவரப் போவதாக அறிவித்தார். அப்படி அரைகுறை எண்ணத்தோடு அறிவித்தவர்தான், தற்போது தி.மு. கழகத் தேர்தல் அறிக்கையில் தமிழ்நாட்டில் மதுவிலக்கை அமல்படுத்த சட்டம் இயற்றப்படும் என்றுதானே உள்ளது, ஏன் பூரண மதுவிலக்கு என்று குறிப்பிடவில்லை, முதல் கையெழுத்து போடப்படும் என்று ஏன் வாக்குறுதி அளிக்கவில்லை, மதுவிலக்கை நடைமுறைப்படுத்தும் எண்ணமே தி.மு.க.வுக்குக் கிடையாது என்றெல்லாம் ஏதோ

கற்பனை செய்துகொண்டு, கேட்டுத்தான் வைப்போமே என்பதற் காகப் பேசியிருக்கிறார். இவ்வாறு அவர் பேசியிருப்பதில் இருந்தே, அவர் மக்களை ஏமாற்றவும் திசை திருப்பவும் திரும்பத் திரும்ப என்ன பாடுபடுகிறார் என்பது நன்றாகத் தெரிகிறது. "தமிழ்நாட்டில் மதுவிலக்கை அமல்படுத்த சட்டம் இயற்றப்படும். மதுவிலக்கை அமல்படுத்தும் நடைமுறையை மேற்கொள்வதால் அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுசெய்ய உரிய திட்டங்கள் செயல்படுத்தப்படும்" என்று தெளிவாகத் தி.மு. கழகத் தேர்தல் அறிக்கையில் கூறிய பிறகும், படிப்படியாக மதுவிலக்கைக் கொண்டு வரப்போகிறேன் என்று பொதுத் தேர்தலுக்காக வேறு வழியின்றிப் பேசியிருக்கும் ஜெயலலிதா, மதுவிலக்கை நடைமுறைப்படுத்தும் எண்ணமே எனக்குக் கிடையாது என்று இல்லாத ஒன்றை இட்டுக்கட்டித் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசியிருக்கிறார். எப்படியோ? நாம்தான் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக் கட்டிலில் அமரப் போகிறோம் என்பதை ஜெயலலிதாவே புரிந்துகொண்டு விட்டார் என்பது நன்றாகவே புரிகிறது!

பூரண மதுவிலக்கு அமல்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் அவரது கொள்கை என்றால், கடந்த ஐந்தாண்டு காலமாக ஆட்சியிலேதான் ஜெயலலிதா இருக்கிறார். அனைத்து அதிகாரமும் அவர் கையில்தானே இருக்கிறது! பூரண மதுவிலக்குக்காக, படிப்படியாகவாவது அதைக் கொண்டுவர, ஒரு துரும்பையாவது கிள்ளிப் போட்டாரா? தியாகி சசிபெருமாள் மரணமடைந்த போதும், டாஸ்மாக் கடைகளை மூடச் சொல்லிப் பெண்கள் போராட்டம் நடத்திய போதும் அவற்றை ஜெயலலிதா வேடிக்கை பார்த்துக் கொண்டுதானே இருந்தார்! மதுபானம் தயாரிக்கும் "மிடாஸ் தொழிற்சாலை" யாருடையது? அது யாருடைய பெயரில் இருக்கிறது? அதன் இயக்குநர் களாக யார் யார் இருந்தார்கள்? இப்போது இருக்கிறார்கள்? கடந்த ஐந்தாண்டு காலத்தில் அந்த நிறுவனத்திலிருந்து மட்டும் எந்த அளவுக்கு மதுபானங்கள் வாங்கப்பட்டன? அதனால் இலாபம் அடைந்தவர்கள் யார்? "பார்"களுக்கு நேரடியாகவே அந்த நிறுவனம் மது விற்பனை செய்வதாகச் செய்திகள் வருகின்றனவே! இதற்கான பதில்களை முதலமைச்சர் ஜெயலலிதா தன்னுடைய அடுத்த பிரச்சாரக் கூட்டத்தில் சொல்லத்தயாரா?

மேலும் ஜெயலலிதா பேசும்போது, "என்னைப் பொறுத்தவரை பூரண மதுவிலக்கு அமல்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் எனது கொள்கை. ஆனால் பூரண மதுவிலக்கை ஒரே கையெழுத்தில் கொண்டு வருவது என்பது இயலாது" என்றும் கூறியிருக்கிறார். பூரண மதுவிலக்கு அமல்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் அவரது கொள்கை என்றால், கடந்த ஐந்தாண்டு காலமாக ஆட்சியிலேதான் ஜெயலலிதா இருக்கிறார். அனைத்து அதிகாரமும் அவர் கையில்தானே இருக்கிறது! பூரண மதுவிலக்குக்காக, படிப்படியாகவாவது அதைக் கொண்டு வர, ஒரு துரும்பையாவது கிள்ளிப் போட்டாரா? தியாகி சசிபெருமாள் மரணமடைந்தபோதும், டாஸ்மாக் கடைகளை மூடச் சொல்லிப் பெண்கள் போராட்டம் நடத்தியபோதும் அவற்றை ஜெயலலிதா வேடிக்கை பார்த்துக்கொண்டுதானே இருந்தார்! மதுபானம் தயாரிக்கும் "மிடாஸ் தொழிற்சாலை" யாருடையது? அது யாருடைய பெயரில் இருக்கிறது? அதன் இயக்குநர்களாக யார் யார் இருந்தார்கள் - இப்போது இருக்கிறார்கள்? கடந்த ஐந்தாண்டு காலத்தில் அந்த நிறுவனத்திலிருந்து மட்டும் எந்த அளவுக்கு மது பானங்கள் வாங்கப்பட்டன? அதனால் இலாபம் அடைந்தவர்கள் யார்? "பார்"களுக்கு நேரடி யாகவே அந்த நிறுவனம் மது விற்பனை செய்வதாகச் செய்திகள் வருகின்றனவே! இதற்கான பதில்களை முதலமைச்சர் ஜெயலலிதா தன்னுடைய அடுத்த பிரச்சாரக் கூட்டத்தில் சொல்லத் தயாரா?

"தி.மு.க. தனது 2006ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றி விட்டதாகக் கருணாநிதியும், தி.மு.க. வினரும் பொய் சொல்லி வருகின்றனர்" என்றும் ஜெயலலிதா பேசி, அவர்களது கட்சி இதழில் வெளிவந்துள்ளது. 2006 தேர்தல் அறிக்கை பற்றிப் பத்தாண்டுகள் கழித்து இப்போது என்ன அவசியம் ஏற்பட்டது? இருந்தாலும் நான் பேசியதாக ஜெயலலிதா கூறியிருக்கிறார். 2006 தேர்தல் அறிக்கையில் நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பத்திற்கும் நிலம் வழங்குவோம் என்று தி.மு.க. வாக்குறுதி அளித்ததா? இல்லையா? அதைச் செய்யவில்லையே என்று ஜெயலலிதா கேட்டிருக்கிறார். 1 இலட்சத்து 79 ஆயிரத்து 2 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகள் குடும்பங்களுக்கு 2 இலட்சத்து 12 ஆயிரத்து 995 ஏக்கர் இலவச நிலம் கழக ஆட்சியில் வழங்கப்பட்டது. இது தமிழகத்திலே உள்ள விவசாயிகள் - விவசாயத்

தொழிலாளர்கள் அனைவர்க்கும் தெரியும். அந்த உண்மை ஜெயலலிதாவுக்குத் தெரியவில்லையா? அல்லது அதைப்பற்றியும் ஒரு பொய்யைச் சொல்லி வைப்போம் என்று கூறுகிறாரா? ஆனால் கழக ஆட்சிக்குப் பிறகு இந்த ஐந்தாண்டுகளில் அ.தி.மு.க. ஆட்சியில் எத்தனை விவசாயிகளுக்கு எவ்வளவு ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கப்பட்டது என்று ஜெயலலிதா சொல்லத் தயாரா?

ஜெயலலிதா தி.மு.கழகத் தேர்தல் அறிக்கை பற்றி கேட்டதால், 2006 தேர்தல் அறிக்கையில் திராவிட முன்னேற்றக் கழகம் சொன்னது என்ன, செய்தது என்ன என்ற புள்ளி விவரத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

- ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வீதம் மாதம் 20 கிலோ அரிசி வழங்குவதாகச் சொன்னோம். அவ்வாறு வழங்கியதில் 1 கோடியே 85 இலட்சம் குடும்பங்கள் பயன்பெற்றன.
- 22 இலட்சத்து 40 ஆயிரத்து 739 விவசாயக் குடும்பங்களுக்கு 7 ஆயிரம் கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி;
- 2006க்குப்பின் கழக ஆட்சியில் 35 இலட்சத்து 54 ஆயிரத்து 721 விவசாயிகளுக்கு 8 ஆயிரத்து 477 கோடியே 56 இலட்சம் ரூபாய் பயிர்க்கடன்கள் வழங்கப்பட்டன.
- மீண்டும் புதுப்பொலிவுடன் 117 உழவர் சந்தைகள்; மேலும் புதிதாக 45 உழவர் சந்தைகள் அமைப்பு;
- பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் 2006இல் 50 சதவீத காப்பீட்டுத் தொகையை அரசே மானியமாக வழங்கி, ஊக்கப்படுத்தியதால் 9 இலட்சத்து ஆயிரத்து 643 விவசாயிகளுக்கு 974 கோடி ரூபாய் இழப்பீடுத் தொகை வழங்கப்பட்டது;
- ஆதிதிராவிட விவசாயிகள் 'தாட்கோ' நிறுவனத்தின் மூலம் 31.3.2006 வரை பெற்ற கடன்தொகை வட்டியுட்பட 5 கோடியே 25 இலட்சம் தள்ளுபடி;

- மாநிலத்திற்குள் பாயும் ஆறுகளை இணைக்கும் புரட்சிகரமான திட்டத்தின்கீழ் 189 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காவிரி - குண்டாறு இணைப்புத் திட்டம்;
- 369 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாமிரபரணி - கருமேனியாறு - நம்பியாறு இணைப்புத் திட்டம்;
- விவசாயிகளைச் சுயஉதவிக் குழுக்களாக ஒருங் கிணைத்து சுழல்நிதி வழங்கும் திட்டத்தின்கீழ் 27 ஆயிரத்து 294 குழுக்கள் அமைக்கப்பட்டு, 27 கோடியே 29 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் சுழல்நிதியாக வழங்கப்பட்டு, 32 ஆயிரத்து 940 குழுக்களுக்கு 402 கோடியே 56 இலட்சம் ரூபாய் பயிர்க் கடனாகவும் அளிக்கப்பட்டுள்ளது.
- விவசாயத் தொழிலாளர் நல வாரியம் உட்பட 34 அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களில் 2 கோடியே 11 இலட்சத்து 55 ஆயிரத்து 525 உறுப்பினர்கள் சேர்ப்பு;
- 20 இலட்சத்து 75 ஆயிரத்து 512 அமைப்புசாராத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 995 கோடியே 78 இலட்சத்து 48 ஆயிரத்து 815 ரூபாய் உதவித் தொகை;
- 3742 கோடியே 42 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாய்ச் செலவில் ஒரு கோடியே 62 இலட்சத்து 59 ஆயிரத்து 526 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டன.
- 661 கோடி ரூபாய்ச் செலவில் 29 இலட்சம் குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட்டன;
- 8 இலட்சத்து 29 ஆயிரத்து 236 ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்;
- காமராஜர் பிறந்த நாளில் “கல்வி வளர்ச்சி நாள்” என பள்ளிகளில், கல்வி விழா;

- 73 இலட்சம் குழந்தைகள், மாணவ மாணவியருக்கு சத்துணவுடன் வாரம் 5 நாட்களும் முட்டைகள்; சாப்பிடாத குழந்தைகளுக்கு வாழைப் பழங்கள்;
- 11 இலட்சம் மாணவ, மாணவியருக்கு 10, 12ஆம் வகுப்புகளின் அரசுத் தேர்வுக் கட்டணங்களும் ரத்து.
- 2010-2011 முதல் எம்.ஏ., எம்.எஸ்சி., வகுப்புகளுக்கும் படிப்புக் கட்டணங்கள் ரத்து.
- ஆண்டுதோறும் 24 இலட்சத்து 82 ஆயிரம் பள்ளி மாணவர்களுக்கும், 4 இலட்சத்து 35 ஆயிரம் கல்லூரி மாணவர்களுக்கும் இலவச பஸ் பாஸ்;
- தொழிற்கல்வி படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வு ரத்து.
- "மாவட்டத்திற்கொரு மருத்துவக் கல்லூரி" கோட்பாட்டின்படி விழுப்புரம், திருவாரூர், தருமபுரி, சிவகங்கை, பெரம்பலூர், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் 6 புதிய மருத்துவக் கல்லூரிகள்;
- பத்தாம் வகுப்புவரை பள்ளிகளில் தமிழ்மொழி கட்டாயப் பாடமெனச் சட்டம்;
- நூறாண்டுக் கனவை நனவாக்கிச் "செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்" சென்னையில் அமைப்பு.
- 4724 திருக்கோவில்களில் 523 கோடி ரூபாய் செலவில் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன;
- ஏழைக் கர்ப்பிணிப் பெண்களுக்குத் தலா 6 ஆயிரம் ரூபாய் நிதியுதவி திட்டத்தின்கீழ் 25 இலட்சத்து 76 ஆயிரத்து 612 ஏழை மகளிர்க்கு மொத்தம் 1389 கோடியே 42 இலட்சம் ரூபாய் நிதியுதவி;
- 50 வயது கடந்து திருமணமாகாமல் வறுமையில் வாடும் 12 ஆயிரத்து 904 ஏழைப் பெண்களுக்கு மாதம் 500 ரூபாய் உதவித் தொகை;
- "அவசர கால மருத்துவ ஊர்தி 108 சேவைத் திட்டம்" தமிழகம் முழுவதும் நடைமுறை; 8 இலட்சத்து 8 ஆயிரத்து 907 பேர் பயன்;

- அரசு ஊழியர்களுக்கு "மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்";
- "உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்" நடைமுறை; 1 கோடியே 34 இலட்சம் குடும்பங்கள் பதிவு; இதுவரை 2 இலட்சத்து 55 ஆயிரத்து 744 ஏழை மக்களுக்கு 667 கோடி ரூபாய்ச் செலவில் உயிர்காக்கும் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன;
- ஏறத்தாழ 2 இலட்சத்து 35 ஆயிரத்து 464 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் 62 ஆயிரத்து 349 கோடி ரூபாய் முதலீட்டிலான 27 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்; 24 அரசாணைகள் மூலம் 51 புதிய தொழிற்சாலைகள் அமைக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளில் இதுவரை 12 தொழிற்சாலைகள் திறப்பு;
- ஏறத்தாழ 5 இலட்சத்து 5 ஆயிரத்து 314 இளைஞர்களுக்கு அரசு அலுவலகங்களில் புதிய வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டன;
- வடசென்னை மீஞ்சூரில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம்
- 2006க்குப்பின் 26 இலட்சத்து 94 ஆயிரம் மகளிர் உறுப்பினரைக் கொண்ட 1 இலட்சத்து 75 ஆயிரத்து 493 புதிய மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப் பட்டு; 1068 கோடி ரூபாய் அளவுக்குப் பொருளாதாரக் கடன்கள் வழங்கப்பட்டது.
- 2,81,883 மகளிர் குழுக்களுக்கு வழங்கப்பட்ட சுழல் நிதி 281 கோடியே 88 இலட்சம் ரூபாய்.
- ஈரோடு, திருப்பூர், வேலூர், தூத்துக்குடி ஆகிய 4 நகராட்சிகள் மாநகராட்சிகளாக நிலை உயர்த்தப் பட்டது.
- அரியலூர், திருப்பூர் புதிய மாவட்டங்கள் உதயம்;
- இஸ்லாமியர் சமுதாயம் மேன்மை பெற 3.5 விழுக்காடு தனி உள் ஒதுக்கீடு;

- அருந்ததியர் சமூகத்தின் அவலம் தீர 3 விழுக்காடு தனி உள் ஒதுக்கீடு;
- அனைத்துச் சாதியினரும் ஒரே இடத்தில் வசிக்க ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள 145 பெரியார் நினைவு சமத்துவபுரங்களுடன் மேலும் 95 சமத்துவபுரங்கள்.
- சென்னைக் கோட்டூர்புரத்தில் உலகத் தரத்திலான 181 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான "அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம்" 15.9.2010இல் திறப்பு;
- ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைத்திட 910 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு; புதிய சட்டமன்ற - தலைமைச்செயலக வளாகம் திறந்து சாதனை;
- ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி நிதி உதவியுடன் 14 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் "மெட்ரோ ரயில் திட்ட" அமைப்புப் பணிகள்
- 1929 கோடி ரூபாய் மதிப்பீட்டில், "ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்;"
- 630 கோடி ரூபாய்ச் செலவில், "இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்" நிறைவேற்றம்;
- 2 இலட்சத்து 12 ஆயிரத்து 981 சத்துணவுப் பணியாளர்கள் பயன்பெற காலமுறை ஊதியம்; ஓய்வூதியம்;
- ஆண்டுக்கு 5 ஆயிரத்து 155 கோடியே 79 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவில் அரசு அலுவலர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் 6வது ஊதியக்குழு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.
- 21 இலட்சம் குடிசை வீடுகளை 6 ஆண்டுகளில் கான்கிரீட் வீடுகளாக மாற்றும் "கலைஞர் வீடு வழங்கும் திட்டம்" என்னும் புரட்சிகரமான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இப்படி அடுக்கடுக்காகச் சொல்லிக்கொண்டே போகும் அளவுக்கு எண்ணற்ற உறுதிமொழிகள் தி.மு.க. அரசால் நிறைவேற்றப்பட்டன. சொன்னதைச் செய்தோம்; செய்ததை, ஜெயலலிதா கேட்பதால், சொல்கிறோம்!

ஆனால் 1. ஜெயலலிதா 2001ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது வெளியிட்ட தேர்தல் அறிக்கையில்

41 வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம் என்று அ.தி.மு.க. உறுதி அளித்தது. அவை எதுவும் நிறைவேற்றப்படவில்லை. அந்தத் தேர்தல் அறிக்கையின் கதி என்ன?

2. 2011ம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதிகளில் ஜெயலலிதா இதுவரை எத்தனை வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறார்? அவற்றின் விவரம் என்ன?

3. சட்டமன்றத்தில் 110வது விதியின்கீழ் ஜெயலலிதா 20-2-2016 வரை 187 அறிக்கைகளைப் படித்தாரே, அவற்றில் குறிப்பிடப்பட்ட எத்தனை அறிவிப்புகளை இதுவரை நிறைவேற்றியிருக்கிறார்? அவற்றின் விவரம் என்ன?

பொய்களையே முதலீடாக வைத்து, பொய் அரசியல் நடத்தி, பொய்களை மட்டுமே உற்பத்தி செய்து, அவற்றை வினியோகித்து, அப்பாவித் தமிழ் மக்களைத் தொடர்ந்து ஏமாற்றி வரும் ஜெயலலிதா, அரசியலில் பொய் சொல்வதில் "கின்னஸ்" சாதனையை ஏற்படுத்தலாம் என்ற எண்ணத்தைக் கைவிட்டு; "தமிழகத்தில் வசந்தம் வீசுகிறது" - "நீங்கள் கனவு காணும் ஆட்சியை நான் வழங்குவேன்" என்பன போன்ற "நகைச் சுவைகளைத்" தவிர்த்துவிட்டு; இப்போதாவது பொய்கள் சொல்வதை நிறுத்தி, இதுவரை சொன்ன பொய்களுக்குக் கழுவாய் தேடிக்கொள்ள முயற்சிப்பது சாலவும் சிறந்தது.

2006ஆம் ஆண்டு தேர்தல் வாக்குறுதிகள் பற்றி ஜெயலலிதா கேட்ட கேள்விகளுக்கு நான் இங்கே விரிவாகப் பதில் அளித்திருக்கிறேனே; இதைப் போல நான் கேட்டிருக்கும் இந்த மூன்று கேள்விகளுக்கு ஜெயலலிதா பதில் அளிக்க வேண்டும். பொய்களையே முதலீடாக வைத்து, பொய் அரசியல் நடத்தி, பொய்களை மட்டுமே உற்பத்தி செய்து, அவற்றை வினியோகித்து, அப்பாவித் தமிழ் மக்களைத் தொடர்ந்து ஏமாற்றி வரும் ஜெயலலிதா, அரசியலில் பொய் சொல்வதில்

"கின்னஸ்" சாதனையை ஏற்படுத்தலாம் என்ற எண்ணத்தைக் கைவிட்டு; "தமிழகத்தில் வசந்தம் வீசுகிறது" - "நீங்கள் கனவு காணும் ஆட்சியை நான் வழங்குவேன்" என்பன போன்ற "நகைச்சுவைகளைத்" தவிர்த்துவிட்டு; இப்போதாவது பொய்கள் சொல்வதை நிறுத்தி, இதுவரை சொன்ன பொய்களுக்குக் கழுவாய் தேடிக் கொள்ள முயற்சிப்பது சாலவும் சிறந்தது.

உடன்பிறப்பே, ஜெயலலிதா கேட்ட கேள்விகளுக்காக மாத்திரம் இவ்வளவு தகவல்களையும் திரட்டி நான் எடுத்துரைக்கவில்லை. இவற்றையெல்லாம் நமது வாக்காளர்களிடம் எடுத்துக்கூறித் தெளிவுபடுத்திடவும், ஜெயலலிதாவின் பொய்களைத் தோலுரித்துக் காட்டவும் பயன்படும் என்பதால்தான் இங்கே சொல்லியிருக்கிறேன். ஜெயலலிதா அள்ளி வீசி வரும் பொய்களிலிருந்தும், அவற்றின் தீய விளைவுகளிலிருந்தும் நமது மக்களைக் காப்பாற்றிட வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. அந்தக் கடமையைச் சிறப்பாக ஆற்றுவாய் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. பொய் முகத்தை அடையாளம் காட்டு; நமது புதிய ஆட்சி தானாகப் பூக்கும்! வெற்றி நமதே!

அன்புள்ள,

மு.க.

21-4-2016

4010. உத்தரவிடுங்கள் உங்களுக்காக உழைத்திட!

உடன்பிறப்பே,

பதினைந்தாவது சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் இன்று (22-4-2016) முதல் தொடங்குகிறது. கழகத்தின் சார்பில் விருப்ப மனுதாக்கல் செய்து, எனது தலைமையில் அமைக்கப்பட்ட நேர்காணலுக்கு வந்து, குழுவினர் ஆய்வு செய்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வேட்பு மனு தாக்கல் செய்யவுள்ளார்கள். கழகத்தின் சார்பில் ஆய்வு செய்து தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட வேட்பாளர்களில் ஒருசிலர் மாற்றப்பட்டுள்ளார்கள். அப்படி மாற்றங்கள் செய்யப்பட்ட காரணத்தால், ஏற்கனவே அறிவிக்கப்பட்ட வர்கள் ஏமாற்றத்திற்கு ஆளாகியிருக்கலாம். மாற்றத்திற்கான அடிப்படையும் அவர்கள் அறியாததல்ல. எனினும் முதலில் அறிவிக்காமல் இருந்திருக்கலாம்; அறிவித்துவிட்டுப் பின்னர் வாய்ப்பு நழுவி விட்டதே என்ற மனக்குறை அவர்களுக்கெல்லாம் இருக்கலாம். அவர்கள் எல்லாம் வேறுவழியின்றி செய்யப்பட்ட மாற்றத்தினைப் பெரிதுபடுத்தாமல் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று முதலிலேயே கேட்டுக்கொள்கிறேன். வேட்பாளர் மாற்றப்படுவதைக் கூடத் தவிர்க்க நினைத்து, எப்படியாவது கழகம் ஜெயலலிதாவின் கொடுங்கோல் ஆட்சி யிலிருந்து தமிழக மக்கள் காப்பாற்றப்பட இந்தத் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் மாற்றப்பட்டுள்ளார்கள் என்பதை மனதிலே கொள்ளவேண்டும். நான் முன்பே தெரிவித்தவாறு, இந்தத் தேர்தலில் தி.மு. கழகம்தான் அண்ணா தந்த உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறது, வேட்பாளராக ஒவ்வொரு தொகுதியிலும் நிற்பது மு. கருணாநிதி தான் என்ற எண்ணத்தை மனதிலே நீ செதுக்கி வைத்துக் கொள்வாயானால், பொதுவான நோக்கத்திற்காக மாற்றத்திற்கு ஆளான வேட்பாளர்கள் எவ்வித வருத்தத்திற்கும் ஆளாகத் தேவையிருக்காது!

வாய்ப்பு கிடைக்காதவர்கள், வாய்ப்பு கிடைத்து பின்னர் மாற்றப்பட்டவர்கள் ஆகியோர் கழகம் வெற்றி பெற்றால், அதுவே தங்கள் வெற்றி, அந்த வெற்றியில் நமது பங்களிப்பும் வேண்டும் என்ற சீரிய நோக்கத்தோடு பணியாற்றிட வேண்டுமென்று உங்கள் அண்ணன் என்ற முறையில் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கிடைக்காதவர்கள் என்னை நேரில் சந்தித்து, தாங்கள் செய்த குற்றம் என்ன என்றும், தாங்கள் கழகத்திற்காக உழைக்கவில்லையா என்றும், தங்களை ஏன் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கவில்லை என்றும் கேள்விக்கணைகளைத் தொடுத்த நேரத்தில் என்னால் அவர்களுக்குப் பதில் சொல்லி அமைதிப்படுத்த முடியவில்லை. அவர்கள் பேசுவதையெல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். வேட்பாளர்களைத் தேர்வு செய்வதற்கு முன்பு ஒரு சிலர் என்னிடம் வலியுறுத்த வந்தவர்கள், பின்னர் அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை என்றதும் என்னைச் சந்திக்கவே வரவில்லை. உதாரணம் கூற வேண்டுமேயானால், கழகத்திற்காக நீண்ட நெடுங்காலம் உழைத்தவர் ஆற்காடு வீராசாமி. ஏன் கழகத்தின் பொருளாளராகவே இருந்து சிறப்பாகப் பணிபுரிந்தவர். சிறைக்குச் சென்று செவிப்புலனை இழந்திடும் அளவுக்குக் கடுமையாக அடிபட்டவர். அவருடைய மகனுக்காக இந்த முறை வாய்ப்பு கேட்டார்; அளிக்க முடியவில்லை. அதுபோலவே தஞ்சையில் எல். கணேசன். கழகத்தில் மாணவர் இயக்கம் தோன்றவும், மாணவர்களை மொழிப் போராளிகளாக மாற்றவும் காரணமாக இருந்தவர். அவரும் தன் மகனுக்காக வாய்ப்பு கேட்டார்; அளிக்க முடியவில்லை. அந்தத் தொகுதியில் வேறு யாருக்கோ வாய்ப்பு அளிக்கப்பட்டு விடவில்லை. கழகத்திற்காகவே தொடர்ந்து உழைத்து மறைந்து விட்ட தம்பி பூபதியின் மகளான டாக்டர் அஞ்சுகம் பூபதிக்குத்தான் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

கந்தர்வக்கோட்டை தொகுதியில் கழகத்தின் கவிச்சுடர், வரகவி எனப் போற்றப்படுபவர், இன்று கூட என்னைப் பாராட்டி "முரசொலி"யில் கவிதை எழுதியிருப்பவர், கழகமே தன் மூச்சும் பேச்சும் என்று பாடுபடும் நம்முடைய கவிதைப்பித்தன் வாய்ப்பு

கேட்டிருந்தார். அதே தொகுதியில் கழகத்திற்காக உழைத்து மறைந்துவிட்ட கீரைத் தமிழ்ச் செல்வனின் அன்பு மகன் தமிழ் ராஜாவும் வாய்ப்பு கேட்டிருந்தார். இவர்கள் இருவருக்குமே வாய்ப்பு தரப்படாமல், புதிய வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டுள்ளார். ஆனாலும் இவர்களும், இவர்களைப் போன்ற வேறு சிலரும் வாய்ப்பு கிடைத்தாலும், இல்லை என்றாலும் கழகத்திற்காகவே தங்களை அர்ப்பணித்துக்கொண்டு அண்ணா தந்த இலட்சியங் களுக்காகவே வாழ்பவர்கள், வாழ்கிறார்கள். அவர்கள் எல்லாம் என்னை மிக நன்றாகப் புரிந்து கொண்டவர்கள் என்ற நம்பிக்கை எனக்கு முழுமையாக உண்டு.

எனவே வாய்ப்பு கிடைக்காதவர்கள், வாய்ப்பு கிடைத்து பின்னர் மாற்றப்பட்டவர்கள் ஆகியோர் கழகம் வெற்றி பெற்றால், அதுவே தங்கள் வெற்றி, அந்த வெற்றியில் நமது பங்களிப்பும் வேண்டும் என்ற சீரிய நோக்கத்தோடு பணியாற்றிட வேண்டுமென்று உங்கள் அண்ணன் என்ற முறையில் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன்.

2016ஆம் ஆண்டு மே திங்கள் 16ஆம் தேதி நடைபெறு கின்ற தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் பேரியக்கத்தோடும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், புதிய தமிழகம், மனிதநேய மக்கள் கட்சி, தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி, பெருந்தலைவர் மக்கள் கட்சி, மக்கள் தே.மு.தி.க., சமூக சமத்துவப் படைக் கட்சி ஆகியோர் இணைந்து போட்டியிடுகிறோம். இந்தக் கட்சிகளை அன்னியில் தேர்தலில் போட்டியிடாமல், நமது கூட்டணிக்கு ஆதரவாகப் பல்வேறு சமூக - பொது நல இயக்கங்கள், அவ்வளவையும் இங்கே பட்டியலிட முடியாது; அவர்கள் அனைவரும் நம்முடைய அணியின் வெற்றிக்காகத் தீவிரமாக உழைக்கின்றார்கள். வேறு சில கட்சிகளும் நம்முடைய அணியோடு இருக்க வேண்டுமென்று நினைத்தாலும், அவர்கள் நிற்காமல் போனதற்கு நாம் காரணமல்ல என்பதை நீ நன்றாகவே அறிவாய்!

நம்முடைய கூட்டணியிலே இடம் பெற்றிருப்பவர்கள் பதவிகள் மக்கள் பணியாற்றுவதற்குப் பயன்பட வேண்டிய ஒரு வாய்ப்பு - பொறுப்பு என்று அந்தப் பதவிகளைக் கருதுகிறவர்கள். ஆனால், அந்தப் பதவிச்சுகமே பெரும் சுகம், பன்னீர்க் குளியல், பழரசபானம், பிறவிப்பயன் என்று பதவியை ஒரு சிலர் அனுபவிப்பதைப் போன்றதென்று அதை நாங்கள் கருதவில்லை.

நாங்கள் பதவியை உங்களுக்கு வேலை செய்ய, உங்களுக்கு ஊழியம் புரிய, உங்களுக்காகப் பாடுபட, உங்களுக்காகத் தொண்டறம் ஆற்றிட ஜனநாயக ரீதியாக வழங்கப்படும் ஒரு கருவி யாகத்தான் அதைப் பயன்படுத்துகிறோமேயல்லாமல் வேறு அல்ல. ஒரு முறை சென்னையிலே தேர்தல் பிரச்சாரத்திற்காக நானும் ஆர்க்காடு வீராசாமியும், மாவட்டச் செயலாளர் அன்பழகனும் புறப்பட்ட போது, நிருபர்கள் என்னைச் சுற்றி நின்று கேட்டார்கள், "ஜெயலலிதா, இலவசங்களாக அறிவித்துக் கொண்டிருக்கிறாரே, நேற்றைக்குக் கூட ஒரு இலவசத்தை அறிவித்தார். இன்றைக்குக் கூட ஒரு இலவசத்தை அறிவித்திருக்கின்றார். நீங்கள் என்ன இலவசம் அறிவிக்கப் போகிறீர்கள்?" என்று கேட்டார்கள். நான் சொன்னேன். "இலவசமாக அறிவிக்க என்னிடத்திலே எதுவும் இல்லை. நான்தான் இருக்கிறேன். என்னைத்தான் தமிழ்நாட்டு மக்களுக்கு இலவசமாக அறிவிக்கிறேன்" என்று சொன்னேன். இந்த இலவசத்தை, என்னைத் தவிர, என்னோடு போட்டிபோட்டுக் கொண்டு யாரும் அளிக்க முன்வர முடியாது என்ற தைரியத்தில் நான் சொன்னேன்.

தற்போதுகூட ஆளுங் கட்சியின் சார்பில் இதுவரை தேர்தல் அறிக்கை அளிக்கப்படவில்லை. ஒரு சில அதிகாரிகளைக் கொண்டு, மற்றக் கட்சியினர் தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ள திட்டங்களையெல்லாம் பார்த்து, அதைவிட அதிகமாகச் சேர்க்க வேண்டியதை யெல்லாம் சேர்த்து மக்களை மயக்கவும் - மாயாஜாலம் காட்டவும் முயற்சிகள் நடந்து கொண்டிருக்கிறதாம். ஆனால் மக்கள் அவர்களையும் அவர்களுடைய வெற்று ஆரவார அறிவிப்புகளையும் நம்புவதற்குத் தயாராக இல்லை. யார் அளிக்கும் அறிக்கை, நடைமுறைக்கு வரும், சொன்னபடி செய்வார்கள் என்பதை அனுபவ ரீதியாக நமது மக்கள் நன்றாகவே அறிவார்கள்.

கடந்த ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் தமிழகத் தில் எந்தத் தரப்பினராவது நிம்மதியாக இருந்திருக்கிறார்களா? ஏன் ஆளுங்கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள், கோடிக்கணக்கில் குவித்துக் கொண்டார்களே தவிர, அவர்கள்கூட நிம்மதியாக இருக்க அனுமதிக்கப்பட்டார்களா? ஏன், அமைச்சரவையில் இரண்டாவது இடத்தில் இருக்கின்ற, முதலமைச்சராகவே இரண்டு முறை பொறுப்பு வகித்தவர் இந்த ஆட்சியில் அச்சமின்றி இருக்கிறாரா?

மூன்றாவது இடத்திலே அமைச்சரவையிலே இருந்தவரின் கதி என்ன? மின் துறைக்கும் பொறுப்பு அவர்தான், மதுவிலக்குத் துறைக்கும் அவர் தான் அமைச்சர், எத்தனைக் கோடி இங்கும், வெளிநாட்டிலும் என்று கணக்கிடவே முடியாத அளவிற்கு அவர் சொத்து சேர்த்திருக்கிறார். அவர் சொந்தத் தொகுதியிலே போட்டியிட அனுமதி கிடைக்கவில்லை. ஏன், அமைச்சர்களிலே சிலருக்கே வாய்ப்பு அளிக்கப்படாமல், மூன்று பேர் மாற்றப்பட்ட பட்டியலிலே இடம்பெறவில்லையா? அமைச்சர்கள் கதியே இது என்றால் மற்றவர்களைப் பற்றிக் கூறவா வேண்டும்? "பிடித்து வைத்தால் பிள்ளையார், இல்லாவிட்டால் களிமண்" என்பார்களே, அந்தப் பழமொழிக் கொப்பானது தான் அந்தக் கட்சி!

ஆளுங்கட்சியின் சார்பில் இதுவரை தேர்தல் அறிக்கை அளிக்கப்படவில்லை. ஒரு சில அதிகாரிகளைக் கொண்டு, மற்றக் கட்சியினர் தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ள திட்டங்களையெல்லாம் பார்த்து, அதைவிட அதிகமாகச் சேர்க்க வேண்டியதையெல்லாம் சேர்த்து மக்களை மயக்கவும் - மாயாஜாலம் காட்டவும் முயற்சிகள் நடந்து கொண்டிருக்கிறதாம். ஆனால் மக்கள் அவர்களையும் அவர்களுடைய வெற்று ஆரவார அறிவிப்புகளையும் நம்புவதற்குத் தயாராக இல்லை. யார் அளிக்கும் அறிக்கை, நடைமுறைக்கு வரும், சொன்னபடி செய்வார்கள் என்பதை அனுபவ ரீதியாக நமது மக்கள் நன்றாகவே அறிவார்கள்.

மக்கள் நலப் பணியாளர்கள், 13 ஆயிரம் பேர், தி.மு. கழக ஆட்சியிலே நியமனம் செய்யப்பட்டார்கள் என்பதற்காக, நீதிமன்றம் அனுமதித்தும், இந்த ஆட்சியினர் மனம் இளகவில்லையே? அவர்களில் எத்தனை பேர் தற்கொலை செய்து கொண்டார்கள்? அந்தக் குடும்பங்களில் உள்ள பெண்கள் வடிக்கும் கண்ணீருக்கு ஜெயலலிதாவினால் என்ன சமாதானம் சொல்ல முடியும்?

நீதிமன்றத்தின் கண்டனத்திற்கு இந்த ஆட்சியினர் ஆளான அளவுக்கு இதற்கு முன்பு இந்தியாவில் ஒரு ஆட்சி எங்கேயாவது நடந்தது உண்டா? எத்தனை அதிகாரிகளுக்கு நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது? அதைப் பற்றியெல்லாம் கவலைப்பட உணர்ச்சியுள்ள அரசாங்கமா இங்கே இருக்கிறது?

கழக அமைச்சரவையிலே இருந்தார்கள் என்பதற்காக எத்தனை பேர் மீது இந்த அரசு செயற்கையாக, பழி தீர்க்கும் நோக்கில் வழக்குகளைத் தொடுத்தது? சொத்து வழக்கு எத்தனை பேர் மீது? ஐந்தாண்டுகள் அவர்கள் எல்லாம் நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளை ஏறி இறங்கிய பிறகு, தற்போது தான் அவர்கள் மீதான வழக்குகளில் இந்த அரசுக்கு எதிராக தீர்ப்புகள் வரத் தொடங்கியிருக்கின்றன.

காவல் துறையை எடுத்துக்கொள்ளுங்கள்! தி.மு. கழக அரசில் சில முக்கியமான பொறுப்புகளிலே இருந்தார்கள் என்பதற்காகக் கடந்த ஐந்தாண்டுகளில் எவ்வளவு கொடுமைகள்? ஏ.டி.ஜி.பி. ஜாபர்சேட், புலனாய்வுத் துறையில் கழக ஆட்சியில் முக்கிய பொறுப்பிலே இருந்தவர். ஆட்சி மாறியதும், 2011இல் மண்டபம் அகதிகள் முகாமுக்கு மாற்றப்பட்டார். வீட்டு வசதி வாரிய மனை ஒதுக்கீட்டை முறைகேடாகப் பெற்றதாக இவர் மீது குற்றஞ்சாட்டி, இவருடைய மனைவி மற்றும் மகள் வீடுகள் உட்பட 8 இடங்களில் லஞ்ச ஒழிப்புப் போலீசார் சோதனை நடத்தினார்கள். அதன் பின்னர் 1-8-2011 முதல் சஸ்பென்ட் செய்யப்பட்டார். அதனை ரத்து செய்யக் கோரி, சென்னை மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்த மனுவினை விசாரித்த நீதிபதி ஏ. ஆறுமுகசாமி, நிர்வாக உறுப்பினர் ஆர். ராமானுஜம் அடங்கிய அமர்வு, ஜாபர்சேட்டை சஸ்பென்ட் செய்து தமிழக அரசு பிறப்பித்த உத்தரவை நேற்று ரத்து செய்ததுடன், அவருக்கு மீண்டும் பணி வழங்க உத்தரவிட்டுள்ளது.

இவரைப் போலவே பணி ஓய்வு பெறும் நாளில் சஸ்பென்ட் செய்யப்பட்ட துக்கையாண்டி என்ற ஐ.பி.எஸ். அதிகாரி, துறவு பூண்டு இமயமலை அடிவாரத்திற்கே போய்விட்டார். மற்றொரு அதிகாரி ஜாங்கிட், ஐ.பி.எஸ்., ஏ.டி.ஜி.பி., தகுதியிலே இருந்தவரை ஐந்தாண்டுகளாக கன்யாகுமரி மாவட்டத்தில் ஒரு சிறிய பதவியிலே அமர்த்திச் சிறுமைப்படுத்தினார்கள். அவர் தன் மனைவிக்கு உடல் நலம் சரியில்லை என்று தலைமைச் செயலாளரிடமே முறையிட்டும் இந்த ஆட்சியினர் மனம் இறங்கவில்லை. முதலமைச்சர் ஜெயலலிதா தான் ஒரு தாய் என்று இப்போது கூறிக் கொள்கிறாரே? தாய்க்குலத்தைச் சேர்ந்த அர்ச்சனா ராமசுந்தரம் என்ன ஆனார்? ஏன்? சத்தியபிரியா என்ற ஐ.பி.எஸ். அதிகாரி இந்த ஆட்சியில் எந்த அளவுக்குத் துன்பப்பட்டார்?

மறைந்த முன்னாள் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் மீது சேலம் மாவட்டத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டதில், குற்றம் சாட்டப்பட்டவர்களை உடனடியாகக் கைது செய்யவில்லை என்று கூறி, 15 ஆய்வாளர்கள், 16 உதவி ஆய்வாளர்கள், 23 தலைமைக் காவலர்கள் உட்பட 54 பேரைச் சேலத்திலிருந்து மதுரை, நெல்லை, ராமநாதபுரம் மாவட்டங்களுக்கு மாற்றினார்கள். தம்பி வீரபாண்டி ஆறுமுகம் மரணமடைவதற்கும் காரணமாக இந்த ஆட்சியினர் இருந்தார்கள் என்பது மறந்தா போய்விட்டது.

இந்த சர்வாதிகாரக் கொடுமைகளிலிருந்து மக்களுக்கு விடுதலை வேண்டும். நீதிக்கு விடுதலை வேண்டும். நியாயத்திற்கும், நேர்மைக்கும் சுதந்திரம் வேண்டும். அதற்காகத்தான் நாம் இன்றைக்கு இரண்டாம் விடுதலைப் போர் நடத்திப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். இப்படிப் போராடி, பாடுபட்டுப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற நம்மைப் பார்த்து, இந்தத் தேர்தலிலே வெற்றி பெற்று நாம் ஆட்சிக்கு வந்துவிட்டால், பழிவாங்கி விடுவோம் என்று ஒரு சிலர் பயப்படுகிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் என்றைக்கும் நீதி நியாயம்தான் நடைபெறும். எங்கள் விருப்பு வெறுப்புக்கு ஆட்சி வளையாது. சட்டத்தின் படியான ஆட்சிதான் நடைபெறும். யாரையும் பழிவாங்க வேண்டுமென்று வெறிபிடித்து அலைய மாட்டோம்.

நான் யாரையும் பழிவாங்க வேண்டுமென்று எண்ணுகின்ற பண்பு படைத்தவனல்ல; ஜெயலலிதாவைப் போல, பழிவாங்கும் குணம் படைத்தவனல்ல. அன்பும், மனிதப் பண்புமுடையவனாக என்னைச் செதுக்கியவர் தந்தை பெரியார். என்னைச் சமுதாயத்திலே தலை நிமிர்ந்து உலவவிட்டு, அரசியலிலே பட்டை தீட்டித் தயாரித்தவர் அறிஞர் அண்ணா. என்னை மேலும் கூர்மையுடையவனாகச் செழுமைப்படுத்தியவர்கள் தமிழ் மக்கள். எனக்கு வலுசேர்த்தது, நான் கற்ற தமிழ் மொழி!

இதற்கிடையில் தேர்தல் பிரச்சாரத்திற்காகவும், உங்களையெல்லாம் நேரில் கண்டு வாக்கு கேட்பதற்காகவும் நாளை முதல் எனது சுற்றுப் பயணத்தைத் தொடங்குகிறேன். உன்னுடைய வயது தெரியாதா?

இந்தத் தேர்தலிலே வெற்றி பெற்று நாம் ஆட்சிக்கு வந்துவிட்டால், பழிவாங்கி விடுவோம் என்று ஒரு சிலர் பயப்படுகிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் என்றைக்கும் நீதி நியாயம் தான் நடைபெறும். எங்கள் விருப்பு வெறுப்புக்கு ஆட்சி வளையாது. சட்டத்தின் படியான ஆட்சிதான் நடைபெறும். யாரையும் பழிவாங்க வேண்டுமென்று வெறிபிடித்து அலைய மாட்டோம்.

நான் யாரையும் பழிவாங்க வேண்டுமென்று எண்ணுகின்ற பண்பு படைத்தவனல்ல; ஜெய லலிதாவைப் போல, பழிவாங்கும் குணம் படைத்தவனல்ல. அன்பும், மனிதப் பண்புமுடையவனாக என்னைச் செதுக்கியவர் தந்தை பெரியார். என்னைச் சமுதாயத்திலே தலை நிமிர்ந்து உலவ விட்டு, அரசியலிலே பட்டை தீட்டித் தயாரித்தவர் அறிஞர் அண்ணா. என்னை மேலும் கூர்மையுடைய வனாகச் செழுமைப்படுத்தியவர்கள் தமிழ் மக்கள். எனக்கு வலுசேர்த்தது நான் கற்ற தமிழ்மொழி!

உனது உடல் நிலை எங்களுக்குப் புரியாதா? சிரமப்பட்டு நேரில் வர வேண்டுமா? என்றெல்லாம் நீ கேட்பது எனக்குத் தெரிகிறது. இருந்தாலும் உங்களில் ஒரு சிலர், நம்முடைய அண்ணன் வரவில்லையே, எத்தனை தேர்தல்களில் நள்ளிரவிலும் வந்து ஒரு மணி நேரம், ஒன்றரை மணி நேரம் என்று உரையாற்றியிருக்கிறார்? ஏன், கிருஷ்ணகிரியில் ஒரு முறையும், தூத்துக்குடியில் ஒரு முறையும், காலையில் பொழுது விடிந்த பிறகும் சூரியன் உதிக்கும் வரை என்னுடைய பிரச்சாரம் நடந்திருக்கிறது. வழியில் வேனில் தயிர் சாதத்தைச் சாப்பிட்டு விட்டுப் பயணம் செய்திருக்கிறேன். இப்போது நான் விரும்புகின்ற அளவுக்கு என் மனதில் நிரம்பி வழியும் ஆர்வத்தின் அளவுக்கு, உடல் நிலை ஒத்துழைக்காவிட்டாலும், அது ஒத்துழைக்கின்ற அளவுக்குச் சுற்றுப்பயணம்வர நமது மக்களை நேரில் சந்தித்து வாக்கு கேட்க முடிவுசெய்துள்ளேன். எனவே ஒவ்வொரு ஊரிலும் நான் மேடைக்கே வர வேண்டுமென்று நினைக்காமல், வேனில் இருந்தபடியே உரையாற்றுவதற்கு, அதுவும் குறைந்த நேரமே உரையாற்றுவதற்கு நீ அனுமதிக்க வேண்டும்; பொதுமக்களும் பொறுத்தருள வேண்டும்!

பெரும்பாலும் முதலமைச்சர் ஜெயலலிதா என்னை நோக்கி எழுப்புகின்ற கேள்விகளுக்கு உடன்பிறப்பு மடல்களின் மூலமும், கேள்வி-பதில் பகுதியிலும் விரிவாகப் பதில்களை "டிக்டேட்" செய்து விடுகிறேன். அவைகளை எல்லாம் திண்ணைப் பிரச்சாரங்களின் மூலம் மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்த்துவிடு! தேர்தலுக்கு மிகவும் குறைந்த நாட்களே உள்ளன. அதற்குள் வரமுடிந்த ஊர்களுக்கு வர முயற்சிக்கின்றேன். எனது பயணத்தை வெற்றிகரமாக்கிட வேண்டிய முழுப் பொறுப்பும் உனக்குத்தான் உள்ளது. என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே, உங்களுக்காக உழைக்க, எனது ஊனில் கலந்திருக்கும் தமிழ் மக்களுக்காகத் தொடர்ந்து உழைக்க, உத்தரவிடுங்கள்! வெற்றி நமதே! ஆதரிப்பீர் உதய சூரியன்!

அன்புள்ள,

மு.க.

22-4-2016

4011. தலைவர் கலைஞரின் திருத்தப்பட்ட தேர்தல் பிரச்சாரச் சுற்றுப் பயணம்!

3-5-2016	மாலை	மதுரைப் பொதுக்கூட்டம்.
5-5-2016	மாலை	சென்னைப் பொதுக்கூட்டம்
8-5-2016	மாலை	தங்கசாலை மணிக்கூண்டு பொதுக்கூட்டம்
11-5-2016		திருவாரூர் தொகுதி (வாக்காளர்கள் சந்திப்பு வேன் மூலம்)
14-5-2016	பிற்பகல் 3.00	சென்னை சேப்பாக்கம் பொதுக்கூட்டம்.

- தலைமைக் கழகம் அறிவிப்பு

உடன்பிறப்பே,

மே 16 அன்று நடைபெறவுள்ள தமிழகச் சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரத்திற்காக என்னுடைய திருத்தப்பட்ட நிகழ்ச்சி நிரல் இன்று தலைமைக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. முதலில் வெளியிடப்பட்ட சுற்றுப்பயண நிகழ்ச்சிகளில் விடுபட்டுப்போன மாவட்டங்களின் கழகச் செயலாளர்கள் சிலர், தங்கள் மாவட்டங்களிலும் பிரச்சாரப்பயணம் வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டிருந்த நிலையில், முதலில் வெளியிடப்பட்ட நிகழ்ச்சிகளிலேயே ஒருசில மாவட்டங்கள் தற்போது விடப்பட்டுள்ளன. காரணம் என்னுடைய முதல்கட்ட ஆறு நாள் தொடர்ச்சியான சுற்றுப் பயண நிகழ்வுகளின் அனுபவம்தான்.

ஆறு நாட்களும், பிரச்சார "வேனில்" தான் வாசம்! ஆனால் அந்த வேன் ஒவ்வொரு ஊரிலும் மனித சமுத்திரத்திற்குள் புகுந்து "குறுகுறு நடந்து சிறு கரம் நீட்டி"த் தத்தித் தவழ்ந்து வரும்

குழந்தையைப் போல வெளிவந்ததை நீ தொலைக்காட்சிகளில் பார்த்துக் களித்துப் பெருமிதம் அடைந்திருப்பாய்!

கழகப் பொருளாளர், தம்பி மு.க. ஸ்டாலின் தனது சுற்றுப் பயணத்தை மேலும் விரிவுபடுத்திக் கொள்வதாகவும், நான் அதிகம் சிரமப்படக் கூடாது என்றும் கேட்டுக்கொண்டார்.

ஆர்வமும் அக்கறையும் கொண்ட உடன்பிறப்புகளின் ஆலோசனையின் பேரில், தற்போது எனது சுற்றுப்பயணம் "திருத்தப்பட்டு" இந்த நிகழ்ச்சி நிரல் வெளியிடப்பட்டுள்ளது.

முதலில் வெளிவந்த சில ஊர்களின் பெயர்கள் தற்போது விடுபட்டுப் போயிருக்கலாம். வரவிருக்கின்ற பொதுத் தேர்தலில் கழகக் கூட்டணி வெற்றிபெற்ற பின்னர், தற்போது விடுபட்ட ஊர்களுக்கு உங்களுடைய வெற்றி மகிழ்வில் பங்குகொள்ள நான் நிச்சயமாக நேரில் வருகை தருவேன் என்ற உறுதியினைத் தருகிறேன். உங்களில் நானும், என்னுள் நீங்களும் ஐக்கியமாகி இருக்கிறோம் என்ற உணர்வுடன்; நான் வராததை வந்ததாகவே கருதி, கழகக் கூட்டணி வேட்பாளர்கள் இந்தத் தேர்தலில் மிகப் பெரிய வெற்றியினை ஈட்டிட அனைவரும் உழைத்திட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

30-4-2016

4012. தவறான விமர்சனத்திற்குத் தீவுத் திடல் கூட்டமே பதிலடி!

உடன்பிறப்பே,

நேற்றையதினம் (5-5-2016) சென்னை மாநகரில், தீவுத் திடலில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் திருமதி சோனியா காந்தி அம்மையாரும், நானும் 2016 தமிழகச் சட்டப் பேரவைக்கான பொதுத் தேர்தலையொட்டி, கலந்து கொண்ட பிரமாண்டமான பிரச்சாரப் பொதுக் கூட்டத்தைப் பார்த்தபோது, நான் கூட்டத்தில் குறிப்பிட்டதைப் போல அது வெற்றி விழாப் பொதுக் கூட்டம் போலவே காட்சி அளித்தது.

சோனியா காந்தி அவர்கள் பேசும்போது, கடந்த ஆண்டு இறுதியில் சென்னை மாநகரில் ஏற்பட்ட வெள்ளப் பேரழிவைப் பற்றிக் குறிப்பிட்டு, அந்த நேரத்தில் தமிழகத்திலே இருந்த அ.தி.மு.க. அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த உதவியும் செய்ய முன்வராத நிலையைச் சுட்டிக் காட்டி, அ.தி.மு.க. அரசாங்கம் எங்கே போனது? மக்களின் கண்ணீரைத் துடைக்க முன்வந்ததா? என்றெல்லாம் கேள்வி எழுப்பினார். 2011ஆம் ஆண்டிற்குப் பிறகு தமிழ்நாட்டில் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது என்றும் விளக்கினார்.

சோனியா காந்தி அம்மையார் பேசிய நேரத்தில், என்னுடைய நினைவுகள் 1980ஆம் ஆண்டு தேர்தலில் அன்னை இந்திரா காந்தி தலைமையில் காங்கிரஸ் கட்சியும், என்னுடைய தலைமையிலே திராவிட முன்னேற்றக் கழகமும் கூட்டணி அமைத்து போட்டியிட்டதுதான் நினைவுக்கு வந்தது. அதைத்தான் நான் பேசும்போது, அந்தத் தேர்தல் பிரச்சாரத்திற்காக வருகை தந்த இந்திரா காந்தி அம்மையாரைப் பார்த்து, "நேருவின் மகளே வருக! நிலையான ஆட்சி தருக" என்று கூறினேன்.

அதற்குப் பிறகு 2004ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின்போது - தமிழ்நாட்டிற்கு

தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்த திருமதி சோனியா காந்தி அவர்களைப் பார்த்து, "இந்திராவின் மருமகளே வருக! இந்தியாவின் திருமகளே வெல்க'' என்று வரவேற்பு கூறி வாழ்த்தினேன்.

தற்போது நடைபெறவுள்ள தமிழகத்தின் பொதுத் தேர்தலில் மற்றக் கட்சிகளுடன் தோழமையும் கூட்டணியும் ஏற்படுவதற்கு முன்பாகவே, திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் கட்சியும் கூட்டணி அமைத்து அறிவித்தது. அந்த நேரத்தில் தமிழகத்திலே உள்ள சில கட்சிகள் இந்தக் கூட்டணியைப் பற்றிக் கேள்வி எழுப்பின.

இந்திய அரசியல் அமைப்பில் Democratic Socialism அதாவது "ஜனநாயக சோஷலிசம்" என்ற மகத்தான இலட்சியத்தை அறிமுகம் செய்தவர் பண்டித நேரு அவர்கள்.

1976இல் 42வது திருத்தத்தின் மூலமாக, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையில், (Preamble) Socialist மற்றும் Secular அதாவது "சமதர்ம'' மற்றும் "சமயச் சார்பற்ற" என்ற அரிய கருத்துகளை இணைத்தவர் திருமதி இந்திரா காந்தி அவர்கள்.

அந்தப் பெருந்தலைவர்கள் அறிமுகப்படுத்திய இலட்சியமும், அரிய கருத்துகளும் தமிழ்நாட்டில் ஜெயலலிதாவின் அ.தி.மு.க. ஆட்சியில் போற்றப்படுகின்றனவா? நடைமுறையில் உள்ளனவா? என்றால் இல்லை.

ஜனநாயகம் என்பது அரசமைப்பின் ஒரு வடிவம். அதில் அரசாங்கத்தை மக்களே உருவாக்கி, அனைத்துச் செயல்பாடுகளிலும் மக்களே பங்கேற்று, தங்களைத் தாங்களே ஆளுவதற்கு எல்லா நிலைகளிலும் உறுதுணையாக இருப்பதே ஜனநாயக அரசு ஆகும். மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் மக்களாட்சிதான் ஜனநாயகம்.

சோஷலிசம் அல்லது சமதர்மம் என்பது பொருளாதார இலட்சியம். அதன்படி சமுதாயத்தின் சொத்துகள் அனைத்தும், அந்தச் சமுதாயத்தில் உள்ள மக்கள் அனைவராலும் சொந்தம் கொண்டாடக் கூடியதாக இருக்க வேண்டும்.

அற்புதமான இத்தகைய இலட்சியப் பின்னணியிலேதான், அன்னை இந்திரா காந்தி அம்மையார் முதல் முறையாக நமது அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் திருத்தம் செய்தபோது,

“மதச் சார்பற்ற குடியரசு ” என்றும், “சமதர்மக் குடியரசு” என்றும் திருத்தி அமைத்தார்.

ஜெயலலிதா ஆட்சியில் ஜனநாயகம் நசுக்கப்பட்டு விட்டது. சட்டமன்ற ஜனநாயகத்திற்கு இங்கே இடம் இல்லை; ஜனநாயக மரபுகளுக்கும் இடம் இல்லை. எதிர்க்கட்சிகள் தம்முடைய கருத்து வேறுபாடுகளையும், அரசு செயல்பாடுகளைப் பற்றிய நியாயமான விமர்சனத்தையும் எடுத்து வைக்கத் தமிழகச் சட்டமன்றத்தில் அனுமதி இல்லை. தமிழகச் சட்டமன்றமே ஜெயலலிதாவின் புகழ்பாடும் தர்பார் மண்டபமாக மாறிவிட்டது. எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பூட்டு; அ.தி.மு.க.வை ஆக்கபூர்வமாக விமர்சனம் செய்ய முயற்சி செய்தாலும்கூட கூண்டோடு வெளியேற்றம்.

ஜெயலலிதா ஆட்சியில் கருத்துச் சுதந்திரம் பாழாகிவிட்டது. பத்திரிகைச் சுதந்திரத்திற்கு இங்கே பேராபத்து. பத்திரிகைகள் மீது வழக்குகள்; பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல். எதிர்க்கட்சித் தலைவர்கள் மீது அவதூறு வழக்குகள். ஏன், என் மீது கூட வழக்கு.

ஜெயலலிதாவின் அ.தி.மு.க. ஆட்சியில் சோஷலிசம் எனப்படும் சமதர்மம் மதிக்கப்படுகிறதா என்றால், இல்லை. சோஷலிசம் எனப்படும் அருமையான இலட்சியம் அ.தி.மு.க.வினரால் கேலிப் பொருளாக்கப்பட்டுவிட்டது. அமைச்சர்களும், அ.தி.மு.க.வினரும் கொள்ளை அடிப்பதிலேதான் வல்லமை காட்டியிருக்கிறார்களே தவிர, ஒவ்வொருவரும் மக்கள் வரிப் பணத்தை, மக்கள் நலனுக்குச் சென்று சேர வேண்டிய பொது நிதியை இலஞ்ச ஊழல் மூலம் கோடி கோடியாகக் குவித்துக் கொண்டார்களே தவிர, ஊரை அடித்துச் சேர்த்த ஊழல் பணத்தை - ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களைப் பயன்படுத்தி வெளிநாடுகளில் பங்களாக்கள், தோட்டங்கள், ஓட்டல்கள் ஆகியவற்றை நிறைய வாங்கிச் சேர்த்துக் கொண்டதுடன் வெளிநாட்டு வங்கிகளில் எதிர்கால அரசியலுக்கான சொந்த சேமிப்பாக வைத்திருக்கிறார்களே தவிர, ஏழை எளிய நடுத்தர மக்களைப் பற்றிக் கவலைப்பட வில்லை; அவர்களுக்குச் சமதர்ம எண்ணம் கிஞ்சிற்றும் இல்லை. ஏன், ஜெயலலிதாவுக்கே சோஷலிசச் சிந்தனை துளியும் இல்லாதபோது, அவருடைய கட்சியினர்க்கு எப்படி இருக்கும்?

ஜெயலலிதா ஆட்சியில் இவ்வாறு ஜனநாயகத்திற்கு சாவு மணி அடித்துவிட்டார்கள்; சோஷலிசத்தை வெகு தொலைவுக்குத் துரத்தி அடித்துவிட்டார்கள். மொத்தத்தில் பண்டித நேரு கண்ட ஜனநாயக சோஷலிசம், இந்திரா காந்தி அம்மையார் உறுதிப்படுத்திய சோஷலிச எண்ணம், ஜெயலலிதா ஆட்சியில் சிறிதும் மதிக்கப்படவில்லை.

காங்கிரசும், தி.மு.க.வும் மதச்சார்பின்மைக் கொள்கையிலே ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவை; ஜனநாயகத்திலும், சோஷலிசத்திலும் உறுதி பூண்டவை. அதனால்தான் கொள்கை - செயல் திட்டங்களின் அடிப்படையில், நீண்ட காலமாக கூட்டணி அமைத்துப் போட்டியிட்டு வருகின்றன. ஜெயலலிதாவைப் போல ஜனநாயகத்திலோ, சோஷலிசத்திலோ, மதச் சார்பின்மையிலோ நம்பிக்கை இல்லாதவர்கள், மத மாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்து சிறுபான்மைச் சமுதாயத்தினரை மறைமுகமாகச் சிறுமைப்படுத்தியவர்கள், கர சேவைக்கு ஆட்களை அனுப்பியவர்கள், காங்கிரசுக்கும் தி.மு.க.வுக்கும் இடையே நீண்ட காலமாக நிலவி வரும் நட்பை - உறவைப் போன்றதொரு நேர்த்தியான அரசியல் நிலையைக் கற்பனை செய்தும் பார்த்திட முடியாது.

நான் கோரிக்கை வைத்ததும் வங்கிகளைத் தேசிய மயமாக்கி சோஷலிச நடவடிக்கையை மேற்கொண்டவர் இந்திரா காந்தி அம்மையார். நான் கோரிக்கை வைத்ததும், தமிழ்மொழியை செம்மொழியாகப் பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுத்தவர் சோனியா அம்மையார். நான் கேட்டதும் சேது சமுத்திரத் திட்டத்திற்கு ஒப்புதல் தந்தது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு.

பழம்பெருமை வாய்ந்த சென்னைத் துறைமுகத்தைக் காப்பாற்றவும் மேம்படுத்தவும் மதுரவாயல் - துறைமுகம், "சூப்பர் எக்ஸ்பிரஸ் ஹைவே" பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது யு.பி.ஏ. ஆட்சியில்! ஆனால் தி.மு.க.வும் காங்கிரசும் இணைந்து செய்த சாதனைகள் என்பதற்காகவே, காழ்ப்புணர்ச்சியின் காரணமாக ஜெயலலிதா செம்மொழி தமிழ் என்பதை அலட்சியப்படுத்தியிருக்கிறார்; மதுரவாயல் - துறைமுகம் உயர் மட்ட நெடுஞ்சாலைத் திட்டத்தை முடக்கிப் போட்டிருக்கிறார். காங்கிரசும் தி.மு.க.வும் கூட்டணி அமைத்ததால்தானே, சென்வாட்

வரி நீக்கப்பட்டது, கடல்சார் பல்கலைக் கழகம் உருவானது, நோக்கியா நிறுவனம் தொழிற்சாலையைத் தொடங்கியது, குறைந்த வட்டி வீதத்தில் மாணவர்களுக்குக் கல்விக் கடன் கிடைத்தது போன்ற ஏராளமான முற்போக்குத் திட்டங்கள் தமிழ்நாட்டுக்குக் கிடைத்திருக்கின்றன.

அதுமட்டுமா; திருமதி சோனியாகாந்தி அவர்களும், பிரதமர் மன்மோகன்சிங் அவர்களும் கழக ஆட்சிக் காலத்தில் தமிழகத்திற்கு அளித்துள்ள திட்டங்கள் இதுவரை தமிழகம் பெற்றிடாத மகத்தான திட்டங்களாகும்.

அதாவது, 56 ஆயிரத்து 664 கோடி ரூபாய் - தமிழகமெங்கும் சாலைகள், மேம்பாலங்கள், துறைமுகப் பணிகள்; 14 ஆயிரத்து 600 கோடி ரூபாயில் சென்னை மாநகர் மெட்ரோ இரயில் திட்டம்; 2,427 கோடி ரூபாயில் சேது சமுத்திரத் திட்டம்; 1,553 கோடி ரூபாயில் சர்வதேச தரத்தில் சேலம் உருட்டாலை; 1,330 கோடி ரூபாயில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்; 908 கோடி ரூபாயில் சென்னைக்கு கடல்நீரைக் குடிநீராக்கும் மற்றுமொரு திட்டம்; 50 காசு செலவில் இந்தியா முழுவதும் தொலைபேசியில் பேசும் வசதி; 1,828 கோடி ரூபாயில் 90 இரயில்வே மேம்பாலங்கள்; 470 கோடி ரூபாயில் தேசிய மோட்டார் வாகன சோதனை ஆராய்ச்சி வளர்ச்சிக் கட்டமைப்பு மையம் ; 120 கோடி ரூபாயில் சேலம் அரசினர் மோகன் குமாரமங்கலம் மருத்துவமனை "சூப்பர் ஸ்பெஷாலிட்டி" மருத்துவமனையாக மேம்பாடு; மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் 27 சதவீத இட ஒதுக்கீடு; சென்னையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்; திருச்சியில் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம்; சென்னைக்கருகில் ஆசியாவிலேயே முதலாவதாக உடல் ஊனமுற்றோர்க்கான தேசிய நிறுவனம்; தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம்; திருவாரூரில் மத்திய பல்கலைக்கழகம்; "பொடா'' சட்டம் ரத்து; தேசிய ஊரக வேலைவாய்ப்பு; 100 நாள் வேலைத் திட்டம் ஆகிய திட்டங்கள் தமிழகத்திற்குக் கிடைத்தன.

இந்த மகத்தான திட்டங்களால் தமிழகம் மிகப்பெரிய வளர்ச்சி கண்டு வருகிறது. இவற்றில் ஒருசிலவற்றைத்தான் என்னால் நேற்றைய கூட்டத்தில் எடுத்துக்காட்ட முடிந்தது.

இந்த வரலாற்று நிகழ்வுகளை உணர்ந்து கொள்ளாமல்தான் திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் கூட்டணியைப் பற்றித் தமிழகத்தில் உள்ள சில கட்சியினர் விமர்சனம் செய்தார்கள். அவர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் வகையிலேதான் நேற்றைய தினம் தீவுத் திடலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சோனியா காந்தியாரின் வருகையும் பேச்சும் அமைந்தது. தவறான விமர்சனத்திற்கு நேற்றைய தீவுத் திடல் கூட்டமே தக்க பதிலடி!

அன்புள்ள,

மு.க.

07-05-2016

4013. இந்தக் கேள்விகளுக்கு என்ன பதில்?

உடன்பிறப்பே,

மின்சார வாரியத்திற்காக நிலக்கரி வாங்குவதில் எந்த அளவுக்கு ஊழலும் முறைகேடுகளும் நடைபெற்றன என்று விரிவாக நான் தெரிவித்ததற்கு எந்த விதமான பதிலும் முதலமைச்சரிடமிருந்தோ, அமைச்சரிடமிருந்தோ இதுவரை வரவில்லை. இப்போது சொல்லாவிட்டாலும், தேர்தலுக்குப் பிறகு, இந்த ஊழல்கள் குறித்து விசாரணைக் கமிஷன் அழைத்துக் கேட்கும்போது பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். அது நிலக்கரி ஊழல்.

அதே மின்சார வாரியத்தில் சூரிய ஒளி மின்சாரம் வாங்குவதிலே தமிழக அரசுக்கு 7,576 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது குறித்து இப்போது தெரிவிக்கிறேன். இதற்காவது ஆளும் தரப்பில் பதில் வருகிறதா என்று நீங்களே பாருங்கள்!

மொத்தம் 3,000 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட சூரிய மின் உற்பத்தி நிலையங்களை நிறுவத் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர் மானக் கழகம் ஒப்பந்தப் புள்ளிகள் கோரியது. ஒப்பந்தப் புள்ளியின் தேதி 5-12-2012 முதல் 2-1-2013 வரை என்று முடிவு செய்தார்கள். ஒப்பந்தப் புள்ளி பெறுவதற்கும், அதனைத் திறப்பதற்கும் கடைசி தேதி 4-1-2013 என்று முடிவு செய்யப்பட்டது.

பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளில் 52 ஒப்பந்தப் புள்ளி களை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் தேர்ந்தெடுத்து, அந்த 52 ஒப்பந்ததாரர்களுக்கும் 708 மெகாவாட் மின்சாரத்தை, ஒரு யூனிட் ரூ. 6.48 என்ற விலைக்கு உற்பத்தி செய்து வழங்குவதற்கும், அவ்வாறு வழங்கும் விலையில் 1-4-2014 முதல் பத்து ஆண்டுகளுக்கு, ஒவ்வொரு வருடத்திற்கும் 5 சதவிகிதம் விலையை அதிகப்படுத்தவும் ஒப்புக்கொண்டு அவர்களுக்கெல்லாம் கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் இத்தனை

நடவடிக்கைகளும் முடிந்த பிறகு இதன்மீது எந்த முடிவும் எடுக்கப்படாமல் முடக்கப்பட்டுவிட்டது.

Load Flow Study (மின்னோட்டப் பகுப்பாய்வு) செய்யாமலும் - நிலத் தேவைகளைப் பூர்த்தி செய்யாமலும் எந்த ஒரு ஒப்பந்தமும் சூரிய ஒளி மின் உற்பத்தியாளர்களுடன் செய்துகொள்ள முடியாது என்று அந்தத் துறையின் அமைச்சரே தெரிவிக்கும் நிலையில், அந்தத் தேவைகளை நிவர்த்தி செய்யாத நிலையில், 4-7-2015 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா முன்னிலையில் அதானி குழுமத்துடன் தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஒப்பந்தம் செய்துகொண்டது சரியா?

இந்நிலையில், சூரிய ஒளி மின் உற்பத்தியாளர்களி டமிருந்து தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மின்சாரம் வாங்குவதற்கான ஒட்டுமொத்த விலை மற்றும் நடைமுறைகள் சம்பந்தமாக 12-9-2014 அன்று, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஓர் ஆணையைப் பிறப்பிக்கிறது. முதலில் அணுகும் சூரிய ஒளி மின் உற்பத்தியாளர்களுக்கு முன் உரிமை வழங்கப்படுவதோடு, நிர்ணயிக்கும் விலை முன்னுரிமை கட்டண விலை என்று அழைக்கப்பட்டு, அதன் விலை ரூ. 7.01 எனவும், இது 31-3-2015 வரையில் நிலுவையில் இருக்கும் எனவும் நிர்ணயம் செய்யப்பட்டது.

தேர்ந்தெடுக்கப்பட்ட சூரிய மின் உற்பத்தியாளர்களுடன் செய்து கொள்ளப்பட்ட மின் கொள்முதல் ஒப்பந்தங்களுக்கு ஒப்புதல் அளிக்கக்கோரி தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையத்திடம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் கோரியபோது, அந்த ஒப்பந்தங்கள், மத்திய அரசின் வழிகாட்டுதலின் நெறிமுறைகளைக் கடைப்பிடித்து செய்யப்படவில்லை என்ற காரணத்தால் 15-9-2014 நாளிட்ட ஆணையில் நிராகரிக்கப்பட்டது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு யூனிட் ரூ. 7.01 என்ற விலை விகிதத்தில், அதே ஒப்பந்ததாரர்களுடன் தொடர்வது என தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் முடிவுசெய்து, அனைத்து ஒப்பந்ததாரர்களையும் முன்னுரிமை கட்டண

விலைக்கு (ரூ. 7.01) மாற்றிக் கொள்ளுமாறு தெரிவித்துக் கடிதம் அனுப்பியது.

ஜூலை 2015ல், அதானி நிறுவனத்துடன், 648 மெகாவாட் சூரிய ஒளி மின்சாரம் வாங்குவதற்காகத் தமிழக அரசு ஒப்பந்தம் போட்டது முதலாகவே இத்திட்டம் குறித்து எதிர்க்கட்சிகள் பல்வேறு குற்றச்சாட்டுகளை எழுப்பி வந்தன. தற்போது புதிதாக எழுந்துள்ள சர்ச்சை, எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளை உண்மையாக்கும் விதத்தில் உள்ளது.

பொதுவாக ஒரு மெகாவாட் சூரிய மின் உற்பத்தி செய்வதற்கு ஐந்து ஏக்கர் நிலம் தேவை. அதன்படி அதானி நிறுவனம் 648 மெகாவாட் சூரிய ஒளி மின்சாரம் உற்பத்தி செய்ய 3,240 ஏக்கர் நிலம் வைத்திருக்க வேண்டும்.

7-10-2014 தேதிய, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக நடவடிக்கைபடி, Load Flow Study (மின்னோட்டப் பகுப்பாய்வு) செய்த பின்பும், பாதுகாப்பு வைப்புத் தொகை செலுத்தப்பட்ட பின்பும், நிலத் தேவையைப் பூர்த்தி செய்த பிறகுமே முதுநிலை முடிவு செய்யப்படும். இந்தத் தேவைகளையெல்லாம் அதானி குழுமம் நிறைவேற்றியுள்ளதா என்றால் கிடையாது.

தேவையான நிலங்களை அதானி குழுமம் பெற்றுள்ளது என்று தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் சான்றளித்துள்ளதா?

Load Flow Study (மின்னோட்டப் பகுப்பாய்வு) செய்யாமலும் - நிலத் தேவைகளைப் பூர்த்தி செய்யாமலும் எந்த ஒரு ஒப்பந்தமும் சூரிய ஒளி மின் உற்பத்தியாளர்களுடன் செய்துகொள்ள முடியாது என்று அந்தத் துறையின் அமைச்சரே தெரிவிக்கும் நிலையில், அந்தத் தேவைகளை நிவர்த்தி செய்யாத நிலையில், 4-7-2015 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா முன்னிலையில் அதானி குழுமத்துடன் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஒப்பந்தம் செய்துகொண்டது சரியா?

4-7-2015 அன்று தமிழக அரசு அதானி குழுமத்துடன் 4536 கோடி ரூபாய் செலவில், ஒரு யூனிட் ரூபாய் 7.01 என்ற விகிதத்தில் 25 ஆண்டுகளுக்கு மின்சாரம் வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் தமிழக அரசு கையெழுத்திட்டது. இந்த ஒப்பந்தம்

முடிந்த இரண்டே வாரங்களில், மத்தியப் பிரதேச அரசு சூரிய ஒளி மின்சாரம் வாங்குவதற்கான ஒப்பந்தத்தை இறுதி செய்தபோதுதான் குற்றச்சாட்டுகள் கிளம்பின. மத்திய பிரதேச அரசுக்கு ஒரு யூனிட் ரூபாய் 6.04 என்ற விலையில் சூரிய ஒளி மின்சாரம் வழங்க இதே அதானி நிறுவனம் விண்ணப்பித்திருந்தது. ஆனால் அதானி நிறுவனத்தின் இந்த விலைப்புள்ளியை நிராகரித்த மத்தியப்பிரதேச அரசு, மொரீஷியஸ் நாட்டைச் சேர்ந்த ஸ்கை பவர் சவுத் ஈஸ்ட் ஏஷியா என்ற நிறுவனத்தோடு, ஒரு யூனிட் 5.05 என்ற விலையில், 25 ஆண்டுளுக்கு மின்சாரம் வாங்க ஒப்புதல் அளித்தது உண்மையா இல்லையா?

அதானி நிறுவனம், 648 மெகாவாட் சூரிய ஒளி மின்சாரம் தயாரிக்கும் மின்சாரப் பூங்காவை ராமநாதபுரம் மாவட்டத்தில் அமைக்க நிலங்களை வாங்கத் தொடங்கியது. இவ்வாறு நிலம் வாங்குவதில் பல முறைகேடுகள் நடைபெறுவதாகவும், இடைத்தரகர்கள் இடையில் புகுந்து குறைந்த விலைக்கு நிலத்தை விவசாயிகளிடமிருந்து வாங்கி, அதானி நிறுவனத்துக்கு அதிக விலைக்கு விற்பனை செய்வதாகவும் புகார்கள் கூறப்பட்டன.

சில மாதங்களுக்கு முன்பு சென்னை உயர்நீதிமன்றத்தில் அதானி நிறுவனம் தொடர்ந்துள்ள வழக்கு ஒன்று, இந்தக் குற்றச்சாட்டுகளை மெய்ப்பிக்கும் விதமாக உள்ளது. அதானி நிறுவனத்தின் சார்பாக, நில ஆவணங்களைச் சரிபார்க்கும் பொருட்டுக் கபிலன் என்ற வழக்கறிஞர் நியமிக்கப்பட்டிருந்தார். அந்தக் கபிலன் அதானி நிறுவனம் தொடர்பாக எந்த தகவலையும் வெளியிடக்கூடாது என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் அதானி நிறுவனம் சார்பாக தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது. இதன் பின்னணி என்ன என்று விசாரித்தபோது பல்வேறு சுவையான தகவல்கள் கிடைத்தன.

சென்னை அண்ணாசாலையிலிருந்து செயல்படும் கபிலன் அசோசியேட்ஸ் என்ற வழக்கறிஞர் நிறுவனத்தின் உரிமையாளர் வழக்கறிஞர் கபிலன். அதானி நிறுவனம் சார்பாக ராமநாதபுரம் மாவட்டத்தில் வாங்கப்படும் நிலங்களின் ஆவணங்களைச் சரிபார்த்துத் தருவதற்காகக் கபிலன் நியமிக்கப்படுகிறார். கபிலனுக்கு ஒரு ஏக்கர் நிலத்துக்கு ரூபாய் 6000 என்று கட்டணம் நிர்ணயிக்கப் படுகிறது. இக்கட்டணத்தின் அடிப்படையில் கபிலனுக்கு அதானி நிறுவனம் 70 லட்ச

ரூபாயை அளித்திருக்கிறது. இந்த நிலையில், கபிலன் அதானி நிறுவனத்துக்கு எழுதிய கடிதத்தில், ஒரு ஏக்கர் நிலத்துக்கு ரூபாய் 15,000 வேண்டும் என்றும், அவ்வாறு தரத் தவறினால் அதானி நிறுவனம் அமைக்கும் சூரிய ஒளி மின் பூங்காக்கள் குறித்த பல்வேறு தகவல்களை வெளியிடுவேன் என்றும், அவ்வாறு வெளியிட்டால், அதானி நிறுவனம், தமிழகத்தில் சூரிய ஒளி மின் பூங்கா அமைக்கும் திட்டத்தையே கைவிடவேண்டி வரும் என்றும் கடிதம் எழுதியுள்ளார்.

அதானி நிறுவனத்துக்குக் கபிலன் எழுதிய கடிதத்தில், "சூரிய ஒளி மின் பூங்கா அமைப்பதற்காக நிலம் வாங்கியதில் பல்வேறு சட்டவிரோதமான நடவடிக்கைகள் நடந்துள்ளன. மின்சாரம் வாங்குவதற்காகத் தமிழக மின் வாரியத்தோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தில் பல்வேறு சட்டவிரோதமான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த சட்டவிரோதமான ஆவணங்களின் அடிப்படையிலேயே ஒரு யூனிட் ரூபாய் 7.01 என்ற விலைக்கு அதானி நிறுவனத்தோடு மின்சாரம் வாங்கத் தமிழக அரசு ஒப்பந்தம் போட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே "இந்தஸ் இந்த்" வங்கியிலிருந்து 2303.98 கோடி, "ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா"விலிருந்து 1000 கோடி, "யெஸ்" பேங்கிலிருந்து 500 கோடி மற்றும் ஸ்டான்டர்ட் சார்டர்ட் வங்கியிலிருந்து 803.98 கோடி கடன் பெற்றுள்ளது அதானி நிறுவனம்.

இவ்வாறு கடன் பெறப்பட்டதிலும் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளன. செபி விதிகள், ஒப்பந்த விதிகள், போன்ற பல்வேறு விதிகள் மீறப்பட்டுள்ளன. இந்த விதி மீறல்கள் ஒரு துளி மட்டுமே. தமிழக மின் வாரியம், இதர அரசுத் துறைகள், பொது நல வழக்கு தொடுக்கும் சமூக ஆர்வலர்கள், ஊடகங்கள் போன்றவற்றிற்கு இத்தகவல் தெரிந்தால், அதானி நிறுவனம் தமிழக அரசோடு செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களை ரத்து செய்யும் நிலை ஏற்படும். பூர்வாங்க விசாரணை நடத்தினாலே, தமிழக மின் வாரியத்தை அதானி நிறுவனம் எப்படி ஏமாற்றியிருக்கிறது என்பது தெரிந்துவிடும் என்று கபிலன் அதானி நிறுவனத்துக்கு அப்போது எழுதிய கடிதத்தில் கூறியுள்ளார்.

மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் உறுப்பினராக இருந்த நாகல்சாமி, இந்த ஒப்பந்தம் நடந்தபோதே, இந்த

ஒப்பந்தத்தினால் அடுத்த 25 ஆண்டுகளில் தமிழக அரசு 25 ஆயிரம் கோடி இழப்பைச் சந்திக்கும் என்று கூறினார். ஆனால் எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட அனைத்து எதிர்ப்புகளையும் அலட்சியப்படுத்திவிட்டு ஒப்பந்தத்தைச் செயல்படுத்தி வருகிறது தமிழக அரசு.

இதுகுறித்து அறிக்கை வெளியிட்ட நான் "அ.தி.மு.க. அரசு அதானி குழுமத்தோடு அவசர அவசரமாக இந்த ஒப்பந்தத்தைச் செய்துகொண்டு அந்தக் குழுமத்திற்கு சட்ட விதிகளுக்குப் புறம்பாக, சட்ட விரோதமாக, மோசடியாக இந்த மின் திட்டத்தை எந்தவிதமான ஒப்பந்தப் புள்ளிகளும் கோராமல் அளித்திருக்கிறது என்பதை இந்த வழக்கிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. எனவே இந்தத் திட்டத்தை அ.தி.மு.க. அரசு அளித்தது பற்றிச் சட்டப்படியான குற்ற விசாரணை நடைபெற்று, மறைக்கப்பட்டிருக்கும் உண்மைகள் வெளிக்கொணரப்பட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தேன்.

மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் சூரிய ஒளி மின்சாரம் ஒரு யூனிட்டுக்கு ரூ. 5.05 என்றிருக்கும் நிலையில், தமிழ்நாட்டில் அதிகவிலை நிர்ணயிக்கப்பட்டதை எதிர்த்து மேல்முறையீட்டு ஆணையத்திடம் மேல்முறையீடோ அல்லது அந்த விலையை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கலோ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஏன் செய்யவில்லை?

"அரசுடன் அதானி குழுமம், சூரிய மின்சக்தி நிலையம் ஒன்று 1400 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்க ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டிருக்கிறதாமே?" என்ற ஒரு கேள்விக்கு, 16-6-2015 அன்று நான் பதில் கூறும்போது, "தமிழகத்தில் 1400 கோடி ரூபாய் மதிப்பில் 200 மெகாவாட் சூரிய ஒளி மின்சாரம் தயாரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகச் செய்தி வெளிவந்துள்ளது. இந்த 200 மெகாவாட்டையும் ஆயிரம் மெகாவாட்டாக அதிகரிப்பதற்கான பேச்சுவார்த்தைகளும் அ.தி.மு.க. அரசுடன் நடைபெற்று வருகிறதாம். வருமானத்திற்கு அதிகமாகச் சொத்துக்குவித்த

வழக்கு மேல் முறையீட்டில் ஜெயலலிதா பெற்றிருக்கும் தற்காலிக நிவாரணத்திற்கும், அதானியின் இந்தச் சூரிய மின் சக்தி நிலைய ஒப்பந்தத்திற்கும் ஏதோ சம்மந்தம் இருப்பதாக யாரோ சிலர் கூறினால், அதில் உண்மை என்ன என்பது நமக்குத் தெரியாது!" என்று தெரிவித்திருந்தேன்.

சூரிய ஒளி மின் நிலையங்களை அமைப்பதற்கான செலவு குறைந்துவிட்டதால் நடப்பாண்டில் சூரிய ஒளி மின்சாரத்தின் கொள்முதல் விலை ரூ. 5.86 ஆக குறைந்துவிட்டது. அடுத்த ஆண்டில் இது யூனிட் ஐந்து ரூபாய் அளவுக்குக் குறைய வாய்ப்புள்ளது. இந்த நிலையில் அதானி நிறுவனத்துடன் ஒரு யூனிட்டுக்கு 2 ரூபாய் கூடுதலாக ரூ. 7.01 என்ற விலைக்கு மின்சாரம் வாங்க அரசு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறது என்றெல்லாம் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் தெரிவித் திருந்தார்.

31-3-2015 வரை முன்னுரிமை விலையான ரூ. 7.01 நிலுவையில் இருக்கும் எனத் தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் 12-9-2014 தேதியிட்ட ஆணையில் நிர்ணயம் செய்தபோது, அதனை எதிர்த்து, மேல் முறையீட்டு ஆணையத்திடமோ, உயர் நீதிமன்றத்திடமோ, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஏன் மனு தாக்கல் செய்யவில்லை?

அமைச்சருக்கு வேண்டிய உறுப்பினர்களான அக்சயகுமார் மற்றும் ஜி. ராஜகோபால் ஆகியோரை உள்ளடக்கிய தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம், முன்னுரிமை கட்டண விலையான ரூ. 7.01 என்பதன் கால வரம்பை 1-4-2015 முதல் 31-3-2016 வரை என்று தன்னிச்சையாக நீட்டித்திருப்பது உண்மையா இல்லையா? அவ்வாறு காலத்தை நீடித்துத் தன்னிச்சையாக உத்தரவு பிறப்பிக்கச் சொன்னது யார்?

மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் சூரிய ஒளி மின்சாரம் ஒரு யூனிட்டுக்கு ரூ. 5.05 என்றிருக்கும் நிலையில், தமிழ்நாட்டில் அதிக விலை நிர்ணயிக்கப்பட்டதை எதிர்த்து மேல்முறையீட்டு ஆணையத்திடம் மேல் முறையீடோ அல்லது

அந்த விலையை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கலோ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஏன் செய்யவில்லை?

அடுத்து, உடன்குடி அனல் மின் நிலையம் அமைப்பது குறித்து அ.தி.மு.க. அரசு மறு டெண்டர் கோரியது. அதுபற்றி, சதர்ன் சென்ட்ரல் சீனா பவர் எனர்ஜி டிசைனிங் இன்ஸ்ட்யூட் திரேசே கன்சார்டியம் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் தங்கள் நிறுவனம் குறைந்த தொகையைக் குறிப்பிட்டு ஒப்பந்தப் புள்ளியைத் தாக்கல் செய்த போதிலும், தங்கள் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு விட்டதாகவும், எனவே மறு டெண்டருக்கு தடை விதிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டபோது, உயர் நீதிமன்ற நீதிபதி திரு சத்யநாராயணா அவர்கள் புதிய டெண்டர் விட இடைக்காலத் தடை விதித்தார். வழக்கு முடியும்வரை புதிய டெண்டர் விடக்கூடாது என்றும் நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் உடன்குடி அனல் மின் நிலையம் அமைக்க இரண்டாவது முறையாக ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டது சரியா? யாரை ஏமாற்ற இந்த இரண்டாவது ஒப்பந்தப் புள்ளி?

அமைச்சருக்கு வேண்டிய உறுப்பினர்களான அக்சயகுமார் மற்றும் ஜி. ராஜகோபால் ஆகியோரை உள்ளடக்கிய தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம், முன்னுரிமை கட்டண விலையான ரூ. 7.01 என்பதன் கால வரம்பை 1-4-2015 முதல் 31-3-2016 வரை என்று தன்னிச்சையாக நீட்டித்திருப்பது உண்மையா இல்லையா? அவ்வாறு காலத்தை நீடித்துத் தன்னிச்சையாக உத்தரவு பிறப்பிக்கச் சொன்னது யார்?

இவ்வாறு பிறப்பித்த உத்தரவு, சட்டத்திற்குப் புறம்பானது என்றும், தேவையற்றது என்றும், அந்த உத்தரவு சூரிய ஒளி மின் உற்பத்தி யாளர்களுக்குச் சாதகமாகப் பிறப்பிக்கப்பட்டது என்றும், இதனால் அரசுக் கருவூலத்திற்குப் பெருத்த நஷ்டம் ஏற்படும் என்றும் ஆணையத்தின் மற்றொரு உறுப்பினரான திரு. நாகல்சாமி அவர்கள் 1-4-2015 அன்று உத்தரவிட்டுள்ளாரா? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? அது ஆணையத்தின் தன்னிச்சை யான முடிவு என்று தற்போது கூறும் அமைச்சர் நத்தம் விசுவநாதன், அந்த முடிவிற்கு மாறாக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாமா?

மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்கள் சூரிய ஒளி மின்சாரத்தை யூனிட் ஒன்றுக்கு தமிழ்நாட்டு விலையைவிட இரண்டு ரூபாய் குறைவாக வாங்கிய நிலையில், அதிக விலை கொடுத்து வாங்கக் காரணம் என்ன?

947 மெகாவாட் மின்சாரத்தை இந்த விலைக்குக் கொள்முதல் செய்தால் அரசு கஜானாவிற்கு, 7,576 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுமா? இல்லையா?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் என்ன பதில்?

அன்புள்ள,

மு.க.

9-5-2016

4014. மக்கள் நம் பக்கம்; வெற்றி நமதே!

உடன்பிறப்பே,

கடந்த சில நாட்களாகத் தமிழக நாளேடுகளை பிரித்துப் பார்த்தால், ஜெயலலிதா ஆட்சியில் தமிழ்நாடு பணம் கொழிக்கும் மாநிலமாக மாறிவிட்டதோ என்ற சந்தேகம் எழும் அளவுக்கு, அங்கே இத்தனை இலட்சம் ரூபாய், இங்கே இத்தனை கோடி ரூபாய் பறிமுதல், வாக்காளர்களுக்குத் தங்குதடையின்றிப் பணம் பட்டுவாடா, மின்சாரத்தை நிறுத்திவிட்டு இருட்டைப் பயன்படுத்திக்கொண்டு பணம் விநியோகம் என்றெல்லாம் தொடர்ந்து செய்திகள் வந்துகொண்டே இருக்கின்றன. அ.தி.மு.க.வினர் ஒவ்வொரு தேர்தலிலும் ஒவ்வொரு புது உத்தியைப் பண விநியோகத்திற்குக் கண்டுபிடித்து, நமது இந்திய ஜனநாயகத் தேர்தலைச் செழுமைப்படுத்தி (?) வருகின்றனர்.

2014 நாடாளுமன்றத் தேர்தலின்போது தேர்தல் ஆணையத்துடன் கைகோர்த்துக்கொண்டு கடைசிநேரத்தில் 144 தடை உத்தரவைப் பிறப்பித்து, அதைப் பயன்படுத்தி, காவல் துறையினர் துணையுடன் பணப் பட்டுவாடா செய்தனர். இந்தத் தேர்தலில், மின் விநியோகத்தை நிறுத்திவிட்டு, அந்த இருளைப் பயன்படுத்தி, பல இடங்களில் பண விநியோகம் செய்திருக்கின்றனர்.

ஆளும் அ.தி.மு.க.வினர் தாங்கள் வாக்காளர்களின் அதிருப்தியையும், கோபத்தையும் கடந்து இனியும் வெற்றி பெற முடியாது என்று கடைசியாகக் கொள்ளையடித்த பணத்தைக் கத்தை கத்தையாக அள்ளி வீசுகிறார்கள் என்றும் செய்திகள் வருகின்றன. தேர்தல் நேரத்தில் வேறு எந்த மாநிலத்திலும் இந்த அளவுக்கு, சுமார் நூறு கோடி ரூபாய் கைப்பற்றப்படவில்லை. பண விநியோகம் மாத்திரமல்ல; அம்பத்தூர் காங்கிரஸ் வேட்பாளர் அசன் மௌலானா மற்றும் அவருடன் தேர்தல் பிரச்சாரத்திற்காகச் சென்றவர்கள் மீது திராவகம் அடைக்கப்பட்ட முட்டைகள்

வீசப்பட்டு, அந்த வேட்பாளர் தற்போது மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வருகிறார். ஐ.ஏ.எஸ். அதிகாரி சந்திரலேகா மீது திராவக வீச்சு நடத்தியவர்கள் அல்லவா? மேலும் அந்தப் பழக்கத்தையே கடைப்பிடிக்கிறார்கள் போலும்!

கோவை மாவட்டத்தில் இரண்டு அதிகாரிகள், கோவை தெற்குத் தொகுதியின் தேர்தல் அதிகாரியும், தொண்டாமுத்தூர் தொகுதியின் தேர்தல் அதிகாரியும் தங்களுடைய சட்டரீதியான கடமையையும், மனசாட்சியையும் மறந்து ஆளுங்கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக நேரடியாகவே செயல்பட்டு, அ.தி.மு.க. வேட்பாளர் அரசு வாகனங்களில் பணம் கடத்தவும் உதவி செய்வது வெளியே தெரிந்து, பணம் கடத்தப்பட்டுக் காரியங்கள் யாவும் முடிந்த பின்னர்க் கடைசியாகக் கண் விழித்துக்கொண்டு, பாரபட்சமின்றிச் செயல்படுகிறோம் என்று பாவனை செய்து, தேர்தல் ஆணையம் அந்த அதிகாரிகளின் கார்களைப் பறித்துக்கொண்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் இரண்டு அதிகாரிகள், கோவை தெற்குத் தொகுதியின் தேர்தல் அதிகாரியும், தொண்டாமுத்தூர் தொகுதியின் தேர்தல் அதிகாரியும் தங்களுடைய சட்டரீதியான கடமையையும், மனசாட்சியையும் மறந்து ஆளுங்கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக நேரடியாகவே செயல்பட்டு, அ.தி.மு.க. வேட்பாளர் அரசு வாகனங்களில் பணம் கடத்தவும் உதவி செய்வது வெளியே தெரிந்து, பணம் கடத்தப்பட்டுக் காரியங்கள் யாவும் முடிந்த பின்னர்க் கடைசியாகக் கண் விழித்துக் கொண்டு, பாரபட்சமின்றிச் செயல்படுகிறோம் என்று பாவனை செய்து, தேர்தல் ஆணையம் அந்த அதிகாரிகளின் கார்களைப் பறித்துக்கொண்டுள்ளது.

இத்தகைய நிகழ்வுகளிலிருந்து நமக்குத் தெரிவதெல்லாம் ஆளுங்கட்சிக்கு இப்போது தோல்வி பயமும் விரக்தியும் தொற்றிக் கொண்டு விட்டது; அதனால்தான் இப்படிப்பட்ட நாணயக் கேடான காரியங்களில் ஈடுபடத் தொடங்கிவிட்டார்கள். தேர்தலுக்கு இன்னும் இரண்டே நாட்கள்தான் இருப்பதால், தாங்கள் கொள்ளை யடித்துக் குவித்து வைத்திருக்கும் பணத்தில் ஒரு பகுதியை

வாரி இறைத்து வாக்காளர்களின் மனதை மயக்கி வெற்றிபெற முடியாதா என்று அமைச்சர்களும், ஆளுங்கட்சியினரும் பகல் கனவு காணுகிறார்கள். வாரி இறைத்திடும் பணம் மட்டுமே தேர்தலைத் தீர்மானிக்குமென்றால்; கோடிக்கணக்கான பணம் வைத்திருக்கும் குபேரர்கள் மட்டுமே தேர்தலில் வெற்றி பெற முடியுமென்றால்; இந்தியாவில் டாடாவும், பிர்லாவும், அம்பானியும், அதானியும் அல்லவா ஆட்சி பீடத்தை அலங்கரித்துக் கொண்டிருப்பார்கள்?

சுதந்திரமான, நேர்மையான தேர்தல் நடப்பதைப் பாழ்படுத்திடப் பணத்தை அள்ளி வீசும் அ.தி.மு.க.வினரின் இத்தகைய அராஜக அட்டூழியங்களைக் கண்டு கழகத் தோழர்கள், குறிப்பாகக் கழக வேட்பாளர்கள் கிஞ்சிற்றும் அதிர்ச்சியடையத் தேவையில்லை.

சுதந்திரமான, நேர்மையான தேர்தல் நடப்பதைப் பாழ்படுத்திடப் பணத்தை அள்ளி வீசும் அ.தி.மு.க.வினரின் இத்தகைய அராஜக அட்டூழியங்களைக் கண்டு கழகத் தோழர்கள், குறிப்பாகக் கழக வேட்பாளர்கள் கிஞ்சிற்றும் அதிர்ச்சியடையத் தேவையில்லை. ஆளுங்கட்சியினர் இந்த ஐந்தாண்டுகளில் சேர்த்துக் குவித்து வைத்திருக்கும் கோடிக்கணக்கான ரூபாய் பணத்தை இவ்வாறு தேர்தலில் வெற்றிபெறப் பயன்படுத்துவார்கள் என்பதெல்லாம், தேர்தல் பணிகள் தொடங்குவதற்கு முன்பே நமக்குத் தெரிந்ததுதானே? தொகுதிக்கு ஐந்து கோடி ரூபாய் எனக் கணக்கிட்டு ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலான பணத்தை, காவல் துறையினரின் துணையோடு, காவல் துறை வாகனங்களிலும், ஆம்புலன்ஸ் வாகனங்களிலும் மாநிலத்தின் பல இடங்களுக்கும் கொண்டு சென்று பதுக்கிவைத்தார்கள் என்பதெல்லாம் அனைவரும் அறிந்ததுதானே! எனவே ஆளுங்கட்சியினர் பட்டுவாடா செய்திருக்கும் பணத்தைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், தமிழ், தமிழர், தமிழ்நாட்டின் நலன் கருதி அயராது பாடுபட்டு வருகின்ற தி.மு. கழகக் கூட்டணியின் வெற்றிக்காகத் தொடர்ந்து தொய்வேதுமின்றி உழைத்திட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு வயது 92. இந்த வயதிலும் உங்களை நேரில் சந்தித்து உதய சூரியனுக்கு வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள இங்கே திருவாரூருக்கு வந்திருக்கிறேன். மக்கள் குரலே மகேசன் குரல் என்ற மகத்தான உண்மையை அறிந்திருப்பவர்கள் நாங்கள்.

தேர்தல் பிரச்சாரத்திற்காகச் சிலரைப் போல கெலிகாப்டரில் நான் பறந்து வரவில்லை; வாக்காளர்களை, தனக்கு வசதியான ஓரிடத்தில், கடும் வெயிலில் கூட்டிவைத்து, வாக்கு கேட்க எனக்குத் தெரியாது. வாக்காளர்களைத் தேடி, அவர்கள் இருக்கும் இடத்திற்கே போவதுதான் என் வழக்கம். பிரச்சார வாகனத்தில் சாலை வழியே பல நூறு மைல் பயணம்; புகைவண்டிப் பயணம்; பயணிகள் விமானத்தில் பயணம் எனத் தேர்தல் பிரச்சாரத்திற்காக நான் பிரத்தியேகமான பயண ஏற்பாடு எதையும் செய்து கொள்ளவில்லை. நான் மிக மிகச் சாதாரண, சாமானியன் என்பதால், சிலரைப் போல ஆடம்பர எண்ணமே எனக்கு எழுவதில்லை.

சிலரைப் போல, "வானத்தை வில்லாக வளைத்துவிட்டேன்; மணலைக் கயிறாகத் திரித்துவிட்டேன்; தமிழகத்தில் வசந்தம் வீசுகிறது; எனக்கு வாக்களித்தால் கற்பனைக் கெட்டாத உயரத்திற்கு மக்களைக் கொண்டு செல்வேன்" என்று திரும்பத் திரும்பப் புழுத்துப் போன பொய்களையே சொல்லிவாக்கு கேட்க நான் மக்களிடையே வரவில்லை.

2011 தேர்தலின் போது அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் உறுதி அளித்ததில் பலவற்றை நிறைவேற்றவில்லை; சட்டமன்றத்தில் 110வது விதியின் கீழ் அறிவித்த திட்டங்களிலும் பலவற்றை நிறைவேற்றவில்லை. உங்கள் எல்லோருக்கும் தெரியும்! நான் சொன்னதைச் செய்பவன். சொல்லிவிட்டால் செய்தே தீர வேண்டுமென்று தீவிரமாக உழைப்பவன். சிலரைப் போல வாய்க்கு வந்ததையெல்லாம் சொல்லி, வாக்காளர்களையும் தமிழ்நாட்டு மக்களையும் எப்போதும் ஏமாற்றியதில்லை!

நான் மாத்திரமல்ல; நம்முடைய கழகப் பொதுச் செயலாளர், பேராசிரியர் 93 வயதிலும் முதற்கட்ட சுற்றுப் பயணம், இரண்டாவது கட்டச் சுற்றுப் பயணம் ஆகியவற்றை முடித்துவிட்டுத் தற்போது மூன்றாவது கட்டச் சுற்றுப் பயணத்தில் ஆர்வத்தோடு ஈடுபட்டு பிரச்சாரம் செய்துவருகிறார்.

கழகப் பொருளாளரைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்! அவரைப் பற்றி ஒரு முறை நான் கூறும்போது "உழைப்பு! உழைப்பு! உழைப்பு! அதுதான் கழகப் பொருளாளர் தளபதி மு.க. ஸ்டாலின்" என்று தெரிவித்திருக்கிறேன். அந்த இலக்கணத்திற்கு இலக்கியமாகும் வகையில், காலை நடைபயிற்சி மேற்கொள்ளும் நேரத்தில்கூடத் தீவிரமான தேர்தல் பிரச்சாரப் பணிகளிலே ஈடுபட்டிருப்பதைத் தொலைக்காட்சியில் கண்டேன்.

அ.தி.மு.க.வினர் அள்ளி வீசும் பணத்தைப் பற்றியோ, அவர்கள் கொள்ளையடித்துக் கைவசப்படுத்தி வைத்திருக்கும் பணத் தோட்டத்தைப் பற்றியோ, அவர்கள் பிரயோகிக்கும் வஞ்சக சூழ்ச்சிகளைப் பற்றியோ, எல்லாவற்றையும் கைகட்டி வேடிக்கைபார்க்கும் தேர்தல் ஆணையத்தின் செயலற்ற தன்மையைப் பற்றியோ எள்ளளவும் கவலைகொள்ளாமல் மக்கள் நம் பக்கம் என்பதால், உழைப்போம்; அயராது உழைப்போம்; எந்தத் தடையெனினும் இடறிவிட்டு இன்முகத்தோடு உழைப்போம்; வெற்றி நமதே!

மேலும் மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் கனிமொழி, தலைமைக் கழகத்தின் பேச்சாளர்கள் எல்லாம் இரவென்றும், பகலென்றும் பாராமல் தேர்தல்பிரச்சாரப் பணிகளிலும் பயணங்களிலும் தொடர்ந்து ஈடுபட்டுவரும் செய்திகளையெல்லாம் பார்த்திருப்பீர்கள்.

இடையில் இருப்பது இன்னும் இரண்டே நாட்கள்தான்! அதாவது 48 மணி நேரம்தான்! இதுவரை உழைத்த உழைப்பு. உற்ற பயனை விளைவிக்க வேண்டுமல்லவா? கடந்த ஐந்தாண்டு காலமாகத் தமிழ் மக்கள் பட்ட கொடுமைகளுக்கெல்லாம் விடியல் தேடிடும் வேலையில் நீங்கள் ஒவ்வொருவரும் பாடுபட வேண்டுமென்று உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன்.

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்"

என்பது அய்யன் திருவள்ளுவரின் அருங்குறள். எனவே அ.தி.மு.க.வினர் அள்ளி வீசும் பணத்தைப் பற்றியோ, அவர்கள் கொள்ளையடித்துக் கைவசப்படுத்தி வைத்திருக்கும் பணத்

தோட்டத்தைப் பற்றியோ, அவர்கள் பிரயோகிக்கும் வஞ்சக சூழ்ச்சிகளைப் பற்றியோ, எல்லாவற்றையும் கைகட்டி வேடிக்கை பார்க்கும் தேர்தல் ஆணையத்தின் செயலற்ற தன்மையைப் பற்றியோ எள்ளளவும் கவலைகொள்ளாமல் மக்கள் நம் பக்கம் என்பதால், உழைப்போம்; அயராது உழைப்போம்; எந்தத் தடையெனினும் இடறிவிட்டு இன்முகத்தோடு உழைப்போம்; வெற்றி நமதே!

அன்புள்ள,

மு.க.

13.5.2016

4015. தொடர்ந்து உழைத்திடத் தொய்வின்றி ஆதரிப்பீர்!

உடன்பிறப்பே,

15வது சட்டப்பேரவைக்கான பொதுத்தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற இன்னும் 24 மணி நேரமே உள்ளது! ஆடம்பரம், ஆணவம், அகம்பாவம் ஆகியவற்றின் உச்சியிலே அமர்ந்துள்ள ஜெயலலிதா, கடந்த ஐந்தாண்டு காலத்தில் யாரையும் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை; "எனது அரசு" - "நான் அறிவிக்கிறேன்" என்று அவர் விடுத்த ஒவ்வொரு அரசு அறிக்கையிலும் தொக்கி நிற்கும் தன்முனைப்புத் தொனியை யாரும் மறக்கவில்லை. எந்த எதிர்க்கட்சியினரையும் பேரவையில் ஜனநாயகரீதியாக எதிர்க் கருத்துகளைப் பேசவோ, ஆக்கபூர்வமாக விமர்சிக்கவோ, குரல் எழுப்பவோ அனுமதிக்கவில்லை என்பதை நாடே கவலையுடன் பார்த்துக்கொண்டிருந்தது.

2011ஆம் ஆண்டு தேர்தல் முடிந்து பதவிக்கு வந்தவுடன், வாரந்தோறும் செய்தியாளர்களைச் சந்திப்பேன் என்று ஜெயலலிதாதான் கூறினார். ஆனால் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவும் இல்லை. முதலமைச்சர் செய்தியாளர்களைச் சந்திக்கவும் இல்லை. அதுபோலவே அரசு அலுவலர் சங்கங்களின் பிரதிநிதிகளையோ, விவசாயச் சங்கங்களின் பிரதிநிதிகளையோ, தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளையோ இந்த ஐந்தாண்டு கால வரலாற்றில் சந்தித்தது உண்டா என்றால் அதுவும் கிடையாது. தற்போது தேர்தல் என்றதும், "மக்களுக்காக நான், மக்களுக்காகவே நான்" என்று கபட வேடம் போடுகிறாரே, அந்த மக்களை எங்கேயாவது, எந்த மாவட்டத்திற்காவது சென்று கடந்த ஐந்தாண்டுகளில் சந்தித்தது உண்டா என்றால் அதுவும் கிடையாதுதான். குறிப்பாக விளக்க வேண்டுமானால், "மக்களுக்காக நான், மக்களுக்காகவே நான்" என்பதற்கு மாறாக "எனக்காக நான், எனக்காகவே நான்; சசிகலா மற்றும் பரிவாரங்களுக்காக மட்டுமே நான்" என்று வேண்டுமானால்

சொல்லிக்கொள்ளலாம். தப்பித் தவறி இந்தத் தேர்தலிலும் அ.தி.மு.க. வெற்றி பெற்று விட்டால், இதைத்தான் மறுபடியும் அவரே சொல்லிக் கொள்வார். "தமிழ்நாடு" என்ற பெயரை மாற்றி "அம்மா நாடு" என்று 110வது விதியின்கீழ் அறிவித்துவிடுவார்.

தேர்தல் என்றதும், "மக்களுக்காக நான், மக்களுக்காகவே நான்" என்று கபட வேடம் போடுகிறாரே, அந்த மக்களை எங்கேயாவது, எந்த மாவட்டத்திற்காவது சென்று கடந்த ஐந்தாண்டுகளில் சந்தித்தது உண்டா என்றால் அதுவும் கிடையாதுதான். குறிப்பாக விளக்க வேண்டுமானால், "மக்களுக்காக நான், மக்களுக்காகவே நான்" என்பதற்கு மாறாக "எனக்காக நான், எனக் காகவே நான்; சசிகலா மற்றும் பரிவாரங்களுக்காக மட்டுமே நான்" என்று வேண்டுமானால் சொல்லிக்கொள்ளலாம். தப்பித் தவறி இந்தத் தேர்தலிலும் அ.தி.மு.க. வெற்றி பெற்று விட்டால், இதைத்தான் மறுபடியும் அவரே சொல்லிக் கொள்வார். "தமிழ்நாடு" என்ற பெயரை மாற்றி "அம்மா நாடு" என்று 110வது விதியின்கீழ் அறிவித்துவிடுவார்.

2011-ல் ஆட்சியை ஆரம்பித்தபோது கழக ஆட்சியில் அரசுக்காக வாங்கப்பட்ட கடனை எடுத்துக்காட்டி, அந்தக் கடனின் அளவைக் குறைப்பேன் என்றெல்லாம் அறிவித்தார். "தமிழ்நாட்டை ஒரு லட்சம் கோடி ரூபாய் கடனாளி மாநிலம் என்கிற தலைக்குனிவில் இருந்து மீட்டு, ஒவ்வொரு தமிழரும் தலை நிமிர்ந்து நிற்கவும், தன்மானத்துடன் வாழவும் வழிவகை செய்யப்படும்" என்றெல்லாம் தேர்தல் அறிக்கையிலேயே ஜெயலலிதா சொன்னார். ஆனால் தற்போது என்ன நிலைமை? மின்வாரியக் கடன்களைச் சேர்க்காமல், தமிழக அரசுக்கு உள்ள மொத்தக்கடன் 2 இலட்சத்து 11 ஆயிரத்து 483 கோடி ரூபாய். அதாவது தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொருவருடைய தலையிலும் 28 ஆயிரத்து 778 ரூபாய் கடன் சுமை ஏறி இருக்கிறது. 2011ஆம் ஆண்டு, தி.மு. கழக ஆட்சி முடிவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்பு, 9-4-2011 அன்று மத்திய நிதி அமைச்சராக இருந்த திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள், "இந்தியாவில் நிதி ஒழுங்கையும், நிலைத் தன்மையையும் திருப்திகரமாகக் கடைப்பிடித்து வரும் ஒரு

சில மாநிலங்களுள் தமிழகமும் ஒன்றாகும். தமிழக அரசின் கடன் அளவு, பரிந்துரைக்கப்பட்ட அளவைவிட மிகவும் குறைவாகவே உள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்து ஒரு நாள்கூட தன் கணக்கில் பணம் இல்லாமல், கூடுதல் வரைவுத் தொகையை "ஓவர்-டிராப்ட்"டை தமிழக அரசு பெற்றதில்லை" என்று தி.மு. கழக அரசின் சிறப்பான நிதி மேலாண்மை குறித்துப் பாராட்டிச் சொல்லியிருந்தார். ஆனால் இன்றைய அ.தி.மு.க. ஆட்சியின் நிலை குறித்து ஆங்கில நாளேடுகள் எல்லாம் சொல்வது என்ன?

2011-ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பத்து மாத காலத்தில் பால் விலை உயர்வு, பேருந்துக் கட்டண உயர்வு ஆகியவற்றைத் தொடர்ந்து மின் கட்டண உயர்வினை ஒரே யடியாக 37 சதவிகித அளவிற்கு உயர்த்தி அறிவித்தார்கள்.

2001ஆம் ஆண்டு ஜெயலலிதா முதல் அமைச்சராக வந்த போதும், 1-12-2001 முதல் மின் கட்டணங்களை உயர்த்தினார். மீண்டும் 15-3-2003 அன்றும் 1398 கோடி ரூபாய்க்கு மின் கட்டண உயர்வுகளைச் செய்தார். அன்றையதினம் தான் தி.மு.கழக ஆட்சியில் வழங்கப்பட்ட விவசாயம் மற்றும் குடிசைகளுக்கான இலவச மின்சாரத்தை ரத்து செய்து அறிவித்தார். வீடுகளுக்கான மின் கட்டணத்தை 22.13 சதவிகிதமும், கல்வி நிலையங்களுக்கு 16.61 சதவிகிதமும் உயர்த்தினார்.

அப்படியும் தமிழ்நாட்டில் நிதி நிலைமை என்ன ஆயிற்று?

"இந்து" வெளியிட்டுள்ள செய்தியிலேயே "The State Government's financial health is quite bad" என்று எழுதப்பட்டிருந்தது.

"ஜூனியர் விகடனில்", "எந்த இலக்கையும் எட்ட முடியாமல் நிதித்துறை தடுமாறிவருகிறது. டாஸ்மாக் வருவாயை உயர்த்துவதில்தான் அரசு அதிக அக்கறை எடுத்துக்கொண்டது. அந்த அளவுக்கு நிர்வாகத் திறமையை மற்ற துறைகளிலும் காட்டியிருந்தால், மொத்த வருவாய் அதிகரித்திருக்கும். அரசின் மெத்தனம்தான் இதற்குக் காரணம். இதைச் சமாளிக்க கடன் வாங்குவதைத் தவிர அரசுக்கு வேறு வழியில்லை. ஏற்கனவே ஒரு லட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாய் கடனில் தமிழக அரசுதத்தளித்துக் கொண்டிருக்கிறது. இதனால் மாநிலத்தின் மொத்த வளர்ச்சியும் பாதிக்கப்படும். பழைய வரி பாக்கிகளை வசூலிக்கவும், வரி ஏய்ப்பைத் தடுக்கவும் அரசு உறுதியான

நடவடிக்கைகளை எடுக்கவில்லை. தமிழக அரசின் கடன் தவிர மின்வாரியத்தின் கடன் ஒன்றரை இலட்சம் கோடி ரூபாய் இருக்கிறது. பொதுத் துறை நிறுவனங்களின் கடனையும் சேர்த்தால் தமிழகத்தின் மொத்தக் கடன் சுமை நான்கு இலட்சம் கோடி ரூபாயைத் தாண்டும்" என்று எழுதியிருந்தது.

ஜெயலலிதா தனது அறிக்கையில் குடும்ப அரசியல் என்றெல்லாம் கூறியிருக்கிறார். ஆனால் அவருடன் நிழலாகத் தொடர்ந்து வரும் சசிகலா யார்? இளவரசி யார்? சுதாகரன் யார்? தினகரன் யார்? திவாகரன் யார்? ராவணன் யார்? அந்தக் குடும்பங்களெல்லாம் ஜெயலலிதாவோடு இரண்டறக் கலந்தவைதானே? "ஜாஸ் சினிமாஸ்" திரை அரங்குகளையும், டாஸ்மாக்குக்காக மதுவகைகளைத் தயாரிக்கும் மிடாஸ் நிறுவனத்தையும், கொடநாடு எஸ்டேட்டையும், சிறுதாவூர் பங்களாக்களையும், மற்றும் கணக்கிலடங்காத சொத்துக்களையும், பணப் பரிமாற்றத்திற்காகவே உருவாக்கப்பட்ட பல்வேறு நிறுவனங்களையும் நிர்வகிப்போர் எல்லாம் யார்? இவ்வளவு அழுக்குகளையும் குவித்து வைத்திருக்கும் பின்னணியில், குடும்ப அரசியல் பற்றி ஜெயலலிதா பேசலாமா? பேசுவதற்கு அவருக்கு ஏதாவது அருகதை உண்டா?

தஞ்சை தேர்தல் கூட்டத்தில் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா, "ஒரு வாக்குறுதியைக் கொடுப்பதற்கு முன்பு ஆயிரம் முறையோசிப்பேன், கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது நான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கிறேன்" என்றெல்லாம் தனக்குத்தானே பாராட்டிக் கொண்டார். 2011ஆம் ஆண்டு அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 20 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட தூய்மையான குடி தண்ணீர் இலவசமாக வழங்கப்படும் என்றும்; அதன் மூலம் 56 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு புதிதாக உருவாக்கப்படும் என்றும், மின்சாரத் திருட்டை ஒடுக்க முன்னாள் ராணுவத்தினரைக் கொண்டு மின்சாரப் பாதுகாப்புப் படை அமைக்கப்படும் என்றும்; 2012ஆம்

ஆண்டுக்குள் 151 நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் நகராட்சிக் கழிவைக் கொண்டு 1000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்றும், 2013ஆம் ஆண்டுக்குள் 300 மெகாவாட் சோலார் எனர்ஜி பார்க்ஸ் பத்து உருவாக்கப்பட்டு, 3 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படும் என்றும், சென்னை, மதுரை, திருச்சி, கோவைக்கு சிங்கப்பூரில் உள்ளபடி "மோனோ ரெயில் திட்டம்" செயல்படுத்தப்படும் என்றும், சென்னை முதல் கன்னியாகுமரி வரை கடலோரச் சாலை அமைக்க ஆய்வு செய்யப்பட்டு திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும், தென் தமிழகத்தில் "ஏரோ பார்க்" ஏற்படுத்த உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் ஜெயலலிதா அறிவித்த திட்டங்கள் எல்லாம் ஆயிரம் முறை ஜெயலலிதா யோசித்து வெளியிட்டவை தானே? அவைகள் ஏன் நிறைவேற்றப்படவில்லை?

இவை மாத்திரமல்ல; கடந்த ஆண்டுகளில் நிதி நிலை அறிக்கைகளில், கூவம் நதியைச் சீரமைக்க ரூ. 3,833.62 கோடியில் பெரும் திட்டம், ஆறுகள் இணைப்பு வெள்ளத் தடுப்புப் பணிக்கு ரூ. 5,166 கோடி, 3 வழித் தடங்களில் ரூ. 8,350 கோடியில் மோனோ ரெயில் திட்டம், ரூ. 1,075 கோடியில் நெமிலிச்சேரியையும் மீஞ்சூரையும் இணைக்கும் இரண்டாம்கட்ட வெளிவட்டச் சாலை, சென்னை டி.பி.ஐ. வளாகத்தில் ஒருங்கிணைந்த அறிவுசார் பூங்கா, தேர்வாய்க் கண்டிகை, திருக்கண்டலம், ராமஞ்சேரி ஆகிய இடங்களில் தலா ஒரு டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட புதிய ஏரிகள் என அறிவிக்கப்பட்ட பல அறிவிப்புகள் எல்லாம் என்ன ஆயின? விளம்பரக் காற்றில் பறந்துபோய் விட்டனவோ!

2012ஆம் ஆண்டிலேயே ஒரே நாளில் 12 கம்பெனிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடுவதாகவும், அதன் மூலம் 36,855 பேருக்கு வேலை கிடைக்குமென்றும், 20 ஆயிரத்து 925 கோடி ரூபாய் முதலீட்டில் தொழிற்சாலைகள் தொடங்கப்படுமென்றும் பூதாகாரமாக அறிவிப்பெல்லாம் செய்து, ஏடுகளில் எல்லாம் பெரிதாகச் செய்தி வெளியிட்டார்கள். அந்த 12 கம்பெனிகளின் முதலீடும் தமிழகத்திற்கு வந்து, அவர்கள் எல்லாம் தொழில்களைத் தொடங்கிவிட்டார்களா, அந்தக் கம்பெனிகளில் 36 ஆயிரத்து 855 பேர் வேலைவாய்ப்புப் பெற்றிருக்கிறார்களா என்ற விவரங்களையெல்லாம் அரசின் சார்பில் மக்களுக்குத்

தெரிவித்தால் நல்லது என்று கேட்டிருந்தேன். ஆனால் ஆட்சியினர் இதுவரை வாயே திறக்கவில்லை. நடந்திருந்தால் அல்லவா நாவசைக்க முடியும்!

முதலீட்டாளர்கள் மாநாட்டையொட்டி 13-2-2015 அன்று சென்னையில் நடைபெற்ற முன்னோட்ட மாநாட்டில் 18 ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஏழு நிறுவனங்களோடு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று மிகப் பெரிய விளம்பரம் செய்தார்களே தவிர, அங்கே அந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் நிகழ்ச்சி நடைபெற்றதா என்றால் கிடையாது.

பிறகு 100 கோடி ரூபாய் அரசுப் பணத்தைச் செலவழித்து நடத்திய முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதல்அமைச்சர் ஜெயலலிதா அறிவித்தவாறு இரண்டு இலட்சத்து 42 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டுக்கான தொழில்கள் வந்தனவா? இல்லை என்பதுதான் வேதனையான பதில்!

ஜெயலலிதா இன்று விடுத்துள்ள அறிக்கையில், இலங்கைத் தமிழர்கள் பற்றியும், அதிலே தி.மு. கழகத்தின் மீது குறை கூறியும் தெரிவித்திருக்கிறார். இலங்கைத் தமிழர்கள் நலன் பற்றிப் பேசுவதற்கு ஜெயலலிதாவுக்கு ஏதாவது தகுதி உண்டா? ஜெயலலிதா 16-4-2002 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் நிறைவேற்றிய தீர்மானம் மறந்துவிட்டதா? "விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை உடனடியாக இலங்கை அரசு கைது செய்து, இந்திய அரசிடம் ஒப்படைப்பதற்கு மத்திய அரசு உடனடி நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்று இச்சட்டப் பேரவை வற்புறுத்துகிறது. மேலும், தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் இயக்கத்தைச் சேர்ந்த எந்த ஒருவரையும் இந்தியத் திருநாட்டிற்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது என்றும் மத்திய அரசை இப்பேரவை வற்புறுத்துகிறது" என்று தமிழகச் சட்டப் பேரவையில் 16-4-2002 அன்று தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியவர் ஜெயலலிதா என்பதைத் தமிழ்நாட்டு வாக்காளர்கள் மறந்து விட்டார்களா என்ன? ஜெயலலிதா மறந்து விட்டாலும், உலகத் தமிழர்கள் மறக்கவில்லை. இன்று இலங்கைத் தமிழர்களுக்காக ஜெயலலிதா வடிக்கும் நீலிக் கண்ணீரைக் கண்டு யாரும் ஏமாறப் போவதில்லை.

என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளாம், தமிழ்ப் பெருமக்களே, கழகத்தைப் பொறுத்தவரை 234 தொகுதிகளிலும், நான் அல்ல, பேரறிஞர் அண்ணாவே போட்டியிடுகிறார்;' தந்தை பெரியாரே போட்டியிடுகிறார்; திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிடுகிறது; உண்மையானதொரு ஜனநாயக ஆட்சி உதயமாக உங்கள் அனைவருடைய நல்லாதரவையும் வேண்டி எனது அன்பான கோரிக்கையினை உங்கள் முன் வைக்கின்றேன். உங்களுக்காக உழைத்திட உத்திரவிடுங்கள்! சொன்னதைச் செய்வோம்; செய்வதைத்தான் சொல்வோம்!

17-1-2009 அன்று ஜெயலலிதா விடுத்த அறிக்கையில், "இலங்கைத் தமிழர்களைக் கொல்ல வேண்டுமென்று இலங்கை ராணுவம் எண்ணவில்லை. ஒரு யுத்தம் - ஒரு போர் நடக்கும் போது அப்பாவி மக்கள் கொல்லப்படுவார்கள். இதில் எந்த நாடும் விதிவிலக்கல்ல. எங்கே யுத்தம் - போர் நடந்தாலும் அப்பாவி மக்கள் கொல்லப்படுகிறார்கள். ஆனால் இன்று இலங்கையில் என்ன நடக்கிறதென்றால், இலங்கைத் தமிழர்களைப் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லவிடாமல் விடுதலைப் புலிகள் அவர்களைப் பிடித்து வைத்துக்கொண்டு வலுக்கட்டாயமாக ராணுவத்தின் முன்னால் அவர்களை ஒரு கேடயமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்" என்று கூறியதை ஜெயலலிதாவே மறந்து விட்டாரா?

அடுத்து, ஜெயலலிதா தனது அறிக்கையில் குடும்ப அரசியல் என்றெல்லாம் கூறியிருக்கிறார். ஆனால் அவருடன் நிழலாகத் தொடர்ந்து வரும் சசிகலா யார்? இளவரசி யார்? சுதாகரன் யார்? தினகரன் யார்? திவாகரன் யார்? ராவணன் யார்? அந்தக் குடும்பங்களெல்லாம் ஜெயலலிதாவோடு இரண்டறக் கலந்தவைதானே? "ஜாஸ் சினிமாஸ்" திரை அரங்குகளையும், டாஸ்மாக்குக்காக மதுவகைகளைத் தயாரிக்கும் மிடாஸ் நிறுவனத்தையும், கொடநாடு எஸ்டேட்டையும், சிறுதாவூர் பங்களாக்களையும், மற்றும் கணக்கிலடங்காத சொத்துக்களையும், பணப்பரிமாற்றத்திற்காகவே உருவாக்கப்பட்ட பல்வேறு நிறுவனங்களையும் நிர்வகிப்போர் எல்லாம் யார்? இவ்வளவு

அழுக்குகளையும் குவித்துவைத்திருக்கும் பின்னணியில், குடும்ப அரசியல் பற்றி ஜெயலலிதா பேசலாமா? பேசுவதற்கு அவருக்கு ஏதாவது அருகதை உண்டா?

ஜெயலலிதா 16-4-2002 அன்று தமிழகச் சட்டப்பேரவையில் நிறைவேற்றிய தீர்மானம் மறந்து விட்டதா? "விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை உடனடியாக இலங்கை அரசு கைது செய்து, இந்திய அரசிடம் ஒப்படைப்பதற்கு மத்திய அரசு உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று இச்சட்டப் பேரவை வற்புறுத்துகிறது. மேலும், தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் இயக்கத்தைச் சேர்ந்த எந்த ஒருவரையும் இந்தியத் திருநாட்டிற்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது என்றும் மத்திய அரசை இப்பேரவை வற்புறுத்துகிறது" என்று தமிழகச் சட்டப்பேரவையில் 16-4-2002 அன்று தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியவர் ஜெயலலிதா என்பதை தமிழ்நாட்டு வாக்காளர்கள் மறந்து விட்டார்களா என்ன? ஜெயலலிதா மறந்துவிட்டாலும், உலகத் தமிழர்கள் மறக்கவில்லை. இன்று இலங்கைத் தமிழர்களுக்காக ஜெயலலிதா வடிக்கும் நீலிக் கண்ணீரைக் கண்டு யாரும் ஏமாறப் போவதில்லை.

கடந்த ஐந்தாண்டுகளில் தமிழகத்திலே எந்தத் தரப்பினராவது திருப்தியாக இருந்தது உண்டா? கழக ஆட்சியில் நியமனம் பெற்ற காரணத்திற்காக மக்கள் நலப் பணியாளர்கள் 13 ஆயிரம் பேர் வேலை நீக்கம் செய்யப்பெற்று, அவர்கள் உச்ச நீதிமன்றம்வரை சென்று, அவர்களுக்குச் சார்பாக தீர்ப்புப் பெற்ற பிறகும், மீண்டும் அவர்களைப் பணியிலே நியமிக்க மனம் வரவில்லை என்றால், அது கல் நெஞ்சத்தின் அடையாளம்தானே? பிறகு தன்னைத் "தாய்" என்று அழைத்துக் கொள்வதற்கு அவருக்கு என்ன தகுதி இருக்கிறது?

கழக ஆட்சியில் ஒரு சில அதிகாரிகள் அரசுப் பணியில் திறமையாகப் பணியாற்றினார்கள் என்பதற்காகக் கடந்த ஐந்தாண்டு காலமாக அவர்கள் எல்லாம் எந்த அளவுக்குத் துரத்தியடிக்கப்பட்டுப் பழிவாங்கப்பட்டார்கள்? ஏன், திரைப்படத்

துறையைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர், எப்படியெல்லாம் பழி வாங்கப்பட்டார்கள்? திரைப்படங்களுக்குத் தமிழிலே பெயர் வைத்துத் தயாரித்தால் அரசின் சார்பில் வரிவிலக்கு அளிக்கப்பட்டு வந்தது. அதைக்கூடத் தங்களுக்குப் பிடிக்காதவர்கள் தமிழில் பெயர் வைத்துத் தயாரித்தால் கூட, அதற்கு வரி விலக்கு மறுத்த ஆட்சி தானே ஜெயலலிதாவின் ஆட்சி!

இன்னும் எத்தனையோ அட்டூழியங்கள், அராஜகங்கள், அதிகார அத்துமீறல்கள், அநியாயங்கள்! இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் காரணமான அ.தி.மு.க. ஆட்சி மீண்டும் தொடரலாமா? ஏற்கனவே இந்த ஐந்தாண்டுகளில் காடாகிவிட்ட நாடு, பாலைவனமாகிப் பாழாகிப் போய்விடாதா? தமிழ்நாட்டு மக்கள் இனியும் அதை அனுமதிக்கலாமா? 234 தொகுதிகளிலும் நானே போட்டியிடுவதாக எண்ணிக் கொள்ளுங்கள் என்று நான் எழுதியவுடன், எல்லாவற்றிலும் "காப்பி" அடிக்கும் ஜெயலலிதாவும் என்னைப் பின்பற்றி, 234 தொகுதிகளிலும் அவரே வேட்பாளராக நிற்பதாக இன்றைய அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளார்.

என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளாம், தமிழ்ப் பெருமக்களே, கழகத்தைப் பொறுத்தவரை 234 தொகுதிகளிலும், நான் அல்ல, பேரறிஞர் அண்ணாவே போட்டியிடுகிறார்; தந்தை பெரியாரே போட்டியிடுகிறார்; திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிடுகிறது; உண்மையான திராவிட இயக்கம் போட்டியிடுகிறது. இந்தத் தேர்தலில் கழகக் கூட்டணியின் சார்பில் திராவிட முன்னேற்றக் கழகம் 174 இடங்களில் உதயசூரியன் சின்னத்திலும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி 41 இடங்களில் கை சின்னத்திலும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி 5 இடங்களில் ஏணி சின்னத்திலும், மனித நேய மக்கள் கட்சி 4 இடங்களில் கப் அண்ட் சாசர் சின்னத்திலும், புதிய தமிழகம் கட்சி 4 இடங்களில் டி.வி. சின்னத்திலும், மக்கள் தே.மு.தி.க. 3 இடங்களில் உதய சூரியன் சின்னத்திலும், பெருந் தலைவர் மக்கள் கட்சி, தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சி, சமூக, சமத்துவப் படை கட்சி ஆகிய கட்சிகளின் சார்பில் தலா ஒவ்வொரு இடத்தில் உதயசூரியன் சின்னத்திலும் போட்டியிடுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் பெருவாரியாக உங்களுடைய வாக்குகளை வழங்கி வெற்றிபெறச் செய்து, தமிழகத்திலே நடைபெறுகின்ற அராஜக, கொடுங்கோன்மை ஆட்சியை வேரோடும், வேரடி

மண்ணோடும் ஆழக் குழிதோண்டிப் புதைத்திட உறுதி மேற்கொள்ள வேண்டிய நேரம் இது!

உண்மையானதொரு ஜனநாயக ஆட்சி உதயமாக உங்கள் அனைவருடைய நல்லாதரவையும் வேண்டி எனது அன்பான கோரிக்கையினை உங்கள் முன் வைக்கின்றேன். உங்களுக்காக உழைத்திட உத்திரவிடுங்கள்! சொன்னதைச் செய்வோம்; செய்வதைத்தான் சொல்வோம்!

அன்புள்ள,

மு.க.

15-5-2016



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

செப்டம்பர் 2022